

இதழ் 44

# எழுநா

மார்ச் 2026

# எழுநா

ISSN 3093-5210

இதழ் 44

**அட்டைப்படம் :**

'சாயமிடுபவர்' எனத் தலைப்பிடப்பட்ட ஆக்கம். கைத்தறி நெசவுச் சூழலைப் பின்னணியாகக் கொண்ட 'நாடா' எனத் தலைப்பிடப்பட்ட ஆக்கங்களுள் ஒன்று. 'Colomboscope' அமைப்பிற்காகச் செய்யப்பட்டது.

Artist: அ. வஜாஹத்

**வெண்பா புத்தகசாலை** – யாழ்ப்பாணம்
**எங்கட புத்தகங்கள்** – யாழ்ப்பாணம்
**பாத்திமா புத்தக நிலையம்** – மட்டக்களப்பு
**மொழி புத்தகம் பதிப்பகம்** – வெள்ளவத்தை

## இயக்குநர் சபை

**கணேசானந்தன் சசீவன்**
நிர்வாக இயக்குநர்

**தில்லைநாதன் கோபிநாத்**
வெளியீடு

**கனகலிங்கம் சுகுமார்**
வளத்திரட்டல்

## வெளியீட்டுக்குழு

**கணேசானந்தன் சசீவன்**
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

**ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்**
உதவி ஆசிரியர் / நகல் திருத்தம் / நூல் தயாரிப்பு / தர நிர்ணயம்

**தர்ஷனா பிரேம்குமார்**
கற்கை வட்டம் / நிகழ்வுகள் / ஊடக ஒருங்கிணைப்பு

**மதுராங்கி குணசீதன்**
கலை பண்பாட்டு ஒருங்கிணைப்பு / ஆய்வு ஒருங்கிணைப்பு

**பியுலா பரமேஸ்வரன்**
வலைத்தளம் / பரவலாக்கம் / அச்சு ஒருங்கிணைப்பு / விநியோகம்

## தயாரிப்புக் குழு

**ஜீவமணி பாலன்**
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

**ரவீந்திரன் கருப்பையா**
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

**வேணி ஆனந்தா**
சஞ்சிகை வடிவமைப்பு

**கௌரிகாந்தன் சித்தாந்தன்**
மெய்ப்புப்பார்ப்பு

**நிரோஷா தியாகராசா**
மெய்ப்புப்பார்ப்பு

**கலாமணி பரணீதரன்**
அச்சு ஒருங்கிணைப்பு

## வளவாளர்கள்

**தில்லைநாதன் கோபிநாத்**
நூல் தயாரிப்பு / நூல் அச்சாக்கம்

**தங்கராஜா பிரபாகரன்**
ஊடக வீச்சு / மனிதவளத் தொடர்பு

**சிறிதரன் சோமிதரன்**
ஆவணப்படம்

**இ. பத்மநாப ஐயர்**
உசாத்துணை சேவை

**சுஜீவன் தர்மரட்ணம்**
நிகழ்வுகள் / கற்கை வட்டம்

**ஜனனி பாலசுந்தரம்**
வலைத்தளம் / பரவலாக்கம்

## ஆதரவளிப்போர்

**மானுடம் நிறுவனம்**
நூல் தயாரிப்பு / சஞ்சிகை விநியோகம் / உசாத்துணை சேவை

**ஆதிரை வெளியீடு**
ஆவணப்படம்

**நிகரி**
ஆவணப்படம்

**நாளை வெளியீடு**
ஆவணப்படம்

## கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

**நடராஜா முரளிதரன்**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

## கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

**கனகலிங்கம் சுகுமார்**
ஐக்கிய இராச்சியம்

**கணேசானந்தன் சசீவன்**
ஐக்கிய இராச்சியம்

**இ. பத்மநாப ஐயர்**
ஐக்கிய இராச்சியம்

**சதீசன் தனபாலசுந்தரம்**
ஐக்கிய இராச்சியம்

**மாதவி சிவலீலன்**
ஐக்கிய இராச்சியம்

**சிவகுமார் பாலசுப்ரமணியம்**
ஐக்கிய இராச்சியம்

**எஸ்.கே.விக்னேஸ்வரன்**
கனடா

**இளங்கோ**
கனடா

**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

**தமிழ்நதி**
கனடா

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**
நோர்வே

**தில்லைநாதன் கோபிநாத்**
அவுஸ்திரேலியா

**அசோக் யோகன் கண்ணமுத்து**
பிரான்ஸ்

**கந்தையா ரமணிதரன்**
ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ராஜ்குமார் ரஜீவ்காந்த்**
கொழும்பு

## நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

**சிறகுகள் அமையம்**
யாழ்ப்பாணம்

**சத்தியமனை நூலகம்**
யாழ்ப்பாணம்

**தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவை**
கிளிநொச்சி

**கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**
வவுனியா

**சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றம்**
மட்டக்களப்பு

**'கா' கலை இலக்கிய வட்டம்**
மட்டக்களப்பு

**திரைப்படக் கழகம்**
மட்டக்களப்பு

**ஏறாவூர் வாசிப்பு வட்டம்**
மட்டக்களப்பு

**தளம் கட்டமைப்பு**
திருகோணமலை

**முத்தமிழ்ச்சங்கம்**
திருகோணமலை

**நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்**
கண்டி

**கலை இலக்கிய வட்டம்**
பதுளை

**தியேட்டர் மேட்ஸ் பண்பாட்டு கழகம்**
நுவரெலியா

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**
கொழும்பு

## விநியோகப் பங்காளர்கள்

**பனுவல் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

**குயின்சி புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

## அச்சுப்பதித்து விநியோகிப்போர்

**நாளை வெளியீடு** – கனடா

## கலை பண்பாட்டு நடுவம் துறைசார் மதியுரைஞர் குழு

**நிலாந்தன் மகாதேவா**
இலக்கியம் – கவிதை

**பாக்கியநாதன் அகிலன்**
காண்பியக்கலை – கட்டடக்கலை

**ஜோசப் ஜோன்சன் ராஜ்குமார்**
ஆற்றுகைக்கலை – அரங்கக்கலை

**இலங்கரெட்ணம் சஜித்**
ஆற்றுகைக்கலை – நடனம்

**சபேஸ் சுகுணசபேசன்**
காண்பியக்கலை – புகைப்படக்கலை

## ஆய்வு நிறுவனம் துறைசார் மதியுரைஞர் குழு

**ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்**
மொழியும் இலக்கியமும்

**கந்தையா ரமணிதரன்**
நீரியலும் நீர்ப்பாசனமும்

**குமாரவடிவேல் குருபரன்**
சட்டமும் சட்ட முறைமையும்

**நடராஜா சிறீஸ்கந்தராஜா**
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**
சமயமும் இறையியலும்

**பால சிவகடாட்சம்**
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

**நாகமுத்து பிரதீபராஜா**
புவியியலும் திட்டமிடலும்

**பரமு புஷ்பரட்ணம்**
வரலாறும் தொல்லியலும்

**சனாதனன் தமோதரம்பிள்ளை**
கட்புல அரங்கேற்றக் கலைகள்

**சேரன் உருத்திரமூர்த்தி**
சமூகவியலும் மானிடவியலும்

**முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்**
பொருளியலும் நிதியியலும்

**சபா ஜெயராசா**
கல்வியியலும் கற்றலும்

**மரியோ அருள்தாஸ்**
அரசியலும் மெய்யியலும்

**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

**கந்தையா பகீரதன்**
விவசாயமும் மீன்பிடியும்

## வழிப்படுத்தும் குழு

**மீநிலங்கோ தெய்வேந்திரன்**

# உள்ளே...


இலங்கையின் பின்காலனித்துவ அரசு — பகுதி — 1,2,3 **03**
- ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

நடேசய்யரின் "Under Planter Raj The Standard Wage in Ceylon: தோட்டத் தொழிலாளர் ஊதிய உயர்வுக்கான அறிவுசார் தலையீடு **29**
- எம். எம். ஜெயசீலன்

யாழ்ப்பாணத்தில் மகாத்மா காந்தி **38**
- கார்த்திகேசு இந்திரபாலா

பண்டைய யாழ்ப்பாணத்தில் புராதன சமய நடைமுறைகள் — பகுதி 1,2 **44**
- சிவ தியாகராஜா

இலங்கையில் நடந்த சித்திரவதைகள்: உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் சமூக அரசியல் ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதம் — பகுதி 2 **69**
- ஆங்கில மூலம்: பேராசிரியர் தயா சோமசுந்தரம்
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்

மரபிலிருந்து மாறி மரபாகுதல்: யாழ்ப்பாணத்துத் தென்மோடிக் கூத்து **82**
- சின்னையா மௌனகுரு

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் தென்மராட்சி — சாவகச்சேரி **89**
- இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

இலங்கையின் அரசியலில் சமயமும் வன்முறையும்: 1860 — 1948 **93**
- ஆங்கில மூலம்: ஸ்டான்லி ஜெயராஜ் தம்பையா
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

இலங்கை மலையக மக்களின் வாழ்வியலில் சடங்குகள் — பகுதி 3 **99**
- மெய்யநாதன் கேதீஸ்வரன்

1983 — 1991: உச்சமடைந்த இனப் படுகொலைகளும் ஈழப்போரின் பிராந்தியப் பரிமாணமும் — பகுதி 1 **108**
- சி. அ. யோதிலிங்கம்

இராணுவமயமாக்கப்பட்ட அமைதியின் கீழ் அன்றாட வாழ்க்கை **117**
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

வி.எஸ். கோவிந்தசாமி: நாடற்றவர்களுக்காக ஒலித்த உரிமைக்குரல் **129**
- அருணாசலம் லெட்சுமணன்

மட்டக்களப்பின் நிலப்பிரபுத்துவப் பொருளாதாரமும் சமூக உறவுகளும் **137**
- கந்தையா சண்முகலிங்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமூக இயக்க எழுச்சிகள் **142**
- நடேசன் இரவீந்திரன்

மலையக நாட்டார் பாடல்களில் வெளிப்படும் காதல் உணர்வு **148**
-வேலாயுதம் இராமர்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிப் போக்குகளில் வடக்கு கிழக்குப் பிராந்தியங்களின் பங்களிப்பும் நீர்வளம், விவசாயம், கொள்கை, மேலாண்மை மற்றும் வளர்ச்சித் தந்திரங்களும் — பகுதி 2 **153**
- சுப்ரமணியம் சிவகுமார்

# இலங்கையின் பின்காலனித்துவ அரசு

இலங்கையின் சட்டத்துறை அறிஞர்களும், அரசியல் விஞ்ஞானிகளும் இலங்கையின் அரசியல் யாப்புகள் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகள் (Core Issues) பற்றிய உயராய்வுகள் பலவற்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளனர். 1947, 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் நடைமுறைக்கு வந்த மூன்று அரசியல் யாப்புகள் பற்றியும், இம்மூன்று அரசியல் யாப்புகளுக்கும் கொண்டுவரப்பட்ட யாப்புத் திருத்தங்கள் பற்றியும், நீதிமன்றத் தீர்ப்புகள் பற்றியும் இவ் உயராய்வுகளில் விரிவாக அலசப்பட்டுள்ளன. இவ்வாய்வுகளில் உள்ளடங்கிய பெறுமதிமிக்க கருத்துகளைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதே ‘அரசியல் யாப்புச் சிந்தனைகள்’ என்னும் இத்தொடரின் நோக்கமாகும்.

*ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட*

**பகுதி -1**




## கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. ‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

இலங்கையின் பின்காலனித்துவ அரசு (*Post-Colonial State in Sri Lanka*) எனும் பொருள் பற்றிய ஆய்வுக் கட்டுரையொன்றை ஜயதேவ உயன்கொட அவர்கள் எழுதினார். இக்கட்டுரை பேராசிரியர் நடராஜ சண்முகரத்தினம் அவர்களது அறிவுத்துறைப் பணிகளைப் பாராட்டும் வகையில் வெளியிடப்பட்ட எழுபதாண்டு நிறைவு வெளியீடான '*The Political Economy of Environment and Development in a Globalized World: Exploring the Frontiers: Essays in Honour of Nadarajah Shanmugaratnam*' என்னும் கட்டுரைத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருந்தது. இந்நூல் '*Tapir Academic Press, Trondheim, Norway* (2011)' வெளியீடாகும். ஜயதேவ உயன்கொட அவர்களின் கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்பட்டுள்ளது.

இலங்கை பற்றிய அரசியல் விஞ்ஞானத் துறை ஆய்வுகளில் 'அரசு' என்ற விடயம் பற்றிப் பல கோணங்களில் ஆராயப்பட்டுள்ள போதும், பின்காலனித்துவ அரசு உருவாக்கம் என்னும் விடயம் ஆராயப்படவில்லை. 1960 ஆம் ஆண்டு முதல் அரசு பற்றிய ஆய்வுகள் அதனை இலங்கையின் இனப்பிரச்சினை என்பதன் ஊடாகவே பார்த்தன. வர்க்க உறவுகள், சமூக அடித்தளம் என்பனவற்றின் ஊடாகவும் இலங்கை அரசின் இயல்பை விளக்கும் முயற்சிகள் பயனுள்ள ஆக்கங்களுக்குக் காரணமாயின (உ.ம். சாஸ்திரி 1983, குணசிங்க 1996, உயன்கொட 1999, 2011). ஆயினும் காலனித்துவ அரசின் உருவாக்கம் என்ற வரலாறு பயனுள்ள முறையில் இன்றுவரை கட்டமைக்கப்படவில்லை.

இக்கட்டுரையில் நான் எடுத்துக் கூறவிருக்கும் விடயங்கள் வருமாறு: முதலாவதாக, பின்காலனித்துவ அரசின் உருவாக்கத்தின் பின்னணியாக அமைந்த இலங்கையில் பிரித்தானிய காலனி ஆட்சிக்கால வரலாற்றை விளக்கவுள்ளேன். இப்பின்னணியை விளக்கும்போது, பின்காலனித்துவ அரசுகளின் இயல்பை விளக்கும் கோட்பாடாகிய மிகைவிருத்தி அரசு யந்திரம் (*Over-developed State Apparatus*) என்னும் கருத்தை, இலங்கைச் சூழ்நிலையில் வைத்துப் பரிசீலிக்கவுள்ளேன்.

இக்கருத்து பின்காலனித்துவ அரசுகளின் உருவாக்கம் பற்றிய பிரத்தியேகச் சூழ்நிலைகள் பற்றிக் குறிப்பிடுவதால் எனது பரிசீலனை பயனுடையதாக இருக்கும் எனக் கருதுகிறேன். கட்டுரையின் அடுத்த பகுதி 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இலங்கையின் பின்காலனித்துவ அரசு உருவாக்கத்தில் வெளிப்பட்டுத் தெரிந்த இரு முக்கிய இயல்புகளை எடுத்துக்கூறுவதாக இருக்கும். இவ்விரு இயல்புகளாவன:

அ) இக்காலத்தில் லிபரல் ஜனநாயக முறையின் அடிப்படையான நிறுவனங்களும் நடைமுறைகளும் இலங்கையில் தடம் பதித்தன. அத்தோடு இந்நிறுவனங்களும் நடைமுறைகளும் ஒற்றையாட்சி யாப்பு மாதிரியை (*Unitarist Constitutional Model*) அடிப்படையாகக் கொண்டிருந்தன.

ஆ) அரசின் இறுதி இலக்கு இலங்கையில் சிங்களத் தேசியவாதத்தின் அரசியல் பண்பாட்டு நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதே என்ற கருத்து வலுப்பெறுதலும், அரசின் இனத்துவ அடித்தளம் (சிங்களமாகக்) குறுக்கம் பெறுதலும் இக்காலத்தில் உறுதியாயின.

மூன்றாவது பகுதி தாராண்மைப் பண்பற்ற அரசாக இலங்கை அரசு மாறும் செயல்முறையை விளக்குகிறது.

நான்காம், ஐந்தாம் பகுதிகளிலும் நான் இதே கருத்தைத் தொடர்ந்து பரிசீலிப்பதோடு, 1970-1977 காலப்பகுதியில் 'லிபரல் அரசு அல்லாததாக ஆக்கும்' இச்செயல்முறை 'லிபரலிசத்தைச் சகித்துக் கொள்ளாத அரசின் தோற்றத்திற்குக் காரணமாயிற்று' என்பதையும் ஆராயவுள்ளேன்.

1980களில் இலங்கையில் பொருளாதாரத் தாராளமயமாக்கல் இடம்பெற்றது. இத்தாராளமயமாக்கல் சூழலில் இனக்குழும சிவில் யுத்தமும் நடைபெற்றது. இவ்விரு நிலைமைகளின் பின்னணியில் அரசு 'யாப்புக்குட்பட்ட சர்வாதிகாரம்' (*Constitutional Authoritarianism*) என்ற தன்மை உடையதாக மாறியதை ஆறாவது பகுதி ஆராய்கிறது.

ஏழாம் பகுதியில் 1994 இலும், 2002 இலும் 'லிபரல் அரசை உருவாக்கும்' (*Liberalisation*) முயற்சி மேற்கொள்ளப்பட்டதையும் அது தோல்வியுற்றதையும் கூறவுள்ளேன். முடிவுரையாக, பாராளுமன்ற ஜனநாயகத்துடன் சர்வாதிகாரத்தை இணைத்து ஒருங்குசேர வைத்திருக்கும் அரசியல் செயல்முறை இலங்கையில் நடைபெற்று, சர்வாதிகாரம் பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்று ஒத்திசைந்து கொள்வதையும் எடுத்துக் கூறவுள்ளேன்.

## இலங்கையின் பின்காலனித்துவ அரசு: சில ஆரம்பக் குறிப்புகள்

பின்காலனித்துவச் சமூகங்களில் நவீன அரசுகளை ஆரம்பித்து வைக்கும் பணியை காலனிய ஆட்சிதான் செய்தது. பின்காலனித்துவ அரசு இராணுவ வெற்றியின் மூலமும், இராணுவ-அலுவலர் ஆட்சி யந்திரத்தினை நிறுவுவதன் மூலமும் உருவாக்கப்பட்டது. பின்காலனித்துவச் சமூகங்கள் பலவற்றில் அச்சமூகங்களை அரசியல் ரீதியிலும் நிர்வாக ரீதியிலும் ஒன்றிணைக்கும் பணி காலனிய

ஆட்சியினால் மேற்கொள்ளப்பட்டது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் போதுதான் நாடு அரசியல் நிர்வாக ஒருங்கிணைப்புக்குள் வந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் மத்தியப்படுத்தப்பட்ட அரசு ஒன்றுபட்ட இறைமையுடையதாக உருவானது. இராணுவ ஆக்கிரமிப்பு, நிர்வாகச் சீர்திருத்தம் என்ற இருவகை உத்திகளையும் பயன்படுத்தி பிரித்தானியர் இதனைச் சாதித்தனர். நாட்டின் பொருளாதாரம் இக்காலத்தில் உலகச் சந்தைப் பொருளாதாரத்துடன் ஒன்றிணைக்கப்பட்டது. இந்த ஒன்றிணைப்பு காலனிய மூலதனத்தின் (*Colonial Capital*) உள்வரவால் நிறைவேற்றப்பட்டது. காலனித்துவ அரசு உருவாக்கத்தின் முக்கிய இயல்பாக இப்பொருளாதார அம்சங்கள் அமைந்திருந்தன.

*1970*களில் இங்கிலாந்தில் குடிபுகுந்து வாழ்ந்தவரான பாகிஸ்தானிய சமூகவியலாளர் ஹம்சா அலவி (*Hamza Alavi*) பின்காலனித்துவ அரசு என்னும் விடயம் குறித்துக் கருத்து ஒன்றை முன்வைத்தார். பின்காலனித்துவ நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்ற போது அவற்றின் அரசுகளின் கட்டமைப்பு முறையில் எந்த ஒரு அடிப்படை மாற்றமும் நிகழவில்லை என்றார் ஹம்சா அலவி. அதாவது அரசு யந்திரம் அப்படியே மாற்றமின்றி இருந்தது. முறிவு (*Rupture*) அல்லது தொடர்ச்சியின்மை ஒன்றைக் காண முடியவில்லை என்றார். மாற்றம் ஏதாவது நிகழ்ந்தது என்றால் அது ஆட்சியைப் பிடித்த சமூக வர்க்கங்கள் எவை? வர்க்க உறவுகளின் தன்மை என்ன? என்பனவே என்றும் அவர் கூறினார். காலனித்துவ ஆட்சியாளர் குழுவின் (*Colonial Ruling Class*) இடத்தில் உள்ளூர் சமூக வர்க்கங்களின் குழு அமர்ந்து கொண்டது. இருந்தபோதும் அரசு யந்திரம் (*State Apparatus*) மாறாமல் இருந்தவாறே தொடர்ந்து நிலைத்தது.

ஹம்சா அலவியின் விளக்கத்தின்படி இந்த அரசு யந்திரம் காலனி ஆட்சிக் காலத்தில் மிகை வளர்ச்சி பெற்றதாக (*Over Developed*) உருவாகியது. காலனித்துவச் சமூகம் வளர்ச்சியுறாத ஒன்றாக இருக்க, அதன் மீது திணிக்கப்பட்ட அரசு ஒப்பீட்டு நிலையில் இவ்வாறு மிகை வளர்ச்சி பெற்றிருந்ததென்றார். மிகை வளர்ச்சியுற்ற இந்த அரசு யந்திரம் பின்காலனித்துவ அரசுக் கட்டத்திலும் நீடித்து நிலைத்தது என்றும் அவர் கூறினார். காலனியின் பல்வேறு சமூக வர்க்கங்களைக் கட்டுப்படுத்தி அடக்கி வைத்திருப்பதற்கு மத்தியப்படுத்தப்பட்ட அரசு நிர்வாக யந்திரம் காலனி ஆட்சியாளர்களுக்குத் தேவைப்பட்டது. ஆதலால் வரிகளை அறவிடுதல், பொது நிர்வாகம், சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்தல், நிதி



ஜயதேவ உயன்கொட

Image Source - lankadailymail.com

நிர்வாகம் ஆகிய அன்றாட நடைமுறை சார்ந்த விடயங்களோடு மக்களை அடக்கி வைப்பதற்கான அரச யந்திரமும் தேவைப்பட்டது. இதனால், காலனிய அரசு சிவில் சமூகத்தை விட ஒப்பீட்டு ரீதியில் மிகை வளர்ச்சி பெற்ற இராணுவ-அலுவலர் ஆட்சிக் கட்டமைப்பைக் கொண்டு விளங்கியது.

காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற பல முன்னாள் காலனிகளின் அரசியல் மாற்றம் பற்றிய முக்கியமான பிரச்சினை ஒன்றுக்கு விடை தருவதாக அலவியின் காலனித்துவ அரசு, பின்காலனித்துவ அரசு ஆகிய கருத்துகள் விளங்கின. விடுதலை பெற்ற இந்த நாடுகளில் பாராளுமன்ற ஜனநாயக நிறுவனங்கள் ஏன் பலமற்றனவாக இருந்தன என்பதை அவர் விளக்க முயன்றார். இந்நாடுகளில் இராணுவ-அலுவலர் ஆட்சிக் குழுக்கள் குடிமக்கள் அதிகாரத்தைப் பறித்து இராணுவ ஆட்சி தோன்றுவதை விளக்க உதவியது. அதாவது சாதாரண சூழ்நிலைகளில் அரசு யந்திரம் சிவில் சமூகத்திற்குக் கட்டுப்பட்டதாய் இருக்கும். இந்நாடுகளில் அரசு யந்திரம் சிவில் சமூகத்தை விட மிகை வளர்ச்சியுற்றதாய், சமூகத்தின் மீது அளவுக்கு மீறிய அதிகாரம் செலுத்தக்கூடியதாக இருந்தது. பலம்மிக்க அரசு யந்திரம் ஆட்சியாளர் குழுக்களிடையே இருந்த உள்முரண்பாடுகளை மத்தியஸ்தம் செய்து தீர்வு செய்யும் நிலையிலும் இருந்தது.

பின்காலனித்துவ சமூகங்களின் சமூக வர்க்கங்களின் கூட்டு பலமற்றதாக இருந்தது. இதனால், இச்சமூக வர்க்கங்களின் கூட்டு, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய போது அதனால் அரசு யந்திரத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியவில்லை. ஒப்பீட்டளவில் சமூக வர்க்கங்கள் பலமற்றவையாக இருந்தன. இதனால், சிவில் ஆட்சியைப் பறித்து இராணுவம் ஆதிக்கம் பெற வழி ஏற்பட்டது.

பாகிஸ்தான், பங்களாதேசம் என்ற இரு நாடுகளும் பின்காலனிய அரசுகள் எதிர்நோக்கிய இந்தப் பிரச்சினையின் தென்னாசிய மாதிரிகளாக விளங்கின. இரு நாடுகளிலும் சிவில் சமூக ஆட்சியை நடத்துவதற்குச் செய்த முயற்சிகள் தொடர்ச்சியாகத் தடுக்கப்பட்டன. சிவில் சமூகத்தின் சமூக வர்க்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்த அரசியல் தலைவர்கள் அரசியல் முரண்பாடுகளைக் கொண்டவர்களாய், தமக்கிடையே சச்சரவுகளில் ஈடுபட்ட வேளையில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.

இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படவில்லை. இங்கு வித்தியாசமான நிலை ஏற்பட்டது. இந்த வித்தியாசத்தை அலவியின் எண்ணக்கருவின் உதவியுடன் இலங்கையின் பின்காலனிய அரசின் இயல்பை விளக்குவதன் மூலம் புரிந்துகொள்ளலாம். இந்தியாவிலும் இலங்கையை ஒத்த நிலையே காணப்பட்டது. இவ்விரு நாடுகளிலும் காலனித்துவம் விட்டுச்சென்ற அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தி குடிமக்களின் பிரதிநிதித்துவத்தை உடைய அரசியல் கட்சிகள் ஆட்சியைப் பிடித்தன. இலங்கையும் இந்தியாவும் ஜனநாயக பாராளுமன்ற நிறுவனங்களைப் பயன்படுத்தி சிவில் ஆட்சியை நிலைநிறுத்தின. பாகிஸ்தானிலும் பங்களாதேசத்திலும் சாத்தியமற்றதான அரசியல் மாற்றம் இவ்விரு நாடுகளிலும் சாத்தியமாயிற்று.

இலங்கையில் 1962 ஆம் ஆண்டில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முயற்சி மேற்கொண்டதென்பது உண்மையே. ஆனால், இம்முயற்சி இலகுவாக முறியடிக்கப்பட்டது. ஏனெனில் இலங்கையில் அரசு யந்திரத்தின் மீது சிவிலியன் கட்டுப்பாடு உறுதியானதாக இருந்தது. நாடு இராணுவ ஆட்சிக்குள் விழும் ஆபத்து இருக்கவில்லை.

இருப்பினும் இலங்கையின் நிலை இந்தியாவை விட சில அம்சங்களில் வேறுபட்டதாக இருந்தது. 1947, 1948 ஆம் ஆண்டுகளில் இந்தியா என்ற பின்காலனித்துவ அரசு உருவாகிக் கொண்டிருந்த காலத்தில் ஒவ்வொரு நாளும் அங்கு கட்டுக்கடங்காத வன்முறை நிகழ்ந்தது. இந்தியாவை ‘பிரித்தல்’ என்ற அறுவை வைத்தியம் நடந்து கொண்டிருந்த பின்னணியில் இந்து - முஸ்லிம் வன்முறைக் கலவரங்கள் உச்சக்கட்டத்தை அடைந்தன. இந்தியாவிலிருந்து வேறுபட்ட நிலை இலங்கையில் இருந்தது. இலங்கையில் பின்காலனிய அரசு அமைதியான சூழலில் உருவாகியது. இங்கு வன்முறை 1970களில்தான் ஆரம்பித்தது. 1970களில் ஆரம்பித்த வன்முறை 40 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்தது. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசம் ஆகிய மூன்று தேசங்களிலும் பின்காலனிய அரசு வன்முறையின் மத்தியில் தோன்றியது. இலங்கையில் பின்காலனிய அரசு தோன்றி வளர்ந்து முதிர்ச்சியைப் பெறும் வேளையில் வன்முறைகள் ஆரம்பித்தன. சுதந்திரம் பெற்றுப் பல ஆண்டுகள் கடந்த பின்னரே இவை நிகழ்ந்தன.

பிரித்தானியாவின் காலனியாக இருந்த காலத்திலும், அதன் பின்னர் பின்காலனித்துவ அரசாக மாறிய போதும் இலங்கையின் வரலாற்றுப் பாதை அதன் போக்கில் விசேட சிறப்பியல்புகள் சிலவற்றைக் கொண்டிருந்தது. 1848 ஆம் ஆண்டில் பிரித்தானியருக்கு எதிரான கலகம் நடந்தது. அதுதான் பிரித்தானிய காலனித்துவத்திற்கு எதிரான இறுதிக் கலகம். இதன் பின்னர் இலங்கைச் சமூகம் மீது பிரித்தானிய அரசு முழுமையான மேலாதிக்கத்தைச் செலுத்தியது. மக்கள் எழுச்சியாக அமையும் எதிர்ப்புக் கலகங்கள் எவையும் இலங்கையில் இதன் பின்னர் இடம்பெறவில்லை. 1948 இல் இலங்கை சுதந்திரம் பெறும்வரை 100 ஆண்டுகள் இங்கு சமூகத்தில் ஒப்பீட்டளவில் அமைதி நிலவியது. இதனால், இலங்கையில் பிரித்தானிய ஆட்சி சர்வாதிகாரத் தன்மை குறைந்ததாய் இருந்தது. இந்தியாவுடன் ஒப்பிடும் போது இந்த வித்தியாசம் தெளிவாகத் தெரிகிறது.

பிரித்தானியக் காலனிய ஆட்சியாளர்களுக்கும் அவர்களது உள்ளூர்க் கூட்டாளிகளுக்கும் எதிரான ஆயுதம் தாங்கிய எதிர்ப்புப் போராட்டம் இந்தியாவில் தொடர்ச்சியாக 1940 வரை நடைபெற்றது. குறிப்பாக விவசாய வர்க்கம் இப்போராட்டத்தில் முன்னணியில் திகழ்ந்தது. இதனால், இந்தியாவின் காலனிய அரசு கொடுமைத்தனமான இராணுவச் சர்வாதிகார அரசாக விளங்கியது. ஐரோப்பாவில் லிபரல் அரசுகளின் தோற்றத்திற்கு முற்பட்ட கால வல்லாட்சி அரசுகளின் மாதிரியில் பிரித்தானியாவின் இந்தியக் காலனிய அரசு விளங்கியது. இலங்கையின் காலனிய அரசு இத்தகைய வல்லாட்சி அரசாக இருக்கவில்லை.

இலங்கையில் பிரித்தானிய ஆட்சியின்போது 1830களிலும் 1840களிலும் பொருளாதார மாற்றங்கள் நிகழ்ந்தன. அக்காலத்திலேயே தாராண்மைப் பொருளியல் முறை அறிமுகமாயிற்று. முதலாளித்துவ வளர்ச்சியில் அரச மூலதனத்தை விட தனியார் மூலதனமே பிரதான பங்கைப் பெற்றது. காலனிய அரசு தனது வழமைக்கு மாறாக மக்கள் நலன் பற்றிக் கரிசனை கொள்ளும் அரசாகவும் இருந்தது. இலங்கையின் காலனிய ஆட்சி பற்றி எழுதிய வரலாற்றாசிரியர்கள் இதைக் கவனிக்கத் தவறினர் என்றே கூறலாம். ஆனால், இலங்கையில் காலனிய

அரசின் வன்முறை அம்சம் 1848க்குப் பிற்பட்ட காலத்தில் காணப்படவில்லை.

இலங்கை அரசு தமிழர் பகுதிகளில் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி இயக்கம் தோன்றிய போதுதான் இராணுவத்தைப் பலம் கொண்டதாக மாற்றியது. இலங்கையின் இராணுவம் ‘சடங்காச்சாரமான அல்லது அலங்காரமான’ படையணியாகவே இருந்து வந்தது. 1971 இல் கிளர்ச்சி ஏற்பட்ட போது இத்தகைய இராணுவமே கிளர்ச்சியை அடக்கும் பணியை நிறைவேற்றியது. அதன் பின்னர் தமிழ் இளைஞர் கிளர்ச்சி பத்து ஆண்டுகள் கழித்து வலுவடைந்தபோது இராணுவம் விரிவுபடுத்தப்பட்டுப் பலப்படுத்தப்பட்டது.

இலங்கையில் அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகச் சிவில் நிர்வாக அதிகார வர்க்கம் செயற்பட்டு வந்தது. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் ஆளும் உயர்குழுக்களிடையே போட்டியும் முரண்பாடுகளும் எல்லை மீறிப் போனாலும், இராணுவம் தலையிட்டு மத்தியஸ்தம் செய்வதும் தன் அதிகாரத்தைக் காட்டுவதுமான நிலை இலங்கையில் உருவாகவில்லை. பாராளுமன்றம் என்ற எல்லைக்குள் இப்போட்டியும் முரண்பாடும் வெளிச் சக்தியான இராணுவத்தின் தலையீடு இன்றித் தீர்வு செய்யப்பட்டன. பாராளுமன்ற நடைமுறைகள், தேர்தல்கள் என்ற போட்டி விதிமுறைகளுக்கு இணங்கிப் போகும் தன்மை இலங்கையில் நிலவியது.

1956 ஆம் ஆண்டில் அரசியல் அதிகாரம் புதிய சமூகக் கூட்டொன்றிற்குக் கைமாறியது. இம்மாற்றம் வன்முறை இல்லாமல் செய்வதற்கான அரசின் தகைமை பற்றிய பரிசோதனைக்கு ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது. அரசு உருவாக்கம் என்பது சமூக வர்க்கங்களிடையிலும், இனக்குழுமங்களுக்கிடையிலும் ஏற்படும் அரசியல் போராட்டங்களின் விளைவாக அமையும். உண்மையில் இந்த அரசியல் போராட்டங்கள் நடைபெறும் களமாகவும் அரசு விளங்குகிறது. இந்த அரசியல் போராட்டங்களின் பயன்களை ஸ்தூல வடிவில் நிறுவனங்களூடாக வெளிப்படுத்தும் களமாகவும் அரசு விளங்குகிறது.

1950களின் நடுப்பகுதியில் இலங்கையின் பின்காலனித்துவ அரசின் வர்க்க உறவுப் பின்னணி மாறியது. இம்மாற்றம் வர்க்கம், இனக்குழுமம் என்ற இரண்டு விடயங்கள் அதிகாரம் என்ற தளத்தில் இடைவினை புரிந்ததன் விளைவே என்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். 1956 இல் ஆட்சி மாற்றம் ஒன்று நிகழ்ந்தது. இது ஐ.தே.கட்சி (UNP) என்ற கட்சியிலிருந்து அரசியல் அதிகாரம் மஹஜன எக்சத் பெரமுன (MEP) என்ற கட்சிக்கு மாறியதை மட்டும் குறிக்கவில்லை. குறிப்பிட்ட வகை வர்க்க உறவுகளைக் கொண்ட அதிகாரக் கூட்டு (Power Block) உருவானதையும், இதில் இணைந்த வர்க்கங்கள் பொதுவான கருத்தியலைக் கொண்டிருந்ததையும் காணலாம்.

1956 இன் ஆட்சி மாற்றத்தை அரசின் வர்க்க அடிப்படையில் ஏற்பட்ட மாற்றம் என்று கூறலாம். இந்த மார்க்சிய சமூகவியல் விளக்கம் பொருத்தமானதாக உள்ளது. அரசியல் அதிகாரத்தின் மாற்றம் சிங்கள சமூகத்தில் இடைத்தர சமூக வர்க்கங்களின் புதிய கூட்டொன்று உருவானதன் மூலம் ஏற்பட்டது. இந்த இடைத்தர சமூக வர்க்கங்கள் (Intermediate Social Classes) இலங்கையில் சிங்கள மொழி பேசும் மக்களுக்கு அரசியல் சுதந்திரம் அர்த்தமுள்ளதாகவும், பொருத்தமுடையதாகவும் மாற்றப்பட வேண்டும் என்ற தொலைநோக்கை முன்வைத்துக் கருத்தியல் மட்டத்தில் பிரசாரத்தைச் செய்து அரசியலில் மக்களை அணிதிரட்டின. ஜனநாயக உரிமைகள் பரவலாக்கப்பட்டதன் விளைவாகவே இந்த அணிதிரட்டல் சாத்தியமாயிற்று எனலாம். சர்வசன வாக்குரிமை, இடதுசாரி இயக்கம் ஆகியனவற்றின் தாக்கம் அரசியல் தளத்தை விரிவடையச் செய்து அரசியல் அபிலாசைகளைக் கிளர்ந்தெழச் செய்தன.

1950களின் முற்பகுதியில் வர்க்க முரண்பாடுகள் பல நிலைகளில் வெளிப்பட்டதைக் காணலாம். ஆட்சியில் பிடியை வைத்திருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இணைந்திருந்த குழுக்களிடையே வர்க்க முரண்பாடுகள் தோன்றின. 1952 இல் இக்கட்சியில் பிளவு ஏற்பட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) என்ற கட்சி தோன்றியது. பிரிந்துபோன இக்கட்சியின் தோற்றம் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்த ஒரு வர்க்கத்தின் உள்முரண்பாட்டின் விளைவாகும்.

இக்காலத்தில் கைத்தொழில் துறையில் அரசு - தனியார் துறை மூலதனம் - உழைப்பாளர் என்ற முத்தரப்பு முரண்பாடுகள் வலுப்பெற்றன. இடதுசாரிக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் அரசு - தொழிலாளர் வர்க்க முரண்பாடுகள், மூலதனம் - தொழிலாளர் வர்க்க முரண்பாடுகள் என்ற நிலைகளில் தலைமைத்துவத்தை வழங்கிப் போராட்டப் பாதையில் சென்றன.

இந்த அரசியல் கொந்தளிப்புகளின் மத்தியில் இன்னொரு விடயமும் மேலெழுந்தது. சிங்கள சமூகத்தின் இடைத்தர சமூக வர்க்கங்கள் அரசியல் அதிகாரத்தை வேண்டி நின்றன. அவற்றின் போராட்டம் ஆளும் ஐ.தே.கட்சிக்கு எதிரானதாகவும்,

ஆளும் உயர்குழுக்களுக்கு எதிரானதாகவும் அமைந்தது (றிஜின்ஸ், 1960). இடைத்தர வர்க்கங்களால் ஆன சமூகக் கூட்டணியாக அமையும் இந்த ஆட்சியை சில ஆய்வாளர்கள் 'இடைத்தர ஆட்சி' (Intermediate Regime) என்று குறிப்பிட்டனர் (சாஸ்திரி, 1983). இது ஹங்கேரிய மார்க்சியவாதியான மைக்கேல் கலெக்கி (Michal Kalecki) என்பவரால் கூறப்பட்ட கருத்தாகும்.

1956 இல் மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) புதிய வர்க்கக் கூட்டுறவின் பயனாக அமைந்தது. அத்தோடு பின்காலனித்துவ இலங்கையில் அரசு அதிகாரத்தின் சமூக அடித்தளம் விரிவாக்கம் பெற்றது. இந்த இரு அம்சங்களையும் 'இடைத்தர ஆட்சி' என்ற எண்ணக்கரு உள்ளடக்குவதாய் உள்ளது.

இவ்விடத்தில் இரண்டு விடயங்களை நாம் குறிப்பிடுதல் தகும். முதலாவது, சுதந்திரத்திற்குப் பிந்திய பத்தாண்டுக் காலப்பகுதியில், இலங்கையில் அரச அதிகாரத்தின் சமூக அடித்தளம் விரிவாக்கம் பெற்றது. இந்த விரிவாக்கம் வன்முறை இல்லாமல் செய்யப்பட முடியும் என்பது நிரூபிக்கப்பட்டது. இது குறிப்பிடத்தக்க விசேட இயல்பு. இரண்டாவதாக, இரண்டு வெவ்வேறு அதிகாரக் கூட்டுகள் இக்கட்டத்தில் உருவாகி அருகருகே இருந்து செயற்படத் தொடங்கின. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அதிகாரக் கூட்டு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அதிகாரக் கூட்டு என்பவற்றையே இங்கு குறிப்பிடுகின்றோம். இந்த அம்சம் முதலாவதான வன்முறையற்ற வகையில் அரசியல் அதிகாரத்தின் அடித்தளம் மாறியதன் விளைவு என்றும் கூறலாம். இந்த இரு அதிகாரக் கூட்டுகள் அரசை மாறி மாறி நிர்வகித்தன. அரசின் வர்க்க அடித்தளத்தில் இவ்விரு கூட்டுகளும் தத்தம் பங்கைப் பெற்றன. பிற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அனுபவத்திலிருந்து இலங்கை வேறுபடுவதை மேற்கூறிய இரண்டு விடயங்களின் அடிப்படையிலேயே விளங்கிக் கொள்ளலாம். பிற தேசங்களில் அரசின் சமூக அடித்தளத்தின் விரிவாக்கம் என்ற மாற்றமும், ஆளும் குழுக்களிடையிலான போட்டியும் வன்முறை மிக்கதாய் அமைந்தன. இக்கட்டுரையில் இவ்விடயம் பற்றி மேலும் விரிவாகப் பின்னர் குறிப்பிடுவோம்.

## இனவாத அரசு: அதன் தொடக்கம்

இலங்கை 1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னருள்ள 20 ஆண்டுக் காலத்தின் பின்காலனித்துவக் கட்டத்தின் சிறப்பு இயல்புகளில் ஒன்று, இலங்கை அரசு பாராளுமன்ற ஜனநாயக நிறுவன அமைப்புகளை வலுப்படுத்திய அரசு உருவாக்கமாக வளர்ச்சி பெற்றதாகும். பிரித்தானியாவின் வெஸ்ட்மின்ஸ்டர் முறையின் மாதிரியில் அமைந்த லிபரல் ஜனநாயக அரசாக இலங்கை விளங்கியது (றிஜின்ஸ், 1960; வில்சன், 1974; யூப், 1978).

இடதுசாரிக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் பெரும் வேலைநிறுத்தங்களை இக்காலத்தில் நடத்தின. இவற்றை விட மூன்று முக்கிய வரலாற்று நிகழ்வுகள் இக்காலத்தில் இலங்கை சமூகத்தின் அடி ஆழம் வரை ஊடுருவிய பிளவுகளை எடுத்துக்காட்டுவனவாக இருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அரிசி மானியத்தை வெட்டும் கொள்கைத் தீர்மானத்தை எடுத்தபோது இடதுசாரிக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இணைந்து ஹர்த்தால் ஒன்றை நடத்தின. இது முதலாவது முக்கிய நிகழ்வு. 1958 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நாடு முழுவதும் தமிழ்களுக்கு எதிரான வன்முறைக் கலகம் வெடித்தது. இது இரண்டாவது நிகழ்வு. மூன்றாவதாக, 1959 ஆம் ஆண்டு செப்டம்பரில் பிரதமர் எஸ்.டபிள்யு. பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்டார். பண்டாரநாயக்கவின் வீட்டிற்குச் சென்ற புத்த பிக்கு ஒருவர் அவரை அங்கு வைத்துச் சுட்டுக் கொன்றார்.

1956 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கவின் தலைமையில் ஆட்சிக்கு வந்த குழுவின் உட்பூசல்களை இத்துயரச் சம்பவம் வெளித்தெரிய வைத்தது. பிரதமரின் படுகொலை அரசியல் நெருக்கடி ஒன்றை உருவாக்கவில்லை. இதுவொரு நிலைகுலைப்பு நிகழ்வு ஆயினும் இலங்கை அரசு இந்த அரசியல் பிரச்சினையிலிருந்து தன்னை வெகு விரைவாக மீட்டுக் கொண்டது.

பாகிஸ்தானிலும் 1951 ஆம் ஆண்டு பிரதமர் லியாகத் அலி கான் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு இடம்பெற்றது. அங்கு அதனை அடுத்து நிகழ்ந்த சம்பவங்கள் இலங்கையின் நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டனவாய் இருந்தன. பாகிஸ்தானின் தந்தையான முஹம்மது அலி ஜின்னாவின் இறப்பு ஆளும் குழுக்களிடையே ஏற்கனவே பிளவுகளையும் அரசியல் நெருக்கடியையும் தோற்றுவித்திருந்தது. அப்பின்னணியில் இராணுவமும் சிவில் அதிகார வர்க்கமும் ஒன்றிணைந்து புதியதோர் அதிகாரக் கூட்டை உருவாக்கிக் கொண்டன. இந்த அதிகாரக் கூட்டு (Power Block) தன்னை ஒரு மாற்று ஆளும் குழுவாக இனங்காட்டியது. 1958 ஆம் ஆண்டில் இந்த இராணுவ-சிவில் அதிகாரிகள் குழு சிவில் ஆட்சியை ஒழித்துவிட்டு சதிப்புரட்சி ஒன்றின் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

1950களின் பிற்பகுதியில் இலங்கையின் நிலை பாகிஸ்தானின் நிலையை விட மாறுபட்டதாக

இருந்தது. இலங்கை ஜனநாயக நாடாக விளங்கியது. பலமுள்ள இரு கட்சிகளைக் கொண்ட அரசியல் கட்சிமுறை, தனது இருப்பை நிலைநிறுத்திய இடதுசாரி இயக்கம், பலம் வாய்ந்த தொழிற்சங்க இயக்கம் என்பன இலங்கையின் ஜனநாயக நிறுவன முறையின் அடித்தளமாக விளங்கின. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், இலங்கையின் சிவில் சமூகம் (Civil Society) பலம் வாய்ந்ததாக இருந்தது.

சுதந்திரத்திற்குப் பிந்திய பத்தாண்டுக் கால வளர்ச்சிகளை இன்னொரு விதமாகவும் விளக்க முடியும். அரசு இனவாதக் கலப்புடையதாகி இனவாத அரசாக மாறியது (சண்முகரத்தினம், 1993) அல்லது இனக்குழுமப் பெரும்பான்மைவாதம் (Ethnic Majoritari anism) தலைதூக்கியது என்று கூறலாம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தின் பின்னர் இலங்கையின் புதிய அரசு 'தேசிய' தன்மையுடையதா என்று விவாதித்தனர். இலங்கை சுதந்திரம் பெற்ற சமயத்தில் அதிகாரத்தைப் பிடித்த ஆளும் குழுக்களிடையே தீவிரமானதும் அடிப்படையானதுமான சமூகப் பிளவுகள் இருக்கவில்லை. இலங்கையின் முதலாளி வர்க்கத்திற்கும் நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்திற்கும் இடையே முரண்பாடுகள் பெரிய அளவில் இருக்கவில்லை. அவை அரசியலில் ஒன்றிணைந்து செயற்பட்டன. 1952 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டமை ஆளும் உயர்குழாத்தின் மத்தியில் ஏற்பட்ட பிளவு என்று கூறலாம். இப்பிளவின் பின்னர் புதிய கட்சி ஒன்றினை பண்டாரநாயக்க தலைமையில் அவரது கூட்டாளிகள் சேர்ந்து அமைத்தனர்.

சுதந்திரம் அடைந்த சந்தர்ப்பத்தில் இலங்கையின் உயர்குழாம் இனக்குழும அடிப்படையில் பிளவுபட்டிருந்தது. சுதந்திரத்திற்கு முன்பே இன முரண்பாடுகளும் போட்டியும் தோன்றிவிட்டன. காலனித்துவ ஆட்சியின் போது தேர்தல் அரசியல் போட்டி என்ற பின்னணியில் இன முரண்பாடுகள் வெளிப்பட்டன. அக்காலத்திலேயே சர்வசன வாக்குரிமையின் அடிப்படையிலான அரைகுறை ஜனநாயகம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது (றஸ்ஸல், 1971; விக்கிரமசிங்க, 1995).

சுதந்திரத்தின் பின்னர் இனக்குழும அரசியல் தீவிரம் பெற்றது. புதிய தேசத்தின் 'தேசியம்' (Nation) மற்றும் அதன் அரசு என்ற இரண்டினதும் அரசியல், சட்ட இயல்பு பற்றிய பிரச்சினைகளை இனக்குழும அரசியல் தீவிர சர்ச்சைக்குள்ளாக்கியது. பின்காலனித்துவ அரசு லிபரல் ஜனநாயக அரசாக இருக்க வேண்டும்; அது பிரித்தானிய பாராளுமன்ற ஜனநாயகத்தின் அரசியல் யாப்பு மரபுகளில் கட்டமைக்கப்பட வேண்டும் என்பதில் இலங்கையின் எல்லா உயர்குழுக்களிடையிலும் ஒருமித்த கருத்து இருந்தது. இருப்பினும் பிரஜா உரிமை, வாக்குரிமை என்ற விடயங்களிலும், இலங்கை ஒற்றையாட்சி மாதிரியில் அமைய வேண்டுமா? அல்லது சமஸ்டி மாதிரியில் அமைய வேண்டுமா? என்பதிலும் தீவிர கருத்து மாறுபாடுகள் தோன்றின.

இம்மூன்று விடயங்களிலும் சிங்கள அரசியல் உயர்குழாம் சிங்களத் தேசியவாத நிலைப்பாட்டை எடுத்தது. 1948 மற்றும் 1949 ஆம் ஆண்டுகளில் பிரஜா உரிமை, வாக்குரிமை ஆகிய விடயங்கள் தொடர்பாக பாராளுமன்றச் சட்டங்கள் இயற்றப்பட்டன. இச்சட்டங்கள் சிங்களத் தேசியவாத உயர்குழாமின் கொள்கைகளையும் நோக்கத்தையும் வெளிப்படுத்துவனவாய் அமைந்தன. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் ஆளும் வகுப்பு என்ற தகுதியைப் பெற்றுக்கொண்ட சிங்களத் தலைமை, இனக்குழுமப் பெரும்பான்மைவாதத்தை (Ethnic Majoritarianism) அடிப்படையாகக் கொண்ட அரசு ஒன்றை நிறுவும் பணியில் முனைப்புடன் செயற்பட்டது.

1956 இல் பதவிக்கு வந்த அரசாங்கம் இலங்கை அரசின் இனக்குழுமப் பெரும்பான்மைவாதப் பார்வையை மேலும் அதிகரிக்கச் செய்தது. அவ்வரசாங்கம் சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தது. அரச அதிகாரத்தில் பிறருக்குப் பங்கில்லை; தாமே முழு அதிகாரத்தையும் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் சிங்களத் தலைமையிடம் காணப்பட்டது. தமிழ்த் தலைமை அரசு அதிகாரத்தில் தாமும் சம பங்காளிகளாக இருக்க வேண்டும்; சிங்களத் தலைமைக்குக் கீழ்ப்பட்டவர்களாய் இருக்கக்கூடாது என்று கருதினர். இவ்வாறு அரச அதிகாரத்தில் பங்கு என்ற விடயமே பிற்காலத்தில் சிங்கள - தமிழ் முரண்பாட்டிற்குக் காரணமாக அமைந்தது.

தமிழ் அரசியல் உயர்குழாம் சமஷ்டித் திட்டத்தை முன்வைத்தது. இதன் மூலம் தாம் ஆட்சி அதிகாரம் உடையவர்களாகலாம் என்றும், அரசு அதிகாரத்தில் சம பங்காளிகளாகலாம் என்றும் தமிழ் உயர்குழாம் கருதியது. அரசு அதிகாரத்திற்கான போட்டி நடைபெற்ற பின்னணி யாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சர்வசன வாக்குரிமை, தேர்தல் அரசியல், பாராளுமன்ற ஜனநாயக முறை, சமூகநல அரசு ஆகியன நிலைபெற்ற சூழலில் அரசியல்வாதிகள் தமது ஆதரவாளர்களுக்குச் சலுகைகளை வழங்கும் புரவலர்களாயினர்.

இவ்வாறான புரவலர் அரசியல் (Patronage Politics) சூழ்நிலையிலேயே அரசு அதிகாரத்திற்கான போட்டி தீவிரம் பெற்றது.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் உள்ள காலப்பகுதியின் அரசியல் வரலாற்றினை எடுத்துநோக்கும் போது, இலங்கையின் அரசியல் போராட்டங்களிலும் அரசியல் விவாதங்களிலும் அரசின் கட்டமைப்பும் அதன் இயல்பும் என்னும் விடயமே பிரதான பிரச்சினையாக இருந்தது. இந்த விவாதம் பின்வரும் இரு முக்கிய அம்சங்களைப் பற்றியதாக இருந்தது.

1) இலங்கை மக்கள் தாம் பெற்ற சுதந்திரத்தை அர்த்தமுடையதாகச் செய்ய வேண்டுமாயின் எத்தகைய அரசைக் கட்டி வளர்க்க வேண்டும்?

2) தமிழ்ச் சிறுபான்மை இனக்குழுமத்தின் பிரதேச சுயாட்சி என்ற கோரிக்கைக்கிணங்க இலங்கையின் பாராளுமன்ற ஜனநாயக முறையானது மீள் வரையறை செய்யப்பட வேண்டுமா?

இந்த விவாதம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இருவேறு அரசியல் நோக்கு முறைகள் பற்றியதாக இருந்தது. ஓர் அரசியல் நோக்கு அரசியல் யாப்பு ஒருமைவாதம் (Constitutional Monism) என்ற வகையினது. இதற்கு மாறாக அரசியல் யாப்புப் பன்மைவாதம் (Constitutional Pluralism) என்ற அரசியல் நோக்கு முன்வைக்கப்பட்டது.

ஒருமைவாதச் சிந்தனை, இலங்கை ஒற்றையாட்சி நாடாகவும், மத்தியப்படுத்தப்பட்ட அதிகாரத்தை உடையதாகவும், பிரித்தானியப் பாராளுமன்ற முறையினைத் தழுவியதாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்துகளை முன்வைத்தது. இதற்கு மாறாக பன்மைவாதச் சிந்தனை சுதந்திர இலங்கை சமஷ்டி அரசாக இருக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தது. இச்சமஷ்டி அரசில் சிறுபான்மை இனங்கள் அரசு அதிகாரத்திலும் அரசியலிலும் சம பங்கினைப் பெற வேண்டும் என்பதையும் வலியுறுத்தியது.

ஒருமைவாதிகள் காலனித்துவ ஆட்சியாளர்கள் விட்டுச் சென்ற அரசில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கவில்லை. அரசியல் கட்டமைப்பை மாற்றுதல் (Restructuring of the State) என்பதைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள் அரசியல் யாப்பு ஒருமைவாதத்திலிருந்து விலகிச் செல்ல வேண்டும் என்ற கருத்தை ஆதரித்தனர்.

மேற்குறித்தவாறாக அரசியல் யாப்புத் திருத்தம் ஆரம்பம் முதலே பல சிக்கல்களை எதிர்நோக்கியது. யாப்புத் திருத்தம் என்ற வாதம் ஒரு சிறுபான்மை இனக்குழுமத்தால் முன்வைக்கப்பட்டது. இதற்கான ஆதரவு தமிழ் மக்களிடமிருந்து கிடைத்தது. ஆனால் பெரும்பான்மைச் சிங்களச் சமூகம் யாப்புத் திருத்தத்திற்கு ஆதரவு அளிக்கவில்லை. சிங்கள அரசியல் தலைவர்கள் பன்மைத்துவப் பண்புடையதாக அரசை மாற்றியமைப்பதற்கு விரும்பாததோடு, அவ்வாறான மாற்றம் ஆபத்தானது என்ற அச்சத்தையும் வெளியிட்டனர். இவ்வாறு கருதியதால் யாப்புத் திருத்த யோசனை பெரும் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்தது. யாப்புத் திருத்தம் சிறுபான்மை இனத்தின் அரசியல் திட்டமாக அடையாளப்படுத்தப்பட்டது.

சமஷ்டி அரசியல் முறை, அடிப்படையில் ஜனநாயகத் தன்மை உடையதாயினும், சிங்கள சமூகத்தின் அரசியல் அங்கீகாரம் அதற்குக் கிடைக்கவில்லை. இதனால் 1950கள் தொடக்கம் இலங்கையில் அரசுச் சீர்திருத்தம் பற்றிய செயல் திட்டம் இரண்டு இனங்கள் இரு துருவங்களாகப் பிரிந்து நின்று வாதிடுவதற்கும் ஒன்றையொன்று விலக்குவதற்கும் வழிவகுத்தது. இந்தப் பிணக்கு இலங்கையின் ஜனநாயகச் செயல்முறையின் பகுதியாக மாறியது. 'Devotta' கூறியிருப்பது போல் இனக்குழும மோதல் அரசியல் தோன்றியது. தேர்தல் ஜனநாயக நடைமுறையானது இனக்குழுமங்களை இரு கூறுகளாகப் பிரித்து வைப்பதாக அமைந்தது. இலங்கையின் பின்காலனித்துவ அரசின் போக்கை இது நிர்ணயிப்பதாக அமைந்ததோடு, அரசைப் பன்மைத்துவம் உடையதாக மாற்றும் செயல்திட்டம் நடைமுறைச் சாத்தியமற்றதாக ஆகியது.

இதுவரை கூறியவற்றைச் சுருக்கமாக எடுத்துரைப்போம். சுதந்திரத்தின் பிந்திய முதல் பத்தாண்டு காலத்தில் இலங்கையின் பின்காலனித்துவ அரசு இரு இயல்புகளைக் கொண்டதாக இருந்தது. முதலாவதாக, அது ஒற்றையாட்சி மாதிரியில் ஜனநாயக நிறுவனங்களைக் கட்டமைத்து வந்தது. இரண்டாவதாக, இலங்கையின் பின்காலனித்துவ அரசின் ஆதார அடித்தளம் சிங்களப் பெரும்பான்மை இனம் என்பதாகச் சுருங்கியது. சிங்களத் தேசியவாதத்தின் அரசியல் பண்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான கருவிதான் அரசு என்ற சிந்தனை வேரூன்றியது. இப்பின்னணியில் இலங்கை அரசின் லிபரல் ஜனநாயகப் பண்புகளை இல்லாதொழிக்கும் செயல்திட்டம் தொடங்கப்பட்டது. இதனை தாராளமயமற்ற அரசாக மாற்றும் (Deliberalisation) செயல்திட்டம் என்று கூறலாம்.

## பகுதி -2

### இலங்கை அரசைத் தாராண்மையற்றதாக மாற்றுதல் (De-liberalisation of Sri Lankan State)

தலையிடாக் கொள்கையுடன் இணைந்த தாராண்மை வாதம் (*Laissez-faire Liberalism*) என்ற பண்பை இழந்து தலையிடும் அரசு (*Interventionist State*) என்ற இயல்புடையதாக இலங்கையின் அரசு 1956-1965 காலப்பகுதியில் உருமாற்றம் பெறலாயிற்று. இத்தலையிடும் அரசு, அரச முதலாளித்துவம் (*State Capitalism*), பாராளுமன்ற ஜனநாயகம் என்ற இரண்டினதும் சேர்க்கையாக அமைந்தது. மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) அரசாங்கத்தின் வரவுடன் அரசின் இப்பண்பு அழுத்தம் பெற்றது. ஆனால் இந்தப் பண்பு மாற்றம் முழுவடிவில் வெளிப்பட்ட காலம் 1960களின் முற்பகுதியாகும். அக்காலத்தில் முன்னாள் பிரதமரின் மனைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருந்தார். இலங்கையில் அரசு தலையிடும் அரசாக மாறிய வரலாறு அரசியல் அதிகாரத்தின் வர்க்க அடிப்படைகளில் ஏற்பட்ட மாற்றத்தோடு சம்பந்தமுடையது. மக்கள் ஐக்கிய முன்னணி 1956 இல் தேர்தல் கூட்டு முன்னணி ஒன்றை ஏற்படுத்தி தேர்தல் வெற்றியைப் பெற்றது. 1947 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி 1956 இல் மக்கள் ஐக்கிய முன்னணியினால் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது. சமூகத்தளத்திலும் கருத்தியல் தளத்திலும் உருவாக்கப்பட்ட ஒற்றுமை மக்கள் ஐக்கிய முன்னணியின் வெற்றிக்குக் காரணமாயிற்று.

அ) அரச அதிகாரத்தின் சமூக அடித்தளத்தில் ஏற்பட்ட மாற்றம்,

ஆ) தலையிடா தாராண்மைவாதப் பொருளாதாரக் கொள்கை கைவிடப்படுதல்,

என்ற இரு அம்சங்கள் 1956 தேர்தல் வெற்றியின் வெளிப்பாடாக அமைந்தன.

1956 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. அத்தோடு அரசு அதிகாரத்தின் சமூக அடிப்படைகளும் அக்காலத்தில் மாற்றம் பெற்றன. இவ்விடயத்தை இங்கு விளக்கிக் கூறுதல் அவசியம். 1956 வரை இலங்கையின் ஆளும் வர்க்கம் ஐக்கிய தேசியக் கட்சி என்ற கட்சிக்குள் ஒன்றுபட்டு இருந்தது. ஆதலால் மேலாதிக்கம் உடைய அதிகாரக்கூட்டின் (*Power Block*) நிறுவன அமைப்பாக இக்கட்சி விளங்கியது. ஆளும் குழுவில் மூன்று உட்பிரிவுகள் இருந்தன. நகரம் சார்ந்த முதலாளி வகுப்பு, உயர்தொழில்களில் இருந்த உத்தியோகத்தர் வகுப்பு, கிராமப்புறங்களை மையமாகக் கொண்டிருந்த நில உடைமையாளர் வகுப்பு என்பனவே இம்மூன்று பிரிவுகள். காலனியப் பொருளாதாரத் துறையினாலும் காலனிய ஆட்சியினாலும் நேரடியாக நன்மை பெற்றவர்களாக இம்மூன்று பிரிவினரும் இருந்தனர். 1956 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்திற்குப் போட்டியாக எழுந்த மக்கள் ஐக்கிய முன்னணி வித்தியாசமான சமூக வர்க்கங்களினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. நகரம் சார்ந்த உயர்தொழிலாளர் வகுப்பும் (*Professional Class*) வர்த்தக சமூகத்தின் இரண்டாம் படிநிலையில் இருந்தோரும் மக்கள் ஐக்கிய முன்னணிக்குத் தலைமை தாங்கினர். இம்முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்றல்லாது விரிந்த சமூகத் தளத்தை உள்ளடக்கியிருந்தது. அரசாங்க, தனியார் துறை உத்தியோகங்களில் உள்ளவர்கள் (சம்பளம் பெறும் வகுப்பு), நகரத் தொழிலாளர் வர்க்கம், சிங்களக் கிராமங்களில் வாழ்ந்த மத்தியதர வர்க்கமும் கீழ் மத்தியதர வர்க்கமும், புத்த சமயத் துறவிகளின் தலைமையில் திரண்ட கிராமப்புறப் புத்திஜீவி வர்க்கம் என்பனவற்றின் கூட்டாக மக்கள் ஐக்கிய முன்னணி விளங்கியது. பல்வேறு வகைப்பட்ட குழுக்களின் சேர்க்கையாக இக்கூட்டு இருந்தது. எனினும் தேசியவாதக் கருத்தியல் இக்குழுக்கள் யாவற்றையும் இணைப்பதாக இருந்தது.

பல்வேறுபட்ட, ஒன்றோடு ஒன்று சம்பந்தமற்ற சமூகத் தளங்களில் இருந்து வந்த இக்குழுக்கள் யாவும் ஒன்றிணைந்த இரண்டாம் நிலை அதிகாரக் கூட்டாகச் செயற்படக் காரணமான சமூகப் பின்னணி யாது? என்ற கேள்வி எழுகிறது. சிங்கள முதலாளி வர்க்கம், கிராமப்புற விவசாயிகளான நடுத்தர வர்க்கம், அரசாங்க மற்றும் தனியார் துறை உத்தியோகத்தர்கள், சிங்கள மொழியில் கல்வி கற்ற புத்திஜீவி வகுப்பு, பௌத்த பிக்குகள் ஆகிய பல்வகைக் குழுக்களை இணைத்த பொது இயல்பு யாது? அரசு அதிகாரத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருதல், அரசு தமக்கு அனுகத்தக்கதாக இருத்தல் என்ற இலக்குகளை வைத்தே இவை ஒற்றுமைப்படுத்தப்பட்டன. அரசியல் ரீதியில் தாம் ஒன்றுபடுதல் வேண்டும் என்பதை இவை உணர்ந்தன. இக்குழுக்கள் யாவற்றினதும் ஒருமித்த குறிக்கோள் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதே ஆகும். இந்தச் செயல்திட்டத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காகப் பிரசாரம் செய்யவும், மக்களை அணிதிரட்டவும், தம் திட்டத்தை நியாயப்படுத்தவும் இக்குழுக்களின் கூட்டிற்கு ஒரு கருத்தியல் தேவையாயிற்று. சிங்களத் தேசியவாதம் என்ற கருத்தியல் இதற்குப் பயன்பட்டது. இச்சமூகக் குழுக்களின் திட்டமான அரசு அதிகாரத்தைப்

பெறுவதற்கும், சமூகத்தின் ஏனைய பகுதிகளுடன் இக்குழுக்களைப் பிணைப்பதற்கும் அக்கருத்தியல் உதவியது. மக்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டின் சிங்களத் தேசியவாதம் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியவாதத்திலிருந்து வேறுபட்டதாக இருந்ததென்பதும் கவனிக்கத்தக்கது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியவாதம் இலங்கையின் முதன்மை நிலையில் உள்ள உயர் குழாத்தின் தேசியவாதமாகும். அந்தத் தேசியவாதம் 'மேலிருந்து வரும் தேசியவாதம்' ஆகும். இவ்வுயர் குழாத்தினர் வெகுஜனங்களை அணிதிரட்டுவதற்கு தேசியவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு சிங்களத் தேசியவாதம், இனவாதம் என்பனவும் தேவைப்பட்டன. 1947-1958 காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் பொதுக் கொள்கை வகுப்புச் செயல்முறையில் இனவாதம் கலப்புற்றது. இருந்தபோதும் இலங்கை அரசின் லிபரல் ஜனநாயக அடிப்படைகள் இக்காலத்தில் மாற்றப்படவில்லை. மக்கள் ஐக்கிய முன்னணியின் சிங்களத் தேசியவாதம் கீழிருந்து கிளம்பிய தேசியவாதம் ஆகும். சுதந்திர இலங்கையின் அரசைக் கைப்பற்ற வேண்டும் என்ற வீறுடன் அத்தேசியவாதம் கிளர்ந்து எழுந்தது. 1956 இல் ஆட்சியைப் பிடித்த மக்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டு, இலங்கையின் பொதுக் கொள்கை வகுப்புச் செயல்முறையில் மேலும் இனவாதத்தைக் கலந்தது. அத்தோடு அதுவரை ஐக்கிய தேசியக் கட்சி பேணிவந்த தாராண்மைவாத லிபரல் அரசு முறையிலிருந்து விலகியும் சென்றது. இவ்விலகல் குறிப்பாக பொருளாதாரக் கொள்கையில் வெளிப்பட்டது. அரசாங்கம் பொருளாதாரக் கொள்கை வகுப்பில் அரசின் தலையீடு என்பதை ஒரு தெரிவாகக் கொண்டது. இலங்கையில் தேசியமயமாக்கல் கொள்கையை மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தொடக்கி வைத்தது. இதன் மூலம் 'அரச முதலாளித்துவம்' (*State Capitalism*) என்று பின்னர் அடையாளப்படுத்தப்பட்ட முறையை இது புகுத்தியது. துறைமுகம், போக்குவரத்து, வங்கித்துறை, காப்புறுதி ஆகிய துறைகளில் தேசியமயமாக்கல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அரசு நாட்டின் பொருளாதாரத்தை ஒழுங்கமைக்கும், நெறிப்படுத்தும் பொறுப்பை ஏற்றது. அத்தோடு அரசு ஒரு முயற்சியாளன் என்ற வகிபாகத்தையும் ஏற்றது. இக்கொள்கை மக்களின் பரவலான ஆதரவையும் பெற்றுக்கொண்டது. பழமைவாத அதிகாரக்கூட்டு



**சிறிமாவோ பண்டாரநாயக்க**

Image Source - indiatoday.in

1956 இல் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதன் பயனாக அரசின் வர்க்க அடித்தளம் மாற்றம் பெற்றது. இதன் விளைவாக காலனித்துவக் காலத்தின் சுதந்திர சந்தை முதலாளித்துவத்தின் இடத்தை அரச முதலாளித்துவம் பிடித்துக் கொள்ளும் வரலாற்றுத் தேவை எழுந்தது. சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையில் முதன்முதலான மக்கள்வாத அரசு (*Populist Regime*) என்ற தன்மையுடைய ஆட்சியைப் புகுத்தியதும் மக்கள் முன்னணி அரசாங்கமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

1960-1964 ஆண்டுகள் மிக முக்கியமான காலப்பகுதி. இக்காலத்தில்தான் இலங்கை அரசை தாராளமயமற்றதாக மாற்றும் செயல்முறை இடம்பெற்றது. 1960 யூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றது. காலம் சென்ற பிரதமரின் விதவை மனைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகப் பதவியேற்றார். மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கூட்டு இக்காலத்தில் பிளவுபட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமிழ்த் தேசியவாத சமஷ்டிக் கட்சியுடன் இணைந்து கொள்ள எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இதனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி 1960 இல் நடைபெற்ற தேர்தலில் தனித்துப் போட்டியிட்டது. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி 1956 இன் மக்கள் ஐக்கிய முன்னணியின் கொள்கைகளை அர்ப்பணிப்புடனும் தீவிரத்துடனும் நடைமுறைப்படுத்தியது மிகுந்த ஆச்சரியத்தைத் தருவதாகும். புதிய அரசாங்கம் மக்கள்வாத அரசு, அரச முதலாளித்துவம் என்ற பண்புகளை வெளிப்படுத்தியது.

மக்கள் ஐக்கிய முன்னணி தீவிர தேசியவாதக் கருத்தியலைக் கொண்டது. சிறிலங்கா சுதந்திரக்

கட்சியின் வர்க்கப் பின்னணியும், கருத்தியல் பின்னணியும் அவ்வாறான தீவிர தேசியவாதத்திற்கான உள்ளாற்றலைக் கொண்டிருக்கவில்லை. ஆயினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் 1960 யூலை தேர்தலின் பின் சென்ற பாதை அதன் வர்க்க இயல்புக்கு மாறுபட்டதாய், ஆச்சரியத்தைத் தருவதாய் இருந்தது. சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான கட்சி தொடக்கத்தில் மத்திய வலதுசாரி (Centreright) அரசியல் அமைப்பு என்ற தோற்றத்தையே அளித்தது.

ஆனால் அக்கட்சி அதிகாரத்திற்கு வந்த பின்னர் அரச முதலாளித்துவ, சிங்களத் தேசியவாத நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தியது. தனியார் துறையின் பிரதான தொழில்கள் பலவற்றை தேசியமயமாக்கவும், பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தவும் இவ்வரசாங்கம் முன்வந்தது. சமய நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலிருந்த பாடசாலைகளை அரசாங்கம் தேசியமயமாக்கியது. தொழிலாளர் வர்க்கத்தின் தீவிரவாத அழுத்தம் அதிகரித்தபோது, தொழிலாளர் வர்க்க எதிர்ப்பியக்கத்தை நடத்திய இடதுசாரிக் கட்சிகளுடன் அரசாங்கம் 1963 ஆம் ஆண்டில் கூட்டணியை ஏற்படுத்தியது (அமரசிங்க, 1998). இவ்வாறு இடதுசாரிகளுடன் கூட்டணியை உருவாக்கிக் கொண்டதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் மத்திய-இடதுசாரி (Centreleft) என்ற நிலைக்கு இடம் மாறியது எனலாம். இப்புதிய கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் தாக்கங்களை ஏற்படுத்தியது. பத்திரிகைகளைத் தேசியமயமாக்கும் முயற்சியை மேற்கொண்ட போது அரசாங்கம் 1964 ஆம் ஆண்டில் தோல்வியைத் தழுவியது. 1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தோற்கடிக்கப்பட்டது. ஆட்சியைக் கைவிட்டுச் செல்வதற்கு முன்னரே இக்கட்சி இலங்கையின் அரசின் இயல்பில் அடிப்படை மாற்றம் ஒன்றை ஏற்படுத்திவிட்டது. இலங்கை அரசை அபிவிருத்தி அரசுவாதம் (Developmentalist Statism) என்ற பாதைக்கு இது கொண்டு வந்து சேர்த்திருந்தது.

மக்கள் ஐக்கிய முன்னணிக் (MEP) கூட்டும் அதன் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியமை இலங்கையில் ஜனநாயக விரோத-லிபரல் விரோத போக்குகளை ஊக்குவித்த போதிலும், ஜனநாயக நிறுவனக் கட்டமைப்பு இலங்கையில் நிலை பெறுவதற்கு இவற்றின் ஆட்சி உதவியது என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். மக்கள் ஐக்கிய முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சிக்குப்

**1960-1964 ஆண்டுகள் மிக முக்கியமான காலப்பகுதி. இக்காலத்தில்தான் இலங்கை அரசை தாராளமயமற்றதாக மாற்றும் செயல்முறை இடம்பெற்றது. 1960 யூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றது. காலம் சென்ற பிரதமரின் விதவை மனைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகப் பதவியேற்றார்.**

பதிலாக ஜனநாயக மாற்று வழியை முன்வைத்தன. முதன்மையான அதிகாரக் கூட்டு (ஐ.தே.க), அதற்கு மாற்றான இரண்டாவது அதிகாரக்கூட்டு என்பன அரசியல் அரங்கிற்கு வந்தன. இதனால், பாராளுமன்ற அரசியலில் இருவேறு எதிரெதிர் போட்டிக் கூட்டுகள் நிறுவனமயப்படுத்தப்பட்டன. இந்தப் போக்கு நன்மையளித்தது. அரசாங்க இயந்திரத்தில் சிவிலியன் கட்டுப்பாடு (Civilian Control) இதனால் உறுதிசெய்யப்பட்டது. சர்வாதிகாரத் தலையீடுகள் ஏற்படாமல் இது தடுத்து நிறுத்தியது. மக்கள் ஐக்கிய முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமது ஆட்சிக் காலத்தில் அபிவிருத்தி அரசுவாதம் என்பதைப் புகுத்தின என மேலே குறிப்பிட்டோம். சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையின் முக்கிய கொள்கைத் திருப்பமும், நின்று நிலைக்கும் கண்டுபிடிப்பும் என்று அபிவிருத்தி அரசுவாதத்தைக் குறிப்பிடலாம். 1956 இல் பதவிக்கு வந்த அரசாங்கம் சுதந்திரச் சந்தை முதலாளித்துவத்தை தீவிரமாக ஆதரித்தது. இருந்த போதும் அந்த அரசாங்கத்தினால் கூட அபிவிருத்தி அரசுவாதம் என்ற பாதையில் இருந்து விலகிச் செல்ல முடியவில்லை. கொள்கை வகுப்புக்கான ஒரு பொது வரைசட்டகமாக இது விளங்கியது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கிராமப்புற விவசாயத்தில் தாராண்மைப் பொருளியலைப் புகுத்தியது. இதேபோன்று ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தையும் தாராண்மை பொருளியல் கொள்கைகளின்படி நிர்வகித்தது. இருந்த போதும் இவை யாவும் அரச முதலாளித்துவம் என்ற சட்டகத்திற்குள்ளேயே செயற்படுத்தப்பட்டன.

### 1970 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணிக் கூட்டரசாங்கம்

1950களிலும், 1960களிலும் இலங்கையின் பின்காலனித்துவ அரச உருவாக்கம் இரு தெளிவான குண இயல்புகளை வெளிப்படுத்தியது என்பதை மேலே விவரித்தோம். அவையாவன: 1. அரசின் அடிப்படையாக இனக்குழுமப் பெரும்பான்மைவாதம் (Ethnic Majoritarianism) அமைதல்; 2. தாராண்மை

மறுப்பு அரசு என்ற குண இயல்பு வெளிப்படல். 1970-1975 காலப்பகுதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து ஏற்படுத்திய ஐக்கிய முன்னணி ஆட்சியில் தாராண்மை மறுப்புப் போக்கு மேலும் அதிகரித்தும் வெளிப்பட்டும் தெரிந்தது.

இவ்விடத்தில் ஆங்கிலத்தில் 'டி லிபரலைசேசன்' என்றும் 'இல்லிபரலைசேசன்' என்றும் குறிப்பிட்டுள்ள இருவேறு எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குதல் அவசியம்.

1. 'டி லிபரலைசேசன்' (Deliberalization) என்பது தமிழில் தாராண்மையற்றதாக்குதல் எனப்படுகிறது. இதன் பொருள் தாராண்மைவாத முதலாளித்துவத்திற்குப் (Laissez-faire Capitalism) பதிலாக அரச முதலாளித்துவத்தைப் புகுத்துதலைக் குறிப்பிடும். இங்கே மாற்றம் பிரதானமாக பொருளாதாரத்தில் அரசின் நேரடித் தலையீட்டை அதிகரிப்பதாக அமைகின்றது.

2. 'இல் லிபரலைசேசன்' (Illliberalization) என்பது லிபரல் ஜனநாயகம் என்ற கொள்கையைக் கைவிடுதலைக் குறிப்பிடும். இது அரசியல் துறையில் நிகழும் போக்காகும்.

இவ்வாறான தாராண்மை மறுப்பு அரசியல் கொள்கை பொருளாதாரத் தாராண்மை நீக்கத்தோடு சேர்ந்து நிகழலாம். அது இல்லாமல் தனித்துவமாகச் செயற்படுத்தப்படவும் முடியும். 1947-1956 காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அரச முதலாளித்துவத்தைப் புகுத்தி பொருளாதாரத் துறையில் தாராண்மை வாதத்தை நீக்கும் பணியைத் தொடக்கி வைத்தது. இருப்பினும் அவ்வரசாங்கம் இலங்கையின் பின்காலனித்துவ அரசின் லிபரல் ஜனநாயக குண இயல்பை மாற்ற முனையவில்லை. 1956-1960 காலத்தில் மக்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டரசாங்கம் அரச முதலாளித்துவத்தின் வரைசட்டகத்தைப் பலவீனப்படுத்தும் செயல்களில் இறங்கவில்லை. 1970 இன் ஐக்கிய முன்னணி அரசு வித்தியாசமாகச் செயற்பட்டது. அது அரசின் ஜனநாயக அடித்தளத்தை பலவீனப்படுத்துவதில் வெற்றிகண்டது; இனக்குழுமப் பெரும்பான்மைவாத அரசு ஒன்றைத் தாபித்தது. தாபித்தது மட்டுமன்றி அதனை அரசியல் யாப்பு நிலையிலும், அரசியல் தளத்திலும் அசைக்க முடியாத முறையில் வேரூன்ற வைத்தது. இவை யாவற்றுக்கும் மேலாக சர்வாதிகாரம் இலங்கையின் ஜனநாயக முறையின் பிரிக்க முடியாத பகுதியாக மாறிவிட்டது. 1975-1977 காலத்தில் ஐக்கிய முன்னணிக் கூட்டு சிதறத் தொடங்கியது. இலங்கையின் வரலாற்றில் பின்காலனித்துவ அரசின் முதலாவது கட்டம் இத்தோடு முடிவுக்கு வந்தது. இலங்கையின் பின்காலனித்துவ அரசு தாராண்மை மறுப்பு அரசாக மாறியது.

தாராண்மை மறுப்பு அரசு ஒன்றை உருவாக்கும் பணியை ஐக்கிய முன்னணி அரசாங்கம் சாதித்தது எவ்வாறு? 1970-1975 காலத்தின் ஐக்கிய முன்னணியைத் தோற்றுவித்த வர்க்கங்கள் எவை? அவற்றின் கருத்தியல் என்ன? என்பவற்றையும் பரிசீலிப்பதன் மூலமே நாம் இதற்கான விடையைத் தெரிந்துகொள்ளலாம். 1970 இன் ஐக்கிய முன்னணி ஒரு சமூகக் கூட்டணி (A Social Coalition) ஆகும். அது ஒரு பல்வர்க்கக் கூட்டணி; மிகப் பலம் வாய்ந்த கூட்டணி.

அ. சிங்கள முதலாளித்துவத்தின் இரண்டாம் படிநிலையைச் சேர்ந்த முதலாளி வர்க்கம்

ஆ. நகரத் தொழிலாளர் வர்க்கம்

இ. கிராமப்புற விவசாயக் குடியான் வர்க்கம்

ஈ. இடைத்தர சமூக வர்க்கங்கள்

என்பன இக்கூட்டணியில் இணைந்தன. இக்கூட்டணி 1956 இன் மக்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டணியை விடப் பலம் வாய்ந்தது. 1963 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் அமைத்த கூட்டணியை விடவும் பலமானது. 1970 யூலை மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இக்கூட்டணி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை பெற்றது. இவ்வாறு ஆளும் கட்சி/ கட்சிகளின் கூட்டணி ஒன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றமை பாராளுமன்ற வரலாற்றில் இலங்கையில் முதல் தடவையாக இடம்பெற்றது இத்தருணத்திலேயே ஆகும். இப்பாராளுமன்றத் தேர்தலில் இக்கூட்டணி 'மக்களின் ஆணை' ஒன்றையும் பெற்றுக்கொண்டது. இருந்துவரும் அரசியல் யாப்பை நீக்கிப் புதியதொரு அரசியல் யாப்பைக் கொண்டுவருவதற்கான ஆணையாக இம்மக்களின் ஆணை இருந்தது. இது முந்திய எந்த அரசாங்கத்திற்கும் வழங்கப்படாத ஆணையாகும். இலங்கையின் அரசியல் யாப்பைத் திருத்தும் அதிகாரம் ஓர் ஆளும் கட்சிக்கு வழங்கப்பட்டதென்றால் அது சாதாரணமான ஒரு விடயம் அன்று. இது ஒரு தலைசிறந்த வாய்ப்பு. எதிர்காலத்தில் அரசு எப்படி இருக்க வேண்டும், சமூகம்-அரசு உறவுகள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும், அரசு அதிகாரம் வெவ்வேறு சமூகக் குழுக்களிடம் எவ்வாறு பங்கிடப்பட்டிருக்க வேண்டும், பல்வேறு இனக்குழுமங்களிடையே அதிகாரம் எவ்வாறு பங்கிடப்பட்டிருக்க வேண்டும் ஆகிய முக்கிய விடயங்களை எல்லாம் தீர்மானிக்கும் அதிகாரத்தை இது வழங்கியது. வரலாற்றில் முன் எப்பொழுதும் எந்த

அரசுக்கும் வழங்கப்படாத பெரிய அதிகாரம் இதுவாகும்.

1970 இன் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டது. அரசாங்கக் கூட்டணியில் சேராத பிறர் இந்த ஆடம்பரம் மிக்க சடங்குகளில் வெறும் பார்வையாளர்களாக நின்று 1970-1972 காலத்தின் அரசியல் யாப்பு உருவாக்க செயல்முறையின் அரசியல் இலக்கையும் அதன் தீய விளைவுகளையும் அவதானிக்க வேண்டியவர்களாய் இருந்தனர். இலங்கை என்ற பெயர் 'சிறீலங்கா' என்றும் 'சோசலிச ஜனநாயகக் குடியரசு' என்றும் மாற்றம் செய்யப்பட்டது. இப்பெயர் மாற்றம் ஒரு கருத்தியல் திட்டத்தின் வெளிப்படுத்தலாக இருந்தது. ஒற்றையாட்சி முறையில் அமைந்த மத்தியப்படுத்தப்பட்ட அரசை அதன் தாராண்மை மறுப்பு இயல்புகள் அனைத்தையும் உள்ளடக்கியதாய் நிலைபெறச் செய்தது. இந்த ஜனநாயக விரோத நடைமுறையின் முக்கிய அம்சங்களாவன:

அ) தமிழ்ச் சிறுபான்மை இனத்திற்கு அதிகாரத்தைப் பகிர்ந்து அளிப்பதற்கான வழியாக அமைந்த பிரதேச சுயாட்சிக் கோரிக்கையை முற்றாகப் புறக்கணித்து அரசின் ஒற்றையாட்சி இயல்பை மேலும் வலுப்படுத்தல்.

ஆ) ஏற்கனவே மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மைப் பலம் கொண்டிருந்த கீழ் சபைக்கு கட்டுப்பாடில்லா சட்ட ஆக்க அதிகாரத்தை வழங்கியதோடு, மேற் சபையான 'செனட்' சபையையும் இல்லாது ஒழித்தல்.

இ) சட்டசபையினதும், மந்திரிசபையினதும் அதிகாரங்களை எல்லைமீறாது வைத்திருக்கக்கூடிய 'கட்டுப்பாடுகளும் சமநிலைகளும்' (Checks and Balances) என்னும் பொறிமுறையை நீக்குதல்.

ஈ) சோல்பரி அரசியல் யாப்பின்படி நீதித்துறைக்கு இருந்த மட்டுப்படுத்தப்பட்ட 'நீதி மீளாய்வு' (Judicial Review) அதிகாரத்தையும் இல்லாது ஒழித்தல்.

உ) நிர்வாகத்துறையின் ஆணைக்குக் கீழ்ப்பட்டதாக நீதித்துறையைத் தரம் தாழ்த்தல்.

ஊ) பொதுச் சேவையை மந்திரிசபையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தமை.

எ) புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கழிந்தபின் நடைமுறைக்கு வந்தது என்ற போலிக் காரணத்தைக் காட்டி, அரசாங்கத்திற்கு ஐந்து வருடங்கள் மட்டுமே பதவியில் இருக்கும் உரிமையை ஏழு ஆண்டுகளாக நீடித்தமை.

ஒரு நாட்டின் அரசியல் யாப்பு அரசின் நிறுவனக் கட்டமைப்பின் வரைசட்டகம் என்பது மட்டுமன்றி அதனை யாத்தவர்கள் தமக்குள் பொதுப்பட இணங்கிக்கொண்ட கருத்தியலின் வெளிப்பாடாகவும் அமைவது. அவ்வாறாயின் 1972 அரசியல் யாப்பினை வரைந்தவர்களின் அரசியல் கருத்தியலின் முக்கிய அம்சங்கள் எவை? முதலாவதாக அது ஒரு சிங்களத் தேசியவாத அரசியல் யாப்பு ஆகும். பின்காலனித்துவ கட்டத்தில் சிங்களத் தேசியவாதம் வகுத்துக்கொண்ட இறுதி இலக்குகள் எவையோ அவை யாவற்றையும் ஒருங்கே வெளிப்படுத்துவதாக இந்த அரசியல் யாப்பு அமைந்தது. சிங்களத் தேசியவாதம் மேற்கு நாட்டுக் காலனித்துவம், சிறுபான்மை இனக்குழுமங்கள், சிறுபான்மைச் சமயங்கள் என்பனவற்றிற்கு எதிரான கருத்தியலாக இருந்தது. 1972 அரசியல் யாப்பு, 'யாப்பியல் ஒருமைவாதம்' (Constitutional Monism) என்ற சிந்தனையின்படி உருவாக்கப்பட்டது. இந்தச் சிந்தனையைச் சிங்கள தேசியவாதிகளும், சோசலிஸ்டுகளும் ஒரே விதமான தீவிர ஆர்வத்துடன் ஆதரித்தனர். அவர்கள் ஒற்றையாட்சி முறையிலானதும் தீவிர மத்தியப்படுத்தலைக் கொண்டதுமான அரசியல் யாப்பை உருவாக்கினர். இந்த அரசியல் யாப்பு மக்கள்வாத யாப்புவாதம் (Populist Constitutionalism) என்னும் கருத்தியலின் வெளிப்பாடு ஆகும். 'குடியரசு' என்னும் கருத்தின் வேர்களை இந்த மக்கள்வாத யாப்புவாதம் என்ற கருத்தியலில் தேட முடியும். சிங்களத் தேசியவாதிகளும், சோசலிஸ்டுகளும் குடியரசு என்னும் கருத்தியலினைக் கொண்டவர்கள். மக்கள்வாத யாப்புவாதம் என்ற கருத்தியல் இரண்டு கோட்பாட்டு நியாயங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

1. 'இறைமையுடைய சட்டசபை' என்னும் நியாயம் முதலாவது விடயம். இதன்படி மக்களின் இறைமைக்குச் செயல்வடிவம் கொடுப்பது இறைமையுடைய சட்டசபையாகும். அது ஒரு சபையை மட்டும் கொண்டிருக்க வேண்டும். வேறு நிறுவனங்களோ அல்லது கட்டுப்பாடுகளும் சமநிலைகளும் என்ற நடைமுறை சார்ந்த தடைகளோ சட்டசபையின் இறைமையைக் கட்டுப்படுத்தக் கூடாது. ஆளும் கட்சியின் அல்லது கூட்டணியின் தலைவர்களே சட்டசபையைக் கட்டுப்படுத்த வேண்டியவர்கள் என்பன போன்ற கருத்துகள் இதில் உள்ளடங்கியிருந்தன.

2. அரசு ஒரு கருவி: இதனை அரசியல் யாப்பை வரைந்தோர் கொண்டிருந்த கருத்தியல் இலக்கை அடைவதற்கான கருவியாக உபயோகிக்கலாம். 1972 இல் அரசியல் யாப்பின் இலக்காக அன்று கருதப்பட்டது சோசலிசம் ஆகும்.

சோஷலிசத்தைப் பாராளுமன்றப் பாதையூடாக அடைதல் இலக்காகக் கொள்ளப்பட்டது. இதனை அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பான கருவிவாத நோக்கு என்று கூறலாம். அரசியல் யாப்பு உருவாக்கம் பற்றிய கருவிவாதம் நிலையான நியமங்களை இலக்குகளாகக் கொண்டிருந்தது. விடுதலை, சமத்துவம், நீதி, பன்மைத்துவம் ஆகிய நியமங்களே கருவிவாதத்தின் இலக்குகளாக இருந்து வந்தன. இதற்கு மாறாக 1972 இன் குடியரசு அரசியல் யாப்பு பல விடயங்களில் குடியரசு என்ற குணவியல்பிற்கு மாறுபட்டதாக இருந்தது. குடியரசு பன்மைத்துவ அரசியல் சமூகத்தைக் குறிக்கவில்லை; அதன் பிரஜைகள் நியாயமான அடிப்படை உரிமைகளுக்கு உரித்துடையவர்களாகவும் இருக்கவில்லை. இதனைவிட, குடியரசு என்ற அரசு மாதிரியின் கீழ் பிரஜைகள் செயல் ஊக்கமுள்ள பிரஜைகளாகப் பங்கேற்க வேண்டும். 1972 இன் குடியரசில் இந்த அம்சம் இருக்கவில்லை. பிரஜைகள் ஆளும் கூட்டணியின் கட்சிகளுக்குள்ளும், கூட்டணிக்குள்ளும், கூட்டணியுடன் இணைந்துள்ள வேறு 'மக்கள்' அமைப்புகளிலும் மட்டும் செயல் ஊக்கமுள்ள பிரஜைகளாகப் பங்கு கொள்ள முடியும் எனக் கருதப்பட்டது. குடியரசு அரசியல் கோட்பாட்டுக்கு ஐக்கிய முன்னணி அரசு செய்த பங்களிப்பு என்று இந்த விடயத்தைத் தவிர வேறு எதனையும் குறிப்பிட முடியாது.

மேலே நாம் குறிப்பிட்ட அரசியல் யாப்புக் கோட்பாடு எங்கிருந்து வந்தது? இதன் மூலங்களாக இரண்டைக் குறிப்பிடலாம். முதலாவது பெரும்பான்மைவாத சிங்களத் தேசியவாதம். இரண்டாவது மார்க்சிய இடதுசாரிப் பிரிவினரின் சிந்தனை. சிங்களத் தேசியவாதமும், மார்க்சிய இடதுசாரிகளும் குறிப்பிட்டதொரு வகையான யாப்புக் கருத்தியலை (Constitutional Ideology) வளர்த்திருந்தனர். இவர்கள் இரு சாராரின் கருத்துகளின்படி இலங்கையின் சுதந்திரம் பூரண இறைமையுடையதான சுதந்திரமாக இருக்கவில்லை. இலங்கைக்குப் பூரண இறைமை கிடைக்கவில்லை என்ற இந்த விமர்சனம் பிரித்தானிய அரசியல் யாப்புக்கும் இலங்கையின் அரசியல் யாப்புக்கும் இடையிலான தொடர்பின் மீது கவனம் குவிப்பதாக இருந்தது. இலங்கையின் அரசியல் யாப்பில் பிரித்தானிய முடிக்கும், பிரித்தானியப் பாராளுமன்றத்திற்கும், 'பிரிவி கவுன்சில்' (Privy Council) நீதித்துறை நிறுவனத்திற்கும் உள்ள மேலாண்மையையும் தொடர்பையும் இவர்கள் சுட்டிக்காட்டினர். இத்தொடர்பு இலங்கையின் சுதந்திரத்தையும் பூரண இறைமையையும் மறுப்பதாகும் என்றும், பழைய காலனித்துவ உறவுகளை நவகாலனியச் சட்டகத்திற்குள் புதுப்பிப்பதற்கு இடம் அளிக்கின்றது என்றும் குறிப்பிட்டனர். இந்த விமர்சனம் பூரண இறைமையை இலங்கைக்கு வழங்குவதற்கான மாற்று வழியாக இலங்கையை ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்தல் என்பதை முன்வைத்தது. இக்கருத்தை உடையோர் ஒரு குடியரசு அரசியல் யாப்பு மட்டுமே இலங்கையின் இறைமையையும் சுதந்திரத்தையும் வெளிப்படுத்துவதாக இருக்கும் என்று கருதினர். இதனால் பிரித்தானிய ஏகாதிபத்திய அரசுடன் உள்ள யாப்பு முறையிலான பிணைப்புகளை (Constitutional Links) அறுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறினர்.

நாம் மேலே சுருக்கமாகக் குறிப்பிட்ட அரசியல் யாப்புக் கருவிவாதம் (Constitutional Instrumentalism) என்னும் எண்ணக்கரு பற்றிய விடயத்தை மீண்டும் பரிசீலிப்போம். அரசியல் யாப்பைப் பற்றிய கருவிவாத நோக்கு, ஒரு நாட்டின் அரசியல் சமூகத்தின் கட்டமைப்பு பற்றிய கொள்கைகளை அடைவதற்கான கருவியாக அரசியல் யாப்பைக் கருதுகிறது. இக்குறிப்பிட்ட நோக்குமுறையில், அதாவது அரசியல் யாப்பு அரசியல் நோக்கங்களை அடைவதற்கான கருவி என்ற விடயத்தில், இலங்கையின் சிங்களத் தேசியவாதிகளும், லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரு கட்சிகளையும் சேர்ந்த இடதுசாரிகளும் கருத்தொற்றுமையுடையவர்களாக இருந்தனர். அவர்கள் இரு சாராரும் இலங்கையின் அரசியல் யாப்பையும் அரசியல் ஒழுங்கையும் மறுசீரமைப்பதில் ஒரே விதமான நோக்குமுறையைக் கொண்டிருந்தனர்.

அரசையும் அதன் நிறுவனங்களையும் உபயோகித்து பெரும்பான்மைவாத அரசியல் மேலாண்மையை நிறைவேற்றுவதற்கு அரசியல் யாப்பை ஒரு கருவியாகப் பயன்படுத்த சிங்களத் தேசியவாதிகள் முயன்றனர். இடதுசாரிக் கட்சிகள் அரசையும் அரச நிறுவனங்களையும் உபயோகித்து தாம் கற்பனை செய்த சோசலிசத்தை நிர்மாணிப்பதற்கு விரும்பினர். இவ்விரு சாராரின் நோக்குமுறைகளின் இணைப்பினால் உருவான சிந்தனை, இலங்கையின் அரசியல் யாப்பு ஒருமைவாதத்தை வேரூன்றச் செய்தது. இது ஒரு துரதிர்ஷ்டமான நிலையாகும். 1972 அரசியல் யாப்பு விட்டுச் சென்ற இந்த அரசியல் யாப்பு ஒருமைவாதத்திலிருந்து இலங்கை தன்னை மீட்டுக்கொள்வதற்கான முயற்சியில் இன்றுவரை வெற்றி பெறவில்லை.

## பகுதி -3

### தாராண்மை மறுப்பு அரசு

இலங்கையில் பின்காலனித்துவ அரசு ஒன்று தாபிக்கப்பட்டு 64 ஆண்டுகள் கழிந்துவிட்டன. இந்த அரசு பயணித்த பாதையினையும், அதன் பயணத்தின் வெவ்வேறு முக்கிய கட்டங்களையும் திரும்பிப் பார்ப்பதற்கும், பரிசீலனை செய்வதற்கும் இந்த நீண்ட இடைவெளி எமக்குப் பயனுடையதாக உள்ளது. நாம் ஒரு காலப்பகுப்பு ஒன்றைச் செய்து கொள்ளலாம். வெவ்வேறு காலக்கட்டங்களில் இப் பின்காலனித்துவ அரசை நிர்வகித்த அரசாங்கங்கள் எவை? அவற்றின் குண இயல்புகள் எவை? என்ற விடயங்களின் அடிப்படையில் இக்காலப் பகுப்பைச் செய்து கொள்ள வேண்டும். முதலாவது காலப்பகுதியாக 1947-1956ஐ குறிப்பிடலாம். இக்காலப்பகுதியில் முதல் இரண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள் ஆட்சி செய்தன. இக்காலப் பகுதியை ஜனநாயக - தாராண்மைவாத ஆட்சிக்காலம் என அழைக்கலாம். இக்காலப்பகுதியில் அரச சீர்திருத்த முயற்சிகள் முக்கியமானவை எவையும் இடம்பெறவில்லை. இக்காலத்தில் முக்கியமான அரசியல் சமூகக் கொந்தளிப்புகளும் இடம்பெறவில்லை. அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான தொழிலாளர் வர்க்க எதிர்ப்பியக்கம் இக்காலத்தின் விதிவிலக்கான சமூகக் கொந்தளிப்பு எனலாம். இக்காலப்பகுதியிலேயே இனக்குழுமச் சிறுபான்மையினரான தமிழர்களின் எதிர்ப்பியக்கம் ஆரம்பித்தது. ஆனால், இவ்வெதிர்ப்பு தேர்தல் அரசியல், பாராளுமன்ற நிலைப்பட்ட பேச்சுவார்த்தை என்ற வகையிலேயே அமைந்தது.

இரண்டாவது காலப்பகுதி, 1956-1960 காலத்தின் ஐக்கிய முன்னணி அரசாங்கம், 1960-1964 காலத்தின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் என்பனவற்றை உள்ளடக்கிய காலப்பகுதியாகும். இக்காலத்தில் அரசின் குண இயல்புகள் இரு விடயங்கள் சார்ந்து மாற்றம் பெற்றன. முதலாவதாக அரசின் இனக்குழும அடிப்படை மாற்றம் பெற்றது. இனக்குழுமப் பெரும்பான்மைவாத வரைசட்டகத்துள் அமையும் அரசாக அம்மாற்றம் அமைந்தது. இரண்டாவதாக அரசு தலையிடும் அரசு (Interventionist State) என்ற இயல்பைப் பெற்றது. பொருளாதாரத் துறையில் அரசின் வகிபாகத்தை விரிவாக்கல், சமூக நலச் சேவைகளை அதிகரித்தல், உள்நாட்டு முதலாளிகளிடமும் அந்நிய முதலாளிகளிடமும் இருந்து வந்த பல வர்த்தகத் கைத்தொழில் முயற்சிகளைத் தேசிய மயமாக்கல், கலாசாரப் பாதுகாப்புக் கொள்கை, கல்வியின் மீது அரச கட்டுப்பாடு என்பன 1956 - 1964 காலப்பகுதியின் தலையிடும் அரசின் முக்கிய அம்சங்களாக இருந்தன.

இக்காலத்தின் பின்னர், 1965 - 1970 காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கீழ் தாராண்மைமயமாக்கல் ஓரளவு இடம்பெற்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் உருவாக்கப்பட்ட அரச முதலாளித்துவம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் தொடரப்பட்டது. முதலாளித்துவத்தின் கீழான சமூகநல அரசு நடவடிக்கைகள் என்ற அடிப்படைச் சட்டகத்தை மாற்றாது, அவ்வரசாங்கம் தனியார் துறை மூலதனத்திற்கு ஊக்கம் கொடுத்தது. கைத்தொழிலிலும், விவசாயத்திலும் தனியார் மூலதனத்திற்கு உதவியும் ஊக்கமும் கொடுக்கும் நடவடிக்கைகள் தொடக்கப்பட்டன. 1965 - 1970 கால ஐக்கிய தேசியக் கட்சி, பல்லினக் குழுமங்களின் கூட்டாகவும் அமைந்திருந்தது. 1947 இன் பின்னர் அவ்வாறான பல்லினக்கூட்டு முதன்முறையாக அப்போது தான் அமைக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி தனியார்துறை மூலதனம் மூலம் பொருளாதார விருத்தி செய்யலாம் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி அளவிற்கு தலையிடும் அரசுக் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இதனால் தான் 1965 - 1970 ஆண்டுகளை தாராண்மைவாதம் ஓரளவுக்கு மீளப்புகுந்த காலம் எனலாம்.

1970 - 1977 காலப்பகுதியின் ஐக்கிய முன்னணி அரசு முதிர்ச்சி பெற்ற தலையிடும் அரசாகப் பரிணாமம் பெற்றது. இக்காலத்தில் அரச முதலாளித்துவக் கொள்கைகள் தொடரப்பட்டன; வலுப்படுத்தப்பட்டன. குறிப்பாக 1971 இல் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியின் பின்னர் அரச முதலாளித்துவம் வேகம் பெற்றது. தோல்வியடைந்த கிளர்ச்சியின் கருதப்படாத விளைவுகளில் (Unintended Consequences) இதுவும் ஒன்று. அரச முதலாளித்துவத்தின் புதிய கட்டத்தில் தோட்டங்களின் தேசியமயமாக்கலும், காணிச் சீர்திருத்தமும் முதன்மையிடம் பெற்றன. இவற்றை ஐக்கிய முன்னணி அரசு உணர்ச்சி வேகத்துடன் செயற்படுத்தியது. 1971 கிளர்ச்சியின் பயனாகச் செய்யப்பட்ட கொள்கைத் திருத்தம் போலவும் இவை அமைந்தன. இலங்கைப் பொருளாதாரத்தில் தீவிர கட்டமைப்புக் குறைபாடு உள்ளது. அதுவே கிளர்ச்சிக்கும் காரணமாயிற்று. அதனைத் திருத்த வேண்டும் என்ற சிந்தனை அக்காலத்தில் நிலவியது. அதன் பயனே இச்சீர்திருத்த நடவடிக்கை. தேக்கமடைந்த கிராமியப் பொருளாதாரம் கிராமப்புற இளைஞர்களிற்கு வேலைவாய்ப்புகளை வழங்கத் தடையாயிற்று. இந்நெருக்கடியே கிளர்ச்சியைத் தூண்டியது என்றும் கருதப்பட்டது. தோட்டங்கள் தேசியமயமாக்கப்படுதல், நிலச் சீர்திருத்தம்,

தோட்டங்களை நிர்வகிப்பதற்குப் பெரிய புதிய கூட்டுத்தாபனங்கள் அமைக்கப்படுதல், பொதுத்துறையில் அதிகாரங்கள் உடைய அலுவலர் ஆட்சிமுறை உருவாக்கப்படுதல் என்பன கிளர்ச்சிக்குப் பிந்திய கட்டத்தின் அரச முதலாளித்துவத்தின் இயல்புகளாக இருந்தன.

அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டதனால் இலங்கை அரசின் தன்மை எப்படி மாறியது என்பதைப் பற்றி அடுத்து நோக்குவோம். அரசுக்கு எதிராக ஜனதா விமுக்தி பெரமுன என்ற மக்கள் விடுதலை முன்னணி (JVP) கிளர்ச்சி ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிடுகிறது என்ற செய்திகள் வந்துகொண்டிருந்தன. இதனால் 1971 மார்ச் மாதம் முதன்முதலாக அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டது. அவ்வாண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது. தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக அவசரகால நிலை தொடரப்பட்டது. ஆயினும் அரசாங்கம் 1976 வரை அவசரகால நிலையைத் தொடர்ந்தது. ஏறக்குறைய தனது ஆட்சிக்கால முடிவு வரை அவசரகால நிலையை வைத்திருந்தது. 1972 அரசியல் யாப்பினை உருவாக்கியவரும், 1975 இல் கூட்டணி முறியும் வரை மந்திரிசபையில் அங்கம் வகித்தவருமான கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா தம் நினைவுகளை மீளாயும் கட்டுரையொன்றைப் பின்னர் எழுதினார். அக்கட்டுரையில் 1971 - 1977 காலத்தின் அவசரகால நிலைமை 'நிர்வாகத்துறையின் சட்டவாக்கத்திற்கு' (Executive Legislation) வழிவகுத்தது என்று குறிப்பிட்டார் (டி சில்வா, 1986:337). பாரளுமன்றமே சட்டங்களை இயற்றுதல் வேண்டும். இதற்குப் பதில், நிர்வாகத்துறையான அமைச்சரவையும் பிரதமரும் சட்டங்களை இயற்றும் முரண்பட்ட நிலை ஏற்பட்டது. இதனையே அவர் நிர்வாகத்துறைச் சட்டவாக்கம் எனக் குறிப்பிட்டார். நிர்வாகத்துறையானது பாராளுமன்றத்தைத் தனக்குக் கீழ்ப்பட்டதாக்கியது; பாராளுமன்றத்தை மீறிச்சென்றது என்றும் அவர் இக்கட்டுரையில் குறிப்பிட்டார். அவர் இக்கட்டுரையில் வெளிப்படையாக அழுத்திக்கூறாமல் விட்ட விடயம், அரச அதிகாரத்தின் மிக முக்கியமான மையமாக நிர்வாகத்துறை மாறிவிட்டது என்பதையே. இவ்வாறு அதிகாரம் மாறுகின்ற செயல்முறை அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதோடு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் தொடக்கி வைக்கப்பட்டது. இது நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயமாகும்.

அரசு என்றொரு விடயம் உள்ளது. அரசைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து ஆட்சியை நடத்தும் அரசாங்கம் (Regime) என்பது இன்னொரு விடயம். இந்த இரு விடயங்களிற்கும் இடையிலான வித்தியாசத்தை



ஜே ஆர் ஜெயவர்த்தன

Image Source - colombotelegraph.com

இல்லாமல் செய்து அரசும், அரசாங்கமும் ஒன்று என்ற நிலை 1970 இல் ஏற்படுத்தப்பட்டது. ஐக்கிய முன்னணி அரசாங்கமும் அரசும் ஒன்றுதான் என்ற தோற்றம் உருவாகியது. 1971 ஆம் ஆண்டில் இருந்து அவசரகால நிலை என்பது இலங்கையில் இயல்பான ஒரு விடயமாகியது. இது லிபரல் ஜனநாயகப் பண்புடையதாக இருந்த அரசை தாராண்மை மறுப்பு அரசாகவும், சர்வாதிகார அரசாகவும் மாற்றியது. அரசு வேறு, அரசாங்கம் வேறு என்பதை முற்றாக இல்லாமல் செய்துவிடவும் முடியவில்லை. ஐக்கிய முன்னணி அரசின் செயற்பாடுகள் 'அரசு - அரசாங்கம்' என்ற ஒரு வித்தியாசம் இருப்பதை மிகவும் எதேச்சதிகாரமான முறையில் உதாசீனம் செய்வதாக இருந்தன.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்குப் பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் அரசு - அரசாங்கம் என்ற வித்தியாசத்தை இல்லாமலாக்கும் உத்திகள் பலவற்றைக் கையாண்டன. இந்த உத்திகள் பலவகையின. ஐக்கிய முன்னணி அரசாங்கம் முதலில் இதனைப் புதிய கொள்கைத் திட்டங்கள் என்ற புதுமையோடு இணைத்தது. பலம் வாய்ந்த பாராளுமன்றத்தை அது உருவாக்கியது. இப்பாராளுமன்றம் பலம் வாய்ந்த மந்திரிசபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இம்மந்திரிசபை அரசு - அரசாங்கம் என்ற மரபுவழி வேறுபாடுகள் பற்றிச் சிறிதும் அக்கறை அற்றதாக இருந்தது. மாவட்ட அரசியல் அதிகாரி (District Political Authority) முறை புகுத்தப்பட்டது. இதன் மூலம் அரசாங்கம் நிர்வாகத்துறையில் ஊடுருவித் தன் பிடியை வலுப்படுத்தியது. ஆளும் கட்சியின் தொண்டர்களும் உறுப்பினர்களும் அரசாங்க நிர்வாகத்தின் எல்லா நிலைகளிலும் ஊடுருவினர்.

இவ்வாறு அரசாங்கத்தின் இரும்புக் கரங்கள் சமுதாயத்தின் எல்லா மட்டங்களிலும் தன் பிடியை இறுக்கின. அரசுக்குள் அரசாங்கம் நுழைந்து அதன் இடத்தைப் பிடித்தல் என்னும் கொள்கையை ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் ஆர். பிரேமதாசவும் ஜனாதிபதிகளாக

இருந்த போது தொடர்ந்தனர். இவர்கள் இன்னும் பல தாராண்மை மறுப்பு, ஜனநாயக விரோத உத்திகளைப் பயன்படுத்தினர். இந்தச் செயல்முறை இன்றுவரை படிப்படியாக முன்னேறிச் செல்கிறது என்றே கூறலாம். 1970கள் முதல் இலங்கையில் ஏற்பட்டுவந்த அரசியல் மாற்றங்களை தெளிவாகப் புரிந்துகொள்ளுவதற்கு பின்வரும் இரு கருத்தாங்கள் உதவக்கூடியன.

அ) சர்வாதிகாரம் (Authoritarianism)

O'Donnel என்ற ஆய்வாளரும் A.O. Hirschman என்பவரும் இலத்தீன் அமெரிக்காவின் சர்வாதிகார அரசுகளை இக்கருத்தாக்கம் கொண்டு விளக்கினர்.

ஆ) நிறுவனச் சிதைவு (Institutional Decay)

இலங்கை பற்றிய ஆய்வில் எம். மூர் (M. Moore) அவர்களால் இக்கருத்தாக்கம் பிரயோகிக்கப்பட்டது. அவர் 1990 இல் ஒரு கட்டுரையிலும், பின்னர் 1992 இல் இன்னோர் கட்டுரையிலும் இக்கருத்தை விளக்கினார்.

(உசாத்துணைப் பட்டியலில் இவர்களின் ஆக்கங்கள் பற்றிய விவரத்தைக் காணலாம்.)

அடுத்து இக்கருத்தாக்கங்களின் பொருத்தப்பாட்டை நோக்குவோம்.

## தாராண்மை மறுப்பில் இருந்து 1980களில் சர்வாதிகாரத்தை நோக்கிய மாற்றம்

ஜனநாயகமும், சர்வாதிகாரமும் ஒன்றோடொன்று கலப்புற்றுச் சங்கமமாகிய செயல்முறை 1977-1994 காலத்தின் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் நடைபெற்றது. 17 வருடகாலம் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும், ஆர். பிரேமதாசவும் ஜனாதிபதிகளாக ஆட்சி செய்தனர். இக்காலத்தில் பாராளுமன்ற ஜனநாயகம் இலங்கையில் ஒரு கட்சி ஆட்சியாக (One Party Rule) மாற்றம் பெற்றது. 1977 யூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பங்கு பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றது. எதிர்க்கட்சி மிகவும் பலவீனமான நிலையில் இருந்தது. இடதுசாரிகளுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. முன்னாள் ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி எட்டு ஆசனங்களை மட்டுமே பெற்றது. 1978 ஆம் ஆண்டில் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையைப் புகுத்தியது. இதனால் அரசின் நிர்வாகத்துறை பலம் பெற்றது. அதன் தலைமை அதிகாரம் ஜனாதிபதியிடம் இருந்தது. நிர்வாகத்துறை அரசின் மிக முக்கியமான அதிகார மையம் ஆகியது. பலமற்ற சட்டசபை, நிர்வாகத்துறைக்குப் பணிந்து போகும் கட்டுப்படுத்தப்பட்ட நீதித்துறை, விரக்தியுற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட எதிர்க்கட்சி, ஒப்பீட்டளவில் அளவுக்கு மீறிய அதிகாரங்களைக் கொண்ட நிர்வாகத்துறை என்ற இயல்புகளையுடைய அரசு தோற்றம் பெற்றது. இவ்விதம் 1980கள் முதல் 1990களின் முற்பகுதிவரை அரசு அதிகாரத்தில் நிறுவனச் சமநிலை இன்மை வெளிப்பட்டது. இம்மாற்றங்கள் நிகழ்ந்த வேளையில் வேறு இரு போக்குகள் வெளிப்பட்டன. 1983 முதல் தமிழ்ப் பிரிவினைவாதக் கிளர்ச்சி மேலெழுந்தது. 1987 இல் ஜனதா விமுக்தி பெரமுன எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டாவது கிளர்ச்சி தோன்றியது. மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சி தென்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டதாய் இருந்தது. மக்கள் விடுதலை முன்னணியினது கொரில்லாப் பேராளிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையே இரத்தம் சிந்திய தீவிர உள்நாட்டு யுத்தம் தொடர்ந்தது. இக்கிளர்ச்சி 1989 இல் அடக்கப்பட்டது. நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தோன்றிய கிளர்ச்சி முடிவுறாத நீண்ட உள்நாட்டுப் போராக மாறியது. வடக்குக் கிழக்கில் ஒரு கிளர்ச்சி, தென் பகுதியில் இன்னோர் கிளர்ச்சி என இரண்டு கிளர்ச்சிகளில் நாடு சிக்குண்டது. அவ்வேளை, வெளிநாட்டு இராணுவத் தலையீடும் ஏற்பட்டது. இலங்கையின் சமாதான முயற்சியிலும், பின்னர் போரிலும் இந்தியா பங்கு கொண்டது. இவ்வாறான வெளிநாட்டு இராணுவத் தலையீடு 1987-1990 ஆண்டுக் காலத்தில் ஏற்பட்டது. 1989 இல் மக்கள் விடுதலை முன்னணி தோற்கடிக்கப்பட்டதும், பின்னர் 1990 இல் சமாதானத்தை ஏற்படுத்தும் தனது முயற்சியை இந்தியா முடிவுக்குக் கொண்டுவந்ததும், இலங்கை அரசு சிக்கல்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளச் சந்தர்ப்பத்தை வழங்கின. விடுதலைப் புலிகளின் ஆளணியைச் சேர்ந்தவர் என்று கருதப்பட்ட ஒருவரின் தாக்குதலால் ஜனாதிபதி ஆர். பிரேமதாச கொல்லப்பட்டார். 1994 இல் நடந்த தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இத்தேர்தல் அதுவரை நாட்டில் நிலவிய உறுதியற்ற நிலையையும் நெருக்கடிகளையும் முடிவுக்குக் கொண்டுவந்தது.

1980களில் அரச முதலாளித்துவம் என்ற கொள்கை கைவிடப்பட்டு பொருளியல் தாராண்மைவாதமும், சுதந்திரச் சந்தைப் பொருளாதாரமும் உருவாகிய காலகட்டத்தில் இலங்கை அரசு மேலும் மேலும் சர்வாதிகாரத் தன்மை உடையதாக மாறலாயிற்று. இது விசித்திரமான ஒரு போக்கு ஆகும். இவ்விடத்தில், லத்தீன் அமெரிக்கா தொடர்பாக 'O'Donnel' (1973; 1978) மற்றும் 'Hirschman' (1978) ஆகியோர் முன்வைத்த

விளக்கம் இலங்கையின் புதிய போக்கிற்கும் பொருந்துகிறதா என்பதை நோக்குவோம். மேற்கூறிய ஆய்வாளர்கள் பொருளாதாரத் தாராண்மைவாதத்திற்கும் அரசியல் அடக்கு முறைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்ற வாதத்தை, லத்தீன் அமெரிக்க நிலையை உதாரணம் காட்டி முன்வைத்தனர். லத்தீன் அமெரிக்காவில் தாராண்மைவாதம் முதலாளித்துவ அபிவிருத்தியின் குறிப்பிட்டதொரு கட்டத்தில் தோன்றியது. அவ்வேளை லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய பொருளாதாரம் அந்நிய வர்த்தகத்திற்கும், அந்நிய முதலீடுகளுக்கும் திறந்துவிடப்பட்டது. இம்மாற்றத்தை நிர்வகிப்பதற்கு குறிப்பிட்ட வகை அரசியல் கொள்கையுடைய சர்வாதிகார அரசாங்கங்கள் தேவைப்பட்டன. லத்தீன் அமெரிக்க உதாரணம் பொருளாதாரத் தாராண்மைவாதத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையிலான தொடர்பை எடுத்துக்காட்டுகிறது. பொருளாதாரத் தாராண்மைவாதத்தை நடைமுறைப்படுத்த சர்வாதிகாரம் அவசியமான முன்தேவை என்ற இந்தக் கருத்தினை இலங்கை பற்றிய சில ஆய்வாளர்களும் கூறியிருந்தனர் (பொன்னம்பலம், 1981). இலங்கையின் இடதுசாரிகளும், தொழிற்சங்கவாதிகளும், சிவில் சமூகத்தினரும் இதே கருத்தைக் கூறியுள்ளனர். மூர் (Moore) தமது கட்டுரையில் (1990) இதற்கு மாறான வாதத்தை முன்வைத்தார். பொருளாதாரத் தாராண்மைவாதத்திற்கும், அவர் கூறும் அரசியல் சிதைவு (Political Decay) என்பதற்கும் நடைமுறையில் காரணகாரியத் தொடர்பு குறைவாகவே உள்ளது. மூர் 'அரசியல் சிதைவு' என்பதில் மூன்று அம்சங்கள் வெளிப்பட்டதாகவும் கூறுகிறார்.

அ. அரசியல் அதிகாரம் மத்தியில் குவிக்கப்பட்டது.

ஆ. ஜனநாயக எதிர்ப்புப் போராட்டங்கள் அடக்கப்பட்டன. எதிர்க்கட்சியின் செயற்பாடுகளும் கட்டுப்படுத்தப்பட்டன.

இ. சிங்கள - தமிழ் இனக்குழு உறவுகள் மோசமடைந்தன.

1980களில் பொருளாதாரத் தாராளமயமாக்கல் பூரணமான நிலையை நோக்கிச் செல்லவில்லை என்றும், நாட்டின் பொருளாதாரத்தில் அரசின் கட்டுப்பாடு தளரவில்லை என்றும் மூர் கூறுகிறார். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பொதுத்துறை வியாபாரத் தொழில் முயற்சிகளைத் தொடர்ந்து பேணியது. அரசியல் தேவைகளுக்காகவும், தமது கட்சி ஆதரவாளர்களுக்குச் சலுகைகளை வழங்குவதற்காகவும் பொதுத்துறை முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்து வைத்திருக்கும் தேவையும்



ஆர் பிரேமதாச

Image Source - tamilwin.com

இருந்தது. ஆதலால் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் விளைவாக ஏற்பட்ட தாராளமயமாக்கம் பலவீனமுடையதாக இருந்தது என்றே கூற வேண்டும். மூர் 'சர்வாதிகாரம்' என்ற கருத்தையும் அழுத்துவதாகத் தெரியவில்லை. அவர் 'அரசியல் சிதைவு' என்பதையே முக்கிய போக்கு என்கிறார். 1977 ஆம் ஆண்டின் பின் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் ஏற்பட்ட 'அரசியல் சிதைவு'க்கான காரணங்களை பொருளாதார தாராண்மைவாதச் செயல்முறைக்குள் தேடிக் காண முடியாது; அவை அதற்கு வெளியில் இருந்து எழுந்தன என்றும் மூர் கூறுகிறார். இலங்கையின் அரசு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் என்ன வடிவத்தைப் பெற்றது, என்ன போக்கில் சென்றது என்பதை விளக்குவதற்கு மூர் குறிப்பிடும் 'அரசியல் சிதைவு' என்னும் கருத்திற்கு மாறான வாதத்தை முன்வைக்கும் தேவை உள்ளது. அரசியல் அதிகாரம் மத்தியில் குவிதல், பிரிவினைவாதக் கிளர்ச்சி என்பவற்றிற்கும் பொருளாதாரத் தாராண்மைவாதத்திற்கும் இடையிலான தொடர்பு யாது எனப் பார்ப்போம். இவ்விசாரணை எமக்கு இலங்கையின் அரசின் விசேட இயல்பைப் புரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்குகிறது. இலங்கையின் வெவ்வேறு சமூகக்குழுக்களும், இனக்குழுமங்களும் முன்வைத்த அரசியல் கோரிக்கைகளை எதிர்கொண்டு, அவற்றிற்குத் தீர்வுகளைக் காணும் திறனை இலங்கையின் அரசியல் நிறுவனங்கள் கொண்டிருக்கவில்லை. இவ்வரசியல் கோரிக்கைகளை முன்வைத்த குழுக்களை அதே நிறுவனங்களைப் பயன்படுத்தி அடக்கி ஒடுக்குவதில் அரசாங்கம் ஈடுபட்டது. வன்முறையையும் போரையும் அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டது. 'அரசியல் சிதைவு' என்றும் 'நிறுவனச் சிதைவு' என்றும் மூர் மற்றும் டிவொட்டா (Devotta) (2000, 2004) கூறியிருப்பது, 1965 காலத்தில் சமுவல் ஹண்டிங்டன் எழுதிய கட்டுரையில் கூறிய கருத்தொன்றின் வழிவரும் தொடர்ச்சியே எனக் கூறலாம். ஹண்டிங்டன் அக்கட்டுரையில் அரசியல் அபிவிருத்தி

(*Political Development*) என்ற கோட்பாட்டையும் அதனோடு இணைந்த 'அரசியல் சிதைவு' என்ற கோட்பாட்டையும் முன்வைத்தார். ஹண்டிங்டன் கூறிய 'அரசியல் அபிவிருத்தி' 1950களிலும் 1960களிலும் ஒப்பீட்டு அரசியல் விஞ்ஞானம் என்ற ஆய்வுப் பிரிவின் முக்கிய கருத்தாகும். அரசியல் அபிவிருத்தியை ஹண்டிங்டன் ஒரு நேர்கோட்டு வளர்ச்சியாகவே நோக்கினார். அத்தோடு 'அரசியல் அபிவிருத்தி' என்ற கோட்பாட்டை அரசியல் சிதைவு என்ற கோட்பாட்டுடன் இணைக்கவும் வேண்டும் என்றும் ஹண்டிங்டன் கூறினார். 'அரசியல் சிதைவு' என்ற கருத்தை ஹண்டிங்டன் என்ன அர்த்தத்தில் பயன்படுத்தினார்? என்பதைக் கவனித்தல் வேண்டும். சமூகப் பொருளாதார நவீனமாதல் நடைபெறும் வேளையில், அதன் காரணமாக எழும் அரசியல் கோரிக்கைகளை எதிர்கொண்டு தீர்வுகாணும் செயல்திறன் அரசியல் நிறுவனங்களிடம் இல்லாமல் போவதையே 'அரசியல் சிதைவு' என்று ஹண்டிங்டன் குறிப்பிட்டார். அரசியல் நவீனமாதல் (Political Modernisa tion) என்ற செயல்முறை ஊடாக உருவாக்கப்பட்ட அரசியல் பங்கேற்பு (Political Participation) காரணமாக எழும் அரசியல் கோரிக்கைகளை எதிர்கொண்டு தீர்வுகாண முடியாதனவாக நிறுவனங்கள் ஆகின்றன. இந்நிறுவனங்கள் செயல்துடிப்பு அற்றனவாய் தேக்கமடைந்தும், ஊழல் மலிந்தனவாயும் இருந்தன. புதிய தேவைகளுக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்ளும் திறனற்றனவாயும் இருந்தன. ஹண்டிங்டன் இவ்வாறு கூறுகிறார்: 'சமநிலை குலைதல், ஊழல், சர்வாதிகாரம், உள்நாட்டு வன்முறை, நிறுவனச் சீரழிவு, அரசியல் சீரழிவு ஆகிய சொற்கள் குறிக்கும் கோட்பாடுகள், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் நிகழ்வுகளைப் பற்றி இச்சொற்களின் எதிர்ச்சொற்களால் குறிக்கப்படும் கோட்பாடுகள் கூறுவதை விட நிறைவான சித்திரத்தைத் தருகின்றன.' மூர் மற்றும் டிவொட்டா கூறுவனவும் ஹண்டிங்டன் கூறியதற்கு ஒப்பானதாகவே இருந்தன. அவர்கள் 1980களிலும், அதற்குப் பின்னரும் ஏற்பட்ட 'அரசியல் சிதைவு'வின் பல்வேறு பரிமாணங்களை ஒன்றிணைத்து ஒரு விளக்கத்தை வழங்குகின்றனர்.

இலங்கையின் அரசின் இயல்பு என்ன? அதன் இயக்கம் எவ்வாறு அமைகிறது? என்றவாறான பரிசீலனையில் 'அரசியல் சிதைவு' என்ற கோட்பாடு போதிய விளக்கத்தைத் தரவில்லை. இந்த விளக்கம் நேர்காட்சிவாதத் தன்மை உடையது; அத்தோடு விளக்க முறையிலும் அமைகிறது (*It is positivistic and descriptive*). இக்கோட்பாட்டை நேர்காட்சிவாதத் தன்மையுடையது என்று ஏன் கூறுகின்றோம்? அரசு பற்றிய விசாரணையை இக்கோட்பாடு தவிர்த்துவிட்டு,



**சந்திரிகா குமாரதுங்க**

Image Source - apbspeakers.com

அனுபவத்தின் அடிப்படையில் பரிசீலிக்கக்கூடிய நிகழ்வுகள், செயல்முறைகளில் கவனம் செலுத்துவதால் இவ்வாறு கூற வேண்டியுள்ளது. இந்த அனுபவவாத விவரிப்பைக் கொண்டு இக்கோட்பாடு அரசியல் மாற்றம் பற்றிய நிறுவல் அல்லது பரிசோதனை வழி நிர்ணயத்தையும் செய்கிறது. இதை விளக்க முறையானது (*Descriptive*) என்று ஏன் கூற வேண்டும்?

அ) அரசியல் சிதைவு ஏற்படும் சூழ்நிலை விவரிக்கப்படுகின்றது.

ஆ) அரசியல் சிதைவின் விளைவுகளும் விவரிக்கப்படுகின்றன.

இ) அரசியல் சிதைவு என்பதன் மூலம் வெளிப்படும் அரசின் இயல்புகள் எவை என்பதும் விவரித்துக் கூறப்படுகின்றன.

இந்த மூன்று விடயங்களையும் பற்றிய ஒரு விவரிப்பை மட்டும் இக்கோட்பாடு வழங்குகிறது. அதற்கு அப்பால் விசாரணையை இக்கோட்பாடு எடுத்துச் செல்லுவதில்லை. நேர்காட்சிவாத முறையிலான விவரிப்புகளைத் தருவது அரசியல் விஞ்ஞானத்தின் பணி அல்ல என்று நாம் கூறவில்லை. ஒரு செயல்முறையின் வரலாற்றுப் பின்னணியையும் தேவையையும் இந்த வகை விவரிப்புகள் மூலம் முழு நிறைவான முறையில் புரிந்துகொள்ள முடியாது என்றே கூறுகிறோம். 'அரசியல் சிதைவு' என்னும் கருத்தை வேறு சில வினாக்களுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

'அரசியல் சிதைவு' இலங்கையின் அரசின் இயல்பைப் பற்றி என்ன கூறுகிறது? அது இலங்கை அரசின் மாற்றமுற்றுச் செல்லும் போக்குகளை விளக்குகிறதா? சிதைவு நிகழ்கிறது என்றால் இச்சிதைவின் பின்னர் இலங்கையின் அரசியல் எப்படி இருக்கும்?

இந்த அத்தியாயத்தில் நாம் தொடர்ந்து வரும் விசாரணைகள் ஓர் உண்மையை எடுத்துக் கூறுகின்றன.

இலங்கையின் அரசு முழுமையான சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்லவில்லை. அதற்குப் பதிலாக அது அரசியல் யாப்புக்கு வகுத்திருக்கும் எல்லைகளுக்குள் இயங்கும் சர்வாதிகாரம் என்ற வகையினதாக உள்ளது. மூர் மற்றும் டிவொட்டா 'அரசியல் சிதைவு' என்ற செயல்முறை பற்றி விவரித்திருப்பது இந்தப் பண்பை விளக்கிக்கொள்ள உதவுகிறது. அரசியல் யாப்புச் சர்வாதிகாரம் (Constitutional Authoritarianism) என்பதன் அர்த்தம் என்ன என்று பார்ப்போம். இவ்வகைச் சர்வாதிகார அரசில் தாராண்மை மறுப்பு நிறுவனங்களையும் நடைமுறைகளையும் அரசாங்கம் ஜனநாயக அரசியல் யாப்பின் சட்டகத்திற்குள் புகுத்துகிறது. இவ்வாறு புகுத்தப்பட்ட நிறுவனங்களும் நடைமுறைகளும் அரசின் ஜனநாயக அடித்தளத்தை மாற்றி அதனைச் சர்வாதிகாரத்துடன் செயல்பட வைக்கின்றன. இதைப் புரிந்து கொள்வதற்கு நாம் ஜனநாயகமும் சர்வாதிகாரமும் அரசின் அதிகாரம் செயல்படுவதற்குத் துணைசெய்து கொண்டு ஒருங்கே இருப்பதைக் கண்டுகொள்ள வேண்டும். வெளிப்படையான தோற்றத்தில் எதிர்க்கருத்துகளாக இருக்கும் ஜனநாயகமும் சர்வாதிகாரமும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதைக் காண்கிறோம். 1977 முதல் 1993 வரை பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இலங்கை அரசின் ஜனநாயக முறைகளை முற்றாகக் கைவிட்டு சர்வாதிகார ஆட்சியைக் கொண்டுவரவில்லை. இலங்கையின் அரசியல் நிறுவனங்களில் மாற்றங்களைப் புகுத்தி அவற்றை மத்தியில் அதிகாரத்தைக் குவிப்பதற்கு ஏற்றவையாக அரசாங்கம் மாற்றியது. அரச வன்முறையையும் அரச பயங்கரவாதத்தையும் பயன்படுத்தி சமூகத்தைத் தனக்குப் பணிந்து கீழ்ப்படிய வைத்தது. நீதித்துறையினதும் பொது நிறுவனங்களினதும் சுயாதீனத்தை இல்லாமல் செய்தது. பாராளுமன்ற எதிர்க்கட்சியின் முதுகெலும்பை உடைத்து அதனைச் செயலிழக்கச் செய்தது. அரசை சிங்கள இனக்குழுமத்திற்கு உரியதாக்கி அதன் அடையாளத்தை மாற்றியது.

இவை யாவற்றினதும் ஒட்டுமொத்த விளைவாக அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாடு மறைந்தது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் இந்தத் தாராண்மை மறுப்பு நடவடிக்கைகள் யாவும் ஜனநாயக அரசின் செயல்முறைக்குள் மேற்கொள்ளப்பட்டன. அது ஜனநாயக முறையொன்றை சர்வாதிகாரத்துடன் இணைப்பதில் வெற்றியடைந்தது. பல இருமை எதிர்நிலைகள் அரசியல் களத்தில் ஒன்றிணைந்து இருந்தமை விசித்திரமான முரணாக அமைந்தது. ஜனநாயகத் தேர்தல் முறையின் ஊடாக அமைக்கப்பட்ட பாராளுமன்றம் ஒருபுறம் இயங்கிக் கொண்டிருந்தபோது ஆயுதம் தாங்கிய போராட்டமும் கிளர்ச்சியும் இன்னொரு புறம் நடைபெற்றன. பயங்கரவாதச் செயல்களும் வன்முறையும் தொடர்ந்தன. சட்டத்தின் ஆட்சி (Rule of Law) என்னும் கொள்கையை நடைமுறையில் வைத்திருந்தபோதிலும் அவசரகால நிலையின் கீழ் ஆட்சி தொடர்ந்தது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அரசாங்கத்திற்குத் துணையாக இருந்தது. தாராண்மைப் பொருளாதாரக் கொள்கையை செயல்படுத்திய அரசு அமைப்பியல் சீராக்கத் திட்டங்களையும் (Structural Adjustment Pro grammes) நிறைவேற்றியது. பொருளாதாரத் துறையில் தாராளவாதம் ஒருபக்கம் செயல்பட, அரசியல் துறையில் தாராண்மை மறுப்பு, லிபரல் விரோதச் செயல்முறைகள் தொடர்ந்தன. இவை எடுத்துக்கூறுவது என்ன? இருமை எதிர்நிலைகள் (Binary Opposites) ஒருங்கே சேர்ந்திருப்பதையே இவை காட்டுகின்றன.

## 1994 - 2003 இல் செய்யப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிதல்

1994 - 2003 ஆம் ஆண்டுகளில் மேற்கூறிய போக்கைத் தடுக்கும் முயற்சிகள் இரு தடவைகளில் மேற்கொள்ளப்பட்டன. மீண்டும் தாராண்மை லிபரல் அரசியலைக் கொண்டு வரும் முயற்சிகளின் தோல்வி (Failed reliberalisation: 1994-2003) என்னும் இவ்விடயத்தை அடுத்து நோக்குவோம்.

இலங்கையின் பின்காலனித்துவ அரசின் உருவாக்கச் செயல்முறையில் இரு அம்சங்கள் இருந்தன. அவை:

அ) இனக்குழுமப் பெரும்பான்மைவாதம் (Ethnic Majoritarianism)

ஆ) தாராண்மை மறுப்பும் லிபரல் விரோத அரசியலும்

இவ்விரு அம்சங்களும் 1977-1993 கால ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் உச்சத்திற்குச் சென்றன என்பதை முன்னர் விளக்கிக் கூறினோம். இந்தப் போக்கில் இரு தடவைகள் இடையீடு ஏற்பட்டது. 1994 இன் ஆட்சி மாற்றம், டிசம்பர் 2001 இன் ஆட்சி மாற்றம் என்பனவே இவ்விடையீடுகள். இந்த இரு சந்தர்ப்பங்களும் பின்வரும் இயல்புகளைக் கொண்டிருந்தன:

1. அரசியல் அதிகாரத்தைக் கொண்டிருந்த சர்வாதிகார அரசாங்கத்திற்குள் தோன்றிய நெருக்கடி.
2. இனக்குழும யுத்தத்தை சமாதான வழியில் தீர்வு காண்பதற்கும், லிபரல் ஜனநாயக ஆளுகை முறைக்குத் திரும்புவதற்கும் பொதுமக்களின் ஆதரவு கிடைத்தமை.

1994 இன் பொதுசன முன்னணியின் ஆட்சி மாற்றத்திற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமை தாங்கியது. இக்கட்சி இடதுசாரிக் கட்சிகளுடன் ஒரு கூட்டணியில் இணைந்திருந்தது. இவ்விடதுசாரிக் கட்சிகள் சமுதாய ஜனநாயக மாற்றம், சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் என்பவற்றில் கூடிய அக்கறை கொண்டவையாக இருந்தன. 2001 இன் ஆட்சி மாற்றம் வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் அமைந்தது. இக்கட்சி பொருளாதாரத் தாராண்மைவாதத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதில் நாட்டமுடையதாக இருந்தது. அத்தோடு பரந்த அளவிலான லிபரல் ஜனநாயக அரசியலையும் மீண்டும் கொண்டு வருவதில் விருப்பம் கொண்டதாக இருந்தது. 1994 இன் பொதுசன முன்னணி அரசாங்கமும் 2001 இன் ஐக்கிய தேசிய முன்னணியும் (UNF) அரசியல் கொள்கையில் சீர்திருத்தவாதப் போக்கைக் கொண்டவை. ஐக்கிய தேசியக் கட்சியின் (1977-1993) நீண்டகால ஆட்சியின் சர்வாதிகாரத்தில் இருந்து மீள்வது இவற்றின் நோக்கமாக இருந்தது.

1994 இன் பொதுசன முன்னணி அரசுக்குத் தலைமை தாங்கிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, அரசு தாராண்மைப்படுத்தப்படும் என்று வாக்குறுதி வழங்கியிருந்தார். அரசியல் யாப்பை மீண்டும் வெஸ்ட்மின்ஸ்டர் முறைக்கு மாற்றி, பாராளுமன்றத்தை மீண்டும் அரச அதிகாரத்தின் மைய நிறுவனமாக்குவதாகவும் கூறியிருந்தார். பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வைக் காணப்போவதாக அறிவித்ததோடு, பொதுசன முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் அரசியல் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது. பின்னர் 1995 ஜனவரி மாதம் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டது. யுத்தம் நிறுத்தப்பட்டதால் மக்கள் நிம்மதியாக மூச்சுவிடக்கூடிய அரசியல் சூழ்நிலை உருவானது. இருந்தபோதும் பொதுசன முன்னணி அரசாங்கம் அவசரகால நிலையை நீக்கவில்லை. 1970களிலும் 1980களிலும் ஜனநாயகத்திற்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் புறம்பான நடவடிக்கைகளைத் தொடரவும் அவற்றிற்குச் சட்டத்தின் கவசத்தை வழங்கவும் காரணமாக இருந்த அவசரகால நிலையை அரசாங்கம் தளர்த்த முன்வரவில்லை. இதனால் ஏறக்குறைய ஒரு வருட காலத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகள் ஓரளவு தளர்த்தப்பட்டிருந்தன. ஏப்ரல் 1995 இல் விடுதலைப் புலிகளுடனான அரசியல் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்து யுத்தம் மீண்டும் தொடங்கும் வரை இந்நிலை காணப்பட்டது. ஜனநாயகம் மீண்டும் தலைதூக்கிய



ரணில் விக்கிரமசிங்க

Image Source - indiatvnews.com

ஒரு சிறிய இடைக்காலம், போர் நிறுத்தம் குறுகிய காலம் நடைமுறையில் இருந்ததால் சாத்தியமாயிற்று என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். போர் மீண்டும் தொடங்கிய பின்னர் பொதுசன முன்னணி அரசாங்கம் பழையபடி அரசியல் யாப்புச் சர்வாதிகாரத்திற்குத் திரும்பியது. இருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இருந்த கடுமை குறைந்ததாக இச்சர்வாதிகாரம் இருந்தது.

இப்போது மூர் கூறிய கருத்தைத் திரும்பவும் பார்ப்போம். பொருளாதாரத் தாராண்மைவாதத்திற்கும் அரசியல் சர்வாதிகாரத்திற்கும் நேரடித் தொடர்பு இருப்பதாகக் கூறுவது கடினம் என்பது மூரின் கருத்து. இதனை நாம் ஏற்றுக்கொண்டாலும் இன்னொரு விடயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். பொதுசன முன்னணி அரசாங்கம் அரசியல் யாப்புச் சர்வாதிகாரத்தின் மென்மையான வடிவத்திற்கு, இரண்டு ஆண்டுகால இடைவெளிக்குள் திரும்பிவிட்டது. இவ்வாறு திரும்பிய காலத்திலேயே அது பொருளாதாரத்தில் அரசின் பங்கை அதிகரிக்கும் செயல்திட்டத்தை சமுதாய ஜனநாயகப் பொருளாதாரக் கொள்கை மூலம் நிறைவேற்றுவதையும் கைவிட்டது. பொதுசன முன்னணி அரசாங்கம் சமுதாய ஜனநாயகப் பொருளாதாரக் கொள்கையை கைவிட்டதை 'மனிதாய முகம் கொண்ட முதலாளித்துவம்' (Capitalism with a Human Face) என்ற சொல் அலங்காரத் தொடரால் குறிப்பிட்டது.

பொதுசன முன்னணி அரசாங்கம் கலப்பற்ற சுதந்திரச் சந்தைப் பொருளாதாரக் கொள்கையை செயல்படுத்தியபோது சர்வாதிகாரத்தையும் அதன் கடுமையற்ற வடிவத்தில் ஏன் கொண்டு வந்தது என்ற கேள்விக்குப் பதில் கூற வேண்டியுள்ளது. இது எதைக்

கூறுகிறது? இங்கே இரண்டு விடயங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக ஒரு கருதுகோள் எடுத்துக் கூறப்படுகிறது. பின்னர் அக்கருதுகோளிற்கான விளக்கம் வழங்கப்படுகிறது. பொருளாதாரத் தாராண்மைவாதம் என்ற கொள்கை அரசியல் சர்வாதிகாரம் நடைமுறையில் உள்ளபோதும் நன்றாகச் செயல்படுகின்றது என்பது கருதுகோள். அதற்கான விளக்கம் என்னவெனில், பொருளாதாரத் தாராண்மைவாதமும் அரசியல் சர்வாதிகாரமும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டவை அல்ல என்பதாகும். 1970களில் அரச முதலாளித்துவமும் அரசியல் சர்வாதிகாரமும் எவ்வாறு ஒத்துப்போயினவோ, அவ்வாறே இவையிரண்டும் ஒத்து இயங்குகின்றன என்ற விளக்கம் கிடைக்கிறது.

2001 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ், முஸ்லிம் கட்சிகளையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஒரு குழுவையும் சேர்த்து, ஐக்கிய தேசிய முன்னணி என்ற கூட்டணி ஒன்றை அவ்வாண்டு டிசம்பரில் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக அமைத்துக் கொண்டது. ஐக்கிய தேசிய முன்னணி போர் இல்லாத அமைதிச் சூழலில் பொருளாதாரத் தாராண்மைவாதக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லப் போவதாகவும் குறிப்பிட்டது. விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் மூலம் இந்த இலக்கு அடையப்படும் என்றும் குறிப்பிட்டது. டிசம்பர் 2001 தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்றது.

அரசியலில் விநோதமானதும் வித்தியாசமானதுமான சூழ்நிலை ஒன்று ஏற்பட்டது. ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு அரசியல் முகாம்களைச் சேர்ந்தவர்களாய் இருந்தார்கள். தலைமை தாங்கும் அரசியல் எதிரிகளான ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒற்றுமையாகச் செயற்படும் ஒழுங்குக்கு இணங்க வேண்டிய தேவை இருந்தது. ஆனால் அவர்களால் ஒருங்கே செயற்படும் (Cohabitation) இணக்கத்திற்கு வர முடியவில்லை. ஜனாதிபதி - பாராளுமன்றம் என்ற ஒன்றோடொன்று போட்டியிடும் இரண்டு மையங்கள் உருவாகின. இந்த நிலைமையை 'பிளவுற்ற அரசாங்கம்' (Fractured Govern ment) என்று கூறலாம் (பெர்ணான்டோ, 2008). இது அரசின் மீது பயனுள்ள தாக்கத்தை ஏற்படுத்தியது. எத்தகைய அதிகார மையமும் தன்னிச்சையாக அரசியந்திரத்தை சர்வாதிகார முறையில் பயன்படுத்த முடியாத நிலை உருவானது. நிர்வாகத்துறை சட்டசபை மீது கட்டுப்பாடு விதிக்கும் முறையில் செயற்பட்டது. அதேபோல் சட்டசபை நிர்வாகத்துறையைக் கட்டுப்படுத்தியது.

2002, 2003 ஆகிய இரண்டு ஆண்டுகளும் இவ்விதமான இரட்டை அதிகாரம் செயற்பட்டது. அரசின் சர்வாதிகாரத் தலையீடுகள், ஆற்றல்கள், சர்வாதிகார உந்துதல்கள் என்பன கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்த காலம் என்ற வகையில் 2002 - 2003 ஆண்டுகள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகச் சிறந்த காலமாகும். அப்போது விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது என்பதும் அரசு சர்வாதிகாரத்தில் இருந்து விலகிக் கொள்வதற்கான மேலதிக காரணியாக விளங்கியது.

சர்வாதிகாரப் போக்கில் இருந்து பின்வாங்குதல் அல்லது விலகல் ஒரு தற்காலிக விடயமாகவே இருந்தது. 2003 டிசம்பரில் ஜனாதிபதி குமாரதுங்க தேசிய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைக் கலைத்தார். 2004 ஏப்ரலில் நடந்த தேர்தலில் ஜனாதிபதி குமாரதுங்க தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது. அக்கூட்டணியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, புதிதாக உருவாக்கப்பட்ட ஜாதிக ஹெல உறுமய கட்சி (சிங்கள மரபுரிமைக் கட்சி - JHU) ஆகியன சேர்ந்திருந்தன. அவை சர்வாதிகார அரசை மீண்டும் நிலைநிறுத்த கருத்தியலால் ஒன்றுபட்டன.

2004 ஏப்ரல் மாதம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஓர் இடைவேளை முடிவுக்கு வந்தது. சர்வாதிகார அரசு மீண்டும் உறுதியாக நிலைபெற்றது. சர்வாதிகாரம் இலங்கை அரசியலில் ஒரு முக்கிய அம்சமாகவும் இயல்பாகவும் உள்ளது. பாராளுமன்ற ஜனநாயகமும் அரசியல் யாப்புச் சர்வாதிகாரமும் ஒருங்கிணைந்த இயல்புடையதாக இலங்கை அரசு உருவாக்கம் பெற்றது.

### முடிவுரை

இலங்கையின் அரசுக்கு எதிரான ஆயுதம் தாங்கிய போராட்டம் நடைபெற்ற வேளையில் இலங்கை அரசு ஜனநாயக முறையை முற்றாகத் தூக்கி வீசிவிட்டு சர்வாதிகார அரசாக அல்லவா மாறியிருக்க வேண்டும்? இதுவல்லவா சாதாரணமாக எதிர்பார்க்கக்கூடியது? ஆனால் இலங்கையில் ஜனநாயகம் உயிரோடு இன்றும் இருக்கிறது. இது எவ்வாறு சாத்தியமாயிற்று என்ற புதிரை விடுவிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கட்டுரையில் இருந்து நாம் இரண்டு முடிவுகளைப் பெற முடியும். பிரதான முடிவு: இலங்கையின் பின் காலனித்துவ அரசு தனது ஜனநாயக வடிவத்தை நெகிழ்ச்சியுடையதாக்கி, அதனுள்ளே சர்வாதிகார நடைமுறைகளையும் இணைத்துக் கொண்டது. பின்

காலனித்துவ அரசு சில திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்தே ஜனநாயகத்தைத் தன்னுடன் வைத்துக் கொண்டது. அதனை முற்றாகத் தூக்கி வீசவில்லை. ஜனநாயகத்தின் நெகிழ்வுத் தன்மை காரணமாக சர்வாதிகாரத்தை அது தன்னுடன் இணைத்துக் கொண்டது. மறுபுறத்தில் சர்வாதிகாரமும் ஜனநாயக நடைமுறைகளை உள்வாங்கிக் கொள்ள இணங்கிச் சமரசம் செய்து கொண்டது. இத்துடன் வேறு இரண்டு குறிப்புகளையும் சொல்லலாம்:

1. ஜனநாயகமும் சர்வாதிகாரமும் ஒன்றுக்கு ஒன்று எதிரான விடயங்கள் அல்ல. அவை பரஸ்பரம் இணங்கிக் கொண்டு இரண்டினதும் சேர்க்கையான புதிய வடிவமாகத் தாராண்மை மறுப்பு ஜனநாயகம் அல்லது லிபரல் விரோத ஜனநாயகம் என்ற உருவத்தைப் பெறலாம். அதுவே இலங்கையில் நடைபெற்றது.

2. தாராண்மை மறுப்பு ஜனநாயகம் தோன்றிய பின்னர், சர்வாதிகாரத்தில் இருந்து மீண்டும் ஜனநாயகத்தை உயிர்ப்பிக்கக் கூடிய அமைப்பியல் மாற்றங்களைச் செய்வதை அது அனுமதிக்காது. இதை இலங்கை அனுபவம் உறுதிப்படுத்துகிறது.

இரண்டாவது முடிவு, அரசு - அரசாங்கம் என்ற இரண்டிற்குமிடையிலான இயங்கியல் பற்றியது. அரசின் உருவாக்கம் என்ற செயல்முறையில் பங்குகொள்ளும் விடயங்கள் குறித்த சில கேள்விகளுக்கான விடையை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அரசாங்கங்கள் அரசின் இயல்பை மாற்றிவிட முடியுமா? வெவ்வேறு அரசாங்கங்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைய அரசு எப்படி மாறுகிறது? வெவ்வேறு அரசாங்கங்களின் வர்க்கச் சார்பும் பின்னணியும், கருத்தியல் சார்புகள், அரசியல் உறுதிமொழிகள், கடப்பாடுகள் என்பன இலங்கையின் பின் காலனித்துவ அரசை எப்படி உருமாற்றின? அதன் மீது எவ்வாறு தாக்கம் புரிந்தன?

இக்கேள்விகள் விளக்கமுறை அரசியல் பகுப்பாய்வு ஒன்றை நடத்தும்போது கேட்க வேண்டிய சுவாரஸ்யமான கேள்விகளாகும். இக்கட்டுரையில் நாம் நிகழ்த்திய பகுப்பாய்வின்படி வெளிப்படும் உண்மை யாதெனில், இலங்கையின் பின் காலனித்துவ அரசை நன்கு புரிந்து கொள்ள நாம் அரசு - அரசாங்கம் என்ற இரண்டையும் பிரித்துப் பார்க்க வேண்டும்; அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதாகும். அரசு என்பது ஒரு வகைமை (Category). இதுபோன்றே அரசாங்கம் என்பதும் பகுப்பாய்வுக்கு உதவும் வகைமை. நடைமுறை அரசியல் செயல்முறைகளில் அரசு வேறு, அரசாங்கம் வேறு என்பது வெளிப்பட்டுத் தெரிவதில்லை. நடைமுறையில் வெளிப்பட்டுத் தெரியாத இவற்றை பகுப்பாய்வுத் தேவைக்காக நாம் பிரித்துப் பார்க்க வேண்டும். அரசாங்கம் எவ்வாறு அரசை ஊடுருவி நிற்கிறது என்பதையும், அரசு அரசாங்கத்தின் மீது தங்கியிருப்பதாக மாறுகின்றது என்பதையும் அலசிப் பார்க்க வேண்டும்.

இதன் மூலமே அரசாங்கத்தின் கொள்கைகளும் முன்னுரிமைகளும், அரசு அதிகாரத்தின் கொள்கைகளும் முன்னுரிமைகளும், அரசு அதிகாரத்தின் செயற்பாட்டை வரையறை செய்வதையும் மறு வரையறை செய்வதையும் கண்டு கொள்ளலாம். அரசின் மறு உற்பத்தியில் அரசாங்கங்களின் வகிபாகம் யாது என்ற விடயம் தனியாக ஆராயப்பட வேண்டியது.

## தொகுப்புரை

பேராசிரியர் ஜயதேவ உயன்கொட அவர்கள் 1948ற்குப் பிற்பட்ட கால அரசை 'பின்காலனித்துவ அரசு' (PostColonial State) என வரையறை செய்துள்ளார். அவரது இவ்வரையறை, இலங்கையின் மார்க்சிய அரசியல்வாதிகளின் ஒரு பிரிவினர் 1948ற்குப் பிற்பட்ட கால இலங்கையின் நிலையை 'நவகாலனியம்' (NeoColonialism) என வரையறை செய்விதிலிருந்து மாறுபட்டதாக இருப்பதைக் காணலாம். இலங்கையை 'நவகாலனியம்' என்று கூறுவதன் பொருள், காலனியம் புதிய வடிவத்தில் இன்னும் தொடர்கிறது என்பதாக அமைகிறது. ஆகையால் 'நவகாலனியம்' என்னும் கருத்தின் நீட்சியாக இலங்கையின் அரசை 'நவகாலனித்துவ அரசு' என்றே வரையறை செய்ய வேண்டும். ஜயதேவ உயன்கொட அவர்கள் இலங்கையின் அரசை 'பின்காலனித்துவ அரசு' என வரையறை செய்வதன் மூலம் 'நவகாலனியம்', 'நவகாலனித்துவ அரசு' ஆகிய கருத்துகளை நிராகரிக்கிறார் என்றே கொள்ள வேண்டும்.

1948 இல் இலங்கை பெற்றுக்கொண்ட சுதந்திரம் போலியானது; இலங்கை அரசு அன்று முதல் காலனித்துவ அரசின் கருவியாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற வாதம் ஜயதேவ உயன்கொட அவர்களால் நிராகரிக்கப்படுகின்றது என்றே கொள்ளலாம். இலங்கையின் அரசை நவகாலனிய அரசு என்று கூறுவோர், இலங்கை அரசிடம் சுயநிர்ணய உரிமையைக் (Self Determination) கோரும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் போராட்டத்தை நவகாலனிய, ஏகாதிபத்தியச் சூழ்ச்சி என்று கொச்சைப்படுத்துவதையும், குறிப்பாக இலங்கைத் தமிழர்களின் உள்ளகச் சுயாட்சிக் (Internal Autonomy)

கோரிக்கையை நிராகரித்து, இலங்கையின் பெரும்பான்மை தேசியவாதத்தை நியாயப்படுத்துவதையும் காண முடிகிறது.

இலங்கையை பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் ஜயதேவ உயன்கொட ஒப்பிடுகிறார். இலங்கையில் ஒப்பீட்டளவில் ஜனநாயக நிறுவனங்கள் பலமுடையனவாக இருந்தன. இந்நிறுவனங்கள் இராணுவத்தை விடப் பலமுடையனவாக இருந்தன என்றும் அவர் கூறுகிறார். பாகிஸ்தானிலும், பங்களாதேஷிலும் போன்று இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படவில்லை; 1962 இன் இராணுவச் சதி முயற்சி இலங்கையில் தோல்வியுற்றமை இவ்வுண்மையை எடுத்துக் காட்டுகிறது என்று கூறுகிறார். ஆயினும், இலங்கையில் பின்காலனித்துவ அரசின் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் படிப்படியாக ஜனநாயக நிறுவனங்கள் பலமிழந்து போவதற்குக் காரணமாக அமைந்தன என்பதை அவர் எடுத்துக் காட்டுகிறார்.

## 1956 இன் அரசியல் மாற்றம்

1956-1965 காலத்தில் இலங்கை அரசு தலையிடும் அரசு (Interventionist State) என்னும் தன்மையைப் பெற்றது. இக்காலத்தில்,

1. மக்கள்வாதம் (Populism)
2. இனக்குழுமப் பெரும்பான்மைவாதம் (Ethnic Majoritarianism)

என்பன எழுச்சி பெற்றன. தாராண்மை ஜனநாயகப் பண்புகளை அரசுக் கட்டமைப்பிலும் அரசியலிலும் இருந்து நீக்குவதற்கு இவை துணையாயின. இக்கால அரசு, அரச முதலாளித்துவத்தை வலுப்படுத்தியதோடு, இனவாதம் மற்றும் பெரும்பான்மைவாதம் என்ற கருத்தியல்களின் அடிப்படையில் அரசுக் கட்டமைப்புகளை வடிவமைத்தது.

## 1970 இன் அரசியல் மாற்றம்

1970 ஆம் ஆண்டில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சியில் அமர்ந்தது. இந்த முன்னணி ஒரு சமூகக் கூட்டணியாகவும், பலம் வாய்ந்த அரசியல் கூட்டணியாகவும் விளங்கியது.

1. சிங்கள முதலாளித்துவத்தின் இரண்டாம் படிநிலையைச் சேர்ந்த முதலாளி வர்க்கம்
2. நகரத் தொழிலாளர் வர்க்கம்
3. கிராமப்புற விவசாயக் குடியான் வர்க்கம்
4. இடைத்தரக சமூக வர்க்கங்கள்

என்பன இக்கூட்டணியில் இணைந்தன. இவை இனவாதத்தைத் தழுவித் தம் அரசியல் கொள்கைகளை வகுத்துக்கொண்டன.

## 1972 அரசியல் யாப்பு

ஒற்றையாட்சி முறையில் அமைந்த மத்தியப்படுத்தப்பட்ட அரசியல் கட்டமைப்பை 1972 அரசியல் யாப்பு புகுத்தியது. அரசு தாராண்மை மறுப்பு இயல்புடையதாகக் கட்டமைக்கப்பட்டது. 1972 அரசியல் யாப்பின் ஜனநாயக விரோத, தமிழர் விரோத அம்சங்களை ஜயதேவ உயன்கொட பின்வருமாறு பட்டியலிட்டுக் கூறுகிறார்:

1. தமிழ்ச் சிறுபான்மை இனத்திற்கு அதிகாரத்தைப் பகிர்ந்து அளிப்பதற்கான வழியாக அமைந்த பிரதேச சுயாட்சிக் கோரிக்கையை முற்றாகப் புறக்கணித்து, அரசின் ஒற்றையாட்சி இயல்பை மேலும் வலுப்படுத்தல்.
2. ஏற்கனவே மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மைப் பலம் கொண்டிருந்த கீழ் சபைக்குக் கட்டுப்பாடில்லா சட்ட ஆக்க அதிகாரத்தை வழங்கியதோடு, மேற் சபையான செனட் சபையையும் இல்லாது ஒழித்தல்.
3. சட்டசபையினதும் மந்திரிசபையினதும் அதிகாரங்களை எல்லை மீறாது வைத்திருக்கக்கூடிய ‘கட்டுப்படுத்தல்கள் மற்றும் சமநிலைகள்’ (Checks and Balances) என்னும் பொறிமுறையை நீக்குதல்.
4. சோல்பரி அரசியல் யாப்பின்படி நீதித்துறைக்கு இருந்த மட்டுப்படுத்தப்பட்ட நீதி மீளாய்வு அதிகாரத்தையும் இல்லாது ஒழித்தல்.
5. நிர்வாகத்துறையின் ஆணைக்குக் கீழ்ப்பட்டதாக நீதித்துறையைத் தரம் தாழ்த்தல்.
6. பொதுச் சேவையை மந்திரிசபையின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல்.
7. புதிய அரசியல் யாப்பு, அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கழிந்த பின் நடைமுறைக்கு வந்தது என்ற போலிக் காரணத்தைக் காட்டி, அரசாங்கத்திற்கு ஐந்து வருடங்கள் மட்டுமே பதவியில் இருக்கும் உரிமையை ஏழு ஆண்டுகளாக நீட்டித்தல்.

1972 அரசியல் யாப்பு சிங்களத் தேசியவாத அரசியல் யாப்பாக அமைந்தது. பின் காலனித்துவ கட்டத்தில் சிங்களத் தேசியவாதம் வகுத்துக் கொண்ட இறுதி

இலக்குகள் எவையோ, அவை அனைத்தையும் அடைவதற்கான வழியை 1972 அரசியல் யாப்பு அமைத்துக் கொடுத்தது.

## 1977 - 1993 காலம்

ஜே.ஆர். ஜெயவர்த்தன மற்றும் ஆர். பிரேமதாச ஆகியவர்களின் தலைமையில் 1977-1993 காலத்தில்,

அ) இனக்குழுமப் பெரும்பான்மைவாதம்

ஆ) தாராண்மை மறுப்பும் லிபரல் விரோத அரசியலும்

ஆகிய இரு பண்புகளும் அரசியலில் அழுத்தம் பெற்றன.

தாராண்மை மறுப்பு அல்லது தாராண்மை நீக்கம் என்பதன் விளைபொருள் தாராண்மையற்ற அரசு ஆகும். இதன் மறுபெயர் சர்வாதிகார அரசு எனலாம். இருப்பினும் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா ஆகிய நாடுகள் போன்று சர்வாதிகார முறைக்கு நேரடியாக மாறவில்லை. பாராளுமன்ற ஜனநாயக முறைமைகளை வைத்துக்கொண்டே சர்வாதிகாரம் இங்கே புகுந்துகொண்டது. சர்வாதிகாரமும் ஜனநாயகமும் பரஸ்பரம் இணக்கம் செய்து கொண்டு ஒருங்கே உறையும் நிலை காணப்பட்டது.

ஆசியாவின் பிற வல்லாதிக்க அரசுகள் பயணித்த பாதைக்கும் இலங்கையின் பின்காலனித்துவ அரசு சென்ற பாதைக்கும் உள்ள வித்தியாசங்களை நூலாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். ஹம்சா அலவி மூன்றாம் உலக நாடுகளின் பின்காலனித்துவ அரசுகள் பற்றிய விளக்கமொன்றை பாகிஸ்தான், பங்களாதேஷ் உதாரணங்களைக் கொண்டு 1970களில் முன்வைத்தார். அவர் முன்வைத்த 'மிகை வளர்ச்சியுள்ள அரசு' (*Overdeveloped State*) என்ற கருத்தாக்கத்தை நூலின் தொடக்கத்தில் குறிப்பிட்டு, இலங்கை நிலைமைக்கு அது பொருந்தவில்லை என உயன்கொட குறிப்பிடுகிறார். அரசியல் சிதைவு (*Political Decay*), நிறுவனச் சிதைவு (*Institutional Decay*) ஆகிய பிற ஆய்வாளர்களின் கருத்தாக்கங்கள் பற்றியும் உள்ளொளி மிக்க குறிப்புகளைத் தருகிறார்.

இக்கட்டுரை பேராசிரியர் என். சண்முகரத்தினம் அவர்களின் அறிவுத்துறைப் பணிகளைப் பாராட்டும் வகையில் வெளியிடப்பட்ட எழுபதாண்டு நிறைவு வெளியீடான '*The Political Economy of Environment and Development in a Globalised World*' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது. அக்கட்டுரையின் தழுவலாக இது அமைந்துள்ளது.

## உசாத்துணைப் பட்டியல்


1. Alavi, H. (1972) The State in PostColonial Societies: Pakistan and Bangladesh. New Left Review, No. 74, lulyAugust, 1972, 145-173.
2. Amarasinghe, Y. R. (1998) Revolutionary Idealism and Parliamentary Politics.... Struggle of Trotskyism in Sri Lanka. Colombo: Social Scientists' Association.
3. De Silva, C. R. (1989) Reflections on the Institutional form of the Sri Lanka State in Amaratunga, C. (ed.) Ideas for Constitutional Reform. Colombo: Council for Liberal Democracy, 327-343.
4. De Votta, N. (2000) 'Control Democracy, Institutional Decay, and the Quest for Eelam: Explaining Ethnic Conflict in Sri Lanka, Pacific Affairs, Vol. 73, No. 2 (Spring 2000), 55-76.
5. De Votta, N. (2004) Blowback, Linguistic Nationalism, Institutional Decay and Ethnic Conflict in Sri Lanka. Stanford: Stanford University Press.
6. Fernando, A. (2008) My Belly is White: Reminiscences of a Peacetime Secretary of Defence. Colombo: Vijitha Yapa Publishers.
7. Gosh, P. (2003) Ethnicity Versus Nationalism: The Devolution Discourse in Sri Lanka.New Delhi: SAGE Publications.
8. Gunasinghe, N. (1996) Land Reform, Class Structure and the State [in Sri Lanka] in Perera, S. (ed.), Newton Gunasinghe: Selected Essays. Colombo: Social Scientists' Association, 50-73.
9. Herring, R. I. (1983) Land to the Tiller, Political Economy of Agrarian Reform in South Asia. New Haven: Yale University Press.
10. Horowitz, D. L. (1980) Coup Theories and Officers' Motives: Sri Lanka in Comparative Perspective. Princeton, NJ): Princeton University Press.
11. Jupp, I. (1978) Sri Lanka: Third World Democracy. Colombo: KVG de Silva and Sons.
12. Kalecki, M. (1972) Social and Economic Aspects of Intermediate Regimes in Selected Essays in the Economic Growth of the Socialist and Mixed Economy. Cambridge:

Cambridge University Press.

13. Kearney, R. (1967) Communalism and Language in the Politics of Ceylon. Durham: Duke University Press.

14. Kothari, R. (1964) The Congress 'System' in India. Asian Survey, Vol. 4, No. 12, (December, 1964), 1161-1173.

15. Krishna, S. (1999) Postcolonial Insecurities: India, Sri Lanka and the Question of Nationhood. Minneapolis: University of Minnesota Press.

16. Loganathan, K. (1996) Sri Lanka, Lost Opportunities: Past Attempts at Resolving Ethnic Conflict. Colombo: University of Colombo.

17. Moore, M. (1985) The State and Peasant Politics in Sri Lanka. Cambridge: Cambridge University Press.

18. Moore, M. (1990) Economic Liberalization Vs. Political Pluralism in Sri Lanka. Modern Asian Studies, Vol. 24, NO. 2, (May 1990), 341-383.

19. 19. Moore, M. (1992) Retreat from Democracy in Sri Lanka. Journal of Commonwealth and Comparative Politics, No. 30, 70-84.

20. O'Donnel, G. (1973) Modernization and Bureaucratic Authoritarianism: Studies in South American Politics. Berkley: University of California Press.

21. O'Donnel, G. (1978) Reflections on the Pattern of Change in the BureaucraticAuthoritarian State. Latin American Research Review, Vol. 13, No. 1.

22. Hirschman, A. O. (1979) The Turn to Authoritarianism in Latin America and the Search for Economic Determinants in Collier, D. (ed.) New Authoritarianism in Latin America. Princeton: Princeton University Press.

23. Ponnambalam, S. (1981) Dependent Capitalism in Crisis: the Sri Lankan Economy 1948-1980. London: Zed Press.

24. Raj, K. N. (1973) The Politics and Economics of Intermedi ate Regimes. Economic and Political Weekly, Vol. 8, No. 27.

25. Roberts, M. (1978) Ethnic Conflict in Sri Lanka and Sinhalese Perspectives: Barriers to Accommodation. Modern Asian Studies, 12:3, 353-376.

26. Russel, I. (1971) Communal Politics under the Donoughmore Constitution, 1931-1947. Dehiwela: Tisara Publishers.

27. Shanugaratnam, N. (1980) Emerging Agrarian Trends and Some Reflections on the Agrarian Reforms in Sri Lanka. Social Science Review, NO. 2, January 1980, 56-111.

28. Shanugaratnam, N. (1985) Colonial Agrarian Changes and Underdevelopment in Abeysekera, C. (ed.) Capital and Peasant Production: Studies in the Continuity and Discontinuity of Agrarian Structures in Sri Lanka. Colombo: Social Scientists' Association, 120.

29. Shanugaratnam, N. (1993) The National Question and Obstacles to Peace in Sri Lanka: Some Reflections. Pravada, Vol. 2, No, 5, 411.

30. Shastri, A. (1983) The Political Economy of Intermediate Regimes: The Case of SriLanka, 1956-1970. South Asia Bulletin, Vol. 3, No. 2, (Fall 1983), 115.

31. Sobhan, R. and Ahmad, M. (1979) Public Enterprise in an Intermediate Regime: A Study in the Political Economy of Bangladesh. Dacca: Bangladesh Institute of Develop ment Studies.

32. Uyangoda, J. (1999) A State of Desire? Some reflections on the Unreformability of Sri Lanka's Postcolonial State in Hettige, S. and Meyer, M. (eds.) Sri Lanka at Cross roads. New Delhi: Macmillan, 92-118.

33. Uyangoda, J. (2011) Travails of State Reform in the Context of Protracted Civil War in Sri Lanka in Stokke, K. and Uyangoda, I. (eds.) Liberal Peace in Question: Politics of State and Market Reform in Sri Lanka. New York and London: Anthem Press, 35-62.

34. Wickramasingha, N. (1995) Ethnic Politics in Colonial Sri Lanka: 1927-1947. New Delhi: Vikas Publishing House.

35. Wilson, A. I. (1974) Politics in Sri Lanka. London: Macmillan.

36. Wilson, A. I. (1988) The Breakup ofSri Lanka: The SinhalaTamil Conflict. London: C. Hurst 8r Co.

37. Wriggins, II. (1960) Ceylon: Dilemmas of a New Nation. Princeton: Princeton University Press.

# நடேசய்யரின் Under Planter Raj The Standard Wage in Ceylon: தோட்டத் தொழிலாளர் ஊதிய உயர்வுக்கான அறிவுசார் தலையீடு

மலையகத் தமிழரின் சமூக, அரசியல் விடுதலைக்காகத் தன் வாழ்வின் பெரும்பாகத்தை அர்ப்பணித்த நடேசய்யர் குறித்த ஆய்வுகள் அவரது பங்களிப்பை அறிமுகப்படுத்தல், அவற்றை மதிப்பிடுதல் என்ற தளங்களில் முன்னோடி முயற்சிகளாக விளங்குகின்றன. இருந்தபோதிலும் அவை குறிப்பிட்ட சில மட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன. நடேசய்யரின் மூல ஆவணங்கள் பல கிடைக்கப்பெறாத காலத்தில், கிடைக்கப்பெற்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும், சில புதிய மூலங்களைக் கண்டறிந்தும் அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் அவற்றுள் நடேசய்யரின் மொத்தப் பங்களிப்புகளும், அவரின் கருத்தியல் தளத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்களும் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படாத நிலையே தொடர்கிறது. அந்தவகையில், ஏற்கனவே கிடைக்கப்பட்டுள்ள நூல்களையும் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள நூல்களையும் மதிப்பிடுவதன் மூலம் நடேசய்யரின் பங்களிப்புகளையும், அவர் காலத்து சமூக, அரசியல் அசைவையும் கண்டுகொள்ளவும் நடேசய்யர் பற்றிய ஆய்வுகளில் நிலவும் இடைவெளியை நிரப்பவும் எதிர்கால ஆய்வுகளுக்கான திசைகாட்டல்களை வழங்கவும் 'கணக்குப் பதிவு நூல் முதல் கதிர்காமம் வரை' எனும் இத் தொடர் எழுதப்படுகிறது.




## எம். எம். ஜெயசீலன்

எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.

1

செ ன்ற நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திலேயே தோட்டத் தொழிலாளரின் ஊதியப் பிரச்சினை முதன்முதல் பரந்தளவிலான கவனத்துக்கு உள்ளாகியுள்ளது. அக்காலத்தில்தான் சேர்.பொன். அருணாசலம் தோட்டத் தொழிலாளருக்கு நியாயமான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்; கருமுத்து தியாகராஜச் செட்டியார் தோட்டத் தொழிலாளரின் பிற்படுத்தப்பட்ட வாழ்க்கை நிலைமையை விரிவான சான்றுகளுடன் விவரித்து, அவர்களின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டிய தேவையை வலுவாக எடுத்துரைத்தார். இதன் தொடர்ச்சியில், இந்திய அரசு தோட்டத் தொழிலாளர் வாழ்வை மேம்படுத்தும் நோக்கில் சட்ட ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன் இலங்கை அரசாங்கத்துக்கும் அழுத்தம் கொடுத்தது. அந்நெருக்கடிக்கு உள்ளான இலங்கை அரசாங்கம் துண்டுமுறை, தண்டனை விதிகள் முதலானவற்றைச் சட்டப்படி நீக்கியதுடன் போதுமான ஊதியத்தை நிர்ணயிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது. தோட்டத்துரைமார் சங்கமும் அந்நடைமுறைகளை நிராகரிக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது.

தோட்டத் தொழிலாளர் ஊதியத்தை நிர்ணயிப்பதற்கான குழுக்கள் அமைக்கப்பட்டு, அறிக்கைகள் உருவாக்கப்பட்டன. அவை தொடர்பான திறந்த உரையாடல்கள் உயர் மட்டங்களில் இடம்பெற்றன. அத்தகைய செயற்பாடுகள் இடம்பெற்றுவந்த காலத்திலேயே நடேசய்யர் இலங்கையின் சமூக அரசியல் களத்தில் உள்நுழைகிறார். ஒரு பத்திரிகையாளர் என்ற தளத்திலும் அரசியல்வாதி என்ற வகையிலும் தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கை நிலைமை, அவர்களுக்கான ஊதிய உயர்வு முதலானவை தொடர்பில் மிகுந்த அக்கறைகாட்டியுள்ள அவர், ஊதிய நிர்ணயம் தொடர்பிலான குழுக்களின் அறிக்கைகளை விமர்சனபூர்வமாக ஆராய்ந்து, அவற்றின் போதாமைகளை எடுத்துக்காட்டியுள்ளார். தோட்டத் தொழிலாளருக்கான ஊதிய நிர்ணயம் அதிகார சக்திகளால் வடிவமைக்கப்படுவதையும் அந்நிர்ணயத்தில் தோட்டத் தொழிலாளரின் உண்மையான வாழ்க்கை நிலைமை கருத்தில் கொள்ளப்படாததையும் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ள அவர், முன்மொழியப்பட்டுள்ள ஊதிய அளவுகள், தோட்டத் தொழிலாளரின் வாழ்வை மேம்படுத்துவதற்குப் போதுமானதாக அமையாமையை விரிவான சான்றுகளுடன் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஊதிய நிர்ணயக் குழுக்கள் தோட்டத்துரைமாரைச் சார்ந்து ஒருதலைப்பட்சமாக இயங்குவதாகக் குற்றம்சாட்டிய நடேசய்யர், இந்திய அரசினதும் அரசியல் தலைவர்களினதும் தலையீட்டின் மூலமே தொழிலாளருக்கு நியாயமான ஊதியத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதை வெவ்வேறு தளத்தில் வலியுறுத்தி வந்துள்ளார். அதன் ஒரு வெளிப்பாடாகவே, 'தோட்டத்துரைமார் ராஜ்ஜியத்தின் கீழ்: இலங்கையில் தரப்படுத்தப்பட்ட ஊதியம்' (Under Planter Raj - The Standard Wage in Ceylon) என்ற துண்டுப்பிரசுரம் அமைந்துள்ளது. அத்துண்டுப்பிரசுரத்தின் முக்கியத்துவம் குறித்த கருத்துகளைக் குமாரி ஜயவர்த்தன, ரஷேல் குரியன் ஆகியோர் வெளிப்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக, பின்வரும் குறிப்புகளைச் சுட்டிக்காட்டலாம்:

"தரப்படுத்தப்பட்ட ஊதியம் குறித்த குழுவின் அறிக்கை பற்றிய கடுமையான விமர்சனமாகத் 'தோட்டத்துரைமார் இராச்சியத்தின்கீழ்: இலங்கையில் தரப்படுத்தப்பட்ட ஊதியம்' என்ற துண்டுப்பிரசுரம் அமைந்தது. தரப்படுத்தப்பட்ட ஊதிய நிர்ணயம் பாரபட்சமானது, அந்த ஊதிய அளவு தொழிலாளருக்குப் போதுமானது இல்லை என்று நடேசய்யர் குறிப்பிட்டார். மறுக்கமுடியாத உண்மைகளையும் புள்ளிவிபரங்களையும் கொண்டு அவ்வறிக்கையின் ஒருபக்கச் சார்பை அவர் வெளிப்படுத்தினார். அத்துடன் முன்மொழியப்பட்டுள்ள தரப்படுத்தப்பட்ட ஊதியம் தொழிலாளரின் மிகக்குறைந்த வாழ்வாதார மட்டத்துக்கும் கீழாக இருக்கிறது என்பதை அவர் தெளிவாக எடுத்துக்காட்டினார். அக்குழுவில் உள்ளடங்கியிருந்த நால்வர் தோட்டத்துரைமார்கள் என்பதால், அந்நிர்ணயத்தால் பாதிக்கப்படுகின்ற ஆறரை இலட்ச இந்தியத் தொழிலாளர்களின் நலனைச் சிறிதளவும் கருத்தில் கொள்ளாது, திட்டமிட்டுத் திரித்து உருவாக்கப்பட்ட அறிக்கையாக அது மாறிவிட்டது எனக் கூறியதுடன் அக்குழு, குரலற்ற இந்தியத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க எந்த முயற்சியும் செய்யவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்" (Kumari Jayawardena & Rachel Kurian, Class, Patriarchy and Ethnicity on Sri Lankan Plantations, 2015: 104,105).

2

தோட்டத்துரைமார் ராஜ்ஜியத்தின் கீழ் என்ற துண்டுப்பிரசுரம் 1925 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. வெளியீடு பற்றிய குறிப்புகள் இடம்பெறவில்லை. ஆனால், பிரசுரத்தின் இறுதிப் பகுதியில் வெளியீட்டாளர் குறிப்பு என்ற தலைப்பில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

“காலனித்துவ நாடுகளில் பெருந்தொகையான இந்தியக் கூலித் தொழிலாளர்களின் நிலை மிக மோசமானதாக உள்ளது. அதிலும் இலங்கையில் மிகவும் மோசமான நிலையிலுள்ளது. அங்கு ஆறரை இலட்சம் தொழிலாளர்கள், தேயிலைத் தோட்டங்களிலும் இறப்பர் தோட்டங்களிலும் போதுமான வாழ்வாதாரமற்று மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். தற்போது இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள தரப்படுத்தப்பட்ட கூலி என்ற திட்டமானது, ஒரு குழுவின் அறிக்கையின் கீழ் அத்தொழிலாளர்களின் வருமானத்தை ஒடுக்க முயற்சி செய்கிறது. இது ஒரு தீய நடைமுறையாகும். அதனால் இதனை எல்லாவகையிலும் எதிர்க்க வேண்டும். இலங்கையில் தொழிலாளர்களின் நிலைமையை விரிவாக ஆராய்ந்துள்ள திரு. நடேசய்யர், இத்துண்டுப்பிரசுரத்தில் அந்தக் குழுவினுடைய அறிக்கையின் ஒருதலைப்பட்ச தன்மையை வெளிப்படுத்தியுள்ளதுடன் மறுக்கமுடியாத உண்மைகளையும் புள்ளிவிவரங்களையும் கொண்டு, முன்மொழியப்பட்டுள்ள நிலையான கூலி எவ்வாறு குறைந்தபட்ச வாழ்வாதாரத் தேவைகளைவிடக் கீழாக உள்ளது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். குடியேறியுள்ள தொழிலாளர்கள் தொடர்பில் நீதியான அணுகுமுறையை முன்னெடுக்கும்படி காலனித்துவ அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் திட்டமிட்ட வழிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கு இந்தியத் தலைவர்கள், அத்தொழிலாளர் பிரச்சினையை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டுமென்ற உருக்கமான வேண்டுகோளை அவர் முன்வைத்துள்ளார். இறுதி முயற்சியாக, குடியேற்றத்தைக்கூட நிறுத்த வேண்டிய நிலை ஏற்படலாம். ஆனால், தோட்டத்துரைமார் ஆட்சியின் இரக்கமற்ற சுரண்டலிலிருந்து தன் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு இந்தியா எந்தவொரு தயக்கத்தையும் காட்டக்கூடாது.”

இக்குறிப்புகள், அத்துண்டுப்பிரசுரத்தின் அடிப்படை நோக்கையும் முக்கியத்துவத்தையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தியுள்ளன. 23 பக்கங்களில் அமைந்துள்ள அத்துண்டுப்பிரசுரம், அறிமுகப்பகுதி நீங்கலாக அறிக்கையின் தோற்றம், ஜனநாயகத் தன்மை வெளிப்பாடு, இலங்கை அரசின் பதற்றம், சட்டம் இல்லை ஆனால் நிர்வாக ஆணை, முக்கிய அம்சங்கள், தொழிலாளர்களின் உண்மையான வருமானம், நாட்பெயரும் பகுதி வேலைக்கான சம்பள அளவுகளும், வேலைத்திறன் விகிதம், நிலையான கூலி என்பதன் அர்த்தம், ஊக்கத் தொகைகளின் இடைநிறுத்தம், தோட்டங்களின் பிரிவுகள், நிலையான ஊதியத்தின் கணக்கீடு, நாட்பெயருக்கான வேலை, அரிசி வழங்கல், நிலையான வரவு செலவுத் திட்டங்கள் முதலான உபதலைப்புகளைக் கொண்டுள்ளது.

*3*

உத்தியோகபூர்வமாக அறிக்கை வெளியிடப்பட முன்னரே நடேசய்யர் அவ்வறிக்கை மீதான தன் விமர்சனங்களை முன்வைத்துள்ளார். அதனைத் துண்டுப்பிரசுரத்தின் தொடக்கத்திலே, “இந்த அறிக்கை, அறிக்கையைத் தயாரித்த மூன்று அதிகாரிகளின் முழுமையான அறிக்கையோ அதனை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையோ இல்லை. இந்தியக் குடியேற்றத் தொழிலாளர் குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவின் கூட்ட முடிவுக் குறிப்புகளிலிருந்து சில பகுதிகளைச் சேர்த்து, இந்தியத் தொழிலாளர் கட்டுப்பாட்டாளருக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையே பரிமாறப்பட்ட கடிதத் தொடர்புகளையே அது கொண்டுள்ளது” எனக் குறிப்பிட்டுள்ளார். இருந்தபோதிலும், அதுவே தோட்டத்துரைமார் சங்கம் முதலானவற்றின் கருத்துகளுக்கு அனுப்பப்பட்ட வடிவமாகவும் இருந்துள்ளது. அதனால், அவ்வறிக்கை தொடர்பான விரிவான விமர்சனத்தை நடேசய்யர் முன்வைத்துள்ளார். தோட்டத் தொழிலாளரின் ஊதிய உயர்வில் அவர் கொண்டிருந்த அக்கறைக்கு ஒரு சான்றாக அம்முயற்சியைக் கொள்ளலாம்.

தரப்படுத்தப்பட்ட ஊதிய நிர்ணயத்துக்கான பின்புலத்தையும் அறிக்கை ஆக்கச் செயற்பாடு இடம்பெற்ற முறைமையையும் சுருக்கமாகத் தெளிவுபடுத்தியுள்ள நடேசய்யர், அந்நடைமுறையில் தொழிலாளருக்கு இழைக்கப்பட்ட பாரபட்சத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் தரும் தகவல்களிலிருந்து அந்த அறிக்கையின் உருவாக்கப் படிமுறையைப் பின்வருமாறு தொகுத்துக்கொள்ளலாம்:

1. இந்திய அரசு முன்னெடுத்த செயற்பாடுகளால் இலங்கை அரசாங்கம் தோட்டத் தொழிலாளர் ஊதியத்தைத் தரப்படுத்தும் முயற்சியை முன்னெடுத்துள்ளது. முதலில் பேட்மென் என்பவரைக் கொண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2. பேட்மெனின் அறிக்கை கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளான பின்னர் இந்திய அரசாங்கம் தொழிலாளரின் ஊதியம் தொடர்பில் கூட்டு ஆணையம் அமைக்க விரும்பியுள்ளது.

3. கூட்டு ஆணையத்தை விரும்பாத இலங்கை அரசாங்கம் புள்ளிவிவர இயக்குநர், இந்திய அரசாங்க முகவர், வெயிட் ஆகியோர் இணைந்து ஒரு விசாரணை மேற்கொள்ளலாம் என்ற யோசனையை முன்வைத்துள்ளது.

4. இந்திய அரசின் முகவராக விளங்கிய திரு.

ரங்கநாதன் தானாகவே தோட்டங்களில் தகவல்களைத் திரட்ட முயன்றமைக்குத் தோட்டத்துரைமார் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அதன்போது இலங்கை அரசாங்கம் புள்ளிவிவர இயக்குநர், இந்தியக் குடியேற்றத் தொழிலாளர் கட்டுப்படுத்துநர் ஆகியோர் மூலமாகத் தேவையான தகவல்களை ரங்கநாதன் பெற்றுக்கொள்ளலாம் என அறிவுறுத்தியுள்ளது. இதன் விளைவாக, இலங்கை மற்றும் இந்திய அதிகாரிகள் இணைந்த கூட்டு விசாரணை நடைபெற வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

5. அறிக்கையைத் தயாரித்த மூவருடன் இன்னும் நால்வரை உள்ளடக்கிய குழுவினால் அறிக்கை மதிப்பிடப்பட்டு, இறுதி வடிவத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று விவரிப்பிலிருந்து, "இந்தியாவிலிருந்து ஒரு ஆணையம் மூலம் விசாரணை நடத்தப்படுவதில் இலங்கை அரசாங்கம் தயக்கம் காட்டியதையும் ஒரு சுயாதீனமான இந்திய அதிகாரி மூலம் விசாரணை நடத்தப்படுவதில் தோட்டத்துரைமார் சங்கத்தினர் தயக்கம் காட்டியதையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது" என்ற முடிவுக்கு வந்துள்ள நடேசய்யர், இரண்டு இலங்கையர்களும் ஓர் இந்திய அதிகாரியும் இணைந்து தயாரித்துள்ள இந்த அறிக்கை, தோட்டத்தொழிலாளர் சார்பான பிரதிநிதிகளற்று, தொழிலாளர் சாட்சியங்களில் கவனம் செலுத்தாது, பாகுபாடான தரவுத் தேர்வின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாரபட்சமான ஆவணம் என அடையாளப்படுத்தி உள்ளார்.

தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனநாயகத் தன்மைகொண்டது என்ற தோற்றத்தை ஏற்படுத்தும் முகமாக, இந்தியக் குடியேற்றத் தொழிலாளர் மன்றத்தின் மூலமாகக் குழுவொன்றைத் தாபித்து, அறிக்கையை ஆராய்ந்த போதிலும் அது ஜனநாயகத் தன்மையுடையதாக அமையவில்லை என்பதை, "அந்தக் குழுவில், அறிக்கையைத் தயாரித்த மூன்று அதிகாரிகளும் அனுபவமிக்க நான்கு தோட்டத்துரைமார்களும் இடம்பெற்றனர். அவர்களின் பணி அறிக்கையை ஆய்வு செய்வதாக இருந்தது. ஆனால், அந்தக் குழு இலங்கை முழுவதும் சுற்றிப் பார்த்து இந்தப் பிரச்சினையை ஆய்வு செய்யவில்லை; சாட்சிகளை அழைக்கவில்லை; தோட்ட உடைமையாளருக்கு இணையாக - அல்லது அதைவிடவும் அதிகமாக - இதில் ஆர்வம் கொண்டிருந்த இந்தியச் சமூகத்தினருடன் எந்தவித ஆலோசனையும் மேற்கொள்ளவில்லை" என அம்பலப்படுத்தியுள்ளார், நடேசய்யர். இந்திய அரசின் அழுத்தத்தினால் இலங்கை அரசாங்கம் தோட்டத் தொழிலாளரின் ஊதிய நிர்ணயம் தொடர்பான அறிக்கையைத் தயாரித்திருந்தாலும் இந்திய அரசு, தோட்டத் தொழிலாளர் சமூகம் ஆகியன குறித்த அக்கறை, இலங்கை அரசாங்கத்தாருக்கு இருக்கவில்லை எனக்கூறும் நடேசய்யர், அறிக்கையை இந்திய அரசுக்குச் சமர்ப்பிப்பதற்கு முன், தோட்டத்துரைமாருக்குக் கையளித்து அவர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கே இலங்கை அரசாங்கம் முயன்றதாகக் குற்றம்சாட்டியுள்ளார். அதேவேளை, அறிக்கைமீதான விவாதத்தின்போது குழுவின் தலைவரான டர்னர், "இந்திய அரசாங்கத்தின் உத்தரவுகளுக்கு உட்பட மறுப்பது, இந்தியாவிலிருந்து ஓர் ஆணையத்தைக் கோருவது, முன்வைக்கப்பட்ட அறிக்கையை ஏற்றுக்கொள்வது என்ற மூன்று வழிமுறைகள் தற்போது உள்ளன. அவற்றுள் முதலாவது ஆபத்தானது, இரண்டாவது பாதகமானது. நடைமுறையில் சாத்தியமான ஒரே வழி இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்வது" எனக் கூறியதைச் சுட்டிக்காட்டி, இலங்கை அரசாங்கத்தாரின் பதற்றத்தை அது வெளிப்படுத்தி நிற்குமாற்றை எடுத்துக்காட்டியுள்ளார்.

அறிக்கையானது தரப்படுத்தப்பட்ட ஊதியத்தைச் சட்டத்தினால் அல்லாமல் நிர்வாக உத்தரவு மூலம் நிர்ணயிப்பதை முன்மொழிந்துள்ளதுடன் அதற்கு மலேசியாவில் பின்பற்றப்படும் மாதிரியைப் பரிந்துரைத்துள்ளது. அதன் பொருத்தமின்மையை எடுத்துக்காட்டியுள்ள நடேசய்யர், மலேசியாவில் அந்நடைமுறை எளிதில் மீறப்படுவதையும் இலங்கையின் சூழலுக்கு ஏற்றதான நடைமுறையைப் பின்பற்ற வேண்டிய தேவையையும் வலியுறுத்தியுள்ளதுடன் கடந்தகால அனுபவங்கள் நிர்வாக ஆணைமீது தொழிலாளர்கள் நம்பிக்கை வைக்க முடியாதவையாக உள்ளமையையும் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார். அதற்கு இந்த அறிக்கையின் பக்கச்சார்பே சிறந்த சான்றெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்கூலி, துண்டு வேலை (பகுதி) ஆகியவற்றின் ஊதிய விகிதங்கள், ஆண் - பெண் ஊதிய அளவுகள் குறித்து அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருத்துகளின் பலவீனமும் துண்டுப்பிரசுரத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் முகவரான திரு. ரங்கநாதன், "தொழிலாளர்களுள் 60 சதவீதமானவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவைவிட அதிக ஊதியம் பெறுகிறார்கள். ஏனையவர்களும் தொடர்ந்தும் பணிக்கு வருவார்களாக இருந்தால் அவர்களும் அத்தகைய உயர்ந்த வருவாயைப் பெறுவார்கள்" எனக்கூறிய கருத்து, உண்மைநிலையின் பிரதிபலிப்பல்ல என்பதை,

“திரு. ரங்கநாதன் கூறுவதுபோல வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவைவிட அதிக ஊதியம் பெறும் தொழிலாளர்கள் இருப்பது உண்மைதான். ஆனால், அவர் குறிப்பிடும் 60 சதவீதமானவர்கள் அத்தகைய வருவாயைப் பெறுவதில்லை. தொழிலாளர் படையில், தலைமைக் கங்காணிகள் மற்றும் சில்லறைக் கங்காணிகள் சேர்த்து சுமார் 11 சதவீதம் உள்ளனர். தொழிற்சாலைத் தொழிலாளர்கள் சுமார் 6 சதவீதம். முழுநேரப் பங்களா வேலை அல்லது அரைநேரப் பங்களா வேலை செய்து மேலதிக வருமானம் பெறும் தொழிலாளர்கள் 01 முதல் 02 சதவீதம் வரை உள்ளனர். கவ்வாத்து வெட்டுதல் போன்ற பணிகளைச் செய்வதன் மூலம் ‘சராசரி’யை விட அதிகமாகப் பெறக்கூடியவர்கள் சுமார் 5 சதவீதம் இருக்கலாம். கொழுந்தெடுப்பவர்கள், இறப்பர் பால் சேகரிப்பவர்கள் ஆகியோரில் சுமார் 15 சதவீதத்தினர் மட்டுமே வரவுசெலவுத் திட்டத்தை மீறிச் சம்பாதிக்க முடியும். பெரும்பான்மையினர் வறுமையிலேயே உள்ளனர். இந்தியத் தொழிலாளர் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடனேயே இலங்கைக்கு வருகிறார்கள். அதற்கான எந்த வாய்ப்பையும் அவர்கள் தவறவிடப்போவதில்லை. வேலைக்கு வராமல் இருக்கிறார்கள் என்றால் வேலை செய்வதை விரும்பாததால் அல்ல. வேலை செய்ய இயலாத சூழ்நிலைதான் அதற்குக் காரணம்” என விரிவாக விளக்கிக் காட்டியுள்ளார், நடேசய்யர்.

அறிக்கையில் நாட்கூலி மட்டுமே தரப்படுத்தப்பட்டுள்ளது. துண்டு வேலைக்கான ஊதிய விகிதங்களில் எந்த மாற்றமும் தேவையில்லை என அறிக்கையிட்ட குழுவினர் குறிப்பிட்டுள்ளனர். துண்டு வேலைக்கான ஊதியம் நிர்ணயிக்கப்படாமல் விடுவதால் ஏற்படுகின்ற அபாயங்களை நடேசய்யர் எடுத்துக்காட்டியுள்ளார். ஒவ்வொரு தோட்டமும் தாம் நாட்கூலி முறையை விட்டுவிட்டு துண்டு வேலை முறையை ஏற்றுக்கொண்டதாக அறிவிக்கக்கூடும் என்றும், தற்போது வழங்கப்படுகின்ற துண்டு வேலைக்கான ஊதிய விகிதங்கள் தொழிலாளரின் சராசரி வாழ்வாதாரத்துக்குப் போதுமானதாக இல்லை என்றும் குறிப்பிட்டு, துண்டு வேலைக்கான ஊதிய விகிதங்களை நிர்ணயிக்காமல் மேற்கொள்ளப்படும் எந்தச் சட்ட நடவடிக்கையும் பயனற்றதாகவே இருக்கும் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.

தொழிலாளருக்கான ஊதிய வழங்கல் நடைமுறையில் உள்ள சிக்கல்களையும் இத்துண்டுப்பிரசுரத்தில் நடேசய்யர் விவரித்துள்ளார். தொழிலாளர்கள் தமக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதிய அளவைப் பெறமுடியாத வகையில் செக்ரோல் பதிவுகள் இடம்பெறுவதையும், ஊதியமானது அது கிடைக்க வேண்டிய நாளிலிருந்து 50 நாட்கள் கழித்து வழங்கப்படும் சூழல் நிலவுவதையும், அதனால் தொழிலாளர்கள் தமக்கு எந்த விகிதத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது என்பதை அறியாது இருப்பதையும் குறிப்பிட்டு, வாரந்தோறும் ஊதியத்தை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளார். செக்ரோல் நடைமுறையில் பின்பற்றப்படும் அநீதிகளை அவதானித்த நடேசய்யர், பின்நாளில் தொழிலாளர்களுக்கான மாதிரி செக்ரோல்களை வழங்கி, அவர்களையும் பதிவுகளை மேற்கொள்ள வழிவகை செய்தார் என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

தொழிலாளருக்கு வழங்கப்படும் அரிசியின் அளவைக் கொண்டு அவர்களின் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்படும் அபத்தத்தை எடுத்துக்காட்டியுள்ள நடேசய்யர், ஆண்களுக்கு அதிக பொறுப்பை வழங்கும் வகையில் ஊதிய மட்டம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும், குழந்தைகளுக்கு அதிக பொறுப்பைச் சுமத்துவதாக ஊதிய நிர்ணயம் அமையக்கூடாது, அது அவர்களின் கல்வி வாய்ப்பைக் குறைக்கிறது என்றும் குறிப்பிட்டு, ஊதிய நிர்ணயத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ள விகிதங்களில் மாற்றங்களை ஏற்படுத்துமாறு குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கை தரப்படுத்தப்பட்ட ஊதியம் எனப் பொருள் கொண்டுள்ளமையே போதாமை நிறைந்தது என்பது நடேசய்யரின் வாதமாக அமைந்துள்ளது. “16 வயதுக்கு மேற்பட்ட ஓர் ஆண் தொழிலாளி அல்லது 15 வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண் தொழிலாளி தினந்தோறும் செய்யும் வேலைக்கு அல்லது சமமான பணிக்கு (Equivalent Task) உரிய விகிதத்தையும், ஒரு தொழிலாளி குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நாட்கள் வேலை செய்தால், அத்தொழிலாளி ஒரு நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கைத் தரத்தில் தன்னைத் தானே பேணிக் கொள்ளத்தக்க அளவிலான ஊதியத்தைப் பெறுதலையும்” தரப்படுத்தப்பட்ட ஊதியம் என அறிக்கை பொருள் கொண்டுள்ளது. அந்தத் தரப்படுத்தப்பட்ட ஊதியத்தைப் பெறுவதற்கு ஆணும் பெண்ணும் 24 நாட்களும், குழந்தைகள் 20 நாட்களும் வேலை செய்ய வேண்டும் என அறிக்கை வரையறுத்துள்ளது. இந்நிர்ணயங்களின் பொருத்தமின்மைகளைச் சுட்டிக்காட்டியுள்ள நடேசய்யர், ஊதியமானது வாழ்க்கைச் செலவுகள், தொழிலாளர் சக்தி, உற்பத்திச் செலவுகள் போன்றவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும், ஊதிய நிர்ணயத்தில் குறைந்தபட்ச வாழ்வை மட்டுமே கருத்தில் கொள்ளக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளதுடன், அறிக்கையிட்ட குழுவினர் வாழ்வாதாரத் தரம், திருமணம், குழந்தை பிறப்பு, பிற

செலவுகள் முதலானவற்றைக் கவனத்தில் கொள்ளாது, தொழிலாளர்கள் தற்போது வாழும் நிலைமை ஒரு தரமானநிலை எனக்கொண்டு, அதில் வாழ வேண்டிய அளவு சம்பாதிக்கப் போதுமான ஊதியத்தை வழங்கவேண்டும் எனக் கொண்டுள்ளனர் என்று, தரப்படுத்தப்பட்ட ஊதிய நிர்ணயத்தின் அடித்தளமே குறைபாடுடையது என நிறுவியுள்ளார். அத்துடன் வேலைநாட்கள் வரையறையின் நடைமுறைச் சிக்கல்களை விளக்கியுரைத்துள்ள அவர், அவ்வேலை நாட்களின் விகிதம் ஆணுக்கு 23, பெண்ணுக்கு 21, குழந்தைகளுக்கு 20 என அமைவது பொருத்தம் என வரையறுத்துள்ளார்.

தரப்படுத்தப்பட்ட ஊதியம் வழங்குமிடத்து தற்போது வழங்கப்படும் மேலதிகக் கொடுப்பனவு போன்ற கூடுதல் சலுகைகளை வழங்க வேண்டிய கட்டாயம் இல்லை என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமையைச் சாடியுள்ள நடேசய்யர், ஊதியத்துடன் மேலதிகக் கொடுப்பனவு, இலவசச் சலுகைகள் முதலானவை வழங்கப்பட்டு வரும் நிலையிலும் தொழிலாளர்கள் வெறும் உயிர்வாழ்வதற்கே கங்காணிகளிடமும் சிறுகடை உரிமையாளர்களிடமும் கடன் வாங்கவேண்டிய நிலையில் உள்ளமையையும், தரப்படுத்தப்பட்ட ஊதியமும் போதுமானதாக இல்லாமையையும் சுட்டிக்காட்டி, தொழிலாளரின் ஊதியத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

தரப்படுத்தப்பட்ட ஊதியம் குறித்த குழு அறிக்கையில் தோட்டங்கள் உயர்நிலத் தோட்டங்கள், இடைநிலத் தோட்டங்கள், தாழ்நிலத் தோட்டங்கள் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் வெவ்வேறு ஊதிய விகிதம் முன்மொழியப்பட்டுள்ளன. இந்த வகைப்பாடும் ஊதிய வேறுபாடுகளும் அவசியமில்லை என நிராகரித்துள்ள நடேசய்யர், "ஒரே ஒரு பொதுவான ஊதிய விகிதம் (Common Rate) முன்மொழியப்பட வேண்டும். இந்தியக்கரையை விட்டுப் புறப்படும் தொழிலாளர், தனக்கு ஒரு நிரந்தர ஊதிய விகிதம் உறுதி செய்யப்பட்டிருப்பதை நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும். வாழ்க்கைச் செலவு அதிகமாகவோ வசதிகள் குறைவாகவோ உள்ள இடங்களில், முதலாளியிடமிருந்து அதிக ஊதியம் கோருவதற்கான உரிமையும் அவனுக்குக் கொடுக்கப்பட வேண்டும்" எனத் தொழிலாளரின் உரிமையையும் சுதந்திரத்தையும் பேணும் வகையில் ஊதிய நடைமுறை அமைய வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையானது தொழிலாளர்களின் வரவு செலவுத் திட்டத்தையும் மூன்று தோட்டப் பிரிவுகளுக்கும் தனித்தனியே தயாரித்துள்ளது. அவ்வரவு செலவுத் திட்ட வரைபு, குறைபாடுடையது என்பது



Image Source - basilurtea.com

நடேசய்யரின் கருத்தாகும். அத்திட்டத்தில் பொருட்களின் கொள்வனவு அளவுகள் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையையும் அடிப்படையாகத் தேவைப்படும் பொருட்கள் சில விடுபட்டுள்ளமையையும் எடுத்துக்காட்டி, அவ்வரவு செலவுத் திட்டங்கள் வெறுமனே உயிர்வாழ்வதை மட்டும் கருத்தில்கொண்டு மிகக் குறைந்த வாழ்க்கைத் தரத்தை அடிப்படைச் சட்டகமாக வரித்துள்ளமையைக் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ள நடேசய்யர், அத்தவறான அணுகல் தொழிலாளருக்குரிய நியாயமான தரப்படுத்தப்பட்ட ஊதிய நிர்ணயத்தில் எதிர்நிலையான தாக்கம் செலுத்தியுள்ளமையைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

"தொழிலாளர்கள் இலங்கைக்கு வருவது வறுமையில் காலம் கழிக்கவோ மிகக் குறைந்த தரத்தில் வாழ்க்கை மட்டும் நடத்தவோ அல்ல. அவர்களுக்குப் பின்னால் நம்பிக்கையுடன் சாய்ந்து நிற்க ஏதாவது இருக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய உறவினர்களுக்கே சுமையாக மாறக்கூடாது. ஆரோக்கியமான நிலையில் கொண்டுவரப்பட்ட தொழிலாளர்கள், குறைந்த ஊதியத்தில் வேலை வாங்கப்பட்டு, உடல்நலம் குன்றியபின் தெருக்களில் பிச்சையெடுக்க வைக்கப்படுகிறார்கள். சில சமயங்களில் இந்தியாவிற்கு மீண்டும் அனுப்பப்படுகிறார்கள்" என நடைமுறை யதார்த்தத்தை அம்பலப்படுத்தியுள்ள நடேசய்யர், தொழிலாளர்கள் சேமிக்கக்கூடிய அளவு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பதை அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார். ஆண் ஒருவர் இரண்டு ரூபாயும் பெண் ஒருவர் இரண்டு ரூபாயும் குழந்தைத் தொழிலாளி ஒரு ரூபாயும் என ஒரு குடும்பம் மாதமொன்றுக்கு ஐந்து ரூபாய் சேமிக்கும் நிலையில் இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், "கணவன், மனைவி மற்றும் வேலைக்குச் செல்லும் குழந்தையைக் கொண்ட குடும்பமொன்றுக்கு மாதம் ஐந்து ரூபாய் சேமிப்பென்பது பேராசையான கணக்கல்ல" என உணர்ச்சிபூர்வமாகப் பதிவு செய்துள்ளார்.

இந்திய நிலைமையையும் இலங்கை நிலைமையையும் தொழிலாளருக்கு வழங்கப்படும் கூலி, உணவுப் பழக்கவழக்கம், ஆடை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒப்பிட்டுள்ள நடேசய்யர், இந்தியாவில் குறைந்த வருமானத்திலே சராசரியான நல்வாழ்வை வாழக்கூடியதாக இருப்பதையும் இலங்கையில் அவ்வாழ்வுக்கு அதிகமான ஊதியம் தேவையாக இருப்பதையும் சான்றுகளுடன் எடுத்துக்காட்டி, “ஒரு தொழிலாளரின் உடை மற்றும் பிற வசதிகளை, இந்தியாவில் என்ன இருந்தது என்பதைக் கருதி மதிப்பீடு செய்யவேண்டாம். உள்ளூர் சூழலுக்கு ஏற்ப, போதுமான தரத்துடன் வாழக்கூடிய நிலைமையை அவருக்கு வழங்க வேண்டும். இல்லையெனில், அது தேசிய அளவில் தீங்கு விளைவிக்கும்” என்ற ஆழமான மதிப்பீட்டை முன்வைத்துள்ளார். அத்துடன் தொழிலாளரின் கீழான வாழ்க்கைத் தரத்தினால், சிங்களவர்கள் அவர்களைப் ‘பற தெமலா’ என இழிவுபடுத்துகின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். சிங்களவரின் தமிழர் மீதான வெறுப்பின் ஒரு குறியீடாக விளங்கும் அவ்வடையாளப்படுத்தல், மிக நீண்ட வரலாறு கொண்டது என்பதை அப்பதிவிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது.

அறிக்கையின் பலவீனங்களைத் தர்க்கபூர்வமாக விவரித்துள்ள நடேசய்யர், அவ்வறிக்கையால் விளைந்த இரு நன்மைகளையும் தனித்து விளக்கியுள்ளார். அவர் குறிப்பிடும் நன்மைகளைப் பின்வருமாறு தொகுத்துக்கொள்ளலாம்:

1. இந்த அறிக்கைக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட பேட்மென் அறிக்கை, மார்க்கஸ் பெர்ணான்டோ அறிக்கை ஆகியவற்றை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளதன் மூலம், அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தோட்டத் தொழிலாளர்கள் சேமிக்கும் அளவுக்கு ஊதியம் பெறுகிறார்கள் என்ற கருத்து நிராகரிக்கப்பட்டுள்ளமையும் தொழிலாளர்களின் ஊதிய அளவு போதுமானதல்ல என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளமையும். (பேட்மென் 10 - 12 ரூபாயும், மார்க்கஸ் பெர்ணான்டோ 24 ரூபாயும் தோட்டத்தொழிலாளி ஒருவர் வருடமொன்றுக்குச் சேமிக்கலாம் என அறிக்கையிட்டுள்ளனர்.)

2. வழங்கல் - தேவை என்ற அடிப்படையில் தோட்ட முதலாளியால் ஊதியம் நிர்ணயிக்கப்பட அனுமதிக்க முடியாது. ஊதியம் சட்டப்படி தரப்படுத்தப்பட வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கமும் தோட்டத்துரைமார் சங்கமும் ஏற்றுக்கொண்டமை.

மேற்படி இரு நிகழ்வுகளும் தோட்டத் தொழிலாளரின் ஊதிய உயர்வில் சாதகமான அறிகுறிகளாக விளங்குவதை நடேசய்யர் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார். தேசபக்தன் பத்திரிகையில் பேட்மென் அறிக்கையையும் மார்க்கஸ் பெர்ணான்டோ அறிக்கையையும் அவர் விரிவாக விமர்சித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தரப்படுத்தப்பட்ட ஊதிய நிர்ணய அறிக்கையை நடைமுறை யதார்த்த நிலைநின்று மதிப்பிட்டுள்ள நடேசய்யர், அது பயனற்றது, ஒருதலைப்பட்சமானது என வெளிப்படையாகச் சாடியுள்ளார். அறிக்கையானது தொழிலாளரின் உண்மையான நிலைமையைப் பிரதிபலிக்கவில்லை என்பதுடன் தொழிலாளரின் உண்மையான வாழ்க்கை நிலையில் எந்த முன்னேற்றத்தையும் அது ஏற்படுத்தாது என்பதையும் வலுவாக வெளிப்படுத்தியுள்ளதுடன், சட்டமும் இலங்கை அரசும் தோட்டத்துரைமாருக்குச் சாதகமானமுறையில் தொழிற்படுவதையும் அந்த அறிக்கை ஆதிக்கத்தின் கருவியாக விளங்குவதையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

தோட்டத்துரைமார் சமூகம் மிகுந்த சக்திவாய்ந்ததாகவும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் இருப்பதை எடுத்துக்காட்டியுள்ள நடேசய்யர், தோட்டப்பகுதி நிலமும் அங்குள்ள கட்டடங்களும் தோட்ட உடைமையாளருக்கே சொந்தமானவையாகையால் அப்பகுதியில் வியாபாரம் செய்யும் இந்திய வணிகரும், உணவகம் நடத்துபவரும் தங்கள் வாழ்வாதாரத்திற்காகத் தோட்டத்துரைமாரின் தயவை நாட வேண்டியவர்களாக உள்ளமையையும், சில காலம் மட்டும் இலங்கையில் தங்கி இலாபம் ஈட்ட வரும் அந்த இந்திய வணிகர்கள், தொழிலாளர்களான தம் சகோதரர்களின் நலன்களில் பெரும்பாலும் அக்கறையற்றவர்களாகவே இருக்கிறார்கள் என்பதையும் பதிவு செய்துள்ளார். இந்திய வணிகர்கள் பிற்பட்ட காலத்திலும் இப்போக்கிலிருந்து பெரிதும் மாறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியத் தொழிலாளர்கள் ஒழுங்குபடுத்தப்படாதவர்களாகவும் உதவியற்றவர்களாகவும் இருப்பதைக் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ள நடேசய்யர், வெளிநபர்கள் அவர்களை அணுகுவதே கடினமாக உள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளதுடன், இலங்கைக்குப் புதிதாக வந்த தொழிலாளி சில காலம் அமைதியின்றி இருப்பதையும், பின்னர் வேறு தோட்டங்களுக்கு மாற்றலாகிச் சென்று அங்கும் அதேநிலை இருப்பதைக் கண்டு, தன் வாழ்வு எங்கும் மேம்படாது எனவுணர்ந்து நடைமுறை யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய

நிலைக்குத் தள்ளப்படுவதையும் வெளிப்படுத்தி, தொழிலாளரின் நெருக்கடிமிகு வாழ்வின் சாரத்தை எடுத்துரைத்துள்ளார்.

ஒருபக்கம் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட தோட்டத்துரைமார் சமூகமும், மறுபக்கம் அக்கறையற்ற இந்தியச் சமூகமும், மூன்றாம் பக்கம் தோட்ட உடமையாளரின் செல்வாக்குக்கு உட்பட்ட இலங்கை அரசாங்கமும் உள்ள சூழலில், தொழிலாளர்களை ஒழுங்குபடுத்தி அவர்களின் உரிமைக்காகப் போராடுவது இயலாத காரியமாக விளங்குவதையும் நடேசய்யர் எடுத்துக்காட்டியுள்ளார். இம்முத்தரப்பு ஆதிக்கச் சூழலிலேயே அவர் தொழிலாளர் விடுதலைக்கான அடிப்படைச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். அவர் இட்ட அடித்தளத்திலிருந்தே பிற்காலத்தில் பெருந்தோட்டத் தொழிலாளருக்கான அமைப்புகள் இயங்கின என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

சட்டங்களாலும் அறிக்கைகளாலும் பெரும் பயன் கிடைக்கப்போவதில்லை என்பதைக் களத்திலிருந்து கண்டுகொண்ட நடேசய்யர், "இத்தீவில் வாழும் தொழிலாளர்களுக்கு, நூறாண்டு கால நீண்ட போராட்டங்களாலும் பேச்சுவார்த்தைகளாலும்கூட கிட்டாத நன்மைகளை, இலங்கைக்கான குடியேற்றத்தைத் தடை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்" என அன்றைய யதார்த்தத்தில் தீர்வினை முன்வைத்து, "உதவியற்ற நிலையில், இத்தீவில் உள்ள ஆறரை இலட்ச இந்தியத் தொழிலாளர்களின் சார்பாக, இந்தியத் தலைவர்கள் ஆழமாக ஆராய்ந்து, ஞானம்மிக்க முடிவை எடுக்க வேண்டுமென நான் வேண்டுகிறேன்" என்ற கோரிக்கையுடன் துண்டுப்பிரசுரத்தை நிறைவு செய்துள்ளார்.

*4*

நடேசய்யரின் துண்டுப்பிரசுரம் வெளிவந்த உடனே அதற்கான எதிர்வினையைத் தோட்டத்துரைமார் சங்கத்தினர் நிகழ்த்தியுள்ளனர். 12.03.1926 அன்று கண்டியில் இடம்பெற்ற 72 ஆவது தோட்டத்துரைமார் சங்கக் கூட்டத்தில், அதன் தலைவர் ஓல்ட்பீல்ட் நடேசய்யரின் துண்டுப்பிரசுரத்தைக் கண்டித்து நீண்ட உரையாற்றியுள்ளார். தரப்படுத்தப்பட்ட ஊதிய நிர்ணய அறிக்கையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நால்வருள் அவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓல்ட்பீல்ட் தன் உரையில் துண்டுப்பிரசுரத்தில் விவரிக்கப்பட்டுள்ளவை, நடைமுறை நிலைமையைத் தவறாகப் பிரதிபலிக்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளதுடன், நடேசய்யர் அரசியல் இலாபத்துக்காக அதனை வெளியிட்டுள்ளார் எனக் குற்றம்சாட்டியுள்ளார். அத்துண்டுப்பிரசுரம் பிழைகள் நிறைந்தவை எனக்கூறி நிராகரிக்க முயன்றுள்ள அவர், அப்பிழைகளைப் புள்ளிவிவரப் பிழைகள், விட்டுவிட்ட தகவல்களும் தவறான வியாக்கியானங்களும், வெளிப்படையான பிழைகள் என மூவகைப்படுத்தி விளக்கியுரைத்துள்ளார். புள்ளிவிவரத் தவறுகளைப் பெருங் குற்றங்களாக விவரிப்பதற்கே முன்னுரிமை கொடுத்துள்ள ஓல்ட்பீல்ட், துண்டுப்பிரசுரம் விவாதிக்கும் முதன்மையான அம்சங்களையும் தரப்படுத்தப்பட்ட ஊதியம் தோட்டத் தொழிலாளரின் வாழ்வாதாரத்துக்குப் போதுமானது அல்ல என்ற வாதத்தையும் இரண்டாம் நிலைப்படுத்தி, நடேசய்யரையும் துண்டுப்பிரசுரத்தையும் நிராகரிக்க முயன்றுள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது.

நடேசய்யர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுள், இலங்கை அரசும் தரப்படுத்தப்பட்ட ஊதியத்தை நிர்ணயிக்க நியமிக்கப்பட்ட குழுவும் தோட்டத்துரைமாருக்கு ஆதரவாகத் தொழிற்படுகின்றன, இந்திய அரசின் முகவரும் தொழிலாளரின் உண்மையான வாழ்க்கை நிலைமையை அறிக்கையில் வெளிப்படுத்தவில்லை முதலானவற்றை ஓல்ட்பீல்ட் தன் உரையில் மறுத்துரைத்துள்ளார். இலங்கை அரசாங்கம் தோட்டத்துரைமாரின் கட்டுப்பாட்டில் இல்லை, அறிக்கையை உருவாக்கிய குழுவினர் சுயாதீனமாகச் செயற்பட்டனர், இந்திய அரசின் முகவரான திரு. ரங்கநாதன் நேர்மையானவர், தோட்டத் தொழிலாளர் நலனில் அக்கறை மிகுந்தவர் முதலானவற்றை முன்வைத்துக் காலனித்துவ நிர்வாகம் தன்னாட்சியுடனும் நீதியுடனும் இயங்குவதாகக் கருத்துரைத்துள்ளார். ஆனால், நடேசய்யர் தரும் தகவல்களும் அக்காலத்து ஏனைய வரலாற்றுத் தகவல்களும் ஓல்ட்பீல்டின் வாதத்தின் தற்சார்பை, போலிமையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தொழிலாளர்களாக இலங்கைக்கு வருவதை நிறுத்த வேண்டும் என்ற நடேசய்யரின் கோரிக்கையை வன்மையாகக் கண்டித்துள்ள ஓல்ட்பீல்ட், அது தமிழரின் சுதந்திரத்தைப் பறிக்கும், தமிழர்களை வறுமையில் வைத்திருக்கும் செயல் எனக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாதம் தோட்ட உடைமையாளர் நலன் என்ற மையத்திலிருந்து முகிழ்த்ததாகும். 'அருவருப்புத்தரும் அநீதி, கொடுமை, நீக்ரோ அடிமைகளைவிடக் கேவலம்' எனக் குறிப்பிடப்படும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொடக்ககால வாழ்க்கை நிலைமை, ஓல்ட்பீல்டுக்குச் சுதந்திரமானதும் வளமானதுமான வாழ்வாகத் தெரிகின்றமையானது அவரின் நோக்குநிலையையும்

அவருடைய பங்குபற்றலுடன் இறுதி செய்யப்பட்டுள்ள அறிக்கையின் தன்மையையும் புரிந்துகொள்ளத் துணை செய்கின்றன.

தோட்டத்துரைமார் சங்கத்தின் ரகசிய மற்றும் தனிப்பட்ட ஆவணங்களை நடேசய்யர் பயன்படுத்தியுள்ளார், அவற்றைப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார் முதலான குற்றச்சாட்டுகளையும் ஒல்ட்பீல்ட் முன்வைத்துள்ளார். இதனை ஒல்ட்பீல்ட் உள்ளடங்கலான தோட்டத்துரைமாரின் நிலைப்பாட்டுக்கும் அவர்களின் மக்கள்விரோத ஆதிக்கப் போக்கிற்கும் சான்றாகக் கொள்ளலாம்.

தோட்டத்துரைமார் சங்கம், தமது பொருளாதார நலனைத் தொழிலாளர் நலன் என மறைமுகமாகக் காக்க முயல்வதையும், தரவுப் பிழைகளை முன்நிலைப்படுத்தி, தரப்படுத்தப்பட்ட ஊதியம் தொழிலாளரின் நல்வாழ்வுக்குப் போதுமானதா? இல்லையா? என்ற விவாதத்தைப் பொருளற்றதாக்குவதையும், காலனிய இலங்கை அரசு சுயாதீனமாகவும் நீதியாகவும் இயங்குகிறது என்பதை வலியுறுத்துவதையும் ஒல்ட்பீல்டின் உரை மையமாகக் கொண்டுள்ளது. தோட்டத்துரைமார் சங்கம் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட அமைப்பு என்பதை வலிந்து வெளிப்படுத்த முனைந்துள்ள அவர், தொழிலாளர் நலன்சார்ந்து ஒலித்த குரலைப் பிழையானது, தகுதியற்றது, அபத்தமானது என நிராகரித்துள்ளார். அவ்வுரை காலனித்துவ அதிகாரத்தின் மொழியாகவும் நோக்காகவும் அமைந்துள்ளதுடன் உரையின் நடுவே இடம்பெற்றுள்ள கைத்தட்டல்களும் சிரிப்புகளும் அந்த அதிகாரத்தின் ஆணவத்தைப் பிரதிபலித்துள்ளன.

*5*

தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கை நிலைமையைக் ‘குறைந்தபட்ச உயிர்வாழ்வு’ என்ற தளத்தில் அணுகி, அதனையே தரப்படுத்தப்பட்ட ஊதியமாக நிலைநிறுத்த முன்னெடுக்கப்பட்ட செயன்முறையை இத்துண்டுப்பிரசுரம் தீவிரமாக விமர்சித்துள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது. அறிக்கையின் உருவாக்க முறைமையில் தொழிற்பட்டுள்ள ஒருதலைப்பட்ச அதிகாரப் போக்கையும் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவுகள், சமூக முன்னேற்றம், சேமிப்பு, கௌரவமான வாழ்க்கை முதலானவற்றைப் புறக்கணித்துவிட்டு வரையறுக்கப்பட்டுள்ள வரவு செலவுகளையும், அதையொட்டித் தரப்படுத்தப்பட்ட நியாயமற்ற ஊதிய விகிதத்தையும் ஆதாரபூர்வமாக இப்பிரசுரத்தில் விவரித்துள்ள நடேசய்யர், வறுமையையும் மனித இழிவையும் தரப்படுத்தப்பட்ட ஊதிய நிர்ணய அறிக்கை இயல்பாக்கம் செய்ய எத்தனித்துள்ளமையை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார்.

ஊதியமானது உற்பத்தித் திறனை மட்டுமல்லாது, வாழ்வாதாரத்தையும் சமூக மறுஉற்பத்தியையும் உறுதி செய்யவதாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள அவர், தரப்படுத்தப்பட்ட ஊதியமானது நடுநிலையான பொருளாதார அளவுகோலாக அமையாது, தோட்டத்துரைகளின் அதிகாரக் கருவியாகத் தொழிற்பட்டுள்ளமையை அம்பலப்படுத்தியுள்ளதுடன் காலனித்துவ ஆட்சியில் உற்பத்தி உறவுகள், அதிகார அமைப்புகளால் கட்டுப்படுத்தப்படுகின்ற முறைமையையும் தோட்ட உரிமையாளர்களும் அரச நிர்வாகமும் பரஸ்பர நலன்களின் அடிப்படையில் இயக்கம் கொள்வதையும் விமர்சித்துள்ளார். அவர் கையாண்டுள்ள தோட்டத்துரைமார் ராஜ்ஜியம் (*Planter Raj*) என்ற சொல்லாடல், காலனித்துவ முதலாளித்துவத்தின் அதிகார இயங்கியலை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

நடேசய்யரின் விமர்சனம் தோட்டத்துரைமார் சங்கத்தை எவ்வளவு அச்சுறுத்தியுள்ளது என்பதற்கு அத்துண்டுப்பிரசுரம் மீதான ஒல்ட்பீல்டின் எதிர்வினை சான்றாக அமைந்துள்ளது. புள்ளிவிவரப் பிழைகளை முன்வைத்து மையக் கேள்வியைத் தவிர்க்கும் ஒல்ட்பீல்டின் கருத்துகள், காலனித்துவ அதிகார முகத்தின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன.

புள்ளிவிவரங்கள், வரவு செலவுக் கணக்குகள், அறிக்கையில் இடம்பெறும் தகவல்களுக்கும் நடைமுறை யதார்த்த நிலைமைக்கும் இடையிலான ஒப்பீடு, இந்திய வாழ்க்கை நிலைமையுடன் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் வாழ்க்கை நிலைமை ஒப்பீடு என அமைந்துள்ள இத்துண்டுப்பிரசுரம், தர்க்கபூர்வமான பகுப்பாய்வாக விரிந்துள்ளது.

நடேசய்யர் வலியுறுத்தியுள்ள பொதுவான ஊதிய விகிதம், சேமிப்பு வாய்ப்பு, வாராந்த ஊதிய வழங்கல், பகுதி வேலைக்கான ஊதிய நிர்ணயம் முதலானவை இலங்கையில் தொழிலாளர் விடுதலை அரசியலின் முன்னோடி கருத்தாக்கங்களாக விளங்குகின்றன.

அவ்வகையில், இத்துண்டுப்பிரசுரத்தைத் தோட்டத் தொழிலாளர் ஊதியம், உழைப்பு - ஊதியச் சிந்தனை, ஊதியத் தரப்படுத்தல் முதலானவை தொடர்பிலான இலங்கையின் முன்னோடி அறிவுசார் தலையீடுகளுள் முதன்மையான ஒன்றாக அடையாளப்படுத்தலாம்.

# யாழ்ப்பாணத்தில் மகாத்மா காந்தி

'வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்' எனும் இத்தொடர் 'ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்' பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.




## கார்த்திகேசு இந்திரபாலா

பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

## இந்திய விடுதலை இயக்கத்தில் திருப்பம்

ஆங்கிலம் கற்ற இந்திய மத்திய வகுப்பைச் சேர்ந்த தேசியவாதத் தலைவர்கள் ஆங்கிலேயர் முன்மாதிரியாகக் காட்டிய அரச யாப்பு முறைப்படியான முயற்சிகள் மூலம் தமக்குக் கூடுதலான ஆட்சிப் பொறுப்பைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் மோஹன்தாஸ் கரம்சந்த் காந்தி தென் ஆபிரிக்காவில் இருந்து தாய்நாட்டுக்கு வந்தார். அவர் வருகை விடுதலை இயக்கத்தில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

மத்திய வகுப்பினர் செயற்பாடாக மந்த வேகத்தில் சென்றுகொண்டிருந்த இந்திய தேசியக் காங்கிரஸின் போக்கு காந்தியின் வருகையால் முற்றாக மாறி, பெருந்திரள் மக்கள் பங்குகொள்ள இடமளித்து, புதிய வடிவத்தைப் பெற்றது. காந்தியின் நடவடிக்கைகளின் விளைவாக விடுதலை இயக்கம் ஒரு பெருந்திரள் மக்கள் இயக்கமாகி (*Mass Movement*) ஆங்கிலேயர் ஏகாதிபத்தியத்தை ஆட்டங்காண வைத்தது.

## கதர் இயக்கம்

இந்திய மக்களை எழுச்சிபெற வைப்பதற்கு காந்தி எடுத்துக்கொண்ட அணுகுமுறை காங்கிரஸ் தலைவர்கள் எண்ணியிராத, முற்றிலும் வேறுபட்ட ஒன்றாக உருவாகியது. மத்திய வகுப்பினருக்குக் கூடுதலான ஆட்சிப்பொறுப்பைப் பெறும் நோக்கைக் கைவிட்டு, ஏழ்மையில் தவிக்கும் எண்ணற்ற இந்திய மக்களுடைய பொருளாதார, சமூக, அரசியல் மேம்பாட்டுக்கான இயக்கமாக விடுதலைப் போராட்டத்தை மாற்றக் காந்தி தீர்மானித்தார். இதைச் சாதிப்பதற்கு, மத்திய வகுப்பினரைப் போன்று உடையாலும் வாழ்க்கை முறையாலும் 'நான் உங்களில் இருந்து வேறானவன்' என்று காட்டிக்கொண்டு பொதுமக்களுக்கு உபதேசம் செய்யாது, 'நானும் உங்களில் ஒருவன்' என்று காட்டி, அவர்களை வழிநடத்திச் செல்ல அவர் எடுத்த தீர்மானம் உலக வரலாற்றில் ஒப்பற்ற ஒரு செயலாகும்.

இத்தீர்மானத்தை எடுத்ததும், காந்தி தெற்கு நோக்கி மதுரைக்கு வந்து, தான் பொதுவாக அணிந்த உடையைக் களைந்து, இந்திய வேளாண் மக்களும் ஏழைத் தொழிலாளிகளும் நாள்தோறும் அணியும் 'கொடுக்கு' வேட்டியை அணிந்து, மேலாடை எதுவும் இல்லாது தோள் மீது சால்வையைப் போட்டு, எளிமையான உடையுடன் பெருந்திரள் மக்களை முன்னின்று நடத்திச் செல்லத் தயாரானார். ஏழை மக்களை ஒன்றுகூட்டித் தற்சார்பு (*Selfreliance*) உணர்வை ஊக்குவித்துப் பாரிய ஒரு சமூக - பொருளாதார மாற்றத்தை உண்டுபண்ணக் காந்தி வகுத்த திட்டம் கதர் இயக்கம் (*Khadi Movement*) எனப் பெயர் பெறும். இந்தியாவில் நெடுங்காலமாகச் செழித்துவந்த பருத்தி மற்றும் பட்டுப் புடவை உற்பத்தித் தொழிலை ஆங்கிலேய ஏகாதிபத்தியம் முறியடித்து, இந்தியாவில் விளைந்த பருத்தியை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்து, அதனைப் புடவையாக்கி, இந்தியாவுக்கு இறக்குமதி செய்து இந்தியருக்கு விற்றுப் பயன்பெற்றது.

இந்த நிலைமையை மாற்றியமைத்துத் தேசிய எழுச்சியை வளர்த்து மக்களை ஒன்றுகூட்டி வழிநடத்திச் செல்லக் காந்தி வகுத்த திட்டத்தின் விளைவுதான் கதர் இயக்கம். இயந்திரங்களைப் பயன்படுத்தாது, பருத்தியைக் கைநூற்பு மூலம் நூலாக்கி, கைத்தறியைப் பயன்படுத்தி நெசவு செய்து பெறப்படும் துணி கதர் ஆகும். இங்கிலாந்தில் இருந்து இறக்குமதியான துணியை வாங்காது, வீடுகளில் கைத்தறிகொண்டு செய்யப்பட்ட கதர் துணியை அணிய வைப்பதே கதர் இயக்கத்தின் நோக்கம். கதர் இயக்கம் வெற்றிகரமாகப் பரவ, கோடிக்கணக்கான ஏழைக் குடும்பங்களில் கதர் உற்பத்தி செய்யப்பட்டது. பெருந்தொகையான இந்தியர்கள் இறக்குமதி செய்யப்பட்ட துணியை வாங்காது கதர் உடையை அணியத் தொடங்கினர். இங்கிலாந்தில் (லங்கஷய/ *Lancashire* போன்ற தொழில்மயமான நகர்களில்) உற்பத்தி செய்யப்பட்ட பருத்தித்துணி முன்போல இந்தியாவில் இறக்குமதியாகவில்லை. இந்தியர்களிடையே தேசிய உணர்ச்சி எழுச்சிபெற்றது. ஆங்கிலேயர் ஏகாதிபத்தியத்தை ஆயுதமின்றித் தாக்கிய காந்தியின் புகழ் உலகில் பரவியது.

## காந்தியை யாழ்ப்பாணத்துக்கு அழைத்தல்

இலங்கையில் இளைஞர் மத்தியில் காந்தியின் இயக்கம் செல்வாக்குப் பெற்றது. மத்திய வகுப்பினர் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்க்கத் தயங்கிய வேளையில், இலட்சியத் துடிப்புடன் இளைஞர்கள் காந்தியின் செயல்களால் கவரப்பட்டனர். அத்தகைய ஒரு தலைவர் இலங்கையில் இல்லாத பட்சத்தில், காந்தியை இலங்கைக்கு அழைக்க இளைஞர் விரும்பினர். யாழ்ப்பாணத்தில் உருவாகிய மாணவர் காங்கிரஸ் இளைஞர்கள் இது தொடர்பாகப் பெருமுயற்சி எடுக்கத் தொடங்கினர். தெற்கில், ஏ.ஈ. குணஸிங்ஹ மற்றும் விக்டர் கொறயா போன்ற இளைஞர்களும் காந்தியின் இயக்கத்தால் கவரப்பட்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் மாணவர் காங்கிரஸ் இயங்கத் தொடங்கிய காலத்திலேயே காந்தியை அழைக்கவேண்டும் என்ற பெருவிருப்புக்

காணப்பட்டது. இம்மாணவர் கழகத்தின் இணைச் செயலாளர்களுள் ஒருவராகவும் யாழ்ப்பாணக் கல்லூரியில் ‘London University Intermediate in Arts’ வகுப்பில் படிக்கும் மாணவராகவும் இருந்த எஸ். துரை ராஜ சிங்கம் சென்னையில் காந்தி நிற்பதை அறிந்து, **1925** மார்ச் இறுதியில் சென்னைக்குக் காந்தியின் தரிசனம் (Darshan - இது அவர் பயன்படுத்திய சொல்) பெறச் சென்றார். அவ்வேளை, மாணவர் காங்கிரஸ் சார்பில் காந்தியை யாழ்ப்பாணத்துக்கு வருமாறு அழைத்தார். தான் அழைப்பை ஏற்று வருவதாக எந்தவித வாக்குறுதியையும் காந்தி கொடுக்கவில்லை.

ஜனவரி **1927** இல் வேறு நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்ற சென்னைக்குச் சென்ற மாணவர் காங்கிரஸ் உறுப்பினராகிய ஹண்டி பேரின்பநாயகமும் ஏ.எம்.கே. குமாரசுவாமியும் நேரில் காந்தியைச் சந்தித்து அவரை அழைப்பதற்கு விரும்பினர். ஆகவே அவர்கள், ஈ.ஜே. ராஜையா என்ற இன்னொருவருடன், காந்தி தங்கியிருந்த பெங்களூருக்குச் சென்று அவரைச் சந்தித்து, மாணவர் காங்கிரஸ் சார்பில் அவரை யாழ்ப்பாணத்துக்கு வரும்படி அழைத்தனர்.

காந்தியின் தென்னிந்தியப் பயணங்களை ஒழுங்கு செய்யும் பொறுப்பு சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியர் கையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவரும் காந்தியுடன் இருந்தபோது தான் யாழ்ப்பாணத்து இளைஞர்கள் அங்கு சென்றிருந்தனர். இளைஞர்களுடைய வேண்டுகோளைச் செவிமடுத்த காந்தி ஒரு நிபந்தனையை முன்வைத்தார். கதர் இயக்கத்தை இலங்கைக்கு எடுத்துச் சென்றால் இளைஞர்கள் ஒரு லட்சம் ரூபா கதர் நிதிக்குத் திரட்டிக் கொடுக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. இளைஞர்கள் இதற்குச் சம்மதித்தனர். இவர்கள் யாழ்ப்பாணம் திரும்பிய பின் மாணவர் காங்கிரஸின் இணைச் செயலாளர் ஐ.பி. துரைரத்தினம் முறைப்படி ஓர் அழைப்பினை எழுத்து மூலம் காந்திக்கு அனுப்பிவைத்தார். இதற்கு **1927** பெப்ரவரி **3** இல் விடையளித்த காந்தி, இது தொடர்பாக ராஜகோபாலாச்சாரியரே தீர்மானம் எடுப்பார் என எழுதியிருந்தார்.

பின்னர், **1927** ஒகஸ்ட் மாதம் ஜே.வி. செல்லையா (மாணவர் காங்கிரஸின் முதலாவது தலைவர்) பெங்களூருக்குச் சென்று காந்தியைச் சந்தித்தபோது கூட இலங்கைப் பயணம் பற்றிக் காந்தி தீர்மானம் எடுக்கவில்லை. எனினும், ஒரு சில நாட்களின் பின்,



**யாழ்ப்பாணத்தில் காந்தி**

Image Source - cgijaffna.gov.in

செப்தெம்பர் முற்பாகத்தில், காந்தி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரச் சம்மதித்துவிட்டார் என்ற செய்தி மாணவர் காங்கிரஸுக்கு அறிவிக்கப்பட்டது.

ஆவலுடன் காந்தியின் சம்மதத்தை எதிர்பார்த்திருந்த மாணவர் காங்கிரஸ் உடனே ஒரு வரவேற்புக் குழுவை அமைத்தது. ஹண்டி பேரின்பநாயகமும் எம்.எஸ். இராசரத்தினமும் இணைச் செயலாளர்களாகப் பதவி பெற்றனர். குழுவின் தலைவராகப் பணியாற்றுவதற்கு வைத்திலிங்கம் துரைசுவாமி அழைக்கப்பட்டார். காந்தியின் வருகை தொடர்பான அறிவிப்பு பல செய்தித்தாள்களில் வெளிவந்தது.

## காந்தியின் வருகை

தமிழ்நாட்டின் தென்கரைத் துறையாகிய தூத்துக்குடியில் இருந்து காந்தி குழுவினர் **12** ஆம் திகதி இரவு **9:30**க்குக் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தனர்.

காந்தியுடன் வந்தவர்கள் அவருடைய மனைவி கஸ்தூர்பா (கஸ்தூரிபாய்), சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் (ராஜாஜி), ராஜாஜியின் மகள் லக்ஷ்மி, காந்தியின் செயலாளராகிய மஹாதேவ் தேஸாய் ஆகியோராவர்.

காந்தியுடன் விடுதலை இயக்கத்தில் நெருங்கிய முறையில் செயலாற்றிய ராஜாஜி, பின்னர் சென்னை மாநிலத்தின் முதலமைச்சராகவும், இந்தியா சுதந்திரம் பெற்றபின் பிரித்தானியப் பேரரசின் கடைசி ராஜப் பிரதிநிதியாகவும் (Viceroy) ஆளுநர் - தளபதியாகவும் (Governor - General) கடமையாற்றிய ‘Lord Louis Mountbat

*ten'* தன் கடமையை முடித்து நாடு திரும்பியதும், இந்தியாவின் ஆளுநர் - தளபதிப் பதவியைப் பெற்ற முதலாவது (உண்மையில் ஒரேயொரு) இந்தியராகப் புகழ்பெற்றார். இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இந்திய வரலாற்றில் பல வலிமை வாய்ந்த மன்னர்கள் வடக்கின் பெரும்பாகத்தையும் தெற்கின் சில பாகங்களையும் கைப்பற்றித் துணைக்கண்டத்தின் கணிசமான நிலப்பகுதிக்குத் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். இவர்கள் ஆண்ட நிலத்தில் தமிழ்நாடு சேர்ந்திருக்கவில்லை. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் வடக்கையும் தெற்கையும் இணைத்த இந்தியாவின் அரசியல் தலைவராக முதல் தடவையாகப் பதவிபெற்றார் என்றால் அந்தப் புகழ் ராஜாஜியைச் சேரும்.

ராஜாஜியின் மகள் லக்ஷ்மி விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டுக் காந்தியின் மகன் தேவ்தாஸ் காந்தியை மணம் முடித்தார். இவர்களுக்குப் பிறந்த மூத்த மகனுக்கு பேரன்மார் இருவருடைய பெயர்களையும் இணைத்து (ராஜாஜி + மோஹன்தாஸ் காந்தி) ராஜ்மோஹன் எனப் பெயரிட்டதை நான் சிறுவனாக இருந்தபோது என் தந்தையார் எனக்குச் சொன்னார். ராஜ்மோஹன் பின்னர் ஒரு பிரபல வரலாற்றாசிரியராகப் புகழ்பெற்றார். இரண்டாவது மகன் ராம்சந்த்ர. மூன்றாவது மகன் கோபால்கிருஷ்ண; இவர் இந்தியாவின் நிர்வாக சேவையில் பணியாற்றியவர், சில ஆண்டுகள் இலங்கையில் இந்தியத் தூதரகத்திலும் பணிபுரிந்தவர்.

## தென் இலங்கையில்

இலங்கையின் தென் பாகத்தில் காந்தி இரண்டு வாரங்களாகப் பல இடங்களுக்குச் சென்று, கூட்டங்களில் பேசிப் பெருந்தொகையான பொது மக்களைச் சந்தித்தார். கொழும்பில் மட்டுமல்லாது, தென் மாகாணத்திலும் மலையகத்திலும் பல நகரங்களிலும் ஊர்களிலும் பொதுமக்கள் அவரை வரவேற்று கதர் நிதிக்குப் பணம் கொடுத்தனர். மிகவும் குறிப்பிடத்தக்க பெருங்கூட்டங்களுள் ஒன்று தொழிலாளர் சங்கம் (*Ceylon Labour Union*) அளித்த வரவேற்பு; இன்னொன்று வித்தியோதயப் பிரிவென நிறுவனத்தில் பௌத்த மஹாசபை (*Buddhist Congress*) நடத்திய கூட்டம்.

ஏ.ஈ. குணஸிங்ஹ மற்றும் விக்டர் கொறயா ஆகியோர் தலைமையில் தொழிலாளர் சங்கம் கொடுத்த வரவேற்பில் பெருந்தொகையான மக்கள் கூடியிருந்தனர். சங்கத்தின் உறுப்பினர் சீருடை அணிந்து காந்தியை வரவேற்றனர். காந்தியின் பேச்சு தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது. பௌத்த மஹாசபை அளித்த வரவேற்பில் 500க்கும் மேற்பட்ட பௌத்த பிக்குமார் பங்குபற்றினர். காந்தியின் பேச்சை ஜி.பி. மலலசேகர (பின்னர் பேராசிரியராக விளங்கியவர்) சிங்களத்துக்கு மொழிபெயர்த்தார்.

கொழும்பில் இடம்பெற்ற இன்னொரு முக்கிய வரவேற்பு *'Tamil Union'* நடத்திய நிகழ்வாகும். இதற்குப் பொன்னம்பலம் இராமநாதன் தலைமை தாங்கினார்.

## யாழ்ப்பாணத்துக்கு இராப்பயணம்

நவம்பர் 25 இல் யாழ்ப்பாணத்துக்குப் புறப்படக் காந்தி தயாரானார். கொழும்புத் தொடர்வண்டி நிலையத்தில் இருந்து மாலை யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் அஞ்சல் வண்டியில் (*Night Mail Train*) இணைக்கப்பட்ட *'Saloon Car'* ஒன்றில் காந்தியும் அவர் குழுவினரும் சௌகரியமாகப் பயணம் செய்ய ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தொடர்வண்டி கணேமுல்ல (*Ganemulla*) நிலையத்துக்கு வந்தபோது, அங்கு காந்தியை வரவேற்க ஒரு கூட்டம் காத்திருந்தது. அவரைக் காண வந்திருந்தவர்களை நோக்கி காந்தி ஆற்றிய உரை சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. வண்டி புறப்படுமுன் கதர் நிதிக்கு ஒரு பணப்பையும் காந்தியிடம் கொடுக்கப்பட்டது.

தொடர்வண்டி நள்ளிரவு வேளையில் அநுராதபுரத்தை அடைந்தது. நிலையத்தில் ஒரு கூட்டம் காந்தியைக் காணக் காத்திருந்தது. கிழக்கு மாகாணத்துக்குக் காந்தி வருகைதர ஒழுங்கு செய்யப்படாததால், திருகோணமலை வாசிகள் சிலர் கதர் நிதிக்குப் பணம் சேர்த்துப் பணப்பையுடன் அநுராதபுரத்துக்கு வந்திருந்தனர். நித்திரையில் இருந்து காந்தி எழுப்பப்பட்டு, வந்தோரைத் தன் வண்டியில் இருந்து சந்தித்து உரையாற்ற நேர்ந்தது. அவருடைய பேச்சு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் முதல் நாள்

நவம்பர் 26 சனிக்கிழமை விடியற்காலை தொடர்வண்டி பளை நிலையத்துக்கு வந்தபோது முதலாவது யாழ்ப்பாணத்தவர் கூட்டத்தை காந்தி சந்தித்தார். அங்கு திரண்டிருந்த மக்களை நோக்கி அவர் பேசும்போது இரண்டு முக்கிய வேண்டுகோள்களை விடுத்தார். ஒன்று தீண்டாமை பற்றியது. மற்றது மதுவிலக்குத் தொடர்பானது. சாதிப் பாகுபாடுகளைக் கைவிட்டு, மனிதரை மனிதர் மதித்து நடக்கவேண்டும் என்பது காந்தியின் தலையாய போதனை. மது அருந்துவதை ஒழிக்கவேண்டும் என்று போகும் இடமெல்லாம் அவர் வேண்டிக்கொள்வார். இந்த இரண்டையும் காந்தி யாழ்ப்பாணத்தில் சென்ற இடமெல்லாம் வலியுறுத்தினார்.

தொடர்வண்டி யாழ்ப்பாண நிலையத்தை வந்தடைந்த போது அங்கு பெருந்திரளான மக்கள் காத்திருந்தனர். இந்தக் காட்சியை ‘Hindu Organ’ செய்தித்தாள் இவ்வாறு வர்ணித்துள்ளது: *“Long before the time of the arrival of the Colombo Mail train the railway platform, the precincts outside the railway station and the thoroughfares leading to it was one seething mass of humanity”* (28 November 1927).

வண்டியில் இருந்து காந்தி இறங்கியதும், வரவேற்புக் குழுத் தலைவர் வைத்திலிங்கம் துரைசுவாமி அவருக்கு மலர்மாலை அணிவித்து, யாழ்ப்பாணத்துக்கு அவரை வரவேற்றார்.

தொடர்வண்டி நிலையத்தில் இருந்து காந்தியும் குழுவினரும் மணிக்கூட்டுக்கோபுர வீதியில் (Clock Tower Road) அவர்கள் தங்குவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ‘தர்மலட்சுமி வாசா’ என்ற இல்லத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

பிற்பகல் 3 மணிக்கு முற்றவெளியில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. வைத்திலிங்கம் துரைசுவாமி காந்திக்கு மலர்மாலை அணிவித்து, யாழ்ப்பாண மக்கள் சார்பில் வரவேற்புரையை வாசித்து அவரிடம் சமர்ப்பித்தார். பல குழுக்கள் காந்தியிடம் வரவேற்புத் தாள் (Address) கொடுக்கக் காத்திருந்தனர். இவர்களுள் ‘Depressed Class Association’, ‘Depressed Class League’ ஆகியவற்றைச் சேர்ந்தோரும் அடங்குவர்.

காந்தி தன் விடையுரையில் தீண்டாமை மற்றும் மதுவிலக்கு ஆகியவை பற்றி விரிவாகப் பேசி, இலங்கையில் தீண்டாமை இருப்பதையிட்டுத் தான் வியப்படைந்ததாகக் கூறினார். அத்துடன், யாழ்ப்பாணம் முற்றாக மது ஒழிப்பில் வெற்றிபெறும் நிலைக்குக் கிட்டியதாக வந்திருப்பதை அறிந்து மகிழ்வதாகவும் கூறினார்.

வரவேற்பு நிகழ்ச்சி முடிந்தபின், துரைசுவாமி தம்பதிகள் ‘வீட்டு உபசாரம்’ (At Home) ஒன்றைத் தங்கள் இல்லத்தில் நடத்தினர். இதற்கு அரசாங்க அதிபர் உட்படப் பல பிரமுகர்கள் அழைக்கப்பட்டனர். மாலை 6 மணிக்கு ‘Royal Theatre’ இல் மாணவர் காங்கிரஸின் வரவேற்பு விழா நடைபெற்றது. இதற்கு சுவாமி விபுலானந்தர் தலைமை தாங்கினார். தான் இலங்கைக்கு வருவதற்குத் தாமே காரணம் என மாணவர் சபை இளைஞர்கள் உரிமை கோருவதில் தவறில்லை எனக் காந்தி தன் உரையைத் தொடங்கினார் (*“You have taken upon yourselves and very rightly, the credit of bringing me to this fair Island”*).

மாணவர்களுடைய முதலாவது குறிக்கோள் தங்கள் ‘தொன்மையான பண்பாட்டின் மறுமலர்ச்சியை ஏற்படுத்தல்’ (Revival of their Ancient Culture) எனத் தலைவர் காந்திக்குக்



**காந்தியுடன் அவரது துணைவி கஸ்தூரிபாய் (இலங்கை, சிகிரியாவில் எடுக்கப்பட்ட படம்)**
Image Source - en.wikipedia.org

கூறியிருந்தார். இப்பொருளைக் காந்தி குறிப்பாக எடுத்து தன் எண்ணங்களை விளக்கி, பண்பாட்டு மறுமலர்ச்சி என்ற பெயரால் விளையக்கூடியவை தொடர்பாக எச்சரிக்கையும் விடுத்தார்.

காந்தி கூறியவற்றுள் இவை குறிப்பிடத்தக்கவை: *“I am obliged to utter this warning to this Congress of students who are to be the makers of the destinies of this land, because of so many reactionary forces gathering round us not only here, but through out the world. I see from my own experience in India that many who are professing to revive ancient culture do not hesitate under the name of that revival to revive old superstitions and prejudic es... You will not therefore consider that I have given you a laboured statement in warning you against being misled into wrong doing under the name of revival of ancient culture.”* (*Speech to the Students' Congress*, 26 Nov. 1927, Mahadev Desai, *With Gandhiji in Ceylon*).

## இரண்டாம் நாள்

நவம்பர் 27 ஞாயிற்றுக்கிழமை காந்திக்கும் அவர் குழுவினர்க்கும் நிகழ்ச்சி நிரம்பிய நாளாக அமைந்தது. யாழ்ப்பாணத்தில் எத்தனையோ ஊர்களுக்குச் சென்று எண்ணற்ற மக்களைக் காந்தி சந்தித்தார். முக்கியமாக, அவர் பல கல்வி நிறுவனங்களுக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

காலையில் முதலாவதாக காந்தி குழுவினர் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிக்குச் சென்றனர். அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதம அலுவலகமும் இராமநாதன் மண்டபமும் அமைந்துள்ள நிலத்தில் இந்திய விடுதலை இயக்கத்தின் இரண்டு முக்கிய முன்னணிப் போராளிகள் - காந்தியும் ராஜாஜியும் - காலடி வைத்தனர். ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு இடம்பெற்றது.

கஸ்தூர்பா காந்தியும் ராஜாஜியின் மகள் லக்ஷ்மியும் கூடவே இதில் பங்குகொண்டனர்.

கல்லூரி அதிபரும் பொன்னம்பலம் இராமநாதனுடைய மருமகனுமான சு. நடேசபிள்ளை காந்தியை வரவேற்று கல்லூரியின் சார்பில் ஒரு பணப்பையையும் வழங்கினார்.

இதன்பின் காந்தி குழுவினர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, கந்தரோடை இந்து ஆங்கில நிறுவனம் (Hindu English Institute - பின்னர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) ஆகிய பாடசாலைகளுக்குச் சென்றனர். ஒவ்வோர் இடத்திலும் பணப்பை வழங்கப்பட்டது.

அடுத்து, சுன்னாகத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்குப் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு காந்தி அடிக்கல் நாட்டினார். அக்கல்லில் 'காந்தியடிகள் சக 1850' எனப் பொறிக்கப்பட்டிருந்தது. இதன்பின், காந்திக்கு ஒரு பணப்பையும் வழங்கப்பட்டது.

இதையடுத்து, சுன்னாகச் சந்தையில் ஒரு வரவேற்பை முடித்துக்கொண்டு காந்தி குழுவினர் பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் நல்லூர் வீரமாகாளியம்மன் கோவில், கோப்பாய், புத்தூர், அச்சுவேலி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, வல்லிபுரக் கோவில் ஆகிய இடங்களில் வரவேற்புக்களில் பங்குகொண்டு பணப்பையும் பெற்று, இவர்கள் சாவகச்சேரிக்குச் சென்றனர். இங்கும் வரவேற்பில் காந்திக்குப் பணப்பை அளிக்கப்பட்டது.

### மூன்றாம் நாள்

நவம்பர் 28 திங்கட்கிழமை காந்தியின் மௌனவிரதம். ஞாயிறு இரவு 9:30 தொடக்கம் திங்கள் இரவு 9:30 வரை மௌனம். இது முடிவுற்றதும், சில இளைஞர்கள் (சைவர்களும் கிறிஸ்தவர்களும்) காந்தியின் அடிமுன் உட்கார்ந்து வினாக்களைக் கேட்டு விடைகளைப் பெற்றனர்.

### நாலாம் நாள்

நவம்பர் 29 செவ்வாய்க்கிழமை, இறுதி நாள். பல பாடசாலைகளுக்குக் காந்தி செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. காலையில் ஏழு முக்கிய கல்லூரிகளுக்குக் காந்தி சென்றார். முதலில் சுண்டிக்குளி 'St. John's College', பின்னர் 'Chundikuli Girls' School', 'Jaffna Central College', 'Vembadi Girls' School', 'Uduvil Girls' School', 'Tellippalai Weaving School' ஆகியவற்றிலும், இறுதியாக இராமநாதன் கல்லூரியிலும் வரவேற்பு நிகழ்ச்சிகள் இடம்பெற்று பணப்பைகள் அளிக்கப்பட்டன. இராமநாதன் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சி சைவ மங்கையர் சபை கொடுத்த வரவேற்பாகும். இதில் லீலாவதி இராமநாதன் அம்மையார் சிறப்பாகப் பங்குபற்றினார்.

பிற்பகல் நிகழ்ச்சிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வரவேற்புடன் தொடங்கியது. இதன்பின் காந்தி குழுவினர் ஊர்காவல்துறைக்குச் சென்றனர். அங்கு நடந்த வரவேற்புக்கு வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் இருந்து மக்கள் வந்திருந்தனர். அவர்கள் சார்பில் வைத்திலிங்கம் துரைசுவாமி பணப்பை ஒன்றை வழங்கினார்.

அங்கிருந்து திரும்பி வரும்போது, காரைதீவில் சைவ மகாசபை குழுவினரை வரவேற்று பணப்பை ஒன்றை அளித்தது. அங்கிருந்து வரும் வழியில் மூளாய் சித்திவிநாயகர் கோவிலில் இன்னொரு வரவேற்பு. அவ்வேளை மூளாய் - தொல்புரம் மக்கள் பணப்பை ஒன்றை வழங்கினர். அத்துடன், அவ்விரு ஊர்களின் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு பாடசாலை அமைப்பதற்கு காந்தி அடிக்கல் நாட்டினார்.

பின்னர், சுழிபுரம் - சங்கானை மக்கள் விக்ரோறியாக் கல்லூரியில் வரவேற்பு நிகழ்த்தி பணப்பை ஒன்றும் கொடுத்தனர். இறுதியாக வட்டுக்கோட்டை இந்து - ஆங்கிலப் பாடசாலையில் (தற்போதைய வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி) வரவேற்பும் பணப்பை வழங்கலும் நடைபெற்றது.

இது முடிந்ததும், சங்கானை, மானிப்பாய், ஆனைக்கோட்டை வழியாக (மக்களை வழியில் சந்தித்து) காந்தி குழுவினர் யாழ்ப்பாணம் தொடர்வண்டி நிலையத்துக்குச் சென்றனர். அங்கு காத்திருந்த மக்களுக்குத் தன் பிரியாவிடை உரையை வழங்கி, 6:15 இற்குப் புறப்பட்ட தொடர்வண்டியில் காந்தி பயணத்தைத் தொடங்கினார்.

பின்னர் தலைமன்னாரில் இருந்து யாழ்ப்பாண மக்களுக்கு மீண்டும் ஒரு செய்தியை அனுப்பிவிட்டு கப்பல் ஏறி இந்தியாவுக்குத் திரும்பினார். அவர் அனுப்பிய செய்தி மீண்டும் 'மது அருந்துவதை விலக்குங்கள், தீண்டாமையை ஒழியுங்கள்' என்பவற்றையே வலியுறுத்தியது.

மூன்று நாட்களில் மகாத்மா காந்தி யாழ்ப்பாணத்தில் முப்பதுக்கு மேற்பட்ட ஊர்களுக்குச் சென்றார், 14 பிரபல பாடசாலைகளில் உரையாற்றினார். இரண்டு பாடசாலைகளை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். ஆயிரக்கணக்கான யாழ்ப்பாணத்தவர் அவரைக் காணும் வாய்ப்பைப் பெற்றனர். யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த வேறொரு வெளிநாட்டுப் பிரமுகருக்கும் இச்சிறப்புக் கிட்டவில்லை எனத் திடமாகக் கூறலாம். கதர் நிதிக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் கிடைத்தது.

# பண்டைய யாழ்ப்பாணத்தில் புராதன சமய நடைமுறைகள்

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கான நேரடி எழுத்துப் பதிவுகள் குறைவாக இருந்தாலும், தொல்லியல் அகழாய்வுகள் இதன் பழங்காலக் குடியேற்றங்கள், பண்பாடு, மற்றும் சமூக – பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வெளிக்கொணருகின்றன. அதன் அடிப்படையில் கந்தரோடை, பண்டைய யாழ்ப்பாண நாகரிகத்தின் ஆதிகேந்திரமாக விளங்கிய ஒரு முக்கியப் பகுதி ஆகும். தொல்லியல் ஆய்வுகள், பொ.யு.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாகி விட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த இடத்தில் அடர்த்தியான மக்கள் குடியேற்றம் அன்றிலிருந்து இன்றுவரை, மத்திய காலத்தில் ஒரு சிறு இடைவெளியைத் தவிர, தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. நாணயவியல், தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பொ.யு. எட்டாம் நூற்றாண்டுவரை கந்தரோடை பண்டைய யாழ்ப்பாணமான நாகநாட்டின் தலைநகரமாக விளங்கி வந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையிலும், அதன் பெருங்கற் பண்பாட்டின் தாக்க விளைவுகளுக்கு உட்படுத்தப்பட்ட வடஇலங்கையின் ஆதி இரும்புக்கால மையங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் அறிக்கைகளைக் கொண்டு எழுதப்படும் 'பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்' என்னும் இக் கட்டுரைத் தொடர் வடஇலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்று உதய காலங்களிலும், வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், ஆளுமை, பண்பாடு, பெருமுயற்சி, துணிவாண்மை என்பனவற்றின் பரந்த காட்சிப்பதிவாக விளங்கும்.

**பகுதி -1**




## சிவ தியாகராஜா

கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) B.Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph.D. பட்டத்தையும் பெற்றவராவார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE800CE, The Tamils of Lanka – A Timeless Heritage, Archaeological Excavations at the Jaffna Fort, பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகியவை அவற்றுள் சிலவாகும்.



*யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் கண்டெடுத்த சுடுமண் தகடு. மாதிரி அச்சில் களி மண்ணினால் செய்து சூளையில் சுடப்பட்ட இந்தச் சுடுமண் தகட்டின் நடுவில் நாட்டார் தாய்த் தெய்வமும், இரு பக்கமும் முழங்காலில் நிற்கும் ஆண், பெண் பக்தர்களும் காணப்படுகின்றனர். Image Source: Depart ment of History, University of Jaffna.*

*1*

## அறிமுகம்

உலகில் நிறுவனப்படுத்தப்பட்ட மதங்கள் தோற்றமளிப்பதற்கு முன்னர் மக்களிடையே ஆன்ம இயலான அல்லது மனிதர்களுக்கு மேலாக உள்ள தெய்வங்கள் சம்பந்தமான நம்பிக்கைகள், நடைமுறைகள், செயற்பாடுகள் இருந்து வந்திருக்கின்றன. இற்றைக்கு 200,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆதி மனிதர்களான ஹோமோ நியண்டதலென்ஸிஸ், தொடர்ந்து ஹோமோ சேப்பியன்ஸ் ஆகியோர் கொண்டிருந்த இறந்தவர்களைப் புதைப்பது சம்பந்தமான சடங்குகள், பிற்கால சமயங்களோடு இணைக்கப்பட்டிருக்கின்றன.

இற்றைக்கு 70,000 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற இடைக்கற்காலப் பகுதியில் ஆபிரிக்காவின் கலஹாரி பாலைநிலப் பகுதியில் வேட்டையாடி வாழ்ந்த மக்களிடத்தே மிருகங்களை தெய்வாம்சமாகப் பேணி வணங்கும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. இவ்வழக்கம் அவர்களது வேட்டைச் சடங்குகளுடன் (Hunting Rites) தொடர்புடையது. அக்காலத்தைய குகை ஓவியங்கள் காட்டும் செய்திப்படி அவர்கள் வேட்டையாடப் புறப்படும் முன்னர் முதலில் ஒரு கரடியை அம்புகளினால் கொன்றுவிட்டு, களி மண்ணினால் செய்யப்பட்ட ஒரு கரடிப் பொம்மையின் முன்னர் சடங்கு சார்ந்த ஆட்டங்களுடன் அக்கரடியைப் புதைத்துவிட்டு, வேட்டைக்குப் புறப்படுவது வழக்கம். இந்த நடவடிக்கை சிறப்பான வேட்டையைத் தரும் என்பது அவர்களின் நம்பிக்கை (Narr, N.J. 2008).

உலகில் வெவ்வேறு மக்கள் குழுக்களுடன் வெவ்வேறு மிருகங்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. நாகபாம்பு நாகர்களுடனும், எருது பண்டைய துருக்கியர் (Nevali Cori), மற்றும் சிந்துவெளி மக்களுடனும், பசுமாடு இந்துக்களுடனும், பூனைகள் - நாய்கள் - நரிகள் - முதலைகள் என்பன புராதன எகிப்தியர்களுடனும் தொடர்பு கொண்டவை. புராதன எகிப்திய அரசர்களைப் புதைத்த புதைகுழிகளில் அவர்களுக்குப் பிரியமான மிருகங்களின் சடலங்களும் பதனீடு செய்யப்பட்டு (Mummified) புதைக்கப்பட்டிருக்கின்றன.

ஆதிகால மனிதன் மண்ணையும், விண்ணையும், ஆதவனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும், கோள்களையும், மலையையும், மரத்தையும், ஆற்றையும், குளத்தையும் தெய்வங்களின் அம்சமாகக் கொண்டான். பெருமழையும், புயலும், இடியும், மின்னலும் இத்தெய்வங்களின் சீற்றத்தின் விளைவுகள் எனக் கருதினான். இத்தெய்வங்களின் சீற்றத்தைத் தணித்து அவர்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டு நிவேதனம் படைத்து, பூக்களால் பூசித்து இத்தெய்வங்களை வழிபட்டான்.

தென்னாசியாவில் தமிழர்களுக்குத் தனித்துவமான ஆதவன் வழிபாட்டோடு இணைந்த தைப்பொங்கலும், கோயில்களில் மேற்கொண்ட தலவிருட்சத் தொழுகையும், வயல்களில் அவர்களோடு உழைத்த எருதை கோயில்களில் 'நந்தியாக்கி' வணங்கியதும் - இப்புராதன வழிபாட்டு முறைகளின் எச்சங்களே.

மண்ணில் விளைச்சலைத் தந்து உயிர் காக்கும் உணவை அளிக்கும் - உயிர்களுக்கெல்லாம் கருவளம் கொடுத்து இனங்களைப் பெருக்க வைக்கும் - தாய்த் தெய்வமான நில மாதாவை - பார் என்னும் அன்னையை (Mother Goddess/ Earth Goddess) - 'பார்வதி' என்று பணிந்து வணங்கினான். தனது செம்மையான ஒளியினாலும், செஞ்சுடர் வெப்பத்தினாலும், உலகிலுள்ள உயிர்கள் அனைத்தையும் உய்ய வைக்கும் ஆதவனை - 'சிவந்தன்' எனப் போற்றி வணங்கினான். உலகனைத்துமுள்ள உயிர்களையெல்லாம் வாழவைக்கும் மாமழை தந்து - பரந்து விரிந்து எல்லையற்றுக் கிடக்கும் நீலமயமான விண்ணகத் தெய்வத்திற்கு 'விண்ணு' எனப் பெயரிட்டு வாழ்த்தி வணங்கினான். ஆக, இந்த மூன்று முதற் தெய்வங்களின் மூலப் பெயர்களும் திராவிட - தமிழ் மொழிப் பெயர்களே! 'சிவந்தன்' (Red God) எனப்பட்ட

ஆதவனின் வழிபாடே காலகதியில் ‘சிவன்’ என்கிற தெய்வத்தின் பெயராக அமைந்தது.

இந்த ஆதித் தெய்வங்களை கருத்தில் கொண்டே ‘சிலப்பதிகாரம்’ எழுதிய இளங்கோ அடிகள் “ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும் - மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்” எனத் தனது ஒப்புயர்வற்ற காப்பியத்தை ஆரம்பித்து வைத்தார்.

இற்றைக்கு 6,000 ஆண்டுகளுக்கு முன்னர் - இந்திய மண்ணில் ஆரியர்கள் அடியெடுத்து வைப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் - இத்திராவிட மக்கள் தாய்க் கடவுளையும், திரிசடை அணிந்த சிவனையும், சிவலிங்கங்களையும் உருவமாகச் செய்து வழிபட்டார்கள் என்பதை சிந்துவெளி அகழ்வுகள் - முக்கியமாக மொகஞ்சதாரோ, ஹரப்பா, சன்ஹு¬தாரோ ஆகிய நகரங்களின் அகழ்வுகளில் கண்டெடுத்த உருவச்சிலைகள் எடுத்துக் காட்டுகின்றன. இக்காலகட்டத்தில் இத்தெய்வங்களின் வழிபாடு இருந்ததே ஒழிய, நிறுவனப்படுத்தப்பட்ட ஒரு மதம் இருந்ததற்கான ஆதாரம் இல்லை. ஆனால் பிற்காலத்தில் மதம் என்ற கலாசார ஒழுங்குமுறை (Cultural System) ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இத்தெய்வங்கள் இந்து மதத் தெய்வங்களாக ஆக்கப்பட்டன.

சிந்துவெளி நாகரிகம் அதன் செம்பாங்குக் காலத்தைக் (Classical Period) கடந்து இரண்டாயிரம் ஆண்டுகளின் பின்னர் இந்திய உபகண்டத்திற்குள் நுழைந்த இந்தோ - ஆரியர்கள் சிவந்தனை ‘ருத்திரன்’ ஆக்கியும், விண்ணுவை ‘விஷ்ணு’ ஆக்கியும், பார்வதியை ‘மலைமகள்’ ஆக்கியும் புராணங்கள் புனைந்தது வேறு கதை.

உலகில் ஒரு குறிப்பிட்ட இறைவாக்கினரைத் தலைவராகக் கொண்டு குறிப்பிடப்பட்ட தெய்வங்களையும், நடைமுறைகளையும், சடங்குகளையும், விதிகளையும், விதிமுறைகளையும் உள்ளடக்கிய மதம் என்ற பண்பாட்டு ஒழுங்குமுறை புதிய கற்காலத்தில்தான் உருவாகியது என பிரெஞ்சுத் தொல்லியலாளரான ஜாக்குவிஸ் கோவின் (Jacques Cauvin, 2000) கருதுகிறார்.

புதிய கற்காலத்திற்கு முன்னர் தென்னாசியாவில் வழக்கத்திலிருந்த மத சம்பந்தமான நடைமுறைகளை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. ஆன்மவாதம் சார்பான சமய நடைமுறைகள் (Animistic Religious Practices): உயிரில்லாப் பொருட்களிலும், இயற்கை நிகழ்ச்சிகளிலும் உயிரியக்கம் காண்கின்ற, ஆவியுலகக் கோட்பாடு சார்ந்த சமய நடைமுறைகள்.

2. மக்கள் மரபுவழி (நாட்டார்) சமய நடைமுறைகள் (Folk Religious Practices): கி.மு. 2800 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், முதிர்ந்த சிந்துவெளி நாகரிகக் காலத்தில் இந்த நடைமுறைகள் தனித்துவமான விதிமுறைகளைக் கொண்டிருந்தன.

   புதிய கற்காலத்தில் கி.மு. இரண்டாயிரத்தாண்டின் நடுப்பகுதியில் வேறு இரு வகையான சமய வழக்குகள் தென்னாசியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டன:

3. தென்னிந்தியாவில் தோற்றம் பெற்ற பெருங்கற் பண்பாட்டுச் சமய வழிபாடு.

4. வட இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட வேத கால மதச் சடங்குகள்.

மேற்கூறப்பட்ட இந்த நான்கு வகையான வழக்கங்களும், வழிபாடுகளும், நடைமுறைகளும், சடங்குகளும் இணைந்தே பிற்கால இந்துமதம் உதயமானது.

இந்து மதம் என்ற சொற்பதம் 1830 ஆம் ஆண்டில் பிரித்தானியர்களால் பிராமணிய (வேத மதம்) மதத்தைக் குறிப்பிடக் கொடுக்கப்பட்ட சொற்பதமாகும் (Encyclopaedia Britannica: Hinduism). அதுவரை காலமும் ‘இந்து’ என்ற சொற்பதம் ‘இந்துஸ்தானத்து’ (இந்திய) மக்களைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டதே ஒழிய அப்பதத்திற்கும் மதத்திற்கும் ஒருவிதமான தொடர்பும் இருக்கவில்லை.

தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டுச் சமய வழிபாட்டு நடைமுறைகளுக்கும், வட இந்திய வேதகால மதச் சடங்குகளுக்கும் பாரிய வேறுபாடுகள் இருந்தமையால் சமயச் சிந்தனைகளிலும், நடைமுறைகளிலும் தென்னிந்திய இந்துமதம் வட இந்திய இந்து மதத்தினின்றும் எதிர்முனைப்பட்டு நின்றது (Polarisation of religious ideas and practices). இந்த வேறுபாட்டிற்கான முக்கிய உதாரணங்கள்: தென்னிந்திய மக்கள் பூக்களையும், நீரையும் கொண்டு இறைவனுக்குப் பூசை செய்து வழிபட்ட காலத்தில், வேதகால ஆரியர்கள் ஓம குண்டத்தில் தீயெரித்து சுலோகங்கள் ஓதி யாகம் செய்தார்கள். கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட காலத்தில் தென்னிந்திய மக்கள் இறந்தவர்களை பெருங்கற் சமாதிகளிலும், பெரிய தாழிகளிலும் புதைத்து வைத்த பொழுதில், வேத கால ஆரியர்கள் சடலங்களை எரித்து வைத்தார்கள்.

### ஆதிவாசிகளின் மத நம்பிக்கைகள்

இற்றைக்கு ஏறக்குறைய 65,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்து வந்து தென்னாசியாவை அடைந்த பழங்குடி மக்கள் ஒஸ்ரலோயிட் இனத்தவர் என அழைக்கப்பட்டனர்.

இவர்கள் பேசிய மொழி ஒஸ்ரிக் மொழி என அழைக்கப்படுகிறது. யக்ஷ - நாக வழிபாடுகள் இப்பழங்குடி மக்களின் மத்தியில் நிலவிய வழிபாட்டு முறைகள் ஆகும். இவ்வழிபாட்டு முறைகள் சமய வளர்ச்சியின் ஆரம்பக்கட்டத்தினை எடுத்துக் காட்டுவதுடன் உலகளாவப் பரவிய வழிபாட்டு முறைகளாகவும் விளங்குகின்றன. பின்னால் வந்த கலாசாரங்கள் இவற்றைத் தம் கலாசாரங்களுடன் இணைத்துக் கொண்டதால் இவ் ஆதி வழிபாட்டின் பல அம்சங்கள் அவற்றுடன் சங்கமித்துவிட்டன. திராவிட ஆரியக் கலாசாரங்கள் இத்தகைய சங்கமிப்பில் முக்கியமானவை ஆகும் (சிற்றம்பலம், சி.க. 1996: 44).

இந்திய, இலங்கை நாடுகளின் ஆதிவாசிகளான ஒஸ்ரலோயிட் மக்களிடம் யக்ஷ - நாக வழிபாடுகள் முக்கிய இடத்தை வகித்தன. இவ்வழிபாட்டில் இயற்கைச் சக்திகளில் - மரங்களில், ஆறுகளில், மலைகளில், குன்றுகளில் தெய்வங்கள் வாழ்கின்றன என்கிற நம்பிக்கை மேலோங்கியிருந்தது.

இந்த ஒஸ்ரலோயிட் மக்கள் குழுக்கள் அவர்கள் மேற்கொண்ட வழிபாட்டுத் தெய்வங்களை காரணமாகக் கொண்டு 'யக்ஷர்' (இயக்கர்), 'நாகர்' எனப் பேசப்பட்டார்கள். பிற்காலத்தில் சைவர், வைஷ்ணவர் எனப் பேசப்பட்டது போல என ஆனந்தா குமாரசாமி எடுத்துக்காட்டியுள்ளார் (Coomaraswamy, A.K. 1971). இதை உணராத பிற்கால நூல்கள் இவர்களை இரு இனங்களாக எடுத்துப் பேசியிருக்கிறார்கள். இன்னும், இலங்கையின் சில பாளி நூல்கள் நாகர்களை மனித வர்க்கத்தினராகச் சித்தரிக்கவில்லை. மாறாக, இவர்கள் சாதாரணமாகப் பாம்பின் தோற்றத்தினை உடையவர்களாகவும், நிலத்தின் கீழ் வாழும் 'அமானுஷ்யர்களாகவும்' (Nonhumans) சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் மிகப் பழமையான இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் யக்ஷ - நாக வழிபாட்டு அம்சங்கள் பல காணக்கிடக்கின்றன. நாட்டுப்புற மக்களால் மிகத் தொன்றுதொட்டு வழிபடப்பட்டு வந்த யக்ஷ தெய்வங்களாக சூலி, சூர்மகள், சூரரமகளிர், வரையரமகளிர், கடல்கெழு செல்வி, கானமர் செல்வி போன்ற பெயர்கள் கூறப்படுகின்றன.

இம்மக்கள் மேற்கொண்ட தெய்வங்களையும், வழிபாட்டு முறைகளையும் நுணுக்கமாக ஆராய்ந்த அறிஞர் ஆனந்தா குமாரசாமி, பின் வந்த திராவிட, ஆரிய கலாசாரங்கள் போன்றே இம்மக்களும் தமக்கு எனத் தனியான வழிபாட்டுக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்திருந்தமையை எடுத்துக் காட்டியுள்ளார். இவர்களது வழிபாட்டில் இயற்கைச் சக்திகள் முக்கியத்துவம் பெற்ற அதே சமயத்தில் உருவ வழிபாடும் இடம் பெற்றுள்ளதைக் காண முடிகிறது (Coomaraswamy, A.K. 1971). இன்றைய இந்து (சைவ) மதத்தின் அடிநாதமாக விளங்கும் உருவ வழிபாட்டின் ஆரம்ப கர்த்தாக்கள் இந்த ஆதி மனிதர்களே என்பதையும் ஆனந்தா குமாரசாமி எடுத்துக் காட்டியிருக்கிறார் (Coomaraswamy, A.K. 1971).

## யக்ஷ வழிபாடு

புராதன இந்தியாவில் - ஆரியரின் வருகைக்கு முன்னர் அங்கே வாழ்ந்திருந்த தஸ்யுக்களால் மேற்கொள்ளப்பட்ட வழிபாட்டு முறைகளே யக்ஷ - நாக வழிபாடுகள் என்கிறார் வரலாற்றாசிரியர் ஜேம்ஸ் பேர்குஸன் (Fergusson, J. 1873: 244). 'தஸ்யுக்கள்' என்ற பதம் ஆரியர்களால் ஒரு பகுதி சிந்துவெளி மக்களை அழைக்கப் பயன்படுத்தப்பட்ட பதம் என்பது இரிக் வேதத்திலிருந்து பெறப்படுகிறது.

யக்ஷன் (இயக்கன்), யக்ஷி (இயக்கி) ஆகிய தெய்வங்கள் உறையும் இடங்களாக காடுகள், மலைகள், நீர்நிலைகள், மரங்கள் என்பன கருதப்பட்டன. ஊருக்குப் பொதுவான மரங்களில் இத்தெய்வங்கள் குடிகொண்டிருந்தன என நம்பிய மக்கள் அம்மரங்களை அலங்கரித்து, மாலை அணிவித்து, விளக்குகள் ஏற்றி வணங்கினர், படையல் செய்தனர், பலி கொடுத்தனர். தமது வழிபாட்டையும், நிவேதனப் பொருட்களையும் ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக அம்மரங்கள் வினோதமான ஓர் ஒலியை எழுப்புவதாகவும் நம்பினார்கள்.

யக்ஷி வழிபாடே பின்னர் கருவள, வளமை வழிபாட்டிற்கான தாய்த்தெய்வ வழிபாடாக உருவெடுத்தது. இந்து சமயத்தில் செழிப்பைக் குறிக்கும் லக்ஷ்மியின் உருவமும், வழிபாடும் மௌரியர் காலத்தில் பிரபலமாக வழிபடப்பட்ட யக்ஷி உருவம் ஒன்றிலிருந்தே உருவாக்கப்பட்டது (வேதாசலம், வே. 1989).

அதுபோல் யக்ஷி வழிபாட்டு உருவங்களிலிருந்தே சிவனது உருவச் சிலைகள் வடிக்கப்பட்டிருப்பதை பார்க்கும், பட்னா, சாஞ்சி ஆகிய இடங்களிலிருந்த யக்ஷி உருவங்களை ஆராய்ந்த அறிஞர் ஆனந்தா குமாரசாமி அற்புதமாக எடுத்துக் காட்டியுள்ளார். தென்னாசிய மதங்களின் வரலாற்றில் முதன் முதலாகத் தோற்றம் பெற்ற சிலை வடிவங்கள் யக்ஷ தெய்வங்களின் சிலைகளே ஆகும் (Coomaraswamy, A.K. 1971).

யக்ஷ தெய்வங்களின் வதிவிடம் இம்மக்களால் 'சைத்தியம்' (கோயில்) என அழைக்கப்பட்டது. இப்பதம் ஒரு 'ஒஸ்ரிக்' மொழிப்பதம். இப்பதம் பின்னர் பௌத்த, ஜைன (சமண) இலக்கியங்களிலும், மகாபாரதத்திலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

இவ்வழிபாட்டுத் தலங்கள் அதிகமாக மரங்களின கீழே நகரங்களிலோ, நகரங்களின் எல்லையிலோ, அல்லது நகருக்கு வெளிப்புறங்களிலோ காணப்பட்டன (சிற்றம்பலம், சி.க. 1996).

யக்ஷ வழிபாட்டிற்குரிய சைத்தியங்களே சங்க இலக்கியங்களில் 'மன்றம்' அல்லது 'பொதியில்' எனப் பெயர் பெற்றன. இம்மன்றங்களின் கீழே வழிபாட்டிற்காக அமைந்திருந்த கற்சிலைகளுக்கு விளக்கேற்றி, மலர்மாலை சூட்டி வழிபடுவதை பட்டினப்பாலை (246-249) இவ்வாறு உரைக்கிறது:

"கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி
யந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியில்".

இது தமிழகத்தில் அன்று நிலவிய யக்ஷ வழிபாட்டிற்குச் சிறந்த உரைகல்லாக அமைகின்ற அதே நேரத்தில் திராவிட வழிபாட்டுடன் அது சங்கமித்ததையும் எடுத்துக்காட்டி நிற்கிறது (வித்தியானந்தன், சு. 1954).

வரலாற்றுக்கு முற்பட்ட கால யக்ஷ வழிபாடு சங்ககாலம் வரை நீடித்திருந்ததையும் இப்பாடல் எடுத்துக் காட்டுகிறது.

பிற்காலத்தில் இந்து மதம், பௌத்தம், சமணம் ஆகிய மதங்கள் யக்ஷ, யக்ஷி வழிபாடுகளைத் தமது மதங்களின் துணைத் தெய்வங்களாக ஏற்றுக்கொண்டன. இது அவ்வழிபாடுகளைக் கடைப்பிடிக்கும மக்களை தத்தமது மதங்களைத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்ளச் செய்வதற்குக் கையாண்ட யுக்தியாக இருக்கலாம்.

## நாக வழிபாடு



மரத்தின் கீழ் நாகச் சிலைகள்



இந்துக் கோயில்களில் 'நாகதம்பிரான்'

தென்னாசியாவில் குறிப்பாக இந்தியா, இலங்கை நாடுகளில் வாழ்ந்த தொல்குடியினரான ஒஸ்திரலோயிட் இன மக்களின் ஒரு பகுதியினரின் பண்டைய வழிபாட்டு நெறியாக விளங்கியது நாக வழிபாடு. இவ்வழிபாட்டை மேற்கொண்ட மக்கள் நாகர் என அடையாளப்படுத்தப்பட்டார்கள். காலப்போக்கில் இந்த வழிபாட்டைக் கடைப்பிடித்த குழுவினரின் குலமரபுச் சின்னமாக (Clan Totem), நாகம் செதுக்கிய உருவங்கள் கம்பங்களாக அவர்களின் குடியமைப்பிடங்களில் நடப்பட்டிருந்தன.

மர வழிபாட்டிற்கும் நாக வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. செழிப்பு, வளம், சந்ததி விருத்தி போன்ற அம்சங்களைப் பிரதிபலிப்பதாக இவை அமைந்தன. மரங்களின் கீழும், பிற இடங்களிலும் நாகங்கள் வாழ்ந்த புற்று மண்ணை நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படுத்தும் மரபு அன்று தொட்டு இன்றுவரை சில சமூகங்களில் நிலவி வருகிறது. மலட்டுத்தன்மையைப் போக்குவதற்கும், மக்களைப் பாதுகாப்பதற்கும் இவ்வழிபாடு இயற்றப்படுகின்றது (சிற்றம்பலம், சி.க. 1996: 140).

பாம்பின் வடிவங்கள் பொறித்த சிலைகள் மரங்களின் கீழும், ஆற்றோரங்கள், நீர்நிலைகள், கோயில்கள் ஆகிய இடங்களிலும் வைத்து வழிபடப்பட்டன. நீர்நிலைகளில் நீராடி அவற்றின் கரையிலே நாகத்தின் சிலைகளை அமைத்து, தொடர்ந்து நாற்பது நாட்களுக்கு அவற்றிற்கு அலங்கரித்து அபிஷேகம் செய்து வழிபடல் மூலம் பெண்களின் மலட்டுத்தன்மை நீங்கும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே உண்டு. இவ்வாறு அனுஷ்டிக்கும் வழிபாட்டின் மூலம்

மகப்பேறு கிடைத்ததும் அதற்கான பிராயச்சித்தமாக ஒரு நாக சிலையை நாகங்கள் காணப்படும் ஆற்றோரங்களிலும், மரங்களின் கீழும் நிறுத்தி வைக்கும் வழக்கம் உண்டு. இவ்வாறு நேர்த்திக்கடனுடன் மேற்கொள்ளப்படும் நாகபூசை, அஷ்வமேதம் அல்லது புத்திர காமேஷ் போன்ற யாகங்களுக்குச் சமமானது என்ற நம்பிக்கையும் உண்டு. இவற்றைவிட நேர்த்திக் கடனாக நாகச்சிலைகளை ஆலயங்களுக்கு அளிக்கும் வழக்கமும் காணப்படுகிறது (சிற்றம்பலம், சி.க. 1996: 141).

வட இலங்கையின் நாகர்கள் மற்றைய தமிழ்பேசும் மக்களுடன் கி.பி. இரண்டாம் - மூன்றாம் நூற்றாண்டுகளில் இரண்டறக் கலந்துவிட்டார்கள். அதன் பின்னர் நாகர் எனத் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு சமுதாயக் குழு இருந்ததற்கான ஆதாரங்கள் ஏதுமில்லை. ஆனால் அவர்கள் மேற்கொண்ட வழிபாட்டு முறைகளும் நம்பிக்கைகளும் மரபுவழி நாட்டார் சமய நடைமுறைகளாக இன்றுவரை நிலைபெற்றிருக்கின்றன. கிழக்கு யாழ்ப்பாணத்தில் நாகர்கள் அமைத்த கோயில் இன்றும் 'நாகர் கோயில்' என்ற பெயரால் அழைக்கப்படுவதுமல்லாமல், அக்கோயில் இருக்கும் கிராமமும் நாகர்கோயில் என்றே அழைக்கப்படுகிறது. இன்னும், யாழ்ப்பாணத்திலுள்ள பல கோயில்களில் 'நாகதம்பிரான்' என்ற பெயரில் நாகச் சிலைகள் வணங்கப்பட்டு வருகின்றன.



சிவன் கழுத்தில் அணிந்திருக்கும் நாகம் புராதன நாக வழிபாட்டிலிருந்து இந்துமதம் பெற்றுக்கொண்ட சின்னமாகும்.

2

சிந்துவெளிச் சைவ மதத் தெய்வங்களும் - அவற்றை நிகர்த்த பண்டைய யாழ்ப்பாணத் தெய்வங்களும்

இக்காலத்தில் இந்துமதக் கலாசார வரலாறு பற்றிப் பேசுவோர் தமது வரலாற்றை சிந்து சமவெளி நாகரிகக் காலத்திலிருந்து ஆரம்பிக்கிறார்கள். சிந்து சமவெளி நாகரிகம் கி.மு. 3800 ஆம் ஆண்டளவில் ஆரம்பமாகி கி.மு. 1500 ஆம் ஆண்டுவரை நீடித்திருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் 'இந்து மதம்' என்ற பெயரால் ஒரு மதம் இருக்கவில்லை. அதுவரை காலமும் வேதமதம், வைதீக மதம், பிராமணியம் ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த மதத்திற்கு 'இந்து மதம்' என்ற பெயர் 1830 ஆம் ஆண்டில் பிரித்தானிய எழுத்தாளர்களால் கொடுக்கப்பட்டது (Hinduism: Encyclopaedia Britannica 1991). 1830 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட எந்த உலக இலக்கியத்திலும் 'இந்துமதம்' என்ற பெயரால் ஒரு மதம் குறிப்பிடப்படவில்லை.

'ஹிந்து' என்ற சொல் ஒரு பாரஸீக மொழிப் பதம். இச்சொல்லால் பாரஸீகர்கள் இந்திய நாட்டையும், 'ஹிந்துக்கள்' என்ற பெயரால் இந்திய மக்களையும் அழைத்தார்கள். கி.மு. 518 ஆம் ஆண்டிற்குரிய ஆக்கிமெனிட் சாம்ராச்சிய மன்னர்களின் பேர்ஸிபொலிஸ் கல்வெட்டில் "ஹிந்து நதிக்கப்பாலுள்ள ஹிந்து - நாடு" என்ற பொறிப்புக் காணப்படுகிறது (Stolper, M.W. 2005: 18-24).

பாரஸீக மொழியிலிருந்து இப்பெயரைப் பெற்ற கிரேக்கர்கள் இந்த நாட்டை 'இந்து - நாடு' என அழைத்தார்கள். ஆங்கிலேயர்கள் 'இந்தியா' என்ற பெயரைக் கொடுத்தார்கள். வட இந்தியர்கள் தங்கள் நாட்டை பாரத வர்ஷா (பாரத நாடு), ஆரிய வர்த்தா ஆகிய பெயர்களால் அழைத்தார்கள். தமிழர்கள் 'நாவலந் தீவு' என்றார்கள். பின்னால் வந்த மொகலாயர்கள் 'ஹிந்துஸ்தானம்' என்ற பெயரினால் நாட்டை அழைத்தார்கள்.

1830 ஆம் ஆண்டில் பிரித்தானிய எழுத்தாளர்கள் வேத மதத்திற்கு 'இந்து மதம்' என்ற பெயரைக் கொடுத்த வேளையில் அவர்களுக்கு சைவமதம், வேத மதத்தினின்று வேறான ஒரு மதம் என்பது விளங்கவில்லை. இந்துமதம், இந்திய மதம் என்ற வகையில் அப்பெயர் நிலைத்துவிட்டது. காலப்போக்கில் சைவமதம் இந்து மதத்தின் ஒரு பிரிவாக ஆக்கப்பட்டது.

சிந்துச் சமவெளியில், மொகஞ்சதாரோவில் அகழாய்வுகளை மேற்கொண்ட சேர் ஜோன் மார்ஷல் அங்கே கண்டெடுத்த வழிபாட்டுச் சின்னங்களை இந்துமதச் சின்னங்கள் எனக் குறிப்பிடவில்லை. வெகு தெளிவாக சைவமதச் சின்னங்கள் என்றே கூறிச் சென்றிருக்கிறார்.

### சிந்துவெளிச் சமய வழிபாடுகள்

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், முதிர்ந்த சிந்துவெளி நாகரிகத்தில் - பிரித்தானியத் தொல்லியலாளர் சேர் ஜோன் மார்ஷல் மொகஞ்சதாரோவில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் மூன்று வகையான வழிபாட்டுச் சின்னங்களைக் கண்டெடுத்தார்: 1. தாய்த் தெய்வ வழிபாடு, 2. சிவ வழிபாடு, 3. லிங்க வழிபாடு. இவற்றைக் கண்டுபிடித்த காலகட்டத்தில் இந்துமதம்

என்ற பெயரில் ஒரு மதம் இருக்கவில்லை. ஜோன் மார்ஷல் சிந்துவெளி மதத்தை இவ்வாறு பதிவு செய்திருந்தார்:

"நாங்கள் கண்டுபிடித்த தொல்பொருள் கூறுகளில், அவைற்றால் முடிந்தளவு பொருள் வடிவிலான திண்ணிய வெளிப்பாடுகளில், சிந்து மக்கள் கடைப்பிடித்த மதம் இந்து மதத்தின் நேரியல் முன்னோடி மதமாகும்."

**"There is enough in the fragments we have discovered to demon strate that so far as it was capable of expression in outward concrete forms, this religion of the Indus people was the linear progenitor of Hinduism". (Marshall, J. 1931, Vol. I, p. 58).**

## தாய்த் தெய்வ வழிபாடு

சிந்துவெளியில் மொஹஞ்சதாரோ, ஹரப்பா, மற்றும் பல மையங்களில் கண்டெடுத்த வழிபாட்டுப் பொருட்களில் அதிகமானவை சுடுமண்ணாலான தாய்த்தெய்வ உருவங்கள் ஆகும். இவை வீடுகளில் வைத்து வழிபடுவதற்காகப் பெருந்தொகையாக அச்சில் களிமண் கொண்டு உருவாக்கப்பட்டு, சூளையில் சுடவைத்துக் கெட்டியாக்கப்பட்டவை. சில உருவங்களின் தலையின் இருபக்கமும் இரு குண்டுச் சட்டிகள் காணப்படுவது அவற்றில் எண்ணெய் ஊற்றி திரிவைத்து எரித்து வணங்குவதற்காகும். அச்சட்டிகளில் படிந்திருக்கும் கரியைக் கொண்டு இது ஊகிக்கப்படுகிறது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி மையங்களில் மட்டுமல்ல, இருபதாம் நூற்றாண்டின் இந்திய நகரங்களிலும், கிராமங்களிலும் அதிகமாகக் காணப்படும் சிறு சிறு கோயில்கள் பல்வேறு பெயர்களைக் கொண்ட தாய்த்தெய்வத்தின் கோயில்கள் தான். சிந்துவெளியில் அகழ்வுகளை மேற்கொண்ட தொல்லியல் மேதை சேர் ஜோன் மார்ஷலின் கணிப்பு இது:

"For in no country in the world has the worship of the Divine Mother been from time immemorial so deeprooted and ubiquitous as in India. Her shrines are found in every town and hamlet throughout the length and breadth of the land.... Her representatives are the Grmadevats, the village goddesses whose names are legion and whose local attributes may vary, but who are one and all personifications of the same power." (Marshall, J. 1931, Vol.I, p.51).

"தாய்க் கடவுள் வழிபாடு எண்ணிப்பார்க்க முடியாத தொல்காலத்திலிருந்து இந்தியாவில் ஆழமாக வேர்விட்டு எங்கும் நிறைந்திருப்பது போல, உலகில் எந்த நாட்டிலும் காண முடியாது. அத்தெய்வத்தின் கோயில்கள் எல்லா நகரங்களிலும், எல்லாக் கிராமங்களிலும், நாட்டின் நீள அகலமெல்லாம் காணப்படுகிறது. அத்தெய்வத்தின் பிரதிநிதிகள் கிராம தேவதைகள் - அதாவது, கிராமக் கோயில்களில் காணப்படும் தாய்த் தெய்வங்கள். அவற்றின் பெயர்கள் எண்ணிலடங்காதவை. அவற்றின் பண்புக் கூறுகள் மாறுபடலாம், ஆனால் அவை அனைத்தும் அதே சக்தியின் உருவகம்தான்."



*மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் தாய்க் கடவுள் உருவம். தலையின் இரு பக்கங்களிலுமிருக்கும் சட்டிகள் தொழுகையின் போது எண்ணெய் ஊற்றி திரி கொளுத்தி எரிப்பதற்காகும்.*



*யாழ்ப்பாணம் கோட்டை அகழ்வுகளில் கண்ட சுடுமண்ணாலான இத் தாய்த்தெய்வ உருவம் 2011-12 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்டது. கழுத்தில் மாலை அணிந்த இந்த உருவத்தின் இரு பக்கமும் ஆணும் பெண்ணுமான இரு பக்தர்கள் முழங்காலில் நிற்கிறார்கள். 6.6 செ.மீ. அகலமும், 6.3 செ.மீ. உயரமும், 4 செ.மீ கனதியும் கொண்ட இச்சுடுமண் தட்டு அடியில் தட்டையாக, வீடுகளில் வைத்து வணங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது (Thiagarajah, Siva 2022: 42-43). நன்றி: வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

## கந்தரோடைக் கொற்றவை



கந்தரோடைக் கொற்றவைத் தகடு. நன்றி: ப. புஷ்பரட்ணம்.

கந்தரோடை அகழ்வுகளில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் புஷ்பரட்ணம் அவர்களால் கண்டெடுக்கப்பட்ட செப்புத் தகடு ஒன்றில் ஒரு தட்டையான பீடத்தில் லலிதாசன இருப்பு நிலையில் அமர்ந்திருக்கும் பெண் தெய்வம் தலைவிரி கோலத்தில் காணப்படுகிறார். கையில் தாமரை மலரைப் பிடித்திருக்கும் வலது கரம் தோள் மட்டத்திற்கு உயர்ந்திருக்கிறது. வெட்டப்பட்டிருக்கும் இடது கரம் முழங்காலில் படிந்திருக்கலாம். இடது கால் முழங்காலில் மடிக்கப்பட்டு பீடத்தில் அமர்ந்திருக்க, வலது கால் கீழே தொங்குகிறது.

இந்த உருவம் தாய்த் தெய்வத்தின் இன்னொரு வடிவமான கொற்றவையின் உருவமாகும். தமிழ் இலக்கியங்களில் கொற்றவை ஒரு பழிவாங்கும் தெய்வமாகச் சித்தரிக்கப்படுகிறார். இத்தெய்வத்தை மனதில் கொண்டே இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் கண்ணகியைப் படைத்திருக்கிறார் என்ற கருத்து உள்ளது. இப்பட்டயத்தின் காலம் கி.மு. 300 ஆண்டாகும்.

## கந்தரோடை லக்ஸ்மி பட்டயங்கள்



*கந்தரோடை அகழ்வுகளில் கண்ட பல வகையான லக்ஸ்மி பட்டயங்கள். நன்றி: கலாநிதி ப. புஷ்பரட்ணம்.*

செம்பு, ஈயம், வெண்கலம், நிக்கல், இரும்பு ஆகிய பலவகையான உலோகங்களால் செய்யப்பட நீள்வட்ட அல்லது நீள்சதுர வடிவில் ஒரு பெண் தெய்வத்தின் உருவத்தைக் கொண்ட பட்டயங்கள் கந்தரோடை அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. இப்பட்டயங்களை சிலர் நாணயங்கள் எனவும் கருதுவர். 1920களில் கந்தரோடை அகழ்வுகளை மேற்கொண்ட போல் பீரிஸ் அவற்றில் கண்ட பெண் தெய்வத்தை லக்ஸ்மி என இனம் கண்டு, அவற்றிற்கு 'லக்ஸ்மி நாணயங்கள்' எனப் பெயர் சூட்டினார் (Pieris, P. 1922: 11-20). இப்பட்டயங்கள் கி.மு. 300 ஆம் ஆண்டிற்குரிய பெருங்கற் பண்பாட்டு கலைப்பொருட்கள் முதல் கி.பி. 500 ஆம் ஆண்டிற்குரிய ரோமாபுரி நாணயங்கள் வரை - கி.மு. 300 ஆம் ஆண்டு முதல் கி.பி. 500 ஆம் ஆண்டு வரை புழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. இவை இலங்கை முழுவதிலும் - ஆனைக்கோட்டை, வல்லிபுரம், நல்லூர், மாந்தை, பூநகரி, உடுத்துறை, அநுராதபுரம், அக்குறுகொட, திஸமகாராமை, சிலாபம், புத்தளம், நிந்தவூர் ஆகிய பல மையங்களில் காணப்பட்ட போதிலும், கந்தரோடையிலேயே பெருந்தொகையில் காணப்படுவதினால் இப்பட்டயங்கள் கந்தரோடையில் தயாரிக்கப்பட்டனவாகக் கருதப்படுகின்றன (Pushparatnam, P. 2001, 2002).



*கந்தரோடையில் போல் பீரிஸ் கண்டெடுத்த ஒரு லக்ஸ்மி பட்டயம். Courtesy: Paul E.Pieris, 1922.*

இப்பட்டயங்களில் காணப்படும் உருவம் பற்றிய விளக்கம் வருமாறு: இந்தப் பட்டயங்களின் முகப்புப் பக்கத்தில் காணப்படும் லக்ஸ்மியின் உருவம் ஒரு மேடையில் நிற்கும் நிலையில் காணப்படுகிறது. இதன் மறுபக்கத்தில் ஒரு கம்பத்தில் பொருத்தப்பட்ட 'சுவாஸ்திகா' உள்ளது. இந்தப் பெண் தெய்வத்தின் உருவம் லக்ஸ்மியாக இனம் காணப்பட்ட போதிலும் எல்லாப் பட்டயங்களிலும் ஒரே வகையான சிற்பவியல் கூறுகள் இடம்பெற்றிருப்பதாகக் கூற முடியாது. அதிகமான பட்டயங்களில் தாமரை மலரின் மேல் நிற்கும் ஓர் இளம் பெண் ஒரு கரத்திலோ அல்லது இரு கரங்களிலுமோ தண்டுடன் கூடிய தாமரை மலரைப் பிடித்த வண்ணம் நிற்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. சில பட்டயங்களில் கரத்தில் ஒரு திரிசூலத்தையோ அல்லது ஒரு குத்து விளக்கையோ பிடித்திருப்பதாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

பெண்ணின் உருவம் தலையிலிருந்து கால்வரையும், சில சமயங்களில் தலையிலிருந்து இடுப்பு வரையும் காணப்படுகிறது. பெரும்பாலான பட்டயங்களில் உருவம் நிர்வாணமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. சில பட்டயங்களில் மெல்லியதான ஓர் அங்கி அணிந்திருப்பதைக் காண முடிகிறது. சில பட்டயங்களில் பெருத்த மார்பகங்களையும் குறுகிய இடுப்பையும் கொண்ட ஓர் இளம் பெண்ணையும், சிலவற்றில் தட்டையான மார்பகங்களையும் சதைக்கொழுப்பான இடுப்பையும் கொண்ட முதியவரான ஒரு பெண்ணையும் காண முடிகிறது. சில பட்டயங்களில் இப்பெண்கள் காதணிகள், கரங்களில் காப்புகள், கால்களில் சதங்கைகள் அணிந்திருக்கிறார்கள்.

சில செப்புப் பட்டயங்களில் ஒரு தாமரை மலரின் மேல் நிற்கும் பெண், கைகளில் தண்டுடன் கூடிய தாமரை மலரை வைத்திருக்கிறார். அவரது தலைக்கு மேலே இரு பக்கமும் இரு யானைகள் தும்பிக்கை வழியாக நீர் அபிஷேகம் செய்கின்றன. இக்காட்சியானது ஸ்ரீ ஸுக்தம் (*Sri Suktam*) சமஸ்கிருத சுலோகத்தில் வரும் கஜலக்ஸ்மியின் வர்ணனையை நினைவுபடுத்துகிறது. இக்காட்சியைக் காட்டும் கற்சிலைகள் மாமல்லபுரத்திலும், காஞ்சிபுரத்திலும் காணப்படுகின்றன.

### மொகஞ்சதாரோ சிவன் உருவம்

*1928* ஆம் ஆண்டு மொகஞ்சதாரோ அகழ்வுகளில் ஸ்ரீரைற் கல்லில் செதுக்கப்பட்ட இந்த உருவம் கிடைத்தது. இதைப் பரிசோதித்த ஜோன் மார்ஷல் தனது நூலில் பின்வருமாறு விவரிக்கிறார்: “மூன்று முகங்களைக் கொண்ட இத்தெய்வம் ஒரு பதிவான சிம்மாசனத்தில் யோகாசன நிலையில் கண்கள் மூடிய வண்ணம் அமர்ந்திருக்கிறார். நீண்ட கரங்கள் மடிந்த நிலையிலுள்ள முழங்கால்களில் நிலைபெற்றுள்ளன. கரங்களில் வளையல்களும், மார்பில் முக்கோண வடிவிலான கழுத்தணியும், இடுப்பில் இரட்டை அரைக் கச்சையும் அணிந்துள்ளார். இடுப்பின் கீழ் கால்கள் வெறுமையாகவும், ஊர்த்வமேத்ரம் (நிமிர்ந்த ஆண்குறி) தெரியுமாறும் உள்ளது. தலையணி இரு கொம்புகளுக்கு மேலாக அமைந்து நடுவில் உயர்ந்திருக்கிறது. இத்தெய்வத்தின் வலது பக்கத்தில் ஒரு யானையும், புலியும் - இடது பக்கத்தில் ஒரு எருமையும், காண்டாமிருகமும் - இருக்கையின் கீழ் இரு மான்களும் காணப்படுகின்றன.



*மொகஞ்சதாரோவில் ஜோன் மார்ஷல் கண்டெடுத்த சிவன் உருவம்.*

இத்தெய்வத்தின் தன்மைகள் தனிப்பட்டவை. மூன்று முகம் கொண்ட இத்தெய்வம் மூவகை அம்சங்களும் கொண்ட ‘மும்முகத்தோன்’ (*Tri Muktha*) என அழைக்கப்படும் ஆதி சிவனை ஞாபகப்படுத்துகிறது. யோக நிலையில் இருப்பதனால், யோகிகளின் தலைவனாகிய - மகாயோகியான சிவனைக் குறிக்கிறது. சிவன் யோகிகளின் தலைவன் மட்டுமல்ல ‘பசுபதி’ என்னும் பெயரைக் கொண்ட விலங்குகளின் தலைவனுமாவார். தலையில் அணிந்திருக்கும் தலையணி திரிசூலத்தைப் (*Trident*) பிரதிபலிப்பதாகவும் இருக்கலாம் (*Marshall, J. 1931, Vol I, pp. 54-55*).

### யாழ்ப்பாணச் சிவன் உருவம்



*யாழ்ப்பாணத்தில் கந்தரோடை அகழ்வுகளில் கண்டெடுத்த செப்புத் தகடு. இதில் கால்களை மடித்து உட்கார்ந்த நிலையில் இருக்கும் உருவமும், அதற்கு முன்னால் காணப்படும் விலங்குகள் போன்ற உருவங்களும், மொகஞ்சதாரோவில் மார்ஷல் கண்டெடுத்த சிவன் உருவத்தை நினைவுபடுத்துகின்றன. நன்றி: கலாநிதி ப. புஷ்பரட்ணம்.*

யாழ்ப்பாணத்தில் கந்தரோடை அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்ட ஒரு செப்புத் தகட்டில் முழங்கால்களை மடித்து உட்கார்ந்த நிலையில் அமர்ந்த ஓர் உருவம் காணப்படுகிறது. இந்த உருவத்தின் தலையின் மேற்பகுதி வெட்டப்பட்டிருக்கின்றது. இரண்டு கரங்களும் முழங்கையில் மடிக்கப்பட்டு கீழே முழங்கால்களில் தங்கியிருக்கின்றன. இத்தகடு தேய்ந்த நிலையில் இருப்பதால் உருவங்கள் மங்கலாகவே தெரிகின்றன. உட்கார்ந்திருக்கும் உருவத்திற்கு முன்னால் நான்கு விலங்குகளின் தலைகளும் உடலின் முற்பகுதியும் மங்கலாகத் தெரிகின்றன. படத்தின் வலப்பகுதியில் கீழே இருப்பது ஒரு மானின் உருவம் போலத் தெரிகின்றது. இந்தத் தகட்டிலிருக்கும் படம் மொகஞ்சதாரோவில் ஜோன் மார்ஷல் கண்டெடுத்த சிவனின் உருவத்தை நினைவுபடுத்துகிறது. இதன் காலம் கி.மு. 300 ஆம் ஆண்டாகக் கணிக்கப்படுகிறது (Pushparatnam, P. 2002:85; Thiagarajah, S. 2016: 230).

### திரிசூலப் பட்டயம்



யாழ்ப்பாணத்தில் கண்டெடுத்த கி.மு. 300 ஆம் ஆண்டிற்குரிய இப்பட்டயம் ஒரு திரிசூலத்தின் அருகே உட்கார்ந்திருக்கும் ஒரு மனிதரைக் காட்டுகிறது. நன்றி: கலாநிதி ப. புஷ்பரட்ணம்.

பேராசிரியர் பரமு புஷ்பரட்ணத்தினால் யாழ்ப்பாணத்தில் கண்டெடுக்கப்பட்ட கி.மு. 300 ஆம் ஆண்டிற்குரிய ஒரு பட்டயத்தில் (இது ஒரு நாணயமாகவும் இருக்கலாம்), ஒரு தண்டத்தில் மேல் பொருத்தப்பட்ட திரிசூலம் காணப்படுகிறது. இதன் பக்கத்தில் தலையணி தரித்த ஒரு மனிதர் உட்கார்ந்திருக்கிறார். இவர் ஒரு பூசகராகவோ அல்லது பக்தராகவோ இருக்கலாம். தென்னாசியாவில் திரிசூலம் சிவ வணக்கத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது (Thiagarajah, S. 2016: 41).

### சுட்ட மண்ணில் திரிசூலம், சிவலிங்கம்

கட்டுக்கரையில் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் மேற்கொண்ட அகழ்வாய்வுகளின் போது கண்டெடுத்த பெருங்கற்காலச் சுடுமண் சிற்பங்களினிடையே தாய்த்தெய்வ உருவங்கள், சிவலிங்கம், திரிசூலக் குறி பதித்த பானை ஓடு ஆகியன காணப்படுகின்றன. இதன் சரியான காலம் தெரியாத போதும், இலங்கையில் பெருங்கற் பண்பாடு கி.மு. 1000 ஆம் ஆண்டுக் காலத்திலேயே ஆரம்பமாகியிருக்கிறது. நிறுவனப்படுத்தப்பட்ட ஓர் இந்து மதம் ஆரம்பமாகும் முன்னரே இச்சின்னங்கள் அக்கால மக்களின் வழிபாட்டுப் பொருட்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது (புஷ்பரட்ணம், ப. 2017: 35).

### சிந்துவெளி லிங்க உருவங்கள்

மொகஞ்சதாரோவிலும் ஹரப்பாவிலும் கற்களினாலான லிங்க உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. அக்காலகட்டத்தில் அவை இந்தோ - ஆரியர்களின் எதிரிகளான 'தஸ்யுக்களின்' வழிபாட்டுப் பொருட்களாக இருந்தன என இருக்கு வேதம் குறிப்பிடுகிறது. இந்த லிங்கங்களை சிந்துவெளி மக்களின் சைவ சமயச் சின்னங்களாக மார்ஷல் குறிப்பிடுகிறார் (Marshall, J. 1931: 59).





மொகஞ்சதாரோவிலும், ஹரப்பாவிலும் கண்டெடுத்த லிங்க உருவங்கள். நன்றி: Sir John Marshal, 1931: pl. XIV. 2&4.



கலிபங்கனில் கண்டெடுத்த சுடுமண் லிங்க உருவம் நன்றி: Andrew Robinson.

மேலே கூறப்பட்ட சிந்து மக்களின் சமய நம்பிக்கைகளும், அவர்கள் வணங்கிய தெய்வங்களும், பேணிய சடங்குகளும் பிற்காலத்தில் உருவான சைவ, இந்து சமயங்களினுள்ளே விரவிக் கிடக்கின்றன.

இதிலிருந்து, இந்து மதம் வேதங்களிலிருந்து மட்டும் உருவான மதம் என்ற கருத்து ஏற்க முடியாததொன்றாகின்றது. புராதன சிந்துவெளி மக்கள் பேணிய மதமும் இந்திய - ஆரியர் கொண்டு வந்த மதக் கருத்துகளும் இணைந்தே பிற்கால இந்து மதம் உருவானது.

சிவனின் உருவம், மொகஞ்சதாரோவிலும் ஹரப்பாவிலும் கண்டெடுத்த சிவலிங்க கல் - உருவங்கள், நீரை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கும் சமயச் சடங்குகள், தாய்த் தெய்வ வழிபாடு - இவற்றை ஆதாரங்களாகக் கொண்டு 'சைவமதம்' ஆரம்பமான இடம் சிந்து நகரங்கள் அமைந்த இடம் என்ற முடிவிற்கு வருகிறார் மார்ஷல். அவரது நூலில் சமயம் பற்றிய பகுதியில் அவர் கூறுகிறார்:

*"Among the many revelations that Mohenjodaro and Harappa have had in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivism has a history going back to the Chalcolithic age or perhaps even further still and that it thus takes its place as the most ancient living faith in the world". Sir John Marshall: MohenjoDaro and the Indus Civilization -* ***1931:*** *Ch. V:* ***48-78.***

## யாழ்ப்பாண லிங்க வழிபாடு

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பண்டைய மக்கள் மத்தியில் லிங்க வழிபாடு காணப்பட்டது. சைவ (இந்து) மதத்தில் இன்றுவரை நிலவி வரும் லிங்க வழிபாட்டை ஆரம்பித்துவைத்த பெருமைக்குரியவர்கள் ஒஸ்திரலோயிட் மக்களே என்கிறார் இந்திய வரலாற்றாசிரியர், கல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியர் ரமேஷ் சந்திர மஜூம்தார் (Majumdar, R.C. **1951**). யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட லிங்க வழிபாடு, புராதன ஒஸ்திரலோயிட் மக்களின் வம்சாவளியினரான நாகர்கள் விட்டுச் சென்ற ஒரு வழிபாட்டுச் சின்னமாக இருக்கலாம். நாகர்கள் மற்றைய தமிழ் பேசும் மக்களுடன் கலந்த பின்னர் அச்சமூகத்தில் இந்த வழிபாடு தொடர்ந்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட பழைய சட்டநாதர் கோயிலின் அழிபாடுகளினிடையே காணப்பட்ட ஒரே கல்லினாலான (Monolithic) சேதமடைந்த சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டு திரும்பக் கட்டிய ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருந்தது. அதன் உருவம், செய்திறன் ஆகியவற்றைக் கொண்டு இந்த லிங்கம் வரலாற்றிற்கு முற்பட்ட நாகர் காலத்திற்கு உரியதாகக் கருதப்படுகிறது. இந்த ஆலயத்தில் சிவலிங்க வழிபாடு இன்றுவரை நடைபெறுகிறது.



*யாழ்ப்பாணம் சட்டநாதர் ஆலயத்தில் காணப்படும் இப்புராதன சிவலிங்கம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட முந்தைய சட்டநாதர் ஆலயத்தின் அழிபாடுகளிலிருந்து மீட்டெடுக்கப்பட்டு புதிய கோயிலில் வைக்கப்பட்டு இருக்கிறது. படம், நன்றி: கலாநிதி சி.க. சிற்றம்பலம்.*

*3*

## நாட்டார் மத வழிபாடுகள்

மரபுவழி நாட்டார் சமய வழிபாடுகளில் யாழ்ப்பாணக் கிராமங்களில் பிரபலமானது அம்மன் வழிபாடாகும். திராவிடக் கிராமிய சம்பிரதாய மரபில் ஆழமாகப் பதிந்த இப்பண்பாடு வேதகால, பிராமணியத் தாக்கங்களுக்குப் பல ஆயிரத்தாண்டுகள் முற்பட்ட வழிபாட்டு முறையாகும். இத் தாய்த்தெய்வ வழிபாடு இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி முதல் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. மாரியம்மன், கருமாரியம்மன், அங்காள பரமேஸ்வரி, காளியம்மன், நாகபூஷணி அம்மன் ஆகிய பல்வேறு பெயர்களில் இன்றுவரை புதிய புதிய ஆலயங்கள் அமைக்கப்பட்டு வணங்கப்பட்டு வருகின்றன.

## மாரி அம்மன் வழிபாடு

நாட்டார் வழிபாடுகளில் மிகப் பழமையானது தாய்த்தெய்வ வழிபாடாகும். இது பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இத்தெய்வத்தின் பல வகையான வடிவங்கள் 'அம்மன்' என்ற உருவத்தில் மரங்களின் கீழும், சிறு கட்டடங்களின் உள்ளேயும் வைத்து வழிபடப்பட்டு வந்திருக்கிறது. இவற்றில் முக்கியமானது 'மாரியம்மன்' ஆகும். இத்தெய்வம் 'கிராமதேவதை' என்ற பெயராலும் வணங்கப்பட்டு வந்திருக்கிறது. தமிழ் மக்களின் பாரம்பரியமான இத்தெய்வம் யாழ்ப்பாணக் கிராமங்களில் இன்றுவரை பெரிதும் சிறிதுமான கோயில்களில் வைத்து வணங்கப்பட்டு வருகிறது. 'மாரி' என்ற பெயர் மழையுடனும், 'அம்மன்' என்ற பெயர்ப்பகுதி தாயுடனும் தொடர்புடையது. பிற்காலத்தில் இந்த அம்மன் வழிபாடு பார்வதி, காளி, துர்க்கை, திரௌபதை ஆகிய தெய்வங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டது.





*யாழ்ப்பாணத்தில் குரும்பசிட்டி கிராமத்திலுள்ள முத்துமாரி அம்மன் கோயிலும், கோயிலுக்குள்ளே ஆதிமூலத்தில் எழுந்தருளியிருக்கும் தாய்த்தெய்வமும்.*

## கண்ணகி அம்மன் வழிபாடு

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கண்ணகி அம்மன் தெய்வமாக மக்களால் இன்றுவரை வழிபட்டுவரப்படுகிறாள். இவற்றில், கந்தரோடையில் அழிந்துபோய்விட்ட அங்கணாமைக்கடவை அம்மன் கோயில் இலங்கை அரசன் கஜபாகுவினால் கொண்டுவரப்பட்ட கண்ணகி சிலையை வைத்துப் பிரகடனப்படுத்தப்பட்டது என சிங்கள அறிஞர் போல் பீரிஸ் கூறியுள்ளார். அங்கணாமைக்கடவை என்ற பெயர் இன்றுவரை அப்பகுதிக்கு வழக்கில் உள்ளது. 'அங்கண்' என்றால் கண்கள் என்று பொருள். 'அம்மை' என்றால் தாய் எனப் பொருள்படும். கண்ணகி அம்மன் வழிபாடு பௌத்த மதத்துடனும் (பத்தினி வழிபாடு) தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கண்ணகி அம்மனாக வழங்கப்பட்டு வரும் கோயில்கள் உள்ளன. வறுத்தலைவிளான் கிராமத்திலுள்ள கண்ணகி அம்மன் கோயில், ஊரெழு கண்ணகி அம்மன் கோயில், வரணியிலுள்ள சித்திவேரம் கண்ணகி அம்மன் கோயில், காரைநகர் மடத்துக்கரை கண்ணகி அம்மன் கோயில் என்பன இவற்றில் முக்கியமானவை. தமிழகத்தில் கண்ணகி வழிபாடு வழக்கிழந்து போய்விட்ட போதிலும், யாழ்ப்பாணத்தில் இவ்வழிபாடு இன்றுவரை தொடர்ந்து நடைபெறுகிறது.



*ஊரெழு கண்ணகி அம்மன் கோயில்*

## ஐயனார் ஆலயங்கள்

யாழ்ப்பாணத்தில் பண்டைய காலம் தொட்டு, நெடுங்காலமாக வழிபட்டு வரும் நாட்டார் தெய்வங்களில் ஐயனாரும் ஒருவராவார். இத்தெய்வம் சமஸ்கிருதத்தில் 'சாஸ்தா' என்றும், தமிழில் 'சாத்தன்' எனவும் அழைக்கப்படுகிறது. பழந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம் சாத்தனுக்கான கோயில்களும், பக்தர்களும் இருப்பதைக் குறிப்பிடுகிறது. சைவ நாயன்மார்களில் ஒருவரான திருநாவுக்கரசர் தனது தேவாரத்தில் (திருமுறை, 4:32:4) சாத்தனை சிவனின் மகன் எனக் குறிப்பிடுகிறார்:

> *"பார்த்தனுக் கருளும் வைத்தார் பாம்பரை ஆட வைத்தார்*
> *சாத்தனை மகனாய் வைத்தார் சாமுண்டி சாமவேதங்*
> *கூத்தொடும் பாடவைத்தார் கோளரா மதிய நல்ல*
> *தீர்த்தமுஞ் சடைமேல் வைத்தார் திருப்பயற் றூரனாரே"*

## அனலைதீவு ஐயனார் கோயில்

இலங்கையில் ஐயனார் கோயில்கள் குளங்கள் அல்லது ஏரிக் கரைகளிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நீர் நிலைகளின் பாதுகாவலன் என்ற நம்பிக்கை இவற்றை ஐயனார் வழிபாட்டுடன் தொடர்புபடுத்துகிறது. கிராமங்களிலுள்ள ஐயனார் கோயில்களின் சிலைகளில் மேனிக்கு சிவப்பு வண்ணம் பூசப்பட்டு வலது கரத்தில் ஒரு தண்டமோ அல்லது வாளோ அல்லது ஒரு சவுக்கோ கொடுக்கப்பட்டிருக்கும். இக்கோயில்களுக்கு அருகில் காணப்படும் சுடுமண்ணினால் செய்யப்பட்ட யானை, குதிரை, நாய் ஆகிய மிருகங்கள் அவருக்கு நிவேதனமாக மக்களால் கொடுக்கப்பட்ட சிலைகளாகும்.

பொதுவாக விவசாய சமூகத்தவரது வழிபாட்டுத் தெய்வமாக அமைந்துள்ள இக்கடவுளின் கோயில் கிராமத்தின் தென்மேற்குத் திசையில் அமைந்திருப்பது

வழக்கம். வட யாழ்ப்பாணத்தில் கட்டுவன் என்ற பெயர் கொண்ட பூர்விகக் கிராமத்தில் உள்ள புராதன ஐயனார் கோயில் அந்த ஊரின் தென்மேற்கு மூலையில் ஒரு குளத்தின் அருகே காணப்படுகிறது. அவ்வூரின் மக்களில் பலர் அவரைத் தங்களது குலதெய்வமாக வணங்கி வருகிறார்கள். இவர், தனது பரிவாரங்களுடனும், பாவாடைராயன், குப்புசாமி ஆகிய உதவியாளர்களுடனும் இரவில் ஊரைக் காவல் புரிகிறார் என்ற நம்பிக்கையும் மக்கள் மத்தியில் நிலவுகிறது.

சமஸ்கிருத நூல்களில் 'சாஸ்தா' என்ற பெயர் முதலில் புத்த பகவானுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. பின்னர் விஷ்ணு புராணத்தில் 'சாஸ்தா' என்ற பெயர் 'மண்டலத்து அரசன்' என்ற பொருளில் வழங்கப்பட்டது. பாகவத புராணத்தில் சிவனுக்கும், மோகினி வடிவம் எடுத்த விஷ்ணுவிற்கும் 'ஹரிஹர புத்ரன்' என்ற மகன் பிறந்ததாகக் கூறப்படுகிறது.

பத்தாம் நூற்றாண்டளவில் கேரள நாட்டின் மக்கள் மரபுக்கதை ஒன்றில் (Folklore), முற்காலத்தில் பம்பை நதிக்கரையிலிருந்த பண்டலம் நாட்டில் அவனது மாற்றாந்தாயான அரசி அந்நாட்டின் இளவரசனான மணிகண்டனை புலிப்பால் கொண்டுவருமாறு காட்டுக்குள் அனுப்புகிறாள். அவன், காட்டில் அவனை எதிர்த்த மகிஹி என்ற பெண் இராட்சசியைக் கொன்றுவிட்டு, ஒரு புலியில் சவாரி செய்து கொண்டு நாட்டுக்குத் திரும்புகிறான்.

அவனிடம் தெய்வாம்சம் இருப்பதைக் கண்ட அவனது தந்தையான அரசன் மணிகண்டனுக்குக் கோயில் எழுப்புகிறார். பிற்காலத்தில் மணிகண்டன் என்ற இளவரசனுக்கு 'ஐயப்பன்' என்ற பெயர் வழங்கப்பட்டு, அவனை 'ஹரிஹர புத்திரனாக்கி', 'சாஸ்தாவாக்கி' கோயில்கள் அமைக்கப்பட்டன. அந்நாட்டின் பண்டைய ஐயனார் கோயில்கள் ஐயப்பன் கோயில்களாக மாற்றப்பட்டன. இலங்கையிலும் சில பழைய ஐயனார் கோயில்கள் இக்காலத்தில் ஐயப்பன் கோயில்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

## வைரவர் கோயில்கள்

யாழ்ப்பாணக் கிராமங்களில் அதிகமாகக் காணப்படும் கிராமியத் தெய்வக் கோயில்கள் வைரவர் கோயில்களாகும். இத்தெய்வத்தின் கோயில்கள் இல்லாத கிராமம் எதுவுமே இல்லை என்று கூறிவிடலாம். வைரவர், கிராமங்களைக் காப்பாற்றும் மிக வலிமைமிக்க தெய்வமாகக் கருதப்படுகிறார். வைரவர் சிவனின் ஆற்றல்மிக்க அச்சமூட்டும் அவதாரமாகும். இந்து மத இதிகாசங்களில் வைரவர் 'தண்டபாணி' என்ற பெயராலும் அழைக்கப்படுகிறார். வலது கையில் பிடித்த ஒரு தண்டத்தைக் கொண்டு பாவம் செய்தவர்களைத் தண்டித்து விடுவதால் இந்தப் பெயரைப் பெற்றார்.

சிவபுராணத்தில் வைரவரின் தோற்றம் பற்றிய ஒரு கதை கூறப்படுகிறது. பிரம்மாவுக்கும், விஷ்ணுவிற்கும் தங்களில் யார் பெரியவர் என்ற போட்டி ஏற்பட்டபோது, அதைத் தீர்த்து வைப்பதற்காக சிவன் நீண்டுயர்ந்த ஒளி உமிழும் ஒரு தூணாகக் காட்சியளித்து அதன் அடியையும், முடியையும் அவர்களைக் கண்டறியும்படி போட்டி வைத்தார்.

பிரம்மா நாணயமற்று ஏமாற்றி தான் ஒளித்தூணின் உச்சியைத் தொட்டு வெற்றிபெற்றுவிட்டதாகக் கூறினார். கோபமடைந்த சிவன் தனது இரு புருவங்களுக்கும் இடையிலிருந்த நெற்றிக் கண்ணைத் திறந்து அதிலிருந்து புறப்பட்ட ஒளியால் வைரவரை உருவாக்கினார். சிவனின் உத்தரவுப்படி வைரவர் பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றைத் தனது வாளினால் அறுத்தெறிந்தார். விஷ்ணு பிரம்மாவின் சார்பில் கருணை கோரியதைத் தொடர்ந்து சிவன் இருவரையும் மன்னித்தார் (Shastri, J. L. 2000: 57-60).

ஞான வைரவர், கால வைரவர், கபால வைரவர், மகாருத்ர வைரவர், வீரபத்திரர் என்பன இத்தெய்வத்தின் மாற்று வடிவங்கள். நாய் இத்தெய்வத்தின் வாகனமாகும்.

## மற்றைய கிராமியத் தெய்வங்கள்

யாழ்ப்பாணக் கிராமங்களில் பண்டைய கிராமியத் தெய்வங்களாக பெரிய தம்பிரான், நாகதம்பிரான், காலகண்டன், கொற்றிக் கிழவன், பூதவராயர், முனி, அண்ணமார், சேவுகர், விறுமர், இதும்பன், வல்லியக்கன், காத்தவராயர், கொட்டி, காளி, நீலி, பேச்சி, ஆழ்வாத்தை, மாரி, நாச்சிமார் ஆகிய தெய்வங்களின் பெயர்கள் கூறப்படுகின்றன. இவற்றில் நாகதம்பிரான் இக்காலக் கோயில்களில் ஒரு துணைத் தெய்வமாக இருப்பது ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

'வல்லியக்கன்' என்ற பெயர் ஓர் யக்ஷத் தெய்வத்தைக் குறிக்கும் பெயர். இத்தெய்வம் யாழ்ப்பாணத்திலுள்ள பறையர் சமூகத்தினரால் வணங்கப்பட்டு வருகிறது (Ragupathy, P. 1987: 217).

'பெரியதம்பிரான்', 'பூதவராயர்', 'கொற்றிக்கிழவன்' என்ற பெயர்கள் சிவனின் மாற்றுப்பெயர்களாகும். இவர்களில் 'பெரியதம்பிரான்' வண்ணார் சமூகத்தினரால் வணங்கப்பட்டு வருகிறது (McGilvary, D.B. 1974: 205).

4

# பகுதி -2

## புராதன வழிபாட்டுச் சின்னங்களும் சில பண்டைய கோயில்களும்

### வேல் வழிபாடு

யாழ்ப்பாணத்தில் கந்தரோடை அகழ்வுகளில், பெருங்கற்காலக் கலைப் பொருட்களுடன் வெண்கலத்தினாலான வேல் ஒன்று கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. வேல் வழிபாடு முருகக் கடவுளுடன், அவரது முக்கிய ஆயுதமாகக் கருதப்பட்ட போதிலும் பெருங்கற் பண்பாட்டுக் காலத்தில் முருக வழிபாடு யாழ்ப்பாணத்தில் இருந்ததா? என்பதை நிச்சயமாகக்கூற முடியவில்லை.



*கந்தரோடை அகழ்வுகளில் கண்டெடுத்த வெண்கல வேல். நன்றி: ப. புஷ்பரட்ணம்.*

சந்திரகுப்த விக்கிரமாதித்ய மன்னனின் (கி.பி. 375-413) அவைப் புலவனான மகாகவி காளிதாசனின் குமாரசம்பவத்தில் ஸ்கந்தன் கரத்தில் வேலுடன் வர்ணிக்கப்படுகிறார். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஸ்கந்தபுராணத்தில் கையில் வேலுடன் ஸ்கந்தன் காட்சி தருகிறார். அப்புராணத்தைத் தழுவி காஞ்சிபுரத்து குமரக்கோட்டத்தில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியார் எழுதிய கந்தபுராணத்தில் கையில் வேலுடன் வள்ளி-தேவயானி சமேதராய் மயிலின் மேல் அமர்ந்த கந்தன் காட்சி தருகிறார்.

ஆனாலும், கந்தனை வேலோடு இணைத்த பெருமைக்குரியவர்கள் இவர்கள் அல்ல. தமிழகத்தில் வாழ்ந்த ஆதிக் குடிமக்கள் பேணி வணங்கிய கந்தசாமி ('கந்த' என்றால் ஒஸ்ரிக் மற்றும் முண்டா மொழிகளில் 'மலை' என்று அர்த்தம். கந்தசாமி என்றால் மலைச்சாமி) கையில் வேலுடன் காட்சிப்படுத்தப்படுகிறார். தமிழகத்தின் ஆதிக் குடிமக்கள் வணங்கிய தெய்வங்களுள் கந்தசாமி எனப்படும் கந்தனும் ஒருவர்.

தமிழில் சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படை பண்டைக்காலத் தமிழரின் தனிப்பெரும் தெய்வமான முருக வழிபாட்டைப் பற்றிக் கூறும் முதல் நூல். அந்த முருகன் கையிலிருந்த ஆயுதம் வேல்தான். பின்னால் வந்த கச்சியப்பர் செய்ததெல்லாம் வட இந்திய ஸ்கந்தனையும் தமிழரின் தெய்வமான முருகனையும் ஒன்றாக இணைத்து நமக்கு 'கந்தன்' ஆக்கித் தந்ததுதான். ஆனாலும், கந்தபுராணம் சிறப்பான ஒரு சமய இலக்கியம் என்பதனை மறுக்க முடியாது.

### திரிசூல வழிபாடு



*பெருங்கற் புதையல்களில் கண்ட திரிசூலம், வேல்.*



*திரிசூலம் பிடித்த*



*திரிசூலம் பிடித்த சிவன்*

இந்துமதம் என்றொரு சமயம் ஆரம்பிப்பதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பிருந்தே உலகின் பல பகுதிகளில் திரிசூலத்தை ஒரு வழிபாட்டுப் பொருளாக பல சமூகங்கள் ஏற்றுக்கொண்டிருந்தன. கி.மு. 1200 ஆம் ஆண்டுகளுக்குரிய தென்னிந்திய, இலங்கையின் பெருங்கற் பண்பாட்டுப் புதைகுழிகளில் இரும்பு, செம்பு ஆகிய உலோகங்களாலான திரிசூலம், வேல் ஆகிய வழிபாட்டுப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்து மதத்தில் சிவனின் ஆயுதமான திரிசூலம் ஓர் ஆற்றல் மிக்க, பெருஞ் செல்வாக்குடைய சமயச் சின்னமாக விளங்குகிறது. அவரது முத்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றை கையில் பிடித்த திரிசூலத்தின் மும்முனைகளும் பிரதிபலிப்பதாகக் கூறப்படுகிறது. கிரேக்க இலக்கியங்களில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில்

கையில் திரிசூலம் பிடித்த ஒலிம்பியக் கடவுளான பொஸிடொன் குறிப்பிடப்படுகிறார். கையில் திரிசூலம் பிடித்தவண்ணம் எருது வாகனத்தில் எழுந்தருளி வரும் பொஸிடொன் கடவுளுக்கும் சிவனுக்குமிடையிலுள்ள ஒற்றுமை நம்மை வியப்படைய வைக்கிறது. கிரேக்கரின் ஸீயுஸ் கடவுளும் திரிசூலம் பிடித்திருக்கிறார். ஸீயுஸ், யூரோப்பா என்ற பீனீசிய இளவரசியைக் கடத்துவதற்காக எருது உருவம் எடுத்த ஐதீகக் கதை கிரேக்க இலக்கியங்களில் இடம்பெறுகிறது.

பண்டைய அரேபியாவில் ஓமான் நாட்டில் காணப்படும் குகை ஓவியங்களில் பாறையில் பொறிக்கப்பட்ட திரிசூலங்கள் வணக்கத்திற்குரிய சின்னங்களாகக் கருதப்படுகின்றன (Overlaet, B. et al., 2024: 126-135).

இந்து மதத்தில் பெண் தெய்வங்களான துர்க்கை, காளி இருவரும் கைகளில் திரிசூலம் ஏந்தி வருகிறார்கள். துர்க்காதேவி திரிசூலம் ஏந்தி சிங்க வாகனத்தில் வருகிறார். இதுபோலவே பண்டைய சுமேரியப் பெண் தெய்வமான இஷ்தார் கையில் வேலுடன் சிங்க வாகனத்தில் ஏறி வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்திலுள்ள பல சிறிய கிராமியக் கோயில்களில் இரும்பினால் செய்யப்பட்ட திரிசூலம் ஒன்றுதான் தெய்வமாக வணங்கப்படுகிறது. சில ஊர்களில் திரிசூலம் ஆலமரத்தின் கீழ் வைத்து வணங்கப்படுகிறது. குளிக்கும் கேணிகளுக்கு அருகாமையில் காவல் தெய்வச் சின்னமாகவும் இவை நடப்பட்டிருக்கும். பண்டைய சமுதாயங்களில் சிவலிங்க வழிபாடு போன்று திரிசூல வழிபாடும் சிவ வழிபாட்டிற்கான சின்னமாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதியில் ஒரு கிராமியச் சின்னமாக வழிபட்டு வந்த திரிசூலமே பின்னர் பெருங்கற் பண்பாட்டு நிவேதனப் பொருளாக வைக்கப்பட்டது என்பது சில தொல்லியல் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

## நந்தி - எருது வழிபாடு

உலகில் மத்திய தரைக்கடல், ஐரோப்பிய, மேற்காசிய, தெற்காசிய நாடுகளில் பல சமூகங்களில் காளை ஒரு வழிபாட்டுப் பிராணியாகக் கருதப்பட்டு வந்துள்ளது. துருக்கியில் பண்டைய அனடோலியாவில் 'கேட்டல்ஹோயக்' (Çatalhöyük) என்ற இடத்தில் கி.மு. 7000 ஆண்டுகளுக்குரிய காளைகளின் வண்ண ஓவியங்கள் அன்றைய கோயில் சுவர்களில் வரையப்பட்டுள்ளன. இந்த ஓவியங்களைத் தவிர காளைகளின் கபால எலும்புகளும் காளைகளின் தலைச் சிலைகளும் சுவர்களில் மாட்டி வைக்கப்பட்டுள்ளன. சில ஓவியங்களில் தாய்க் கடவுளிலிருந்து காளை மாடு பிறந்ததாகக் காட்டப்படுவது தாய்க் கடவுள் வழிபாட்டிற்கும் காளைக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுகிறது.

மேற்காசியாவில் சுமேரிய, இலமைற் நாகரிகங்களில் எருது கடவுளின் ஓர் அவதாரமாகக் கருதப்பட்டுள்ளது. சுமேரியத் தெய்வங்களான என்லில், என்கி என்போர் கவிதைகளில் 'புனித எருதுகளாக' வருணிக்கப்படுகிறார்கள். அவர்களின் அரச முத்திரைகளில் தெய்வங்களோடு காளைகளும் காணப்படுகின்றன.

சிந்துவெளி அகழ்வுகளில் கி.மு. 3000 ஆண்டுகளுக்குரிய ஏரி கொண்ட எருதுகளின் முத்திரைகளும் சுடுமண் உருவங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்துமதப் புராணங்களில் சிவனின் வாகனமாக எருதைக் குறிப்பிடுவது இப்பண்பு சிந்துவெளிப் பண்பாட்டிலிருந்து உதயமானதாகக் கருத இடமுள்ளது. பின்னர் வந்த இந்தோ - ஆரியர்கள் பசுவைத் தெய்வ அம்சமாகக் கருதினார்களே ஒழிய எருதை அல்ல.

தமிழகத்தில் உழவர் திருநாளாகிய தைப்பொங்கலைக் கொண்டாடிய மக்கள் ஆண்டு முழுவதும் வயலிலும் வீட்டிலும் உழைத்த எருதுகளுக்கு 'மாட்டுப் பொங்கல்' வைத்துக் கொண்டாடினார்கள்.

நீண்டகாலமாக யாழ்ப்பாண நகரங்களில் இருந்து ஆட்சி புரிந்த அரசர்கள் தாங்கள் வெளியிட்ட நாணயங்களில் தங்களது அரசின் சின்னமாக எருதின் உருவங்களை வெளியிட்டார்கள். ஆரம்பகால சதுர வடிவ நாணயங்களில் எழுந்து நிற்கும் எருதையும், கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் வெளிவந்த வட்ட வடிவ நாணயங்களில் படுத்திருக்கும் காளையையும் காணலாம். யாழ்ப்பாண இராச்சியத்தின் அதிகாரபூர்வமான நந்திக் கொடியில் படுத்திருக்கும் காளையின் உருவம் பதியப்பட்டுள்ளது.



*யாழ்ப்பாணத்தில் உடுத்துறை என்ற கிராமத்தில் கிணறு தோண்டிய போது நிலத்திலிருந்து நான்கு அடி ஆழத்தில் கண்டெடுத்த நந்தியின் பளிங்குக் கற்சிலை. நன்றி: கலாநிதி பரமு புஷ்பரட்ணம்.*

**யாழ்ப்பாண அரசின் அதிகாரபூர்வச் சின்னமான நந்திக் கொடி**



*கந்தரோடை வெண்கலத் தெய்வ உருவங்கள்*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா கந்தரோடையில் மேற்கோண்ட அகழ்வுகளில் மூன்று முற்கால வெண்கலத் தெய்வ உருவங்களையும், ஒரு பித்தளை உருவத்தையும் கண்டெடுத்தார். அவை: விநாயகரின் இரு வெண்கல உருவங்கள், ஹனுமானின் ஒரு வெண்கல உருவம், பாலகிருஷ்ணனின் ஒரு பித்தளை உருவம். இவற்றைப் பற்றி விவரமாக அவரது 'இலங்கையில் இந்து வெண்கலப் படிமக்கலை மரபுகள்' என்ற நூலில் கூறியிருக்கிறார் (கிருஷ்ணராசா, செ. 2008: 55-67).

பெருங்கற்காலச் சின்னங்களினிடையே கண்டெடுத்த விநாயகரின் உருவம் முற்கால வெண்கலத்தினால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த உருவத்தில் விநாயகரின் முகம், இரு காதுகள் நீண்ட துதிக்கை ஆகிய உறுப்புகள் மட்டுமே கிடைத்திருக்கின்றன. உடலின் மிகுதிப்பகுதி கிடைக்கவில்லை. இது விநாயகக் கடவுளின் ஆரம்பகாலச் சிலையாகக் கருதப்படுகிறது.

இரண்டாவது விநாயகர் உருவம் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்த கற்பொக்கணை என்ற கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டது. வழுக்கை ஆறு ஆதியில் கந்தரோடையிலிருந்து மேற்குக் கடலுக்குச் சிறு படகுகள் சென்றுவந்த நீர்வழியாகக் கருதப்படுகிறது. 9 செ.மீ. உயரமும் 5 செ.மீ. அகலமும் கொண்ட இவ்விநாயகரின் வெண்கல உருவம் ஒரு சதுரமான பீடத்தின் மேலுள்ள தாமரைப் பீடத்தின் மேல் நிற்பதாகக் காட்டடப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தின் உருவ அமைப்பு, அணிகலன்கள், இரட்டைப் பீடம் என்பன இவற்றை இந்தியச் சிற்பங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. இது யாழ்ப்பாண வெண்கலக் கொல்லர்களின் தனித்துவமான கைவினைத்திறனைக் காட்டி நிற்கிறது (கிருஷ்ணராசா, 2008: 59).

இராமரின் தூதுவனான ஹனுமான் பறப்பது போன்ற நிலையிலுள்ள வெண்கலச் சிற்பம் 6 செ.மீ. விட்டம் கொண்ட வட்ட வடிவான ஒரு சட்டகத்தினுள் காணப்படுகிறது. கைகளை விரித்தவண்ணம் தனது இடப்பக்கத்தை நோக்கிப் பறப்பது போல சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் அணிந்திருக்கும் உடை, அணிகலன்கள், சிற்பத்தின் தோற்றம் என்பன கி.பி. மூன்றாம் - ஐந்தாம் நூற்றாண்டுகளின் ஆந்திரக் கலை மரபை நினைவுபடுத்துகின்றன (கிருஷ்ணராசா, 2008: 62).

கற்பொக்கணை என்ற கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட மற்றொரு செப்பு உருவம் கிருஷ்ண பகவானின் இளவயதுத் தோற்றமான பாலகிருஷ்ணனின் உருவமாகும். தவழும் குழந்தையான கிருஷ்ணர் இடது கரத்தை நிலத்தில் ஊன்றி எழுந்து நிற்க முயற்சிப்பது போல உருவம் அமைக்கப்பட்டுள்ளது. அவரது தலையில் கரண்ட வளையங்களைக் கொண்ட உயரமான தலைமுடி காணப்படுகிறது. காதுகளில் காதணிகளும், கழுத்தில் மூன்று சங்கிலிகளும் அணிந்துள்ளார். இடுப்பில் அரைஞாணும், கரங்களில் காப்புகளும், கால்களில் கால் சிலம்புகளும் காணப்படுகின்றன. இந்த உருவச் சிலை கி.பி. 10 - 11 ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியதாகக் கணிக்கப்படுகிறது (கிருஷ்ணராசா, 2008: 63-64).

இச்சிலைகள் யாவும் இன்று யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.



விநாயகரின் ஆரம்பகால உருவம்



ஹநுமானின் வெண்கல உருவம்



பாலகிருஷ்ணனின் செப்பு உருவம்



பாலகிருஷ்ணனின் பின்புறத் தோற்றம்

*படங்கள் நன்றி: கலாநிதி செ. கிருஷ்ணராசா.*

## கீரிமலைச் சிவன் கோயில்



*கீரிமலை நகுலேஸ்வரம் சிவன் கோயிலின் இன்றைய தோற்றம்.*

யாழ்ப்பாணத்தின் வடகரையில் காங்கேசன்துறைக்கு அடுத்து மேற்குப் பக்கமாகக் காணப்படும் கிராமம் கீரிமலை. கீரிமலை என்ற பெயர் அந்தக் கிராமத்திற்கும் அங்கே கடற்கரையோரமாகக் காணப்படும் புனித நீரூற்றுக்கும் வழங்கப்பட்டுள்ளது. முற்காலத்தில் 'கீரிமலை' என்ற பெயர் இந்த நீரூற்று இருக்கும் இடத்திற்கு அரை மைல் கிழக்கே கடலுக்குள் துருத்திக்கொண்டிருக்கும் சுண்ணாம்புக் கற்பாறைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. சமஸ்கிருதத்தில் இது நகுலகிரி என அழைக்கப்பட்டது. இந்தப் பாறையின் 'கீரிமலை' என்ற பெயரே பின்னாளில் இக்கிராமத்தின் பெயராகவும் ஆனது. கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இப்பாறை கடலுக்குள் நீண்ட தூரம் வரை துருத்திக்கொண்டிருந்ததாகவும், இப்பாறையின் உச்சியில் வட்ட வடிவக் கோபுரத்துடன் திருத்தாம்பலேஸ்வரர் சிவன் கோயில் இருந்ததாகவும், காலப்போக்கில் கடல் அரிப்பினால் இந்தப் பாறையும் அதன் மேலிருந்த கோயிலும் கடலில் மூழ்கிவிட்டதாகவும் மரபுவழிக் கதைகள் உள்ளன. இப்பாறைக்கு எதிரே கடலின் அடியில் வெகுதூரம் பரவிக் கிடக்கும் பாறைக்கற்கள் இந்த ஐதீகத்திற்கு வலுச்சேர்க்கின்றன (Thiagarajah, S., 2012: 12).



*கடலுக்குள் துருத்திக் கொண்டிருக்கும் கீரிமலைப் பாறையின் உடைந்த பகுதி.*

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் பாசுபத சைவத்தை ஆரம்பித்து வைத்தவர் புனித லிகுலீசர். லிங்க புராணத்தில் (அத்தியாயம் 23) சிவன் தனது 28 ஆவது பிறப்பில் 'நகுலீசர்' என்ற பெயர் கொண்ட ஒரு துறவியாகப் பிறந்தார் எனக் கூறப்படுகிறது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் லிகுலீசரின் பாசுபத சைவ ஆதரவாளர்கள் அழிந்துபோன திருத்தாம்பலேஸ்வரம் கோயிலைத் திரும்பவும் கட்டியெழுப்பியபோது, சிவனின் மாற்றுப் பெயரான நகுலீசரை நினைவுபடுத்தி இந்த ஆலயத்திற்கு நகுலேஸ்வரம் எனப் பெயரிட்டதாக ஐதீகக் கதை உள்ளது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கதிரமலையிலிருந்து (கந்தரோடை) ஆட்சி புரிந்த உக்கிரசிங்கன் என்ற அரசன் இக்கோயிலைத் திருப்பிக் கட்டியதாக யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாண வைபவமாலை, தக்ஷிண கைலாசபுராணம் ஆகிய நூல்களில் இக்கோயில் பற்றிய தகவல்கள் காணக்கிடக்கின்றன. இக்காலத்தில் இக்கோயில் கீரிமலைச் சிவன் கோயில் என அழைக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலுமிருந்தும் பக்தர்களும், யாத்திரிகர்களும், பார்வையாளர்களும் திருவிழாக் காலங்களிலும், முக்கியமான மத சம்பந்தமான சமயங்களிலும், சாதாரண நாட்களிலும் இந்த ஆலயத்திற்கு வருகை தந்த வண்ணமே இருக்கிறார்கள்.

இறந்தவர்களுக்கான சபிண்டீகரண கிரியைகள் செய்வதற்கு உகந்த இடமாக கீரிமலை விளங்குகிறது. இங்கு புனிதத்தன்மையுடன் மேற்கொள்ளப்படும் அஸ்திசஞ்சாயனம் கதிர்காமம், கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய தலங்களில் மேற்கொள்ளப்படும் பூசைகளுக்கு இணையானதாகக் கருதப்படுகிறது (Celliah, Y., 2006). ஆடி அமாவாசை தினங்களில் யாழ்ப்பாண நாட்டின் ஆண்களில் பெரும்பாலானோர் தங்களின் முன்னோர்களுக்கான சடங்குகளை மேற்கொண்டு புனித நீராடுவதற்காக இந்தத் தலத்திற்கு வருவார்கள்.

கி.பி. 1621 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் இந்த மண்ணின் இந்து ஆலயங்களின் அரும்பொருள் செல்வங்களை அபகரித்துக்கொண்டு அவற்றை முறையாக இடித்துத் தள்ளினர். நகுலேஸ்வரம் ஆலயத்தை நோக்கி போர்த்துக்கேய இராணுவத்தினர் வருகிறார்கள் என்பதை அறிந்த கோயில் தலைமைப் பூசகரான பரசுபாணி ஐயர், கோயிலின் ஆதிமூலத்தில் இருந்த தங்கத்தினாலான சிவ, பார்வதி விக்கிரகங்களையும் கோயில் ஆபரணங்களையும் ஒரு வேட்டியினுள் சுற்றி மடித்து, அதைக் கோயில் கிணற்றினுள் போட்டுவிட்டு, அதற்கும் மேலே பல அடுக்குகள் கடற்கரை மணலைப் போட்டுவிட்டு, தலைமறைவாக மறைந்துவிட்டார். போர்த்துக்கேய அதிகாரிகள் பல ஆண்டுகளாகத் தேடியும் ஆலயத்தின் ஆபரணங்களையோ பரசுபாணி ஐயரையோ கண்டுபிடிக்க முடியவில்லை (Muthuthambipillai, A., 1915: p. 76).

இலங்கையில் டச்சுக்காரரின் (ஒல்லாந்தரின்) ஆட்சியைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பிரித்தானியர், போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இந்துக் கோயில்களைத் திரும்பவும் கட்டி, மக்களின் கிராமியக் கோயில் வழிபாடுகளைத் தொடர்வதற்கு அனுமதி அளித்தார்கள். இலங்கையில் இந்துமதம் மற்றும் தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்கு இயக்குநராக இருந்த ஆறுமுக நாவலரும் அவரது சகாக்களும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியால், பல பயனாளிகளினதும் கொடையாளர்களினதும் பண உதவியோடு இக்கோயில் கட்டி முடிக்கப்பட்டு, 1882 ஆம் ஆண்டு ஆனி மாதம் கும்பாபிஷேக விழாவுடன் ஆரம்பிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி மாலை நான்கு மணியளவில் பல நூறு பக்தர்கள் கூடியிருந்து அங்கே திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், இந்த ஆலயம் இலங்கை விமானப் படையின் கொடுமையான வான் தாக்குதலுக்கு உள்ளானது. வானத்திலிருந்து அடுக்கடுக்காகப் போடப்பட்ட மூன்று பெரிய குண்டுகள் கோயிலின் கோபுரம், விமானம், பிரகாரம் ஆகியவற்றை வெடித்துச் சிதறச் செய்தன. நூற்றுக்கணக்கான பக்தர்கள் தலத்திலேயே உயிரிழந்தார்கள்; மேலும் பலர் அங்கவீனர்களாக ஆனார்கள் (Neminathan, M., 2004).

கடந்த பல ஆண்டுகளாக இக்கோயிலின் பெருமை பாடும் தலபுராணங்களும் வரலாற்று நூல்களும் வெளிவந்துள்ளன. அவற்றுள் முக்கியமானவை: மாதகல் ஏரம்ப ஐயர் (1847-1914) எழுதிய நகுலேசர் புராணம், நீர்வேலி எஸ். சிவப்பிரகாசம் எழுதிய நகுலேஸ்வர மான்மியம், சுன்னாகம் குமாரசாமிப் புலவர் எழுதிய நகுலேசர் ஊஞ்சல், கட்டுவனூர் மயில்வாகனப் புலவர் (1875-1919) எழுதிய நகுலேசுவரர் வினோத விசித்திர கவிப்பூங்கொத்து, கட்டுவனூர் பண்டிதர் நமசிவாய தேசிகர் எழுதிய நகுலேசர் திருவந்தாதி என்பனவாகும்.

சமீபகாலங்களில் வெளிநாடுகளில் வாழும் பல நல்லுள்ளங்களின் உதவியோடு வரலாற்றுப் பெருமை வாய்ந்த இக்கோயில் மீண்டும் புனருத்தாரணம் பெற்றுள்ளது.

## முருக வழிபாடு

வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலிருந்தே தமிழ் மக்களுக்கு மிகப் பிடித்தமான, பிரபலமான தெய்வமாக விளங்கியவர் முருகக் கடவுள். இன்றுவரை தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வாழும் பெரும்பாலான தமிழர்களின் சமயக் கோட்பாடுகளிலும் பாரம்பரியச் சிந்தனைகளிலும் நடைமுறையிலும் முருக வழிபாடு ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இத்தெய்வத்திற்கு கந்தசுவாமி, சுப்பிரமணியர், கார்த்திகேயர், குமாரசுவாமி, ஆறுமுக சுவாமி, சண்முகன், வேலாயுதன் ஆகிய மாற்றுப்பெயர்கள் உள்ளன. இந்தப் பெயர்களில் 'கந்த' என்றால் புராதன ஒஸ்திரலோயிட் மக்கள் பேசிய ஒஸ்ரிக் மற்றும் முண்டா மொழிகளில் 'மலை' என்று அர்த்தம். அந்த மொழிகளில் 'கந்தசுவாமி' என்றால் மலைத் தெய்வம் என்று பொருள்படும்.

புராணங்களிலும் உருவச் சிலைகளிலும் சித்திரங்களிலும் இளமையான, வனப்புமிக்க, அழகான, ஞானம் மிகுந்த தெய்வமாக இவர் சித்தரிக்கப்படுகிறார். தமிழ் மொழியில் 'முருகு' என்றால் எல்லையற்ற அழகு என அர்த்தம். கலை வடிவங்களிலும் இலக்கியங்களிலும் முருகன் அதீத அழகனாகவே வர்ணிக்கப்படுகிறார்.

வடமொழிப் புராணங்களிலும் காளிதாசனின் குமாரசம்பவம் காவியத்திலும் 'ஸ்கந்தன்' சிவன்-உமா தம்பதிகளின் மகனாகக் கூறப்படுகிறார். இந்திரனின்

மகளான தேவசேனையும் குறவர்களின் மகளான வள்ளியும் அவரது மனைவியர்கள். மயிலும் யானையும் அவரது வாகனங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

தமிழ் மக்களின் பாரம்பரியத்தில் தமிழகத்தின் பாதுகாவல் தெய்வம் முருகன்; தமிழ் மொழியினதும் தமிழர் பண்பாட்டினதும் புரவலர் முருகன். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பல கோயில்களில் பல வழிகளில் பல வகைகளில் முருக வழிபாடு அன்புடனும் பக்தியுடனும் பரவசத்துடனும் நடைபெற்று வருகிறது (Pathmanathan, S., 2006: 338).

முருக வழிபாடு பல வகையான பாரம்பரியங்களை உள்ளடக்கியுள்ளது. சேர் பொன்னம்பலம் அருணாசலம் அப்பாரம்பரியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்:

'அவ்வழிபாட்டு முறைகளில் பூர்வீக நிலையிலிருந்து முன்னேற்றமடைந்த உயர்தர நிலைகள்வரை காண முடிகிறது. அர்ச்சகர்கள் விரிவான சடங்குகளுடனும் பூசைகளுடனும் வழிபடுவார்கள்; பக்தர்கள் பக்திப் பாடல்களுடனும் திருப்புகழ் பாடியும் தொழுவார்கள்; வேடர்கள் பழங்குடி நடனமாடி அவரை வரவழைப்பார்கள்; புலையர்கள் ஊனும் இரத்தமும் நிவேதனமாக அளிப்பார்கள்; ஞானிகள் அமைதியான தவத்தில் உயர்வான பரம்பொருள் சுப்பிரமண்யராக அவரை வணங்குவார்கள். மனிதர்களிடத்தில் கொண்ட அன்பினால் இளமையும் ஞானமும் கொண்ட கடவுளாகக் காட்சி தருவார்; கொடுமையான அசுரரை அழிக்க போர்க்கோலம் கொண்ட வீரனாகப் புறப்படுவார்; அவரது பக்தர்களுக்காக என்றும் எப்போதும் வற்றாத மென்மையான அழகனாகச் சேவை புரிவார்' (Arunachalam, P., 1937: 110, 132).

## மாவிட்டபுரம் கந்தன் ஆலயம்

யாழ்ப்பாண வரலாற்று ஏடான யாழ்பாண வைபவ மாலையில் பின்வரும் கதை கூறப்படுகிறது:

சோழ ஆளுநரான திசையுக்கிர சோழனுக்கு மாருதப்புரவல்லி என்ற பெயர் கொண்ட ஒரு மகள் இருந்தாள். அவளுக்கிருந்த மாற்ற முடியாத ஒரு நோய் காரணமாக அவளது உடல் வெகுவாக மெலிந்து போயிருந்தது. முகம் விகாரமடைந்திருந்தது. தனது நோயை வைத்தியர்களால் மாற்ற முடியாது என உணர்ந்த இளவரசி காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து புறப்பட்டு பல தலங்களுக்குத் தீர்த்தயாத்திரை செய்தாள். அவளது யாத்திரையின்போது சாந்தலிங்கன் என்ற சந்நியாசியைச் சந்தித்தாள். அவர் கூறினார்: "உனது நோயை எந்த வைத்தியராலும் தீர்க்க முடியாது. இலங்கையின் வடமுனையில் கடற்கரை ஓரமாகக் கீரிமலை என்றொரு குன்றும், அருகில் சுத்தநீர் குமிழும் ஒரு புனிதத் தீர்த்தமும் உள்ளது. நீராடுவதற்கான புனிதத் தலம் அது."

இதைக் கேட்டறிந்த மாருதப்புரவல்லி தனது பரிவாரங்களோடும் போர் வீரர்களோடும் புறப்பட்டுக் கீரிமலைக்கு அருகாமையிலிருந்த ஒரு துறையில் வந்திறங்கினாள். அவள் தனது பரிவாரங்களோடு 'வளவர்கோன் பள்ளம்' என்ற இடத்தில் பாளையமிட்டுத் தங்கியிருந்தாள். அங்கிருந்து புறப்பட்டுக் கீரிமலையில் நகுலமுனி என்ற முனிவரைச் சந்தித்தாள். அவர் தனது முகமும் ஒருகாலத்தில் விகாரமாக இருந்ததாகவும், கீரிமலைப் புனிதத் தீர்த்தத்தில் நீராடிய பின்னர் அந்த விகாரம் நீங்கியதாகவும் கூறினார். இதைக் கேட்ட இளவரசி தானும் அந்தப் புனிதத் தீர்த்தத்தில் தினமும் நீராடி நகுலேஸ்வரக் கடவுளை வணங்கி வந்தாள். அவ்வாறு வணங்கிவந்த நாள்களில் அவளது உடல் நோய் தீர்ந்து, குதிரை முகம் போல இருந்த அவளது முகவிகாரம் மாறி அழகான முகத்தையும் பெற்றுக்கொண்டாள். இந்தக் காலத்தில் நகுலேஸ்வரம் சிவனைத் தரிசிக்க வந்த கதிரமலை அரசன் உக்கிரசிங்கன், மாருதப்புரவல்லியை அக்கோயிலில் சந்தித்து அவள் மேல் காதல் கொண்டு அவளை மணம் செய்து கொண்டான். அவளது வேண்டுகோளின் பேரில் மாவிட்டபுரத்தில் கந்தன் ஆலயத்தைக் கட்டி முடித்தான்.



கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மாவிட்டபுரம் கந்தன் ஆலயக் கோபுரத்தின் இன்றைய தோற்றம்.

இக்கதையில் ஐந்து பாரம்பரியச் சம்பவங்கள் கூறப்படுகின்றன: நகுலமுனியின் கதை, மாருதப்புரவல்லியின் கதை, உக்கிரசிங்கன் வரலாறு, வளவர்கோன் பள்ளம் என்ற பெயர், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் கட்டப்பட்ட வரலாறு. இதில் வரலாற்றோடு ஐதீகக் கதைகளும் இணைத்துக் கூறப்படுகின்றன.

திசையுக்கிர சோழன் என்ற பெயரில் ஒரு சோழ மன்னன் இருந்ததாக வரலாறு இல்லை. அதுபோன்று நகுலமுனியின் கதை, மாருதப்புரவல்லியின் கதை என்பன ஐதீக, புராணக் கதைகளே. இக்கோயில் கட்டப்பட்ட பல நூற்றாண்டுகளின் பின்னர் எழுதப்பட்ட யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் ஐதீகக் கதைகளையும் வரலாற்றோடு இணைத்துக் கூறியுள்ளன. ஆனால் கந்தரோடை (கதிரமலை) அரசன் உக்கிரசிங்கன் சோழ அரசனின் உதவியுடன் மாவிட்டபுரம் கந்தசாமிக் கோயிலைக் கட்டுவித்தான் என்பதைக் கோயிலில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் தலவரலாற்று ஏடுகள் குறிப்பிடுகின்றன. மேலும், வளவர்கோன் பள்ளம் என்ற பகுதி இன்னும் மாவிட்டபுரத்தில் காணப்படுகிறது. சோழ அரசின் கீழை நாடுகள் இப்பெயரால் அழைக்கப்பட்டிருந்தன. சோழ அரசுக்கும் இந்தக் கோயிலுக்கும் இருந்த தொடர்பை இப்பெயரும் வலியுறுத்துகிறது (கைலாய மாலை, 1939; யாழ்ப்பாண வைபவ மாலை, 1950: 13-14; துரைச்சாமிக் குருக்கள், 1970; Pathmanathan, S., 1990: 63-64).



*மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்தின் வெளி மண்டபம். இங்கிருக்கும் செதுக்கப்பட்ட கருங்கல் தூண்கள் ஆதியான கோயிலுக்கு உரியவையாகக் கருதப்படுகின்றன.*

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் கட்டப்பட்ட வரலாறு கோயிலில் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் தல ஏடுகளிலும் காணப்படுகிறது. பத்து ஆண்டு காலமாக கட்டடக்காரர்கள், கல் கொத்தனார்கள், ஸ்தபதிகள் இக்கோயிலைக் கட்டுவதற்காக நாளும் பொழுதும் பணி புரிந்தார்கள். இந்தக் கோயில் விக்கிரகங்கள் சோழ நாட்டிலிருந்து சோழ அரசனால் அனுப்பிவைக்கப்பட்டன. இந்த விக்கிரகங்கள் வந்திறங்கிய ‘காயாத்துறை’ (புத்தகயாவுக்கு பௌத்த யாத்திரிகர்கள் கப்பலேறிச் சென்ற துறை) அன்றிலிருந்து ‘காங்கேயன் துறை’ (காங்கேயன் - கந்தன் - விக்கிரகங்கள் வந்திறங்கிய துறை) எனப் பெயர் பெற்றது. சிதம்பரத்திலிருந்து தில்லை மூவாயிரவரில் ஒருவரான பெரியமனதுளார் என்ற பெயர் கொண்ட பிராமணர் இக்கோயிலின் தலைமைக் குருவாக நியமிக்கப்பட்டார். கோயில் பதிவேடுகளின்படி சாலிவாகன சகாப்தம் 721 இல் (கி.பி. 799) ஆனி மாத உத்தரம் நாளில் கொடியேற்றத்துடன் இக்கோயில் குடமுழுக்கு விழா நடைபெற்றது (பிரம்மஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள், 1970).

இந்த ஆலயம் கட்டி முடித்த ஆண்டில் உக்கிரசிங்க மன்னன் தனது நாட்டின் தலைநகரை கந்தரோடையிலிருந்து (கதிரமலை) ‘செங்கடக நகர்’ அல்லது ‘உக்கிரசிங்க நகர்’ என மாற்றிக்கொண்டான் (யாழ்ப்பாண வைபவமாலை, 1950: 13; கைலாயமாலை, 1939; Brito, C, 1879: 9-12).

கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் இந்த ஆலயத்தை அடைந்த போது, கோயிலின் விக்கிரகங்களும் ஆபரணங்களும் மறைக்கப்பட்டு, கோயில் பாவனையின்றி பாழடைய விடப்பட்டதாகக் கூறப்படுகிறது. கோயிலுக்கு ஏற்பட்ட சேதம் பற்றிய விவரங்களை அறிய முடியவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கோயில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது. இந்து ஆலயக் கட்டடக்கலை அமைப்பின்படி ஸ்தூபி அமைக்கப்பட்டு, கருவறையில் ஒரே கருங்கல்லில் செதுக்கப்பட்ட வள்ளி-தேவயானி சமேதராக அமர்ந்திருக்கும் முருகக்கடவுள் அமர்த்தப்பட்டார் (இது பழைய கோயிலின் கருவறை விக்கிரகங்கள் என அறிய முடிகிறது). சம்பிரதாயப்படி ஆதிமூலத்தைச் சுற்றி மூன்று வீதிகள் இக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலின் பிரம்மாண்டமான உயர்ந்த கோபுரமும் அக்காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் ஆனி மாதத் திருவிழா இரண்டு வாரங்கள் தொடர்கிறது. கோயில் வெளிவீதியைச் சுற்றி ஐந்து தேர்கள் பவனி வருவது இந்த ஆலயத்தின் தனிச் சிறப்பு. ஒரு பனையளவு உயர்ந்த சப்பரம் மின்சார விளக்குகளால் சோடிக்கப்பட்டு பவனி வருவது மற்றொரு சிறப்புக்கூறு. தீர்த்தத் திருவிழாவின் போது மாவிட்டபுரம் கந்தன் ஆலய விக்கிரகங்கள் ஊர்வலமாகக் கீரிமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தீர்த்தத் திருவிழா கீரிமலைக் கடற்கரையில்

நடைபெறும். இந்த வைபவம் மாவைக் கந்தனுக்கும் கீரிமலை நகுலேஸ்வரருக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்பை எடுத்துக்காட்டுகிறது.

பல நூற்றாண்டுகளாக கீரிமலைச் சிவன் கோயிலும் மாவிட்டபுரம் கந்தன் ஆலயமும் சேர்ந்து ஆகம ரீதியான சைவமும் கிராமிய வழிபாட்டு வழக்கங்களும் இணைந்த யாழ்ப்பாண மக்களின் தனித்துவமான ஒரு பாரம்பரியச் சைவமதப் பண்பாட்டை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும் (*Thiagarajah, Siva*, 2012: 15).

## நல்லூர் கந்தன் ஆலயம்

யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக் கோயில்களில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முக்கியத்துவமிக்கதொரு ஆலயமாக விளங்குகிறது. தினமும் இக்கோயிலில் நடைபெறும் பூசைகளில் பங்கேற்கும் மக்களின் திரளுக்கு இணையாக இத்தீவில் வேறு எந்தக் கோயிலும் காணப்படுவதில்லை எனக் கூறலாம். திருவிழாக் காலங்களில் — குறிப்பாகத் தேர்த் திருவிழாவின் போது — யாழ்ப்பாண நகரமே அங்கு திரண்டு, பிறநிலங்களிலிருந்தும் பிறநாடுகளிலிருந்தும் வருகை தரும் மக்களோடு கூடியிருக்கும் எனலாம். இங்கு நடைபெறும் அன்றாடப் பூசைகள் யாழ்ப்பாணச் சைவத்தின் அடிப்படையான பண்புகளை பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண மரபுக்கதைகளின்படி ஆரம்பகால நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை புவனேகபாகு என்பவன் கட்டுவித்தான் என அறியப்படுகிறது. யாழ்ப்பாண வரலாற்று நூல்களில் ஒன்றான கைலாயமாலையில் பின்வரும் தகவல் காணப்படுகிறது: "சகா சகாப்த ஆண்டு 870 இல், மார்பில் பூமாலை அணிந்த புவனேகபாகு யாழ்ப்பாண நகரத்தையும் கட்டுவித்து, நல்லூரில் கந்தவேள் வசிக்கும் கோயிலையும் கட்டுவித்தான்" (கைலாயமாலை, பக். 23).

அதே நூலில், புவனேகபாகு என்பவன் சிங்கை ஆரியன் எனப்படும் ஆரியசக்கரவர்த்தி அரசவம்சத்தின் முதலாவது அரசனால் நல்லூர் நகருக்கு மந்திரியாக நியமிக்கப்பட்டவன் எனக் கூறப்படுகிறது (கைலாயமாலை, பக். 12). சகா சகாப்த ஆண்டு 870 என்பது கி.பி. 946 ஆம் ஆண்டைக் குறிக்கிறது. எனினும், அந்த ஆண்டில் நல்லூர் ஒரு நகரமாகவோ அல்லது யாழ்ப்பாணத்தின் தலைநகரமாகவோ இருந்ததற்கான உறுதியான வரலாற்றுச் சான்றுகள் எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை. நல்லூர்க் கந்சுவாமி கோயிலில் திருவிழாக் காலங்களில் நடைபெறும் பூசையின் போது கட்டியம் கூறுவது வழக்கம். இந்தக் கட்டியம் இவ்வாறு கூறுகிறது:

"ஸ்ரீ கஜவல்லி மஹாவல்லி சமேத சுப்பிரமண்ய பாதாரவிந்த ஜனதிருதஸோதஸ மஹாதான - சூரியவம்சோத்பவ ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு"

இந்த ஆலயத்தைக் கட்டி மகாதானம் செய்தவர் சூரிய வம்சத்தில் வந்துதித்த ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு ஆவார். 'ஸ்ரீ சங்கபோதி' என்பது ஓர் அரசப் பட்டப்பெயராகும். 15-16 ஆம் நூற்றாண்டுகளில் கோட்டை அரசின் சிங்கள மன்னர்கள் அரசகட்டிலேறிய போது 'சூரிய வம்சத்திலுதித்த ஸ்ரீ சங்கபோதி' என அழைக்கப்பட்டனர். 'சூரிய வம்சோத்பவ ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு' என்ற பெயர் அந்த அரசனின் அரசவழித் தொடர்பைத் தெளிவுபடுத்துகிறது.

கோட்டை அரசன் நான்காம் புவனேகபாகுவின் (கி.பி. 1412-1467) சுவீகாரப் புத்திரனான சப்புமால் குமாரய (செண்பகப் பெருமாள்), யாழ்ப்பாண அரசின் மீது படையெடுத்து அங்கு ஆட்சிபுரிந்த கனகசூரிய சிங்கை ஆரியனைத் தோற்கடித்து, கி.பி. 1450 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசனானான். அதுவரை யாழ்ப்பாண அரசின் தலைநகரமாக இருந்த சிங்கைநகரை விடுத்து, நல்லூரில் புதிய தலைநகரை நிறுவினான். அவனே நல்லூர் கந்தன் ஆலயத்தை நிறுவியவனாகக் கருதப்படுகிறான். இந்த மண்ணில் தனது அரசதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக, அப்பகுதியில் பரவலாக நிலைத்திருந்த சைவமதத்தைப் பேணிப் பாதுகாப்பது அவனுக்குத் தேவையான ஒன்றாக இருந்தது. அந்த அரசியல் நோக்கத்தின் ஒரு பகுதியாகவே நல்லூர் கந்தன் ஆலயத்தின் நிறுவல் அமைகிறது எனக் கொள்ளலாம்.



*நல்லூர்க் கந்தசாமி கோயிலின் இன்றைய தோற்றம்.*

1467 ஆம் ஆண்டில் கோட்டை அரசன் இறந்ததும் புவனேகபாகு, கோட்டைக்குத் திரும்பிச் சென்று அங்கே கோட்டை அரசின் அரச பதவியை ஏற்று முடிசூடிக் கொண்டான். அரச சிம்மாசனம் ஏறியதும் சப்புமால் என்ற பெயரை விடுத்து ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்ற சிம்மாசனப் பெயரை ஏற்றுக்கொண்டான். கோட்டை அரச மன்னர்கள் தங்களை சூரிய வம்சத்தினர் என அழைத்தார்கள். நல்லூரக் கந்தசுவாமி கோயில் கட்டியம் அந்தக் கோயிலைக் கட்டுவித்த அரசனை கோட்டை அரசின் சிம்மாசனப் பெயரான 'ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு' என்றே குறிப்பிடுகிறது.

கி.பி. 1450 ஆம் ஆண்டிலிருந்து 1467 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட சப்புமால் குமாரயா எனப்படும் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு, சிங்கை நகரிலிருந்த அரச மாளிகைகள் அனைத்தும் அழிக்கப்பட்டிருந்த காரணத்தால், நல்லூரிலிருந்த பண்டாரவளவு மற்றும் சங்கிலித் தோப்பு (பிற்காலப் பெயர்) ஆகிய இடங்களில் புதிய அரண்மனைகள் மற்றும் அரச மாளிகைகளை அமைத்தான். அவை அமைந்திருந்த இடங்களுக்கு அருகாமையில் இக்கோயிலுக்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆலயம் கட்டப்பட்டது. அந்த இடம் இன்றைய முத்திரைச் சந்தியில் கிறிஸ்தவத் தேவாலயம் அமைந்துள்ள பகுதியாகக் கருதப்படுகிறது. அங்குள்ள ஜமுனா ஏரி, பழைய கந்தசுவாமி கோயிலின் கேணியாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

புவனேகபாகுவால் கட்டப்பட்ட இந்த ஆலயம், அவன் யாழ்ப்பாணத்தை விட்டுக் கோட்டைக்குத் திரும்பிய பின்னரும், 1467 இல் தங்கள் இராச்சியத்தை மீட்ட யாழ்ப்பாண அரசர்களால் கி.பி. 1619 இல் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றும் வரையிலும் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வந்தது.

ஆரம்பகால நல்லூர்க் கந்தன் கோயில் தென்னிந்தியக் கோயில்களுக்கு இணையாக "யாழ்ப்பாணத்திலே மிகப் பெரிய கோயிலாக இருந்தது" என குவேரோஸ் பாதிரியார் குறிப்பிடுகிறார். இக்கோயிலைச் சுற்றி உயர்ந்த நெடுமதில்கள் அமைக்கப்பட்டிருந்தன. நல்லூர்க் கந்தசுவாமி கோயில் நெடிதுயர்ந்த மதில்களுடன் அமைந்திருந்ததனால், பின்னர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த பிலிப் ஒலிவேரா என்ற போர்த்துக்கேயத் தளபதி ஒரு கட்டத்தில் தனது வீரர்களுடன் இக்கோயிலினுள் புகுந்து, அதை ஒரு கோட்டையாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது (Queiroz, F. de, 1930).

1621 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி நல்லூரைத் தனது உறைவிடமாக்கிக் கொண்ட பிலிப் டி ஒலிவேரா, நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைத் தரைமட்டமாக்கி, அக்கோயில் இருந்த இடம் அடையாளம் காணப்படாதபடி அதன் அத்திவாரங்களையும் கிளறுவித்தான் என இராசநாயகம் குறிப்பிடுகிறார் (இராசநாயகம், செ., 1933: 130). போர்த்துக்கேயர் சைவ ஆலயங்களைப் பாழாக்கி அழித்த பின்னர், அவை இருந்த இடங்களிலேயே தங்கள் தேவாலயங்களை அமைத்தனர். நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இருந்த இடத்தில் ஒரு கத்தோலிக்கத் தேவாலயம் கட்டப்பட்டது. ஆரம்பத்தில் அந்தத் தேவாலயம் களிமண்ணாலும் பனை ஓலைகளாலும் அமைக்கப்பட்டிருந்ததாக டச்சுப் பாதிரியாரான பிலிப் பால்தேயஸ் பதிவு செய்கிறார் (Baldaeus, P., 1672; மறுபதிப்பு 1998).

போர்த்துக்கேயரைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தை ஆண்ட டச்சுக்காரர் (ஒல்லாந்தர்), தங்கள் ஆட்சியின் பிற்காலத்தில் சமய விடயங்களில் கடைப்பிடித்திருந்த கடுமையைத் தளர்த்தினர். இதன் விளைவாக சைவ சமயத்தினரைச் சேர்ந்தோர் தமது ஆசாரங்களையும் வழிபாட்டு முறைகளையும் பயமின்றி மேற்கொள்ளத் தொடங்கினர். இடிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் அர்ச்சகர்களாக இருந்த பிராமணர்களின் சந்ததியில் வந்த கிருஷ்ணையர் சுப்பையர் என்பவர், 1734 ஆம் ஆண்டு பழைய நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இருந்த இடத்திற்கு அருகில் ஒரு மடாலயம் அமைத்து, வேலினைப் பிரதிஷ்டை செய்து வழிபாட்டைத் தொடர்ந்து நடத்தினார் என 'யாழ்ப்பாண வைபவம்' குறிப்பிடுகிறது (பாலசுப்பிரமணிய சர்மா, 1927). எனினும், இப்போது உள்ள கந்தசுவாமி கோயிலும் அந்த மடாலயமும் நேரடித் தொடர்புடையவை என்பதற்குத் தெளிவான ஆதாரம் இல்லை.

இப்பொழுது உள்ள நல்லூர்க் கந்தசுவாமி கோயில், பழைய கோயில் இருந்த இடத்திலிருந்து தூரத்தில் அமைந்துள்ள 'குருக்கள் வளவு' எனப்படும் இடத்தில் காணப்படுகிறது. 1734 ஆம் ஆண்டு டச்சு ஆட்சிக் காலத்தில் சிறாப்பராக (Chief Headman) இருந்த இரகுநாத மாப்பாண முதலியார் என்பவரால் கல்லாலும் செங்கற்களாலும் கட்டப்பட்டு ஓட்டால் வேயப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகவல் 1882 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கச்சேரியில் பதிவு செய்யப்பட்ட சைவசமயக் கோயில்களின் இடாப்பிலிருந்தும், 1869 ஆம் ஆண்டு முதல் 1896 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாண அரசாங்க அதிபராகப் பணியாற்றிய சேர்

துவைனம் அவர்களின் குறிப்புகளிலிருந்தும் அறியப்படுகிறது (குலசபாநாதன், 1971).



நல்லூர்க் கந்தசாமி கோயிலின் உள்மண்டபத்தில் முருகக் கடவுள் தனது சகோதரனான விநாயகர், மற்றும் வள்ளி தேவயானி சமேதராய் எழுந்தருளி வரும் காட்சி.



நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா காணவந்த - அலை அலையாகத் திரளும் பக்தர் கூட்டம்.
Image Source: Hindu Pad.

"ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் சிறாப்பராகக் கடமை பார்த்து வந்த இரகுநாத மாப்பாண முதலியார், தமது பதவியால் பெற்றிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மீண்டும் கட்டுவதற்கு உத்தரவு பெற்றார்" என குலசபாநாதன் தனது நூலில் குறிப்பிடுகிறார். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் ஆண்டு விழாக்களில் பாடப்படும் கட்டியத்தில், புவனேகபாகுவிற்கு அடுத்ததாக இக்கால நிறுவனராக இரகுநாத மாப்பாணர் கௌரவிக்கப்படுகிறார். இவ்விடத்தில் ஆறுமுக நாவலரின் பதிவும் கவனிக்கத்தக்கது: "இக்கோயிலின் விழாக்காலங்களில், இதன் ஆணையாளர்கள் மூல ஆலயத்தை நிறுவிய புவனேகபாகுவையும், இன்றைய ஆலயத்தை நிறுவிய இரகுநாத மாப்பாணரையும் அந்த வரிசையில் நினைவுகூருகிறார்கள்" (ஆறுமுக நாவலர், 1875).

இரகுநாத மாப்பாணர் கட்டுவித்த நல்லூர்க் கந்தசுவாமி கோயில், அவரது சந்ததியினருக்குரிய தனியார் சொத்தாகக் கருதப்படுகிறது. இக்கோயிலுக்குப் பக்தர்களிடமிருந்தும் நலன் விரும்பிகளிடமிருந்தும் கணிசமான வருவாய் கிடைத்தபோதிலும், அதன் கட்டடங்களும் சொத்துகளும் தனியார் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. கோயிலின் மகாமண்டபத்தின் கிழக்குச் சுவரில் இரகுநாத மாப்பாணரின் மற்றும் அவரது மனைவியாரின் உருவப்படங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

பதினெட்டாம் நூற்றாண்டில் இரகுநாத மாப்பாணரால் கருங்கல், சுட்ட செங்கற்கள் மற்றும் காரைச்சாந்து கொண்டு கட்டப்பட்ட சிறிய கோயில், காலப்போக்கில் பல்வேறு கட்டடக்கலைப் பாணிகள் இணைந்த பெருமைக்குரிய அமைப்பாக வளர்ந்துள்ளது. கடந்த இருநூற்று ஐம்பது ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட புதுப்பித்தல்கள், விரிவாக்கங்கள் மற்றும் அலங்காரச் சேர்த்தல்களின் மொத்தச் சேர்க்கையே இன்று நாம் காணும் கந்தன் ஆலயம் ஆகும். இதன் கட்டட அமைப்பு, ஒரு மாபெரும் இந்துக் கோயிலுக்கான ஒருங்கிணைந்த வடிவமைப்பாகவோ அல்லது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட கட்டடக்கலை வளாகமாகவோ அமையவில்லை எனப் பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிடுகிறார் (Pathmanathan, S., 2006: 357-358).

நல்லூர்க் கந்தசாமி கோயிலின் கட்டட அமைப்பு, இந்துக் கோயில்களின் சம்பிரதாய கட்டடமைப்புக்கு முழுமையாக ஒத்ததாக அமைக்கப்படவில்லை. ஓர் இந்துக் கோயிலின் கட்டடக் கலையில் மையக் கூறாகக் கருதப்படுவது அதன் ஸ்தூபி ஆகும். ஆனால் நல்லூர்க் கந்தசாமி கோயிலுக்கு ஸ்தூபி இல்லை எனக் குறிப்பிடப்படுகிறது. மேலும், கருவறையில் முருகக் கடவுளின் உருவப் பிரதிநிதித்துவம் (Iconographic Representation) காணப்படவில்லை. அங்கு முருகனின் உருவத்திற்குப் பதிலாக ஒரு வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இதனுடன், வேலின் இருபுறங்களிலும் முருகனின் சக்திகளாகக் கருதப்படும் வள்ளி மற்றும் தேவயானி ஆகியோரின் உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பு இந்து சம்பிரதாயக் கோயில் வடிவமைப்பில் முன்னோடியற்றதும் அரிதானதுமாகக் கருதப்படுகிறது (Pathmanathan, S., 2006: 358).

இக்கோயிலின் இவ்வகை ஆலய விதிகளுக்கமையாத, சமயச் சம்பிரதாயங்களுக்கு மாறான வடிவமைப்பு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கடுமையான சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆறுமுக நாவலர், இக்கோயிலின் கட்டட அமைப்பையும் படிமவியல் திட்டத்தையும் கடுமையாக விமர்சித்தார்.

1875 ஆம் ஆண்டில் மக்களுக்காக எழுதி வெளியிட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் என்ற தலைப்பிட்ட சிற்றேட்டில் ஆறுமுக நாவலர் இவ்வாறு கூறியிருந்தார்:

“நல்லூரிலுள்ள கந்தசுவாமி கோயிலை யாழ்ப்பாணத்திலுள்ள மிக முக்கியமான கோயிலாகக் கருதி அங்கே வழிபாடுகளை மேற்கொள்ளுகிறீர்கள். உங்களுடைய செல்வத்தின் ஒரு பகுதியையும் அங்கே செலவிடுகிறீர்கள். அந்தக் கோயிலும், அங்கே நடத்தப்படும் சடங்குகளும், சிவாகமங்களுக்கும் குமாரதந்திரங்களுக்கும் எதிரான மொத்த மீறல்களாகும். இந்த மீறல்கள் மற்றையக் கோயில்களிலும் பின்பற்ற வேண்டிய மாதிரியாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இந்துக் கோயில்களின் அமைப்பில் ஸ்தூலலிங்கம், சூக்குமலிங்கம், பத்திரலிங்கம் ஆகிய அம்சங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும். கோயிலின் ஸ்தூபி ஸ்தூலலிங்கம். சூக்குமலிங்கம் கர்ப்பக்கிரகத்தில் வைக்கப்பட்டிருக்கும் தெய்வத்தின் விக்கிரகம். பத்திரலிங்கம் கோயிலிலுள்ள பலிபீடம்.

நல்லூர்க் கந்தசாமி கோயிலில் ‘ஸ்தூபி’ கிடையாது.... மூலமூர்த்தியை விக்கிரகமாகப் பிரதிநிதித்துவப்படுத்தாத ஒரு கட்டடம் புனிதத்தலமாக இருக்க முடியாது....

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் இப்போது உள்ள மூலமூர்த்தி திருக்கோயிற் புனிதப்பணிக்கென குடமுழுக்குச் செய்யப்பட்டு நிரந்தரமாக நிலைநிறுத்திய ஓர் உருவம் அல்ல. அங்கிருக்கும் வெள்ளியினால் செய்யப்பட்ட வேல் அதன் ஆசனத்திலிருந்து அபிஷேகங்களுக்காகவும், மற்றைய நோக்கங்களுக்காகவும் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இதை மூலமூர்த்தியாகக் கொள்ள முடியுமா?

இந்தக் கோயிலின் பெயர் கந்தசுவாமி கோயில். இங்கே கர்ப்பக்கிரகத்தில் கந்தசுவாமியார் தெய்வமாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறாரா? இல்லை. இங்கே வேலாயுதம்தான் காணப்படுகிறது. வேலாயுதம் கந்தசுவாமியின் ஓர் உருவமா? அல்ல. அது அவருக்குச் சேவை செய்யும் ஒரு கருவி மட்டும்தான்.”

இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் ஆறுமுக நாவலர், ஆலயக் கட்டடக்கலை விதிகளுக்கும் விக்கிரக அமைப்பு ஆகம விதிகளுக்கும் அமையாது நல்லூர்க் கந்தசாமி கோயில் உருவாக்கப்பட்டிருப்பதாக எடுத்துக்காட்டிய விதிமுறைகளை மறுத்து இதுவரை எவரும் கருத்துத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. கோயிலின் இந்த நிலைமை அதன் நிர்வாகிகளுக்கும் நல்லூர்க் கந்தன் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பக்தர்களுக்கும் மிகுந்த சங்கடத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை (ஆறுமுக நாவலர், 1875, மறுபதிப்பு 1954; Pathmanathan, S., 2006: 358-359).

கி.பி. 1734 இல் இரகுநாத மாப்பாணர் இந்தக் கோயிலைச் சிறியதாகக் கட்டியபோது, டச்சுக்காரரின் நிர்வாகத்தின் கீழ் இதை இந்துக் கோயில்களின் ஆகம விதிகளுக்கமைய கட்டியிருக்க வேண்டும் என எதிர்பார்த்திருக்க முடியாது. ஆனால், இக்கோயிலின் பெருமையும் புகழும் பெருகி, வருவாயும் பெரிதாகியிருக்கும் இக்காலத்தில், ஆறுமுக நாவலர் எடுத்துக்காட்டிய தவறுகளைத் திருத்தி, இக்கோயிலை இந்துக் கோயில்களின் கட்டட விதிகளுக்கும் விக்கிரகங்களை ஆகம விதிகளுக்கும் அமைய புனரமைப்புச் செய்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

## உசாத்துணை நூல்கள்


1. ARUNACHALAM, PONNAMBALAM (1937): Studies and Translations, Colombo Apothecaries Co., Ltd., Colombo.
2. BALDAEUS, PHILIP (1672): Description of the Most Famous Isle of Ceylon, Amsterdam, (Reprint 1998): Asian Educational Services, New Delhi - Madras.
3. BOPEARACHCHI, O. (1998): Archaeological Evidence on Changing Patterns of International Trade Relation of Ancient Sri Lanka in Bopearachchi, O. & Weerakkody, D.P.M. (Eds.): Circulation of Foreign Coins in the Indian Ocean, New Delhi.
4. BOPEARACHCHI, O. & WICKRAMASINGHE, W. (1999): Ruhuna - An Ancient Civilization Revisited - Numismatic and Archaeological Evidence on Inland and Maritime trade, Nugegoda, Sri Lanka.
5. CAUVIN, JACQUES & WATKINS, TREVOR (2000): The Birth of the Gods and the Origins of Agriculture, Cam bridge University Press.
6. CODRINGTON, H.W. (1924): Ceylon Coins and Currency, Memoirs of the Colombo Museum, Series A, No. 3, Colombo.

7. COOMARASWAMY, A.K. (1931): Yakkas, Parts I & II, Smithsonian Institute, Washington, D.C.; Reprint 1971, New Delhi.

8. DONIGER, WENDY (2009): The Hindus an alternative history, Oxford University Press.

9. FERGUSSON, JAMES (1873): Tree and Serpent Worship or Illustrations of Mythology and Art in India, India Museum, London.

10. KRISHNARAJAH, S. (1983): Coins Obtained in Jaffna (in Tamil), Cintanai 1: 7184.

11. KRISHNARAJAH, S. (2008): The Hindu Bronze Images in Sri Lanka, (in Tamil) Kumaran Book House, Colombo.

12. KUNARASA, KANDIAH (2001): Yalpna Vaipava Mlai: A Retelling, Kamalam Pathippakam, Jaffna.

13. MAJUMDAR, R.C. (1951): The History and Culture of the Indian People, Vol. 01: The Vedic Age, George Allen & Unwin, London.

14. McGILVARY, DENNIS, B. (1974): Tamils and Moors: Caste and Matriclan Structure in Sri Lanka, University of Chicago.

15. NAGASWAMY, R. (1995): Tamil Coins, Madras.

16. NARR, KARL J. (2008): 'Prehistoric Religion', Britannica online Encyclopedia, 2008.

17. OVERLAET, B. et al (2024): A note on the trident mark, Stone worship and Cult practices in Southeast Arabia, Arabian Archaeology and Epigraphy, Vol. 35, Issue 1.

18. PARANAVITANA, S. (1970): Inscriptions of Ceylon, Vol. I, Early Brahmi Inscriptions, Colombo.

19. PATHMANATHAN, S. (2006): Hindu Temples of Sri Lanka, Kumaran Book House, Colombo - Chennai.

20. PIERIS, PAUL. E. (1919): Nagadipa and Buddhist Remains in Jaffna, Part I, Journal of the Royal Asiatic Society, Ceylon Branch, Colombo.

21. PUSHPARATNAM, P. (2001): Ancient Coins of Ceylon Tamils (in Tamil), Jaffna.

22. PUSHPARATNAM, P. (2002): Ancient Coins of Sri Lankan Tamil Rulers, Bavani Pathippakam, Jaffna.

23. PUSHPARATNAM, P. (2002a): Ancient Religion and Culture of Eelam Tamils, An Archaeological Perspective in Tamil, Kumaran Book House, Colombo & Chennai.

24. RAGUPATHY, PONNAMPALAM (1987): Early Settlements in Jaffna, Thillimalar Ragupathy, Madras.

25. SEYON, K.N.V. (1998): Some Old Coins of Early Ceylon, Nawala, Sri Lanka.

26. SHASTRI, J.L. (2000): The Siva Purana : Ancient Indian tradition and Mythology, Volume 1, Motilal Banarsidass, New Delhi.

27. SIVASAMY, V. (1974): The Coins of Jaffna (in Tamil), Tellippalai.

28. STOLPER, MATTHEW W. (2005): Achmenid Languages and Inscriptions in: John E. Curtis, Nigel Tallis: Forgotten Empire - The World of Ancient Persia, University of California Press, Los Angeles.

29. THIAGARAJAH, SIVA (2012): Early Siva Temples of Ancient Sri Lanka, Aalayam Publishers, Colombo.

30. 30. THIAGARAJAH, SIVA (2019): The Tamils of Lanka - A Timeless Heritage, Tamil Information Centre, UK.

31. THIAGARAJAH, SIVA (2022): Archaeological Excavations at the Jaffna Fort, Kumaran Book House, Colombo.

32. ஆறுமுக நாவலர் (1875): நல்லூர்க் கந்தசுவாமி கோயில். வண்ணார்பண்ணை. மறுபதிப்பு இடம் பெறுவது: ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு, தொகுப்பு: தி. கைலாசபிள்ளை, மூன்றாம் பதிப்பு, வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை.

33. இராசநாயகம், செ. (1933): யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாணம். குல. சபாநாதன் (1971): நல்லூர்க் கந்தசுவாமி, நல்லூர் தேவஸ்தான வெளியீடு, யாழ்ப்பாணம்.

34. கைலாயமாலை (1939) சி.வி. ஜம்புலிங்கம் பதிப்பு, சென்னை. சிற்றம்பலம், சி.க. (1996): ஈழத்து இந்து சமய வரலாறு, திருநெல்வேலி.

35. துரைச்சாமிக் குருக்கள், பிரம்மஸ்ரீ (1970): மாவிட்டபுரக் கந்தன் ஆலயம், வீரகேசரி வாரவெளியீடு, 12 ஜுலை 1970, கொழும்பு.

36. வித்தியானந்தன், க. (1954): தமிழர் சால்பு, பேராதனை. வேதாசலம், வே. (1989): இயக்கி வழிபாடு, மதுரை.

37. புஷ்பரட்ணம், ப. (2017): இலங்கைத் தமிழர் - ஒரு சுருக்க வரலாறு, சுவிற்சர்லாந்து.

# இலங்கையில் நடந்த சித்திரவதைகள்: உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் சமூக – அரசியல் ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதம்

பகுதி 2

1978 ஆம் ஆண்டு அன்றைய ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஆட்சியாளர்களால் இயற்றப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு கடந்த நாலு தசாப்தங்களுக்கு மேலாக இருந்துவரும் 'பயங்கரவாதத் தடைச்சட்டம்: இல – 48/1979' தமிழ் வாசகர்களுக்கு ஒன்றும் புதுமையான ஒரு சட்டம் அல்ல. அது முதலில் ஒரு தற்காலிக தேவைக்கான சட்டமாகக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் நிரந்தரமான ஒரு சட்டமாக (1982) மாற்றப்பட்டது. பல்வேறு உலக நாடுகள் உட்பட உள்நாட்டு மக்களாலும் எதிர்க்கப்பட்டு வந்ததன் காரணமாக அவ்வப்போது சில திருத்தங்களுக்கான முயற்சிகள் நடந்தபோதும், அதற்குப் பதிலாக ஒரு திருத்தமாக 2022 இல் தயாரிக்கப்பட்ட 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற ஒரு 'சட்டவரைபு – 2023' வெளியிடப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இன்னமும் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டமே அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையில் உள்ளது. அதை ஓர் அரசாங்கம் தனது நடவடிக்கை களுக்காகக் கைகளில் எடுக்கின்றதா, இல்லையா என்பதைப் பொறுத்தே அது அதிகமாகப் பேசப்படும் சூழல் உருவாகிறது. இப்போது அத்தகைய ஒரு நிலை நிலவவில்லை என்றாலும் கூட, இந்தச் சட்டம் பற்றிய, மக்களது ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அது வழங்குகின்ற அதிகாரங்கள் பற்றிய உரையாடல் அவசியமானது. அந்த அடிப்படையில், இந்த 'இலங்கை: பயங்கரவாதத் தடைச்சட்டம் – ஒரு விமர்சனரீதியான மதிப்பீடு' என்றநூலிலுள்ள கட்டுரைகளை நமது 'எழுநா' வாசகர்களுக்காக அதே பெயரில் தொடராக இங்கு தமிழில் தருகிறோம். இந்த நூல், 'மனித உரிமைகளுக்கும் அதன் வளர்ச்சிக்குமான மையத்'தைச் (Centre for Human Rights and Development – CHRD) சேர்ந்த, பேராசிரியர் பேற்றன் பஸ்தியாம்பிள்ளை, றோகண எதிரிசிங்க, என். கந்தசாமி ஆகிய அதன் அமைப்பாளர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட, நாட்டின் முக்கிய ஆளுமைகளால் எழுதப்பட்ட சட்டம் பற்றிய விமர்சனபூர்வமான பத்து ஆக்கங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். எழுநா வாசகர்களுக்கு, நமது ஏனைய நூல்கள் போலவே இதுவும் இன்னொரு முக்கிய நூலாக அமையும் என்று நம்புகிறோம்.

*ஆங்கில மூலம்: பேராசிரியர் தயா சோமசுந்தரம்*

## எஸ்.கே. விக்னேஸ்வரன்



எஸ்.கே. விக்னேஸ்வரன், எழுபதுகளின் பிற்கூறுகளில் சிறுகதை எழுத்தாளராக ஈழத்தின் எழுத்துத்துறைக்குள் அறிமுகமானவர். வடமராட்சியிலுள்ள அம்பன் கிராமத்தைச் சேர்ந்த இவர், சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதுடன் மட்டுமன்றி, இலக்கியம், அரசியல் சார்ந்த கட்டுரைகள் எழுதுவதிலும், ஆங்கிலத்தில் வரும் முக்கியமான எழுத்துகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் தொடர்ந்து ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். தொண்ணூறுகளில் கொழும்பிலிருந்து வெளியான 'சரிநிகர்' வாரப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், பின்னர் கனடாவில் வெளியான 'தீபம்' வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்தவர். சரிநிகரில் தொடராக வெளிவந்த அவரது மொழிபெயர்ப்பு நூலான 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே' என்ற பெற்றோருக்கான வழிகாட்டிநூல் இன்றுவரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இப்போது தாய்வீடு இதழில் அவரது 'பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே' என்ற இன்னொரு மொழிபெயர்ப்பு நூல் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே சரிநிகரில் வெளிவந்து பாதியில் நின்றுபோன மொழிபெயர்ப்பு நூலான, 'தலைமறைவு வாழ்க்கை' என்ற, மறைந்த மதிப்புக்குரிய றெஜி சிறிவர்த்தன அவர்களது நூல், அண்மையில் வெளியாகியுள்ளது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் (MBA) பட்டம்பெற்ற இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார்.

பலர் சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைப்பதில்லை, ஆனால் அப்படிப் பிழைப்பவர்கள் கடுமையானதும் அசாதாரணமானதுமான மன அழுத்தத்தை எதிர்கொள்ளும் போது, வளைந்து கொடுக்கக்கூடிய, சமாளிக்கும் உத்திகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் தப்பிக்கொள்கிறார்கள். சித்திரவதையின் குறுகிய, நீண்டகால, நரம்பியல், உளவியல் ரீதியான விளைவுகள் மிகவும் நோய்கொண்ட சூழ்நிலையிலும் உயிர்வாழ்வதைச் சாத்தியமாக்கும் ஒரு 'வலுவானதும் வலிமையானதுமான அரசியலமைப்பிற்கான அர்த்தமுள்ள எதிர்வினைகளாகக் காணப்படுகின்றன' (டிராட்மேன், 1964). பாதிக்கப்பட்ட இவ்வகையானவர்களில் பெரும்பாலோர் சமூகத்தைச் சிறப்பாக மாற்றவும், தங்கள் சமூகத்திற்கு எதிரான அநீதிகளை நிவர்த்தி செய்யவும் இலட்சியவாதம், தன்னலமற்ற தன்மை என்பவற்றுடன் புறப்பட்ட வலுமிக்க, ஆரோக்கியமான இளைஞர்களாக இருந்தவர்கள். சித்திரவதைக்குப் பிறகு அவர்கள் உடைந்து உதவியற்றவர்களாக இருப்பதைக் காணும்போது, உயிர்வாழ அவர்கள் செலுத்த வேண்டிய விலை இதுதான் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தன்னிச்சையான கைது, தடுப்புக்காவல், சித்திரவதை என்பவற்றுக்கு முன்பு 'அப்பாவிகளாக' இருந்த இவர்களின் நீண்ட, குறுகியகால விளைவுகள் மிகவும் கடுமையானவை என்று கண்டறியப்பட்டுள்ளது.

பெரும்பாலான புலனாய்வாளர்கள், இந்த உடலியல், நரம்பியல், உளவியல் விளைவுகளின் இயல்பான மீட்சியடையும் தன்மை மிகவும் மோசமாக இருப்பதையே காட்டுகின்றன என்று தெரிவிக்கின்றனர் (ஆர்ட்மேனும் மற்றையோரும், 1987). இவை பாதிக்கப்பட்டவரை வாழ்நாள் முழுவதும் உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஊனமுற்றவர்களாகவே விட்டுவிடுகின்றன. அதிர்ஷ்டவசமாக, இந்தத் துறையில் உள்ள தொழிலாளர்கள் நேர்ப்படியான அக்கறையுள்ள சிகிச்சை முன்னெடுப்புகள், இந்த 'உயிர் பிழைத்தவர்களில்' பலருக்குத் தங்கள் சுயமரியாதையை மீண்டும் பெறவும், நம்பிக்கையான எதிர்காலத்தை உருவாக்கவும் உதவும் என்பதைக் கண்டறிந்துள்ளனர்.

## சமூகம்

துரதிர்ஷ்டவசமாக, இலங்கை போன்ற பல மூன்றாம் உலக நாடுகளின் கலாசார கட்டமைப்புகளில் சித்திரவதையின் காரணமாக ஏற்படும் உளவியல் தாக்கங்கள் பற்றிய புரிதல் இல்லாமை, எந்தவொரு வகையான மனநலக் கோளாறையும் ஒப்புக்கொள்வதன் காரணமாக ஏற்படும் களங்கம், தடுப்புக்காவல், சித்திரவதை என்பவற்றின் விளைவாக ஏற்படும் பாரிய அளவிலான சமூகத்திலிருந்து ஒதுங்குதல் என்பவை காரணமாக, உதவி தேவைப்படும் பலர் சிகிச்சைக்கு முன்வருவதில்லை. இது, தொடர்ச்சியான மோதல் நிலவும் சூழ்நிலைகளில் சித்திரவதைக்கான உண்மைக் காரணத்தை வெளிப்படுத்துவது ஆபத்தானது என்பதன் காரணமானதாகவும் இருக்கலாம். ஏனெனில், அதற்காக மீண்டும் கைது செய்யப்படுவதற்கான அல்லது பழிவாங்கப்படுவதற்கான உண்மையான ஆபத்தும் இதில் இருக்கிறது. ஆனால், இந்த நிலைமை மேற்கத்திய அல்லது முதலாம் உலக நாடுகளில் இருக்கும் நிலமைகளை விடச் சற்று வித்தியாசமானது. அங்கு, உயிர் பிழைத்தவர்கள் (அரசியல்) தஞ்சம் கோருவதற்கு முடிகிறது. இவ்வாறான சூழ்நிலைகளில், குறிப்பாக அவர்களின் புகலிடக் கோரிக்கை சம்பந்தமான வழக்குகளுக்கு அது உதவும் என்ற நிலை இருந்தால், மருத்துவ உதவியை நாடுவதற்கு அவர்கள் ஆர்வமுடன் தயாராக இருக்கக்கூடும்.

அவர்கள் பொதுவாக தங்கள் உளவியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளை உடல் ரீதியாகத் 'தணித்து', உடல் ரீதியான புகார்களுடன் பொது மருத்துவத்திடம் அல்லது வெளிநோயாளர் பிரிவுகளிடம் தங்களை முன்னிலைப்படுத்துகிறார்கள் (சோமசுந்தரம், 2001). PTSD இன் 'குறைந்துபோகும்' நிலைமை காரணமாக, (தமது சொந்தங்களுடனான) உறவுகளை கடினமாகக் கருதும் சிலர், சமூக சேவைகளைச் செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். மேலே கொடுக்கப்பட்டுள்ள வழக்கு வரலாறு, சித்திரவதை அனுபவத்திற்குப் பிறகு தொடர்ந்து இரத்த தானம் செய்த ஒரு பல்கலைக்கழக மாணவரின் வரலாறாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதியில் சித்திரவதையின் சமூகப் பரிமாணம், யாழ்ப்பாணத்தில் உள்ள பொது மக்களின் ஒரு கணக்கெடுப்பிலிருந்து தெளிவாகிறது, இது மக்கள் தொகையில் 1% ஆனவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர் என்பதைக் காட்டுகிறது (சோமசுந்தரம் & சிவயோகன், 1994). மருத்துவச் சிகிச்சைக்காக வெளிநோயாளர் பிரிவுக்கு (OPD) வருபவர்களில், 8% பேர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர் (சோமசுந்தரம், 2001). இந்த ஆய்வு, OPD இல் சிகிச்சை பெறும் பல நோயாளிகள் உண்மையில் போர் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதைக் குறிக்கிறது, அவர்கள் தங்கள் பிரச்சினையை ஓர் உடல்நலப் பிரச்சினையாகக் கருதி உடல் ரீதியான புகார்களுக்கு உதவியை நாடுகிறார்கள். இளம் பருவத்தினரிடையே சித்திரவதையும் அதிகமாக உள்ளது, எங்கள் ஆய்வுகள்

*3 - 7%* பேர் சித்திரவதையை அனுபவித்ததாகக் குறிப்பிடுகின்றன (சோமசுந்தரம், *1998*).

சித்திரவதை என்பது, எதிர்க்க முயற்சிப்பவர்களின் தனிப்பட்ட ஆளுமைகளை உடைப்பதற்கான உடல்ரீதியாகவும், உள ரீதியாகவும், ஒரு சமூகத்தைக் கட்டுப்படுத்தி அடிபணிய வைக்கும் ஒருங்கிணைந்த வழிமுறையாக உருவாக்கப்பட்ட ஒன்று.

இஸ்தான்புல் சித்திரவதைத் திட்டக் குழுவின் 'விசாரணையும் ஆவணப்படுத்தலும்' என்பதற்கான நெறிமுறை, உடனடியானதும், பரவலானதுமான அச்சுறுத்தல்கள், பயங்கரவாதம் மற்றும் தடுப்புக்காவல் என்பவற்றின் அடிப்படையிலான ஓர் 'அடக்குமுறைச் சூழலை' உருவாக்குவதன் மூலம் ஏற்படுத்தப்படும் சமூக அதிர்ச்சியைப் பற்றிப் பேசுகிறது. இதன் பொதுவான பாதுகாப்பின்மை, பயங்கரவாதம் மற்றும் சமூகக் கட்டமைப்பின் சிதைவு என்பவற்றை ஏற்படுத்துகிறது (*Baykai, Schlar & Kapken, 2004*).

## (மருத்துவ ரீதியான) தலையீடுகள்

இலங்கையின் வடக்கில், சித்திரவதையில் இருந்து தப்பியவர்களை நிர்வகிக்க, காலப்போக்கில் ஒரு பல்துறை சார்ந்த ஒருங்கிணைந்த, முழுமையான அணுகுமுறையை (சோமசுந்தரம்,*1997*) நாங்கள் உருவாக்கியுள்ளோம். ஒட்டுமொத்த முகாமைத்துவமும், உயிர் பிழைத்தவரின் தனிப்பட்ட தேவைகள், செயற்திறனின் வேகம் என்பவற்றிற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதிர்ச்சிக்குப் பின்னான மன அழுத்தக் கோளாறு (*PTSD*), பதட்டம் அல்லது மனச்சோர்வு போன்ற வெளிப்படையான மனநல நோய்கள் இருக்கும் இடங்களில், மருத்துவச் சிகிச்சை பரிந்துரைக்கப்படுகின்றன. இருப்பினும், பெரும்பாலான உயிர் பிழைத்தவர்களுக்கு வேறு வகையான சிகிச்சைகள் தேவைப்படலாம்.

## (மருத்துவப்) பரிசோதனைகள்

சொறி - சிரங்கு இரத்தச் சோகை, தொற்றுகளுக்கு உள்ளாகியிருக்கும் காயங்கள் போன்றவற்றுக்குச் சிகிச்சை அளித்தல், அடிப்படை மருத்துவப் பராமரிப்பு என்பவை பலருக்குத் தேவைப்பட்டன. இவற்றைவிட, ஒரு கணிசமான எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலதிகமான விசேட கவனிப்புத் தேவைப்பட்டது. அவர்களுக்கு உள்ளூர்ப் பொது மருத்துவமனைகளில் பொருத்தமான மருத்துவமனையை, அல்லது மருத்துவ ஆலோசகரைப் பரிந்துரைக்கும் ஒரு முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இவற்றில் எலும்பியல், கண் மருத்துவம், தோல் மருத்துவம், நரம்பியல், அறுவை சிகிச்சை, பல் மருத்துவம் ஆகியவையும் அடங்கும். தேவையற்ற மருத்துவ நடைமுறைகளைத் தவிர்ப்பதில், கவனமாக இருந்ததற்குக் காரணம் அவர்கள் ஏற்கனவே பெற்ற அதிர்ச்சி அனுபவங்களாக அவை இருந்தது தான் (மருத்துவமனைக்கு வருவது, மருத்துவர்கள் போன்ற அதிகாரம் கொண்ட ஓர் அலுவலரைச் சந்திப்பது, அல்லது எக்ஸ்கதிர்கள், ECGகள் மற்றும் இரத்தப் பரிசோதனைகள் செய்தல் என்பவைகள் கூடப் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களுக்கு நடந்த சித்திரவதைகளை நினைவூட்டக்கூடும் என்பதுடன் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவை மிகவும் சிரமமான ஒன்றாக இருக்கலாம்). பெண்களுக்கு பெண்நோயியல் (Gynecology) மருத்துவ அபிப்பிராயம் தேவைப்படலாம், அது கவனமாகக் கையாளப்பட வேண்டிய ஒன்று. அதற்கான பல்துறைகளைச் சார்ந்த நபர்களைக் கொண்ட குழுவின் (*Multidisciplinary Team*) உறுப்பினர்கள், பொதுவாக இத்துடன் சம்பந்தப்பட்ட சமூகப் பணியாளர்கள், அரச - அரச சார்பற்ற நிறுவனங்கள், பிற சமூக நிறுவனங்கள் போன்ற அமைப்புக்களுக்கான பரிந்துரைகளைப் பதிவு செய்தல், ஆவணப்படுத்துதல், சட்ட உதவி, நிதி உதவி, மறுவாழ்வுக்கான உதவி (பின்னர் பார்க்கவும்) போன்றவற்றை மேற்கொள்ளல் ஆகிய பணிகளை ஒன்றிணைத்தனர். அரச அதிகார அமைப்பின் முன்னால் திரளும் (பாதிக்கப்பட்டவர்களின்) நீண்ட வரிசைகள், அவர்களிடம் கேட்கப்படும் கேள்விகள், அவர்களுக்கு வழங்கப்படும் படிவங்களை நிரப்புதல் போன்ற நடவடிக்கைகளில் அவர்களுக்கு உதவும் பணிகளில் இக்குழுவினர் ஈடுபட்டார்கள்.

## உளவியல் சிகிச்சை

தொடர்பு ஏற்பட்ட ஆரம்பத்திலிருந்தே, சிகிச்சை வழங்குவதற்கன ஒரு நம்பிக்கையான சூழல் உருவாக்கப்பட்டிருந்தது. ஏராளமான சந்தர்ப்பங்களில் அடிப்படையான சில ஆலோசனைகளை வழங்குதலே போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருந்தது. அச்சுறுத்தல் இல்லாததும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான ஒரு சூழலில் அவர்களுக்குத் தேவைப்பட்டதெல்லாம், 'தங்கள் கதைகளைச் சொல்லவும்', அடக்கப்பட்டிருக்கும் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் உரிய ஒரு சிகிச்சையாளரின் ஆதரவும் அரவணைப்பும் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை மட்டுமே. அவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில், சுருக்கமான உளவியற் சிகிச்சை வழங்குவதுடன், சாட்சியம் வழங்குதல் முறையிலான சிகிச்சை முறை, துக்க நிவாரண ஆலோசனை முறை, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல், மன அமைதிப்படுத்தலுக்கான (*Relactation*)

நுட்பங்களை மேற்கொள்ளல் போன்றவற்றுக்கான குறுகிய கால வைத்திய அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

சித்திரவதைக்கு ஆளானவர்களைப் பற்றிய ஆய்வுகள், கணிசமான அளவில் உணர்வு ரீதியானதும், சமூக உறவுகள் தொடர்பானதுமான குறைபாடுகளை வெளிப்படுத்துகின்றன. இந்தக் கடுமையான அறிகுறிகளுக்கு நீண்டகாலச் சிகிச்சை தேவைப்பட்டது. அவை சில சமயங்களில் ஆறு மாதங்களுக்கும் மேலாகவும் நீடிக்கலாம். தனிநபரின் அழிக்கப்பட்ட ஆளுமை, அடையாளம், உலகத்தின் மீதான அவநம்பிக்கை உணர்ச்சி, சமூகத்திலிருந்தான விலகல் போன்ற அவர்களது தனிப்பட்ட பிரச்சினைகள் என்பவை படிப்படியாக ஓர் ஒழுங்கு முறையில் தீர்க்கப்பட்டன. தனிநபர்களின் தேவைக்கும் அவர்களது மீட்சியின் வேகத்திற்கும் ஏற்ப சிகிச்சை முறைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. உயிர் பிழைத்தவர் தனது அனுபவங்கள் மூலம் செயற்படவும், தனது தற்போதைய சூழ்நிலையை அர்த்தப்படுத்தவும், எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளவும் கூடிய நம்பகத்தன்மை வாய்ந்த நீடித்த உறவுகளை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். ஆன்மிக நம்பிக்கைகளும் பலங்களும் மக்களை மேலும் மீள்தன்மை கொண்டவர்களாக மாற்றுவது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, 'வாழ்வுக்கான அர்த்தம் அல்லது நோக்கத்தைக் கண்டறிதல்' - 'லோகோதெரபி' (*Logotherapy* ஃபிராங்க்ல், 1959) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் - அணுகுமுறை மூலம் அவர்களது மனநிலை அடையாளம் காணப்பட்டுப் பராமரிக்கப்படும் போது, பெரும்பாலான உயிர் பிழைத்தவர்கள் விரைவாகக் குணமடைவதாக அடையாளம் காணப்பட்டது. அவர்களது கலாசாரம், மதம்சார் நம்பிக்கைகள் என்பவை, உதாரணமாக, இந்துத்துவ அமைப்பின் மையமான கர்மவினை, துன்பம் என்பவை பற்றிய கோட்பாடுகள் இவற்றில் முக்கியமான பங்களிப்பும் ஆற்றுகின்றன. உயிர் பிழைத்தவருக்கு, பூசாரிகள், துறவிகள் மற்றும் பரியாரிகள் போன்றவர்களது பாரம்பரியக் குணப்படுத்துதல்களும், குணப்படுத்தும் வளங்கள் என்பவைகளும் உதவுவதற்காகப் பயன்படுத்தப்பட்டன.

## குடும்பச் சிகிச்சை

சித்திரவதையில் இருந்து தப்பியவர்கள், எரிச்சலடைதல், பின்வாங்குதல், மனச்சோர்வடைதல், பாலியல் தொடர்பான சிரமங்களை எதிர்கொள்ளல், அடக்கப்பட்ட கோபம், சந்தேகம் போன்றவற்றின் தொடர்ச்சியாக வரும் அதிர்ச்சிக்குப் பின்னான அறிகுறிகளின் வெளிப்பாடுகள் என்பவை காரணமாக குடும்பங்களிடையேயான உறவுகளில் விரிசல், திருமண வாழ்வில் ஒற்றுமையின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். குடும்ப வாழ்வின் இயங்குமுறை, ஆதரவளிப்பதற்கும், குணப்படுத்துவதற்கும், உறவுகளை எளிதாக்குவதற்கும் பயன்படுத்தப்பட்ட அதேவேளை, சேதப்படுத்துகின்ற, பொருந்தாத தன்மைகளைக் கொண்ட தொடர்புகளை எதிர்கொள்வதற்கும் பயன்படுத்தப்பட்டது. உயிர் பிழைத்தவரின் அவலநிலை குறித்த விழிப்புணர்வை உருவாக்க, அவர் வழக்கமாக எதிர்கொள்ளும் உடல், உணர்வு அவரது சமூகப் பிரச்சினைகள் குறித்த விளக்கங்கள் வழங்கப்பட்டன. குடும்பத்தையும் சமூக வாழ்க்கையையும் நோக்கித் திரும்புவதில் அவருக்கு ஏற்படும் சிரமங்கள் விளக்கப்பட்டன. குறிப்பாக நெருக்கமான உறவுகளை உருவாக்குவதையும் நிலை நிறுத்துவதையும் கடினமாக்குகின்ற, மரத்துப்போகும் அறிகுறிகள் விவரிக்கப்பட்டன. உயிர் பிழைத்தவர் தொடர்ந்து பின்வாங்குபவராக, பதிலளிக்காதவராக, விறைப்புற்றவர் போல இருந்தாலும் கூட, குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாகவும் அக்கறையுடனும் இருக்க ஊக்குவிக்கப்பட்டனர். எரிச்சல், விரோதம் ஆக்கிரமிப்புப் போக்கு என்பவை, சித்திரவதைச் செயல்முறைகளின் இயல்பான ஒழுங்குவரிசையில் விளக்கப்பட்டன. சித்திரவதையில் இருந்து தப்பியவர்களது பாதுகாப்பு, குடும்பச்சூழலின் வரம்பிற்குள் அவர்களைத் தங்கள் பழைய பாத்திரங்களையும் செயற்பாடுகளையும் மெதுவாக எடுத்துக்கொள்ள ஊக்குவிப்பதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

## அறிவாற்றல் - நடத்தைச் சிகிச்சை முறைகள்

அதிர்ச்சிக்குப் பின்னான மனஅழுத்தக் கோளாறுக்கான (*PTSD*) சிகிச்சையில், அறிவாற்றல் நடத்தைக்கான சிகிச்சை (*CBT*) மிகவும் பயனுள்ள ஒன்றாக இருந்தது. அதுவும் குறிப்பாக நாள்பட்ட '*PTSD*' நிலைகளில், சித்திரவதை காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும், 'பேச்சு சிகிச்சை', ஆலோசனை அல்லது பாரம்பரிய உளவியல் சிகிச்சைகளுக்கு ஏற்றவர்களாக இல்லாதவர்களுக்குமான ஒரு குறிப்பிட்ட சிகிச்சை வடிவமாக, ஷௌவரும் அவரது இணை ஆய்வாளர்களும் (*Schauer & Colleagues, 2003*) விவரித்த '*Narrative Exposure Therapy (NET)*' காணப்படுகிறது. இந்த முறையில், பாதிக்கப்பட்டவர் தனது வாழ்க்கைக் கதையை ஒழுங்குபடுத்திச் சொல்லும் செயல்முறையின் மூலம் சிகிச்சைப் பயனை அடைகிறார். அடிப்படையில், '*CBT*' என்பது உயிர் பிழைத்தவர்களுக்குப் படிப்படியான அதிர்ச்சி ஏற்படுத்தக்கூடிய (திட்டமிடப்பட்ட) நிகழ்வுகளை, அதாவது மிகவும் துன்பத்தை ஏற்படுத்தும் சித்திரவதை விவரங்கள் முதல் குறைந்த அளவான தூண்டுதலைத்

தரும் விவரங்கள் வரை வழங்குவதன் மூலம், அவர்களிடம் அதை எதிர்கொள்ளவும், அதை எதிர்த்துப் போராடவும் ஏற்ற வகையிலான ஒரு படிநிலையை நிறுவுவதுடன், படிப்படியாக இந்தச் சிகிச்சைப் படிநிலையை மேம்படுத்துகிறது. உயிர் பிழைத்தவர்கள் நிதானமான நிலையில் இருக்கும்போது காட்சிப் படங்களாகவோ அல்லது வேறுவிதமாகவோ நடந்த சம்பவங்களை அவர்கள் உணரும் வகையில் அவை வெளிப்படுத்தப்படுகின்றன. உயிர் பிழைத்தவர்கள் துன்பம் இல்லாமல் குறிப்பிட்ட சித்திரவதைச் சம்பவங்களை இயல்பாகவே எதிர்கொள்ளும் வரை, இந்த வகையான வெளிப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பின்னர் படிநிலையில் அடுத்த சம்பவங்கள் அல்லது நிகழ்வுகள், அவர்களது உணர்வுத்தளங்களை நீக்குவதற்கான அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. பெரும்பாலும், அவர்களுக்கு இந்த அடிப்படையிலான அமர்வுகள் அதிகமாகத் தேவைப்பட்டன.

## மன அமைதிப்படுத்தலுக்கான செயல்நுட்பங்கள்

இலங்கையில் இவற்றைப் பயன்படுத்துவதற்கென்று, நெருக்கமான ஆய்வு, பயிற்சி, அனுபவம் என்பவற்றுக்கு மேலாக, பாரம்பரிய நடைமுறைகளிலிருந்தும் நான்கு அடிப்படை முறைகள் தெரிந்தெடுக்கப்பட்டன. ஏனெனில் அவை ஜேக்கப்சனினதும் (1938), நன்கு நிரூபிக்கப்பட்ட தளர்வு நுட்பங்களுடனும் (சோமசுந்தரம், 2002), தொழில்நுட்ப ரீதியாக ஒத்திருப்பது கண்டறியப்பட்டது. யோகப் பிராணாயாமம், பௌத்த வடிவமான மனதை ஒருநிலைப்படுத்திய சுவாசம் (*Anapanasati*) என்பவை கலாசார ரீதியாக நன்கு அறியப்பட்ட சுவாசப் பயிற்சிகளான, மன ஒருமைப்பாட்டுடனான, ஆழமான, வழக்கமான வயிற்று (உதரவிதானம்) சுவாசத்தை அடிப்படையாகக் கொண்டவை. யோக சாந்தி அல்லது சவ ஆசனம் அல்லது பௌத்தமதம் சொல்லும் மன ஒருமைப்பாட்டுடனான உடல் முழுவதையும் உணரும் (தியான) நிலை போன்றவை உடற்தசைகளில் தளர்வை அல்லது மன இளைப்பாறல் நிலையை மேம்படுத்துகின்றன. இதுபோன்றே, 'பென்சனின்' இளைப்பாறல் முறையும் (Benson, 1975), ஆழ்நிலைத் தியானமும் (*Transcendental Meditation*), மந்திரங்கள் அல்லது ஜெபங்களை மீண்டும் மீண்டும் உச்சரிக்கும் நடைமுறைகளும், கிறிஸ்தவ ஜெபமாலை அல்லது பிரார்த்தனை மணிகளைப் பயன்படுத்தும் வழக்கங்களும் கலாசார ரீதியாகப் பரிச்சயமானவையாகவும், ஏற்றுக்கொள்ளத்தக்கவையாகவும் அமைகின்றன. தியானத்திற்கு, தியானம், ஆழ்மனச் சிந்தனை போன்றன பிற முறைகளும் பயன்படுத்தப்பட்டன. மேலதிகமாக, மன ஆறுதல் நிலைகளை அடைவதற்கான தேவைகளைப் பொறுத்து சில குறிப்பிட்ட இடங்களில் பாரம்பரிய 'மசாஜ்' செய்யும் முறையும் பயன்படுத்தப்பட்டது:

## இலங்கையில் பயன்படுத்தப்படும் பாரம்பரிய இளைப்பாற்று (Relaxation) முறைகள்

**1. சுவாசப் பயிற்சிகள் (பிராணாயாமம், அல்லது ஆழ்ந்த, மனதை ஒருநிலைப்படுத்திய சுவாசித்தல் பயிற்சி):** சுவாசத்தை மனதின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அதை ஆழமாகவும், சீராகவும் மேற்கொள்ள வைப்பதே இவற்றின் குறிக்கோளாக இருந்தது. ஒரு நபர் தனது சுவாசத்தை உள்ளே எடுத்து வெளியே விடும்போது அதன்மீது கவனத்தைக் குவிக்கவும், மெதுவாகவும், தொடர்ச்சியாகவும், ஆழமாகவும் சுவாசிக்கவும் கற்றுக் கொடுக்கப்பட்டது. அவர்கள் உள்ளே இழுக்கும்போது அவர்களின் வயிறு மெதுவாக விரிவடைவதில் (இதற்காக அவர்கள் தங்கள் உள்ளங்கையை வயிற்றில் வைக்கலாம்) கவனம் செலுத்துவதற்கு கற்றுக்கொடுக்கப்பட்டது. அவர்கள் ஆழமாக உட்புறமாகச் சுவாசிக்கிறார்கள். பின்னர், மார்பும் வயிறும் ஓய்வெடுக்க அவர்கள் அனுமதிக்கிறார்கள். இதன் மூலம் மூச்சு தானாகவே வெளியேறுகிறது. உள்ளிழுத்து வெளிவிட்டுச் சுவாசிக்கும்போது 'ஓம்' போன்ற ஒரு மந்திரம் அல்லது சொல் சொல்ல வைக்கப்பட்டது. இதைப் பல முறை திரும்பத் திரும்பச் செய்யலாம். படிப்படியாக, மாதக்கணக்கில், 'ஓம்' என்ற வார்த்தையைச் சொல்ல எடுக்கும் நேரத்தை அதிகரிப்பதாக இப்பயிற்சி நடைபெற்றது. மாற்றாக (மேற்கண்ட முறையை அவர்கள் கடினமாகக் கண்டால்), அவர் மூச்சை உள்ளிழுக்கும் போது ஆரம்பத்தில் ஒன்றிலிருந்து மூன்று வரை எண்ணவும், வெளிவிடும் போதும் மீண்டும் மூன்று வரை எண்ணியபடி வெளிவிடவும் கற்றுக் கொடுக்கப்பட்டது. பின்னர் இந்த எண்ணிக்கையைப் படிப்படியாக அதிகரிக்கலாம்.

**2. படிப்படியாக உடற்தசைகளை தளர்வுநிலைக்குக் கொண்டுவரல் (சாந்தி அல்லது சவ ஆசனம், மன உறுதியுடன் கூடிய உடல் விழிப்புணர்வு):** முழு உடலும் தளர்வடையும் வரை உடலின் ஒவ்வொரு உறுப்பையும் படிப்படியாகத் தளர்த்துவதே இதன் நோக்கமாகும். அவர்கள் ஒரு பாய் அல்லது படுக்கையில் மேல்நோக்கி முகம் பார்த்துப் படுக்க வைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் முதலில் தங்கள் கால் விரல்களில் மனதை ஒருமுகப்படுத்தவும், அவற்றை ஓய்வு நிலைக்குக் கொண்டுவரும் போது (தளர்த்துவது அல்லது விடுவிப்பது), தங்களுக்குள் "என் கால் விரல்கள் தளர்வாக உள்ளன, சாந்தி, சாந்தி, சாந்தி" என்று சொல்லவும் கற்றுக் கொடுக்கப்பட்டது. இந்த வழியில்,

அவர்களின் உடலின் மேற்பகுதிகளான கால் விரல்கள், உள்ளங்கால்கள், கணுக்கால், கன்று, முழங்கால், தொடை, பிறப்புறுப்புகள், ஆசனவாய், வயிறு, முதுகு, மார்பு, விரல்கள், கைகள், முழங்கை, தோள்கள், கழுத்து, முகம் மற்றும் இறுதியாகத் தலை என்று படிப்படியாகத் தளர்த்தவும், அவை தளர்வாக இருப்பதாகச் சொல்லவும் அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். அதாவது, அவர்கள் ஒவ்வொரு பகுதியையும் தளர்த்தும்போது “என் ..... தளர்வாக உள்ளது, சாந்தி, சாந்தி, சாந்தி” என்று தங்களுக்குள் சொல்லும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். அந்தப் பகுதியில் ஆழ்ந்த அமைதி, இளைப்பாறிய நிலையிலான அதன் இருப்பு என்பவற்றையும், இறுதியில் முழு உடலும் ஆழமான தளர்நிலைக்கு வரும் வரை அவற்றை மனதால் உணரும்படியும் அவர்களிடம் கேட்கப்பட்டது. மாற்றாக (நவீன மனப்பான்மை கொண்ட நோயாளிகளுக்கு), ஜேக்கப்சனின் முற்போக்கான தசைத் தளர்வு முறையும் கற்பிக்கப்பட்டது.

**3. வழக்கமான திரும்பத் திரும்பச் சொல்லும் வார்த்தைகள் (ஜெபம், ஜெபமாலை, பிரார்த்தனை மணிகள்):** இந்தச் ஜெப முறையில், ஒரு புனித வசனம், கடவுளின் பெயர், ஒரு மந்திரம், அர்த்தமுள்ள மரபுச் சொல் அல்லது ஒரு வழக்காற்று வசனம் என்று ஏதாவதொன்றை திரும்பத் திரும்பக் கூறுதல் பயன்படுத்தப்பட்டது. இந்துக்களுக்கு, தீட்சையின் போது அவர்களுக்கு வழங்கப்பட்ட மந்திரம் அல்லது பிரணவ மந்திரமான ‘ஓம்’ தேர்ந்தெடுக்கப்பட்டது. கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களுக்கு, இயேசு ஜெபம் (‘இயேசு கிறிஸ்து, என் மீது கருணை காட்டுங்கள்’) அல்லது பிரார்த்தனை மணிகள் பயன்படுத்தப்பட்டன. நோயாளி தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தையை ஒரு நாளைக்கு இரண்டு முறை மீண்டும் மீண்டும் (பல முறை) சொல்லும்படி கேட்கப்பட்டார். முதலில் இது குரல் மூலம் செய்யப்பட வேண்டும்; பின்னர் சில வாரப் பயிற்சிக்குப் பிறகு ஒரு கிசுகிசுப்பாக, பின்னர் வெறும் குரலொலி மூலம் செய்யப்பட வேண்டும். அதன் பின்னர், இறுதியாக வெறும் சிந்தனையாக அது அமையும்.

**4. தியானம் (தியானம், அமைதி, விபாசனா):** முதலில் நோயாளி தியானத்திற்கு ஒரு பொருளைத் தேர்ந்தெடுக்கச் சொல்லப்படுவார். அந்த நபரின் தெய்வம், கடவுள், மரியாதைக்குரிய துறவி அல்லது பெரியவர், ஓர் அழகான இயற்கைக் காட்சி அல்லது சுடர் போன்றவற்றில் ஏதாவதொன்று பெரும்பாலும் தியானத்தின் பொருளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மாற்றாக, மேலே குறிப்பிடப்பட்டதைப் போன்ற சொல் அல்லது சொற்றொடர் பயன்படுத்தப்பட்டது. இதைச் சிரமமாகக் கருதிய நோயாளிகளுக்கு, சுவாசத்தை (மூக்கின் நுனியில் உள்ளே எடுக்கப்படும், வெளியேற்றப்படும் சுவாசத்தை) அல்லது வயிற்றின் எழுச்சியையும் தாழ்வையும் கவனிக்கச் சொன்னார்கள். அவர்களுக்கு வசதியான ஒரு தோரணையில் அமர்ந்துகொள்ளக் கற்றுக் கொடுக்கப்பட்டது. பின்னர் அவர்கள் மனதைத் தேர்ந்தெடுத்த பொருளின் மீது தொடர்ந்து ஒருமுகப்படுத்தி வைத்திருக்கச் சொல்லப்பட்டார்கள்.

மனம் திசைதிருப்பப்பட்டால் அல்லது வேறொரு விஷயத்துக்குச் சென்றால், மெதுவாக அதைப் பற்றி அறிந்து கொள்ளவும், படிப்படியாக, வலுக்கட்டாயமாக அல்லாமல், அதை அவர்கள் தேர்ந்தெடுத்த பொருளுக்குத் திரும்பக் கொண்டுவரவும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மிகவும் மென்மையாக, அதிக சக்தி அல்லது முயற்சி இல்லாமல், மனதை தேர்ந்தெடுத்த பொருளின் மீது வைத்திருக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது சில நிமிடங்கள் பயிற்சி செய்யப்பட்டு, பின்னர் படிப்படியாக நேரம் அதிகரிக்கப்பட்டது.

**5. உருவிவிடல் (மசாஜ்):** பாரம்பரிய ஆயுர்வேத அல்லது சித்த எண்ணெய் உருவுதல் (மசாஜ்) முறைகள் பயன்படுத்தப்பட்டு, அவற்றை, வீட்டிலேயே மீண்டும் செய்வதற்கு, இவை ஓர் உறவினருக்குக் கற்பிக்கப்பட்டன.

அதிர்ச்சியின் பல விளைவுகளுக்கு, அதாவது விழிப்புணர்வு, பதட்டம் மற்றும் வலி அல்லது சோர்வு நிலைகளுக்கு யோகா மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பெரும்பாலான சித்திரவதைக்கு ஆளானவர்களில் காணப்படும் சோர்வும் வலிகளும், தசை இறுக்கத்தால் ஏற்பட்டவையாக இருந்தன. தளர்வுநிலை இதற்கு எதிரான நல்ல விளைவுகளைத் தந்தது. இதேபோல், விரைவானதும் ஆழமானதுமான சுவாசிப்பு ஒரு பொதுவான பிரச்சினையாகவும், பல மனோதத்துவப் புகார்களுக்கு அடிப்படையாகவும் இருந்தது. சித்திரவதையிலிருந்து தப்பியவர்களிடம் காணப்படும் தசைக்கூட்டு வலிகள், உடலின் பல்வேறு பகுதிகளில் நீடித்துக் காணப்படும் கடுமையான வலிகள், மேலும் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட காயங்களால் உடல் தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்ற பிரச்சினைகளுக்காக தளர்வு முறைகள், உருவிவிடல் மற்றும் யோகா போன்ற நடைமுறைகள் பயனுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளன.

## மருந்தியல் சிகிச்சை

மனச்சோர்வும் இணைந்து இருக்கும்போது, மருந்துச் சிகிச்சை தேவைப்படும் கடுமையான சித்திரவதைக்குப்

பிந்தைய அதிர்ச்சிகரமான நிலைகளில் உள்ளவர்களுக்கு, மன அழுத்த எதிர்ப்பு மருந்துகளால் நல்ல பதில் கிடைக்கும். PTSDயிலும் கூட, குறிப்பாக ஊடுருவும் நிகழ்வுகள் மற்றும் கனவுகளில், மன அழுத்த எதிர்ப்பு மருந்துகளால் நல்ல முன்னேற்றம் ஏற்படுகிறது. 'ட்ரைசைக்ளிக் அன்டி டிப்பிரசன்ட்ஸ்' (Tricyclic Antide pressants) இன் குறைந்த அளவு இமிபிரமைன் (Imipra mine) (25 mg) பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வேலை செய்கிறது. ஒருபுறம் அதன் நல்விளைவையும், மறுபுறம் அதன் பக்கவிளைவுகளையும் கணக்கில் எடுத்து மாத்திரையின் அளவைப் படிப்படியாக அதிகரிக்கலாம். அதிக அளவுகளில் (>50 mg), பக்கவிளைவுகள் தோன்றத் தொடங்குகின்றன. சிலர் குறைந்த அளவைக் கூட பொறுத்துக்கொள்ள முடியாமல் போகலாம். மாற்று மருந்தான அமிட்ரிப்டைலின் (Amitriptyline) இதனுடன் தொடர்புடைய தூக்கக் கோளாறுகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அல்லது குறிப்பாக புதிதாக வந்துள்ள 'தேர்ந்தெடுக்கப்பட்ட மீள் பயன்பாட்டுக்குரிய செரோடோனின்' மறு பயன்பாட்டுக்கான தடுப்பு மருந்துகள் (SSRIகள்) பயனுள்ளவையாக இருக்கும். நெருக்கடி அல்லது அதிகப்படியான பதற்றத்திற்கு டயஸெபம் (Diazepam) என்ற மருந்து பயனுள்ளதாக இருக்கும். கனவுகள் தொந்தரவாக இருந்தால், மன அழுத்த எதிர்ப்பு மருந்துகள் உதவாதபோது, டயஸெபமைச் சேர்ப்பதால் கனவுகளை அடக்கி தூக்கத்தை மீட்டெடுக்கலாம்.

## வெளிப்பாட்டுச் சிகிச்சை

உணர்ச்சிகள் மற்றும் அதிர்ச்சி தொடர்பான கலை வெளிப்பாடுகள் தனிநபர்களுக்கும் ஒட்டுமொத்தச் சமூகத்திற்கும் மனப்பாரங்களைக் குறைப்பவையாக அமைகின்றன. கலை, நாடகம், கதை சொல்லல், கவிதை அல்லது நாவல்கள் எழுதுதல் (சாட்சியம்), பாடுதல், நடனம், களிமண்களில் உருவங்களைச் செய்தல், சிற்பம் போன்றவை பொருத்தமான இடங்களுக்கேற்ற உணர்ச்சி வெளிப்பாட்டு முறைகளாகப் பயன்படுத்தப்பட்டன. அதிர்ச்சியடைந்த ஒரு நபர் ஊடகம் ஒன்றின் மூலம் தனது அதிர்ச்சிகரமான அந்த அனுபவத்தை வெளிப்படுத்த முடிகிறது. இதன் மூலம், தொடர்புடைய உள்மனத் துயரம் இல்லாமலே வெளிப்புறமாகச் செயற்படும் வகையில் அவரை ஒரு சிகிச்சையாளரால் (Therapist) கையாளவும் முடிகிறது. சிகிச்சையளிப்பவரும் கூட, இந்தச் செயற்பாட்டில் உயிர் பிழைத்தவரது அதிர்ச்சிகரமான அனுபவத்தின் பாதிப்பிலிருந்து இறுதியாக அவரை விடுவிப்பதற்கான தனது உதவியை வழங்குவதற்கு ஒரு வசதியான நிலையில் இருப்பார். நாடகம் விழிப்புணர்வை உருவாக்குவதற்கும் கூட்டு உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கும் ஒரு சக்திவாய்ந்த சமூக முறையாகும். உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நாடகம் 'அன்னை இட்ட தீ', சித்திரவதைச் செயல்முறை பற்றியும் ஒரு உயிர் பிழைத்தவரின் வெளிப்பாடுகளையும் வெளிப்படுத்தியது. தனித்தனியாக, இந்த மனோதத்துவ நாடகம் உயிர் பிழைத்தவருக்கு துன்பகரமான சம்பவங்கள், தொடர்புடைய உணர்ச்சிகள் என்பவற்றைச் செயற்படுத்த உதவியது. மறுவாழ்வின் போது, சமூகத் திறனூட்டற் பயிற்சிகளுக்குப் பொருத்தமான பாத்திரங்களைக் கொண்ட நாடகங்கள் பயன்தருபவையாக இருந்தன.

மூன்றாம் உலகச் சமூகங்களில் சடங்குகளுக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. அவற்றால் மனவலிமை, ஆதரவு, புரிந்துகொள்ளல் என்பவற்றிற்கான அடிப்படை ஆதாரங்களாக இருக்க முடியும். இதனால் குடும்பங்கள் பாரம்பரியச் சடங்குகளை நடத்துவதற்கு ஊக்குவிக்கப்பட்டன. விளையாட்டு, விளையாட்டுப் போட்டிகள், நாட்டுப்புறப் பாடல்கள், நடனம், சமயம் சார்ந்த விழாக்கள் போன்ற ஓய்வுகால நடவடிக்கைகள் அவர்களுக்கு சந்திப்புகளுக்கும், (தமக்கான) ஆதரவைக் கண்டறிவதற்கும், தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கும், சமூகத்துடன் மீண்டும் ஒன்றிணைந்து கொள்ளுவதற்குமான செயல்களுக்கான வழிமுறைகளாக ஊக்குவிக்கப்பட்டன.

## செயல்முறைச் சிகிச்சை (Occupational Therapy)

தனிப்பட்ட உயிர் பிழைத்தவர்களுக்கு அடிப்படைச் சமூகத் திறன்களும் சில குறிப்பிட்ட கைவினை வேலைகளும் கற்பிக்கப்பட்டன. அவை அவர்கள் தமக்கான வேலைவாய்ப்பைக் கண்டுபிடித்துச் சமூகத்தில் தங்களை மீண்டும் ஒருங்கிணைக்க உதவுகின்றன. ஆண்களுக்கு பயிரிடல், தோட்டக்கலை, ஓவியம், சைக்கிள் பழுதுபார்த்தல், தச்சு வேலை, காகிதப் பைகள் தயாரித்தல் போன்றவையும், பெண்களுக்கு நெசவு, தையல், சமையல் போன்றவையும் தப்பிப் பிழைத்தவர்களான இவர்களது விருப்பங்கள், திறமைகள் என்பவற்றைப் பொறுத்து அளிக்கப்பட்ட பயிற்சிகளுக்கான சில எடுத்துக்காட்டுகளாகும். இதைவிட, நேரத்தைக் கட்டமைத்து உடற் செயற்பாடுகளைத் திருப்திகரமான இலக்குகளாக மாற்றுவதன் மூலம் வழங்கப்பட்ட தொழிற்பயிற்சி போன்றவை, அவர்களது தனிநபர் கட்டுப்பாடு, தேர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் தமது தகுதியையும் அதன் பயனையும் திரும்பப் பெற்றுக்கொள்ள உதவின. இவை அவர்கள் தமது சுயஆளுமையையும் சுயமரியாதையையும் நிலைநாட்ட உதவின. ஆயினும், பிற அனைத்து நடவடிக்கைகளிலும்

போலவே, அவர்களின் உளவியல் பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் போட்டியோ அழுத்தமோ இன்றி, தங்களது முயற்சியில் முன்னேறக்கூடிய பாதுகாப்பான சூழல் அவசியமாக இருந்தது. நீண்டகால அடிப்படையில் அவர்களது தொழில் திறன்கள் அவர்களுக்கான ஆற்றலை வளர்த்துத் தன்னிறைவை உருவாக்குகின்றன.

## மறுவாழ்வு

உயிர் பிழைத்தவர்களை மீண்டும் அவர்களது குடும்பத்துடனும் சமூகத்துடனும் சேர்ப்பது என்பது ஒட்டுமொத்தச் சிகிச்சையின் மிக முக்கியமான பகுதியாக இல்லாவிட்டாலும் கூட, அது இன்றியமையாததாக அமைகிறது. நிதி ஆதாரங்களின் பற்றாக்குறை, இலாபகரமான வேலைவாய்ப்பு, வீட்டுவசதிச் சிரமங்கள் மற்றும் பிற சமூகப் பிரச்சினைகள் ஆகியவை உயிர் பிழைத்தவரின் அடிப்படைத் தேவைகளில் ஒரு முக்கிய பகுதியாக அமைகின்றன என்பதை எங்கள் ஆய்வுகள் காட்டுகின்றன. இந்தத் தொடர்ச்சியான பிரச்சினைகளின் அடிப்படையான சவால்கள் அவர்களது மீட்சியைத் தடுக்கின்றன; அதே நேரத்தில், இந்த அடிப்படைத் தேவைகளைத் தீர்ப்பதே சரியான சிகிச்சை முறையாகவும் இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, வடக்குக் கிழக்கில் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இத்தகைய வாய்ப்புகள் முற்றிலும் இல்லாமல் இருந்தன. இருப்பினும், இப்போது ஸ்தம்பித்திருக்கும் சமாதானச் செயற்பாட்டில் சில முன்னேற்றங்கள் காணப்படுகின்றன.

சுவாரஸ்யமாக, உலகெங்கிலும் சித்திரவதையில் இருந்து தப்பியவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக உள்ள பிற மையங்களில் பெரும்பாலான நேரமும் முயற்சியும் உடைகள், புகலிடப் பிரச்சினைகள், வீட்டுவசதி போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் செலவிடப்படுகின்றன. ஏனெனில் இது தனிநபரின் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கும் மீட்சிக்கும் உதவுகிறது என்று அவர்கள் கண்டறிந்துள்ளனர். எனவே சிகிச்சையின் ஒரு முக்கிய அம்சம் தனிநபர்கள் மற்றும் குடும்பத்தினருக்கான இறுதி மறுவாழ்வைத் திட்டமிடுவதாகும். இந்தத் திட்டம் ஒரு தனிநபரதும் அவரது குடும்பத்தினரின் தேவைகளுக்கும் ஏற்ப தனித்தனியாக வடிவமைக்கப்பட்டது. ஒரு நபர் சமூகத்தில் தன்னை மீண்டும் நிலைநிறுத்திக் கொள்ள உதவும் நிதி ஆதாரங்கள் அவரது சுயமரியாதையையும் சுயகௌரவத்தையும் மீண்டும் பெறுவதற்கான ஒரு அத்தியாவசியப் படிகளாகும். கடன்கள், வீட்டுவசதி, தொழில் பயிற்சி, வருமானம் ஈட்டும் திட்டங்கள், வேலைவாய்ப்பு போன்ற பொருத்தமான சமூகப் பொருளாதார உதவிகளைக் கண்டறிய பிற அரசு, அரசு சாரா நிறுவனங்களுடன் (NGO) தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. உயிர் பிழைத்தவர்களில் சிலருக்கு உளவியல்சார் சமூகக் குழுவில் (Psychosocial Group) வேலைகள் வழங்கப்பட்டன. சட்டம், மனித உரிமைகள், நீதி மற்றும் பிற பிரச்சினைகள் தொடர்பான அமைப்புகளிலும் இவர்களுக்கான வேலைகளுக்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டன. உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பொருத்தமான அமைப்பைத் தெரிவு செய்யவும், தொடர்பு கொள்ளவும், சமூகத்தில் உள்ள பல்வேறு நிர்வாகப் பிரச்சினைகளைச் சமாளிக்கவும், மறுவாழ்வுக் கட்டத்தில் அவற்றைப் பின்தொடரவும், பல்துறைக் குழுவைச் சேர்ந்த சமூகப் பணியாளர்கள் உதவினர்.

## சமூக அணுகுமுறைகள்

சித்திரவதையின் பரவலான பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு, சமூகத்தில் கணிசமான எண்ணிக்கையிலானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். மேலே விவரிக்கப்பட்ட படி, வடக்கில் 1% மக்கள் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர் என்று ஒரு கணக்கெடுப்புக் கண்டறிந்துள்ளது (சோமசுந்தரம் & சிவயோகன், 1994). இருப்பினும், சித்திரவதை தனிநபரை மட்டுமல்ல, மேலே விவாதிக்கப்பட்ட படி அவர்களின் குடும்பங்கள், சமூகம் மற்றும் பெரிய சமூகத்தையும் பாதிக்கிறது. உண்மையில், முக்கிய நபர்கள் மற்றும் தலைவர்களை சித்திரவதை செய்வது, பயங்கரவாதத்தின் மூலம் கட்டாய அடக்குமுறைக்கான ஒரு நவீனகால வழிமுறையாக, பெரிய சமூகத்தைக் குறிவைப்பதாகத் தெரிகிறது. சமூகத்தில் ஏற்படும் விளைவுகளில் ஒன்று ‘கூட்டு அதிர்ச்சி’ என்று அழைக்கப்படுகிறது (சோமசுந்தரம், 2003). இந்தச் சூழ்நிலைகளில், ஒட்டுமொத்தச் சமூகம் எவ்வாறு பதிலளித்தது, சமூகம் எவ்வாறு சமாளித்தது, மற்றும் கூட்டு மட்டத்தில் நாம் என்ன செய்ய முடியும் என்பவற்றைப் பார்ப்பது மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, குடும்பம் மற்றும் கிராமக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் மீண்டும் கட்டியெழுப்புதல் ஆகியவற்றைக் கருத்தில் கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்; அத்துடன், பயங்கரவாதத்தின் விளைவுகளுக்கு ஒரு பொதுவான அர்த்தத்தைக் கண்டறிவதும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த நோக்கத்திற்காக பின்வரும் முறைகள் (பெட்டி 1 இனைப் பார்க்கவும்) சமூக மட்டத்தில் மாற்றியமைக்கப்பட்டன:

**Box I**

1. *Community Approaches*
2. *Awareness*
3. *Training of Community Workers*
4. *Public Mental Health Promotive Activities*
5. *Encourage Indigenous Coping Strategies*
6. *Cultural Rituals and Ceremonies*
7. *Community Interventions*
    1. *Family*
    2. *Groups*
    3. *Expressive Methods*
    4. *Rehabilitation*
8. *Prevention*

பொது விழிப்புணர்வு, சித்திரவதையும் அதன் விளைவுகளும் பற்றிய பொதுக் கல்வி என்பவை பொது மக்களுக்கும், மருத்துவர்கள், நீதித்துறை, நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட சட்ட அதிகாரிகள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவன ஊழியர்கள், இராணுவம் மற்றும் (மனித உரிமைகள், சித்திரவதைக்கு எதிரான சர்வதேச மரபுகள் போன்றவை உட்பட) போராளிப் படைகள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்களுக்கும் உயர் தொழில்முறை மட்டத்தில் ஊடகங்கள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் பிரபலமான சிறப்புச் சொற்பொழிவுகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் குடும்ப மறுவாழ்வு மையம், மனித உரிமைகள் நிறுவனம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்துக்குமான மையம் மற்றும் மனித உரிமைகள் ஆணையம் ஆகியவற்றால் கணிசமான கல்விப் பணிகள் செய்யப்பட்டன. இந்த அயராத முயற்சிகள் மூலம், சித்திரவதையுடன் தொடர்புடைய மனித உரிமை மீறல்கள் பற்றிய அறிவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவும், சித்திரவதை நடைமுறையில் வீழ்ச்சி ஏற்படவும் வாய்ப்புண்டாகலாம்.

## பயிற்சி வழங்கல்

அடிப்படை மனநல அறிவிலும் திறன்களிலும் சமூக அடிமட்ட ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பது, அது பெரியளவில் மக்களைச் சென்றடைவதற்கான எளிதான ஒரு வழியாகும். அவை பொது (விடயங்கள் சார்ந்த) விழிப்புணர்வுகளை அதிகரிப்பதுடன், அவை பற்றிய அறிவையும் பரவலாக்குகின்றன. சித்திரவதை காரணமாக ஏற்படும் பெரும்பாலான உளவியல் சார்ந்த சமூகப் பிரச்சினைகளை சமூக மட்ட ஊழியர்களாலும், பொருத்தமான மட்டத்தில் குறிப்பிடப்படும் பிறராலும் நிர்வகிக்க முடியும்: மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள், செவிலியர்கள், குடும்ப சுகாதாரப் பணியாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், கிராம சேவகர்கள், முதியோர், பாரம்பரிய மருத்துவர்கள், பாதிரியார்கள், துறவிகள், கன்னியாஸ்திரிகள் போன்ற கிராம வளங்கள், அரசு, அரசு சாரா அமைப்புகள் (NGO), தன்னார்வ நிவாரண அமைப்புகள், அகதி முகாம் பணியாளர்கள் போன்றோர் இவற்றில் அடங்குவர்.

*WHO/ UNHCR (1996)* கையேட்டை அடிப்படையாகக் கொண்ட 'அகதிகள் மனநலம்' என்ற கையேடு, *WHO* ஆதரவுடன் இந்த நோக்கத்திற்காக தமிழ்க் கலாசாரச் சூழலுக்கு (தமிழ் சமூகத்தில் மனநலம்) ஏற்ப மாற்றியமைக்கப்பட்டது. இந்தக் கையேட்டைப் பயன்படுத்தி சமூக மனநலம் குறித்த பயிற்சியாளர்களுக்கான பயிற்சி (*TOT*கள்) *UNICEF* ஆதரவுடன் செய்து முடிக்கப்பட்டது. அவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட பல்வேறு சமூக அளவிலான பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தனர். இந்த வழியில் தேவையான அறிவும் திறனும் பரந்துபட்ட மக்கட் பிரிவினர் மத்தியில் பரவலாகப் பரப்பப்பட்டன. மிகவும் கடுமையான பிரச்சினைகளை விசேட சிகிச்சைப் பிரிவுக்குப் பரிந்துரைக்கக்கூடிய ஒரு 'பரிந்துரை அமைப்பு' நிறுவப்பட்டுள்ளது.

## பாரம்பரியக் கூட்டுறவு உத்திகள்

உள்ளூர் மக்கள் உயிர்வாழ உதவிய பூர்விக மக்களால் பாவிக்கப்பட்ட கூட்டுவாழ்க்கை உத்திகள் ஊக்குவிக்கப்பட்டன. சடங்குகள், நினைவு விழாக்கள் போன்ற கலாசார ரீதியாகப் பரிந்துரைக்கப்பட்ட, அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் நிகழ்வுகள் தனிப்பட்ட உயிர் பிழைத்தவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் பரிந்துரைக்கப்பட்டன. அவை அவர்களது மனவலிமை, ஆதரவு, அச்செயல்களின் அர்த்தம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டவையாக இருக்கலாம். தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட சிலர் எப்போதாவது விடுவிக்கப்பட்டால் சில மதச் சடங்குகளைத் தாம் செய்வதாகச் சபதம் எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த வழியில் சிலர் இறுதியாகக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட போது காவடி எடுத்தனர்; சில சமயங்களில் தூக்குக் காவடியையும் கூட எடுத்தனர்.

சமூகத்தில் உள்ள பெரிய குழுக்களுக்கு யோகா போன்ற கலாசார ரீதியாகப் பொருத்தமான மன ஆறுதலுக்கான

பயிற்சிகளைக் கற்பிப்பது சித்திரவதை செய்யப்பட்டவர்களுக்கு உதவும்.

### மறுவாழ்வளித்தல்

மறுவாழ்வுக்கான சமூக அடிப்படையிலான அமைப்புகளை (CBOs) உருவாக்குவதை ஊக்குவிப்பதன் மூலமும், வசதி செய்வதன் மூலமும் சமூக வலைப்பின்னல்களையும் சமூக உணர்வையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உயிர் பிழைத்தவர்களின் தேவைகளுக்கு ஏற்ப கல்வி, தொழிற்பயிற்சி, வருமானம் ஈட்டும் திட்டங்கள், கடன்கள், வீட்டுவசதி போன்றவற்றை உள்ளடக்கிய மறுவாழ்வுத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. நிவாரணம், மறுவாழ்வு, புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரச, அரசு சாரா நிறுவனங்களுடனான வலைப்பின்னல் வகையிலான நெருங்கிய தொடர்பு, ஒத்துழைப்பு, அவர்களுக்கான வலையமைப்பு என்பவை மிகவும் பயனுள்ளவையாகக் கண்டறியப்பட்டன. சமூகப் பொருளாதாரத் திட்டங்களுக்கு அவர்களது உதவியை நாங்கள் நாட முடிந்ததும், உயிர் பிழைத்தோரைப் பரிந்துரைக்கவும், பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கவும் அவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

அரச, அரசு சாராத மற்றும் சர்வதேசத் துறைகளுடன் இணைந்து பணியாற்றும் போது, தனிநபர், குடும்பம், சமூகச் சிகிச்சைமுறை, மீட்பையும் ஒருங்கிணைப்பையும் ஊக்குவிக்கும் உளவியல் செயல்முறைகளுக்கான அவர்களின் திட்டங்கள் அல்லது செயற்பாடுகள் உரிய பரிசீலனையை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அத்தகைய எந்தவொரு திட்டமும் சம்பந்தப்பட்ட உள்ளூர் மக்களின் விருப்பங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்பவையாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு தங்கியிருக்கும் அல்லது 'பாதிக்கப்பட்ட' பாத்திரத்தை விட, ஒரு செயலை ஆற்றுகின்ற, தீர்மானிக்கின்ற பாத்திரமும் வழங்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. ஏனெனில் இது அவர்களின் ஒட்டுமொத்தப் பங்கேற்பு உணர்வையும், அதன் காரணமாக அவர்களது இறுதியான உளவியல் மீட்சியையும் ஊக்குவிக்கிறது. இதைத் (மேற்சொன்ன தங்கியிருக்கும் அல்லது 'பாதிக்கப்பட்ட' பாத்திரத்தை) தவிர்க்க, வளர்ந்து வரும் சுய உதவிக்குழுக்களும் உள்ளூர்த் தலைமைகளும், பாரம்பரிய ரீதியான பழக்கவழக்க அடிப்படையிலான நடத்தை முறைகளை மீண்டும் தொடங்கவும், சமூக வலைப்பின்னல்களையும் சமூகச் செயற்பாடுகளையும் அடிமட்ட நிலையிலேயே மீண்டும் நிறுவவும் ஊக்குவிக்கப்பட்டன (ரபேல், 1986). மறுசீரமைப்புச் செயற்பாட்டில் உள்ளூர் ஆற்றல்கள், வளங்கள் என்பவற்றைக் கவனத்தில் எடுத்துப் பயன்படுத்துவதன் மூலம் சமூகம் ஒரு வெற்றிகரமான சாதனையையும் நிறைவையும் பெறும் நிலை ஏற்படுத்தப்பட்டது.

பகிரப்பட்ட அதிர்ச்சிகரமான அனுபவங்களின் பின்னணியில், இழப்பையும் அதன் அர்த்தத்தையும் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துதல், ஊடகங்கள், கலை, பொதுப்பணிகள், நினைவுச் சின்னங்கள், சிறப்பு அருங்காட்சியகங்கள் மற்றும் பிற நாடுகளில் நடைமுறையில் உள்ள பொதுத்துக்க நிகழ்வுகள் வழியாக சித்திரவதைக்கு ஆளானவர்களின் வீரத்தை வெளிப்படுத்துதல் (கின்ஸ்டன் & ரோஸர், 1974) போன்ற நினைவூட்டல்களை உள்ளடக்கிய, பாரபட்சமற்ற கலாசாரச் செயல்முறைகளை ஏற்படுத்துவது, இங்கு நிலவும் சர்வாதிகார சூழ்நிலைகளில் மிகவும் கடினமாக இருந்தது. ஒருவேளை அமைதிச் செயல்முறை தொடர வேண்டும் என்ற நோக்கமும், அரசியல் அடக்குமுறைச் சூழ்நிலையில் தளர்வு நிலைமை ஏற்படுவதும் நடந்தால், அது பெரியளவில் சாத்தியமாக முடியும். இதேபோல், சமூக ஒன்றுகூடல்கள், கூட்டங்கள் மற்றும் மத சம்பந்தமான விழாக்கள் ஆகியவை இனவாத உணர்விலிருந்து வெளிவருவதற்கு ஏற்ற கூட்டு மன அதிர்ச்சியை மதிப்பாய்வு செய்து ஏற்றுக்கொள்ளுதல், சமூக ரீதியாக அவர்களின் அனுபவங்களை வரையறுத்து விளக்குதல், அத்துடன் சமூக இணைப்புகளை மீண்டும் நிறுவுதல், எதிர்காலத்திற்கான திட்டமிடல் என்பவை சிறப்பான செயற்பாடுகளாக அமையும்.

### நெறிமுறைகள் - தற்காப்பு

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுடன் பணிபுரிந்த பிறகு, அது ஏற்படுத்தும் உடல், உள ரீதியான சொல்லொணாத் துயரத்தைக் கண்ட பிறகு, ஒருவர் மிகப்பெரிய உடல், உள ரீதியான, சமூக ரீதியான உள்ளார்ந்த தாக்கத்தை உணரத் தொடங்குகிறார். சித்திரவதையைப் பொறுத்தவரை உண்மையில் நடுநிலை நிலைப்பாடு என்று ஒன்று இருக்க முடியாது. மருத்துவத் தொழிலின் உறுப்பினர்களாக, நமது சமூகம் மற்றும் ஒட்டுமொத்த மனிதகுலத்தின் மீதும் நமக்கு ஒரு பொறுப்பு உள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலையும் சௌகரியத்தையும் அளிக்க முயற்சிக்கும் ஒரு குணப்படுத்தும் தொழிலாக எமது தொழில் இருக்க வேண்டும் என்று நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம். பரவலான சித்திரவதையைத் தடுப்பதற்கான ஒரே வழி, அதைப் பயிற்சி செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்கும் மோதலை நிறுத்துவதாகும் என்பது தெளிவாகிறது. மற்றொன்று, சித்திரவதையை முற்றிலுமாக ஒழிப்பதற்காகப் பாடுபடுவது. சர்வதேச அளவில், மருத்துவத் தொழிலில் உள்ள பல உறுப்பினர்கள், தனித்தனியாகவும் ஒரு குழுவாகவும்,

சித்திரவதைக்கு எதிராகக் கடுமையாகக் குரல் கொடுத்துள்ளனர். உலக மருத்துவச் சங்கம் (WMA); டேனிஷ், சிலி மற்றும் பிரித்தானிய மருத்துவச் சங்கங்கள், மனித உரிமைகளுக்கான அமெரிக்க மருத்துவர்கள், அமெரிக்கப் பொதுச் சுகாதாரச் சங்கம், தென்னாபிரிக்க தேசிய மருத்துவ மற்றும் பல் மருத்துவச் சங்கம் (NAMDA) போன்ற மருத்துவ அமைப்புகள் சித்திரவதைக்கு தங்கள் முழுமையான எதிர்ப்பை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன. சர்வதேச அளவில் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தின் பிரிவு 5, சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. மாநாட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பின் 11 ஆவது பிரிவும் சித்திரவதையைத் தடை செய்கிறது.

முடிவெடுப்பது அல்லது தீர்வு காண்பது போன்ற விஷயங்களில் நாம் மிகவும் பலவீனமாகவும் உதவியற்றவர்களாகவும் இருப்பதாக உணரக்கூடும். ‘மோதல்கள் நடக்கும் பகுதிகளில் உள்ள சுகாதார ஊழியர்கள் என்ற வகையில், சுகாதார நிபுணர்களாகிய நாம் அமைதியாக இருக்க முடியாது; நெறிமுறைகளைக் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கும் சமூகத்திற்குமான ஒரு கொள்கை ரீதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்’ என்பதை அவர்கள் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர் (Chandasri, 1999; Armanian, 1989; Zwi & Ugalde, 1989). மருத்துவத் தொழிலுக்கு ஒரு சக்திவாய்ந்ததும் வலியுறுத்தும் வகையிலானதுமான குரல் இருக்கிறது. குறிப்பாக, சித்திரவதைக்கு எதிராக நாம் அமைதியாக ஒரு நிலையான குரலை எழுப்ப முடியும் போது, அது சக்திவாய்ந்த வலியுறுத்தும் குரலைக் கொண்ட ஒன்றாக இருக்கும். சர்வதேச மாநாடுகளின் வெளியீடுகள், அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும் விளக்க உரைகள் ஆகியவை மருத்துவத் தொழில் சார்ந்த அழுத்தத்தைக் கொண்டுவரக்கூடிய வழிகளாகும். அல்லது இது நமது அன்றாட நடவடிக்கைகளிலும் தொடர்புகளிலும் இருக்கலாம். அங்கு நாம் பிரச்சினைகளில் கொள்கை ரீதியான நிலைப்பாடுகளை எடுக்கலாம். அத்துடன் சித்திரவதை போன்ற பிரச்சினைகளில் நமது கவலைகளை வெளிப்படுத்தலாம். மிகவும் சகிப்புத்தன்மையுள்ள அரசியல் சூழலில் மிகவும் சுறுசுறுப்பான, வெளிப்படையான வாதங்கள் சாத்தியமாகும். தடுப்புக்கும் நல்லிணக்கத்திற்குமான தலையீட்டின் மற்றொரு பகுதி, உள்ளூர் மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் செய்யப்படும் கொள்கை உருவாக்கம், மறுவாழ்வு மற்றும் சர்வதேச உதவித் திட்டங்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் சாத்தியமாகும். முரண்பாட்டின் தோற்றம், சூழல், மதிப்பீடு மற்றும் பின்னணி போன்ற தலைப்புகளின் கீழ் மேற்கண்ட பகுப்பாய்வில் குறிப்பிடப்பட்டுள்ள சில முடிவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் கொள்கையில் தாக்கம் செலுத்த முடியும். உள்ளூரிலும் தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளிலும் பெறும் உறுப்பினர் பதவி மூலம் அத்தகைய பங்களிப்புச் சாத்தியமாகிறது.

சமூக நீதி இன்னமும் புரிந்துகொள்ளப்படாத ஒரு கனவாகவே உள்ளது. சித்திரவதைக் குற்றவாளிகள் இன்னும் தண்டிக்கப்படவில்லை. குறைந்தபட்சம் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை அதிகாரபூர்வமாக அடையாளம் காண்பதும் அங்கீகரிப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படாவிட்டாலும் கூட, பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் அவர்களின் நீண்டகாலத் துன்பங்களுக்கான சிறிது நிவாரணம் பெற வாய்ப்பளிக்கின்றன. இவை நீதி, மன ஆரோக்கியம், சமூக ஆரோக்கியம் என்பவற்றை மீட்டெடுக்க உதவுகின்றன.

நமது சமூகத்தில் நிலவும் சித்திரவதையின் அளவையும் அதன் அபரிமிதமான பாவனையையும், அதைச் செய்யும் குற்றவாளிகள் ஒருபோதும் தண்டிக்கப்படுவதில்லை என்ற திடுக்கிடும் உண்மையையும் நாம் காணும்போது, எமது சமூகத்தில் இது ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றுதான் என்ற முடிவுக்கே நாம் வரவேண்டியிருக்கும். சிலர், இலக்குகள் வழிமுறைகளை நியாயப்படுத்துகின்றன என்று வாதிடலாம். இருப்பினும், பயன்படுத்தப்படும் வழிமுறைகளின் போக்கே அடையப்படும் இலக்கை வடிவமைப்பதாகவும் அமைகிறது. சித்திரவதை என்பது பயிற்சியாளரையும் பாதிக்கப்பட்டவரையும் மனிதாபிமானமற்றவர்களாக, கொடூரமானவர்களாக ஆக்குவதற்கான ஒரு வழிமுறைதான். பாதிக்கப்பட்டவர் எதிரியாக முத்திரை குத்தப்படுகிறார். (அதிகாரத்தின் பார்வையில் அவர்) ‘தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடன்’ ஒப்பிடத்தக்க ஒரு மனிதர் அல்ல என்பதனால் அவருக்கு வழங்கப்படும் மோசமான தண்டனைகள், அடி, சித்திரவதை எல்லாமே சமூகத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கவையாகின்றன. சித்திரவதைச் செயல்முறையும் அதன் சட்டபூர்வமாக்கலும் சமூகத்தின் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டு, அவை வாழ்வின் ஒரு பகுதியாகவும் அதன் அன்றாட வாழ்வில் பிரதிபலிப்பவையாகவும் மாறுகின்றன. இதுதவிர, சித்திரவதை செய்பவர்களும் கூட, தாங்கள் செய்யும் அந்த வேலைகளால் தாமாகவே மிருகத்தனம் கொண்டவர்களாக மாற்றம் அடைந்தும் வருகிறார்கள்.

உலகின் பிற பகுதிகள் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருக்கும் போது, மெதுவாகவும் வேண்டுமென்றே அதிகபட்ச வலியை ஏற்படுத்துவதற்காகவும் சித்திரவதை செய்யப்படுகிறது.

அவ்வாறு செய்யப்படும் போது, சித்திரவதையாளர் பாதிக்கப்பட்டவரைப் படித்து அறிந்துகொள்கிறார். குறைந்தபட்சமான உடல் வடுக்களுடன் அதிகபட்சமான உளவியல் சேதத்தை ஏற்படுத்தும் வகையில் அவர் தனது நடைமுறையை வடிவமைக்கிறார். சித்திரவதை செய்பவர்களுக்கு ஒருவரது துன்பத்தைக் காண்பதில் ஒரு வலுவான இன்பக் கிளர்ச்சி இருக்கிறது. அவர்கள் (சித்திரவதைகளைச் செய்யும் போது) பெரும்பாலும் சிரிக்கிறார்கள், நகைச்சுவைகளை உதிர்ப்பார்கள், குடிப்பார்கள். பொதுவாக அவர்கள் சித்திரவதையைச் செய்யும்போது தங்களைத் தாங்களே மகிழ்விக்கிறார்கள் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். யோனியில் அல்லது ஆசனவாயில் எதையாவது பொருட்களைச் செருகுவது போன்ற சில வகையான சித்திரவதைகள் மிகவும் துன்பகரமானவை என்பது வெளிப்படை. அத்துடன் அவை பாலியல் ரீதியான உந்துதல்களால் செய்யப்படுபவையும் கூட. சில சந்தர்ப்பங்களில், சித்திரவதையின் காட்சிகளைப் பார்க்க உயர் அதிகாரிகளும் வருவதாகக் கூறப்படுகிறது. சித்திரவதை செய்பவருக்கு, ஒருவரது துன்பத்தில் இன்பம் காணும் (Sadistic) ஒருவகை மனநிலையும் இருக்கிறது. எதிர்ப்பின் அடையாளமாகக் கருதப்படும் பாதிக்கப்பட்ட நபரிடம், பழிவாங்கும் மனோபாவத்துடன் வெளிப்படும், இடம்பெயர்ந்த எதிரியின் கோபத்தின் ஒரு கூறும் திசைதிருப்பப்பட்டுச் செலுத்தப்படுகிறது. தங்களது உண்மையான எதிரிக்கு எதிரான எதிர்ப்புணர்வும் (தமது குடும்பங்களைப் பிரிந்திருக்கும் விரக்தி காரணமான), விரக்தியும், இயலாமையும் காரணமாக அவர்களிடம் எழுகின்ற கோபம், சிறைச்சாலையின் பாதுகாப்பிற்குள் இருக்கும் உதவியற்ற பாதிக்கப்பட்டவர்கள் மீது வெளிப்படுகிறது. சித்திரவதை செய்பவர்களை ஒரு குழுவாக எடுத்து அவர்கள் பற்றிய ஆய்வுகள் செய்யப்படவில்லை. ஆனால் அவர்களது ஆளுமையின் அசாதாரணங்களாக, வேலை வழக்கத்தின் ஒழுங்குமுறை, சகாக்களால் ஏற்படும் அழுத்தங்கள், நிலவும் கட்டமைப்புக்கு ஒத்துழைத்தல், கட்டுப்பாடுகள், வேலை முறைக்கேற்ப சேர்ந்து ஈடுகொடுத்தல், சட்ட அமைப்புக்கு ஒத்துழைத்தல், மிருகத்தனம், சோகம், தீய ஆக்கிரமிப்பு மற்றும் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல் ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். ஆச்சரியப்படும் விதமாக, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் அன்பான குடும்பங்களைக் கொண்ட சாதாரண - பெரும்பாலான அட்டூழியங்களுக்குப் பொறுப்பான நாஜி அதிகாரிகள் (அரெண்ட், 1963) போல - சராசரியான சட்டத்தை மதிக்கும் குடிமக்களாக மாறக்கூடும். மற்றவர்கள், தங்களின் 'மனிதத் தடை நீக்கம்' என்ற செயல்முறையின் ஒரு பகுதியாக, பாதிக்கப்பட்டவர்களை மனிதரைவிடக் குறைவானவர்களாகவோ, தண்டனைக்குத் தகுதியான ஆபத்தான எதிரிகளாகவோ, அல்லது தகவல் அல்லது ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட வேண்டியவர்களாகவோ கருதும் தமது இனமையக் கருத்துகளிலேயே நிலைத்திருக்கலாம்.

ஒரு குழுவாக அவர்கள் பெரும்பாலும் தூக்கமின்மை, கனவுகள், எரிச்சல், ஆழ்ந்த சந்தேகம் மற்றும் விரோதம் உள்ளிட்ட உறவுசார்ந்த பிரச்சினைகள், வன்முறைகலந்த ஆத்திரம், கடுமையான தாங்க முடியாத எரிவெடிக்கும் வலி போன்ற சோமாடிசம் (Somatism), திடீர் மயக்கங்கள், துடிக்கும் தலைவலிகள் என்பவை பற்றி புகார் கூறுகின்றனர். அவர்கள் பெரும்பாலும் மது அல்லது போதைப்பொருட்களால் தங்களைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள்; தற்கொலை எண்ணங்களும் அடிக்கடி வருகின்றன. அவர்களில் பலர் சித்திரவதைச் சூழ்நிலையில் சிக்கிக்கொண்டு தப்பிக்க முடியாமல் தவிக்கின்றனர். மற்றவர்கள் பாதிக்கப்பட்டவரின் துன்பத்திலிருந்து வலியை உண்டாக்கி இன்பம் பெறும்படி கட்டாயப்படுத்தும் ஒரு துன்பகரமான ஆளுமையை தமக்குள் வளர்த்துக் கொள்கிறார்கள்.

சித்திரவதைகள் தொடர்பாக நாம் அமைதியாக இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். சித்திரவதைகள் தங்கள் மூக்கின் கீழ் நடப்பது கூட பலருக்குத் தெரியாது. சில காலத்திற்கு முன்பு, கொழும்பின் மையப்பகுதியில் ஒரு சித்திரவதைக் குகை இருப்பதை தொடர்ச்சியான நிகழ்வுகள் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன; அங்கு தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் அவர்களின் உடல்கள் கொழும்பைச் சுற்றியுள்ள ஏரிகளில் வீசப்பட்டன. காவல்துறையின் உயர்மட்ட சிறப்புப் பணிக்குழு இதில் ஈடுபட்டது, ஆனால் அவர்கள் ஒருபோதும் தண்டிக்கப்படவில்லை. சில நேரங்களில் கேட்கும் சித்திரவதை செய்யப்பட்டவர்களின் வேதனைகரமான அழுகைகள் குறிப்பாக வேதனையளிக்கும். இது யாழ்ப்பாணத்தில் இந்தியப் படைகளின் (IPKF) ஆக்கிரமிப்பின் போது நடந்தது; அங்கு குடியிருப்புப் பகுதிகளுக்கு நடுவில் ஒவ்வொரு சில நூறு 'யார்' தூர இடைவெளியிலும் அவர்களது முகாம்கள் இருந்தன.

நள்ளிரவில் இராணுவ முகாம்களில் இருந்து சித்திரவதை செய்யப்படும் கைதிகளின் அழுகை அருகில் வசிப்பவர்களை விழித்திருக்க வைத்தது. அது அவர்களுக்குக் கடுமையான உளவியல் தொந்தரவுகளை ஏற்படுத்தியது. மற்றவர்கள் சித்திரவதை நடைமுறையை வெளிப்படையாக மறுக்கிறார்கள்; பெரும்பாலும்

அதிகாரிகளது அதிகாரபூர்வ மறுப்பும் உள்ளது. அத்துடன் பல சாதாரண குடிமக்கள் தங்கள் நாட்டின் விரும்பத்தகாத பகுதியைப் பற்றிச் சிந்திக்க விரும்ப மாட்டார்கள். சித்திரவதை பற்றி விவாதிக்கும் போது சிலர் வேறு வகையான 'சித்திரவதை'க்கு மாறுவார்கள்; உருவகமாகப் பேசினால், அவர்கள் குடும்பத்திற்குள் நடக்கும் சித்திரவதை அல்லது பல்கலைக்கழகங்களில் நடக்கும் 'ராகிங்' செய்தலைக் குறிப்பிடுவார்கள். இருப்பினும், ஒரு தனிநபரை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் உடைக்கக் கடுமையான அளவிலான வலியை முறையாக பயன்படுத்துவது பற்றியே இங்கே பேசுகிறோம் என்பதை நினைவில் கொள்வது அவசியம். இது தரமான முறையில் முற்றிலும் மாறுபட்ட பரிமாணத்தில் நடக்கிறது.

சித்திரவதை என்ற உண்மையை பலர் ஏற்றுக்கொண்டாலும், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், அரசுக்கோ அல்லது அரசிலிருந்தோ வரும் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்கும் இது தவிர்க்க முடியாத, அவசியமான தீமை என்று அவர்கள் கருதுவார்கள். சில அப்பாவிப் பொதுமக்கள் துரதிர்ஷ்டவசமாகப் பிடிபடலாம்; ஆனால் பொதுவாக சித்திரவதை செய்யப்படுபவர்கள், தகவல் கொடுப்பவர்கள் அல்லது துரோகிகள் போன்ற குற்றவாளிகள் என்று அவர்கள் வாதிடுகின்றனர். பொதுவாகச் சித்திரவதை என்பது சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது ஓரளவுக்கு அனுமதிக்கப்பட்ட காவல்துறையின் மிருகத்தனத்தின் பின்னணியில் இருந்து உருவாகிறது என்று தோன்றுகிறது. ஓர் அவநம்பிக்கையான சூழ்நிலையில் மோதல் வெடிப்பதும், அதிகரித்து வரும் இராணுவமயமாக்கலும், சித்திரவதையையும் அதுபோன்ற பிற கடுமையான மனித உரிமை மீறல்களையும் எளிதில் நடைமுறைப்படுத்த அனுமதிக்கிறது. இந்த வகையான சமூக ஏற்புடைமையை மாற்றுவதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

சமூகத்தில் சித்திரவதைப் பிரச்சினை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், இந்த தவிர்க்க முடியாத தன்மையை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை முறியடிப்பதிலும் நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. இருப்பினும், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் ஐ.நா. மரபுகளைச் செயற்படுத்துவதன் மூலமும், அரசியல் அதிருப்தி மற்றும் மோதலுக்கு வழிவகுத்த அடிப்படைத் துயரங்களைப் போதுமான அளவில் நிவர்த்தி செய்வதன் மூலமும், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற கொடூரமான சட்டங்களை ரத்துச் செய்வதன் மூலமும் மனித உரிமை மீறல்களைத் தடுப்பது நீண்ட காலத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

## முடிவுரை

இலங்கையில் சித்திரவதை என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களது குடும்பங்களுக்கும், அவர்களது சமூகத்திற்கும் குறுகியதும் நீண்டதுமான காலத்திற்கு உடல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் மற்றும் சமூக ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பயங்கரவாதத் தடுப்பு மற்றும் அவசரகாலச் சட்டங்கள் போன்ற சட்டங்கள், ஒரு சமூகத்தைக் கட்டுப்படுத்தவும் கட்டாயப்படுத்தவும் முயற்சிக்கும் வகையில் தடுத்து வைத்துச் சித்திரவதை செய்வதற்கான சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்பை அரசுக்கு வழங்கியுள்ளன. இதனால் இது ஒரு வகையான அரச பயங்கரவாதத்தையும், எதிர்ப்பையும் கிளர்ச்சியையும் தூண்டுவதன் மூலம் ஒரு நிரந்தரமான பயங்கரவாதச் சட்டமாகவே செயற்பட்டு வருகிறது.

### கட்டுரையாசிரியர் பற்றிய குறிப்பு

*தயா சோமசுந்தரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மனநல மருத்துவத்தின் மூத்த பேராசிரியராகவும், வட இலங்கையில் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக மனநல மருத்துவ ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார். அவர் கம்போடியாவில் இரண்டு ஆண்டுகள் "டிரான்ஸ்கல்ச்சர் சைக்கோசோஷியல் ஒகனைசேஷன்" ( Transcultural Psychosocial Organization) உடன் சமூக மனநலத் திட்டத்தில் பணியாற்றியுள்ளார். பல்வேறு சுகாதார ஊழியர்களுக்கும், சமூக மட்ட ஊழியர்களுக்கும் அவர் ஆற்றிய கற்பித்தல்,பயிற்சி அளித்தல் என்பவை தவிர, அவரது ஆராய்ச்சிகளும் பிற வெளியீடுகளும், முக்கியமாக பேரழிவுகளின் உளவியல் விளைவுகளும் அவற்றுக்கான சிகிச்சைகளும் என்பவை மீது கவனம் செலுத்தியுள்ளன. அவர் இங்கிலாந்தின் "Royal College of Psychiatrists" கல்லூரியின் ஆய்வுத்துறைச் செயற்பாட்டாளரும் ஆவார். இலங்கையில் சித்திரவதைக்கு ஆளானவர்கள் பற்றிய மிகவும் ஆழமான ஆய்வாகப் பாராட்டப்பட்ட 'காயப்பட்ட மனங்கள்' ( 'Scarred Minds') உட்பட பல வெளியீடுகளின் ஆசிரியரும் ஆவார். தற்போது அவர் அவுஸ்திரேலியாவில் கிளென்சைட்(Glenside) மருத்துவமனையில் ஆலோசக மனநல மருத்துவராகவும், அடிலெய்ட்(Adelaide) பல்கலைக்கழகத்தில் மருத்துவ இணைப் பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.*

# மரபிலிருந்து மாறி மரபாகுதல்: யாழ்ப்பாணத்துத் தென்மோடிக் கூத்து

ஈழத்து மரபுவழி ஆற்றுகைக் கலைகளுக்கு ஒரு வரலாறும் வளர்ச்சியும் உண்டு. தென்மோடி, வடமோடி, சிந்துநடைக் கூத்துகள், வாசாப்பு, இசை நாடகம், பள்ளு, குறவஞ்சி, வசந்தன், மகுடி என அது பன்முகப்பட்டது. இவற்றுள் சில அருகிவிட்டன; சில கால ஓட்டத்துடன் நின்று போராடி நிலைக்கின்றன; சில மாறுகின்றன. காலந்தோறும் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகளும், அதனை உருவாக்கிய அரசியல், பொருளாதார, சமூக காரணங்களும் இம்மாற்றங்களுக்கு அடித்தளமாக உள்ளன. இந்த பல்வேறு வகைப்பட்ட ஆற்றுகை வடிவங்கள் தத்தமக்கென அழகியலையும், அமைப்பையும், வெளிப்பாட்டுத் திறனையும் கொண்டுள்ளன; ஒன்றிலிருந்து ஒன்று பெற்றும் வளர்ந்துள்ளன. இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்வதும், அவை மாற்றம் பெற்றபோது அது சம்பந்தமாக நடந்த விவாதங்களை அறிவதும், இதன் இருப்பைத் தக்கவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுபவருக்கும், அதனை மேலும் வளர்த்துச் செல்ல விரும்புவோருக்கும் உதவியாக இருக்கும். இப் பல்வேறு ஆற்றுகை வடிவங்கள் பற்றியும் அவை கல்வி உலகில் ஏற்கப்பட்ட பின்னணிகள் பற்றியும், அதனால் இந்த ஆற்றுகைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் அறிமுகம் செய்வதாக 'ஈழத்துத் தமிழரின் ஆற்றுகைக் கலைகள் : மரபும் மாற்றமும்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமைந்திருக்கும்.


## சின்னையா மௌனகுரு



சின்னையா மௌனகுரு அவர்கள் இலங்கையின் மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர்; அரங்க ஆய்வாளர், பயிற்சியாளர், இயக்குநர், பிரதி உருவாக்குநர், நடிகர், கூத்துக் கலைஞர் என்று பல தளங்களில் இன்றும் இயங்கிவருபவர்.ஈழத்து அரங்கத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்ட சிலரில் மௌனகுரு குறிப்பிடத்தக்கவர். 'இராவணேசன்', 'சங்காரம்' முதலிய புகழ்பெற்ற கூத்து நாடகங்கள் மௌனகுருவுக்கு தனியான அடையாளத்தை வழங்கின.

இவர், 20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம் – 1984, சடங்கில் இருந்து நாடகம் வரை – 1985, மௌனகுருவின் மூன்று நாடகங்கள் – 1985, தப்பி வந்த தாடி ஆடு – 1987, பழையதும் புதியதும் நாடகம் அரங்கியல் – 1992, சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும் – 1992, சங்காரம் – ஆற்றுகையும் தாக்கமும் (நாடகம்) – 1993, ஈழத்து தமிழ் நாடக அரங்கு – 1993, கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் – நீலாவணன் – 1994, கலை இலக்கிய கட்டுரைகள் – 1997, சக்தி பிறக்குது – நாடகம் – 1997, பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திராவும் ஈழத்து நாடக மரபும் – 1997, ஈழத்து நாடக அரங்கு – 2 ஆம் திருத்திய பதிப்பு – 2004, தமிழ்க் கூத்துக்கலை – வடமோடி ஆட்டப் பயிற்சிக்கான கைந்நூல் – 2010, கூத்து யாத்திரை – 2021, கூத்தே உன் பன்மை அழகு – 2021 போன்ற பலநூல்களை எழுதியுள்ளார்.

## அறிமுகம்

நீண்ட மரபுடைய தென்மோடிக் கூத்து தமிழர்களுக்கு உரிய பாரம்பரியக் கூத்து வடிவமாகும். இதன் அடிமுடி தேடிச் சென்றால், நாங்கள் சோழர் காலத்துக்குச் செல்ல வேண்டும் என்பது எனது புரிதல். சோழர் காலத்தில் இரண்டு வகையான கூத்துகள் ஆடப்பட்டன என்பதற்கு கல்வெட்டுச் சான்றுகள் இருக்கின்றன. ஒன்று ஆரியக் கூத்து; இன்னொன்று தமிழ்க் கூத்து. ஆரியக் கூத்து என்கின்ற சொற்றொடரே அது வெளியில் இருந்து வந்தது என்பதைக் காட்டுகிறது அல்லவா? ஆனால் தமிழ்க் கூத்து என்கின்றபோது, அது தமிழ்நாட்டுக்கே உரித்தான கூத்து என்பதே பொருளாகின்றது. தமிழ்க் கூத்து வடிவம் பின்னர் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.

## சோழர் ஆட்சியில் கூத்து: ஈழத்து நாடக வரலாற்றில் ஆராயப்படாத பகுதி

இலங்கையில் சோழர் ஆட்சி சுமார் கி.பி. 1017-1070 வரை, சுமார் 50 ஆண்டுகள் நிலவின. இந்தக் காலத்தில் மட்டக்களப்பும் சோழர் நிர்வாகப் பகுதியாக இருந்திருக்கலாம் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். சோழர் காலத்தில் இருந்த கோயில்மைய நடன/ நாடக மரபுகள் கிழக்கு இலங்கையையும் எட்டியிருக்க வாய்ப்பு மிக அதிகம். ஆனால் இன்று மட்டக்களப்பில் உள்ள தமிழ்க் கூத்து/ நாட்டுக்கூத்து நேரடியாகச் ‘சோழர் கொண்டு வந்தது’ என்று சொல்ல முடியாது.

மாறாக, அந்தக் காலக் கோயில் கலை மரபுகள் இங்கிருந்த பழைய நாடக மரபுகளோடு கலந்திருக்கலாம். சோழர் காலத்தில் ஆடப்பட்ட ஆரியக் கூத்து/ தமிழ்க் கூத்து கோயில்கூத்து மரபுகள் கிழக்கு இலங்கையை எட்டியிருக்க வாய்ப்பு அதிகம். அவை இங்கிருந்த நாட்டுப்புற நாடக மரபுகளோடு கலந்தே இன்று நாம் காணும் தமிழ்க் கூத்து உருவாகியிருக்கலாம். அதனால் ‘சோழர் கூத்து இங்கு வந்ததா?’ என வினவினால் — ஆம், அதன் கலைச் செல்வாக்கு வந்திருக்கலாம் என்பதே விடை. ‘இன்றைய மட்டக்களப்புக் கூத்து அதேதானா?’ என வினவினால் — இல்லை, அது கலந்து வளர்ந்த உள்ளூர் வடிவம் என்பதே விடை.

யாழ்ப்பாணப் பகுதியும் சோழர் அரசியல் - நிர்வாகக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த காலம் உள்ளது என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. சோழர் காலத்தில் கோயில்மைய வழிபாடு வலுப்பட்டது; புராணக் கதைகள் பரவின; கோயில் விழாக்களில் நாடகங்கள் நடந்தன. இவை யாழ்ப்பாணத்தின் உள்ளூர்க் கூத்து மரபுடன் கலந்து வளர்ந்திருக்கலாம். சோழர் காலக் கூத்துகள் யாழ்ப்பாணத்திலும் பரவியிருக்கலாம்; அவை கோயில்ஆகமக் கதைகள் சார்ந்தன. ஆனால் யாழ்ப்பாணக் கூத்து உள்ளூர் நாட்டுப்புற மரபை அடிப்படையாகக் கொண்டது. அதனால் தான் யாழ்ப்பாணக் கூத்து புராணக் கதைகளைக் கூறினாலும், முழுக்க மக்கள் பாணியில் இருக்கிறது.

இவ்வாறு சோழர் ஆட்சி இலங்கையின் வடபகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் இருந்த போது, இந்த ஆரியக் கூத்தும் தமிழ்க் கூத்தும் வந்திருக்க வாய்ப்பு உண்டு. ஈழத்தமிழ் நாடக வரலாற்றில் இந்த இருண்ட பகுதிக்கு இன்னும் வெளிச்சம் போடப்படவில்லை.

## நாயக்கர் ஆட்சியில் கூத்து

பின்னர் 15 ஆம் நூற்றாண்டில், தமிழ்நாட்டில் நாயக்கர் ஆட்சிக் காலத்தில் வந்து சேர்ந்த கர்நாடக, கேரள, தெலுங்கு நாடக வடிவங்களின் கலப்பினால், தமிழ்நாட்டு மரபு வழிக் கூத்துகள் பல்வேறு சாயல்களைப் பெற்றன. தமிழ்நாட்டில் ஆடப்படும் கூத்துகளை தெற்கத்திக் கூத்து, வடக்கத்திக் கூத்து, மேற்கத்திக் கூத்து என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

தெற்கத்திக் கூத்தில் இந்தத் தென்மோடியின் சாயல்கள் தென்படுகின்றன. இலங்கை நாயக்கர் ஆட்சியின் கீழ் இருந்த காலத்தில், அல்லது தமிழ்நாட்டோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த காலத்தில், இத்தகைய கூத்துகள் இங்கே வருவதற்கான சாத்தியப்பாடுகள் இருந்திருக்கக் கூடும். அப்படி வரலாற்றுக்கூடாக வட இலங்கைக்கும் கிழக்கு இலங்கைக்கும் வந்து சேர்ந்த ஒரு வடிவமாக நாம் தென்மோடிக் கூத்தைக் கொள்ளலாம்.

## தென்மோடிக் கூத்தின் மூலம்

நான் இந்தத் தென்மோடிக் கூத்தினுடைய மூல உற்பத்தியைத் தேடிச் சென்றபோது, அது வசந்தன் கூத்தின் தன்மைகளையும் பெற்றிருப்பதை அவதானிக்க முடிந்தது. அதன் வளர்ச்சி இப்படித்தான் இருக்கலாம் என்று ஓர் ஊகத்தை அன்று நான் முன்வைத்திருந்தேன். “மட்டக்களப்பின் சமயச் சடங்குகள், அதிலிருந்து உருவான வசந்தன் பாடல்கள், அதனுடைய அடுத்தகட்ட வளர்ச்சியாக தென்மோடிக் கூத்துகள் உருவாகின” என்று ஒரு நேர்கோட்டு வளர்ச்சியை நான் அன்று கூறியிருந்தாலும், மட்டக்களப்பில் ஏற்கனவே இருந்த நடனநாடக வடிவங்களும், வந்து சேர்ந்த

தென்மோடிக் கூத்தின் ஆடல்-பாடல் வடிவங்களும், அரங்காற்று முறைகளும் இணைந்து, மட்டக்களப்புப் பாணியிலான தென்மோடி உருவாகியிருக்கலாம் என்பதே எனது புரிதல். பொதுவான ஈழத்துத் தென்மோடிக் கூத்துப் பற்றிய இந்த முன்னுரையை ஒருபுறமாக வைத்துவிட்டு, இப்போது நாங்கள் குறிப்பாக யாழ்ப்பாணத் தென்மோடிக் கூத்துகளைப் பற்றிப் பார்ப்போம்.

## யாழ்ப்பாணத்தில் தென்மோடிக் கூத்து

கத்தோலிக்க மரபில் வந்த செழுமையான ஒரு தென்மோடிக் கூத்து மரபு இன்றும் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ளது. ஆனால் அது காலந்தோறும் மாறி வந்த ஒரு மரபின் கிளை என்பது அதிகம் பேசப்படாத ஒன்று.

நாரந்தனை, பாசையூர், குருநகர், நாவாந்துறை, சுண்டிக்குழி, மெலிஞ்சி முனை, கொழும்புத் துறை, கட்டைக்காடு, மயிலிட்டி, வெற்றிலைக் கேணி, தாளையடி, மணல் காடு, குடத்தனை, பலாலி போன்ற இடங்களில் எல்லாம் கத்தோலிக்க தென்மோடிக் கூத்துகள் ஆடப்பட்டன என்றும், இன்றும் கட்டைக்காடு, வெற்றிலைக் கேணி, மணல் காடு, பலாலி, மண்டைதீவு ஆகிய பகுதிகளில் அந்தப் பழைய கத்தோலிக்க கூத்துகள் அதே மரபில் ஆடப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் அறிகிறோம். அவ்வண்ணமாயின், யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதி மக்களின் வாழ்வோடும் கத்தோலிக்க மதத்தோடும் இந்தத் தென்மோடிக் கூத்துகள் கலந்திருக்கின்றன என்பது அர்த்தமாகும்.

எஸ்தாக்கியார், தேவசகாயம் பிள்ளை, சஞ்சுவான், ஞானசவுந்தரி, மருகரிதாள் என்பன இங்கு பாடப்பட்டன அல்லது பாடப்படுகின்றன எனவும் அறிகிறோம். ஆனால் இதுவரை யாழ்ப்பாணத்தில் எத்தனை தென்மோடிக் கூத்துகள் ஆடப்பட்டன என்று ஒரு திட்டவட்டமான வரையறை எங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. இந்தத் தகவல்களை அறியப் பலர் முயற்சித்திருக்கிறார்கள். காரை சுந்தரம் பிள்ளை, தில்லைச் சிவன், சொக்கன், ஜோன்சன் ராஜ்குமார், தவமைந்தன் ரொபேர்ட் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தில்லைச் சிவன் தனது நூலில் சில முக்கியமான தகவல்களைத் தருகிறார். அவர் வட்டுக்கோட்டைப் பகுதியில் ஆடப்பட்ட பத்து தென்மோடிக் கூத்துகளைத் தருகிறார். அவை: வாளபீமன் நாடகம், அலங்கார ரூபன் நாடகம், அதிரூப அமராவதி நாடகம், கோவலன் நாடகம், குருக்கேத்திர நாடகம், இந்திரகுமார் நாடகம், நளச்சக்கரவர்த்தி நாடகம், கண்ணன் நாடகம், மார்க்கண்டேய நாடகம் என்பனவாம். இவை அனைத்தும் இந்து மதம் சார்ந்த தென்மோடிக் கூத்துகளாகும். இவை அனைத்தும் மட்டக்களப்பிலும் ஆடப்பட்டன என்பதும், இன்றும் ஆடப்படுகின்றன என்பதும் ஆராய்வாளருக்கான ஒரு செய்தியாகும். நாடகங்களைப் புலவர்கள் எழுதி, அதனை அங்குள்ள கோயில் சார்ந்த சமூகத்தினரான ஒரு சமூகம் பழக்கியது என்ற குறிப்பையும் தில்லைச் சிவன் தருகிறார். ஆனால் இவை எவ்வாறு ஆடப்பட்டன என்பதற்கான ஆற்றுகை விவரத்தை அவர் தரவில்லை. வட்டக்களரியில் இவை ஆற்றப்பட்டிருக்கலாம்; இதற்கான ஆட்ட முறைகளும் இருந்திருக்கலாம். இந்த ஆட்ட முறைகளையும் வட்டக்களரியினையும் இன்று நாம் மட்டக்களப்பிலேயே காண்கிறோம். முல்லைத்தீவிலும் இதைப் பேணுகிறார்கள். முல்லைத்தீவின் கோவலன் கூத்து தனித்துவமானது. அதன் ஆட்ட முறையையும் பாடல் இசையையும் உற்று நோக்கும்போது, அதிலே தென்மோடியின் சாயல்கள் அதிகம் தென்படுகின்றன. அங்கும் வட்டக்களரியிலேயே அந்தக் கூத்து இன்றும் ஆடப்படுகிறது. அவற்றை நாம் இன்னொரு இடத்தில் நோக்குவோம்.

யாழ்ப்பாணத்தில் ஆடப்பட்ட தென்மோடிக் கூத்தின் அதிகமான விவரங்களை காரை சுந்தரம் பிள்ளை தனது ‘வட இலங்கை நாட்டார் அரங்கு’ நூலில் பதிந்திருக்கிறார். அவர் ஆராய்வின்படி, யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் வடமோடி, தென்மோடிக் கூத்துகள் வட்டக்களரியில் ஆடப்பட்டிருக்கின்றன. ஆடல்-பாடல் முறைகளில் மட்டக்களப்பில் காணப்படுவது போல, இரண்டுக்கும் இடையிலே வேறுபாடுகள் இருந்திருக்கின்றன.

ஆரம்பமாகி, பழகி, அரங்கேற்றம் செய்யும் வரை உள்ள ஒரு மரபு வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய இரண்டு இடங்களிலும் அப்படியே பேணப்பட்டு இருக்கிறது. வடமோடி, தென்மோடிக் கூத்துகள் யாவும் புராண, இதிகாசக் கதைகள், கற்பனைக் கதைகள், சரித்திரச் செய்திகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இக்கூத்துகள் யாவும் ஆரம்பத்தில் இந்து மதக் கருவையே கொண்டிருந்தன. அப்போது யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மதம் வராத காலமாகும்.

## போர்த்துக்கேயர் - கத்தோலிக்க மத வருகையும் கூத்தும்

*1619* இல் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, அதனை ஆட்சி செய்யத் தொடங்கினர். தமது ஆட்சியை மேலும் நிலைநிறுத்துவதற்காக, அவர்கள் தமது மதமான கத்தோலிக்க மதத்தை அங்கு பரப்பத் தொடங்கினர். அதிகாரத்தை நிலைநிறுத்த அவர்களுக்கு மக்களை மதமாற்றம் செய்ய வேண்டியது

அவசியமாக இருந்தது. கத்தோலிக்க மதத்தை இந்து மக்கள் மத்தியில் பரப்புவதற்காக, தங்கள் நாட்டிலிருந்து கிறிஸ்தவ சபையினரை ஆட்சியாளரான போர்த்துக்கேயர் வரவழைத்தனர். பிரான்சிஸ்கன் சபை, டொமினிக்கன் சபை, இயேசு சபை என கத்தோலிக்க மதச் சபையினர் இங்கே வந்தனர். அந்தச் சபையைச் சேர்ந்த பாதிரிமார் இங்கே மதம் பரப்பத் தொடங்கினர்.

## யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மதம்

*1619* இல் போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணத்தை முழுமையாகக் கைப்பற்றினர். அதன் பின்னர், போர்த்துக்கேய அதிகாரம் கத்தோலிக்கப் போதனையாளர்களை போர்த்துக்கல்லிலிருந்தும் கோவாவிலிருந்தும் வரவழைத்து, கத்தோலிக்க மதத்தை யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பரப்பத் தொடங்கியது.

*1622* இல் இயேசுசபை (*Jesuit*) மிஷனரிகள் யாழ்ப்பாணத்திற்கு வந்து கல்விக்கூடங்களைத் தொடங்கினர்; மேலும் முக்கிய செயற்பாடுகளும் ஆரம்பமாகின. அடுத்த ஆண்டு, போர்த்துக்கேயர் ஆட்சி யாழ்ப்பாண மண்டலத்தை *42* பிரிவுகளாகப் (*Parishes*) பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும் போதகர் குழுக்களை நியமித்தது. கிறித்தவத் தேவாலயங்கள் கட்டப்பட்டன. இது ஒரு மிக வலுவான சமயக் கட்டமைப்பாகும்.

ஆலய வழிபாட்டிற்கு ஏற்கனவே பழக்கப்பட்டிருந்த யாழ்ப்பாண இந்து மக்கள், இந்த புதிய ஆலயங்களுக்குச் சென்றனர். பலர் கிறிஸ்தவர்களாக மாறினர் என்று வரலாறு கூறுகிறது. *1624-1626* காலப்பகுதியில் பல யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் கத்தோலிக்கராக மாற்றப்பட்டனர்; குறிப்பாக பிரான்சிஸ்கன் போதகர்கள் மிகப் பலரை மதம் மாற்றினர். *1634* ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் கூடுதலாகப் பல தமிழ் மக்கள் கிறிஸ்தவர்களாக இருந்தனர் என்றும் சில போர்த்துக்கேய ஆவணங்கள் தெரிவிக்கின்றன. மக்களை மதம் மாற்ற அவர்கள் பல உத்திகளைக் கையாண்டனர். எந்த மதப்பிரிவும் இத்தகைய பல உத்திகளைக் கையாண்டே தம்மதத்தைப் பரப்பியிருக்கிறது என்பதே வரலாறு.

## கத்தோலிக்க நாடக மரபு

ஐரோப்பிய நாடக மரபில் கத்தோலிக்க நாடக மரபுக்கு ஒரு வரலாறு உண்டு. கத்தோலிக்க மதத்தின் யாழ்ப்பாண வருகை, கூத்திலும் குறிப்பாக தென்மோடிக் கூத்திலும், பலத்த மாற்றத்தை ஏற்படுத்துகிறது. பதினாறாம், பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கு வந்த கத்தோலிக்க மிஷனரிமார், கூத்து வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளனர். இதனைப் புரிந்துகொள்ள, நாம் முதலில் ஐரோப்பிய நாடக மரபின் ஒரு கிளை வளர்ச்சியை அறிய வேண்டும். ஐரோப்பிய நாடக மரபில் மறைபொருள் நாடகம் (*Mystery Play*), அற்புத நாடகம் (*Miracle Play*) என மதம் சார்ந்த நாடகங்கள் தேவாலய மன்றங்களில் ஆடப்பட்டன. இதில் மதகுருமாரே நடித்திருக்கின்றனர். மதகுருமாருக்கு பயிற்சி அளிக்கும் போது, இந்த நாடகப் பயிற்சியும் வழங்கப்பட்டிருந்தது.

மதப் பயிற்சியும் அரங்கப் பயிற்சியும் பெற்ற மதகுருமார், நாட்டை ஆண்ட போர்த்துக்கேய அரசின் ஆதரவுடன், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு வந்தனர். கத்தோலிக்க மதம் முதலில் வேரூன்றிய இடம் கோவா ஆகும். கோவாவின் நாடக மரபுடன் இவர்கள் கொண்டு வந்த நாடக மரபும் இணைந்ததன் வெளிப்பாடாக, பொம்மைகள் நடிக்கும் பாஸ்கா நாடகம் உருவானது. பொம்மைகளுக்கு ‘உடக்கு’ என்பது பெயர். ‘உடக்குப் பாஸ்’ கத்தோலிக்க மரபு தமிழ் நாடக மரபுக்கு அளித்த ஒரு நாடக வடிவமாகும்.

கோவாவிலிருந்து தமிழ்நாட்டுக்கு கத்தோலிக்க மதம் பரவியபோது, இத்தகைய நாடகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மேடையேற்றப்பட்டன. இந்த நாடக மரபு தமிழ்நாட்டு நாடக மரபுடன் இணைந்து அங்கே வேரூன்றியது என்றும் அறிகிறோம். அந்த மரபே நேரடியாக மன்னாருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் கொண்டுவரப்பட்டது எனப் பிற்கால ஆய்வுகள் கூறுகின்றன.

இவ்வாறு கத்தோலிக்க மறை நாடகங்கள், போர்த்துக்கல்லிலிருந்து கோவாவுக்கும், கோவாவிலிருந்து தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாட்டிலிருந்து மன்னார், யாழ்ப்பாணத்திற்கும் பயணம் செய்து, யாழ்ப்பாணத் தென்மோடியுடன் கலந்தன. இது ஒரு பெரிய நாடக மரபுப் பயணமும் கலப்பும் ஆகும். இம்மரபு ‘நாடகம’ என்ற பெயரில் சிங்கள மக்களின் நாடக மரபுடன் இணைந்தமை இன்னொரு கதை.

இந்த நாடகங்கள் குருத்தோலைப் பெருநாளில் மேடையிடப்படுகின்றன; இதன் மூலம் அவை ஒரு கோவில் சடங்கு நிலையாகவும் கருதப்படுகின்றன. சமயச் சடங்கோடு நாடகம் இணைகையில், அது மேலும் மக்கள் மயமாகி வலுவும் பெறுகிறது.

## சமயப் பணி

*1602* இல் இருந்து இயேசு சபையினர் இலங்கையில் சமயப்பணி புரிய ஆரம்பித்தனர். கல்விக்கூடங்கள் உருவாகின. பாடசாலைகளில் கத்தோலிக்க மதம்

கட்டாயப் பாடமாக்கப்பட்டது; தமிழ் மொழியிலும் கற்பித்தனர். தமிழ் மொழியில் பேசினால் தான் மக்களுக்கு விளங்கும். தமிழ் மொழியில் அதிகப் பாண்டித்தியம் இல்லாத கத்தோலிக்க குருமார், இந்த நாடகங்களையே மதம் பரப்பும் ஊடகமாகக் கொண்டனர்.

*1513* ஆம் ஆண்டு போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட ஒரு சமய நூலின் பெயர் '*Flos Sanctorum*' (புளோஸ் சங்ரோறும்) என்பதாகும். இது இந்து மத இதிகாச-புராணங்களை ஒத்ததாகும். இந்நூல் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டு, இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இதனை கொங்கணி மொழியில் எழுதிய அந்தோனியோ கொன்சால்வ்ஸ் என்பவர், இந்திய மரபைப் பின்பற்றி, இதனை 'புளோஸ் சங்கோரம் புராணம்' எனவும் 'கத்தோலிக்கப் புராணம்' எனவும் அழைத்தார் என்று யாழ்ப்பாணப் பேராயர் சுவாம்பிள்ளை சொன்னதாக காரை சுந்தரம் பிள்ளை கூறுகிறார்.

இந்தப் புராணத்தை இலங்கைக்கு எடுத்து வந்தவர் ஜாக்கோம் கன்சால்வ்ஸ் அடிகளார் ஆவர். அவர் இதனைத் திருத்தி அமைத்து 'தேவ வேத புராணம்' எனப் பெயரிட்டார். பெரும்பாலான கத்தோலிக்க நாடகக் கதைகள் இதிலிருந்தே எடுக்கப்பட்டவை ஆகும் என்று பேராசிரியர் குணத்திலக கூறியிருக்கிறார்.

கத்தோலிக்கக் கூத்து மரபுக்கு பசளையிட்டு வளர்த்தவர் இந்த ஜாக்கோம் கன்சால்வ்ஸ் அடிகளார் ஆவார். இம்மரபு மன்னாரிலிருந்து தான் யாழ்ப்பாணத்திற்கும் புத்தளம், சிலாபம் ஆகிய பிரதேசங்களுக்கும் பரவியது என்றும், பேராயர் சுவாம்பிள்ளை தகவல் தந்ததாகக் காரை சுந்தரம் பிள்ளை கூறுகிறார்.

இப்போது எங்களுக்கு யாழ்ப்பாணக் கத்தோலிக்கக் கூத்து மரபின் மூலம் என்ன என்பது தெளிவாகிறது. இந்து மதப் புராண-இதிகாசக் கதைகள் மக்கள் மனதில் இந்து மதத்தை ஆழமாக வேரூன்ற வைத்தது போல, இந்தக் கதைகள் மக்கள் மனதில் கத்தோலிக்க மதத்தையும் ஆழமான நம்பிக்கையாக வேரூன்ற வைத்தன. பைபிள் மொழிபெயர்க்கப்படாத காலம் அது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே கூத்துகள் யாழ்ப்பாணத்தில் இந்து மத அறம், நீதி, சமயக் கருத்துகளை இலகுவாக மக்கள் மனதில் பதிக்கும் சமூகக் கலைவடிவங்களாக இருந்தன. அந்தக் கலைவடிவங்களையே இவர்களும் பின்னர் தேர்ந்தெடுத்து, உள்ளடக்கமாகப் புதிய கதைகளைப் புகுத்தினர். கருவும் மாறியது, உருவமும் மாறலாயிற்று. ஆரம்பத்தில் இருந்த தென்மோடிக் கூத்து மரபில், கத்தோலிக்க மதப் புராணமான 'புளோஸ் சங்ரோறும்' மற்றும் கிறித்தவப் புராணத்திலிருந்தே கூத்துப் புலவர்கள் கதைகளை எடுத்தனர். தென்மோடி இசையில் அவற்றைப் பாடி, தென்மோடிக் கூத்தில் ஆடினர். இவ்வண்ணம் யாழ்ப்பாணத்தில் ஆடப்பட்ட தென்மோடிக் கூத்து மரபும், கத்தோலிக்கர்கள் கொண்டு வந்த போர்த்துக்கேய நாடக மரபும் இணைந்ததாகவே கத்தோலிக்கத் தென்மோடிக் கூத்துகள் உருவாகியிருக்கின்றன என்று ஆராய்வுகள் கூறுகின்றன.

## யாழ்ப்பாணக் கிறிஸ்தவச் சமூகம்

யாழ்ப்பாணத்தில் மதம் மாறியவர்களுள் பல சமூகத்தினரும் இருந்தனர். உத்தியோகம் பெற மதம் மாறிய பலர்; விடுதலை பெற மதம் மாறிய பலர். யாழ்ப்பாணத்தின் மேட்டுக்குடியெனக் கருதப்பட்ட வெள்ளாளர்களிடமிருந்தும் பலர் மதம் மாறினர். சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களுள் ஒருவர். தமிழ் அறிவும் தமிழ் மரபில் ஆழ்ந்த புலமையும் கொண்ட அவர், அன்று ஒரு பலமான சக்தியாக விளங்கினார். மக்களிடையே கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்காக, மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த பல கலைவடிவங்களை அவர்கள் தம் கையில் எடுத்தனர். அம்மானை, நாட்டுப்பாடல் என்பவற்றுடன், விடிய விடிய இருந்து மக்கள் மூழ்கிப் போயிருந்த கூத்தும் அவர்களுக்கு உகந்ததாக இருந்தது.

கத்தோலிக்க மதம் மாறிய இந்து மக்கள் கிறித்தவக் கூத்துகளை எழுத ஆரம்பித்தனர். 'கிறித்தவக் கூத்து' என அழைப்பதும் ஒருவகையில் தவறானது போலத் தெரிகிறது. ஏனெனில், புரட்டஸ்தாந்து மதத்தினர் கூத்து ஆடியதாகச் செய்திகள் கிடைக்கவில்லை. மிகச் சாதாரண மக்கள், அதிலும் கரையோரப் பகுதியில் வாழ்ந்த மக்கள், அதிகமாகக் கத்தோலிக்க மதத்திலேயே சேர்ந்தனர்.

இயேசு கிறிஸ்து ஒரு சாதாரணக் குடும்பத்திலிருந்து வந்தவர் என்பதும், அவர் ஏழை மக்களை இரட்சிக்கவே வந்தார் என்ற செய்தியும், இந்த மக்களை வெகுவாகக் கவர்ந்தன. கிறிஸ்தவ மதம் தந்த 'விடுதலை' என்ற செய்தி பொதுமக்களை ஈர்த்தது. மேன்மக்கள் என்போர் உத்தியோகம் கருதி மதம் மாறினர் என்றும் கூறப்படுகிறது. மதம் மாறிய மக்களைச் சங்கிலிய மன்னன் ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தான் என்றொரு செய்தியும் உண்டு. இந்து மதச் சடங்கு முறைகளினால் தள்ளி வைக்கப்பட்டிருந்த கீழ்மட்ட மக்கள் கத்தோலிக்க மதத்தில் அதிகமாக இணைந்தனர். அத்தோடு, கடலில் சுயதொழில் செய்தவர்களும், வேளாளர்களின் வயல்களில் தங்கியிராத தனித்துவ சமூகமான கரையோர மக்களும் கத்தோலிக்க மதத்தை

அதிகமாக விரும்பினர். ஒருவகையில் அதிகாரப் போட்டியில் இவ்விரு சமூகத்தினரும் மோதிக்கொண்டனர் என்பதற்குப் ‘பூதத் தம்பி நாடகம்’ உதாரணமாகும்.

கத்தோலிக்க மதத்தில் இணைந்த பொதுமக்களை மேலும் அதனோடு இறுக்கமாக இணைத்து வைக்க, இந்தக் கூத்து முறையை அவர்கள் பயன்படுத்தினார்கள். உள்ளூர் கத்தோலிக்கப் புலவர்கள் பலர் கத்தோலிக்கக் கூத்துகளை எழுதத் தொடங்கினார்கள்.

ஆரம்பத்தில் இந்தக் கத்தோலிக்கக் கூத்துகளில், குறிப்பாக தென்மோடிக் கூத்துகளில், ஆடல்கள் அதிகமாக இருந்தன. ஆனால் கத்தோலிக்க மதகுருமார் தமது புனிதப் பாத்திரங்கள் மேடையில் ஆடுவதை விரும்பவில்லை. இதனால், பழைய முறையில் கூத்தை ஆடிய கத்தோலிக்க மக்களுக்கும், சபையைச் சேர்ந்த மதகுருமாருக்கும் இடையில் ஒரு முரண் உருவானது. கூத்தை ஆடுவதா, விடுவதா என்பதே அந்த முரண். இந்த முரணில் இருவரும் வெற்றி பெற்றனர் எனலாம்.

மக்கள் தாங்கள் விரும்புவது போல கூத்தாட அனுமதி பெற்றனர். ஆனால் ஆட்டத்தை விடுவதாக ஒப்புக்கொண்டனர். குருமார் தாங்கள் விரும்பியபடி கூத்தில் ஆட்டம் நீக்கப்பட்டதையும், தங்கள் ‘புனிதர்களின் பெயர்கள் கெட்டுப்போகாது’ என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டனர். அதாவது, இயேசு கிறிஸ்து நாதரும் புனிதர்களும் ஆடிக்கொண்டு வருவது அவர்களுக்கு உகந்ததாக இருக்கவில்லை. இறைவனைக் கூத்தாடியாகக் கண்டு அவனை வணங்கிய இந்து அல்லது சைவப் பாரம்பரியம் ஒன்று; கிறிஸ்தவப் பாரம்பரியம் வேறு. ஆட்டக் கூத்து மரபாக இருந்த தென்மோடிக் கூத்தில், ஆட்டம் விடப்பட்டு பாடப்படும் கூத்தாக அது மாறிய தன்மையை நாம் பின்னாளில் காண்கிறோம்.

ஆட்ட மரபைக் கூத்திலிருந்து அகற்றியதில் சுவாமி ஞானப்பிரகாசருக்கு முக்கிய இடம் உண்டு என்பர் காரை சுந்தரம் பிள்ளை. அக்கூற்றில் ஓரளவு உண்மை இருப்பினும், அது முழு உண்மை அல்ல என ஜோண்சன் ராஜ்குமார் கூறுகிறார். ஞானப்பிரகாசரே ‘எஸ்தாக்கியார்’ நாடகத்தில் எஸ்தாக்கியாரின் மகனாகத் தன் இளமைப் பருவத்தில் நடித்திருக்கிறார் என்ற செய்தியையும், அவர் புனிதர்கள் ஆடுவதை வரவேற்கவில்லையே ஒழிய, ஏனையோர் ஆடுவதைத் தடுக்கவில்லை எனவும் ஜோண்சன் ராஜ்குமார் கூறுகிறார். பூந்தான் ஜோசப் காலம் வரை ஆட்ட மரபு இருந்தது என்றும், ஆட்டம் பழகுவதில் சிரமம் இருந்ததனால் ஆட்டம் கைவிடப்பட்டது என்று பூந்தான் ஜோசப் கூறியதையும் ஜோண்சன் ராஜ்குமார் குறிப்பிடுகிறார்.

## மேலும் சில தகவல்கள்: தென்மோடிக் கூத்து

காரை சுந்தரம் பிள்ளை அவர்கள் தன்னுடைய நூலில், இந்து மதம் சார்ந்த 22 தென்மோடிக் கூத்துகளையும், கிறித்தவ மதம் சார்ந்த 47 தென்மோடிக் கூத்துகளையும் தந்திருக்கிறார். இதன் மூலம், வலுவான ஓர் இந்து மதம் சார்ந்த தென்மோடி மரபு, அதுவும் ஆட்ட மரபு கொண்ட தென்மோடி மரபு ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்தது என்பதை நாம் அறிகிறோம். அந்த இந்து மதம் சார்ந்த தென்மோடி ஆட்ட மரபினை இன்று வரை காத்து வருபவை முல்லைத்தீவும், முக்கியமாக மட்டக்களப்பும்தான். இந்து மதம் சார்ந்த தென்மோடி ஆடலும் பாடலும் உள்ளவையாக இருக்க, கத்தோலிக்க மதம் சார்ந்த தென்மோடி ஆடலைக் கைவிட்டவையாக உள்ளன.

## இசை நாடகத்தில் கர்நாடக இசையின் தாக்கம்

தென்மோடிக் கூத்துகளை கத்தோலிக்க இளைஞர்கள் ஆடத் தொடங்கிய போது, அவர்கள் அக்காலத்தில் அங்கு வந்து சேர்ந்த இசை நாடகத்தின் தாக்கத்தையும் பெற்றுக்கொண்டார்கள். ‘எஸ்தாக்கியார்’ நாடகத்தை எழுதும்போது, தான் சரவணை அண்ணாவியாரிடம் கர்நாடக இசையைக் கற்றுக்கொண்டு, அதன் பாங்கில் எழுதியதாக, அதன் ஆசிரியர் கூறியதான குறிப்பும் உள்ளது.

கூத்திசை வேறு, கர்நாடக இசை வேறு. ஆனால் சில கூத்துப் பாடல்களை இந்த இசைக்குள் உட்படுத்திப் பாடத் தொடங்கினார்கள் என்று பூந்தான் ஜோசேப்பும் கூறியுள்ளார். காரை சுந்தரம் பிள்ளை அவர்கள் தனது நூலில் கமாஸ் தொடக்கம் மோகனம் வரை கூத்துகளில் பாவிக்கப்பட்ட 50 கர்நாடக இசை இராகங்களைத் தந்திருக்கிறார். பழம் பஞ்சுரம் தொடக்கம் தனாசி வரை 17 பண் இசைகளையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புது வடிவம் பெற்ற கத்தோலிக்கத் தென்மோடி மரபு

அப்படியானால், ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் இருந்த ஆட்ட மரபுடன் கூடிய இந்து மதம் சார்ந்த தென்மோடிக் கூத்து,

1. வந்து சேர்ந்த போர்த்துக்கேய நாடக மரபின் தாக்கத்தையும்,
2. அக்காலத்தில் இந்தியாவிலிருந்து இங்கு வந்த இசை நாடகத் தாக்கத்தையும் பெற்று,
3. கிறிஸ்தவச் சபைக் குருமார்கள் கூறியபடி ஆட்டத்தைக் கைவிட்டு,
4. கிறிஸ்தவக் கதைகளை உள்ளடக்கமாகக் கொண்டு,

ஒரு புதிய தென்மோடி நாடகமாக உருவானது என்ற

முடிவுக்கு நாம் வரலாம். இவ்வாறு பார்க்கும்போது, யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய இந்து மதம் சார்ந்த தென்மோடிக் கூத்து ஒருபுறம் ஆடப்பட்ட இடங்களில் மெல்ல மெல்ல அருகிச் சென்று மறைய, மறுபுறம் அது இன்னொரு விதமாக மாறலாயிற்று அல்லது வளரலாயிற்று என நாம் கூறலாம்.

கத்தோலிக்கக் கதைகளை உள்வாங்கி, வழமையான பழைய வடமோடி-தென்மோடிக் கூத்துகளிலிருந்து பாடல் மரபுகளைப் பெற்று, மரபு வழி ஆடல் மரபுகளைக் கைவிட்டு, போர்த்துக்கேய கிறிஸ்தவ இசை மரபுகளையும், சமகாலத்தில் வந்து சேர்ந்த பார்சி வழி வந்த இசை நாடக மரபின் கர்நாடக இசையையும் உட்கொண்டு, இன்னுமொரு தென்மோடிக் கூத்தாக அது வளர்ச்சி பெற்றது.

தென்மோடியில் சில நாடகங்கள் மிகக் குறிப்பிடத்தக்க நாடகங்களாகும். தென்மோடிக்கு உரிய சகல இசை வடிவங்களையும், புதிய இசை வடிவங்களையும் கொண்டதாக அந்த நாடகங்கள் அமைந்திருந்தன. தேவசகாயம் பிள்ளை நாடகம், எஸ்தாக்கியர் நாடகம் என்பன அவ்வண்ணம் முழு இசை வடிவத்தையும் கொண்ட நாடகங்களாக ஆராய்வாளர்களால் இனங் காணப்பட்டுள்ளன.

இந்த நாடகங்களின் பாடல்களை கர்நாடக இசை அளவுகோலைக் கொண்டு அளந்தவர் தவமைந்தன் றொபேர்ட் அவர்கள். இந்த நாடகங்களின் மெட்டுகளை இராக-தாளத்துடன் அவர் வெளியிட்டுள்ளார். திருமறைக்கலா மன்றத்தினர் அவர்களுக்கு உதவி புரிந்திருக்கின்றனர். றொபேர்ட், ஜோண்சன் ராஜ்குமார் ஆகியோர் பெரும்பாலும் அவற்றின் பாணியிலேயே ஏனைய நாடகங்கள் அமைந்துள்ளன என்பர். கத்தோலிக்கத் தென்மோடியின் மூல மாதிரி (Modal) நாடகங்கள் எஸ்தாக்கியார், தேவசகாயம் பிள்ளை ஆகிய நாடகங்களே என்ற செய்தியைப் பல காலங்களுக்கு முன்னர் எனக்குச் சொன்னவர் மரிய சேவியர் அடிகளார்.

### ஆற்றுகை முறையில் மாற்றங்கள்

உள்ளடக்கத்தில் மாற்றம் பெற்று, ஆட்டத்தைக் கைவிட்ட கத்தோலிக்கத் தென்மோடி மரபு நாடகம், ஆற்றுகை முறையிலும் பாரிய மாற்றங்களைப் பெற்றது. அவ்வாறு ஏற்பட்ட மாற்றங்களுள் ஒன்றாக, வட்டக் களரியில் ஆடப்பட்ட கூத்துகள் ஆரம்பத்தில் ஒரு பக்கம் அடைக்கப்பட்ட மேடையில் ஆடப்பட்டு, பின்னர் முப்பக்கமடைக்கப்பட்ட படச்சட்ட மேடைக்குக் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தக் காலகட்டத்திலேயே இந்தியாவில் இருந்து வந்த பார்சி நாடக மரபின் தாக்கத்தினால், மேடையில் காட்சிகளை விளக்கும் திரைகள் தொங்கவிடப்படும் வழக்கம் உருவானது. முன்திரை திறந்து-மூடும் மரபும் இக்காலத்தில்தான் அறிமுகமானது.

மேடையில் அரசன் அமர்ந்திருக்கச் சிம்மாசனமும் அதற்குப் படிக்கட்டுகளும் வைக்கும் வழக்கமும் தோன்றியது. மேடைப் பொருட்களும் மெல்ல மெல்ல இடம்பெறத் தொடங்கின. நடிப்பு முறையிலும் மாற்றம் ஏற்பட்டது. உடை அமைப்பில் பாரிய மாறுதல் நிகழ்ந்தது. மரபு வழியிலான தென்மோடியில் அணியப்படும் கிரீடங்கள், புஜகீர்த்திகள் போன்றவை விலக்கப்பட்டு, பார்சி முறையில் அமைந்த முடிகளும் உடைகளும் பாவிக்கப்பட்டன. முக்கியமாக அரசனுக்கு பின்பக்கத்தில் ஒரு நீண்ட அங்கி அணியப்பட்டது. ரோமர்களைப் போல முடிகளைத் தாங்கிய புதிய பாத்திரங்கள் மேடையில் தோன்றின. புனித தூதர்கள் வேறு உடைகளில் தோன்றினர். இவை யாவும் கூத்து மரபுக்குப் புதிய அம்சங்களாகும்.

இன்னொரு வகையில் சொல்லப்போனால்,

காட்சி அமைப்பில்,

உடை ஒப்பனையில்,

மேடைப் பொருட்களில்,

நடிப்பில்

என அது ஒரு பெரும் மாறுதலையே பெற்றுவிட்டது.

அதனையே இன்றும் அசலான தென்மோடி என்று வாதிடுபவர்களும் உள்ளனர். எங்களுக்கு அது பிரச்சினையல்ல. அவரவர் தமக்கேற்றபடி விமர்சிக்கவும் புரிந்து கொள்ளவும் உரிமை உண்டு. ஆனால் இதற்குள் நாம் காணும் ஒரு பெரிய உண்மை என்னவென்றால், யாழ்ப்பாணத்தின் தென்மோடிக் கூத்து என்பது மாறி மாறி வந்த ஒரு வடிவம் என்பதே.

இந்தத் தென்மோடியின் தோற்றத்தை நாம் சோழர் காலத்தில் காண்கிறோம். அதன் வளர்ச்சியை நாயக்கர் காலத்தில் கண்டோம். அதன் தொடர்ச்சியை ஈழத்தில் கண்டோம். அதன் மாற்றத்தையும் நாங்கள் ஈழத்தில்தான் காண்கிறோம். மாற்றம் என்கின்ற மாறாத விதிக்குச் சரியான உதாரணமாக யாழ்ப்பாணக் கத்தோலிக்கத் தென்மோடி மரபுவழிக் கூத்துகள் அமைந்துள்ளன. அவை மேலும் மாறிச் சென்றது இன்னொரு கதை; அது பின்னர் கூறப்படும். மன்னாருக்கும் இந்த மரபு சென்றது என்றும், மன்னாரிலிருந்து இந்த மரபு யாழ்ப்பாணம் வந்தது என்றும் இருவேறு கருத்துகள் கூறப்படுகின்றன.

அடுத்து நாம் மன்னார் கூத்து மரபைப் பார்ப்போம்.

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில்
# தென்மராட்சி – சாவகச்சேரி

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.


## இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்



இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

லெயுசிக்காமின் வடமராட்சிப் பிரிவைக் காட்டும் நிலப்படத்தில் உள்ள கோவிற்பற்றுகள் தொடர்பாகக் காணப்படும் தகவல்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுக் குறிப்புகளையும் முன்னைய சில கட்டுரைகளில் பார்த்தோம். இனி தென்மராட்சிப் பிரிவில் உள்ள கோவிற்பற்றுகள் தொடர்பாக மேற்படி நிலப்படம் தரும் தகவல்களைப் பார்க்கலாம். இந்தக் கட்டுரை தென்மராட்சிப் பிரிவின் சாவகச்சேரிக் கோவிற்பற்றைப் பற்றி ஆராய்கிறது.

சாவகச்சேரிக் கோவிற்பற்றில் சாவகச்சேரி, சரசாலை, மட்டுவில், மீசாலை, தனங்கிளப்பு ஆகிய ஐந்து துணைப் பிரிவுகளை நிலப்படம் காட்டுகிறது (படம்1).




லெயுசிக்காமின் தென்மராட்சியைக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சாவகச்சேரிக் கோவிற்பற்றுப் பகுதி

## எல்லைகள்

சாவகச்சேரிக் கோவிற்பற்றின் வடக்கு எல்லையில் உப்பாறு கடல் நீரேரி உள்ளது. மேற்கில் உப்பாறும், நாவற்குழிக் கோவிற்பற்றும் காணப்படுகின்றன. கிழக்கு எல்லையில் கச்சாய், வரணி ஆகிய கோவிற்பற்றுகளும், தெற்கு எல்லையில் யாழ்ப்பாணக் கடல்நீரேரியும் உள்ளன. சாவகச்சேரிக் கோவிற்பற்றுக்குள் வடக்கு எல்லையை அண்டி, மேற்குப் பக்கத்தில் மட்டுவில் துணைப் பிரிவும் கிழக்குப் பக்கத்தில் சரசாலைத் துணைப் பிரிவும் அமைந்துள்ளன. இவற்றுக்குத் தெற்கே முறையே மீசாலைத் துணைப்பிரிவும், சாவகச்சேரித் துணைப் பிரிவும் உள்ளன. தெற்கு முனையில் தனங்கிளப்புத் துணைப் பிரிவு காணப்படுகின்றது (படம்2).




லெயுசிக்காமின் தென்மராட்சியைக் காட்டும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட சாவகச்சேரிக் கோவிற்பற்றின் படம்

தனங்கிளப்புக்குத் தென்கிழக்கே கடல்நீரேரிக்குள் பல சிறிய தீவுகள் அல்லது புட்டிகள் காணப்படுகின்றன. ஒடியம் தீவு, ஒடியம் புட்டி, காரைதீவு, கேரதீவு, தாழையடித் தீவு, கண்ணாத்தீவு, உயிலந்தீவு, கேரை தீவு ஆகியவற்றை நிலப்படம் பெயர் குறித்துக் காட்டுகிறது.

நிலப்படத்திலுள்ள மீசாலைத் துணைப் பிரிவைத் தவிர ஏனைய துணைப் பிரிவுகள் அவற்றின் பெயர் குறிக்கும் தற்காலப் பகுதிகளுடன் ஏறத்தாழப் பொருந்தி வருகின்றன. ஆனால், தற்காலத்து மீசாலைப் பகுதி சாவகச்சேரியின் வடக்கு எல்லையை அண்டிக் காணப்பட, நிலப்படத்தில் மீசாலைத் துணைப் பிரிவைச் சாவகச்சேரியின் மேற்கு எல்லையில் காட்டியுள்ளனர். தற்காலத்தில் இப்பகுதியில் கல்வயல், நுணாவில் ஆகிய பகுதிகளே உள்ளன. லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி, நுணாவில் நிலத் தொடர்பற்ற இரண்டு துண்டுகளாக நாவற்குழிக் கோவிற்பற்றுக்குள் அடங்கிக் காணப்படுகின்றது. அதன் அமைவிடமும் உண்மை நிலையுடன் பொருந்தவில்லை.

ஒல்லாந்தர் காலச் சாவகச்சேரிக் கோவிற்பற்று இன்றைய சாவகச்சேரி பிரதேசச் செயலர் பிரிவுக்குள் அடங்குகிறது. உள்ளூராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரை, இக்கோவிற்பற்றின் ஒரு பகுதி சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள்ளும், எஞ்சிய பகுதிகள் சாவகச்சேரிப் பிரதேச சபை எல்லைக்குள்ளும் அடங்குகின்றன.

## வீதிகள்

லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழியூடாக வரும் வீதி மேற்கு எல்லையூடாகச் சாவகச்சேரிக் கோவிற்பற்றுக்குள் நுழைகிறது. இது

சாவகச்சேரியில் இரண்டாகப் பிரிகிறது. ஒன்று தெற்கு எல்லையை அண்டியுள்ள யாழ்ப்பாண நீரேரிக்குச் சமாந்தரமாகச் சென்று கிழக்கு எல்லையைக் கடந்து கச்சாய்க் கோவிற்பற்றுக்குள் நுழைகிறது. இது இன்றைய சாவகச்சேரி - கச்சாய் வீதியின் ஒரு பகுதியாக அமைகிறது. மற்ற வீதி வடகிழக்குத் திசையில் இன்றைய கண்டி வீதித் தடத்திற் சென்று கோவிற்பற்றின் கிழக்கு எல்லையைக் கடந்து கொடிகாமம் நோக்கிச் செல்கிறது. சாவகச்சேரிக் கோவிற்பற்றுக்குள் லெயுசிக்காமின் நிலப்படம் காட்டுவது மேற்குறிப்பிட்ட வீதிகளை மட்டுமே. சாவகச்சேரியைச் சூழவுள்ள நாவற்குழி, வரணி, கச்சாய், கொடிகாமம், எழுதுமட்டுவாள் ஆகிய இடங்களிலுள்ள தேவாலயங்களைச் சாவகச்சேரித் தேவாலயத்துடன் இணைக்கும் வீதிகளாக இவை இருப்பதால் இவ்வீதிகள் நிலப்படத்தில் குறிக்க வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் பெற்றவையாகக் கொள்ளப்பட்டிருக்கலாம்.

தற்காலத்தில் இந்தக் கோவிற்பற்றுப் பகுதியூடாகச் செல்கின்ற புத்தூர் - மீசாலை வீதி, சாவகச்சேரி - புலோலி வீதி முதலிய முக்கிய வீதிகளை நிலப்படம் காட்டவில்லை. இவை பிற்காலத்திலேயே, பெரும்பாலும் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே முறையான வீதிகளாக ஆகியிருக்கக்கூடும்.

## கட்டடங்கள்

வழமை போல, சாவகச்சேரிக் கோவிற்பற்றிலும் கிறித்தவ தேவாலயத்தையும் தேவாலய இல்லத்தையும் நிலப்படத்தில் முக்கியத்துவம் கொடுத்துக் குறித்துள்ளனர். இவற்றைத் தவிர ஒரு யானைப் பந்தியையும் இக்கோவிற் பற்றுக்குள் நிலப்படம் குறித்துக் காட்டுகிறது.

## தேவாலயமும் தேவாலய இல்லமும்

தென்மராட்சிப் பிரிவில் உள்ள தேவாலயங்களுள் சாவகச்சேரித் தேவாலயமே முதன்மையானதும் மிகவும் பெரியதும் என போல்டேயஸ் பாதிரியார் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[1] தேவாலய இல்லம் பல பிரிவுகளைக் கொண்டதாக உறுதியாகவும் சிறப்பாகவும் கட்டப்பட்டிருந்ததாகவும் அவர் தகவல் தருகிறார். அங்கிருந்து அழகிய கடற் காட்சியைப் பார்க்கமுடியும் என்றும் அவர் கூறுகிறார். இல்லத்துக்குப் பின்புறம் சிறந்த முற்றம் இருந்ததாகவும் அங்கே இந்தியப் பழ மரங்கள் இருந்ததாகவும் தெரிகிறது.[2]

நூலில் உள்ள, சாவகச்சேரித் தேவாலயத்தையும் தேவாலய இல்லத்தையும் காட்டும் படத்தில் தேவாலயம் ஓலைக்கூரையுடன் கூடிய ஒரு கட்டடமாகவே காணப்படுகிறது[3] (படம்3). இது, தேவாலயக் கட்டடம் உறுதியானதும் சிறப்பானதும் என்ற பாதிரியாரின் விவரிப்புடன் பொருந்தவில்லை. ஆனால், தேவாலய இல்லம் விவரிப்பில் உள்ளது போலவே நிரந்தரமான கட்டடப் பொருட்களால் ஆனதாகவும், பல பிரிவுகளாக அமைந்ததாகவும் காணப்படுகிறது. இல்லத்தின் சில பகுதிகள் இரண்டு தளங்களைக் கொண்டனவாக இருப்பதையும் படத்திற் காண முடிகிறது.

சாவகச்சேரித் தேவாலயம் போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் கத்தோலிக்கத் தேவாலயமாக அமைக்கப்பட்டது. ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை நோக்கிப் படையெடுத்து வந்தபோது வழியில் சாவகச்சேரித் தேவாலயத்திலேயே உணவு உட்கொண்டதாக போல்டேயஸ் பாதிரியார் கூறுகிறார்.[4] பின்னாளில் அத்தேவாலயத்தைக் கையகப்படுத்திய ஒல்லாந்தர் அதைப் புரட்டஸ்தாந்த கிறித்தவ தேவாலயமாகப் பயன்படுத்தினர்.

நிலப்படம் தேவாலயமும் தேவாலய இல்லமும் கண்டிவீதி, கச்சாய் வீதிச் சந்திக்குக் கிழக்குப் பக்கத்தில் இருப்பதாகக் காட்டுகிறது. தேவாலயம் கண்டி வீதிக்குத் தெற்குப் பக்கத்திலும் தேவாலய இல்லம் கண்டி வீதிக்கு வடக்குப் பக்கத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியர் காலத்தில் இப்பகுதியில் மதப்பணி புரிந்த அமெரிக்க மிசன் நிறுவிய தேவாலயமும் பாடசாலையும் இப்பகுதியிலேயே அமைந்திருந்தாலும், அவை மேலே குறிப்பிட்ட சந்திக்கு மேற்குப் பக்கத்தில் உள்ளன.

பழைய ஒல்லாந்தத் தேவாலயம் பிரித்தானியர் காலத்தில் அமெரிக்க மிசனின் பயன்பாட்டுக்காகக் கையளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது தற்போது டிறிபேர்க் கல்லூரி இருக்கும் வளவுக்குள்ளேயே இருந்துள்ளது. 1834 ஆம் ஆண்டில் அமெரிக்க மிசன் மதப் பணியாளர்கள் இந்தத் தேவாலயத்தைத் திருத்திப் பயன்படுத்தினர். காலப்போக்கில் தற்போதைய இடத்தில் புதிய தேவாலயம் அமைக்கப்பட்ட பின்னர், பழைய ஒல்லாந்தர்காலத் தேவாலயக் கட்டடத்தை ஆசிரியர் பயிற்சிக்காக ஒதுக்கினர். 1950 ஆம் ஆண்டில் பழைய தேவாலயக் கட்டடத்தை இடித்துவிட்டனர். அதன் கட்டடப் பொருட்களைப் பயன்படுத்தியே முன்னர் சாவகச்சேரியிலிருந்த படமாளிகை ஒன்றைக் கட்டியதாகத் தெரிகிறது.[5]

பழைய ஒல்லாந்தத் தேவாலயம் அமைந்திருந்த டிறிபேர்க் கல்லூரி வளவு சந்திக்கு மேற்குப் பக்கத்தில் இருப்பதால், பழைய ஒல்லாந்தர் தேவாலயமும் சந்திக்கு மேற்குப் பக்கத்திலேயே இருந்தது தெளிவாகிறது. இது நிலப்படம் காட்டும் அமைவிடத்துடன் முரண்படுகிறது. நிலப்படத்தில் தேவாலயத்தின் அமைவிடத்தைப் பிழையாகக் குறித்திருப்பதே இம்முரண்பாட்டுக்குக் காரணம் எனக் கொள்ளவேண்டும்.

## யானைப்பந்தி

நிலப்படம் சாவகச்சேரிக் கோவிற்பற்றில் யானைப்பந்தி ஒன்றையும் காட்டுகிறது. இதை, மட்டுவில் துணைப்பிரிவுக்குள் அதன் தெற்கு மூலையை அண்டிக் குறித்துள்ளனர். இதன் அமைவிடத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடிய வகையில், தற்கால அம்சங்களுடன் அடையாளம் காணத்தக்க எதுவும் நிலப்படத்தில் இல்லாததால், யானைப்பந்தியின் துல்லியமான அமைவிடத்தைக் கண்டறிதல் கடினம். யானைப்பந்திக்கு அருகில் சில குளங்களை நிலப்படம் காட்டுகிறது. ஆனால், அவற்றின் பெயர்கள் தற்காலக் குளப் பெயர்களுடன் பொருந்தாததால் அமைவிடத்தை அறிவதற்கு அவையும் பயன்படா. அப்பகுதியின் குறிச்சிப் பெயர்கள், காணிப் பெயர்கள் முதலியவற்றை ஆராய்ந்தால் யானைப்பந்தி இருந்த இடம் தொடர்பான தகவல்கள் கிடைக்கக்கூடும்.

## குளங்கள்

சாவகச்சேரிக் கோவிற்பற்றுக்குள் மொத்தம் 49 குளங்களை நிலப்படம் குறித்துக் காட்டுகிறது. இவற்றுள் சாவகச்சேரித் துணைப் பிரிவுக்குள் மந்துவில் குளம், கரம்பவில் குளம், கரம்பவில் துரவு, கண்டுவில், சில்லிக் குளம் எனச் சிறப்புப் பெயர்களால் குறிக்கப்பட்ட ஐந்து குளங்களும்; கேணி அல்லது குளம் எனப் பொதுப் பெயர்களால் குறிக்கப்பட்டுள்ள மூன்று குளங்களுமாக எட்டுக் குளங்கள் உள்ளன. மீசாலைத் துணைப் பிரிவுக்குள் சின்ன ரமால் குளம், ரமால் குளம், பட்டவல்லைக் குளம், நுணுவில் குளம், கல் குழிக் குளம், பெருங் குளம், ஆனைக்கோட்டைக் குளம், விலாவெளிக் குளம் ஆகிய எட்டுக் குளங்கள் இருக்கின்றன. மட்டுவில் துணைப் பிரிவுக்குள் மானவல்லைக் குளம், கரந்தன் கழி, செரிக் கழி, ஆவாரன் புட்டி, உறிகட்டி, முதலைக் கிராய், சின்ன முதலைக் கிராய், பள்ளன் கேணி, அட்டைக் குளம், பெரிய குளம், சத்திரன் கிராய், புதரன் கேணி, களுவன் குளம், உபிரிவில் குளம், நெருஞ்சிக் குளம், வேவில் குளம், நுணுவில் குளம், மருதங் குளம், சிலுவில் குளம், அம்பலவன் துரவு, வீரகேணிக் குளம் ஆகிய சிறப்புப் பெயர்களுடன் கூடிய 21 குளங்களைக் குறித்துள்ளனர். ஒரு குளம் மட்டும் பொதுப் பெயரால் குளம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. சரசாலைத் துணைப்பிரிவுக்குள் நிலப்படம் காட்டும் ஏழு குளங்களுள் ராமவில் குளம், வில்லுக் குளம் ஆகிய இரண்டு மட்டுமே சிறப்புப் பெயர்களைக் கொண்டவை. ஏனைய ஐந்தையும் குளம், துரவு, கேணி ஆகிய பொதுப் பெயர்களால் குறித்துக் காட்டியுள்ளனர். தனங்கிளப்புத் துணைப்பிரிவில் வண்ணான் குளம், ஆலங்குளம், சுண்டிக் குளம், மடவின் குளம் ஆகிய நான்கு குளங்களைக் காணமுடிகிறது.

லெயுசிக்காமின் நிலப்படம் காட்டும் சாவகச்சேரிக் கோவிற்பற்றுப் பகுதிக்குள் தற்காலப் பதிவுகளின்படி 70க்கும் மேற்பட்ட குளங்கள் உள்ளன.[6] நிலப்படத்தில் காட்டியுள்ள 49 குளப் பெயர்களுள் ஒன்பது குளங்களின் பெயர்கள் மட்டுமே தற்காலக் குளப் பெயர்களுடன் ஒத்துவருகின்றன. இவற்றுள் மந்துவில் குளம், கண்டுவில் குளம், ஆவாரம்பிட்டிக் குளம், புதரன் கேணிக் குளம், வண்ணான் குளம் சுண்டிக் குளம் ஆகிய பெயர்கள் மாற்றமின்றி இன்றும் பயன்பாட்டில் உள்ளன. நிலப்படத்தில் ராமாவில் குளம் என ஒரு குளத்தைக் காட்டியிருக்க, தற்காலப் பதிவுகளில் பெரிய ராமாவில் குளம், சின்ன ராமாவில் குளம் என இரண்டு குளங்கள் காணப்படுகின்றன. நிலப்படம் இவற்றில் ஒன்றை மட்டும் குறித்திருக்கலாம். நிலப்படத்தில் தனங்கிளப்புத் துணைப் பிரிவில் ஆலங்குளம், மடவின் குளம் என இரண்டு குளப் பெயர்களுக்கு நெருக்கமாக முறையே ஆலங்கட்டையடிக் குளம், மதவில் குளம் ஆகிய இரண்டு பெயர்கள் தற்காலக் குளப் பட்டியலில் உள்ளன. முதலிரண்டு பெயர்களே பிற்காலத்தில் கடைசி இரண்டு பெயர்களாக மருவியிருக்கக்கூடும்.

மீசாலைத் துணைப் பிரிவுக்குள் நிலப்படம் காட்டும் ஆனைக்கோட்டைக் குளத்தின் பெயர்க் காரணம் ஆய்வுக்குரியது. வேறொரு துணைப் பிரிவுக்குள் இருந்தாலும், இக்குளத்திலிருந்து சற்றுத் தொலைவிலேயே மேலே குறிப்பிட்ட யானைப்பந்தி உள்ளது. இதற்கும் ஆனைக்கோட்டைக் குளம் என்னும் பெயருக்கும் இடையே ஏதாவது தொடர்பு உண்டா என்பது ஆய்வுக்குரியது. யானைப் பந்தியைப் பொது வழக்கில் ஆனைக்கோட்டை என அழைத்திருக்கக்கூடிய வாய்ப்புக் குறித்து முன்னைய கட்டுரையொன்றில் குறிப்பிட்டோம். அதற்கமைவாக, யானைப் பந்தியைச் சுற்றியுள்ள பகுதி ஒரு காலத்தில் ஆனைக்கோட்டை என அழைக்கப்பட்டு, அப்பகுதியிலுள்ள ஒரு குளத்துக்கு ஆனைக்கோட்டைக் குளம் எனப் பெயர் வழங்கியிருக்க வாய்ப்புண்டு.

## குறிப்புகள்

1. Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos. 14 (July 1958April 1959), 299 and 330.
2. Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 330.
3. Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 337.
4. Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 299.
5. "டிறிபேர்க் கல்லூரியின் வரலாறு," சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, பெப்ரவரி 7, 2026 அன்று பார்க்கப்பட்டது, https://driebergcollege.lk/collegehistory/
6. தகவல்: விவசாய அபிவிருத்தித் திணைக்களம்.

# இலங்கையின் அரசியலில் சமயமும் வன்முறையும்: 1860 – 1948

'இலங்கையின் அரசியல் 1900 – 1981: பன்முகநோக்கு' என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்றுக் கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

*ஆங்கில மூலம்: ஸ்டான்லி ஜெயராஜ் தம்பையா*




## கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. 'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

இலங்கையின் அரசியலில் சமயமும் வன்முறையும் (Religion, Politics and Violence in Sri Lanka) என்னும் பொருள் குறித்த சமூகவியல், வரலாற்று ஆய்வாக (Sociological and Historical Study) அமையும் 'பௌத்தத்திற்குத் துரோகம்?' (Buddhism Betrayed?) என்ற நூலை மானிடவியலாளர் ஸ்டான்லி ஜெயராஜ் தம்பையா அவர்கள் 1992 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டார். அந்நூலின் 2 ஆம், 3 ஆம் அத்தியாயங்களில் கூறப்பட்ட கருத்துகளை எடுத்துரைப்பதாக இத்தமிழ்க் கட்டுரை அமைந்துள்ளது.

'பௌத்தத்திற்குத் துரோகம்?' நூலின் இரண்டாவது அத்தியாயம் 'The Period of Buddhist Revivalism: 1860-1915' (பௌத்த மறுமலர்ச்சிக் காலம்: 1860-1915) என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் தம்பையா அவர்கள் கூறும் கூற்று உற்று நோக்கத்தக்கது.

'பௌத்த மறுமலர்ச்சியும் தேசியவாதமும் என்பதை இன்று நாம் எந்த வடிவத்தில் காண்கிறோமோ, அதன் வளர்ச்சிக்கான வித்துகள் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இடப்பட்டிருந்தன. இக்காலத்தில்தான் பௌத்த மறுமலர்ச்சியின் தேசியவாத உள்ளடக்கம் வெளிப்பட்டுத் தெரியத் தொடங்கியது. சிங்கள உணர்வும் (Sinhala Consciousness), தேசிய அடையாளமும், தேசிய இலக்குகளும் இக்காலத்திலேயே வடிவம் பெற்றன' (பக். 5).

1860 இல் 'பத்தேகம விவாதம்', 1873 இல் 'பாணந்துறை விவாதம்' என்பன பௌத்தர்களிடையே புத்துணர்ச்சியை ஏற்படுத்தின. மிகெட்டுவத்தே குணானந்த தேரரும், ஹிக்கடுவே சுமங்கல தேரரும் கிறிஸ்தவ எதிர்ப்பு உணர்வைத் தமது நடவடிக்கைகள் மூலம் கிளரச் செய்தனர். 1880களில் கேர்ணல் ஒல்கொட் இலங்கையில் தியோசொபிக்கல் சபையை நிறுவி, அதன் நடவடிக்கைகள் மூலம் கிறிஸ்தவ எதிர்ப்பு இயக்கத்திற்கு நிறுவனக் கட்டமைப்பையும், பிரசார ஒழுங்கமைப்பையும் வழங்கினார். தியோசொபிக்கல் இயக்கத்தால் கவரப்பட்டு அதில் இணைந்து கொண்ட தர்மபால (1864-1933) என்னும் ஆளுமைக் கவர்ச்சி மிக்க தலைவர் அவ்வியக்கத்தின் கருத்தியலை (Ideology) வடிவமைத்தார்.

1880களில் உருவாக்கம் பெற்ற சமய மறுமலர்ச்சி இயக்கத்தில் முக்கியமான அரசியல், பொருளாதாரப் பரிமாணங்கள் (Political and Economic Dimensions) வெளிப்பட்டன என்ற கருத்தை குமாரி ஜயவர்த்தன அவர்கள் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் எழுச்சி பெற்றுக்கொண்டிருந்த பூர்ஷுவா வர்க்கத்தினரின் பௌத்தப் பிரிவினரின் தேசிய உணர்வுகளுடன் பௌத்த மறுமலர்ச்சி பிணைப்புடையதாய் இருந்தது. பிரித்தானியாவில் அக்காலத்தில் கிறிஸ்தவ எதிர்ப்புப் பகுத்தறிவுவாதமும் (Anti-Christian Rationalism) சிலரால் முன்னெடுக்கப்பட்டது. அப்பகுத்தறிவுவாதமும் இலங்கையின் பௌத்த தேசியவாதிகளுக்குத் தூண்டுதலை வழங்கியது.' (லங்கா கார்டியன், 1979 ஆம் ஆண்டில், Bikkus in Revolt Part 2: 'Revival, Revolt and Race', June 15, 1979, பக். 13)

கேர்ணல் ஒல்கொட் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே சில பௌத்த பிக்குகள் மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்து, அதற்குள் தீவிரவாதத்தைப் புகுத்தியிருந்தனர் என்பதையும் குமாரி ஜயவர்த்தன அவர்கள் மேற்குறித்த கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். மிகெட்டுவத்தே குணானந்த தேரரை 'An Aggressive and Dynamic Bikku' எனக் குறிப்பிடும் அவர், கல்வி அறிவில் சிறந்து விளங்கிய பிற பிக்குகளை விட வித்தியாசமானவராக விளங்கிய குணானந்த தேரர் 'கனல் கக்கும் பேச்சாளராகவும், கண்டனப் பிரசுரங்களை எழுதி வெளியிடுபவராகவும், போராளியாகவும்' விளங்கினார் எனக் குறிப்பிடுகிறார். அவர் கிறிஸ்தவர்களுக்குச் சவால் விடுத்தார். கிறிஸ்தவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் 1873 இல் நடைபெற்ற விவாதத்தில் குணானந்தரின் வாதத்திறமை வெளிப்பட்டது. அவரது புகழ் பரவியது.

குணானந்த தேரர் பணம் படைத்த சிங்கள வர்த்தகர்களையும், சாராயக் குத்தகை வியாபாரிகளையும், தென்னந்தோட்ட உடைமையாளர்களையும் அணிதிரட்டி தியோசொபிக்கல் சபையில் உறுப்பினர்களாக்கியதோடு தானும் சேர்ந்துகொண்டார். இவர்கள் யாவரும் அக்காலத்தின் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் மிக முக்கியமான பிரமுகர்களாக இருந்தனர். தர்மபாலவும் அக்காலத்தில் இவ்வியக்கத்தில் இணைந்து கொண்டார். பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தில் இக்காலப்பகுதியில் பங்கேற்றவர்களான பௌத்த பிக்குகளாகப் பின்வருவோரைக் குறிப்பிடலாம்.

- ஹிக்கடுவே சிறிசுமங்கல தேரர்
- வலனே சித்தார்த்த தேரர்
- வெலிகம சிறி சுமங்கலதேரர்
- இரத்மலான சிறி தர்மாலோக தேரர்

இக்காலத்தின் மறுமலர்ச்சி இயக்கம் பௌத்த பாடசாலைகளை நிறுவுதல், மதுவிலக்குப் பிரசாரச்

சங்கங்களை அமைத்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தியது. 1904-1912 காலத்தில் மதுவிலக்கு இயக்கம் செயல்துடிப்போடு இயங்கியது.

கேர்ணல் ஒல்கொட் அவர்களால் தொடக்கப்பட்ட தியோசொபிக்கல் இயக்கத்தின் சாதனைகளில் முக்கியமானது, 1880களில் பௌத்த பாடசாலைகளை நிறுவிக் கல்வியில் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த தனியுரிமை ஆதிக்கத்தைத் தகர்த்ததாகும். கிறிஸ்தவர்களும், கத்தோலிக்கத் திருச்சபையும் பாடசாலை முறைமை மீது (School System) கொண்டிருந்த ஆதிக்கம் என்ற பிரச்சினை 1940களிலும் 1950களிலும் மீண்டும் தலைதூக்கியது என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

தர்மபால தியோசொபிக்கல் சபையினருடன் சேர்ந்து தனது பிரசாரத் திறன்களை கூர்மைப்படுத்தி வளர்த்துக் கொண்டார். பின்னர் அவர் தியோசொபிஸ்டுகளுடன் தமக்கிருந்த உறவுகளை முறித்துக்கொண்டு தனிப்பாதையில் பயணிக்க ஆரம்பித்தார். அவர் போதித்த பௌத்தம் 'புரட்டஸ்தாந்திய பௌத்தம்' என அழைக்கப்பட்டது. இத்தொடர் அவரது கொள்கைகளைப் புரிந்து கொள்வதற்கான பொருத்தமான 'லேபல்' (Label) எனலாம்.

## தர்மபால

'வீடற்றவன்' (அநகாரிக) என்ற பெயரைச் சூடிக்கொண்ட தர்மபால கிறிஸ்தவ மிசனரிகளுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தார். அவர் பௌத்தத்தில் புகுந்த சீர்கேடுகளைக் களைந்து, அதனைத் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டார். தர்மபால பௌத்த மறுமலர்ச்சிக்குச் செய்த பங்களிப்பை தம்பையா அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'பௌத்த தத்துவக் கோட்பாடுகளுக்கு முரணான சடங்குகளையும் (Non-Buddhist Ritual Practices), மந்திர-தந்திர முறைகளையும், மூடநம்பிக்கைகளையும் பௌத்தத்திற்கு அந்நியமானவை எனத் தர்மபால கண்டித்தார். அவர் பௌத்தர்களான இல்வாழ்வோருக்கு உரிய ஒழுக்க நெறிக் கோவையை (Code of Conduct) வகுத்தளித்தார். அவர் வகுத்தளித்த ஒழுக்க நெறிக் கோவை புதிதாக எழுச்சி பெறும் நகரம் சார்ந்த மத்தியதர வர்க்கத்தினதும், வர்த்தக-தொழில் முயற்சியாளர் வகுப்பினதும் வாழ்க்கையை நெறிப்படுத்த உதவும் ஒழுக்க விதிமுறைகளாக அமைந்தன. அவர் தனிநபர்களின் பாலியல் அற ஒழுக்கத்திற்கும் (Sexual Morality), குடும்ப வாழ்க்கையில் சிங்கள பௌத்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார்.

தர்மபால தமது எழுத்துகள் மூலம் பௌத்த சமயத்தினதும் சிங்கள நாகரிகத்தினதும் பண்டைய பெருமைகளை மக்களுக்கு எடுத்துக் கூறினார். மகாவம்சம் போன்ற வம்சவரலாற்று நூல்கள் கூறும் சிங்கள பௌத்தர்களின் வரலாற்றுப் பெருமைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களிடம் தேசிய அடையாள உணர்வையும், தன்மான உணர்வையும் வளர்த்தார். பிரித்தானியர் ஆட்சியின் கீழ் மிசனரிகளின் மேலாதிக்கம் காரணமாக அவமானத்திற்கு உள்ளாகியிருந்த சிங்கள பௌத்தர்கள் தலைநிமிர்ந்து நிற்பதற்கும் தர்மபாலவின் எழுத்துகளும் நடவடிக்கைகளும் துணை செய்தன.' (பக். 7)

தர்மபாலவின் சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கமும், தேசியவாதமும் எழுச்சி பெற்று வந்த சிங்கள பௌத்த முதலாளித்துவத்தின் நலன்களுக்குச் சார்பானதாக இருந்தது. இதனால், சிங்கள பௌத்த மத்தியதர வர்க்கமும், வர்த்தக வகுப்பினரும் தர்மபாலவிற்குப் பக்கபலமாக நின்று உதவினர்.

1915 ஆம் ஆண்டின் முஸ்லிம்களுக்கு எதிரான கலகம், சிங்கள முதலாளி வகுப்பின் போட்டியாளர்களாக விளங்கிய முஸ்லிம் வர்த்தகர்களுக்கும், கடை வியாபாரிகளுக்கும் எதிரானதாகும். முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகளில் நுகர்வுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் நுகர்வாளர்களான சாதாரண சிங்கள மக்களின் கண்களில், அக்கடை வியாபாரிகள் தம்மைச் சுரண்டிக் கொள்ளும் சுரண்டல்காரர்களாகப் பட்டார்கள்.

முஸ்லிம்களுக்கு எதிரான கலகம் பற்றிய சிறந்த ஆய்வுகளாக அமையும் மூன்று ஆய்வுக் கட்டுரைகளைத் தம்பையா அவர்கள் அடிக்குறிப்பாகத் தந்துள்ளார். ஆராய்ச்சி மாணவர்கள் பயன்படுத்தக்க கூடிய அந்த உசாத்துணைகளின் தகவல்களைக் கீழே தந்துள்ளோம்.

கலாநிதி அமீர் அலி எழுதிய 'The 1915 Racial Riots in Ceylon (Sri Lanka): A Reappraisal of its Causes' என்னும் கட்டுரை 'Journal of Asian Studies' என்ற ஆய்விதழில் 1970 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது (தொகுதி 24:2 (1970), பக். 219-266).

A.P. கன்னங்கரா (A. P. Kannankara) என்ற ஆய்வாளர் எழுதிய 'The Riots of 1915 in Sri Lanka: A Study in the Roots of Communal Violence' என்னும் கட்டுரை 'Past and Present, No. 102 (1983), P. 13065' இதழில் வெளியானது.

குமாரி ஜயவர்த்தன அவர்கள் எழுதிய 'Ethnic and Class Conflicts in Sri Lanka' என்னும் நூலை 1986 இல் கொழும்பு நவகம பிரிண்டர்ஸ் வெளியிட்டது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையில் வெளியான சிங்களப் பத்திரிகைகள் இனவாதத்தை மக்களிடம் பரப்பின. இவ்விடயம் குறித்து குமாரி ஜயவர்த்தன அவர்கள் மேற்குறிப்பிட்ட நூலில் விரிவாகக் கூறியுள்ளார். பியதாச சிறிசேன என்ற சிங்கள நாவலாசிரியர் 'சிங்களஜாதிய' என்ற பெயரில் ஒரு பத்திரிகையை வெளியிட்டார். அப்பத்திரிகை சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான கதைகளைச் செய்திகளாகவும், பத்தி எழுத்துகளாகவும் வெளியிட்டு இனவாத உணர்வுகளைத் தூண்டிவிட்டது. சிங்களவர்கள் 'தேசிய விழிப்புணர்வை' பெற வேண்டும் என 'சிங்களஜாதிய' பத்திரிகை மூலம் சிறிசேன வேண்டுகோள் விடுத்தார். 1915 இல் சிறிசேன 'கரையோர மூர்கள், கொச்சிகள் (மலையாளிகள்), அந்நியர்கள்' ஆகியோரின் கடைகளுடன் சிங்கள மக்கள் தொடர்பு வைத்திருக்கக்கூடாது என எழுதினார்.

கரையோர முஸ்லிம்களுக்கு (Coast Moors) எதிரான விரோத உணர்வு உச்சநிலையிலிருந்த வேளையில் 'லக்மின' பத்திரிகை கரையோர முஸ்லிம்களை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என எழுதியது. 'தினமின' என்ற பத்திரிகை கரையோர மூர்களை 'நமது எதிரிகள்' என எழுதியது. இம்மூன்று பத்திரிகைகளும் பயன்படுத்திய கடும் சொற்களை தம்பையா அவர்களின் நூலின் 7 ஆம் பக்கத்தினைப் படித்து அறிந்துகொள்ளலாம். ஏனைய ஆய்வாளர்கள் பலரும் இக்காலப் பத்திரிகைகள் கக்கிய இனவாதம் பற்றி விரிவாக எழுதியுள்ளனர்.

மேற்படி பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு எவ்விதத்திலும் தாம் சளைத்தவர் இல்லை என்பதை தர்மபால தாம் நடத்திய 'Mahabodhi Journal' என்ற ஆங்கில சஞ்சிகையிலும், அவரது எழுத்துகள் மூலமும் நிரூபித்துள்ளார். தர்மபாலவின் 'சிங்கள பௌத்தய' பத்திரிகை பல கேலிச் சித்திரங்களையும், கவிதைகளையும், செய்யுட்களையும் பிரசுரித்து இனவாதப் பிரசாரத்தை முன்னெடுத்தது. தம்பையா அவர்களின் நூலின் 8 ஆம் பக்கத்தில் இவை பற்றிய விவரங்களைப் படித்தறிந்து கொள்ளலாம். தர்மபாலவின் பத்திரிகை எழுத்துகளைக் கூர்மையாக அவதானித்து வந்த அரசாங்கம், 1915 ஆம் ஆண்டு 'சிங்கள பௌத்தய' பத்திரிகை மீது வழக்குத் தொடுத்ததோடு அப்பத்திரிகையைத் தடை செய்தது. பியதாச சிறிசேனவின் 'சிங்களஜாதிய' பத்திரிகையும் அவ்வாண்டு தடை செய்யப்பட்டது.

1915 இல் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான கலகம் நடைபெற்றவேளை தர்மபால கல்கத்தா நகரில் தங்கியிருந்தார். அங்கு தர்மபால மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகளையும், முன்னர் இலங்கையில் அவர் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகளையும் கவனத்தில் கொண்ட பிரித்தானிய இந்திய அரசாங்கம் அவரைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கு உத்தரவிட்டது. 'பௌத்தத்திற்குத் துரோகம்?' நூலின் 9-14 வரையான பக்கங்களில் எஸ்.ஜே. தம்பையா அவர்கள் 1860-1915 வரையான காலத்தின் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் போக்குகள் பற்றி விரிவாக விவரித்திருப்பதைத் தொகுத்தும், சுருக்கியும் மேலே கூறியுள்ளோம். அடுத்து 'அரசியலும் அரசியல் யாப்பு வளர்ச்சியும், 1915-1946' (Politics and Constitutional Progress 1915-1946) என்னும் தலைப்பில் அமைந்துள்ள 3 ஆம் அத்தியாயத்தின் கருத்துகளைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவோம்.

## அரசியலும், அரசியல் யாப்பு வளர்ச்சியும், 1915 - 1946

1915 கலவரத்தை பிரித்தானிய ஆட்சியாளர்கள் இராணுவ பலம் கொண்டு அடக்கினர். மதுவிலக்கு இயக்கத்தின் தலைவர்களாகப் பௌத்தர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த எவ்.ஆர். சேனநாயக்க, டி. எஸ். சேனநாயக்க ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தியா சென்றிருந்த தர்மபால அங்கு நீண்டகாலம் தங்கியிருந்தார். அவர் அங்கு புத்தகயாவைப் பௌத்தர்களுக்கு மீட்டுக் கொடுப்பதற்கான இயக்கத்தில் ஈடுபட்டு அவ்வேலைகளில் மூழ்கியிருந்தார். இதனால், இலங்கையின் அரசியலில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருந்தது.

இந்த வெற்றிடத்தை நிரப்புபவர்களாக புதிய அரசியல் தலைவர்கள் சிங்களவர், தமிழர் ஆகிய இரு தரப்பிலிருந்தும் அரசியல் அரங்கிற்குள் நுழைந்தனர். இந்த அரசியல்வாதிகள் பிரித்தானிய ஆட்சியாளர்களோடு ஒத்துழைத்து, மிதவாத அரசியலை முன்னெடுத்தனர். இப்புதிய அரசியல்வாதிகள் ஆங்கிலத்தில் கல்வி கற்றவர்களாயும், மேற்கு நாட்டு நாகரிகத்தைத் தழுவியவர்களாயும் இருந்தனர். அவர்கள் மேற்கத்தியப் பாணியில் உடை அணிந்தனர்; அவர்களின் வாழ்க்கைமுறை வெள்ளையர்களின் வாழ்க்கைமுறையை ஒத்ததாகவே இருந்தது. அவர்களும் காலனிய ஆட்சியாளர்கள் போன்றே இலங்கையின் சுதேச மக்கள் அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதற்கு இன்னும் தகுதியுடையவர்கள் ஆகவில்லை என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். ஆகையால், படிப்படியான சீர்திருத்தங்களையே அவர்கள் வேண்டி நின்றனர். 1916 ஆம் ஆண்டில் இந்தத் தலைவர்கள் இலங்கைச் சீர்திருத்தச் சங்கம் (Ceylon Reform League) என்ற அமைப்பை உருவாக்கினர். இவ்வமைப்பு 1919 ஆம் ஆண்டில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் (Ceylon National Congress - CNC) எனப் பெயர் மாற்றம் பெற்றது. இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஆளுநருக்கும், குடியேற்ற நாட்டு அலுவலகத்திற்கும் (Colonial Office) கோரிக்கை மனுக்களைத் தொடர்ச்சியாக அனுப்பி வைத்தது.

இலங்கையின் உயர் வகுப்பினருக்கு (Elite Class) இலங்கையின் நிர்வாகத்தில் கூடிய அளவு பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதே காங்கிரஸின் கோரிக்கையாகும். இலங்கைத் தேசிய காங்கிரஸின் கொள்கையாக படிமுறை வளர்ச்சி (Gradualism) அமைந்தது. காங்கிரஸ் முன்னைய காலக்கட்டத்தின் சிங்கள பௌத்த தேசியவாதிகள் போன்று சமய-பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகளை எதிர்த்த பௌத்த தேசியவாதிகளில் இருந்து வேறுபட்ட கொள்கைத் திட்டத்தை இலங்கைத் தேசிய காங்கிரசின் அரசியல் தலைவர்கள் முன்வைத்தனர். பிரதிநிதித்துவ அரசாங்கம் (Representa tive Government) மூலம், சுதந்திரத்தை நோக்கிப் படிப்படியாக முன்னேறுதல் இத்தலைவர்களின் கொள்கையாக இருந்தது.

இலங்கைத் தேசிய காங்கிரஸின் அரசியல்வாதிகள் பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் நடத்திய பேரம் பேசுதலின் பயனாகச் சில சலுகைகளைப் பெற்றுக்கொண்டனர். அத்தகைய சலுகைகளில் இரண்டு முக்கியமானவை. அவற்றுள் ஒன்று, டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசின் படி பெறப்பட்ட சர்வசன வாக்குரிமையாகும். இலங்கையர்களுக்கு சொத்து, கல்வித் தகைமை ஆகிய தகுதிகளின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையைக் கோரி நின்ற பெரும்பான்மையினரான இலங்கைத் தேசிய காங்கிரஸ் தலைவர்களில் பலர், 1931 இல் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதை விரும்பி ஏற்கவில்லை.

டொனமூர் ஆணைக்குழுவின் இரண்டாவது முக்கிய சலுகை 61 உறுப்பினர்கள் கொண்ட 'ஸ்டேட் கவுன்சில்' (State Council) என்னும் சட்டசபையை வழங்கியதாகும். இச்சட்டசபையின் 50 உறுப்பினர்கள் பிரதேச அடிப்படையிலான தேர்தல் தொகுதிகளிலிருந்து (Territorial Electorates) சர்வசன வாக்குரிமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களாக இருந்தனர். இச்சட்டசபை அரசக் கட்டமைப்பில் உள்ளகச் சுயாட்சி (Internal Autonomy) என்ற அம்சத்தைப் புகுத்துவதாக இருந்தது. 1931 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் இலங்கை அரசியலில் பெருமாற்றங்களுக்குக் காரணமாக அமைந்தது.

### சிங்களப் பெரும்பான்மைவாத ஆட்சியின் தொடக்கம்

சர்வசன வாக்குரிமை, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் என்பனவற்றின் அடிப்படையில் 1931 இல் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அப்போது இலங்கையின் சட்டசபை வரலாற்றில் முதல் தடவையாகச் சிங்களவர்களான சட்டசபைப் பிரதிநிதிகள் சபையில் அறுதியான பெரும்பான்மையினைக் கொண்டவர்களாக, சட்டசபையின் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தனர். சட்டசபையின் பிற சிறுபான்மையினங்களின் பிரதிநிதிகளின் கூட்டு எண்ணிக்கையை விடக் கூடிய அளவில் சிங்களப் பிரதிநிதிகள் காணப்பட்டனர். 1931 இன் பொதுத் தேர்தலில் பங்குபற்றாமல் தமிழர்கள் தேர்தலைப் புறக்கணித்தனர். 1935 இல் மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டபின் சிங்களப் பெரும்பான்மை கொண்ட சட்டசபை அமைக்கப்பட்டது. சிங்களப் பெரும்பான்மை ஆட்சியும் (Sinhalese Majoritarian Rule), சிங்கள மேலாதிக்கமும் டொனமூர் அரசியல் யாப்புக் காலத்தின் அரசியல் யதார்த்தமாக நிலைபெற்றது. 1936க்கும் 1942க்கும் இடைப்பட்ட காலத்தில் நிதி, பாதுகாப்பு, வெளிவிவகாரம் என்னும் மூன்று அமைச்சுகளைத் தவிர்ந்த ஏனைய அனைத்து அமைச்சுகளினதும் நிர்வாகத்திற்குப் பொறுப்பான நிர்வாகக் குழுக்களில் (Executive Committees) சிங்களப் பிரதிநிதிகளே பெரும்பான்மையினராகக் காணப்பட்டனர். குழுக்களின் தலைவர்களான அமைச்சர்களும் சிங்களவர்களாகவே விளங்கினர். 1943 இல் டி.எஸ். சேனநாயக்க தமிழர் தரப்புக்கு ஒரு சலுகையை வழங்க முன்வந்தார். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் மகனான அ. மகாதேவா அவர்களுக்கு உள்ளூராட்சி அமைச்சர் என்னும் அமைச்சுப் பதவியை அவர் வழங்கினார்.

1920கள் முதல் 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்த காலம் வரையான 28 ஆண்டுக்காலத்தில் தர்மபாலவின் தீவிர சிங்கள-பௌத்த இனவாத அரசியல் வானில் இருந்து மங்கி மறைந்துவிட்டது என்ற தோற்றம் வெளிப்பட்டது. ஆயினும், இந்த வெளித்தோற்றத்திற்கு மாறாக டொனமூர் யாப்புக்கால அரசியலில் இனத்துவ அரசியலும், இனவாதமும் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையே ஆழமான பிளவுகளை உருவாக்கிக் கொண்டிருந்தன. இலங்கையின் உயர்குழாம் அரசியல் தலைவர்கள் இருமுகங்களோடு அரசியல் அரங்கில் காட்சியளித்தனர். அவர்களின் ஒருமுகம் குறுகிய நோக்குடைய இனவாதத்தையும் (Communalism), இன்னொரு முகம் மதச்சார்பற்ற அரசியல் யாப்புவாதத்தையும் (Constitutionalism) வெளிப்படுத்தின.

இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் காற்பங்கினராக இருந்த சிறுபான்மை இனத்தவர்கள், சனத்தொகையில் நாலில் மூன்று பங்கினரான சிங்கள இனத்தவரின் பெரும்பான்மை ஆட்சிக்குள் அடங்கிப்போக வேண்டிய நிலை ஏற்பட்டது. டொனமூர் காலச் சட்டசபையில் சிங்களத் தலைவர்களுக்கும் சிறுபான்மை இனங்களின் தலைவர்களுக்கும் இடையே வாக்குவாதம் தொடர்ந்து

இடம்பெற்றது. சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் (Minority Representation) அரசியல் யாப்பு ஏற்பாடுகள் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும் எனச் சிறுபான்மை இனங்களின் தலைவர்கள் வாதாடினர். அரச உத்தியோகங்களுக்கான ஆட்சேர்ப்பு திறமையின் அடிப்படையில் (Merit Principle) அமைய வேண்டும் என சிறுபான்மை இனங்களின் அரசியல் தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர். பெரும்பான்மையினத் தலைவர்கள் தமிழ்த் தலைவர்கள் இனவாதம் பேசுவதாகக் குற்றம் சாட்டினர்.

1920 முதல் 1948 வரையான காலப்பகுதியில் இலங்கையின் அரசியலில் மூன்று அணிகள் செயற்பட்டன எனத் தம்பையா குறிப்பிடுகிறார்.

1. இலங்கைத் தேசிய காங்கிரஸ் 1920கள் முதல் அரசியலில் தாராளவாத இலட்சியங்களை (Liberal Ideals) முன்வைத்துச் செயற்பட்ட இயக்கமாக இருந்து வந்தது. தேசிய காங்கிரஸின் தலைவர்களான பொன்னம்பலம் அருணாசலம், ஜேம்ஸ் பீரிஸ், ஈ.டபிள்யு. பெரரா, டி.பி. ஜயதிலக்க, எவ்.ஆர். சேனநாயக்க, டி.எஸ். சேனநாயக்க ஆகியோர் 'ஒற்றுமை அரசியலை' (Col laborationist Politics) முன்னெடுத்தனர். சிங்களத் தமிழ்த் தலைவர்கள் யாவரும் ஒற்றுமையோடு ஓரணியில் செயற்பட வேண்டும் என்பதையே 'ஒற்றுமை அரசியல்' என்ற தொடர் குறிப்பிடுகிறது.

2. இலங்கைத் தேசிய காங்கிரஸ் அரசியல்வாதிகளின் அரசியல் தனியுரிமைக்கு இடதுசாரிகளிடமிருந்து எதிர்ப்புத் தோன்றியது. 1935 இல் லங்கா சமசமாஜக் கட்சி என்னும் மார்க்சிய அரசியல் கட்சி தோற்றம் பெற்றது. கட்சியில் ஏற்பட்ட பிளவு காரணமாக 1943 இல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உருவானது. இவ்விரு கட்சிகளும் கொழும்பு நகரின் தொழிலாளர் வர்க்கத்தையும், பெருந்தோட்டத் துறையின் தொழிலாளர்களையும் அணிதிரட்டி தொழிலாளர் உரிமைகளுக்கான போராட்டங்களை நடத்தின. இவை இடதுசாரி, மதச்சார்பற்ற, இனவாதம் அல்லாத (Non-Communal) அரசியலை முன்வைத்தன. இடதுசாரிகளின் அரசியல் இலங்கைத் தேசிய காங்கிரஸின் கொள்கைகளுக்கு எதிரானதாக அமைந்தது.

3. 1928 முதல் 1936 வரையான காலத்தில் பல்வேறு சிங்கள பௌத்த அமைப்புகள் தோன்றின. இச்சிங்கள பௌத்த அமைப்புகள் இனத்துவம், சமயம், மொழி என்பனவற்றின் அடிப்படையில் சிங்கள பௌத்தர்களின் நலன்களை முதன்மைப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தன. இப்பௌத்த அமைப்புகளும் சங்கங்களும் இணைந்து அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் (All Ceylon Buddhist Congress - ACBC) என்ற அமைப்பை உருவாக்கின. 1935 ஆம் ஆண்டில் சிங்கள மகாசபை (Sinhala Mahasabha - SMS) என்ற அமைப்பை எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க உருவாக்கினார். 'ACBC', 'SMS' என்ற சுருக்கப் பெயர்களால் அழைக்கப்பட்ட இவ்விரு பௌத்த அமைப்புகளும் பியதாச சிறிசேன, குமாரதுங்க ஆகிய இரு தலைவர்களாலும் முன்வைக்கப்பட்ட மொழித் தேசியவாதத்தை (Linguistic Nationalism) முன்னெடுத்தன. 1930களின் பிற்பகுதியில் பியதாச சிறிசேனவும், குமாரதுங்கவும் சிங்கள மகாசபையுடன் உறவுகளை முறித்துக் கொண்டனர். பண்டாரநாயக்கவின் சிங்கள மகாசபை 1930களின் பிற்பகுதியில் பலம் மிக்க ஓர் அமைப்பாக வளர்ச்சி பெற்றிருந்தது. பண்டாரநாயக்க சிங்கள மகாசபையின் கீழ் பல பகுதிகளினரையும் இணைத்து, அதனைச் செல்வாக்குள்ள அரசியல் இயக்கமாக உருவாக்கினார். 1939 ஆம் ஆண்டில் சட்டசபையின் உறுப்பினர்களில் பலர் பண்டாரநாயக்கவின் சிங்கள மகாசபையில் இணைந்து செயற்பட்டனர். 1939க்கும் 1956க்கும் இடைப்பட்ட காலத்தில் செல்வாக்குள்ள அரசியல் இயக்கமாக வளர்ச்சியுற்ற சிங்கள மகாசபை, 1956 தேர்தலில் பண்டாரநாயக்கவின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

மேற்குறித்த மூன்று அணிகளும் அரசியல் அரங்கில் முக்கியத்துவம் பெற்றிருந்த காலத்தில் நான்காவது சக்தியாக தீவிரவாதப் பிக்குகளின் (Radical Monks) அரசியல் பிரவேசம் அமைந்தது. 1947 ஆம் ஆண்டில் வித்தியாலங்கார குழு என அழைக்கப்பட்ட பிக்குகள் லங்கா சமசமாஜக் கட்சியின் ஆதரவாளர்களாக அரசியல் மேடைகளில் தோன்றினர். இவர்கள் இடதுசாரி அரசியலையும் பௌத்த தேசியவாதத்தையும் கலந்த ஒரு கலவையான கருத்தியலை முன்வைத்துப் பிரசாரம் செய்தனர். தம்பையாவின் நூலில் 'Radical Monks and the Legitimation of Monks Participation in Politics' (தீவிரவாத பிக்குகளும் பிக்குகளின் அரசியல் பங்கேற்பை நியாயப்படுத்தலும்) என்னும் தலைப்பிலான நான்காவது அத்தியாயத்தில் (பக். 15-21) பிக்குகளும் அரசியலும் என்னும் பொருள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: 'Buddhism Betrayed? Religion, Politics and Violence in Sri Lanka' என்னும் ஸ்டான்லி ஜெயராஜ் தம்பையா அவர்களின் நூலின் 2 ஆம், 3 ஆம் அத்தியாயங்கள் (பக். 514).

# இலங்கை மலையக மக்களின் வாழ்வியலில் சடங்குகள்

பகுதி ૩

கோப்பி, தேயிலைத் தோட்ட உழைப்பிற்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இலங்கை மலையகத் தமிழர்கள், 200 ஆண்டுகள் கழித்தும் தங்கள் வழிபாட்டு மரபுகளையும், சடங்கு முறைகளையும் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். அவர்களின் சமூக வாழ்வியலில் வழிபாடு அல்லது சடங்கு என்பது வெறும் மத நிகழ்வன்று; அது சமூகத்தின் தொடர்ச்சியை வெளிப்படுத்தும் உயிர்த்துடிப்புள்ள பண்பாட்டுச் செயல்முறையாகவும் உள்ளது. எனினும், சமகால மாற்றங்களால் இச்சடங்குகள் அருகி வருவதால், அவற்றை ஆவணப்படுத்தும் தேவை உண்டாகின்றது. சடங்குகளை வெறும் வாய்மொழித் தகவல்களாக அல்லாமல், நேரடிச் செயல், இசை, உணர்வியல் ஆகியவற்றின் நிகழ்த்துகை (Performance) வடிவமாகப் புரிந்துகொள்ள, நிகழ்த்துகை ஆய்வு அணுகுமுறை அவசியமாகின்றது. அந்தவகையில் இத்தொடர் 'நிகழ்த்துகை நோக்கில் மலையகத்தின் வழிபாடுகளும், சடங்குகளும்' எனும் தலைப்பில் எழுதப்படுகின்றது. இது வாழ்க்கைச் சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகள், கலைகளோடு இணைந்த சடங்குகள் எனப் பல அடுக்குகளில் ஆராயப்படும். நிகழ்த்துகை முறைமைகளை ஆவணப்படுத்துவதன் மூலம், மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளம், வரலாறு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சியாகவும் இது அமையும்.


## மெய்யநாதன் கேதீஸ்வரன்



மெய்யநாதன் கேதீஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் துறை விரிவுரையாளராக பணியாற்றுகின்றார். இவர் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகம் மற்றும் அரங்கியல் துறையில் இளங்கலைமாணிப் பட்டமும், பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் அரங்கக் கலைகள் துறையில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றுள்ளதோடு, தனது கலாநிதிப்பட்ட ஆய்வை 'பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில்' மேற்கொண்டுவருகிறார். நாடக எழுத்தாக்கம், நடிப்பு, நெறியாள்கை என்ற அடிப்படையில் நாடகச் செயற்பாட்டாளராக பல்வேறு அரச விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் நவீன நாடகம், கூத்து மற்றும் தமிழ் பண்பாட்டு மரபுகள் குறிப்பாக மலையக பாரம்பரிய வாழ்வியல், கலை மற்றும் பண்பாடுகள் பற்றி பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை முன்வைத்துள்ளார். சகதிப்புழுக்கள் இவரது நாடகப்பனுவல்களின் தொகுப்பு ஆகும்.

## மரணச் சடங்குகள்

மரணச் சடங்குகள் என்பவை வெறும் உடல் சார்ந்த இறுதி நிகழ்வுகள் மட்டுமல்ல; அவை சமூகத்தின் ஆன்மிகம், தத்துவம், உறவுமுறை மற்றும் வாழ்வியல் விழுமியங்களின் ஆழமான வெளிப்பாடுகளாகும். பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு மனிதன் கடந்து வரும் பதினாறு நிலைகளில், இறுதிச் சடங்கு என்பது மிகவும் முக்கியமானது. மரணம் என்பது வாழ்வின் முடிவல்ல; மாறாக அது ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குச் செல்லும் மாறுதல் அல்லது இடப்பெயர்வு என்று தமிழ்ப் பண்பாடு கருதுகிறது. இந்த மாறுதல் நிலையில் ஆன்மா அமைதியாகவும் பாதுகாப்பாகவும் அடுத்த நிலையை அடையச் செய்வதே இச்சடங்குகளின் அடிப்படை நோக்கமாகும். இச்சடங்குகள் பிரிக்க முடியாத மூன்று நிலைகளைக் கொண்டுள்ளன: பிரிநிலை (Separation), மாறுநிலை (Transition), மற்றும் இணைநிலை (Incorporation). இக்கட்டுரை மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் நிலவும் மரணச் சடங்குகளின் நிகழ்த்துகை நுணுக்கங்கள், அவற்றின் பின்னணியில் உள்ள தத்துவங்கள் மற்றும் நவீனகால மாற்றங்களை விரிவாக ஆராய்கிறது.

இலங்கை மலையகத் தமிழ்ச் சமூகம் என்பது ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தனித்துவமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு விளங்கும் ஒரு சமூகமாகும். பிரித்தானியக் குடியேற்றவாத ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து தேயிலை மற்றும் கோப்பித் தோட்டங்களில் பணிபுரிவதற்காக அழைத்துவரப்பட்ட இச்சமூகத்தினர், தங்களுடன் தமது பூர்விகக் கலாசாரம், மதம் மற்றும் சடங்கு முறைகளையும் கொண்டு வந்தனர். காலப்போக்கில் இவர்கள் வாழ்ந்த தோட்டப் பகுதிகளின் புவியியல் சூழல், தனிமைப்படுத்தப்பட்ட வாழ்விடம் (Ghetto Lifestyle) மற்றும் பொருளாதாரக் காரணிகளால் இவர்களது சடங்கு முறைகள் புதிய பரிமாணங்களைப் பெற்றன. குறிப்பாக, ஒரு மனிதனின் வாழ்வின் இறுதிக் கட்டமாகக் கருதப்படும் மரணச் சடங்குகள், மலையகத் தமிழர்களின் சமூகக் கட்டமைப்பு, சாதியப் படிநிலைகள் மற்றும் ஆன்மிக நம்பிக்கைகளின் வெளிப்பாடாகத் திகழ்கின்றன. இச்சடங்குகள் வெறும் துயர வெளிப்பாடாக மட்டுமன்றி, சமூக ஒற்றுமை, வர்க்க அடையாளம் மற்றும் பாரம்பரியத் தொடர்ச்சியை நிலைநிறுத்தும் வழிமுறையாகவும் அமைகின்றன. இச்சமூகத்தினரில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்கள் என்பதால், பிறப்பு மற்றும் இறப்பு ஆகியவற்றின் சுழற்சி குறித்த வேதகால மற்றும் ஆகம விதிகளின் தாக்கம் இவர்களது சடங்குகளில் ஆழமாகப் பதிந்துள்ளது. மரணம் குறித்த இவர்களது அணுகுமுறை, உலகியல் வாழ்வின் நிலையாமையை (Impermanence) உணர்த்தும் அதேவேளையில், இறந்தவர் ஒரு மேலான உலகிற்குச் செல்வதை உறுதிப்படுத்தும் சடங்கியல் கடமைகளையும் உள்ளடக்கியுள்ளது.

மலையகத் தமிழர்களிடையே நிலவும் ஒரு பொதுவான நம்பிக்கை என்னவென்றால், ஒரு நபர் தனது நீண்டகாலக் கனவுகளை அல்லது ஆசைகளை நிறைவேற்றாமல் இறந்துவிட்டால், அவர் ஒரு தீய ஆவியாக மாறித் திரும்புவார் என்பதாகும். இத்தகைய நம்பிக்கைகள் மரணச் சடங்குகளை மிகத் துல்லியமாகவும் பக்தியுடனும் நடத்த வேண்டிய அவசியத்தை உருவாக்குகின்றன. ஆன்மா சாந்தி அடையவில்லை எனில், அது குடும்பத்தினருக்குத் துன்பத்தை விளைவிக்கும் என்ற அச்சம் இச்சமூகத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இதன் அடிப்படையில் சடங்குகளும் அதன் முறைமைகளும் மிகத் தெளிவாக பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்துள்ளன.

இச்சடங்கானது ஓர் உயிர் உடலை விட்டு பிரியும் முன்னரே தொடங்கி விடுகின்றது; இது வயதாகி அல்லது நீண்டகாலம் நோய்வாய்ப்பட்ட ஒருவரின் மரணத்தின் போது நிகழும். திடீர் மரணங்களில் அல்லது வைத்தியசாலை மரணங்களில் இவ்வாறான சடங்குகள் இடம்பெறுவதில்லை.

அதில் முக்கியமானது சேடமிழுத்தல்; ஓர் உயிர் போகாது இழுத்துக்கொண்டிருப்பதையே இவ்வாறு குறிப்பிடுவர். இச்சந்தர்ப்பத்தில் முதலில் பாலை ஊற்றுவர். அதன் பின்பும் உயிர் போகாது விட்டால், வெள்ளி அல்லது தங்கத்தைக் கரைத்து வாயில் ஊற்றுவர். பின்னர் உயிர் பிரிந்ததும் ஒப்பாரி வைக்கப்படுகிறது. ஒப்பாரி என்பது தமிழர் கலாசாரத்தின் தனித்துவம் என்று கூறலாம். ஒப்பாரியை கணவனுக்கு, மனைவிக்கு, பிள்ளைகளுக்கு, மாமியார்களுக்கு, மாமன்மாருக்கு எனத் தனித்தனியே வகைப்படுத்திப் பாடுவது வழக்கமாக உள்ளது. பொதுவாக ஒப்பாரியில், இறந்தவர் வாழ்ந்தபோது செய்த நன்மைகளையும் தீமைகளையும் எடுத்துக் கூறுவர். ஒப்பாரியை 'ஒப்ப + ஆரி' எனப் பிரித்து, ஒப்புச் சொல்லி அழுதல் எனப் பொருள் கொள்ளலாம். அத்தோடு பெண்களால் பாடப்படுவது என்றும், இறந்தவர்க்கும் அடுத்த பிற பொருள்களுக்கும் ஒப்புச் சொல்லிப் பாடப்படுவது என்றும் கூறப்படுகிறது. தமிழில் ஒப்பாரியைப் பிலாக்கணம், பிணக்கானம், கையறுநிலை, புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு எனப் பல்வகையாகக் கூறுவர்.

## மரணம் நிகழ்ந்த பின்னர் செய்யப்படும் சடங்குகள்

மலையகச் சமூகத்தில் ஒருவரின் மரணத்தைச் சுட்டிக்காட்டும்போது 'செத்துவிட்டார்' போன்ற நேரடியான சொற்களைப் பயன்படுத்த மாட்டார்கள். அதற்குப் பதிலாக, 'சிவனடி சேர்ந்தார்', 'இறைவனடி சேர்ந்தார்', 'காலமானார்' அல்லது 'தவறிவிட்டார்' போன்ற மங்கலமான பிரயோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு நபர் வயது முதிர்ந்து மரணமடைவதை ஒரு நிறைவான வாழ்வின் முடிவாகக் கருதி, அதற்கான சடங்குகளை அதிக முக்கியத்துவத்துடன் நடத்துகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை என்பது ஒரு தனிமனித வாழ்வு அல்ல; அது ஒரு கூட்டு வாழ்வு. லயங்கள் எனப்படும் நீண்ட வரிசை வீடுகள், ஒருவரின் வீட்டுத் துக்கத்தை மற்றொருவரின் வீட்டு வாசலுக்கு மிக அருகாமையில் கொண்டு வருகின்றன.

துக்கத்தைப் பகிர்தல்: ஒரு லயத்தில் ஒரு உயிரிழப்பு நேர்ந்தால், அந்த லயம் முழுவதும் ஒரு மயான அமைதி நிலவும். இது வெறுமனே ஒரு சடங்கு அல்ல; மாறாக, 'ஒருவர் துயரம் அனைவரது துயரம்' என்ற வாழ்வியல் தத்துவத்தின் வெளிப்பாடாகும்.

பொருளாதாரப் பங்களிப்பு: மரண வீட்டின் செலவுகள் என்பது தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு பெரும் சுமையாகும். இதைக் குறைக்க, லயத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் தங்களால் இயன்ற பணத்தையோ அல்லது அரிசி, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களையோ வழங்குவார்கள்.

மரணம் நிகழ்ந்த பின்னர் செய்யப்படும் அடுத்த விடயம் செய்தி அறிவித்தல். தகவல் தொழில்நுட்பம் வளராத காலத்தில், ஒரு மரணச் செய்தி என்பது உடலால் சுமந்து செல்லப்படும் ஒன்றாக இருந்தது. தோட்டத்தின் புவியியல் அமைப்பு மலைப்பாங்கானது என்பதால், ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்குச் சென்று செய்தி சொல்வது கடினமான பணி. இதற்காகச் 'செய்தி சொல்லிகள்' அல்லது குடும்பத்தின் இளைஞர்கள் நியமிக்கப்படுவர்.

சலவைத் தொழிலாளி (வண்ணார்) மற்றும் சிகையலங்காரம் செய்வோர் (நாவிதர்) ஆகியோருக்கு முதலில் செய்தி அனுப்பப்படும். மரண வீட்டில் தீட்டுக் கழிப்பதற்கும், பிரேதத்தை மூடுவதற்குத் தேவையான வெள்ளைத் துணிகளை (மாற்று) வழங்குவதற்கும் இவர்களது வருகை அவசியம். நாவிதர் இறுதிச் சடங்கின் போது 'கருமாதிக் காரியம்' செய்பவர்களின் தலைமுடியை மழிப்பதற்கும், கிரியைகளை வழிநடத்துவதற்கும் முக்கியப் பங்காற்றுவார். இவர்கள் வெறும் தொழிலாளர்களாக அன்றி, அந்தச் சமூகத்தின் சடங்கு ரீதியான பாதுகாவலர்களாகவே மதிக்கப்பட்டனர்.

அதே நேரத்தில், இறந்த செய்தி 'பறையர்' என்று கூறப்படுபவர்கள் மூலமாகவும் தோட்டம் முழுவதும் அறிவிக்கப்படும். இது 'கேதம் சொல்லுதல்' என்று கூறப்படும். கேதம் சொல்லச் செல்பவர்கள் ஒவ்வொரு வீட்டின் முன்னாலும் நின்று இறந்தவர் பற்றிய செய்தியை அறிவிப்பார்கள். தற்போது இது வழக்கில் இல்லை. காரணம், நவீன மாற்றங்களால் உடனடிச் செய்திப் பரிமாற்றக் கருவிகள் தோன்றிவிட்டன. இப்போது, இக்குறிப்பிட்ட சாதியினர் இதனைச் செய்வதற்கு முன்வராமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், தோட்டங்களில் ஒரு மரணம் நிகழ்ந்தால் அன்று அந்தத் தோட்டத்தில் வேலைக்குச் செல்லாமல் இருப்பது ஒரு மிக முக்கியமான அறமாகப் போற்றப்பட்டது. ஆரம்ப காலங்களில் வெள்ளைக்காரத் துரைகள் (Managers) வேலைக்கு வராத தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைப்பார்கள். இருப்பினும், தொழிலாளர்கள் தங்கள் உறவினரின் அல்லது சக தொழிலாளியின் இறுதி ஊர்வலத்திற்காகத் தண்டனைகளையும் பொருட்படுத்தாமல் வேலையைப் புறக்கணிப்பார்கள்.

ஒரு மரணச் சடங்கில் ஒட்டுமொத்தத் தோட்டமே பங்கேற்பது என்பது நிர்வாகத்திற்கு எதிரான ஒரு மறைமுகமான ஒற்றுமைப் பிரகடனமாகவும் அமைந்தது. "எங்களுக்குள் ஒருவருக்குப் பாதிப்பு என்றால், நாங்கள் அனைவரும் ஒன்றுபடுவோம்" என்ற செய்தியை இது உரக்கச் சொன்னது. மரணவீட்டிற்கு வராத குடும்பங்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் சூழல் நிலவியது. இது ஒரு வகையான சமூகக் கட்டுப்பாடாக இருந்து, மக்களிடையே ஒருமைப்பாட்டைப் பேணியது. சமகாலத்தில் இவ்வாறான வழக்கங்கள் சில தோட்டங்களில் மாத்திரமே பேணப்படுகின்றன.

தோட்டப்புறச் சடங்குகளில் காணப்படும் ஒவ்வொரு செயலும் ஒரு சமூகக் குறியீட்டைக் கொண்டுள்ளது. மரணம் நிகழ்ந்த வீட்டில் அடுப்பு எரிக்கப்படாது. நெருங்கிய உறவினர்கள் அல்லது பக்கத்து லயத்து மக்கள் உணவைச் சமைத்துக் கொண்டு வருவார்கள். இது துக்கத்தில் இருப்பவர்களின் பசியை உணர்ந்து செயற்படும் ஓர் உன்னதமான மனிதநேயமாகும். ஆனால் சமகாலத்தில் லயக் குடியிருப்புகள் தனிவீட்டுத் திட்டங்களாக மாற்றமடைந்து வருவதால், பழைய அந்தத் தீவிரமான கூட்டு வாழ்வுச் சூழல் சற்றுத் தளர்வடைந்துள்ளது. இருப்பினும், இன்றும்

தோட்டப்புறங்களில் ஒரு மரணம் நிகழும்போது, அந்தப் பிரதேசம் முழுவதும் ஒரு நிமிடம் ஸ்தம்பிப்பதையும், மக்கள் சாதி, மத வேறுபாடின்றி ஒன்று கூடுவதையும் காணலாம். இது அவர்களின் முன்னோர்கள் கசப்பான தோட்ட வாழ்க்கையில் தப்பிப்பிழைக்கக் கற்றுக்கொண்ட ‘கூட்டுப் பாதுகாப்பு’ (Collective Security) என்ற ஆயுதத்தின் எச்சமாகும்.

மரணம் நிகழ்ந்த பின்னர் இடம்பெறும் சடங்குகளை எடுத்துக்கொண்டால், அதில் முதலாவதான மரணத் தீட்டை கழிக்கும் சடங்கு முக்கியமானது. மரணத் தீட்டு என்பது தோட்டப்புறங்களில் மிகத் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படும் ஒரு நம்பிக்கையாகும். முதல் செயற்பாடு குளிப்பாட்டுதல் மற்றும் கட்டுதல் ஆகும்.

இறந்தவரின் உடலைச் சுத்தப்படுத்துவது மிக முக்கியமான சடங்கு. இறந்த ஒருவரை ‘சடலமாக’ அல்லாமல், ‘இறைவனடி சேர்ந்தவராக’ கருதிச் செய்யப்படும் முதல் மரியாதை இதுவாகும். பெரும்பாலும் வீட்டின் முற்றத்தில் அல்லது மறைவான ஓரிடத்தில் வைத்து பிரேதத்தைக் குளிப்பாட்டுவார்கள். இதற்கு மஞ்சள் கலந்த நீர் அல்லது வாசனைத் திரவியங்கள் பயன்படுத்தப்படும். இது உடலைச் சுத்தப்படுத்துவதுடன், கிருமி நீக்கமாகவும் அமைகிறது.

மேலும், கட்டுதல் என்று நோக்கும் போது, உடலின் கால் பெருவிரல்களையும் கைகளையும் ஒன்றாகக் கட்டுவது அதன் வடிவத்தை ஒழுங்காகப் பேணுவதற்காகச் செய்யப்படுகிறது. மனித உடல் இறந்த சில மணிநேரங்களில் விறைக்கத் தொடங்கும் (Rigor Mortis). அப்போது கைகள் மற்றும் கால்கள் கோணலாகவோ அல்லது விரிந்தோ இருந்தால், அதைப் பெட்டிக்குள் வைப்பது சிரமமாகும். எனவே, கைகளையும் கால் பெருவிரல்களையும் ஒன்றாகச் சேர்த்து வெள்ளைத் துணியால் அல்லது நூலால் கட்டுவார்கள். இது அந்த உடல் ஓர் அமைதியான உறக்க நிலையில் இருப்பதைப் போன்ற தோற்றத்தைத் தருகிறது. இதனைப் பின்வருமாறு வகைப்படுத்துவார்கள்:

கைக்கட்டு: இரண்டு கை விரல்களையும் இணைத்துக் கட்டுதல்; இது உடலின் சக்தியை ஒருமைப்படுத்துவதற்காகக் கட்டப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது.

கால்கட்டு: இரண்டு கால் கட்டை விரல்களையும் சேர்த்துக் கட்டுதல்; உடல் அசையாமல் இருக்கக் கட்டப்படுகின்றது.

நாடிக்கட்டு: உச்சந்தலை முதல் நாடி வரை கட்டுதல்; முகம் சிதையாமல் இருக்கக் கட்டப்படுவதாகக் கூறப்படுகிறது. அத்தோடு மூக்கினுள் வெள்ளை நிறத்திலான பஞ்சும் வைக்கப்படுகின்றது.

பின்னர் இறந்தவருக்குப் பிடித்தமான ஆடைகள் அல்லது புத்தாடைகள் அணிவிக்கப்படும். சுமங்கலிப் பெண்கள் இறந்தால், அவர்களுக்குப் பட்டுப்புடவை மற்றும் பூக்கள் சூட்டப்படும். இது அந்த ஆன்மா தனது பயணத்தைத் திருப்தியுடன் தொடங்குவதற்கான குறியீடாகும்.

பின்னர் இறந்தவரைப் பெட்டியில் வைத்து, தேங்காய் உடைப்பர். அதன் பின்னர் வெற்றிலையில் கற்பூரம் ஏற்றி, பெட்டியைச் சுற்றிக் காட்டுவர். பின்னர், ஒரு பக்கத்தில் விளக்கு வைக்கப்படுகிறது. அரிசிக் கொத்தில் அரிசி பரப்பி, அதன் மேல் வெற்றிலை ஒன்றை நேராக ஈர்க்கில் குத்தி நிலைநிறுத்துகின்றனர். அதனுடன் பழங்களும் வைக்கப்படுகின்றன. மறுபுறத்தில் உடைத்த தேங்காயின் பாதியில் உப்பு நிரப்பி, அதில் ஒரு திரியிட்டு எரிக்கப்படும்.

கைகளில் சாணம் வைத்தல் என்பது ஓர் அரிய மற்றும் பழமையான மரபாகும். இறந்தவரின் கையைச் சாணத்தில் பதித்து, அதைச் சுட்டுத் திருநீறாக்குவது, அந்த நபரின் ஆன்மிக இருப்பை வீட்டில் நிலைநிறுத்துவதாகக் கருதப்படுகிறது. அந்தத் திருநீற்றை ஒரு கலசத்தில் வைத்துப் பூஜிக்கும் வழக்கமும் சில பகுதிகளில் உண்டு. இது தோட்டப்புறங்களுக்கே உரித்தான, மிகவும் அரிதான மற்றும் ஆச்சரியமான ஒரு மானிடவியல் சடங்காகும். இது பெரும்பாலும் சமகாலத்தில் செய்யப்படுவதில்லை.

இவ்வாறான சடங்குகளின் பின்னர், உறவினரின் விருப்பத்திற்கிணங்கவும் பொருளாதார வசதிக்கேற்பவும், ஒரு நாள் அல்லது இரண்டு நாள் மரணவீடு நடைபெறும். இரவு நேரங்களில் மரண வீட்டின் வாசலில் காய்ந்த மரக்கட்டைகளைக் கொண்டு தீ மூட்டி, அதைச் சுற்றி ஆண்கள் அமர்ந்திருப்பார்கள்; பெண்கள் இறந்த உடலுக்குப் பக்கத்தில் அமர்ந்திருப்பார்கள். குறிப்பிட்ட சில நேரங்களில் ஒப்பாரியும் வைத்துக் கொண்டிருப்பார்கள்.

இறந்த வீட்டின் ஓர் அறையைத் தேர்ந்தெடுத்து, பல ஆண்கள் ஒன்றிணைந்து சினிமாப் பாடல்களைப் பாடி ‘டோலக்’ இசைப்பர்; சோகப்பாடல்களே அதிகமாகப் பாடப்படும்.

மேலும், உறவினர்கள் வந்து ‘கோடி போடுதல்’ முக்கியமான நிகழ்வாகும். செத்த வீட்டிற்கு வருபவர்கள், இறந்தவர் ஆணாக இருந்தால் வேட்டி, லேஞ்சி கொண்டு வருவர்; பெண்ணாக இருந்தால் சேலை கொண்டு வருவர். இந்தக் கோடியானது ஒரு

பாத்திரத்தில் தேங்காய், அரிசி என்பனவற்றுடன் வைத்துக் கொண்டுவரப்படும். மிகவும் உரித்துடைய சொந்தங்களே இவ்வாறு கொண்டு வருவார்கள்.

தோட்டங்களில், இறந்தவரின் வீட்டு முன்றலில் அல்லது வாசலில் ஒரு மேசை போடப்பட்டு, தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு, புகையிலை என்பன வைக்கப்பட்டிருக்கும். அத்துடன் பக்கத்தில் ஒரு கொப்பியும் பேனையும் வைக்கப்பட்டிருக்கும். இறந்தவரின் உறவினர்கள், நண்பர்கள், அக்கொப்பியில் தமது பெயரை எழுதிவிட்டு, அவ்விடத்தில் தமக்கு விருப்பமான பணத்தைக் கையளித்துச் செல்வர். இவ்வாறு கொடுக்கப்படும் காசு 'கட்டைமொய்' எனப்படுகின்றது. இத்தொகை இறந்தவரின் வீட்டுக்கு உபகாரமாக அமைகிறது. மாமன் முறையானவர் கொண்டுவருவது 'மாமன் சீரு' எனப்படும்.

சில ஊர்களில் கும்மி அடிக்கும் வழக்கமும் காணப்பட்டது. ஆனால் சமகாலத்தில் கும்மி அடித்து ஒப்பாரி பாடும் முறை குறைந்துவிட்டது எனலாம்.

பிரேதத்தை வீட்டை விட்டு வெளியே எடுக்கும் முன், நெருங்கிய உறவினர்கள் அதை மூன்று முறை சுற்றி வருவார்கள். இது அந்த ஆன்மாவுடனான பந்தத்தை அறுப்பதைக் குறிக்கும் ஒரு குறியீட்டுச் சடங்காகும். பின்னர் பிரேதத்தை வெளியில் எடுத்து வாசலில் வைப்பார்கள்.

இம்மரணச் சடங்குகள் அனைவருக்கும் சமமாக இருப்பதில்லை. இதில் வயதும் அந்தஸ்தும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

குழந்தைகள் மற்றும் திருமணமாகாதவர்கள்: இவர்களுக்கு விரிவான சடங்குகள் செய்யப்படுவதில்லை. இவர்கள் 'பாவமற்றவர்களாக'க் கருதப்படுவதால், இவர்களது மரணத்தின் போது பெரிய அளவில் கிரியைகள் நடத்தப்படுவதில்லை. அநேகமாக இவர்களது உடல் அமைதியாக அடக்கம் செய்யப்படும்.

பெரிய கங்காணிகள் மற்றும் முக்கியஸ்தர்கள்: தோட்ட நிர்வாகத்தில் செல்வாக்குச் செலுத்திய பெரிய கங்காணிகள் இறக்கும் போது, அந்தத் தோட்டமே திரண்டு வரும். அவர்களுக்கு மேளதாளங்களுடன் ஊர்வலம் நடத்தப்பட்டு, கல்லறைகள் (*Monuments*) கட்டப்படும். இது அவர்களின் அதிகாரத்தை மரணத்திற்குப் பின்னரும் நிலைநாட்டும் ஒரு முயற்சியாகும். இறந்தவரின் வீட்டின் அருகில் உள்ள ஆற்றங்கரையில் இருந்து வீட்டின் வாசல்வரை நீர்மாலை எடுக்கப்படும்.

இறந்தவரின் பிள்ளைகளை மாமன் வீட்டார் ஆற்றிற்கு அழைத்துச் சென்று குளிக்கச் செய்து, பூமாலை சூட்டி, வேட்டி மற்றும் பூணூல் (இடமிருந்து வலமாக) அணிவிக்கின்றனர். பின்னர் ஈரவேட்டியுடன் ஒரு குடத்தில் நீர் நிரப்பி வீட்டிற்குக் கொண்டு வருவர். அந்த நீரின் உதவியுடன் 'அம்பட்டன்' சடங்குகளைத் தொடங்குவார்.

அதனைத் தொடர்ந்து அரப்பு வைத்தல் நடைபெறும். அம்பட்டன் மாமன்மாரை எண்ணெய் அரப்பு வைக்க அழைப்பார். எண்ணெய்யைத் தொட்டவுடன் சட்டியில் கையைக் கழுவ வேண்டும்; கழுவிய கையை உதறக்கூடாது என்பதும் ஐதீகமாகும்.

இறந்தவர் ஆணாக இருந்தால் மாலை மாற்றி, மனைவியின் தலையில் குடத்து நீர் ஊற்றி, நெற்றிக் குங்குமத்தை அழித்து, தாலியையும் கழற்றி விடுவர். சில இடங்களில் இது கருமாதியன்று செய்யப்படும்.

இறந்தவருக்காக நெய்ப்பந்தம் பிடிக்கும் சடங்கில் பேரப்பிள்ளைகள் மட்டுமே பங்கேற்பார்கள்; பேரப்பிள்ளையில்லாதவர்களுக்கு இச்சடங்கு நடைபெறாது. இதனைத் தொடர்ந்து எண்ணெய் தொட்டு வைத்தல் நடைபெறும்.

பின்னர் 'சீதேவி வாங்குதல்' எனும் சடங்கு நடைபெறும். நவதானியங்கள் கலந்த சாணி உருண்டையை இறந்தவரின் வலது கையில் வைத்து அடையாளம் பதியச் செய்து, அதை மனைவியோ அல்லது வேறொருவரோ வாங்குவர். வாங்கிய சீதேவியை (சாணி உருண்டையை), இறந்தவர் உயிர் பிரிந்த இடத்திலுள்ள சுவரில் அடித்து வைப்பர். 'எட்டு'ச் சடங்கு நடைபெறும் நாள் வரை அதற்கு நீர் ஊற்றப்பட்டு, அன்றைய தினம் அது ஆற்றில் விடப்படும்.

வாய்க்கரிசி போடுதல் இரண்டு முறையாக நடைபெறும். ஒன்று; வீட்டின் வாசலில், மற்றொன்று; புதைகுழி மேட்டில். பிரேதம் முச்சந்தியை அடைந்ததும், அம்பட்டனை அழைத்து, சில்லறைக் காசுடன் அரிசியை மூன்று முறை அள்ளிப்போடுவர். இதனைத் தொடர்ந்து, இறந்தவர் 'மேலான உலகை' அடைய வேண்டுமென உறவினர்கள் ஆசி கூறுவர். "சொர்க்கம் சேர்", "கைலாசம் சேர்", "வைகுண்டம் சேர்" என்பதே இவ் ஆசியாகும்.

பெட்டியைத் தூக்குவதற்கு முன்னதாக, நெருங்கிய உறவினர்கள் (பிள்ளைகள் மற்றும் துணைவர்) பிரேதத்தைச் சுற்றி மூன்று முறை வலம் வருவார்கள். ஒவ்வொரு சுற்றின் போதும் அந்த நபருடனான தங்கள் வாழ்நாள் உறவை நன்றியுடன் நினைவுகூர்வார்கள்.

பொதுவாகச் சடங்குகளில் வலமிருந்து இடமாகச் சுற்றுவது வழக்கம். ஆனால் மரணச் சடங்குகளில் சில பகுதிகளில் இடமிருந்து வலமாகச் சுற்றுவதும் உண்டு. இது வாழ்வின் தலைகீழ் மாற்றத்தைக் குறிக்கிறது. சில தோட்டங்களில், வலம் வரும்போது ஒருவர் கையில் துளையிடப்பட்ட மண்பானையைச் சுமந்து வருவார். நீர் ஒழுகும் அந்தப் பானை மூன்றாம் சுற்றின் முடிவில் உடைக்கப்படும். இது உடல் அழியக்கூடியது, உயிர் வெளியேறிவிட்டது என்பதைக் குறிக்கும் வாழ்வியல் தத்துவமாகும்.

பின்னர் பிரேதப் பெட்டி மூடப்படும்; அதன் தலைப்பகுதி மாத்திரம் திறந்திருக்கும். பிரேதத்தின் தலைப்பகுதி வீட்டை நோக்கியும், கால்பகுதி போகும் வழியை நோக்கியும் கொண்டு செல்லப்படும். பின்னர் இறந்தவரின் வீட்டின் முன்புறமுள்ள முச்சந்தியில் வைத்து கொள்ளிக்குடம் உடைக்கப்படும். தாய்க்குத் தலைமகனும், தகப்பனுக்குக் கடைசி மகனும் கொள்ளிக்குடம் உடைப்பது வழக்கமாக உள்ளது. கொள்ளிக்குடம் ஏந்துபவர் மூன்று முறை பிரேதத்தைச் சுற்றி வருவார். அவரின் பின்னால் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது பேர் சுற்றி வருவர். ஒவ்வொரு முறையும் சுற்றிவரும்போது அம்பட்டன் கொள்ளிக்குடத்தில் ஒவ்வொரு ஓட்டை போடுவார். பின்னால் வருபவர்கள் ஓட்டை வழியாக வரும் நீரை இரண்டு பக்கங்களிலும் தட்டிவிட்டு வருவர். மூன்று முறை சுற்றியபின் கொள்ளிக்குடத்தைத் தோளிலிருந்து பின்பக்கமாக எடுத்து அம்பட்டர் தரையில் போட்டு உடைப்பார். இதன் பின்னரே பிரேதம் தூக்கப்படும். கொள்ளிக்குடம் உடைத்தவரின் தலையில் முக்காடு இட்டு, பின்பக்கம் திரும்பிப் பாராது வீட்டுக்கு அழைத்துச் செல்வர்.

முச்சந்தியிலிருந்து பிரேதம் தூக்கப்பட்ட பின்னர், அந்த இடத்தில் பெண்கள் சுற்றி நின்று மாரடித்து, மூன்று முறை அழுதுவிட்டு வீடு செல்வர். அதேவேளையில், பிரேதத்தைத் தூக்கியவுடன் முச்சந்தியில் ஒரு சுண்டுத் தண்ணீரையும் புகையிலையையும் வைத்துவிடுவர். ஆண்களாயின் பீடி அல்லது சுருட்டு வைத்து விடுவர். பிரேதம் தூக்கிச் செல்லப்படும் போது முறுக்கப்பட்ட வேட்டியைப் பிரேதப் பெட்டியின் மேலாக ஒரு புறத்திலிருந்து மறுபுறமாக மாறிமாறி வீசி எறிந்து செல்வர். அத்துடன் சோளப்பொரியுடன் சில்லறைக் காசைக் கலந்து பிரேதப் பெட்டியின் மேலாக இறைத்துக் கொண்டும் செல்வர்.

தமிழ்நாட்டில் மலையக மக்களின் முன்னோர்கள் எரிக்கும் வழக்கத்தையே கொண்டிருந்தனர். ஆரம்பகாலத்தில் தோட்டங்களுக்குப் புலம்பெயர்ந்த

**வாய்க்கரிசி போடுதல் இரண்டு முறையாக நடைபெறும். ஒன்று; வீட்டின் வாசலில், மற்றொன்று; புதைகுழி மேட்டில். பிரேதம் முச்சந்தியை அடைந்ததும், அம்பட்டனை அழைத்து, சில்லறைக் காசுடன் அரிசியை மூன்று முறை அள்ளிப்போடுவர். இதனைத் தொடர்ந்து, இறந்தவர் 'மேலான உலகை' அடைய வேண்டுமென உறவினர்கள் ஆசி கூறுவர். "சொர்க்கம் சேர்", "கைலாசம் சேர்", "வைகுண்டம் சேர்" என்பதே இவ் ஆசியாகும்.**

மக்கள் தங்களின் பூர்விகக் கிராமத்து மரபுகளைப் பின்பற்றித் தகனம் (எரித்தல்) செய்வதையே விரும்பினர். ஆனால் மலையகத் தோட்டங்களில் பிணங்களைப் புதைக்கும் வழக்கம் நிலவுவதற்குப் பின்னால் பொருளாதார மற்றும் நடைமுறைக் காரணங்கள் உள்ளன. விறகுத் தட்டுப்பாடு மற்றும் தகனம் செய்வதற்கான அதிகப்படியான செலவு காரணமாகவே புதைக்கும் முறை பரவலானது. ஒரு உடலைத் தகனம் செய்ய ஏறத்தாழ 300 முதல் 500 கிலோ வரை விறகுகள் தேவைப்படும். இதற்கான கூலி, விறகு ஏற்றி வரும் செலவு மற்றும் சுடுகாட்டுத் தொழிலாளர்களின் ஊதியம் என அனைத்தும் ஒரு சாதாரணத் தொழிலாளியின் பல மாதச் சம்பளத்திற்கு இணையானது. மரணச் சடங்கிற்காக வாங்கும் கடன் அந்தத் தொழிலாளர் குடும்பத்தை மீள முடியாத வறுமையில் தள்ளியது.

தோட்டத் தொழிலாளர்களின் மிகக் குறைந்த வருமானத்தில் தகனம் செய்வதற்குத் தேவையான விறகுகளைச் சேகரிப்பதும், அதற்கான மேடையை அமைப்பதும் பெரும் சுமையாக இருந்தது. மேலும் தோட்டங்களில் மயானங்கள் பெரும்பாலும் தேயிலை அல்லது ரப்பர் மலைகளின் ஒதுக்குப்புறப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்தன. அங்கு காற்றின் திசையினால் தீ விபத்து அபாயமும் இருந்தது. மலைப்பாங்கான பகுதிகளில் காற்று வேகமாக வீசும். எரியும் சிதையிலிருந்து வெளிப்படும் பொறிகள் அருகிலுள்ள காய்ந்த தேயிலைச் செடிகளிலோ அல்லது ரப்பர் மரங்களிலோ பட்டால் பெரும் தீ விபத்து ஏற்படும்

அபாயம் இருந்தது. ஆகவே பிணங்களை எரிப்பதைக் காட்டிலும் புதைப்பதே பாதுகாப்பானதும் எளிமையானதும் எனக் கருதப்பட்டது.

மேலும், லயக் குடியிருப்புகளிலிருந்து வெகு தொலைவில், மலைகளின் உச்சியிலோ அல்லது சரிவுகளிலோதான் மயானங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவ்வளவு தூரத்திற்கு விறகுகளைச் சுமந்து செல்வது உடல் ரீதியாகவும் கடினமான பணியாக இருந்தது. அத்துடன் மழைக்காலச் சவால்களும் இருந்தன. மலையகத்தில் வருடத்தின் பெரும்பகுதியில் மழை பெய்யும். மழையில் நனைந்த விறகுகளைக் கொண்டு பிரேதத்தை எரிப்பது மிகவும் சிரமமான காரியம். பல மணிநேரம் உடல் எரியாமல் காத்திருக்க வேண்டிய சூழலைத் தவிர்க்க புதைக்கும் முறையே ஏற்றதாகக் கருதப்பட்டது. புதைக்கும் முறை வழக்கத்திற்கு வந்தபிறகு அதற்கெனத் தனித்துவமான சில சடங்குகள் உருவாகின.

அதில் முதலாவது குழி தோண்டுதல்; மயானத்தில் குழி தோண்டுவது என்பது ஒரு கூட்டுப் பணியாகும். இறந்தவரின் தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் முன்வந்து இந்தப் பணியைச் செய்வார்கள். இது ஒரு ‘சமூகக் கடமையாக’ப் பார்க்கப்பட்டது. கடினமான பாறை நிலங்களை உடைத்து ஆழமான குழிகளை உருவாக்குவது அவர்களின் ஒற்றுமையைப் பறைசாற்றியது. “மண்ணில் உழைத்தவன் மண்ணுக்கே திரும்புகிறான்” என்ற தத்துவம் இவர்களின் புதைக்கும் முறையில் ஆழமாகப் பதிந்துள்ளது. தேயிலைச் செடிகளுக்கு நடுவே அல்லது ரப்பர் மரங்களுக்குக் கீழே தங்களின் முன்னோர்கள் புதைக்கப்படுவதால், அவர்கள் இன்றும் தங்களோடு ஆவியாக வாழ்கிறார்கள் என்று தொழிலாளர்கள் நம்புகின்றனர்.

பிரேதம் இல்லத்திலிருந்து மயானத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட பிறகு அங்கே சில முக்கியக் கிரியைகள் நிகழ்த்தப்படுகின்றன.

ஈமக்கிரியைகள்: குழியின் நான்கு மூலைகளிலும் காசுகள் மற்றும் சில தானியங்களை வைப்பார்கள். இது அந்த நிலத்தின் தெய்வத்திடம் (பூமித்தாய்) இடத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு குறியீடாகக் கருதப்படுகிறது.

மண் போடுதல்: முதலில் நெருங்கிய உறவினர்கள் (ஆண் பிள்ளைகள் அல்லது பங்காளிகள்) மூன்று கை மண் எடுத்துக் குழியில் போடுவார்கள். இது அந்த ஆன்மாவுடனான பௌதிக உறவை முறித்துக் கொள்வதைக் குறிக்கும். பின்னர் மயானத் தொழிலாளர்கள் அல்லது ஊர் இளைஞர்கள் இணைந்து குழியை மூடுவார்கள்.

புதைக்கும் வழக்கத்திலும் கூட, தகனம் செய்யும் சடங்கின் எச்சமாகக் ‘கொள்ளி வைத்தல்’ போன்ற சில அடையாளச் சடங்குகள் நடைபெறும்.

மண்பானை உடைத்தல்: மகன் அல்லது தம்பி தலையில் மண்பானையைச் சுமந்து குழியைச் சுற்றிவந்து பின்னர் அதை உடைப்பார். இது “உடல் மண்ணுக்கு, உயிர் இறைவனுக்கு” என்ற தத்துவத்தின் வெளிப்பாடாகும்.

அடக்கம் செய்து முடித்த பின், குழியின் மேல் தலைப்பகுதியில் அகல் விளக்கு ஏற்றி வைத்தோ அல்லது இறந்தவருக்குப் பிடித்த உணவைப் படைத்தோ வழிபடுவார்கள்.

மேலும் நினைவுச் சின்னங்கள் என்று நோக்கும் போது, சுமைதாங்கி மற்றும் நடுகற்கள் வைக்கும் வழக்கமும் காணப்படுகின்றது. தோட்டப்புறங்களில் காணப்படும் ‘சுமைதாங்கிகள்’, குறிப்பாகப் பிரசவத்தின் போது இறக்கும் பெண்களின் நினைவாக அமைக்கப்படுகின்றன. தேயிலை மலைகளில் சுமை தூக்கி வருபவர்கள் தங்கள் சுமையைத் தற்காலிகமாக இறக்கி வைக்க இவை உதவுகின்றன. தான் சுமந்த சுமையை (கருவை) இறக்கி வைக்க முடியாமல் போனவள், பிறர் சுமையைத் தாங்குகிறாள் என்ற உயரிய நோக்கம் இதன் பின்னால் உள்ளது.

பெரிய கங்காணிகள் அல்லது சமூகப் பெரியவர்களுக்குச் சீமெந்து மேடைகள் கட்டி, அதில் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கத்தைப் பொறித்து வைப்பார்கள். இவை அந்தத் தோட்டத்தின் வரலாற்றைச் சொல்லும் ஆவணங்களாகக் கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு தோட்டப்புற மரணச்சடங்குகள், தனிப்பட்ட ஒரு குடும்பத்தின் நிகழ்வாகச் சுருங்கிவிடாமல், ஒட்டுமொத்தத் தோட்டத்தின் ‘கூட்டுச் செயற்பாடாக’ (Collective Action) அமைகிறது. சவப்பெட்டி வாங்குவது முதல், மயானத்தில் குழி தோண்டுவது, சமையல் செய்வது என அனைத்துப் பணிகளும் பகிரப்படுகின்றன.

‘மொய்’ எழுதும் பழக்கம், துக்கத்தில் இருக்கும் குடும்பம் பொருளாதார ரீதியாக நசுங்கிவிடாமல் இருக்க ஒரு தற்காலிகப் பாதுகாப்பை வழங்குகிறது.

புதைத்து முடிந்ததும், மயானத்தின் அருகில் கட்டப்பட்டிருக்கும் ஒன்றுகூடல் மடத்தில் அல்லது ஓர் இடத்தில் மரண சமூர்த்தி அமைப்பினரும் ஊர்ப் பெரியவர்களும் கூடி அந்த இறந்த வீட்டின் கணக்குகளை முடிப்பார்கள். சடங்கு நிகழ்த்திய நாவிதர் மற்றும் வண்ணாருக்கான சம்பளம்

கொடுக்கப்பட்டு, என்னென்ன வரவு வந்தது, செலவு எவ்வளவு என்பதனைக் கணக்கிட்டு, மீதிப் பணத்தை குடும்ப உறுப்பினர்களில் ஒருவரிடம் ஒப்படைப்பர்.

இறுதியாகக் குடும்ப உறுப்பினர்கள் வரிசையாக நின்று வந்த அனைவருக்கும் நன்றி சொல்லும் விதமாகக் கைகளைப் பிடித்து வணங்கி விடைகொடுப்பார்கள்.

## இறந்தவரை அடக்கம் செய்த பின்னர் செய்யப்படும் சடங்குகள்

புதைகுழியிலிருந்து வீட்டிற்கு வருவதற்குள், வீடு முழுவதும் நீரால் கழுவப்படும். வீட்டின் வெளிப்புறத்தில் ஒரு பாத்திரத்தில் மஞ்சள் நீர் வைக்கப்படும். கதவின் வாசலில் உலக்கை குறுக்காக இடப்பட்டு, வெற்றிலையில் சாம்பலும் வைக்கப்பட்டிருக்கும். புதைகுழியில் இருந்து வருபவர்கள் தண்ணீரில் கால், கைகளைக் கழுவி, தண்ணீரை உடலில் தெளித்துக் கொண்டு, வெற்றிலையில் உள்ள சாம்பலை நெற்றியில் பூசிக்கொண்டு, உலக்கையைத் தாண்டி உள்ளே வருவார்கள். அன்றைய நாள் மாமன்மார்களால் ‘சலிப்புச் சோறு’ அல்லது ‘துக்கச் சோறு’ எனப்படும் ஒரு உணவளிப்பு முறை செய்யப்படும். அதில் இறந்த வீட்டில் உள்ள அனைவரும் அமர்ந்து உணவருந்துவார்கள்.

இறந்து மூன்று நாட்களை அடையும் போது ‘மூன்றாம் குழி மூடல்’ நடைபெறும். ‘மூன்றாம் குழி மூடல்’ என்பது இறந்தவரின் மூன்றாம் நாளில் நடைபெறும் முக்கியமான சடங்காகும். அன்றைய தினம் தென்னை ஓலை கொண்டு வந்து பின்னி ‘பாடை’ தயாரிக்கப்படுகிறது. பின்னப்பட்ட பாடையையும், குரும்பை போன்ற பொருட்களையும் எடுத்துக் கொண்டு சுடுகாட்டிற்குச் செல்வர். பிரேதம் எரிக்கப்பட்டிருந்தால், ‘உச்சந்தலை’ ஓடைத் தேடி எடுத்து ஒரு தகரத்தில் போட்டு மூடி வைப்பர்; மீதமுள்ள சாம்பலைச் சாக்கில் சேகரிப்பர். பின்னர் அந்த இடத்தில் கற்களை அடுக்கி சிறிய மேடையை அமைப்பர். அதன் மேல் அம்பட்டன் கையால் ஒரு உருவம் வரைவார். உருவத்தின் தலைமாட்டில் ஒரு கல்லை வைத்து சாம்பிராணி, கற்பூரம் காட்டி வழிபாடு செய்வர். அந்தக் கல்லின் அருகில் வெற்றிலை, இளநீர், புதிய பானையில் தண்ணீர் ஆகியவை வைக்கப்படும். நான்கு தடியை ஊன்றி மேலே பாடை கட்டுவர். மேலும் தலைமாட்டில் தென்னை, மா, பலா அல்லது கரும்பு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை நட்டுவிட்டு வீடு திரும்புவர்.



இறந்தவரின் நினைவாக நடப்பட்டிருக்கும் நினைவுக்கல்

இறந்த தினத்திலிருந்து எட்டு நாட்களுக்குப் பின்னர் ‘எட்டுக் காரியம்’ நடைபெறும். இறந்த நாளில் இறந்தவரின் கையில் பதித்து எடுக்கப்பட்ட ‘சீதேவி’ எனப்படும் பாலிகையை மையமாகக் கொண்டு இந்தச் சடங்கு நடத்தப்படுகிறது. எட்டாம் நாள் அதிகாலையில் கொள்ளிக்குடம் உடைத்தவர் குளித்து, பாலிகைக்கு நீர் தெளித்துக் கொண்டு வருவார். பின்னர் பாலிகைச் சட்டிக்குப் பூமாலை அணிவிக்கப்படும்.

அரிசிச் சுண்டிலிருந்து அரிசி எடுத்து, ஈர்க்குக் குச்சியில் வெற்றிலையைச் செருகிக் குற்றி வைப்பர்; இதனை ‘நிறைநாழி’ என அழைப்பர். அதன் பக்கத்தில் செம்பில் நீர் எடுத்து, அதன் மேல் தேங்காய் வைத்து, பூமாலை அணிவித்து, நூல் சுற்றி, மீதியுள்ள நூலைச் சுவரில் ஆணி அடித்துக் கட்டுவர். இறந்தவர் அந்த நூலில் ஏறிச் செல்கிறார் என்ற நம்பிக்கை நிலவுகிறது. அருகில் இறந்தவர் பயன்படுத்திய பொருட்களும் வைக்கப்படும்.

பெண்கள் அங்கு அமர்ந்து அழுது கேதம் காணுவர். பாலிகைக்கு அருகில் பலா இலையால் தைக்கப்பட்ட மூன்று இலைகள் போடப்பட்டு, அதில் பலகாரங்கள் மற்றும் பழவகைகள் வைக்கப்படும். இரண்டு இளநீர், பால் ஆகியவையும் வைக்கப்பட்டு ‘லட்சுமி விளக்கு’ ஏற்றப்படும்.

பின்னர் வெளியில் வண்ணானை மாற்று விரிக்கச் சொல்லி, மாமன் உறவினர்களை அமர அழைப்பார். எட்டுக் காரியத்தை நடத்த உத்தரவு கோரப்படும். “வந்து விட்டார்களா?” என்று கேட்க, “வந்தும் வராமலும் இருக்கின்றனர்” என்று பதிலளிப்பர்.

பின்னர் மாமன், மச்சினன் ஆகியோர் தண்ணீர்

வாளியை முன்னே வைத்து, "எடுத்த வழி, கொடுத்த வழி, கையைக் கழுவிவிட்டு வந்து தண்ணீர் சிலாவுங்கள்" என்று கூறுவர். உறவினர்கள் கைகளைக் கழுவி வந்து தண்ணீர் சிலாவுவர்; பின்னர் அனைவரும் அதனைத் தொடர்ந்து செய்வர். கொள்ளிக்குடம் உடைத்தவர் இறுதியாகத் தண்ணீர் சிலாவுவார்.

படையலை மூன்றாகப் பிரித்து, மூன்று இலையில் இளநீருடன் ஒன்று வண்ணானுக்கும், ஒன்று அம்பட்டனுக்கும், நடுவிலுள்ளது வீட்டிற்குமாகப் பிரிக்கப்படும். பின்னர் பலா இலையால் செய்யப்பட்ட மூன்று தொன்னைகள் கொண்டுவரப்பட்டு, அதிலுள்ள அவித்த உணவில் ஒன்று அம்பட்டனுக்கும், ஒன்று வண்ணானுக்கும் வழங்கப்படும். மீதியுள்ள தொன்னையை வாசலில் வைத்து "மாமன் மச்சினன் உருமாக் கட்டிக்கொள்ளுங்கள்" என்று கூறி, அதில் தண்ணீர் ஊற்றிவிடுவர். கொள்ளி வைத்தவர் பாலிகையைத் தூக்கிக்கொண்டு, மேல் வேட்டியை விரித்துப் பிடித்தபடி ஆற்றோரம் சென்று பாலிகையை வைத்துக் குளித்துவிட்டு வீடு திரும்புவார். பின், அனைவரும் விளக்கைப் பார்த்துக் கும்பிடுவர். பாலிகை எவ்வாறு முளைத்துள்ளது என்பதன் அடிப்படையில் நன்மை - தீமை கணிக்கப்படும்; நன்றாக முளைத்திருந்தால் நல்லதெனவும், இல்லையெனில் தீமையெனவும் நம்புவர்.

'கருமாதிச் சடங்கு' பொதுவாக முப்பத்தோராம் நாளில் நடைபெறும்; சில இடங்களில் பதினாறாம் நாளில் நடைபெறுகிறது. முதல் நாள் இரவு, இறந்தவருக்குப் பிடித்த உணவுகள் மூன்று நேரம் படைக்கப்படும். பின்னர் 'மாரடித்து அழுதல்' எனும் சடங்கு நடைபெறும்; இது மார்பில் தட்டிக்கொண்டு அழுதலாகும்.

அடுத்த கட்டச் சடங்குகள் ஆற்றோரத்தில் அம்பட்டன், வண்ணான் ஆகியோரின் உதவியுடன், குறிப்பாகப் பெண்கள் மூலம் நடத்தப்படும். இறந்தவரின் நினைவாக ஒரு கல் ஆற்றோரத்தில் ஊன்றப்படும். அந்தக் கல்லைச் சுற்றிப் பந்தல் அமைத்து, வாழைமரமும் கட்டப்படும். பின்னர் சங்கை ஊதியவாறு அந்தக் கல்லை வீட்டிற்குக் கொண்டுவருவர்.

இறுதியில் மொட்டை அடிக்கும் சடங்கு நடைபெறும். தந்தை இறந்திருந்தால் தலைமகனுக்கும், தாய் இறந்திருந்தால் கடைசி மகனுக்கும் மொட்டை அடிக்கப்படும்.

இத்துடன் இச்சடங்கு முறை நிறைவுபெறுவதில்லை; அது ஒரு வருடத்திற்குப் பின்னர் 'திவசம்' எனப்படும் சடங்கின் மூலம் தொடர்கிறது. திவசம் தொடர்பிலும், அதற்காகச் செய்யப்படும் 'இறந்தவரை வீட்டுக்கு அழைத்தல்' எனும் வித்தியாசமான சடங்கு பற்றியும் அடுத்து வரும் கட்டுரையில் விரிவாக நோக்குவோம்.

### உசாத்துணை நூல்கள்


1. சிவத்தம்பி, க. (1993). இலங்கை மலையகத் தமிழர் பண்பாடும் கருத்து நிலையும். கொழும்பு: உதயம் நிறுவனம்.

2. சிவரத்தினம், சு. (2008). சடங்குகளினூடாக மட்டக்களப்பு. மட்டக்களப்பு: விபுலம் பதிப்பகம்.

3. சோமசுந்தரம், அ. (ஆண்டு குறிப்பிடப்படவில்லை). இந்து வாழ்வியல் சடங்குகள்.

4. தருமராஜன், டி. (2006). சனங்களின் சாமிகள். தமிழ்நாடு, இந்தியா: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.

5. தர்ஸ்டன், எட்கர். (2025). தென்னிந்திய ஈமச் சடங்குகள் (மொழிபெயர்ப்பு: வானதி). சென்னை: சுவாசம் பதிப்பகம்.

6. பக்தவத்சல பாரதி. (2012). மானிடவியல் கோட்பாடுகள். சென்னை: அடையாளம் வெளியீடு.

7. மௌனகுரு, சி. (1988). சடங்கிலிருந்து நாடகம் வரை. யாழ்ப்பாணம்: நாகலிங்கம் நூலாலயம்.

8. வேல்முருகு, ந. (1993). மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும். வாசகர் பதிப்பகம்.


### சஞ்சிகைகள்


1. குன்றின் குரல். (1993). ஆண்டு 12, இதழ் 03 (ஜூலை-செப்டம்பர்), பக். 19-20.

2. குன்றின் குரல். (1994). ஆண்டு 13, இதழ் 01 (ஜனவரி-மார்ச்), பக். 19-20.

3. நட்புறவுப் பாலம். (1987). இதழ் 12 (செப்டம்பர்), பக். 14-16.

4. நாவலப்பிட்டி பிரதேச சாகித்திய விழா மலர். (1993, ஆகஸ்ட்). பக். 25-27.

5. பண்பாடு. (1992). இதழ் 02 (செப்டம்பர்), பக். 30-56.


(தொடரும்)

# 1983 – 1991: உச்சமடைந்த இனப்படுகொலைகளும் ஈழப்போரின் பிராந்தியப் பரிமாணமும்

பகுதி I

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது


## சி. அ. யோதிலிங்கம்



சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார். 'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

இக்காலகட்டம் 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனவழிப்போடு ஆரம்பமாகி 1991 ஆம் ஆண்டு இடம்பெற்ற ராஜீவ் காந்தி படுகொலையுடன் நிறைவடைகிறது. இக்காலகட்டத்தில் இலங்கை மட்டத்தில் இருந்த தமிழர்கள் பிரச்சினை பிராந்திய மட்டத்திற்குச் சென்றது. பனிப்போரின் தாக்கம் காரணமாக ஆயுதப்போராட்ட இயக்கங்களுக்கு இந்தியா ஆயுத உதவிகளையும் ஆயுதப் பயிற்சிகளையும் பின்தள வசதிகளையும் செய்து கொடுத்தது. இலங்கையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கம் அமெரிக்காவுடன் அதிகளவு நட்புக்கொண்டது. அமெரிக்காவின் ஆதிக்கம் இலங்கையில் வளர்வதற்கான களத்தையும் திறந்துவிட்டது. ஆயுத இயக்கங்களுக்கு இந்தியா உதவி செய்தமைக்கு இதுவே பிரதான காரணமாகும். தமிழ்நாட்டு மக்களின் அழுத்தமும் துணைக்காரணமாக அமைந்திருந்ததெனலாம்.

## 1983 இனக்கலவரம்

1983 யூலை 23 இரவு 11:30 மணியளவில், தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் நகருக்கு அருகில் உள்ள திருநெல்வேலியில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத் தொடரணி மீது பதுங்கியிருந்து தாக்குதலை நடத்தினர். வாகனத் தொடரணியை வழிநடத்திச் சென்ற ஜீப்பின் அடியில் சாலையோரக் வெடிகுண்டு வெடிக்கப்பட்டது. இதன்போது குறைந்தது இரண்டு இராணுவத்தினர் காயமடைந்தனர். அதன் பின்னால் வந்த வாகனத்தில் இருந்த இராணுவத்தினர் தங்கள் சக வீரர்களுக்கு உதவக் கீழே இறங்கினர். அவர்கள் மீது பதுங்கியிருந்த போராளிகள் தானியங்கி ஆயுதங்கள், கைக்குண்டுகள் கொண்டு தாக்குதல் நடத்தினர். தொடர்ந்து நடந்த மோதலில், ஓர் அதிகாரியும் பன்னிரண்டு இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடத்தப்பட்டதை புலிகளின் பிராந்தியத் தளபதி கிட்டு ஒப்புக்கொண்டார். விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவரான சீலன் என்ற சாள்ஸ் அந்தோனியை இலங்கைப் படைகள் கொன்றதற்கும் அரசுப் படைகளால் தமிழ்ப் பள்ளிச் சிறுமிகள் கடத்தப்பட்டு வன்புணர்வு செய்யப்பட்டதற்கும் பழிவாங்கும் நடவடிக்கையாக இந்தத் தாக்குதல் விவரிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலைத் தொடர்ந்து இனக்கலவரம் ஆரம்பமானது.

1983 யூலை 24 இரவு, தலைநகர் கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான கலவரம் தொடங்கியது. பின்னர் நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவியது. ஏழு நாட்களாக, முக்கியமாக சிங்களக் கும்பல்கள் தமிழரைத் தாக்கினர். உயிருடன் எரித்தனர். படுகொலைகளைப் புரிந்தனர். உடைமைகளைக் கொள்ளையடித்தனர். இவ்வினப்படுகொலைகளின் விளைவாக இலங்கைத் தமிழர்கள் பலர் அடுத்தடுத்த ஆண்டுகளில் வெவ்வேறு நாடுகளுக்குத் தப்பிச் சென்றனர். மேலும் ஏராளமான தமிழ் இளைஞர்கள் போராளிக் குழுக்களில் சேர்ந்தனர். இது கறுப்பு யூலை என இன்றும் நினைவுகூரப்படுகிறது. யூலை மாதம் உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் ஈழத்தமிழரின் நினைவு மாதமாக உள்ளது. கனடா, சுவிட்சர்லாந்து, நோர்வே, டென்மார்க், ஜெர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உட்பட பல உலக நாடுகளில் இது நினைவுகூரப்பட்டு வருகிறது.

## இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகை

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி யூலை 28 அன்று ஜெயவர்த்தனாவை தொலைபேசியில் அழைத்துக் கலவரம் இந்தியாவில் ஏற்படுத்திய தாக்கத்தை அவருக்குத் தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சர் பி.வி. நரசிம்மராவை தனது சிறப்புத் தூதராக ஜெயவர்த்தனே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். ஜெயவர்த்தனா அதனை ஏற்றுக்கொண்ட சில மணிநேரங்களுக்குப் பிறகு நரசிம்ம ராவ் இலங்கைக்கு வந்தார். இந்திய வெளிவிவகார அமைச்சர் நரசிம்ம ராவ் உலங்குவானூர்தியில் கண்டிக்குச் செல்வதற்கு முன்னர் அரசுத்தலைவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். அமீது ஆகியோருடன் கலந்துரையாடினார்.

## இனக்கலவர விளைவுகள்

யூலை 29 வெள்ளிக்கிழமை கொழும்பு அமைதியாக இருந்தது. நகரத்தில் உள்ள பல அகதி முகாம்களில் தஞ்சமடைந்த நண்பர்கள் மற்றும் உறவினர்களை தமிழ் மக்கள் பார்வையிட்டனர். காலை 10:30 மணியளவில் புறக்கோட்டைப் பகுதியில் இரண்டு சிங்கள இளைஞர்கள் சுடப்பட்டனர். அடம் அலி கட்டடத்தில் இந்த இளைஞர்கள் தமிழ்ப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாக வதந்திகள் பரவ ஆரம்பித்தன. கட்டடம் இராணுவம், கடற்படை மற்றும் காவல்துறையினரால் சூழப்பட்டது. அவர்கள் கட்டடத்தின் மீது துணை இயந்திரத் துப்பாக்கிகளினால் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஓர் உலங்குவானூர்தியும் கட்டடத்தின் மீது சுட்டது. பாதுகாப்புப் படையினர் கட்டடத்திற்குள் நுழைந்தபோது உள்ளே தமிழ்ப் புலிகள் எவரும் இருக்கவில்லை; ஆயுதங்கள் அல்லது வெடிமருந்துகள் எதுவும் கிடைக்கவில்லை. எனினும், இராணுவம் தமிழ்ப் புலிகளுடன் போரில் ஈடுபட்டதாக

கொழும்பில் வதந்திகள் பரவ ஆரம்பித்தன. புலிகளை எதிர்த்துப் போரிடத் தயாராகக் கோடரிகள், செங்கல்கள், இரும்புக் கம்பிகள், கத்திகள் மற்றும் கற்கள் போன்ற ஆயுதங்களுடன் தெருக்களில் கும்பல்களாக சிங்கள மக்கள் கூடத் தொடங்கினர். வாகனங்களை நிறுத்தித் தமிழர்களைத் தேடினர். அவர்கள் கண்டறிந்த தமிழர்கள் தாக்கப்பட்டுத் தீவைக்கப்பட்டனர். கிருள வீதியில் ஒரு தமிழர் உயிருடன் எரிக்கப்பட்டார். அத்திடிய வீதியில் பதினொரு தமிழர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். இரண்டு தமிழர்களினதும் மூன்று முஸ்லிம்களினதும் சடலங்கள் இருந்த ஒரு வாகனத்தை அதே வீதியில் காவல்துறையினர் கண்டுபிடித்தனர். 15 கலவரக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். யூலை 29 பிற்பகல் 2 மணிக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஆகஸ்ட் 1 திங்கள் காலை 5 மணிக்கு நீக்கப்பட்டது.



யூலைக் கலவரத்தின் போது

Image Source - tamilnation.org

பதுளை, கண்டி, திருகோணமலை நகரங்கள் அன்று அமைதியாகக் காணப்பட்டன. நுவரெலியாவில் நள்ளிரவு முதல் வன்முறை பரவியது. தமிழருக்குச் சொந்தமான கணேசன் மற்றும் சிவலிங்கம் என்போரின் கடைகள் தாக்கப்பட்டுத் தீவைக்கப்பட்டன. இது சந்தைத் தெரு, லாசன் வீதி ஆகிய இடங்களுக்கும் பரவியது. கேகாலை மாவட்டத்தில் தெகியோவிட்ட முதல் தெரணியகல, அவிசாவளை வரை வன்முறை பரவியது. மாத்தறை மாவட்டத்தில் தெனியாய மற்றும் மொரவாக்க பிரதேசங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டன. சிலாபத்திலும் வன்முறைகள் இடம்பெற்றன.

இறப்பு எண்ணிக்கை 400 முதல் 3,000 வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டது. 150,000 பேர் வீடற்றவர்களாயினர். ஏறத்தாழ 8,000 வீடுகளும் 5,000 வணிக நிறுவனங்களும் அழிக்கப்பட்டன. இக்கலவரத்தின் போது ஏற்பட்ட மொத்தப் பொருளாதாரச் செலவு 300 மில்லியன் என மதிப்பிடப்பட்டது. பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணையம் என்ற அரசுசார்பற்ற அமைப்பு 1983 டிசம்பரில் வெளியிட்ட அறிக்கையில் இப்படுகொலைகளை ஓர் இனப்படுகொலை என்று விவரித்தது.

யூலை 30 அன்று நுவரெலியா, கந்தப்பளை, காவ எலிய, மாத்தளை ஆகிய இடங்களில் வன்முறைகள் இடம்பெற்றன. நாட்டின் ஏனைய பகுதிகளில் அமைதி நிலவியது. வன்முறைகளைத் தூண்டியமைக்காக அதே நாள் இரவில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, நவ சமசமாஜக் கட்சி ஆகிய மூன்று இடதுசாரிக் கட்சிகளுக்கு அரசு தடை விதித்தது. ஏனைய குழுக்களைச் சேர்ந்த சில தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

போராடுவதற்கும் தமிழ்ச் சமூகத்தைப் பாதுகாப்பதற்கும் ஆரம்பக் கட்டங்களிலிருந்தே முக்கிய எதிர் நடவடிக்கைகளை எடுத்ததாக அரசாங்கம் கூறி வந்தது. அரசாங்கத்தின் கூற்றுப்படி, தாக்குதல்கள் கவனமாக ஒழுங்கமைக்கப்பட்டன. தொடருந்துகள், கட்டடங்கள் மற்றும் பேருந்துகள் போன்றவை ஆரம்ப இலக்குகளாக இருந்தன. கொழும்பில் உள்ள வீடற்ற 20,000 தமிழர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வழங்குவதற்கு பிரதமர் ரணசிங்க பிரேமதாசா ஒரு குழுவை அமைத்தார். இந்தத் தற்காலிகத் தங்குமிடங்கள் ஐந்து பள்ளிக்கூடக் கட்டடங்களும் ஒரு விமானத் தங்குமிடமும் ஆகும். அகதிகளின் எண்ணிக்கை சுமார் 50,000 ஆக அதிகரித்த பின்னர், அரசாங்கம் இந்தியாவின் உதவியுடன் தமிழர்களை வடக்கே கப்பல்களில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தது.

### வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகள்

1843 ஆம் ஆண்டு பிரித்தானியரால் சகல பாதுகாப்புகளுடனும் கட்டப்பட்டதே வெலிக்கடைச் சிறைச்சாலை ஆகும். ஜூலைக் கலவரத்தின் போது இந்தச் சிறைச்சாலைக்குள் வைத்தே தமிழ் அரசியல் கைதிகள் 53 பேர் சிங்களச் சிறைக்கைதிகளினாலும் சிறைக்காவலர்களினாலும் கொல்லப்பட்டனர். வெலிக்கடைச் சிறைப் படுகொலையில் கொலை செய்யப்பட்ட முக்கிய தலைவர்களான குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்கள் தங்கி இருந்த B3 என்னும் சிறைப் பிரிவிலேயே கொலைகள் ஆரம்பித்தன.

இப்படுகொலை நிகழ்வு இரண்டு வெவ்வேறு நாட்களில் நடைபெற்றது. இரண்டும் கொழும்பில் அதியுயர் பாதுகாப்புச் சிறைச்சாலையான வெலிக்கடையில் இடம்பெற்றன. முதலாவது படுகொலை ஜூலை 25, 1983 அன்று இடம்பெற்றது. இதில் 35 தமிழ்க் கைதிகள் சக சிங்களக் கைதிகளினால் கத்தி, வாள் மற்றும் பொல்லுகளால் குத்திக் கொல்லப்பட்டனர். இரண்டாவது நிகழ்வு இரண்டு நாட்களின் பின்னர் ஜூலை 27 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் 18 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். மயில்வாகனம் எனும் பெயருடைய 15 வயது சிறுவன் தளபாடத்தின் பின்னால் ஒளிந்திருந்தான். அவனை சிறைக்காவலர் ஒருவர் இழுத்து வெட்டிக்கொலை செய்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையானது A, B, C, D என நான்கு குறுக்கு வடிவில் அமைக்கப்பட்ட பிரிவுகளைக் கொண்டது. இவற்றில் A3, B3, C3 மற்றும் D3 என்பன சிறைச்சாலையின் கீழ்ப் பகுதியில் உள்ளன. B3, C3 மற்றும் D3 இல் இருந்தவர்கள் அனைவரும் தமிழ் அரசியல் கைதிகளாவர். A3 இல் இருந்தவர்கள் அனைவரும் பயங்கரக் குற்றங்கள் சுமத்தப்பட்ட சிங்களக் கைதிகள். இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலங்களின் படி, சிறைச்சாலை அதிகாரிகளே அறைக்கதவுகளின் திறப்புகளை சிங்களக் கைதிகளுக்குக் கொடுத்ததாகத் தெரிவித்தனர். ஆனால் சிறை அதிகாரிகள், சிங்களக் கைதிகள் தம்மிடமிருந்து திறப்புகளைக் களவெடுத்ததாகத் தெரிவித்தனர்.

வெலிக்கடைச் சிறையின் B3 பிரிவிலும் D3 பிரிவிலும் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி கொல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் பெயர்கள்:

1. தங்கத்துரை எனப்படும் நடராசா தங்கவேல்
2. குட்டிமணி எனப்படும் செல்வராசா யோகச்சந்திரன்
3. ஜெகன் எனப்படும் கணேசானந்தன் ஜெகநாதன்
4. தேவன் எனப்படும் செல்லத்துரை சிவசுப்பிரமணியம்
5. சிவபாதம் மாஸ்டர் எனப்படும் நவரத்தினம் சிவபாதம்
6. செனட்டர் எனப்படும் வைத்திலிங்கம் நடேசுதாசன்
7. அருமைநாயகம் எனப்படும் சின்னராஜா அல்லது செல்லத்துரை ஜெயரட்ணம்
8. அன்ரன் எனப்படும் சிவநாயகம் அன்பழகன்
9. ராசன் எனப்படும் அரிய புத்திரன் பாலசுப்ரமணியம்
10. சுரேஸ் மாஸ்டர் எனப்படும் காசிப்பிள்ளை சுரேஸ் குமார்
11. சின்னத்துரை அருந்தவராஜா
12. தேவன் அல்லது அரபாத் எனப்படும் தனபாலசிங்கம் தேவகுமார்
13. மயில்வாகனம் சின்னையா
14. சித்திரவேல் சிவானந்த ராஜா
15. கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
16. தம்பு கந்தையா
17. சின்னப்பு உதயசீலன்
18. கணேஸ் அல்லது கணேஸ்வரன் எனப்படும் கதிர்வேற்பிள்ளை ஈஸ்வரநாதன்
19. கிருஸ்ணபிள்ளை நாகராஜா
20. கணேஸ் எனப்படும் கணபதி கணேசலிங்கம்
21. அம்பலம் சுதாகரன்
22. இராமலிங்கம் இராமச்சந்திரன்
23. பசுபதி மகேந்திரன்
24. கண்ணன் எனப்படும் காசிநாதன் தில்லைநாதன்
25. குலம் எனப்படும் செல்லப்பா குலராய சேகரம்
26. மோகன் எனப்படும் குமாரசாமி உதயகுமார்
27. ராஜன் எனப்படும் சுப்ரமணியம் சிவகுமார்
28. சாந்தன் எனப்படும் சிற்றம்பலம் சாந்தகுமார்
29. வேலுப்பிள்ளை சந்திரகுமார்
30. அழகராச ராஜன்
31. அந்தோணிப்பிள்ளை உதயகுமார்
32. அமுதன் அல்லது அவுடா எனப்படும் ஞானசேகரன் அமிர்தலிங்கம்
33. யோகன் எனப்படும் ராயயோகநாதன்
34. கொழும்பான் எனப்படும் கருப்பையா கிருஸ்ணகுமார்
35. ராஜன் கோதண்டபிள்ளை தவராயலிங்கம்

முப்பத்தைந்து பேர் கொல்லப்பட்டு ஒரு நாள் கழிந்து 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி, அடுத்த கொலைகள் நிறைவேறின. அன்று கொல்லப்பட்ட ஈழ விரும்பிகளின் பெயர்கள்:

1. செல்லச்சாமி குமார்
2. கந்தசாமி சர்வேஸ்வரன்
3. மரியாம்பிள்ளை மரியநாயகம்
4. சிவபாதம் நீதிராஜா

5. ஞானமுத்து நவரத்தினசிங்கம்
6. கந்தையா ராஜேந்திரம்
7. தெய்வநாயகம் பாஸ்கரன்
8. பொன்னம்பலம் தேவகுமார்
9. பொன்னையா துரைராசா
10. முத்துக்குமார் சிறீகுமார்
11. அமிர்தநாயகம் பிலிப் குமாரகுலசிங்கம்
12. குமாரசாமி கணேசலிங்கன்
13. டாக்டர் இராஜசுந்தரம்
14. செல்லப்பா இராஜரட்ணம்
15. சோமசுந்தரம் மனோரஞ்சன்
16. ஆறுமுகன் சேயோன்
17. தாமோதரன் பிள்ளை ஜெயமுகுந்தன்
18. சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்

கொழும்பு புதிய மகசீன் சிறையில் இருந்த ஈழப்போராளிகள் யாருக்கும் எந்தவிதப் பிரச்சினையும் ஏற்படவில்லை. வெலிக்கடைச் சிறையில் இரு நாட்கள் நடந்த கொலையில் இருந்து தப்பிய பத்தொன்பது ஈழப் போராளிகளின் பெயர்கள்:

1. அந்தோணிப்பிள்ளை
2. மாணிக்கம் தாசன்
3. கணேசலிங்கன்
4. சிறீதரன்
5. டக்ளஸ் தேவானந்தா
6. தம்பாப்பிள்ளை மகேஸ்வரன்
7. சிவசுப்பிரமணியம்
8. ஞானசேகரம் எனப்படும் பரந்தன் ராஜன்
9. பாபுஜி
10. டேவிட் ஐயா எனப்படும் அ. டேவிட்
11. வண. குரு சின்னராஜா
12. கோவை மகேசன்
13. ஜெயகுலராஜா
14. மு. நித்தியானந்தன்
15. ஜெயதிலக ராஜா
16. டாக்டர் தர்மலிங்கம்
17. வண. பிதா சிங்கராயர்
18. யோகா எனப்படும் யோகராஜா
19. விவரம் தெரியாது

## மட்டக்களப்புச் சிறைச்சாலைத் தகர்ப்பு

1983 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி இரவு மட்டக்களப்புச் சிறை போராளிகளால் உடைக்கப்பட்டு, அங்கு சிறைவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளில் 50 பேர் மீட்கப்பட்டனர். இச்சிறை உடைப்பிற்கு சிறைக்குள் இருந்த ஈழப் போராளிகளும் முக்கியமாக உதவினர். குறிப்பிட்ட நேரத்தில் சிறையை உடைக்க வசதியாக உபகரணங்களை உள்ளே அனுப்பியது மட்டுமல்லாது, தப்பி வெளியே வந்த போராளிகளை உடனுக்குடன் படகுகளிலும் வாகனங்களிலும் குழுக்களாகப் பிரித்து அனுப்புவதில் போராளிகள் காட்டிய திறமை அளப்பரியது.

1. அ. டேவிற்
2. இராமநாதன்
3. வரதராஜப் பெருமாள்
4. மகேஸ்வரராஜா
5. எஸ். பேரின்பராஜா
6. எஸ். சிவலிங்கம்
7. எஸ். சிறீஸ்கந்தராஜா
8. எஸ். பிரேமாநந்தன்
9. எஸ். கோணேஸ்வரன்
10. ஜி. பத்மநாதன்
11. வி. சண்முகநாதசிவம்
12. வி. சுந்தரலிங்கம்
13. ரி. விஜயகுமார்
14. கே. தேவானந்தன்
15. ரி. தட்சணாமூர்த்தி
16. வி. மகேந்திரன்
17. பி. பவானந்தன்
18. எஸ். யோகராஜா
19. ந. ஜெயக்கொடி
20. ரி. மகேஸ்வரன்
21. வி. சுப்பிரமணியன்
22. மாணிக்கம் தாசன்
23. சண்முகம் சந்திரபாலன்
24. எஸ். கணேசலிங்கம்
25. எஸ். சிறீதரன்
26. ஞானசேகரம்
27. அந்தோணிப்பிள்ளை (அழகிரி)
28. அகஸ்டின் போல்
29. சின்னராசா
30. எஸ். ஜெயபிரகாசம்
31. எஸ். இராஜாஜி
32. மு. நித்தியானந்தன்

33. ஜெயத்திலகராஜா
34. ஜெயகுலராஜா
35. தங்கமகேந்திரன்
36. வாமதேவன்
37. ஞானவேல்
38. பரமதேவா
39. ரி. மரியநாயகம்
40. எஸ். நகுலேஸ்வரன்
41. எஸ். மகேஸ்வரன்
42. ரி. ஜெகதீசன்
43. குகதாசன்
44. கேந்திரன்
45. பாலேந்திரா
46. திருச்செல்வம்
47. பகிரதன்
48. மகேந்திரன்
49. கென்றி
50. வடிவேல்

### பருத்தித்துறை குண்டுவெடிப்புச் சம்பவம்

பருத்தித்துறையில் உள்ள திக்கம் என்னும் இடத்தில் போராளிகளால் வைக்கப்பட்ட கண்ணிவெடியில் ஆறு பொலிஸ் கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெற்றது. வடமராட்சியின் கல்விச் செல்வமான பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஆய்வுக்கூடத்தையும் 7,500 புத்தகங்களைக் கொண்ட நூலகத்தையும் மூன்று பெரிய கட்டடங்களையும் படையினர் தீ வைத்து அழித்தனர். 18 அப்பாவி மக்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### தமிழ்ப் பயணிகள் மீதான தாக்குதல்

சுமார் 47 பயணிகளுடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வி.ஐ.பி. எக்ஸ்பிரஸ் என்னும் பஸ் 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி அதிகாலை 2 மணிக்கு வவுனியாவை நெருங்கிக் கொண்டிருக்கையில் நம்பேவா என்னும் இடத்தில் ஆயுதம் தாங்கிய 6 இராணுவத்தினரால் மறிக்கப்பட்டது. பஸ்ஸுக்குள் ஏறிய இராணுவத்தினர் பயணிகள் தமிழர்கள் தான் என உறுதிப்படுத்திய பின்னர் பஸ்ஸை வவுனியா - மன்னார் வீதியில் உள்ள ஆறாவது மைல் போஸ்டுக்கு கொண்டு சென்றனர். அங்கு அனைத்துப் பயணிகளையும் கீழே இறக்கி வரிசையாக நிற்க வைத்துச் சுட்டதில் 15 பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். இரு இளம்பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

### இந்திராகாந்தி படுகொலை

அயர்லாந்து நாட்டுத் தொலைக்காட்சிக்காக ஆவணப்படம் எடுத்துக்கொண்டிருந்த பிரித்தானிய நடிகர் பீட்டர் உஸ்தொனோவுக்குப் பேட்டியளிப்பதற்காக 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி காலை 09:20 மணிக்கு இந்திரா காந்தி புதுடில்லி சப்தர்ஜங் தெருவிலுள்ள அவரது வீட்டுத் தோட்டத்திலிருந்து அடுத்தமைந்துள்ள அக்பர் வீதியிலுள்ள அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தார். அங்கிருந்த சிறுவாயிலை அவர் கடக்கும்போது அவ்வாயிலில் காத்திருந்த அவரது பாதுகாவலர்கள் சத்வந்த் சிங், பியாந்த் சிங் ஆகிய இருவரும் அவரைச் சுடத் தொடங்கினர். பியாந்த் சிங் இந்திரா காந்தியின் அடிவயிற்றில் மூன்றுமுறையும், கீழே விழுந்துவிட்ட இந்திரா காந்தியை சத்வந்த் சிங் இயந்திரத் துப்பாக்கியால் 30 முறையும் சுட்டனர். சுட்டபின் இருவரும் தமது ஆயுதங்களைக் கீழே எறிந்தனர். பியாந்த் சிங் "நான் செய்யவேண்டியதைச் செய்து விட்டேன். நீங்கள் செய்ய விரும்புவதைச் செய்து கொள்ளலாம்" எனக் கூறினார். அடுத்த ஆறு நிமிடங்களில் இந்திய - திபெத் எல்லைக் காவல்படையைச் சேர்ந்த தார்செம் சிங் ஜாம்வால், ராம் சரண் ஆகிய வீரர்கள் பியாந்த் சிங்கை சுட்டுக் கொன்றனர். சத்வந்த் சிங், இந்திரா காந்தியின் மற்றைய பாதுகாவலர்களால் பலத்த காயங்களுடன் சிறைப்பிடிக்கப்பட்டார். 1989 இல் சத்வந்த் சிங்கும் உடன் குற்றவாளியான கெகர் சிங்கும் தூக்கிலிடப்பட்டனர்.

இந்திரா காந்தி சுடப்பட்டு 10 மணி நேரங்கள் கழித்துத்தான் தூர்தர்ஷன் மாலைச் செய்தியில் அவர் இறந்த செய்தி அறிவிக்கப்பட்டது. உளவுத்துறை மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளையும் மீறி இந்திரா காந்தியின் செயலாளர் ஆர்.கே. தவான் பாதுகாப்பு நடவடிக்கையாக கொலையாளிகள் உட்பட்ட பிற சீக்கியக் காவலர்களை கடமையிலிருந்து நீக்கிவிடுமாறு உத்தரவிட்டார்.

### கென்ட், டெலர் பண்ணைச் சம்பவம்

கே.சி. நித்தியானந்தா, கந்தசாமி, ரவீந்திரன் போன்றவர்களால் கென்ட், டெலர் பண்ணை அமைக்கப்பட்டது. இதனை தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகம் அமைத்துக் கொடுத்தது. இதன் ஆரம்பத் தலைவராக கே.சி. நித்தியானந்தா இருந்தார். இந்த அமைப்பில் உமாமகேஸ்வரன், தயாபரசிங்கம்,

பரராஜசேகரன் ஆகியவர்கள் முன்னின்று உழைத்தவர்களாவர். இங்கு ஏராளமான மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் குடியேற்றப்பட்டிருந்தனர். விவசாயத் திட்டம் இங்கு பெரும் வெற்றியைத் தந்தது. இந்தப் பண்ணைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்தன. 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் இந்தப் பண்ணைகள் பறிமுதல் செய்யப்பட்டு இங்கே பழைய சிங்களக் குற்றவாளிகளும் மறியல் கைதிகளும் ஆயுதபாணிகளாகக் குடியேற்றப்பட்டனர். இது சிங்கள அரசினால் திட்டமிடப்பட்ட ஒரு செயலாகும். ஆயுதபாணிகளாகக் குடியேற்றப்பட்ட கிரிமினல்களை தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளுக்குப் பயன்படுத்தவே இலங்கை அரசு திட்டமிட்டிருந்தது.

நூற்றுக்கும் மேற்பட்ட இந்தச் சிங்களக் குற்றவாளிகள் 1984 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி கொல்லப்பட்டனர். இதேபோல் தமிழ் மீனவர்களுக்கு எதிராக கொக்கிளாய், நாயாறு பகுதிகளில் ஆயுதபாணிகளாக இலங்கை அரசாங்கத்தால் குடியேற்றப்பட்ட சிங்களக் காடையர்கள் 11 பேர் கொல்லப்பட்டனர். இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் ஒரே தினத்தில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டன.

### ஒதியமலைப் படுகொலைகள் (Othiyamalai Massacre)

இலங்கையின் வடக்கு மாகாணம், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒதியமலை என்ற கிராமத்தில் இலங்கைத் தரைப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் இப்படுகொலைகள் இடம்பெற்றன. 1984 டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் பதவியா இராணுவ முகாமிலிருந்து நெடுங்கேணிக்கு 5 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள ஒதியமலைக் கிராமத்திற்குள் புகுந்த கிட்டத்தட்ட 30 இராணுவத்தினர் அக்கிராமத்திலுள்ள வீடுகளில் இருந்த ஆண்களை மட்டும் தனியான ஓர் இடத்திற்கு கூட்டிச் சென்று சுட்டுப் படுகொலை செய்தனர். இவ்வாறு 27 ஆண்கள் கொல்லப்பட்டனர். மேலும் 5 ஆண்களைத் தம்முடன் கூட்டிச் சென்றனர். ஆனாலும் இவர்கள் பின்னர் வீடு திரும்பவில்லை.

சர்வதேச மன்னிப்பு அவையின் அறிக்கையில் நிகழ்வை நேரில் கண்ட சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1984 டிசம்பர் 1 சனிக்கிழமை நள்ளிரவில் 30 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட இராணுவத்தினர் கிராமத்துக்குள் புகுந்து அங்குள்ள மலைக்காடு கோவிலில் தங்கியிருந்தனர். டிசம்பர் 2 அதிகாலை குடிமனைகளுக்குள் புகுந்து ஒவ்வொரு வீட்டிலும் இருந்த ஆண்களையும் அவர்களது கண்களையும் கைகளையும் கட்டி இழுத்துச் சென்றனர். இவர்களில் பெரும்பாலானோர் 15 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள். இவர்கள் அங்கிருந்த சனசமூக நிலையக் கட்டடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் 27 பேர் அங்கேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் ஐவர் (50 வயதானவர்கள்) 25 ஸ்ரீ 6511 என்ற இலக்கத்தகடு கொண்ட உழவு இயந்திரம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டனர். இவர்கள் ஐவரும் பின்னர் வீடு திரும்பவில்லை. இவர்களில் இருவரது எரிந்த உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இதே நாளில் இராணுவத்தினரின் இன்னும் ஒரு குழு செம்மலை என்ற தமிழ்க் கிராமம் ஒன்றுக்குச் சென்றது. ஆனால் அவர்கள் அங்கு வரும் முன்னரே கிராமத்தவர்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேறி முல்லைத்தீவுக்குச் சென்றுவிட்டனர்.

### வல்வெட்டித்துறைச் சம்பவம் - 1985

1985 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி அரச படையால் வல்வெட்டித்துறை சுற்றிவளைக்கப்பட்டு சோதனை இடப்பட்ட போது, விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பத்து இராணுவத்தினரும் ஓர் இராணுவ மேஜரும் கொல்லப்பட்டதுடன் சிலர் காயமடைந்தனர். இதைத் தொடர்ந்து 10 ஆம் திகதி வடமராட்சிப் பகுதியில் இராணுவத்தின் அராஜகம் தலைவிரித்தாடியது. சுமார் ஏழு தமிழர்கள் கரவெட்டிப் பகுதியில் கொல்லப்பட்டனர். பருத்தித்துறைப் பகுதியில் இருவர் கொல்லப்பட்டனர்.

கந்தராஜா, கணேசமூர்த்தி என்கிற இருவர் இராணுவம் சுட்டதில் உயிராபத்தான நிலையை அடைந்தனர். வல்வெட்டித்துறை, பொலிகண்டி, உடுப்பிட்டி பகுதிகளில் நாற்பத்தி இரண்டிற்கும் மேற்பட்ட பொதுமக்களை இராணுவம் கொன்றொழித்தது. 14 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட இருபத்தைந்து இளைஞர்களை படையினர் கைது செய்து, கைகளைக் கட்டி, சனசமூக நிலையம் ஒன்றுக்குள் விட்டுப் பூட்டிய நிலையில் உள்ளே கைக்குண்டு வீசிக் கொலை செய்தனர். மேலும் பன்னிரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அவர்களது கைகளும் பின்னே கட்டப்பட்ட நிலையில் வரிசையாக நிறுத்தப்பட்டு இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பதினேழுக்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பல பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர்.

### அனுராதபுரப் படுகொலை - 1985

1985 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி அனுராதபுரம் பஸ் நிலைய நகரப் பகுதிக்குள் விக்டர் தலைமையில் புகுந்த விடுதலைப் புலிகளின்

தாக்குதலில் ஆண்கள், பெண்கள், புத்த பிக்குகள் உட்பட 138க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். 1985 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் இளைஞர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்குப் பழிக்குப் பழி வாங்கவே இந்த அனுராதபுரம் படுகொலை நடந்தது.



திம்பு பேச்சுவார்த்தையின் போது

Image source - twitter.com/TamilGuardian

## திம்பு பேச்சுவார்த்தை - 1985

பூட்டான் தலைநகரான திம்புவில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள் இரண்டு சுற்றுகளாக அமைந்தன. முதலாவது சுற்றுப் பேச்சு 1985 ஜூலை 8 ஆம் நாள் தொடங்கி ஆறு நாட்கள் நடைபெற்று ஜூலை 13 ஆம் திகதியில் முடிவுற்றது. ஶ்ரீலங்கா அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கு அரசு அதிபர் ஜெயவர்த்தனாவின் சகோதரரும் வழக்கறிஞருமான திரு. ஹெக்டர் ஜெயவர்த்தனா தலைமை வகித்தார். ஏனைய பிரதிநிதிகள் சட்டத்தரணிகளாகவும் அரச நிர்வாகிகளாகவும் அமைந்தனர்.

ஶ்ரீலங்கா அரசின் பேச்சுக் குழுவில் அமைச்சர் மட்டத்திலான அரசியல்வாதிகள் அங்கம் வகிக்கவில்லை என்பதால் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஈழத்தமிழ் தேசிய விடுதலை முன்னணியின் ஏனைய அமைப்புகளும் தமது மூத்த உறுப்பினர்களை மட்டும் திம்பு பேச்சுவார்த்தைக்கு அனுப்பி வைத்தனர். இதன்படி முதலாவது சுற்றுப் பேச்சில் விடுதலைப் புலிகள் சார்பில் லோரன்ஸ் திலகர் மற்றும் சிவகுமாரன் (அன்ரன்) ஆகியோர் கலந்துகொண்டனர். பின்னரான இரண்டாவது சுற்றுப் பேச்சில் யோகரெத்தினம் யோகியும் அவர்களுடன் கலந்து கொண்டார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பில் வரதராஜப் பெருமாளும் கேதீஸ்வரன் லோகநாதனும் கலந்துகொண்டனர். ரெலோ அமைப்பின் சார்பில் முதல் சுற்றுப் பேச்சில் சாள்ஸ் மற்றும் பொபி கலந்து கொண்டனர். இரண்டாவது சுற்றுப் பேச்சில் இவர்களுடன் நடேசன் சத்தியேந்திரா பங்கேற்றார்.

ஈரோஸ் அமைப்பின் சார்பில் மூத்த நிறுவன உறுப்பினர்களான இளையதம்பி இரத்தினசபாபதியும் சங்கர் ராஜியும் பங்கேற்றனர். சித்தார்த்தனும் வாசுதேவனும் புளொட் அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். எல்லோரிலும் இருந்து மாறுபட்டதாக தமிழர் விடுதலைக் கூட்டணியை அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

பேச்சுகளின் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல், விவாதத்தை முன்னெடுத்தல், தீர்மானங்களை எடுத்தல் போன்ற விடயங்களில் தமிழ் விடுதலை அமைப்புகளின் முக்கிய கூட்டணியான ஈழத் தேசிய விடுதலை முன்னணி முக்கிய பங்கு வகித்தது.

ஈழத் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களும் பேச்சுகளில் கலந்து கொள்ளும் அவர்களது பிரதிநிதிகளும் தொடர்புகொண்டு கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் திம்புக்கும் சென்னைக்கும் இடையில் ஒரு நேரடித் தொலைத்தொடர்பு வசதியை சென்னையிலுள்ள கோடம்பாக்கத்தில் இந்திய அரசு ஏற்படுத்திக் கொடுத்தது. விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் தொடர்புகொண்டு பேச்சு விவகாரத்தில் அவர்களுக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்பை அன்ரன் பாலசிங்கம் மேற்கொண்டார்.

பூட்டான் அரசாங்கத்தின் ஆதரவுடன் பேச்சுகள் நடைபெற்றன. பூட்டான் வெளியுறவு அமைச்சர் லியன் போ சேரிங் அதிகாரபூர்வமாக பேச்சுகளை ஆரம்பித்து வைத்தார். இந்தியா மத்தியஸ்தம் வகித்தது. திரு. சந்திரசேகரன் உட்பட இந்திய

உயரதிகாரிகள் நடுவர்களாகப் பணிபுரிந்தனர். அவர்கள் பேச்சுகளில் பங்குபற்றவில்லை. சமாதானப் பேச்சுகள் ஆரம்பமான சில நேரங்களுக்குள் அது ஒரு சொற்போராக வடிவம் எடுத்தது. தமிழ்ப் போராளி அமைப்புகளின் சட்ட ரீதியான தகுதி கேள்விக்குள்ளாக்கப்பட்டது. அரச பிரதிநிதிகள் இந்த அமைப்புகளின் பிரதிநிதிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது என வாதிட்டனர். திம்பு பேச்சுகள் மூலம் ஏற்பட்ட ஓர் ஆக்கபூர்வமான விளைவு என்றால் அது தமிழர் தரப்பின் ஒருமைப்பாடே ஆகும்.

சிங்கள அரச பேச்சுக் குழுவின் தலைவர் ஹெக்டர் ஜெயவர்த்தனா மாவட்ட அபிவிருத்தி சபை என்ற ஒரு தீர்வுத் திட்ட யோசனையை முன்வைத்தார். சமாதானப் பேச்சு மூலம் தமிழரின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கம் எதுவும் ஜெயவர்த்தனா அரசுக்கு இருக்கவில்லை. இருப்பினும் தமிழருக்கு ஒரு நிலையான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என தமிழ்த் தரப்பினர் கூறினர். தமிழ்த் தரப்பால் ஏகமனதாக முன்வைக்கப்பட்ட நான்கு அடிப்படைக் கோட்பாடுகள் பின்வருமாறு:

1. தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக் கொண்டவர்கள்.

2. தமிழ் மக்களுக்கு இனம் காணக்கூடிய தனித்துவமான தாயகம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளல்.

3. தமிழர் தேசத்திற்கு எவராலும் பறித்தெடுக்க முடியாத சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளல்.

4. சகல தமிழ் மக்களுக்கும் முழுமையான குடியுரிமையும் மற்றும் அடிப்படையான உரிமைகளும் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளல்.

முதல் சுற்றுப் பேச்சு முடிவடைந்த நாள் அன்று (July 13) தமிழ்ப்பிரதிநிதிகள் கூட்டாக விடுத்த திம்பு பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டதாவது: “இந்த மூலக்கோட்பாடுகளை பேணிப் பாதுகாப்பதற்காக வெவ்வேறு நாடுகள் வெவ்வேறான அரசாட்சி முறைகளை வடிவமைத்துள்ளன. எமது மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதால் நாம் சுதந்திரமான தமிழரசுக் கோரிக்கையை முன்வைத்து அதற்காகப் போராடி வந்துள்ளோம். தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வாக ஸ்ரீலங்கா அரச பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாதவை. ஆதலால் நாம் அவற்றை நிராகரித்துள்ளோம். எனினும் சமாதானத்தில் நாம் பற்றுறுதி கொண்டவர்கள் என்பதால், நாம் முன்மொழிந்த மூலக்கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு தீர்வுத் திட்டத்தை ஸ்ரீலங்கா அரசு முன்வைக்குமானால் அதனைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம்.”

1985 ஆகஸ்ட் 12 ஆம் நாள் இரண்டாவது சுற்றுப் பேச்சு திம்புவில் ஆரம்பமானது. அரச பேச்சுக் குழுவின் தலைவர் ஹெக்டர் ஜெயவர்த்தனா தான் ஏற்கனவே தயாரித்துக் கொண்டு வந்த அறிக்கையை வாசித்தபோது, குடியுரிமைக் கோரிக்கைகளைத் தவிர்ந்த ஏனைய மூன்று கோட்பாடுகளையும் ஏற்றுக்கொள்ள முடியாதவை என நிராகரித்தார். குடியுரிமை சம்பந்தப்பட்ட கோட்பாட்டை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்றார்.

இருதரப்பு பேச்சுக் குழுக்களும் தங்களது நிலைப்பாட்டில் விட்டுக்கொடுக்காத கடும் போக்கைக் கடைப்பிடித்ததன் காரணமாக முரண்பாடு ஏற்படலாயிற்று. இதன்போது இந்திய வெளியுறவுச் செயலர் ரொமேஸ் பண்டாரி, தமிழ்ப் தரப்பின் விட்டுக்கொடுக்காத கடும்போக்கே முரண்பாட்டிற்குக் காரணம் எனக் கூற, கோபமடைந்த நடேசன் சத்தியேந்திரா காரசாரமான வார்த்தைகளால் பண்டாரியை அவமானப்படுத்தி அடக்கிவைத்தார். இவ்வேளையில் 1985 ஆகஸ்ட் 16 ஆம் திகதி வவுனியா நகரில் சிங்கள ஆயுதப் படைகள் நிகழ்த்திய வெறியாட்டத்தில் பெருந்தொகையான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் தமிழரின் கடைகள், சொத்துகள் என்பனவும் தீ மூட்டி எரிக்கப்பட்டன. ஆகஸ்ட் 17 ஆம் திகதி திருகோணமலையில் உள்ள தமிழ்க் கிராமம் மீதும் இதே கொடூரம் இடம்பெற்றது. இதனை அறிந்த தமிழ்த் தரப்பு திம்பு பேச்சுகளைப் புறக்கணித்தது.

திம்பு பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்ததற்கான காரணங்கள்:

1. மிகவும் நுட்பமாகக் கையாள வேண்டிய ஒரு சிக்கலான இராஜதந்திர முயற்சியை முன்னெடுக்கும் சாதுரியமும் சாணக்கியமும் இந்தியாவின் தூதுவராகச் செயற்பட்ட ரொமேஸ் பண்டாரியிடம் இருக்கவில்லை.

2. ‘றோ’ புலனாய்வு அதிகாரிகளின் நெருக்குவார மிரட்டல் அணுகுமுறைகள்.

3. ஸ்ரீலங்கா அரசின் பேச்சுக் குழுவின் தலைவராகப் பணிபுரிந்த ஹெக்டர் ஜெயவர்த்தனாவின் நெகிழ்வற்ற கடும்போக்கு.

(தொடரும்)

# இராணுவமயமாக்கப்பட்ட அமைதியின் கீழ் அன்றாட வாழ்க்கை

இலங்கையில் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், வடக்கு – கிழக்குச் சமூகத்தின் உண்மையான நிலையை 'போருக்குப் பின் அமைதிக்கு முன்: வடக்குக் கிழக்கில் அறிவு, அதிகாரம், அன்றாட வாழ்க்கை' எனும் இந்தத் தொடர் ஆராய்கிறது. 'போர் முடிந்துவிட்டது' என்ற மேலோட்டமான கொண்டாட்டங்களை நிராகரிக்கும் இத்தொடர், அங்கு இராணுவக் கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் நில அபகரிப்பு போன்றவை இன்றும் ஒரு தொடர்ச்சியான நிர்வாக முறையாகவே நீடிப்பதாக வாதிடுகிறது. சமூகவியல், தொல்லியல், வரலாறு, மானிடவியல் எனப் பல துறைகளின் ஊடாக, மக்களின் அன்றாட வாழ்வில் அதிகாரம் எவ்வாறு ஊடுருவியுள்ளது என்பதை இது வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாழ்வியல் அனுபவங்களை முன்னிறுத்தி, முறையான அரசியல் தீர்வில்லாத இந்த நிலையை 'முழுமையடையாத இறையாண்மை' என வரையறுக்கிறது. போருக்குப் பிந்தைய நீதி மற்றும் நல்லிணக்கம் குறித்த ஒரு புதிய முன்னோக்கை வெளிப்படுத்துவதாக இத்தொடர் அமையும்.


## மீநிலங்கோ தெய்வேந்திரன்



ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

## தொடக்கக் குறிப்புகள்

இலங்கையின் உள்நாட்டுப் போர் முறையாக முடிவடைந்ததைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில், வடக்குக் கிழக்கில் ‘அமைதி’ என்பது எங்கும் நிறைந்த ஆனால் புரிந்துகொள்ள முடியாத ஒரு வார்த்தையாக மாறியுள்ளது. இது அரசாங்க விவாதங்களில், மேம்பாட்டுத் திட்டங்களில், அரசு சாரா நிறுவன அறிக்கைகள் மற்றும் சர்வதேச மதிப்பீடுகளில் ஓர் அடையப்பட்ட நிபந்தனையாகப் பரவுகிறது. வன்முறை முறியடிக்கப்பட்டு சாதாரண வாழ்க்கை மீட்டெடுக்கப்பட்டதற்கான சான்றாக இது காண்பிக்கப்படுகிறது. சாலைகள் மீண்டும் கட்டமைக்கப்படுகின்றன, சந்தைகள் மீண்டும் திறக்கப்படுகின்றன, பாடசாலைகள் செயற்படுகின்றன, பொது நிறுவனங்கள் வழக்கமான செயற்பாடுகளை மீண்டும் தொடங்குகின்றன. மேலோட்டமாகப் பார்த்தால், அன்றாட வாழ்க்கை ஒழுங்குக்குத் திரும்பியதாகத் தெரிகிறது. இருப்பினும், போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கில் இனவியல் சந்திப்புகள் மிகவும் சிக்கலான யதார்த்தத்தை வெளிப்படுத்துகின்றன.

அமைதியென்பது வாழப்படும் போது, நிவாரணமாகவோ, தீர்வாகவோ அல்லது பயத்திலிருந்து விடுபடுவதாகவோ அனுபவிக்கப்படுவதில்லை. மாறாக, அது நிர்வகிக்கப்பட வேண்டிய, வழிநடத்தப்பட வேண்டிய, சகித்துக்கொள்ள வேண்டிய ஒரு நிபந்தனையாக எதிர்கொள்ளப்படுகிறது. இது தினசரி முடிவுகளைக் கட்டமைக்கிறது, சமூக உறவுகளை மறுவடிவமைக்கிறது, தார்மீகத் தீர்ப்பை மறுசீரமைக்கிறது. வன்முறை இல்லாததைக் குறிப்பதற்குப் பதிலாக, வன்முறை எவ்வாறு விநியோகிக்கப்படுகிறது, உணரப்படுகிறது, பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது என்பதை இந்த அமைதி மறுசீரமைக்கிறது.

போருக்குப் பிந்தைய இலங்கையில் அமைதி என்பது வெறுமனே ஓர் அரசியல் விளைவு அல்ல, மாறாக வாழும் ஒரு நிலை என்ற முன்மொழிவிலிருந்து இந்தக் கட்டுரை தொடங்குகிறது. இது மக்கள் வைத்திருக்கும் அல்லது அனுபவிக்கும் ஒன்று அல்ல. அது அவர்கள் வசிக்கும் ஒன்று. பெரும்பாலும் எச்சரிக்கையுடன், சீரற்ற முறையில் மற்றும் தெளிவற்ற முறையில் வசிக்கும் ஒன்றாகவே கட்டமைக்கப்பட்டுள்ளது. அமைதியின் கீழ் வாழ்வது என்பது - வாழ்க்கையின் பொருள் குறித்தோ வாழ்வியலின் உணர்ச்சி நிலைமைகள் குறித்தோ ஏற்பட்ட சிக்கல்கள் தீர்க்கப்படாமல் இருந்தாலும் கூட - அமைதி, கட்டுப்பாடு, நன்றியுணர்வு மற்றும் எதிர்காலத்தை நோக்கிய நடத்தை பற்றிய எதிர்பார்ப்புகளின் தொகுப்பின் கீழ் வாழ்வதாகும்.

இந்த முரண்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்ட மானிடவியல் அணுகுமுறையை இக்கட்டுரை மேற்கொள்கிறது. கொள்கை, அமைதி ஆகியவற்றைக் கட்டமைக்கும் கல்விப்புல ஆய்வுகள் அமைதியை ஒரு பெரிய அளவிலான சாதனையாகக் கருதுகின்றன. நிலைத்தன்மைக்கான குறியீடுகள், பொருளாதார வளர்ச்சி அல்லது ஆயுத மோதல்கள் இல்லாமை மூலம் அளவிடப்படுகின்றன. அன்றாட வாழ்க்கையில் மானிடவியல் கவனம், வீடுகள், சுற்றுப்புறங்கள் மற்றும் நெருக்கமான சமூக உலகங்களின் மட்டத்தில் அமைதி எவ்வாறு வாழ்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. அமைதி மேலிருந்து அறிவிக்கப்படுவதில்லை, மாறாக பேச்சு, இயக்கம், நினைவகம், அபிலாஷைகளை வடிவமைக்கும் சாதாரண நடைமுறைகள் மூலம் எவ்வாறு உருவாக்கப்பட்டு நிலைநிறுத்தப்படுகிறது என்பதை இது காட்டுகிறது.

இலங்கையின் வடக்குக் கிழக்கில், அமைதி இராணுவமயமாக்கலில் இருந்து பிரிக்க முடியாதது. போரின் முடிவு இராணுவ அதிகாரத்தை பொதுமக்கள் வாழ்க்கையிலிருந்து விலக்கிக் கொள்ள வழிவகுக்கவில்லை. அதற்குப் பதிலாக, இராணுவ இருப்பு இயல்பாக்கப்பட்டு நிறுவனமயமாக்கப்பட்டது. இராணுவ நிர்வாகக் கட்டமைப்புகள், மேம்பாட்டு முயற்சிகளாக மாற்றப்பட்டன. வீரர்கள் நிர்வாகிகள், கட்டுமானத் தொழிலாளர்கள், விவசாய மேலாளர்கள், உளவுத்துறை அரங்காடிகளாக மாறினர். கண்காணிப்புக் குறைவாகவே காணப்பட்டது, ஆனால் மேலும் பரவலாகியது. பொதுமக்களுக்கும் இராணுவ அதிகாரத்திற்கும் இடையிலான வேறுபாடு மங்கலாகி, அதிகாரம் எங்கும் நிறைந்த ஆனால் அரிதாகவே பெயரிடப்பட்ட ஒரு சமூகச் சூழலை உருவாக்குகிறது.

குடியிருப்பாளர்களைப் பொறுத்தவரை, அமைதி எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது என்பதில் இது ஆழமான தாக்கங்களைக் கொண்டுள்ளது. அமைதி என்பது வன்முறையிலிருந்து பாதுகாப்பாக உணரப்படுவதில்லை, மாறாக இணக்கத்தின் மூலம் பாதுகாப்பாக உணரப்படுகிறது. இது சரியாக நடந்துகொள்வது, எச்சரிக்கையாகப் பேசுவது, கவனத்தை ஈர்க்கக்கூடிய செயல்களைத் தவிர்ப்பது ஆகியவற்றைச் சார்ந்துள்ளது.

எனவே அமைதி நிபந்தனைக்குட்பட்டது. உரிமைகள் அல்லது பாதுகாப்புகளால் உத்தரவாதம் அளிக்கப்படுவதற்குப் பதிலாக சுய கட்டுப்பாடு மூலம் பராமரிக்கப்படுகிறது. இந்த நிபந்தனை அகநிலையை

மறுவடிவமைக்கிறது. பொருத்தமற்றது, சந்தேகத்திற்குரியது அல்லது அரசியல் ரீதியாக உணர்திறன் வாய்ந்தது என்று கருதப்படுவதை மக்கள் தவிர்க்கக் கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் மொழியைச் சரி செய்கிறார்கள், சில தலைப்புகளைத் தவிர்க்கிறார்கள், உறவுகளை மறுபரிசீலனை செய்கிறார்கள். குழந்தைகள் எப்படி நடந்துகொள்வது என்பது மட்டுமல்லாமல், கவனிக்கப்படாமல் இருப்பது எப்படி என்றும் கற்பிக்கப்படுகிறார்கள். இந்த அர்த்தத்தில், அமைதி கற்பித்தல் சார்ந்தது. இது கட்டுப்பாட்டுக் கலையாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. முக்கியமாக, இந்தக் கட்டுப்பாடு எப்போதும் வெளிப்படையான அர்த்தத்தில் ஒடுக்குமுறையாக அனுபவிக்கப்படுவதில்லை. பலர் அதை பொது அறிவு, முதிர்ச்சி அல்லது நடைமுறைவாதம் என்று விவரிக்கிறார்கள். போர், இடப்பெயர்ச்சி, இழப்பு ஆகியவற்றின் மூலம் பல்வேறு அனுபங்களின் ஊடு வாழ்ந்தாலும், மக்கள் நிலைத்தன்மையை மதிக்கிறார்கள். அது எவ்வளவு பலவீனமானதாக இருந்தாலும் அதை விரும்புகிறார்கள். அதற்கு எந்த விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இதனால் அமைதி பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது, ஏனெனில் அது நியாயமானது என்பதால் அல்ல, அது போரை விடக் குறைவான பேரழிவு என்பதால். இருப்பினும் இந்த நடைமுறை ஏற்றுக்கொள்ளலை சமரசம் அல்லது சம்மதம் என்று தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. மானிடவியல் ரீதியாக, இது நெறிமுறை உயிர்வாழ்வதற்கான ஒரு முறையாகச் சிறப்பாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. மக்கள் இம்முடிவைக் கொள்கைகளின் அடிப்படையில் மேற்கொள்வதில்லை. மாறாக குழந்தைகள், வயதான பெற்றோர், வாழ்வாதாரங்கள், சமூக உறவுகள் போன்ற உடனடிப் பொறுப்புகளின் அடிப்படையில் தேர்வுகளைச் செய்கிறார்கள். நீதி இல்லாவிட்டாலும், இந்தப் பொறுப்புகளை குறைந்தபட்சமாக நிறைவேற்றக்கூடிய ஒரு நிபந்தனையாக அமைதி மாறுகிறது.

இந்தக் கட்டுரை அமைதியை ஒரு தனித்துவமான அனுபவமாக அல்ல, மாறாக பாலினம், வயது, வர்க்கம் மற்றும் இருப்பிடத்தால் வடிவமைக்கப்பட்ட வேறுபட்ட நிலையாக அணுகுகிறது. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு 'அமைதி' என்பது பெரும்பாலும் அடிப்படை உயிர்வாழ்வைப் பாதுகாக்க அதிகார அமைப்புகளையும் இராணுவமயமாக்கப்பட்ட நிறுவனங்களையும் எதிர்கொண்டு வாழ வேண்டிய நிலையாக அமைகிறது. இளைஞர்களுக்கு, இது சந்தேகம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட இயக்கத்தின் கீழ் வாழ்வதைக் குறிக்கலாம். பழைய தலைமுறையினருக்கு 'அமைதி' என்பது தீர்க்கப்படாத இழப்புகளாலும் பொதுத் துக்கத்தை வெளிப்படுத்த முடியாத நிலைமையாலும் தொடர்ந்து துன்புறுத்தும் அனுபவமாக உள்ளது. இந்த அனுபவங்கள் நிலைத்தன்மையின் ஒட்டுமொத்தக் குறிகாட்டிகளால் அறிந்துகொள்ளக்கூடியவை அல்ல. இருப்பினும் அவை போருக்குப் பிந்தைய வாழ்க்கையின் உள்ளடக்கத்தை உருவாக்குகின்றன.

முக்கியமாக, அமைதியும் தற்காலிகத்தை மறுவடிவமைக்கிறது. போருக்குப் பிந்தைய நிகழ்காலம் எதிர்காலத்திற்கான உத்தரவுகளால் - மீண்டும் கட்டியெழுப்புதல், சமரசம் செய்தல், அபிவிருத்தி செய்தல் - நிறைவேறுகிறது. கடந்த காலத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு ஊக்கமளிக்கப்படவில்லை. அவ்வாறு சிந்திப்பது ஆரோக்கியமற்றதாகவோ அல்லது ஸ்திரமின்மைக்குரியதாகவோ வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆயினும்கூட, தீர்க்கப்படாத நில உரிமை கோரல்கள், காணாமல் போன உறவினர்கள், குறிக்கப்படாத கல்லறைகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத துன்பங்களில் கடந்த காலம் பொருள் ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் உள்ளது. எனவே அமைதி என்பது ஒரு வகையான தற்காலிக ஒழுக்கத்தைக் கோருகிறது, அரசு அனுமதித்த எதிர்காலத்துடன் சீரமைப்பை ஊக்குவிக்கிறது, அதே நேரத்தில் மாற்றுத் தற்காலிகங்களைச் சந்தேகிக்க வைக்கிறது.

ஒரு மானிடவியல் பார்வையில், இந்தத் தற்காலிக ஒழுக்கம் அமைதி எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது என்பதற்கு மையமாக உள்ளது. இது சட்டம் அல்லது பலத்தால் மட்டும் செயற்படுத்தப்படவில்லை; முன்னேறுதல், மீள்தன்மை மற்றும் நன்றியுணர்வை மதிப்பிடும் தார்மீக விவரிப்புகள் மூலம் செயற்படுத்தப்படுகிறது. இந்த விவரிப்பை எதிர்ப்பவர்கள் - தொடர்ந்து பொதுவில் துக்கம் அனுசரிப்பதன் மூலமோ, எதிர்ப்புத் தெரிவிப்பதன் மூலமோ அல்லது அநீதியைப் பற்றிப் பேசுவதன் மூலமோ - ஒத்துழையாதவர்கள் அல்லது தீவிரவாதி என்று முத்திரை குத்தப்படும் அபாயம் உள்ளது. அமைதி ஓர் அரசியல் நிலை மட்டுமல்ல, ஒரு தார்மீக எதிர்பார்ப்பாகவும் மாறுகிறது.

இக்கட்டுரை, இந்தப் பதற்றங்கள் காரணமாகவே, இனவரைவியல் விசாரணையின் முக்கிய ஆய்வுப்பொருளாக அமைதியை நிலைநிறுத்துகிறது. கண்காணிப்பு, மௌனம், தார்மீகப் பேச்சுவார்த்தை, உயிர்வாழ்வு ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம், பேச்சுகள் அல்லது கொள்கைகளில் அல்ல, மாறாக அன்றாட வாழ்க்கையின் நடைமுறைகளில் அமைதி எவ்வாறு வாழ்கிறது என்பதை இது

ஆராய்கிறது. போர் முடிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டாலும் அதன் கட்டமைப்புகள் தொடரும், அமைதி பிரகடனப்படுத்தப்பட்டாலும் அதில் முழுமையான நம்பிக்கை உருவாகாத ஓர் உலகில் மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதை இது கேள்வி கேட்கின்றது. அவ்வாறு செய்வதன் மூலம், போருக்குப் பிந்தைய சமூகங்களைப் பற்றிய பரந்த மானிடவியல் மறுபரிசீலனைக்கு இந்தக் கட்டுரை பங்களிக்கிறது. அமைதி இயல்பு நிலைக்குத் திரும்புவதைக் குறிக்கிறது என்ற அனுமானத்தை இது சவாலுக்குள்ளாக்குகிறது. அதற்குப் பதிலாக அதை அதன் சொந்தத் தர்க்கங்கள், கட்டுப்பாடுகள், நெறிமுறைக் கோரிக்கைகளுடன் ஒரு தனித்துவமான சமூக நிலையாகக் கருதுகிறது. இங்கே, அமைதி என்பது வெறுமனே நேர்மறையானது அல்லது முற்றிலும் அடக்குமுறையானது அல்ல. அது தெளிவற்றது, பேச்சுவார்த்தைக்கு உட்பட்டது, எல்லாவற்றிலும் மேலாக சமமற்ற முறையில் பகிரப்படுகிறது. வாழ்க்கைக்கான ஒரு நிலையாக அமைதியைப் புரிந்துகொள்வது, வெற்றி அல்லது தோல்வியின் இருமை மதிப்பீடுகளுக்கு அப்பால் செல்ல நம்மை அனுமதிக்கிறது. போருக்குப் பிறகு அதிகாரம் செயற்படும் நுட்பமான வழிகளிலும், கட்டுப்பாட்டின் கீழ் வெளிப்படும் நிறுவனத்தின் வடிவங்களிலும் இது கவனத்தை ஈர்க்கிறது.

## இராணுவமயமாக்கப்பட்ட அமைதியும் மக்களின் மானிடவியலும்

மானிடவியல் நீண்டகாலமாக, அதிகாரத்தின் மிகவும் விளைவான வடிவங்கள் எப்போதும் காட்சி அல்லது நெருக்கடி மூலம் அல்ல, மாறாக சாதாரணமானவற்றின் மூலம் - வழக்கங்கள், பழக்கவழக்கங்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் அன்றாட வாழ்க்கையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டமைப்புகள் மூலம் - நிலைநிறுத்தப்படுகின்றன என்று வலியுறுத்துகிறது. போருக்குப் பிந்தைய இலங்கையைப் புரிந்துகொள்வதற்கு இந்தப் புரிதல் மிகவும் முக்கியமானது. அங்கு வன்முறை மறைந்துவிடவில்லை, ஆனால் குறைவாகக் காணக்கூடிய, நீடித்த வடிவங்களாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது. வடக்குக் கிழக்கில் வாழும் இராணுவமயமாக்கப்பட்ட அமைதி, முதன்மையாக பலத்துடன் கூடிய வியத்தகு சந்திப்புகள் மூலம் அனுபவிக்கப்படுவதில்லை, மாறாக நிறுவனங்கள், அண்டை நாடுகள், தார்மீக எதிர்பார்ப்புகளுடனான சாதாரண தொடர்புகள் மூலம் அனுபவிக்கப்படுகிறது. இந்தப் பகுதி, அன்றாட வாழ்க்கையை அரசியலுக்கான பின்னணியாகக் கருதாமல், அதன் முதன்மைத் தளங்களில் ஒன்றாகக் கருதும் மானிடவியல் மரபுகளை வரைந்து விரிவுபடுத்துகிறது. ஆயுதமேந்திய இருப்பு அல்லது பாதுகாப்புக் கொள்கையின் ஒரு விஷயமாக மட்டுமே இராணுவமயமாக்கலை அணுகுவதற்குப் பதிலாக, இராணுவமயமாக்கல் எவ்வாறு சாதாரணமாகிறது, அது எவ்வாறு அன்றாட வழக்கங்களில் உள்வாங்கப்படுகிறது, நிர்வாக நடைமுறைகள் மூலம் இயல்பாக்கப்படுகிறது மற்றும் சமூக உறவுகள் மூலம் மீண்டும் உருவாக்கப்படுகிறது என்பதை இது ஆராய்கிறது.

போர், வன்முறை குறித்த பல மானிடவியல் ஆய்வுகள் சிதைவின் தருணங்களில் கவனம் செலுத்தியுள்ளன. இடப்பெயர்ச்சி, படுகொலை, அவசரநிலை, முறிவு என்பன அவற்றில் சில. இந்தத் தருணங்கள் பகுப்பாய்வு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தாலும், வன்முறை ஒரு விதிவிலக்காக அல்லாமல் இயல்புநிலையாக மாறியபோது அதிகாரம் எவ்வாறு செயற்படுகிறது என்பதை அவை மறைக்கக்கூடும். இலங்கையில், போரிலிருந்து அமைதிக்கான மாற்றம் இராணுவமயமாக்கலின் கட்டமைப்புகளை அகற்றவில்லை. அது அவற்றை அகமயமாக்கியது.

நிலங்களின் நிர்வாகம், அபிவிருத்தித் திட்டங்கள், சமூக நல நடவடிக்கைகள் போன்ற சிவில் களங்களில் இராணுவத்தின் தொடர்ச்சியான இருப்பு விதிவிலக்கான ஆட்சியிலிருந்து வழக்கமான ஆட்சிக்கு மாறுவதைக் குறிக்கிறது. வீரர்கள் இனி முதன்மையாக வற்புறுத்தலின் முகவர்களாகத் தோன்றுவதில்லை, மாறாக அதிகாரத்துவ அரங்காடிகள், அபிவிருத்தி இடைத்தரகர்கள், முறைசாரா அதிகாரிகள் எனப் புதிய முகங்களில் தோன்றுகிறார்கள். இந்த மாற்றம் பொதுமக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையிலான பாரம்பரிய வேறுபாடுகளைச் சிக்கலாக்குகிறது. மோதலின் முடிவைப் பின்பற்றி இயற்கையாகவே இராணுவமயமாக்கல் என்ற அனுமானங்களைச் சவாலுக்குட்படுத்துகிறது. மானிடவியல் ரீதியாக, இது நெருக்கடியை மையமாகக் கொண்ட பகுப்பாய்வுகளிலிருந்து விலகி, இயல்பாக்கப்பட்ட அதிகாரத்தின் இனவரைவியல் என்று அழைக்கப்படுவதை நோக்கி நகர்வதைக் கோருகிறது. இராணுவமயமாக்கப்பட்ட அமைதி என்பது பலவந்தமாக மட்டும் திணிக்கப்படுவதில்லை. இது கூட்டங்கள், நலன்புரி மதிப்பீடுகள், அபிருத்தி ஆலோசனைகள், அன்றாடத் தொடர்புகள் மூலம் மீண்டும் உருவாக்கப்படுகிறது, ஏனெனில் அவை வழக்கமானவை. போருக்குப் பிந்தைய இலங்கையின் வடக்குக் கிழக்கில், இறையாண்மை முறையான அரசு அதிகாரம் அல்லது பிராந்தியக் கட்டுப்பாட்டிற்குள்

மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. யார் பேசலாம், யார் கூடலாம், யார் பகிரங்கமாக நினைவில் கொள்ளலாம், யார் அமைதியாக இருக்க வேண்டும் என்பது பற்றிய முடிவுகளின் மூலம் இது செயற்படுகிறது. அன்றாட இறையாண்மையின் மானிடவியல் கோட்பாடுகள், அதிகாரம் பெரும்பாலும் மையப்படுத்தப்பட்ட கட்டளைகளுக்குப் பதிலாகச் சிதறடிக்கப்பட்ட, உறவுமுறை நடைமுறைகள் மூலம் இயற்றப்படுகிறது என்பதை வலியுறுத்துகின்றன. போருக்குப் பிந்தைய இலங்கையில், இறையாண்மை அரசியலமைப்புச் சீர்திருத்தம் அல்லது சமாதான ஒப்பந்தங்கள் மூலம் அறிவிக்கப்படுவதில்லை. அது சாதாரணத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இயற்றப்படுகிறது. கண்காணிப்பு என்பது தனித்ததல்ல, அனைத்துமானது. ஒழுக்கம் செயற்படுத்தப்படுவதற்குப் பதிலாக உள்மயமாக்கப்படுகிறது. இணக்கம் கட்டாயப்படுத்தப்படுவதற்குப் பதிலாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வகையான இறையாண்மை அரசுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது, ஏனெனில் அதை எதிர்த்துப் போராடுவது கடினம். எதிர்ப்பதற்கு ஓர் ஒற்றை அடக்குமுறைத் தருணம் இல்லை, வற்புறுத்தலுக்கும் சம்மதத்திற்கும் இடையே தெளிவான எல்லை இல்லை. அதற்குப் பதிலாக, அதிகாரம் என்பது சிறிய கணக்கீடுகளின் தொடராக எதிர்கொள்ளப்படுகிறது. ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதா, ஒரு வாக்கியத்தை எவ்வாறு வடிவமைப்பது, எந்தப் புகைப்படத்தைக் காண்பிப்பது, எப்போது அமைதியாக இருக்க வேண்டும்? இந்தக் கணக்கீடுகள் குவிந்து, காலப்போக்கில் அகநிலையை வடிவமைக்கின்றன.

இராணுவமயமாக்கலின் மானிடவியல் பகுப்பாய்வுகள், இராணுவத்தின் அதிகாரம்  போர்க்களத்திற்கு அப்பால் நீண்டுள்ளது என்பதை அதிகளவில் வலியுறுத்தியுள்ளன. இராணுவமயமாக்கல் என்பது ஆயுதங்கள் அல்லது துருப்புகளைப் பற்றியது மட்டுமல்ல. இது பாதுகாப்புத் தர்க்கங்களைச் சுற்றி சமூக வாழ்க்கையை மறுசீரமைப்பது பற்றியது. இலங்கையின் போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கில், பாதுகாப்பின் மொழி குறைந்துவிட்டாலும் பாதுகாப்புத் தர்க்கங்கள் நீடிக்கின்றன. புலப்படும் சோதனைச் சாவடிகள், ரோந்துகளை திரும்பப் பெறுவது அதற்கேற்ப கட்டுப்பாட்டைத் திரும்பப் பெறுவதை உருவாக்கவில்லை. அதற்குப் பதிலாக, பொதுநிர்வாக மேற்பார்வை, உளவுத்துறைச் சேகரிப்பு, சிவில் நிறுவனங்களில் பதிக்கப்பட்ட முறைசாராக் கண்காணிப்பு மூலம் கட்டுப்பாடு செயற்படுத்தப்படுகிறது. இது ஒரு சமூகச் சூழலை உருவாக்குகிறது, இதில் மக்கள் என்ன செய்ய முடியாது என்பதை அரிதாகவே வெளிப்படையாகச் சொல்கிறார்கள், ஆனால் அனுபவம், வதந்தி, அவதானிப்பு மூலம் வரம்புகளை ஊகிக்கக் கற்றுக்கொள்கிறார்கள்.

மானிடவியல் ரீதியாக, இந்தச் சூழல் நிர்வகிக்கப்படும் நிச்சயமற்ற தன்மை என்று விவரிக்கக்கூடிய ஒன்றை உருவாக்குகிறது. எல்லைகள் எங்கே உள்ளன என்பது மக்களுக்குத் துல்லியமாகத் தெரியாது, ஆனால் எல்லைகள் உள்ளன என்பதை அவர்கள் அறிவார்கள். இந்த நிச்சயமற்ற தன்மை எச்சரிக்கையையும் சுய ஒழுங்குமுறையையும் ஊக்குவிக்கிறது, வெளிப்படையான தலையீட்டின் தேவையைக் குறைக்கிறது.

இராணுவமயமாக்கப்பட்ட அமைதியின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று அதன் தார்மீகப் பரிமாணமாகும். இலங்கையில் போருக்குப் பிந்தைய ஆட்சிகள், வற்புறுத்தலையோ அல்லது கண்காணிப்பையோ மட்டுமே நம்பியிருக்கவில்லை. இது கட்டுப்பாடு, நன்றியுணர்வு,  முன்னோக்கிப் பார்க்கும் நடத்தை ஆகியவற்றை நற்பண்புகளாக வடிவமைக்கும் தார்மீகக் கதைகளையும் நம்பியுள்ளது. அமைதி இல்லாமல் போகக்கூடியதாகவும் விலைமதிப்பற்றதாகவும் வழங்கப்படுகிறது. எனவே தவறுகளை இழைத்து ஆபத்தில் சிக்கக்கூடாது என்பது இயல்பாக்கமான முடிவாக மக்கள் மனங்களில் ஏற்றப்பட்டுள்ளது.

மானிடவியல் ரீதியாக, அன்றாட வாழ்க்கையின் இந்த ஒழுக்கமயமாக்கல் நெறிமுறை பகுத்தறிவை மறுவடிவமைக்கிறது. மக்கள் மௌனத்தைப் பொறுப்பாகவும், இணக்கத்தை முதிர்ச்சியாகவும், சகிப்புத்தன்மையை மீள்தன்மையாகவும் பார்க்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்தத் தார்மீகக் கட்டமைப்புகள் துன்பத்தை நீக்குவதில்லை, ஆனால் துன்பம் எவ்வாறு விளக்கப்படுகிறது, வெளிப்படுத்தப்படுகிறது என்பதை அவை மறுசீரமைக்கின்றன. தனிநபர்களும் குடும்பங்களும் தங்கள் செயல்களின் நெறிமுறைத் தாக்கங்களைத் தொடர்ந்து மதிப்பிடுகின்றனர். பேசுவது ஆபத்தை ஏற்கத் தகுந்ததா, அரசுத் திட்டங்களில் பங்கேற்பது பயனுள்ளதாக இருக்கிறதா அதாவது நல்ல குடிமகன் என்ற வரையறைக்குள் அழைத்துச் செல்கிறதா, மௌனம் நினைவைப் பாதுகாக்கிறதா அல்லது காட்டிக் கொடுக்கிறதா என்பன சுருக்கமான சங்கடங்கள் அல்ல; அவை இம்மக்களின் அன்றாட நெறிமுறைப் போராட்டங்கள். அதேவேளை இங்கு, வெளிப்படையான அரசியல் வெளிப்பாடு கட்டுப்படுத்தப்படும் சூழ்நிலைகளில், அரசியல் மறைந்துவிடாது. அது அமைதியான, குறைவாகக் காணக்கூடிய வடிவங்களுக்கு இடம்பெயர்கிறது.

பேச்சை விட மௌனம், பொது நினைவுகூரலை விட தனிப்பட்ட துக்கம், கூட்டு அணிதிரட்டலை விட உயிர்வாழ்வு என்பனவற்றை மக்கள் தேர்தெடுக்கிறார்கள். ஆனால் இந்தக் களங்களுக்கு வெளியே உள்ளவர்களால் இவை பெரும்பாலும் அரசியல் பின்வாங்கலின் அறிகுறிகளாகப் படிக்கப்படுகின்றன. மானிடவியல் ரீதியாக, அவை கட்டுப்பாட்டால் வடிவமைக்கப்பட்ட தகவமைப்பு அரசியல் நடைமுறைகளாக நன்கு புரிந்து கொள்ளப்படுகின்றன. அவை அரசியல் உணர்வு இல்லாததை அல்ல, மாறாக அதன் மறுசீரமைப்பைப் பிரதிபலிக்கின்றன.

இந்தச் சூழலில் அரசியல் செயற்பாடு என்பது வெளிப்படையான பிரதிநிதித்துவம், அநீதிகளுக்கெதிரான குரல், அரசியல் பங்கேற்பு ஆகிய தாராளவாத அனுமானங்களைக் கொண்டதல்ல. இதைப் பெரும்பாலான ஆய்வுகள் கருத்தில் கொள்வதில்லை. தாராளவாத ஆய்வியல் சட்டகங்களுக்குள் இருந்து இதை ஆய்வுக்குட்படுத்த இயலாது. போருக்குப் பிந்தைய இலங்கையில், முகமை வெளிப்படையான பிரதிநிதித்துவமாக வெளிப்படுவது ஆபத்தானதாக இருக்கலாம்; குரல் எழுப்புதல் கண்காணிப்பை ஈர்க்கக்கூடும்; பங்கேற்பு கூட ஆபத்துகளை உருவாக்கக்கூடும். எனவே, அரசியல் செயற்பாடு பெரும்பாலும் மூலோபாயக் கண்ணுக்குத் தெரியாத வடிவத்தை எடுத்துக்கொள்கிறது.

தோல்வியின் சூழல்களில் சாதாரணத்தின் மானிடவியல் குறிப்பாக முக்கியமானது. எதிர்ப்புக் குறித்த பல மானிடவியல் எழுத்துகள் நாசவேலை, மறுப்பு மற்றும் வெளிப்படையான எதிர்ப்பைக் கொண்டாடுகின்றன. இலங்கையின் போருக்குப் பிந்தைய நிலப்பரப்பில் இத்தகைய செயல்கள் நிச்சயமாக இருந்தாலும், அவை குறைவான முக்கியத்துவம் வாய்ந்த சகிப்புத்தன்மையின் அமைதியான வடிவங்களுடன் இணைந்து வாழ்கின்றன. தோல்வி சாத்தியத்தின் அடிவானத்தை மறுவடிவமைக்கிறது. இது கற்பனை செய்யக்கூடிய, சொல்லக்கூடிய, பின்பற்றக்கூடியவற்றை மாற்றுகிறது. தோல்விக்குப் பிந்தைய அன்றாட வாழ்க்கை, மாற்றத்தை நோக்கியதாக அல்ல, மாறாக, கட்டுப்படுத்தலின் கீழ் தொடர்ச்சியை நோக்கியதாக இருக்கிறது. அரசியல் எதிர்காலங்கள் முன்கூட்டியே மூடப்பட்டதாகத் தோன்றும் சூழலில் மக்கள் குடும்பம், கண்ணியம், குறைந்தபட்ச நிலைத்தன்மையைப் பாதுகாக்க முயல்கின்றனர்.

அத்தகைய நோக்குநிலைகளை செயலற்ற தன்மை அல்லது தவறான உணர்வு என்று நிராகரிக்கக்கூடாது. அவை ஒரு குறிப்பிட்ட வரலாற்று நிலைமைக்கான பிரதிபலிப்புகளாகும். வெளிப்படையான அரசியல் ஈடுபாட்டின் சேதம் அதிகமாக இருக்கும், கட்டமைப்பு மாற்றத்திற்கான வாய்ப்புகள் தொலைவில் இருப்பதாகத் தோன்றும் போது மக்கள் இவ்வாறுதான் இயங்குகிறார்கள்.

## சமூகச் சூழலாகக் கண்காணிப்பு

போருக்குப் பிந்தைய இலங்கையில் கண்காணிப்பு என்பது ஒரு நிகழ்வாக அரிதாகவே அனுபவிக்கப்படுகிறது. நிலையான விசாரணைகள் இல்லை, எங்கும் நிறைந்த சோதனைச் சாவடிகள் இல்லை, அரசின் விழிப்புணர்வைத் தெளிவாகக் குறிக்கும் காணக்கூடிய அவசர நடவடிக்கைகள் இல்லை. அதற்குப் பதிலாக, கண்காணிப்பு ஓர் இயங்கியலாகச் செயற்படுகிறது. மக்கள் சமூக வெளி வழியாக எவ்வாறு நகர்கிறார்கள், ஆபத்தை எவ்வாறு மதிப்பிடுகிறார்கள், சாத்தியமான ஆய்வுக்காக தங்களை எவ்வாறு ஒழுங்குபடுத்துகிறார்கள் என்பதை வடிவமைக்கும் ஒரு பரவலான, சுற்றுப்புறச் சூழலைப் புரிந்து கொள்வது அவசியம்.

இந்த சூழல் முறையான மற்றும் முறைசாரா வழிமுறைகளின் கலவையின் மூலம் உருவாக்கப்படுகிறது. இராணுவப் புலனாய்வுப் பிரிவுகள், காவல்துறை அறிக்கையிடல் கட்டமைப்புகள், உள்ளூர் நிர்வாக மேற்பார்வை, அரசு சாரா நிறுவனக் கண்காணிப்புத் தேவைகள், யார் யாருடன் தொடர்புடையவர்கள் என்பது பற்றிய வதந்திகளின் பரவல் என்பன இவற்றில் சில. முக்கியமாக, கண்காணிப்பு ஒரு நிறுவனத்தில் மையப்படுத்தப்படவில்லை. இது பரவலாக்கப்பட்டுள்ளது, அன்றாடத் தொடர்புகளில் பதிக்கப்பட்டுள்ளது, நிச்சயமற்ற தன்மையின் மூலம் நீடிக்கப்படுகிறது. கிளிநொச்சியில், பல வருட இடப்பெயர்ச்சிக்குப் பிறகு திரும்பிய ஒரு நடுத்தர வயது மனிதர், போர் முடிந்ததிலிருந்து கண்காணிப்பு எவ்வாறு மாறிவிட்டது என்பதை விவரித்தார்:

“போரின் போது, அவர்கள் நேரடியாகக் கேள்விகளைக் கேட்டார்கள். இப்போது அவர்கள் கேட்பதில்லை. அது மிகவும் பயமுறுத்துகிறது. அவர்களுக்கு ஏற்கனவே என்ன தெரியும் என்பது உங்களுக்குத் தெரியாது.”

அவரது சொற்கள் இனவியல் சந்திப்புகளில் மீண்டும் மீண்டும் வரும் கருப்பொருளைப் பிரதிபலிக்கிறது. கண்காணிப்பு என்பது நிச்சயமற்றதாக இருக்கும்போது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வெளிப்படையான கேள்விகள் இல்லாதது சுதந்திரத்தைக் குறிக்காது. தகவல்கள் எங்கே, யாரால், எவ்வாறு என்பன பற்றி அறியாமலேயே ‘அறியப்படுகின்றன’ என்று மக்கள்

அடிக்கடி குறிப்பிடுகின்றனர். இது ஒரு வகையான எதிர்பார்ப்பு இணக்கத்தை உருவாக்குகிறது. அனுமதிக்கப்பட்டதைச் சொல்லக் காத்திருப்பதற்குப் பதிலாக, தனிநபர்கள் கவனிப்பு, வதந்தி மற்றும் கடந்தகால அனுபவத்தின் மூலம் எல்லைகளை ஊகிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். இவ்வாறு கண்காணிப்பின் சூழல் இணக்கத்திற்கான பொறுப்பை இந்த விஷயத்தில் மாற்றுகிறது. மானிடவியல் ரீதியாக, இது உடல்கள் மீது செயற்படும் ஒழுங்குமுறை அதிகாரத்திலிருந்து எதிர்பார்ப்பு மற்றும் கற்பனையின் அடிப்படையில் செயற்படும் ஒரு நிர்வாக வடிவத்திற்கு நகர்வதைக் குறிக்கிறது. மக்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதால் அல்ல, மாறாக அவர்கள் கண்காணிக்கப்படுவதை நிராகரிக்க முடியாததால் தங்களை ஒழுங்குபடுத்துகிறார்கள்.

போருக்குப் பிந்தைய இலங்கையில் கண்காணிப்பு என்பது அரசுக்கும் குடிமகனுக்கும் இடையிலான மேலிருந்து கீழான உறவாக மட்டும் அனுபவிக்கப்படவில்லை. இது கிடை மட்டமாகவும், சமூக உறவுகள் மூலமாகவும் நிகழ்கிறது. அண்டை வீட்டார், சக ஊழியர்கள், உறவினர்கள் கூட வெளிப்பாட்டின் சாத்தியமான வழித்தடங்களாக மாறுகிறார்கள். அவ்வாறு நிகழ்வது பெரும்பாலும் தீங்கு விளைவிக்க வேண்டிய நோக்கத்தால் அல்ல; மாறாக கவனக்குறைவான தொடர்பாடலின் விளைவாலாகும். யாழ்ப்பாணத்தில், ஒரு பல்கலைக்கழக மாணவர் நண்பர்களிடையே கூட அரசியல் விவாதத்தைத் தவிர்ப்பதற்கான காரணத்தை விவரித்தார்:

“நான் அவர்களை நம்பவில்லை என்பதல்ல. அவர்கள் யாருடன் பேசுகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது என்பதே காரணம்.”

இந்த நிச்சயமற்ற தன்மை சமூக நம்பிக்கையைத் துண்டு துண்டாக உடைக்கிறது. இது உறவுகளை அகற்றாது, ஆனால் அது அவற்றை நிபந்தனைக்குட்பட்டதாகவும் எச்சரிக்கையாகவும் ஆக்குகிறது. உரையாடல்கள் அளவீடு செய்யப்படுகின்றன. நெருக்கம் என்பது பங்களிக்கப்படுகிறது. வீட்டில் என்ன சொல்ல முடியும், தனியார் அமைப்புகளில் என்ன சொல்ல முடியும், ஒருபோதும் சத்தமாகச் சொல்லக் கூடாதது எது ஆகியவற்றுக்கு இடையே மக்கள் வேறுபடுத்திக் காட்டுகிறார்கள். இதன் விளைவாக ஓர் அடுக்குச் சமூக உலகம் உருவாகிறது, இதில் பேச்சு உணரப்பட்ட ஆபத்தால் அடுக்கடுக்காக உள்ளது. கண்காணிப்பு இவ்வாறு அரசியல் வெளிப்பாட்டை மட்டுமல்ல, அன்றாட சமூகத்தின் அமைப்பையும் மறுவடிவமைக்கிறது.

**நிகழ்வு 1:**

முல்லைத்தீவில் உள்ள ஒரு கிராமத்தில், உள்ளூர் அபிவிருத்தி நிறுவனம் ஏற்பாடு செய்த ஒரு சமூகக் கூட்டத்திற்கு குடியிருப்பாளர்கள் அழைக்கப்பட்டனர். நிகழ்ச்சி நிரல் வெளிப்படையாக இருந்தது. அது வீட்டுவசதி ஒதுக்கீடும் வாழ்வாதார உதவியும் பற்றியது. ஆனால் வருகை சீரற்றதாக இருந்தது. முந்தைய சமூக அணிதிரட்டல்களில் தீவிரமாக ஈடுபட்ட பல குடும்பங்கள் வரவில்லை. ஏன் என்று கேட்டபோது, ஒரு பெண் அமைதியாக விளக்கினார்:

“கூட்டம் ஆபத்தானது அல்ல. கூட்டத்திற்குச் செல்வது ஆபத்தானது அல்ல. ஆனால் எல்லோரும் நீங்கள் செல்வதைப் பார்த்தால், நீங்கள் ஏன் ஆர்வமாக இருக்கிறீர்கள் என்று கேட்கத் தொடங்குகிறார்கள்.”

கூட்டம் எந்த விதத்திலும் காணக்கூடிய வகையில் கண்காணிக்கப்படவில்லை. வீரர்கள் யாரும் இல்லை, குறிப்புகள் எடுக்கும் அதிகாரிகள் யாரும் இல்லை. இருப்பினும் அதன் சமூகத் தெரிவுநிலை பங்கேற்பை ஒரு கணக்கிடப்பட்ட ஆபத்தாக மாற்றியது. வருகையின்மை உதவியை நிராகரிப்பதல்ல, குறிக்கப்படாமல் இருப்பதற்கான ஓர் உத்தி.

நேரடித் தலையீடு இல்லாமல் கண்காணிப்பு எவ்வாறு செயற்படுகிறது என்பதை இந்த நிகழ்வு விளக்குகிறது. கவனிக்கப்படுவதற்கான எதிர்பார்ப்பு நடத்தையை வடிவமைக்கப் போதுமானது. அதிகாரம் கூட்டத்தில் இல்லை, ஆனால் பங்கேற்புடன் இணைக்கப்பட்ட சமூக அர்த்தங்களில் உள்ளது.

கண்காணிப்புச் சூழலை நிலைநிறுத்துவதில் வதந்தி முக்கிய பங்கு வகிக்கிறது. போராட்டங்களில் கலந்து கொண்ட பிறகு விசாரிக்கப்பட்ட நபர்கள், ஒத்துழைப்பை மறுத்த பிறகு சலுகைகளை இழந்த குடும்பங்கள், எதிர்பாராத விதமாக வரவழைக்கப்பட்ட முன்னாள் பணியாளர்கள் பற்றிய கதைகள் பரவுகின்றன. இந்தக் கதைகள் அரிதாகவே சரிபார்க்கக்கூடியவை, ஆனால் அவற்றின் உண்மை மதிப்பு அவற்றின் ஒழுக்க விளைவை விட உண்மையானது, குறைவான துல்லியமுடையது. வவுனியாவில் உள்ள ஓர் ஆசிரியர் இந்த இயக்கவியலைப் பற்றி விவரித்தார்:

“எல்லாக் கதைகளும் உண்மையா என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் ஒன்று உண்மையாக இருந்தாலும் கூட, அது போதும்.”

வதந்தி ஒரு பகிரப்பட்ட பாதிப்பு உணர்வைத் உருவாக்குகிறது. இது உண்மையான, சாத்தியமான

அச்சுறுத்தலுக்கு இடையிலான வேறுபாட்டை உடைக்கிறது. முன்னெச்சரிக்கை நடத்தையை ஊக்குவிக்கிறது. ஒரு மானிடவியல் கண்ணோட்டத்தில், வதந்தி நிர்வாகத்தின் ஒரு தொழில்நுட்பமாகச் செயற்படுகிறது. அது மையமாக ஒழுங்கமைக்கப்படவில்லை, ஆனால் அது பரவலாக்கப்பட்ட, முறைசாரா முறையில் இருப்பதால் துல்லியமாகப் பயனுள்ளதாக இருக்கும்.

**நிகழ்வு 2:**

கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு கடலோர நகரத்தில், மீனவர்கள் குழு மீன்பிடி விதிமுறைகளில் சமீபத்திய மாற்றங்கள் குறித்து விவாதித்தது. உரையாடல் நிலப் பயன்பாடு, இராணுவக் கட்டுப்பாட்டு மண்டலங்களை நோக்கிச் சென்றபோது, ஒருவர் திடீரென தமிழிலிருந்து சிங்களத்திற்கு மாறி, பின்னர் சிரித்துவிட்டுப் பின்னர் பொதுவான தலைப்புகளுக்குத் திரும்பினார். பின்னர், அவர் விளக்கினார்:

“சில வார்த்தைகள் மக்களைச் சங்கடப்படுத்துகின்றன. அவற்றைப் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. மொழியே பிரச்சினைகளை ஏற்படுத்தும்.”

மொழி இங்கே வெறும் தொடர்பு ஊடகம் அல்ல, அது ஆபத்துக்கான தளம். சில வார்த்தைகள் - ‘தொழில்’, ‘உரிமைகள்’, ‘காணாமல் போதல்’ - அரசியல் பொறுப்பைக் கொண்டுள்ளன. அவற்றைத் தவிர்ப்பது தாராளவாத அர்த்தத்தில் சுய தணிக்கை அல்ல, மாறாக ஒரு கற்றறிந்த உயிர்வாழும் திறன். கண்காணிப்பு இவ்வாறு பேச்சிலேயே ஊடுருவி, மொழியியல் நடைமுறையை மறுவடிவமைக்கிறது. உருவகம், நகைச்சுவை, குறியீடு மாற்றம் ஆகியவை ஆபத்தை வழிநடத்துவதற்கான கருவிகளாகின்றன.

மக்கள் வாழும் சூழல் கண்காணிப்புக்குள்ளாவதன் மிகவும் உளவியல் ரீதியாக அழுத்தமான அம்சங்களில் ஒன்று அதன் காலவரையற்ற தன்மையாகும். போர்க்கால, அவசரகால நடவடிக்கைகளைப் போலல்லாமல், போருக்குப் பிந்தைய கண்காணிப்பு தெளிவான இறுதிப் புள்ளியை வழங்கவில்லை. அது எப்போது குறையும் அல்லது நீங்கும் என்பது மக்களுக்குத் தெரியாது. கிளிநொச்சியில் உள்ள ஒரு முதியவர் இந்தச் சவால் ஏற்படுத்தும் மனரீதியான சோர்வைப் பற்றிக் கூறினார்:

“போரின் போது, நாங்கள் அமைதிக்காகக் காத்திருந்தோம். இப்போது எதற்காகக் காத்திருக்கிறோம் என்று தெரியாமல் காத்திருக்கிறோம்.”

இந்தக் காத்திருப்பு இடைநிறுத்தப்பட்ட எதிர்பார்ப்பு நிலையை உருவாக்குகிறது. வாழ்க்கை தொடர்கிறது - குழந்தைகள் வளர்கிறார்கள், வீடுகள் கட்டப்படுகின்றன, வழக்கங்கள் குடியேறுகின்றன - ஆனால் எப்போதும் திடீரென்று ஏதாவது மாறக்கூடும் என்ற உணர்வு தொடர்ந்து நிலைத்தபடியே இருக்கிறது. இவ்வாறு கண்காணிப்பு பயத்தை மட்டுமல்ல, சோர்வையும் உருவாக்குகிறது.

**நிகழ்வு 3:**

யாழ்ப்பாணத்தில் ஒரு பெண் தலைமைத்துவ வீட்டில், இறந்த மகனின் ‘பிரேம்’ செய்யப்பட்ட புகைப்படம் சுவரில் காட்சிப்படுத்தப்படாமல் ஒரு ‘டிராயரில்’ வைக்கப்பட்டது. ஏன் என்று கேட்டபோது, அம்மா பதிலளித்தார்: “வீட்டின் உள்ளே, நாங்கள் நினைவில் கொள்கிறோம். வெளியே, நாங்கள் கவனமாக இருக்கிறோம்.”

அந்தப் புகைப்படம் சட்டவிரோதமானது அல்ல. இருப்பினும் அதன் தெரிவுநிலை சாத்தியமான ஆபத்தை ஏற்படுத்தியது. அதைப் பொதுவில் காண்பிப்பது கேள்விகள், விளக்கங்கள் அல்லது தேவையற்ற கவனத்தை ஈர்க்கக்கூடும். அதை மறைக்கும் முடிவு துக்கத்தை மறுப்பது அல்ல, கண்காணிப்பின் கீழ் துக்கத்தை மறுகட்டமைப்பதாகும். இந்த நிகழ்வு, கண்காணிப்பு நெருக்கமான இடங்களுக்கு எவ்வாறு ஊடுருவுகிறது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இது பொது நடத்தையை மட்டுமல்ல, தனிப்பட்ட நினைவகத்தையும் நிர்வகிக்கிறது, எதைக் காட்ட முடியும், எதை மறைக்க வேண்டும் என்பதையும் வடிவமைக்கிறது.

போருக்குப் பிந்தைய கண்காணிப்பு கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல்; அது விதிமுறைகளையும் உருவாக்குகிறது. போருக்குப் பிந்தைய ஒரு ‘நல்ல’ குடிமகன் எப்படி இருப்பார் என்பதை இது மறைமுகமாக வரையறுக்கிறது. இணக்கமான, எதிர்கால நோக்குடைய, அரசியலற்ற, அபிவிருத்திக்கு நன்றியுள்ள, இழப்புப் பற்றி அமைதியாக இருக்கின்ற மனிதர்களே நாட்டின் நல்ல குடிமகன்கள். இந்த சுயவிவரத்துடன் பொருந்துபவர்கள் அனைத்திற்குள்ளும் இலகுவாக ஈர்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதற்குள் அடங்குவோருக்கு அபிவிருத்தி, உதவித் திட்டங்கள், நல்லிணக்க முயற்சிகள் மற்றும் புலப்படும் இணக்கத்தை வெகுமதி அளிக்கும் அதிகாரத்துவத் தொடர்புகள் மூலம் இருப்பு வலுப்படுத்தப்படுகிறது.

இவ்வாறு கண்காணிப்பு ஊக்குவிப்புக் கட்டமைப்புகளுடன் கைகோர்த்துச் செயற்படுகிறது, வெளிப்படையான வற்புறுத்தல் இல்லாமல் இணக்கத்தை உருவாக்குகிறது. மானிடவியல் ரீதியாக, இது கண்காணிப்பை ஒரு பாதுகாப்புத் திட்டமாக வெளிப்படுத்துகிறது. இது நடத்தையை மட்டுமல்ல, சுய புரிதலையும் வடிவமைக்கிறது.

சமூகச் சூழ்நிலையாக கண்காணிப்பின் கீழ் வாழ்வது என்பது நிலையான பயங்கரவாதத்தைக் குறிக்காது. பலர் அதைத் தகவமைத்துக் கொள்கிறார்கள், இயல்பாக்குகிறார்கள், கேலி செய்கிறார்கள். நகைச்சுவை பதற்றத்தைப் பரப்புவதற்கான ஒரு வழியாகிறது. வழக்கம் உயிர்வாழ்வதற்கான ஒரு வழியாகிறது. இருப்பினும் இந்தத் தழுவல் ஏற்றுக்கொள்ளலாகத் தவறாகக் கருதப்படக்கூடாது. இனவரைவியல் ரீதியாக வெளிப்படுவது கவனமாக வாழும் ஒரு நிலை. அது, தனிநபர்களும் குடும்பங்களும் தொடர்ந்து ஆபத்தை மதிப்பிடுதல், உறவுகளை மறுபரிசீலனை செய்தல் மற்றும் தெரிவுநிலையை நிர்வகித்தல் போன்ற ஒரு வாழ்க்கை முறை. கண்காணிப்பு, வாழ்க்கை வெளிப்படும் பின்னணியின் ஒரு பகுதியாக மாறுகிறது. இராணுவமயமாக்கப்பட்ட அமைதியைப் புரிந்துகொள்வதற்கு இந்தப் பின்னணி நிலை முக்கியமானது. வன்முறை குறைந்தாலும் கூட அமைதி ஏன் நீடிக்கிறது, அரசியல் அணிதிரட்டல் ஏன் முடக்கப்படுகிறது, போர் இல்லாவிட்டாலும் அன்றாட வாழ்க்கை ஏன் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை இது விளக்குகிறது.

### அமைதி என்பது நடைமுறை

இலங்கையின் வடக்குக் கிழக்கில் போருக்குப் பிந்தைய வாழ்க்கையின் மிகவும் தவறாக விளங்கிக் கொள்ளப்படும் அம்சங்களில் ஒன்று மௌனம். கொள்கை ரீதியான விளக்கங்களில், மௌனம் பெரும்பாலும் சம்மதம், சமரசம் அல்லது அதிர்ச்சியால் தூண்டப்பட்ட பின்வாங்கல் என்று விளக்கப்படுகிறது. சில ஆய்வியல் கணக்குகளில், இது பயம் அல்லது அடக்குமுறையின் சான்றாகக் கருதப்படுகிறது. இந்தக் கட்டுரை வேறுபட்ட அணுகுமுறையை எடுக்கிறது. இது மௌனத்தை ஒரு குறைபாடாக அல்ல, மாறாக ஒரு சமூக நடைமுறையாகக் கருதுகிறது; வேண்டுமென்றே வளர்க்கப்பட்டது, நெறிமுறை ரீதியாக வலியுறுத்தப்பட்டது என்று இது வாதிடுகிறது. முன்னதாகக் கோடிட்டுக் காட்டப்பட்ட முறைசார் சவால்களை முன்னிறுத்துகையில், போருக்குப் பிந்தைய இலங்கையை ஆராய்வது, அரசியல் வாழ்க்கை முதன்மையாகப் பேச்சு வழியாகவே வெளிப்படுகிறது என்ற அனுமானத்தைத் கைவிட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. மௌனம் என்பது மேலிருந்து விதிக்கப்பட்ட ஒரு தடை மட்டுமல்ல. அது அதிகாரத்துடன் ஈடுபடுவதற்கான ஒரு செயலில் உள்ள முறையாகும். இது கண்காணிப்பால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தார்மீகப் பகுத்தறிவு, உறவுமுறைப் பொறுப்பு மற்றும் வரலாற்று நினைவகம் ஆகியவற்றால் வெளிப்படுகிறது. மௌனம் அரசியல் காணாமல் போவதைக் குறிக்கவில்லை. அது அதன் மறுகட்டமைப்பைக் குறிக்கிறது. இந்தப்பகுதி, இனவரைவியல் ரீதியாக, நெருக்கமான, சமூக மற்றும் காலப் பதிவுகளில் செயற்படும் ஒரு நடைமுறையாக மௌனத்தை ஆராய்கிறது. இராணுவமயமாக்கப்பட்ட அமைதியின் கீழ் மௌனம் எவ்வாறு கற்றுக்கொள்ளப்படுகிறது, அது எவ்வாறு பராமரிக்கப்படுகிறது, அன்றாட வாழ்க்கையில் அது என்ன செய்கிறது போன்ற கேள்விகளைக் கேட்கிறது.

போருக்குப் பிந்தைய இலங்கையில் மௌனம் என்பது இயல்பானதல்ல. அது கற்றுக்கொள்ளப்படுகிறது. குடும்பங்கள், பாடசாலைகள், சமூகச் சந்திப்புகளால் வழங்கப்படும் தொடர்ச்சியான வெளிப்படையான, மறைமுகமான பாடங்கள் மூலம் குழந்தைகள், இளம் பருவத்தினர், இளைஞர்கள் மௌனமாக வளர்கிறார்கள். இந்த எச்சரிக்கை கற்பித்தல் முறைகள் அரசியல் அறிவுறுத்தலாக அரிதாகவே வெளிப்படுத்தப்படுகின்றன. அவை பொது அறிவு, முதிர்ச்சி அல்லது கவனிப்பு என வடிவமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் உள்ள ஒரு வீட்டில், ஒரு பாட்டி தனது பேரன் பள்ளியில் கேட்ட ஒரு சொற்றொடரை மீண்டும் மீண்டும் சொன்னபோது அதை எவ்வாறு சரிசெய்தார் என்பதை விவரித்தார்:

“நான் அவனிடம் சொன்னேன், ‘இவை வீட்டுக்கு உள்ளே பேசும் வார்த்தைகள், வெளியே அல்ல.’ அவனுக்கு முதலில் புரியவில்லை. அவன் போருக்குப் பிறகு பிறந்தவன். அதனால் அவன் கற்றுக்கொள்வான்.”

‘உள்ளே’, ‘வெளியே’ பேச்சுக்கு இடையிலான வேறுபாடு இனவியல் தளங்களில் மீண்டும் மீண்டும் வரும் கருப்பொருளாகும். வீடுகள் சில வரலாறுகள், உணர்ச்சிகள், கருத்துகளைக் கூறக்கூடிய இடங்களாக மாறுகின்றன. இருப்பினும் பொது இடங்கள் கட்டுப்பாட்டைக் கோருகின்றன. இங்கே மௌனம் என்பது அறிவு இல்லாதது அல்ல. அது அறிவின் இடஞ்சார்ந்த மேலாண்மை. இந்தக் கற்பித்தலில் ஆசிரியர்கள் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில், பல கல்வியாளர்கள் வகுப்பறை விவாதங்களை எவ்வாறு வழிநடத்துகிறார்கள் என்பதை விவரித்தனர்:

“நாங்கள் அவர்களிடம் பொய் சொல்ல மாட்டோம். ஆனால் நாங்கள் எல்லாவற்றையும் அவர்களிடம் சொல்வதில்லை. கேள்விகளுக்கு எவ்வாறு பாதுகாப்பாகப் பதிலளிப்பது என்பதை நாங்கள் அவர்களுக்குக் கற்பிக்கிறோம்.”

ஒரு இடைநிலைப் பள்ளி ஆசிரியர், வரலாற்றுப் பாடங்கள் எவ்வாறு எச்சரிக்கையால் நுட்பமாக வடிவமைக்கப்படுகின்றன என்பதை விளக்கினார்:

“ஒரு குழந்தை போர் ஏன் நடந்தது என்று கேட்டால், நீங்கள் ‘பாகுபாடு காரணமாக’ என்று சொல்லவில்லை. நீங்கள், ‘அது சிக்கலானது’ என்று சொல்கிறீர்கள். அந்த வார்த்தை - சிக்கலானது - அனைவரையும் பாதுகாக்கிறது.”

இந்தக் கற்பித்தல் மௌனம் அரசியல் நனவை அழிக்காது. அது அதை மறுவடிவமைக்கிறது. அறிவைச் சூழ்நிலைப்படுத்த வேண்டும், வடிகட்ட வேண்டும், நேரத்தை நிர்ணயிக்க வேண்டும் என்பதை இளைஞர்கள் விரைவாகக் கற்றுக்கொள்கிறார்கள். இதனால் மௌனம் சமூகத் திறனின் ஒரு பகுதியாகிறது.

முறையியல் அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டபடி, இத்தகைய கற்றறிந்த மௌனங்கள் நேரடி கேள்வி கேட்பதை நம்பியிருக்கும் ஆராய்ச்சி முறைகளுக்கு ஒரு சவாலாக அமைகின்றன. ஆசிரியர்கள் பதிலளிக்கவில்லை அல்லது சுற்றிச் சுற்றி மறைமுகமாகப் பதிலளிக்கிறார்கள் என்றால், இது அவசியமாக நல்லுறவின் தோல்வி அல்ல. இது அன்றாட வாழ்க்கையில் பொதிந்துள்ள நீண்டகால எச்சரிக்கை நடைமுறைகளைப் பிரதிபலிக்கிறது.

மௌனம் பெரும்பாலும் பயத்தினால் மட்டுமல்ல, மற்றவர்களுக்கான நெறிமுறைப் பொறுப்பினாலும் கடைப்பிடிக்கப்படுகிறது. பேசுவது பேச்சாளருக்கு மட்டுமல்ல, குடும்ப உறுப்பினர்கள், அண்டை வீட்டார் அல்லது சக ஊழியர்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும். இதனால் மௌனம் ஓர் உறவுச் செயலாக மாறுகிறது.

வவுனியாவில் ஒரு பெண் தலைமைத்துவ வீட்டில், தனிப்பட்ட உரையாடல்களில் நீண்ட நேரம் பேசிய போதிலும், போர்க்கால இடப்பெயர்ச்சி குறித்த ஒரு நேர்காணலில் பங்கேற்க மறுத்ததற்கான காரணத்தை ஒரு தாய் விளக்கினார்:

“நீங்கள் போய்விடுவீர்கள். நான் இங்கேதான் இருக்க வேண்டும். என் மகள் இங்கே என்னோடு தான் இருக்கிறாள். நான் சொல்வது ஏதாவது பிரச்சினையை ஏற்படுத்தினால் அது எங்களைத் தானே பாதிக்கும்.”

அவருடைய முடிவு அறியாமையிலோ அல்லது கருத்து இல்லாமையிலோ வேரூன்றவில்லை. இது சமச்சீரற்ற ஆபத்தால் வடிவமைக்கப்பட்ட ஒரு கணக்கீடு. குடும்பங்களுக்குள்ளும் மௌனம் செயற்படுகிறது. குழந்தைகள் அல்லது வயதான பெற்றோருடன் சில தலைப்புகளைப் பற்றி விவாதிக்கக்கூடாது என்ற வேண்டுமென்றே எடுக்கப்பட்ட முடிவுகளைப் பற்றி பல உரையாடல் நிபுணர்கள் விவரித்தனர். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு தந்தை விளக்கினார்:

“என் மகன் தன் மாமாவுக்கு என்ன நடந்தது என்பதை அறிய விரும்புகிறான். நான் அவனிடம் பிறகு சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அவன் எத்தனை முறை கேட்டாலும் என் பதில் எப்போதும் ‘பிறகு’ என்பதுதான். ஏனென்றால் அவனுக்குத் தெரிந்தவுடன் அவன் பேசுவான். அவன் பேசியவுடன், அவன் வார்த்தைகள் எங்கு செல்கின்றன என்பதை என்னால் கட்டுப்படுத்த முடியாது.”

இங்கே, மௌனம் ஓர் அக்கறையின் செயலாகச் செயற்படுகிறது. அது உடல் பாதுகாப்பை மட்டுமல்ல, சமூகச் சாத்தியத்தையும் பாதுகாக்கிறது. அதிகமாக அறிந்திருப்பது அல்லது அதிகமாக வெளிப்படையாக அறிந்திருப்பது எதிர்காலங்களைத் திறப்பதற்குப் பதிலாக அவற்றை மூடக்கூடும். மானிடவியல் ரீதியாக, மௌனம் எப்போதும் ஆதிக்கத்தின் அடையாளம் என்ற தாராளவாத அனுமானங்களை இது சிக்கலாக்குகிறது. இந்தச் சூழல்களில், மௌனம் என்பது சரணடைவை விட பொறுப்பால் வடிவமைக்கப்பட்ட நெறிமுறை நிறுவனத்தின் வெளிப்பாடாக இருக்கலாம்.

போருக்குப் பிந்தைய இலங்கையில் மௌனத்தின் மற்றொரு முக்கியமான பரிமாணம் நினைவாற்றல் பற்றியது. குறிப்பாக இழப்பு, வன்முறை, தோல்வியின் நினைவுகள் பற்றியது. பல ஆய்வாளர்கள், இந்த அனுபவங்களை விவரிக்க மறுக்கிறார்கள். அவர்கள் மறந்துவிட்டதால் அல்ல; மாறாக, அந்தக் கதைகள் பிரித்தெடுக்கும் தன்மையுடையனவாகவும், ஆபத்தானவையாகவும், தார்மீக ரீதியாக மிகுந்த சுமையுடையனவாகவும் மாறிவிட்டதாலேயே சொல்லப்படாமல் இருக்கின்றன. முல்லைத்தீவில், போரின் இறுதிக் கட்டங்களில் பல குடும்ப உறுப்பினர்களை இழந்த ஒருவர் தனது கதையைப் பகிர்ந்து கொள்ள அழைப்பு விடுத்ததற்கு அமைதியான மறுப்புடன் பதிலளித்தார்:

“எல்லோரும் எங்கள் கதையைச் சொல்லச் சொல்கிறார்கள். பத்திரிகையாளர்கள், அரசு சாரா நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள். நாங்கள் அதைச் சொல்கிறோம், பிறகு என்ன? எங்கள் கதை

பயணிக்கிறது. நாங்கள் இங்கேதானே இருக்கிறோம்."

இந்த மறுப்பு பிரித்தெடுக்கும் கதைசொல்லல் முறை பற்றிய அத்தியாயத்தில் எழுப்பப்பட்ட கவலைகளை எதிரொலிக்கிறது. இங்கே மௌனம் என்பது நினைவாற்றல் இல்லாமை அல்ல; நினைவாற்றல் எவ்வாறு நுகரப்படுகிறது, பரப்பப்படுகிறது, பெரும்பாலும் பொறுப்புக்கூறலில் இருந்து பிரிக்கப்படுகிறது என்பதற்கான விமர்சனமாகும்.

காணாமல் போன உறவினர்களின் பல பெண்கள் இதே போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தினர். கிளிநொச்சியில் ஒரு போராட்டக்காரர் கூறினார்:

"நாங்கள் ஏற்கனவே அதிகமாகப் பேசியுள்ளோம். நாங்கள் ஆணைக்குழுக்களிடம், அதிகாரிகளிடம், வெளிநாட்டினரிடம் பேசினோம். பேசுவது அவர்களை மீண்டும் கொண்டுவரவில்லை. அது எமக்குத் தீர்வைத் தரவில்லை, இப்போது மௌனம் காப்பதே எங்கள் கண்ணியம்."

இந்த அர்த்தத்தில், மௌனம் என்பது தார்மீக மறுப்பின் ஒரு வடிவமாக மாறுகிறது - பார்வையாளர்களின் முன் துன்பத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரிப்பது, அது மாற்றத்தை ஏற்படுத்தாது என்ற உறுதியான நம்பிக்கையிலிருந்தே உருவாகிறது.

சாட்சியத்தை இயல்பாகவே விடுதலையானதாக மதிப்பிடும் மானிடவியல் மரபுகளையும் இந்த மறுப்பு சவாலுக்குட்படுத்துகிறது. முறையியல் பகுதியில் விவாதிக்கப்பட்டபடி, விவரிப்பதை வலியுறுத்துவது, பங்கேற்பாளர்களை ஆபத்துக்கு ஆளாக்குவதன் மூலமோ அல்லது அவர்களின் வலியைப் பண்டமாக்குவதன் மூலமோ தீங்கு விளைவிக்கும். மௌனம் ஒரு எல்லையைக் குறிக்கிறது, அறிவார்ந்த ஆர்வத்தைப் பொருட்படுத்தாமல், அதைத் தாண்டி அறிவு வழங்கப்படாது என்பதை உணர்த்துகிறது.

போருக்குப் பிந்தைய இலங்கையில் மௌனம் என்பதும் பயம் அல்லது நெறிமுறைகளை மட்டுமல்ல, சோர்வையும் பிரதிபலிக்கிறது. பல தசாப்த காலப் போர், இடப்பெயர்வு, விசாரணை, நிச்சயமற்ற தன்மைக்குப் பிறகு, பலர் பேசுவதில் சோர்வடைகிறார்கள். கிளிநொச்சியில் உள்ள ஒரு வயதான பெண்மணியிடம், நல்லிணக்கம் பற்றிக் கேட்டபோது, வெளிப்படையான எரிச்சலுடன் பதிலளித்தார்:

"அவர்கள் எங்களைப் பேசவும், குணமாகவும், முன்னேறவும் சொல்கிறார்கள். நாங்கள் பேசுவதில் சோர்வாக இருக்கிறோம். எங்களுக்கு ஓய்வு வேண்டும்."

இந்தச் சோர்வு அக்கறையின்மை அல்ல, அது நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளின் திரட்டப்பட்ட விளைவாகும். தொடர்ந்து காயங்களை மீண்டும் திறக்காமல், மௌனம் தாங்கும் ஒரு வழியாகிறது. போருக்குப் பிந்தைய வாழ்க்கையை வரையறுக்கும் காத்திருப்பு நிலையை தற்காலிக மௌனம் பிரதிபலிக்கிறது. மக்கள் நிலம் திரும்பக் கிடைக்கும் வரை, காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களுக்காக, கண்காணிப்பு எளிதாக்கப்படும் வரை, அரசியல் இடம் மீண்டும் திறக்கப்படும் வரை காத்திருக்கிறார்கள். பேசுவது இந்தச் செயல்முறைகளை துரிதப்படுத்தாது. சில நேரங்களில் அது அவற்றைத் தாமதப்படுத்துகிறது.

ஒரு முன்னாள் உள்ளூர் அதிகாரி இதை நடைமுறை ரீதியாக விளக்கினார்:

"விஷயங்கள் உறைந்திருக்கும் போது, சத்தமாகப் பேசுவது அவற்றை உருக்காது. சில நேரங்களில் காத்திருப்பு மட்டுமே எஞ்சியிருக்கும் செயல்."

இந்த வகையான காத்திருப்பு பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளுதல் அல்லது சமரசம் என்று தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. மானிடவியல் ரீதியாக, இது கட்டுப்பாட்டுக்குக் கீழ் சகிப்புத்தன்மை என்று சிறப்பாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. இது உண்மையில் தெளிவான தீர்மானத்தை வழங்காத ஒரு தற்காலிக எல்லைக்குள் வாழ்வதற்கான ஓர் உத்தி.

அத்தகைய காத்திருப்பு இத்தகைய ஆய்வுகளுக்கான காலக்கெடுவைச் சிக்கலாக்குகிறது என்பதை முறையியல் அத்தியாயம் வலியுறுத்துகிறது. மாற்றத்தின் கதைகளைத் தேடி அறிஞர்கள் வருகிறார்கள். அவர்களது எதிர்பார்ப்புக்கு மாறாக இடைநிறுத்தம், ஒத்திவைப்பால் கட்டமைக்கப்பட்ட ஒரு சமூக உலகத்தை எதிர்கொள்கிறார்கள். இங்கே மௌனம் என்பது ஆராய்ச்சியாளருக்கு எதிர்ப்பு அல்ல. அது போருக்குப் பிந்தைய வாழ்க்கையின் தற்காலிகத்தன்மையின் பிரதிபலிப்பாகும்.

இவையனைத்தையும் ஒன்றாக எடுத்துக்கொண்டால், இந்த இனவியல் கணக்குகள் போருக்குப் பிந்தைய இலங்கையில் மௌனம் ஒரு வெற்றிடமல்ல என்பதை நிரூபிக்கின்றன. இது அரசியல் வாழ்க்கையின் ஒரு கட்டமைக்கப்பட்ட, நடைமுறைப்படுத்தப்பட்ட அர்த்தமுள்ள வடிவம். இது சமூகமயமாக்கல் மூலம் கற்றுக்கொள்ளப்படுகிறது, நெறிமுறைப் பகுத்தறிவு மூலம் இயற்றப்படுகிறது, மறுப்பாக

அணிதிரட்டப்படுகிறது, சகிப்புத்தன்மை மூலம் நிலைநிறுத்தப்படுகிறது. மௌனம், மக்கள் நிலையான மோதல் இல்லாமல் கண்காணிப்பை வழிநடத்த அனுமதிக்கிறது. இது உறவுகளைப் பாதுகாக்கிறது, கண்ணியத்தைப் பாதுகாக்கிறது, ஆபத்தை நிர்வகிக்கிறது. தற்போதைய நிலைமைகளின் கீழ் மாற்றக்கூடியவற்றின் வரம்புகளையும் இது சமிக்ஞை செய்கிறது. மானிடவியலைப் பொறுத்தவரை, மௌனத்தை நடைமுறையாக அங்கீகரிப்பதற்கு வழிமுறைக் கட்டுப்பாடும் தத்துவார்த்தச் மறுசீரமைப்பும் தேவைப்படுகிறது. முறையியல் பகுதியில் வாதிடப்பட்டது போல், பணி வெளிப்பாட்டைக் கட்டாயப்படுத்துவது அல்ல; மாறாக, மௌனம் என்ன செய்கிறது என்பதைப் புரிந்துகொள்வதுதான்.

## நிறைவுக் குறிப்புகள்

இக்கட்டுரை, இலங்கையின் போருக்குப் பிந்தைய நிலையைப் புரிந்துகொள்வதற்கான ஒரு மையப் பகுப்பாய்வாக அன்றாட வாழ்க்கையை நிறுவியுள்ளது. அமைதி என்பது ஒரு நிறுவன ஏற்பாடு அல்லது ஒரு தற்காலிக அடையாளங்காட்டி மட்டுமல்ல, நெறிமுறை வாழ்க்கையை மறுசீரமைக்கும் ஓர் ஆட்சி முறை என்பதை இது காட்டுகிறது. கண்காணிப்பு, மௌனம், தார்மீகப் பேச்சுவார்த்தை மற்றும் உயிர்வாழ்வு ஆகியவை புற நிகழ்வுகள் அல்ல. அவை போருக்குப் பிந்தைய ஆட்சி வாழவும் நிலைநிற்கவும் பயன்படுத்தப்படும் வழிமுறைகள்.

இலங்கையில் ‘போருக்குப் பிந்தைய’ பிரச்சினை, நீதி ஒத்திவைக்கப்பட்டது என்பது மட்டுமல்ல. ஒத்திவைப்பை வாழக்கூடியதாக மாற்றுவதற்காக அன்றாட வாழ்க்கையே மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய மறுசீரமைப்பு ஒருபோதும் வெறும் கலாசார ரீதியானது அல்ல, வெறும் உளவியல் ரீதியானது அல்ல, வெறும் அரசியல் ரீதியானது அல்ல. இதை இலங்கையின் தலையாய மானிடவியலாளர்களான கணநாத் ஒபேயசேகரவும் எஸ்.ஜே. தம்பையாவும் நமக்கு நினைவூட்டுகிறார்கள். அவற்றை இன்னொரு கட்டுரையில் விரிவாகப் பார்க்கலாம்.

களஆய்வுகளின் போது, நான் ஒரு பார்வையாளராக மட்டும் அல்லாமல், நான் ஆய்வு செய்து கொண்டிருந்த நெறிமுறை நிலப்பரப்பின் உட்பகுதியில் ஒரு பங்கேற்பாளராகவும் தார்மீக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதை உணர்ந்த தருணங்கள் இருந்தன. கிளிநொச்சியில் ஒரு மாலைப் பொழுதில், ஒரு பங்கேற்பாளர் கடந்தகால இணைப்புகளைப் பற்றி வெளிப்படையாகப் பேசத் தொடங்கினார், பின்னர் திடீரென நிறுத்தி, “இந்த விசயங்களை எழுதாதீர்கள்” என்று கூறினார். கோரிக்கை பயமாக வடிவமைக்கப்படவில்லை, ஆனால் பொறுப்பாக வடிவமைக்கப்பட்டது. “பேசோணும் போல இருந்தது. நான் பேசிவிட்டேன்” என்று அவர் கூறினார். “அதை என்ன செய்வது என்று நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.”

அந்தத் தருணம் முறையியல் ரீதியான ஆய்வியல் சவால்களைப் பேசிய முன்னைய கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ள சமச்சீரற்ற தன்மையைப் படிகமாக்கியது. நான் அக்களத்தில் இருந்து வெளியேற முடியும். அவரால் அது இயலாது. பகிரப்பட்ட அறிவு அவருக்கு மட்டும் சொந்தமானது அல்ல. அது எல்லைகள், நிறுவனங்கள், பார்வையாளர்களைக் கடந்து நான் கொண்டு செல்லும் ஒன்றாக மாறியது. சில விவரங்களைச் சேர்க்க வேண்டாம் என்று தேர்ந்தெடுப்பது தணிக்கைச் செயல் அல்ல, அது என் பங்கேற்பாளர்களின் மௌனங்களைக் கட்டமைத்த அதே தர்க்கத்தால் வடிவமைக்கப்பட்ட ஒரு நெறிமுறை முடிவாகும். அவர்களைப் போலவே, நான் ஆபத்தைக் கணக்கிடுகிறேன், பொறுப்பை எடைபோட்டு, முழுமையற்ற தன்மையை ஏற்றுக்கொண்டேன். இந்தப் பிரதிபலிப்பு அங்கீகாரம் முக்கியமானது, ஏனெனில் இது தார்மீகப் பேச்சுவார்த்தை என்பது ‘பொருள்கள்’ மட்டுமே செய்யும் ஒன்று என்ற மாயையைச் சீர்குலைக்கிறது. ஆராய்ச்சியாளர்களும் போருக்குப் பிந்தைய தார்மீகத் துறையில் வசிக்கின்றனர். நமது முடிவுகள் - எதைக் கேட்க வேண்டும், எதை வெளியிட வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும் - நாம் பகுப்பாய்வு செய்யும் நெறிமுறைகளுக்குப் புறம்பானவை அல்ல. அவை ஒரே நிலப்பரப்பின் ஒரு பகுதியாகும்.

இவையனைத்தையும் ஒன்றாக எடுத்துக்கொண்டால், இந்த இனவரைவியல் நிகழ்வுகள் போருக்குப் பிந்தைய வாழ்க்கையின் இரண்டாம் நிலை அம்சம் அல்ல. அது அதன் மைய அரசியல் வடிவம் என்பதைக் குறிக்கின்றன.

இதைப் புரிந்துகொள்ள ஆழமான ஆய்வியல் முறைகளும் பார்வையும் அவசியம். மேற்சொன்னவை, போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கை ஆராய்வதில் உள்ள முக்கியமான ஆய்வியல் சவால்கள். மொத்தத்தில், இவை போருக்குப் பிந்தைய வாழ்க்கையைப் புரிந்துகொள்ள, மானிடவியல் ரீதியான விரிவான ஆய்வுக்கான தேவையைக் குறித்து நிற்கின்றன.

# வி.எஸ். கோவிந்தசாமி:
## நாடற்றவர்களுக்காக ஒலித்த உரிமைக்குரல்

இலங்கையின் மலையக நாட்டார் மரபு, அழகியலையும் வாழ்வியலையும் மட்டுமல்ல; எதிர்ப்புவாதச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துபவை. சமூக அடக்குமுறைகளுக்கு எதிராக மலையக மக்களிடையே தோன்றிய எதிர்ப்புணர்வுகள் பல்வேறு கலைவடிவங்களாகவும் உருமாறியுள்ளன. அவ்வகையில் சமூக அடையாளச் சிக்கல், உரிமை மறுப்பு, வரலாற்றுப் புறக்கணிப்பு, பொருளாதாரத் திண்டாட்டம் ஆகிய அனுபவங்களின் எதிரொலியாக, 'மலையக வீதிப்பாடல்கள்' உருவாகுவதைக் காண்கின்றோம். முச்சந்தி இலக்கிய வகையின் ஒரு முக்கியகூறாக விளங்கும் இப்பாடல்கள், எழுச்சிக் கோசங்களையும், அரசியற் சிந்தனைகளையும் முன்வைப்பவை. இப்பாடல்கள் சித்திரிக்கும் விடயப்பரப்புகளையும், அவற்றை இயற்றிய பாடலாசிரியர்களையும், அவர்களுக்குப் பின்னணியாக அமைந்த சூழ்நிலைகளையும் ஆவணப்படுத்தும் நோக்கம் கருதியதாக 'மலையக வீதிப்பாடல்கள்: சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள்' எனும் இத்தொடர் பரிணமிக்கும். தலைப்பில் அமைந்தது போலவே, அவ்வாறு எழுந்த பாடல்கள் ஏற்படுத்திய சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள் தொடர்பிலும் இத்தொடரின் உள்ளடக்கம் விரிவுபெறும்.


### அருணாசலம் லெட்சுமணன்



'ம.மா கொத் உனுக்கொட்டுவ தமிழ் வித்தியாலயத்தின்' அதிபரான அருணாசலம் லெட்சுமணன், 'நிகர்' சமூக கலை இலக்கிய அரங்கத்தின் பிரதம அமைப்பாளருமாவார். தேசிய, பன்னாட்டு ஆய்வரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்து வருகிறார். 2023இல் மலேசியாவில் இடம்பெற்ற பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஓர் ஆய்வுக்கட்டுரையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய, பன்னாட்டு இதழ்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். பயண இலக்கியங்கள், சமூக, கலை, இலக்கிய, கல்வித்துறைச் செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். இவர் ஒரு கவிஞருமாவார். சிறுவர் பாடல்கள், சிறுவர் இலக்கியம் தொடர்பான விமர்சனங்கள், ஆய்வுகளை தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுவர் கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர்.

தற்காலிக வதிவிட விசாவில் இலங்கை வந்த வி.எஸ். கோவிந்தசாமி தேவர், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்கத்தின் கொழும்பு பணிமனையில் கடமையாற்றி, எழுபதுகளில் தாயகம் திரும்பியுள்ளார். ஐம்பதுகள் முதல் நாடு திரும்பும் வரை பல பாடல் நூல்களை வெளியிட்டுள்ளார். ஏனையோரைப் போல் பிரஜாவுரிமை மறுப்பைப் பற்றிப் பாடியுள்ள இவர், தற்காலிக வதிவிட விசாவில் வந்த இந்தியத் தமிழர்கள் முகங்கொடுத்த பிரச்சினைகளைப் பற்றியும் எழுதியுள்ளார். வதிவிட விசாவில் வந்தவர்களின் பிரச்சினை பற்றி இவர் மட்டுமே எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது (பெ. முத்துலிங்கம், பரதேசம் போன தமிழர்களின் பரிதாபப் பாடல்கள், பக். 222).

வி.எஸ். கோவிந்தசாமி எட்டியாந்தோட்டையில் இருந்து மிகுந்த துடிப்போடு செயற்பட்ட கவிஞர். குரல்வளமும் கம்பீரத் தோற்றமும் இவருக்குக் கிடைத்த கொடைகளாகும். 'தமிழ்மணி முரசு' என்ற தலைப்பில் இவர் எழுதிய பாடல்கள் அரசியல் வயமானவை (சாரல் நாடன், மலையகம் வளர்த்த தமிழ், பக். 123).

வீதிப்பாடகர்கள் அன்று ஒரு சமூகப் பணியாகவே இந்தத் துறையில் இயங்கினார்கள். தங்களுடைய அறிவுக்கேற்றவாறு சமூக சிந்தனையாளர்களாக இருந்த காரணத்தால், இவர்கள் தொழிலாளர்களை எழுச்சி பெறச் செய்வதில் முழு ஆர்வம் கொண்டிருந்தார்கள். தொழிற்சங்கத் தலைவர்களை விட, இவர்கள் தொழிலாளர்களைத் தட்டியெழுப்பி வீறு கொண்டு செயல்படுவதற்குப் பிரசாரம் செய்பவர்களாக இருந்துள்ளனர் (மு. சிவலிங்கம், மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள், பக். 72).

நாற்பது, ஐம்பதுகளில் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வளவு தூரம் சுரண்டப்பட்டு வந்துள்ளனர் என்பதை வி.எஸ். கோவிந்தசாமியின் பாடல்கள் பதிவு செய்கின்றன (பேராசிரியர் செ. யோகராசா, ஈழத்து முச்சந்தி இலக்கியம், பக். 54).

ஐம்பதுகளில் இந்திய வம்சாவளி மக்கள் எதிர்கொண்ட சிக்கல்கள் தொடர்பில் தனது பாடல்கள் ஊடாகத் தெளிவான விளக்கத்தைப் பதிவு செய்துள்ள ஆளுமையாக வி.எஸ். கோவிந்தசாமி விளங்குகிறார். தொழிற்சங்கச் செயற்பாட்டாளராகத் தொழிற்பட்ட நிலையில், தொழிலாளர்கள் வஞ்சிக்கப்படும் சூழ்நிலைகளைப் பற்றிய தெளிவான அறிவும் இவருக்கு இருந்தது. பாதிக்கப்படுபவர்கள் தொடர்பான கரிசனையுணர்வும் இரக்க உணர்வும், அந்நிலைமை தொடர்பான எதிர்ப்புணர்வும் இவரில் பொதிந்திருந்தமையினாலே இவரால் வீச்சுமிக்க




**தமிழ்மணி முரசு**

பாடல்களைப் புனைய முடிந்துள்ளது. அப்பாடல்கள் வரலாற்றையும், வரலாற்றுச் சம்பவங்களையும், பாதிப்புச் சூழ்நிலைகளையும் சித்தரிப்பதோடு, அப்பாதிப்பு நிலைகளில் இருந்து மீண்டெழுவதற்கான வழிமுறைகள் பற்றிய எத்தனிப்புகளையும் உட்சுமந்துள்ளதை அறிய முடிகிறது. சமூகம் ஒன்றின் எழுச்சிக்கான கோசங்களை விதைத்ததன் விளைவாகவே காலம் கடந்தும் வி.எஸ். கோவிந்தசாமி பேசப்படுகிறார். வி.எஸ். கோவிந்தசாமி எத்தகைய எண்ணங்களைப் பாடல்கள் ஊடாக விதைத்துச் சென்றார் என்பது பற்றிய தேடலுக்கு அவரது பாடல்களை உற்று நோக்க வேண்டியது அவசியமாகிறது.

வி.எஸ். கோவிந்தசாமி வெளியிட்ட நூல்களில் கிடைக்கப்பெற்ற ஆவணங்களைக் கொண்டு அவதானிக்கின்ற போது, 'மக்கள் குரலெனும் தமிழ் மணிமுரசு' என்ற சிற்றிலக்கியமே முதலாவதாக இனங்காணப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது. 13.04.1956 இல் பிரசுரம் பெற்ற இந்நூலை பி.எஸ். பாண்டியத்தேவர் பதிப்பித்துள்ளார். இந்நூலின் விநியோக நடவடிக்கைகள் நொம்பர் 73, ஹவ்லொக் ரோடு, கொழும்பு 5 என்ற முகவரியில் இருந்து இயங்கிய பாண்டியன் புக்ஸ்டாலில் இருந்து இருபத்தைந்து சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. பதினைந்து பக்கங்களுடன் வெளிவந்த இந்த நூலில் நான்கு தொடர் பாடல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 'தமிழ் மணி முரசு - முதலாம் பாகம்' எனத் தலைப்பிடப்பட்டுள்ள பாடல் நான்கு வரிகளாக அமைக்கப்பட்டு, பதினாறு அடிகளைக் கொண்டதாக அமைகிறது. பொதுவாக

வீதிப்பாடல்கள் ஏற்கனவே பாடப்பட்ட பாடல்களின் மெட்டில், அப்பாடல்களின் வரிகளுக்கு ஒத்த வகையிலேயே அமைவதுண்டு. மாறாக, இத்தொகுப்பில் அமைந்த பாடல்கள் நீண்ட வரிகளுடன் புனையப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

"தோட்டத்து மக்களே பாட்டையும் படிக்கிறேன்
போட்டியும் பெருசாச்சு
தொல்லையுந் துயரமும் வர வர இலங்கையில்
சட்டமும் விரிவாச்சு
நாட்டுக்குச் சுதந்திரங் கொடுத்திட்ட வெள்ளையர்
கூட்டியும் வந்தாங்க
நன்னகரிந்திய நாட்டுத்தரகர் பலர்
காட்டியுந் தந்தாங்க"

எனத் தொடங்கும் பாடல் மிகுந்த அவதானத்தைப் பெறுகிறது. பிரித்தானியக் காலனித்துவக் காலத்தில், வறுமையின் நிர்ப்பந்தத்தால் தென்னிந்தியாவில் இருந்து தமிழர்கள் புலம்பெயர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவர்களைக் கட்டாயப்படுத்தி அழைத்து வருவதிலும் பலர் ஆர்வம் செலுத்தியிருந்தனர். தரகுப் பணத்தைப் பெற்றுக்கொள்வதையே நோக்கமாகக் கொண்டு, இதனை ஒரு தொழிலாகக் கருதி அவர்கள் இதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தனர். இத்துறையில் ஈடுபட்ட கங்காணிகள், முகவர்கள் போன்றோர் தரகுக்கூலியைப் பெற்று வந்தனர். ஆள்கட்டும் நடவடிக்கையில் அதீத வருமானத்தை மாத்திரமே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டனர். கடல் மார்க்கமாக அழைத்து வருகின்ற போது, போக்குவரத்து முறைமையில் எதுவித உத்தரவாதமற்ற தன்மையே காணப்பட்டது. அவ்வாறே, மன்னார் தொடக்கம் கண்டி வரை தரைவழிப் பாதைகளும் பாதுகாப்புத் தொடர்பாக எவ்வித உத்தரவாதமும் அற்ற நிலையில் இருந்தன. கால்நடையாக மேற்கொண்ட அந்தப் பயணம், பல அலைச்சல்களையும் ஆபத்தான சூழல்களையும் எதிர்கொள்ள வேண்டிய ஒன்றாக அமைந்தது. அதனை எடுத்துச் சொல்லும் வகையில் வி.எஸ். கோவிந்தசாமி பின்வருமாறு பாடலைத் தொடர்ந்துள்ளார்.

"சட்டி சோறு கறி தட்டப்பாரை இரை
எட்டு நாள் உணவாச்சி
சமர்த்தன் கருப்பனுக்கும் தாட்டுப் புழுவனுக்கும்
நோட்டுகள் பணமாச்சி
கட்டுமரந் தோணி வள்ளமும் ஏற்றிடக்
கலங்கியும் அழுதாச்சி
காத்தன் கருப்பனுக்கும் கடலுப்புழுவனுக்கும்




இலட்சிய முழக்கம்

கையிலே பணமாச்சி
கருத்தை மாட்டு வண்டி முடக்கு ரோட்டு வழி
கானகம் கடந்தாச்சி
கானகங் குகை மலை வனங்கள் பல கடந்து
கண்டியும் வந்தாச்சி"

அதன் தொடர்ச்சி நிலையில், உழைப்பை அப்பணிக்கு அர்ப்பணித்த இம்மக்கள் முகங்கொடுத்த பிரச்சினைகளையும் சட்டரீதியிலான சிக்கல் நிலைகளையும் இப்பாடல் ஊடாக எடுத்துரைப்பதை அவதானிக்கலாம். இந்திய வம்சாவளி மக்கள், இலங்கைக்கான புலப்பெயர்வில் அனுபவித்த இன்னல்கள் ஏராளம். உழைப்புச் சுரண்டல் கட்டாயமாக்கப்பட்டிருந்த போதிலும், தொழிலாளர்கள் மனமுவந்து ஆற்றிய அர்ப்பணிப்பே இலங்கையின் பெருந்தோட்டக் கட்டமைப்பு வளர்ச்சி பெறுவதற்கு முதன்மையான காரணியாக அமைந்தது. அவ்வாறு தங்களை வதைத்து உழைப்பில் ஈடுபட்ட போதிலும், மாற்றாந்தாய் மனப்பாங்குடனே இம்மக்கள் அணுகப்பட்டமை குறித்த ஆதங்கம் இப்பாடலாசிரியரில் பொதிந்திருப்பதை அவதானிக்கலாம். உரிமைகள் தொடர்பாகவும், தமிழ்மொழி அமுலாக்கம் தொடர்பிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எதிர்க்கப்படும் நிலைமை பற்றியும் தனது பாடல் ஊடாக வலியுறுத்தியுள்ளமையை பின்வரும் அடிகள் மூலம்

அவதானிக்கலாம்.

"அரசாங்க சபையிலே பிரஜா உரிமைச் சட்டம்
அம்பலப் பேச்சாச்சி
அழகு தமிழ்மொழிக்கு சரிசமம் கொடுத்திட
அதுக்கொரு எதிர்ப்பாச்சி".

குறித்த நாள் ஒன்றில் தோட்டங்களில் தொழிலாளர்கள் படும் அவஸ்தைகளை எடுத்துரைக்கும் முனைப்போடு வி.எஸ். கோவிந்தசாமி அவர்கள் 'தொழிலாளர் படுந்துயரம்' எனும் தலைப்பில் தலா நான்கு வரிகளில் நாற்பத்தெட்டு அடிகளுடன் ஒரு பாடலை அமைத்திருக்கின்றார்.

"ஆறுமணியாகு முன்னே
அடிச்சிடுவாந் தப்பு
அரண்டரண்டு எழுந்திருப்பார்
தொழிலாள மக்கள்"

எனத் தொடர்ந்து கணக்கப்பிள்ளை மற்றும் கங்காணிகளின் அடக்குமுறை தரும் துயரங்களையும் இப்பாடல் துல்லியமாகப் பதிவு செய்கிறது. கொழுந்து பறிக்கும் களத்தில் ஏற்படும் இன்னல்கள், அட்டைக் கடிகளின் அவஸ்தை ஆகியவற்றுடன், அதிகாலையிலேயே வீட்டுப் பொறுப்புகளையும் பிள்ளைகளைப் பராமரிக்கும் கடமைகளையும் சுமந்து கொண்டு தொழில்களம் நோக்கி விரையும் தொழிலாளர்களின் வாழ்வியலையும் இப்பாடலின் உள்ளடக்கம் பிரதிபலிக்கிறது குறிப்பாக அட்டைக் கடி தரும் வேதனை பாடலில் பின்வருமாறு உள்ளடக்கப்பட்டுள்ளது.

"குடித்து திரம் ருசிகண்ட
ராம அட்டைக்கூட்டம்
கோபமுடனப்பிடவே
குழறி மனவாட்டம்
நெழி நெழிஞ்சி முளம்போடும்
அட்டைக்கடி வேதனை
நெஞ்சைவிட்டு மாறாமல்
வஞ்சியிளங் கோதை"

அவ்வாறே செடியாக்கப்பட்டுள்ள தேயிலை மரத்தில் கொழுந்து கொய்வதற்கான நெறிமுறைகள் பற்றிய விளக்கத்தை விவரிக்கும் முறையும் சிறப்பாக அமைகிறது. தேயிலைச் செடியில், மட்டக்கம்பின் பிரயோகத்துடன் 'வங்கியிலை'யைப் பறிப்பதற்கு வாதுகளைப் பொருத்தமான அணுகுமுறையுடன் ஒடித்தல் வேண்டும் என்ற நெறிமுறையை வலியுறுத்துவதாகப் பாடல் அமைகிறது. தொடர்ந்து முதல் இலைகளுள்ள 'முடிச்சிவாதை' அப்புறப்படுத்த வேண்டியதுடன், பக்கவாதுகளையும் நீக்க வேண்டும் எனக் குறிப்பிடுவது, தேயிலை மரத்தைப் பராமரிக்கும் நுட்பம் தொடர்பான கவனத்தை ஏற்படுத்துகிறது. உரிமைகள் சார்ந்த மீறல்களைச் சாடும் பாடலாசிரியர், நம்பிக்கை தரும் வரிகளை இணைக்கவும் தவறவில்லை.

"வானிடிந்து விழுந்தாலும்
நாம் பிரளமாட்டோம்
மலை நகர்ந்து வந்தாலும்
நிலைகலங்கமாட்டோம்
நாடற்ற பிரஜையெனப்
பட்டமது சூடி
நக்கலுடன் நையாண்டி
கெட்டிடவேவோடி
மார்தட்டிக் கூறுகிறார்
தொழிலாள மக்கள்
மானாபிமானமுள்ள
மலைநாட்டு மக்கள்"

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் பயில்நிலைக் கூத்துகளில் காமன்கூத்து முக்கிய இடத்தைப் பெறுகிறது. அதன் தாக்கம் இம்மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுகிறது. காமன் கூத்தின் உள்ளடக்கத்தைப் பார்க்கும் போது, அது சுட்டிக்காட்டும் பல்வேறு அம்சங்கள் இம்மக்களின் வாழ்வியலில் பின்பற்றப்படும் நடைமுறைகளுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளதை அவதானிக்கலாம். காமன் கூத்தில் காணப்படும் பாடல்களைத் தழுவிய வகையிலும் இவர் தனது பாடல்களை அமைத்திருப்பதைக் காண முடிகிறது. காமன்கூத்தின் வாதப்பாடல்களில் 'எரிந்த கட்சி', 'எரியாத கட்சி'ப் பாடல்கள் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

"மண்டலமெல்லாம் நடுங்க
தொண்டை கிழியக் கத்திடும்
மகாசூர வித்துவானே அய்யா அய்யா
மங்கள மிகுந்தகுண சங்கர நுதழ் விழியாள்
மன்மதவேல் மடிந்ததும் பொய்யா பொய்யா"

இவ்வாறான மெட்டை நேரடியாகத் தனது பாடல்களில் பிரயோகப்படுத்தும் முனைப்பையும் வி. எஸ். கோவிந்தசாமி அவர்களில் அறியலாம்.

"மாறு கொண்ட கங்காணி
கணக்கப்பிள்ளை அய்யா
மணிக் கணக்கைப் பார்த்ததுவும்

விரட்டுவதும் பொய்யோ
”கள்ளுக்கும் சாராயப்
போத்தலுக்கும் அய்யோ
காவடிகள் தோளேந்தி
ஆடுவதும் பொய்யோ”

பொதுவாக வீதிப்பாடல்கள் ஆண் - பெண்களிடையே ஏற்படும் பரஸ்பரப் புரிதலைப் பற்றி பேசுவது குறைவாக இருப்பதை அவதானிக்கலாம். இந்த அம்சத்தைப் பாடல்களாகப் புனைவதில், வி.எஸ். கோவிந்தசாமி மிகுந்த இலாவகத்துடனும் கலைநயத்துடனும் செயல்பட்டிருப்பதை அறிய முடிகிறது. ‘இருவர் உள்ளம் படும் பாடு’ எனும் பாடலில் அத்தன்மையை நன்கு உணர முடிகிறது.

“மன்னாருக்குக் கோச்சியேற
மனமுஞ் சரியில்லை – எனது
மனதுக் குகந்த பெண்ணே உன்னையும்
மறக்க முடியலை
வாழப்பிறந்த பொண்ணே – என்னை
மதிமயக்கிய கண்ணே”

பாடலின் கட்டமைப்பில் ‘துடுக்கு’ என உபதலைப்பிட்டு பின்வரும் அடிகளைத் தந்துள்ளார். இப்பாடல் நேரடியாகவே காமன் கூத்துப் பாடலைத் தழுவிய வரிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ‘துடுக்கு’ என்பது குறும்புத்தனம், கிண்டலாகப் பேசுதல், பயமின்மை, சுறுசுறுப்பு ஆகிய கருத்துநிலைகளைச் சுட்டுகின்றது.

“அன்னப் பசுங்கிளியே
அழகுமணி ரத்தினமே
பொன்னே உனைமறந்து
என்னுயிரும் வாழாதடி
பூமரத்துச்சிட்டே – அத்தர்
புனுகு சாந்துப் பொட்டே”

‘மகுடம்’ என உப தலைப்பிட்ட பாடல் வதிவிட விசாவில் இலங்கை வந்தவர்களின் தனித்துவப் பிரச்சினைகள் தொடர்பில் பேசுகின்றது. தனது காதலிக்கு அன்போடு எடுத்துரைப்பது போன்றதொரு பாணியில், இப்பிரிவினர் இலங்கையிலும் இந்தியாவிலும் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் வாழ்வியல் நெருக்கடிகளையும் விளக்குவதே இப்பாடலின் முக்கிய நோக்கமாகும்.

“டில்லி ஒப்பந்தம் அமுல் ஆச்சு
டி.ஆர்,பியும் முடிஞ்சி போச்சு
தொல்லைமேலுந் தொல்லை ஆச்சு
தொடர்ந்திருந்தால் மானம் போச்சு
தொட்டனடி குயிலே – தாலி
கட்டினனடி மயிலே”

மேலும் தொடரும் வரிகள், வதிவிட வீசாவில் இலங்கை வந்தவர்களின் பிரச்சினையை மிகுந்த அழுத்தமாக முன்வைப்பதை அறியமுடிகிறது. அவ்வாறான வரிகளுக்குப் பின்வரும் வரிகள் எடுத்துக்காட்டாக அமைகின்றன.

“வரப்போகும் பத்தாம் தேதி
பைனல் விஸா முடியுதடி
எடுத்த விஸா முடிஞ்சு போச்சடி
இரண்டு மாதம் பிந்திப் போச்சடி
மறுத்துப் பேச மார்க்கமில்லடி
மகனுங் கவனம் பார்த்துக்கொள்ளடி..
எமிக்கிரேஸன் சட்டத்திலும்
இமிக்கிரேஸன் திட்டத்திலும்
எத்தனையோ பாமரர்களை
இக்கதிக்குள்ளாக்கி வைத்த
திதுவும் சரிதானோ – மனு
நீதிமுறையிதுதானா”

இப்பாடல் காமன் கூத்துப் பாடலின் மெட்டிலேயே முழுமையாக எழுதப்பட்டுள்ளது. இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கையின் பெருந்தோட்டப் பகுதிகள் முழுவதும் பரவித் தொழில் புரிந்தார்கள் என்பதை எடுத்துரைக்கும் பின்வரும் பாடலின் உள்ளடக்கமும் அவதானத்திற்குரியதாகும்.

“காவிக் கருங்குயிலே
காமரச மாமயிலே
கடலோரப் பாதை வழி
காலிக் கோச்சி மாத்தறையாம்
களுத்துறை அளுத்காமம் திரு
கோணமலை யாழ்ப்பாணம்
கண்டிக்கோச்சியும் இஞ்சின் மாறுது
காங்கேசன்துறை ரயிலும் ஓடுது
பண்டாரவளை பதுளைக்கேகுது
பார்த்துச் சனங்கள் குதித்து ஏறுது”

இந்திய வம்சாவளி மக்கள் எதிர்கொண்ட அவலங்களை நையாண்டி கலந்த மொழியில் விவரித்த வி.எஸ். கோவிந்தசாமியின் தனித்துவமான கலைத்திறன், இப்பாடல்கள் மக்கள் மனங்களில் ஆழமாக வேரூன்றுவதற்குப் பெருமளவு

துணைபுரிந்தன எனலாம். சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், ஒடுக்குமுறைகள், அவலங்களுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மக்களுக்கு எழுச்சியின் தெளிவையும் அவசியத்தையும் சிந்தனை ரீதியில் ஏற்படுத்தும் முனைப்புடன் பாடப்படும் பாடல்கள் சமூக எழுச்சிப் பாடல்களாக அமைகின்றன. இவை, சமூகம் ஒன்றிற்குள் நிலவும் நெருக்கடி நிலைகளிலிருந்து மீண்டெழுவதற்கான உந்துதல்களை வழங்கும் கருத்துகளை உட்சுமக்கின்றன. தொழில் உரிமை சார்ந்த பாதிப்புகள், அரசியல் சார்ந்த பாதிப்புகள், இருப்பு மற்றும் பாதுகாப்புச் சார்ந்த பாதிப்புகள் என்பவற்றை வலியுறுத்தும் நோக்கத்துடன் இப்பாடல்கள் அமைக்கப்படுகின்றன.

பொருளாதாரச் சுரண்டல்களுக்கு உட்படுத்தப்பட்ட சமூகம் என்ற வகையில், மலையக மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மலையக வீதிப்பாடல்கள் எழுச்சிபூர்வமாக எழுதப்பட்டுள்ளன. எழுச்சிப்பாடல்களுக்கே உரிய எளிமையான சொற்களின் கோர்வையில், உணர்ச்சிபூர்வமான இசையுடன் கலந்து மக்களின் மனதைக் கவர்ந்துள்ளன.

வி.எஸ். கோவிந்தசாமி தான் இயற்றிய பாடல்களை, ஏனைய வீதிப்பாடகர்கள் போல் சந்திகளில் பாடாது, விழா மேடைகளிலேயே பாடியுள்ளார். இலங்கை இந்தியன் காங்கிரஸில் தொண்டமான், அசீஸ் ஆகியோரிடையே ஏற்பட்ட பிளவு, இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்தது. அமைப்பின் செயற்பாட்டாளர்கள் இரு தலைவர்களைச் சார்ந்து தங்களது ஆதரவை வழங்கினர். மலையக மக்களைப் பொறுத்தவரையில், இப்பிளவு பல்வேறு சமூக மாற்றங்களுக்குக் காரணமாக அமைந்தது.

இவ்வுள்ளக முரண்பாடு, மாற்றுச் சிந்தனையோடு ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் இயக்கத்திற்கு வழிகாட்டியாக அமைந்தது எனலாம். பொதுவாக ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பின் ஊடாக அல்லது அவ்வமைப்பின் செயற்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் பல வீதிப்பாடல்கள் அமையப்பெற்றுள்ளன. அவ்வமைப்பைச் சார்ந்தவர் என்ற வகையில், வி.எஸ். கோவிந்தசாமி அவர்களுக்கு இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் மேடைகளே களங்களாக அமைந்துள்ளன.

1950 வரை இந்திய வம்சாவளித் தமிழர்களின் ஏக அமைப்பாக விளங்கியது ‘இலங்கை இந்திய காங்கிரஸ்’. 1950 ஆம் ஆண்டு மாத்தளையில் நடைபெற்ற மாநாட்டிலேயே அது ‘இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்’ எனப் பெயர் மாற்றம் பெற்றது. இந்தியாவின் அனுசரணையுடன் பல சமூகத் தலைவர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய இவ்வமைப்பு, காலப்போக்கில் ‘மலைநாட்டுக் காந்தி’ கே. இராஜலிங்கம் போன்றோர் ஓரங்கட்டப்பட்ட சூழலில், சௌமியமூர்த்தி தொண்டமானின் குடும்ப ஆதிக்கம் நிறைந்த அமைப்பாகப் பரிணமித்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளராகப் பதவி வகித்த ஏ. அசீஸ் போன்றோரின் செல்வாக்கைக் குறைக்கும் நோக்கில் சௌமியமூர்த்தி தொண்டமானின் அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக ஏ. அசீஸ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் இருந்து வெளியேற்றப்பட்டார். சௌமியமூர்த்தி தொண்டமானுடன் பொருளாதார ரீதியாகவும் போட்டியிடும் வல்லமை ஏ. அசீஸுக்கு இருந்ததனால் ‘இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்’ எனும் தொழிற்சங்கம் உருவெடுத்தது. சௌமியமூர்த்தி தொண்டமானின் சுயநலம் கலந்த செயற்பாடுகளில் அதிருப்தியடைந்திருந்த அங்கத்தவர்கள் இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸில் அங்கத்துவம் பெற்றனர். தொண்டமானியத்தை ஆதரிப்பவர்களிடையே, ஓரளவு முற்போக்கானவர்களாக அஸீஸ்வாதிகள் திகழ்ந்தனர்.

சட்டரீதியான இறுக்கநிலை காணப்பட்ட போதிலும், தோட்டங்களுக்குச் சென்று தொழிற்சங்கங்களை அமைக்கும் பணியில் அசீஸ் துணிவுடன் செயற்பட்டார். இதனால் அவர் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. வழக்கில் வெற்றி பெற்ற நிலையில், தொழிலாளர்கள் மத்தியில் தற்துணிவான தலைவராகப் புகழப்பட்டார். இவரது பங்கேற்பில் இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிலாளர்களின் நலன் சார்ந்த தீர்வுகளைப் பெற்றுத் தந்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி சார்பான அரசியலுக்குத் துணைபோகும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் அதற்கு எதிரான தீர்மானத்துடன், அசீஸ் தரப்பினர் இலங்கைச் சுதந்திரக் கட்சி சார்பு நிலையில் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவ்வமைப்பின் முக்கியச் செயற்பாட்டாளர் என்ற உணர்வுடன், ‘வாழ்க தொழிலாளர்! வளர்க அவர்தம் இயக்கம்!! ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்’ எனும் மகுட வாசகத்துடன் 1964 ஆம் ஆண்டு வி.எஸ். கோவிந்தசாமி அவர்கள் தனது பாடல்களை வெளியிட்டார். அவை தொழிலாளர்கள் மத்தியில் கவனத்தைப் பெற்றன. சமகாலத்திலும் அச்சிற்றிலக்கியம் தொடர்பான கவனம் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

“சக்திமிகும் மகா சங்கமடி – ஜன
நாயகப் பண்புள்ள காங்கிரஸே!
பக்குவமாகக் கொடியேற்றி – எங்கும்
பாட்டொளி வீசிப் பறக்குதடி”

பஞ்சப்படி பதினேழரை ரூபாய் கோரிக்கை, இருபத்து மூன்று ராத்தலுக்குப் பேர் வேண்டும் என்ற கோரிக்கை, மேலதிக ராத்தல்களுக்குத் தலா ஒன்பது சதக் கோரிக்கை, ஆறு மணித்தியாலம் மாத்திரமே வேலை என்ற கோரிக்கை, பால் வேறுபாடின்றி சமசம்பளக் கோரிக்கை, மே தினத்திற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை, லீவு போனஸ் தொடர்பான கோரிக்கை என்பன அனைத்தும் அசீஸ் தலைமையிலான ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் முனைப்புமிக்க கோரிக்கைகளாக அமைந்தன. அக்கோரிக்கைகளில் பெற்ற வெற்றி, தொழிலாளர்களின் மத்தியில் இவ்வமைப்பு மிகுந்த செல்வாக்கைப் பெறுவதற்கு ஏதுவாக அமைந்தது எனலாம். அதையொட்டிய, “சந்தாக் கொடுத்திடத் தூண்டுங்கடி - சங்கம் வலுப்பெற வேண்டுமடி” என்ற வி.எஸ். கோவிந்தசாமி அவர்களின் அறைகூவலும் கவனத்தைப் பெறுகிறது.

பொதுவாக மலையக வீதிப்பாடலாசிரியர்கள் கதிர்காமக் கந்தனை, கந்தனின் சிறப்பைப் பாடியவர்களாகவே இருக்கின்றனர். வருடந்தோறும் கதிர்காமத் தலயாத்திரையை கட்டாய நிகழ்வாகக் கொண்டு செயற்படுத்தியுள்ளனர். அவர்களுடைய பாடல்களில் தனித்து முருகனையும், கதிர்காமத் தளத்தையும் பாடியிருப்பதை அறிய முடிகிறது. அவ்வாறு அமைந்த சிற்றிலக்கியங்களில் தழுவல் தன்மைகள் நிறையவே காணப்படுகின்றன. அவ்வாறான பக்தி இலக்கியங்கள் அப்பாடலாசிரியர்களால் தொடர்ந்து தொகுக்கப்பட்டு வருவதை அவதானிக்கலாம். ஏற்கனவே படைக்கப்பட்ட முருகன் பாடல்களை எஸ். ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை தனது தொகுப்புகளில் இணைத்திருப்பதும் தெளிவாகிறது. அவ்வாறே எஸ். எம். இராஜப்பா, மாரியம்மன் பற்றி ஏற்கனவே தொகுக்கப்பட்ட பாடல்களை தனது தொகுப்பிலும் உள்ளடக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேற்குறித்த வீதிப்பாடல் ஆளுமைகள் தங்களை ஆன்மிகம் சார்ந்த ஆளுமையாளர்களாகவே அடையாளப்படுத்துகின்றனர். மாறாக, வி.எஸ். கோவிந்தசாமி தன்னை ஓர் சமூகவாதியாகவே முன்னிலைப்படுத்துகிறார். இருந்த போதிலும், அவரில் பொதிந்துள்ள ஆன்மிகத் தெளிவுக்கான ஆதாரமாக 1979 இல் வெளிவந்த ‘ஸ்ரீ கதிர்காமச் சேத்திர வரலாறுகளடங்கிய கதிரைமலைச் சிந்து’ என்ற சிற்றிலக்கிய நூல் அமைகிறது. இந்த நூலில் அமைந்துள்ள பாடல்கள் மெட்டுத் தழுவல்களாக இருந்த போதிலும், பாடலாசிரியரால் இயல்பான மொழிநடையில் உருவாக்கப்பட்டதாக அமைகின்றன. ஹிக்கொட, உந்துகொட எனும் முகவரியில் இருந்து கா. பெரியசாமி பிள்ளை என்பவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அக்காலத்தின் பதிப்பு முயற்சிகள் படைப்பாளர்களுக்கும் வாய்ப்பினை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

வி.எஸ். கோவிந்தசாமியின் ‘கதிரைமலைச் சிந்து’ இந்திய வம்சாவளித் தமிழர்கள் எவ்வகையில் கதிர்காமத் தளத்தை அணுகினார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது. கதிர்காமத்துடன் தொடர்புபடும் கருத்துநிலைகள் மற்றும் மெட்டுத் தழுவல்களை அடிப்படையாகக் கொண்டு, ‘இலட்சிய முழக்கம்’ தொகுப்பில் வி.எஸ். கோவிந்தசாமி பாடல்களை உள்ளடக்கியுள்ளார். அத்தொகுப்பில் இடம்பெறும் ‘வெற்றியுண்டு தாயே’ என்ற மெட்டில் உருவாக்கப்பட்ட பாடல், தன் அமைப்புச் சார்ந்த புகழ்மொழிகளை குறத்தியாய் வரும் ஒருத்தி எடுத்துச் சொல்லும் பாணியில் அமைந்துள்ளது.

“தோட்டத் தொழிலாளர் வாழ்க்கை முன்னேறிடத் - தொடர்ந்துழைப்பது ஜாத் தோக் கா - நம்” எனத் தொடங்கும் பாடலும், “நாட்டுக்கு நல்லவரே” என்ற பாடல் மெட்டில் அமைந்த “துள்ளி எழுந்திரடா” எனும் பாடலும், “பாதை தெரியுது பார் - இலட்சியப் பாதை தெரியுது பார்” என்ற பாடலும், “குள்ளநரிச் சேட்டை”, “வாழ வழி தேடிக்க!” ஆகிய பாடல்களும் உழைக்கும் மக்களிடையே நம்பிக்கையையும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைப்பதாக அமைகின்றன.

வி.எஸ். கோவிந்தசாமி ஒரு முக்கிய ஆளுமையாக அடையாளப்படுத்தப்படும் அதேவேளையில், அவருடன் இணைந்து செயல்பட்ட மற்றொரு ஆளுமையாக ஏ.எம். ராமையா தேவர் விளங்குகிறார். இருவரும் இணைந்து 1955 ஆம் ஆண்டு ‘உழைப்பாளி மக்களின் பிரஜாவுரிமைக் குரல்’ எனும் தொகுப்பில் பாடல்களை உள்ளடக்கியுள்ளனர். “ஓட்டுரிமை இல்லையென்று சொல்ல வேணாங்க - நாங்கள் ஓடிவிட்டால் லங்கையெல்லாம் காடாய்ப் போகுங்க” எனும் தைரியமிக்க வரிகளோடு ஒரு பாடல் நிறைவடைகிறது. இப்பாடலில் மலையக மக்களின் உரிமை சார்ந்த பாதிப்பு நன்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் “டம்மேரியா, பசறை, ஹேப்டன், ஹைபோரஸ்ட் துரைமார்களின் விபரீதப் போக்கு” எனும் தலைப்பில், குறிப்பிட்ட ஒரு தோட்டத்தின் சம்பவங்களை எடுத்துரைக்கும் ஒரு பகுதியும் உள்ளதை

அவதானிக்கலாம்.

“கோவிந்தசாமி தமிழ் - கேட்டு மகிழ்ந்திருப்பீர்”

“இலங்கும் நெல்லைப் பூமி - தமிழ் முழங்குங் கோவிந்தசாமி”

“சீரும் சிறப்புடன் பாடிய கோவிந்த - சாமி தமிழ் நிதம் பாடுங்கடி”

“நாடற்றோர் பிரச்சனை தீரப் போகுது - நற்றமிழ் கோவிந்த சாமி சொல் லோங்குது”

எனத் தனது பாடல்களில் தன்னை வி.எஸ். கோவிந்தசாமி அடையாளப்படுத்துகிறார்.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசின் இயக்கச் செயற்பாட்டாளர், அசீஸ் தலைமையின் விசுவாசி, தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்ட மனிதாபிமானி, சமூகப் பாதிப்புகளை எதிர்க்க துணிந்த போராளி என்ற வகையில் மலையக மக்களின் அசைவியக்கத்தில் முக்கிய ஆளுமையாக வி.எஸ். கோவிந்தசாமி அவர்களை அடையாளம் காண முடிகிறது. அவரது சாதி ரீதியான அடையாளம் விமர்ச னத்திற்குட்பட்டதாயிருந்தாலும், இத்துறையில் அவ்வடையாளத்தை முற்றிலும் தவிர்த்து அவரை அணுக முடியாத நிலையும் காணப்படுகிறது. மேலும், இவரை ஏ.எம். ராமையா என்ற ஆளுமையுடனும் இணைத்து நோக்க வேண்டிய அவசியம் உள்ளது.

கிடைக்கப்பெற்ற வீதிப்பாடல்களை ஆராயும் போது, இவரது சிந்தனையோட்டமும் உள்ளுணர்வும் தெளிவாக வெளிப்படுகின்றன. இத்துறையில் மேலும் சில நூல்களை இவர் வழங்கியிருக்கக் கூடும் என்ற சாத்தியமும் உள்ளது. குறிப்பாக ‘சுந்தரி ஒப்பாரி’ எனும் அவரது நூல் தொடர்பான கவனமும் இன்று எழுகிறது. அந்த நூல் கிடைக்கும் பட்சத்தில், அவரது காலத்தில் நிலவிய இந்திய வம்சாவளி மக்களின் வாழ்வியல் மற்றும் ஒடுக்குமுறை குறித்து மேலும் தெளிவாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு உருவாகும் என்பது திண்ணமாகும். 1947 ஆம் ஆண்டு முதல் இந்திய வம்சாவளித் தமிழர்களின் தொழிற்சங்கங்கள் ஊடான அரசியல் எழுச்சிகள், இந்நாட்டின் பெரும்பான்மை இனச் சமூகத் தலைவர்களுக்கு பீதியை ஏற்படுத்தின. இந்திய வம்சாவளித் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த தொகுதிகளில், அந்தத் தொகுதிகளின் வெற்றியை அவர்களது பிரதிநிதிகளே தீர்மானித்தனர். இந்திய வம்சாவளித் தமிழர்கள் சிறுபான்மையாக வாழ்ந்த தொகுதிகளில் கூட, வேட்பாளர்களின் இன அடையாளத்தைப் பாராமல், கொள்கை அடிப்படையில், பெரும்பான்மை இன இடதுசாரிகளை பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்தனர். இந்நிலை, சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த வலதுசாரிக் கட்சிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இதன் போக்கிலேயே இந்திய வம்சாவளித் தமிழர்களின் வாக்குரிமைப் பறிப்பு, பிரஜாவுரிமைப் பறிப்பு, ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் முதலான நடவடிக்கைகள் தீவிரம் பெற்றன. இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது, இடதுசாரிகளும் அவற்றைக் கண்டுகொள்ளாத நிலை காணப்பட்டது; அது அவர்களுள் உட்பொதிந்திருந்த சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தின் வெளிப்படையான வெளிப்பாடாகக் கொள்ளத்தக்கது.

இந்நிலையில், இந்திய வம்சாவளி மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நாவலர் ஏ. இளஞ்செழியன் தலைமையிலான இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் வழங்கிய ஆதரவு மிகவும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய அரசியல் களச்சூழலே வீதிப் பாடலாசிரியர்களின் படைப்பூக்கத்திற்குத் தூண்டுகோலாக அமைந்தது. இந்த இயக்க ரீதியான செயல்பாடுகளை ஒரு கூர்மையான அவதானிப்பாளராகவும், தீவிர பங்கேற்பாளராகவும் வி. எஸ். கோவிந்தசாமி முன்னெடுத்தமை, மலையக இலக்கியப் பரப்பில் காத்திரமான பங்களிப்பாகக் கருதப்படுகிறது.

**உசாத்துணை நூல்கள்**


1. யோகராசா, செ. (2023). ஈழத்து முச்சந்தி இலக்கியம். மகுடம் பப்ளிகேசன்.
2. காதர், பீ.ஏ. (2023). இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் (மூன்றாம் பதிப்பு). சமூக இயல் பதிப்பகம்.
3. முத்துலிங்கம், பெ. (2012). பரதேசம் போன தமிழர்களின் பரிதாபப் பாடல்கள். கயல் கவின் புக்ஸ்.
4. சாரல் நாடன். (1997). மலையகம் வளர்த்த தமிழ். துரவி வெளியீட்டகம்.
5. மாத்தளை ரோகிணி. (1993). உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள். குறிஞ்சி வெளியீடு.
6. லிங்கம், பி.எம். (1995). மனிதருள் மாணிக்கம் அஸீஸ். அஸீஸ் மன்றம்.
7. சிவலிங்கம், மு. (2007). மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள். குறிஞ்சித் தமிழ் இலக்கிய மன்றம்.

# மட்டக்களப்பின் நிலப்பிரபுத்துவப் பொருளாதாரமும் சமூக உறவுகளும்

1920களில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் கொழும்பு நகரில் ஓர் உயர்கல்வி நிறுவனம் தாபிக்கப்பட்டது. இக்கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் இளங்கலை/ விஞ்ஞானப் பட்டப்படிப்புக்கு வெளிவாரி பரீட்சார்த்திகளான இலங்கை மாணவர்களைத் தயார்ப்படுத்தும் கல்வி நிறுவனமாகச் செயற்பட்டது. 1942 இல் இக்கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு தனித்து இயங்க ஆரம்பித்தது. காலப்போக்கில் நாட்டின் பிறபகுதிகளிலும் பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்பட்டன. இலங்கையில் பல்கலைக்கழக முறை (University System) ஒன்று உருவாகியது. இம்மாற்றங்கள் மேற்குறித்த மூன்று கற்கைத்துறைகளிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. ‘இலங்கையின் வரலாறும், பொருளியலும், சமூகவியலும்’ என்ற இத்தொடரில் இக்கற்கைத்துறைகளின் வளர்ச்சி பற்றிய மதிப்பீடுகள், முக்கிய ஆய்வாளர்களின் நூல்களினதும், ஆய்வுக் கட்டுரைகளினதும் அறிமுகமும் விமர்சனமும், ஆய்வாளர்களின் கோட்பாட்டுப் பங்களிப்புகள் (Theoretical Contributions), அவர்களின் புலமைத்துறை வாழ்க்கை வரலாறு, மாணவர் பரம்பரைகளின் உருவாக்கம், அரசியல் – சமூக – பண்பாட்டு உயர்குழக்களின் (Elites) உருவாக்கம் என்பன குறித்த பகுப்பாய்வுகளாக அமையும் கட்டுரைகள் பதிவிடப்படும்


## கந்தையா சண்முகலிங்கம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. ‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

மார்க். பி. விற்றேக்கர் (Mark. P. Whitaker) எனும் மானிடவியலாளர் 1980களின் முற்பகுதியில் மட்டக்களப்பின் மண்டூர் என்ற கிராமத்தில் தங்கியிருந்து அப்பகுதியில் கள ஆய்வு நிகழ்த்தினார். அவர் மண்டூர் கந்தசுவாமி கோவிலின் நிர்வாகம் தொடர்பாக, அவ்வூரின் வேளாளர்கள், சீர்பாதர் என்னும் இரு சமூகக்குழுக்களுக்கிடையே எழுந்த பிணக்குப் பற்றிய நுண்ணாய்வு ஒன்றை மேற்கொண்டார். நியுஜெர்சி, பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்திற்கு 1986 ஆம் ஆண்டில் அவர் சமர்ப்பித்த ஆய்வேடு குறித்த விவரம் பின்வருமாறு: *'Divinity and Legitimacy in a Temple of Lord Kanthan, A Thesis Presented to Princeton University, New Jersey.'*

அவரது ஆய்வு 'மண்டூர் கந்தசுவாமி கோவிலும் சமயக் கருத்தியலும்' என்னும் விடயம் பற்றியது. ஆயினும், கோவிலின் நிர்வாகம் சார்ந்த பிணக்கு, சமயக் கருத்தியல் என்ற எல்லைகளுக்கு அப்பால், மண்டூர் கிராமம் பற்றியும், அக்கிராமம் அமைந்துள்ள மட்டக்களப்புப் பிராந்தியம் பற்றியதுமான வரலாறு, சமூகக் கட்டமைப்பு, பொருளாதாரம், சமூக உறவுகள் ஆகிய விடயங்களைப் பற்றிய விரிவான ஆய்வாக இது அமைந்துள்ளது. மார்க். பி. விற்றேக்கர் அவர்களின் ஆய்வு நூலை ஆதாரமாகக் கொண்டு 'மட்டக்களப்பின் நிலப்பிரபுத்துவப் பொருளாதாரமும் சமூக உறவுகளும்' என்னும் தலைப்பிலான இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

மட்டக்களப்பின் விவசாய உற்பத்தி நீர்ப்பாய்ச்சலை ஆதாரமாகக் கொண்ட நெல் வேளாண்மையைப் பிரதானப்படுத்துவது. மட்டக்களப்பைக் கைப்பற்றி அங்கு ஒரு கோட்டையைக் கட்டிய போர்த்துக்கேயர் விவசாயத்தில் அக்கறை செலுத்தவில்லை. 1622 இல் அங்கு வந்த டச்சுக்காரரும் விவசாய விருத்தியில் பெரிதாக அக்கறை காட்டாவிடினும், மட்டக்களப்பின் கடலேரியை அடுத்த மேற்கு ஓரத்தில் இருந்த குளங்களின் பராமரிப்பு வேலையை இராஜகாரிய ஊழிய முறையைப் பயன்படுத்திச் செய்வித்தனர்.

பிரித்தானியர் ஆட்சியின் போது மட்டக்களப்பு அரசாங்க அதிபராக இருந்த பேர்ச் (Birch) என்பவர் 1850களிலும் 1860களிலும் மட்டக்களப்பின் நீர்ப்பாசனக் குளங்கள், அணைக்கட்டுகள் என்பனவற்றைத் திருத்தி விவசாய விருத்தியை மேற்கொள்வதற்கு ஆலோசித்தார். 1855 - 60 காலத்தில் இலங்கையின் ஆளுநராக இருந்த ஹென்றி வார்ட் என்பவரின் கவனத்திற்கு இவ்விடயத்தைக் கொண்டுவந்த பெருமை பேர்ச்சிற்கு உரியது.

### காடுகள் களனிகளாயின

மட்டக்களப்பின் கடந்த பொற்காலம் பற்றியும் ஒரு காலத்தில் மட்டக்களப்பு இலங்கையின் நெற்களஞ்சியமாக (Rice Bowl) இருந்தமை பற்றியும் பேர்ச் கூறியிருப்பவை மிகைப்படுத்தல் என்றே விற்றேக்கர் கருத்துரைக்கின்றார். பண்டைய நீர்ப்பாசனக் குளங்களும் அணைக்கட்டுகளும் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் பரவலாக அழிவடைந்த நிலையில் காணப்பட்டது உண்மையே. ஆயினும், வரலாற்றின் எந்தவொரு கட்டத்திலும் அந்த நீர்ப்பாசன அமைப்புகள் அனைத்தும் ஒரு சேர நன்னிலையில் வைக்கப்பட்டு, இலங்கையின் நெற்களஞ்சியமாக மட்டக்களப்பு இருந்தது என்று கூறுவதற்கு ஆதாரம் இல்லை என்பதே விற்றேக்கரது கருத்து. ஆயினும், பேர்ச் கண்ட கனவு ஆக்கபூர்வமான சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்தது. 1856 இன் பின்னர் கிழக்குக் கரையோரப் பிராந்தியத்தின் நீர்ப்பாசனக் குளங்கள் பல திருத்தப்பட்டன. அவ்வாண்டு இயற்றப்பட்ட 9 ஆம் இலக்க நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம் நீர்ப்பாசன வேலைகளின் முன்னேற்றத்திற்குக் காரணமாயிற்று. 1870களில் மட்டக்களப்பில் இருந்து நெல், வடக்கேயுள்ள யாழ்ப்பாணத்திற்கும், ஊவா மாகாணத்தின் பதுளையில் உள்ள தேயிலைத் தோட்டங்களிற்கும் ஏற்றுமதியாயிற்று. சில சமயங்களில் மட்டக்களப்பில் இருந்து இந்தியாவிற்கும் நெல் ஏற்றுமதியாயிற்று.

'மட்டக்களப்பு மாவட்டக் கையேடு' என்னும் நூலின் ஆசிரியர் முதலியார் கனகரத்தினம், கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுவரும் நெற்செய்கை முன்னேற்றம் பற்றிச் சில புள்ளிவிவரங்களைத் தந்துள்ளார். 1869 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மக்களின் உணவுத் தேவைக்காக 6,000 புசல் நெல்லும் 43,000 புசல் அரிசியும் இறக்குமதி செய்யப்பட்டதாக அவர் கூறினார். இவ்வாறு நெல்லை இறக்குமதி செய்த நிலை மாறியது. 1916 ஆம் ஆண்டில் 7,195 புசல் நெல் அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது என அவர் குறிப்பிட்டார். இத்தொகை பதிவாகிய வெளித்தெரியும் ஏற்றுமதி எனவும், உள்நாட்டுத் தரைவழியாக மேலும் பெருந்தொகை வெளியே அனுப்பப்பட்டிருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனரமைப்புச் செய்யப்பட்ட நீர்ப்பாசனக் குளங்களில் திவுலான, நவக்கிரி என்ற இரு குளங்களின் புனரமைப்பால் மண்டூர் கிராமம் நன்மை பெற்றது. 1860 ஆம் ஆண்டிற்கும் 1900 ஆண்டிற்கும் இடைப்பட்ட 40 ஆண்டுக்கால எல்லையில் மண்டூரில் 628 ஏக்கர்

நீர்ப்பாசனக் காணி விருத்தியாக்கப்பட்டது. இவை தனியார் உடைமைகளாக இன்றும் விளங்குகின்றன. மண்டூரைப் போன்றே படுவான்கரைக் கிராமங்கள் பலவற்றிலும் தனியார் உடைமைகளாக நீர்ப்பாய்ச்சல் காணிகள் உருவாகின. 'முடிக்குரிய காணி' (Crowned Land) எனப்பட்ட அரச நிலம் காடுகளாக இருந்தன. இவை களனிகளாயின. இன்று மண்டூரில் வயல்களும் குடியிருப்புகளுமாக உள்ளவற்றில் பெரும்பகுதி ஒரு காலத்தில் காடாக இருந்தது. ஓ கிறெடி (O' Gready) என்ற அரசாங்க அதிபர் 1866 இல் காணிப்பதிவு வேலைக்காக அங்கு சென்றபோது மண்டூர் கோவிலின் பூசகர், எதிரே இருந்த நிலப்பகுதியைச் சுட்டிக்காட்டி அதனைக் 'காடு' எனக் கூறியதாக அரசாங்க அதிபர் பதிவு செய்துள்ளார்.

**பிரித்தானியர் ஆட்சியின் போது மட்டக்களப்பு அரசாங்க அதிபராக இருந்த பேர்ச் (Birch) என்பவர் 1850களிலும் 1860களிலும் மட்டக்களப்பின் நீர்ப்பாசனக் குளங்கள், அணைக்கட்டுகள் என்பனவற்றைத் திருத்தி விவசாய விருத்தியை மேற்கொள்வதற்கு ஆலோசித்தார். 1855 - 60 காலத்தில் இலங்கையின் ஆளுநராக இருந்த ஹென்றி வார்ட் என்பவரின் கவனத்திற்கு இவ்விடயத்தைக் கொண்டுவந்த பெருமை பேர்ச்சிற்கு உரியது.**

### போடியார்கள்

மண்டூரிலும், படுவான்கரைக் கிராமங்களிலும் விருத்தி செய்யப்பட்ட இந்தக் காணிகளின் உடைமையாளர்கள் யார் என்ற கேள்வி எம் மனதில் இயல்பாக எழுகின்றது. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் வளர்ச்சி பெற்ற இந்த நில உடைமையாளர்களே 'போடியார்கள்' என அழைக்கப்பட்டனர். அப்படியானால் 19 ஆம் நூற்றாண்டில்தான் 'போடியார்கள்' தோன்றினார்களா என்ற கேள்வி எழுகிறது. வன்னிச் சிற்றரசுகள் (ஏழு) இப்பகுதியை ஆண்டபோது நில உடைமையாளர்களாக இருந்தவர்கள் 'முக்குவ வன்னிமைகள்' எனப்பட்டனர். இப்பகுதியின் ஆட்சி உரிமை பெற்றிருந்த இச்சிற்றரசுகள், போடியார்களின் கூட்டிணைவாகவே இருந்தன எனவும், கண்டியில் உள்ள அரசனின் பெயரளவிலான ஆளுகைக்கு உட்பட்ட சிற்றரசர்கள் 'உள்ளூரில் இறைமையும் சடங்கியல் மேலாண்மையும்' உடையவர்களாக இருந்தனர் எனவும் கே.எம்.டி. சில்வா என்ற சரித்திர ஆசிரியரை மேற்கோள் காட்டி விற்றேக்கர் கூறுகிறார். 1950களில் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. 1972 இல் காணி உச்சவரம்புச் சட்டம், மேட்டு நிலக் காணியின் உரிமையை நபர் ஒருவருக்கு 20 ஏக்கராக மட்டுப்படுத்தியது. அக்காலம் வரை போடியார்களின் ஆதிக்கம் இப்பகுதியில் நிலைபெற்றிருந்தது.

பெரும்பாலான போடியார்களின் பரம்பரை மூலம் முக்குவர், வேளாளர் என்ற இரு சாதிகள் என்பது தெரியவருகிறது. ஆயினும், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் முஸ்லிம் வர்த்தகர்களும் காணிகளைப் பெருமளவில் கொள்வனவு செய்து நில உடைமையாளர்களாயினர். மட்டக்களப்பின் நில உடைமை முறை மூன்று அடுக்குகளை உடைய சுரண்டல் முறையாக இருந்தமையைக் கனகரத்தின முதலியார் தரும் விவரங்களில் இருந்து அனுமானிக்கலாம். இக்கட்டமைப்பின் உச்சத்தில் இருந்தவர்கள் போடியார்கள். அவர்களுக்குக் கீழே அடுத்த நிலையில் 'முல்லைக்காரர்' எனப்படும் மேற்பார்வையாளர்கள் இருந்தனர். இம்மேற்பார்வையாளர்கள் உழைப்பாளர்களான வேலைக்காரர்களைக் கொண்டு உழுதல், விதைத்தல், அறுவடை ஆகிய வேலைகளைச் செய்வித்தனர். இவ்வாறு மூன்று படிநிலைகளைக் கொண்ட உற்பத்தி உறவுகளின் கட்டமைப்பு சிக்கல் வாய்ந்தது. இதன் தொழிற்பாட்டை, இம்முறையின் கீழ் உற்பத்தியின் பங்கீடு எவ்விதம் நடைபெற்றதென்பதைக் கொண்டு விளக்கலாம். 1870க்கு முற்பட்ட காலத்தில் இருந்தே, விளைந்த நெல்லின் ½ பங்கைப் போடியாரும், இன்னொரு 1/5 பங்கை முல்லைக்காரனும் பெற்றுக்கொள்ளும் முறை இருந்து வந்தது.

விளைச்சலின் 1/5 பங்கு, வயல் வேலைகளில் சம்பந்தப்பட்ட வேலைக்காரர்களுக்கு நெல்லாக அளந்து கொடுக்கப்பட்டது. இதனைவிட விதைப்புக்காகக் கொடுக்கப்பட்ட விதை நெல்லின் 50 வீதத்தை முல்லைக்காரனிடமிருந்தும் மீதி 50 வீதத்தை வேலைக்காரர்களிடமிருந்தும் போடியார்கள் பெற்றுக்கொண்டனர். போடியார் முறை வெறும் ஒப்பந்த முறையாக அன்றி மரபுவழி உரிமைகளும், கடமைகளும் கொண்ட ஆண்டான் - அடிமை

முறையாகவும் இருந்தது. போடியாரின் வீட்டு வளவுகளைச் சுத்தப்படுத்தல், வேலியடைத்தல், விளைபொருளை அவரது வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தல் போன்ற பல கடமைகளை வேலைக்காரர்கள் செய்யவேண்டும்.



வண்ணார், அம்பட்டர், பறையர் போன்ற சாதிகளின் வேலைக்காரர்களுக்கு சடங்கியல் கடப்பாடுகள் இருந்தன. போடியார், புதுவருடம் போன்ற பண்டிகைத் தினங்களின் போது கைவிசேஷம் கொடுப்பார். கைவிசேஷம், கொடுப்போனது உயர்வையும் பெறுவோனது தாழ்நிலையையும் சுட்டி நிற்பது. 1870களின் பின்னர் வயல் நிலங்களின் அளவு அதிகரித்து நில உடைமை முறை வலுப்பெற்ற போது போடியார், முல்லைக்காரன், வேலையாளர் உறவுகள் மேன்மேலும் 'சுரண்டல்' தன்மையுடையனவாய் மாறின.

இவ்வாறு கூறும்போது 1870க்கு முந்திய போடியார் முறை பலவீனமானது எனப் பொருள்கொள்ள முடியாது என்றும் விற்றேக்கர் கூறுகிறார். 1817 ஆம் ஆண்டளவிலேயே பஸ்குவல் முதலியார் என்ற கிறிஸ்தவப் போடியார் எருமைத்தீவு என்ற முழுத் தீவையுமே தனது உடைமையாக வைத்திருந்தார் என்பதைக் கனகரத்தின முதலியார் குறிப்பிடுகின்றார்.

"ஏறக்குறைய பத்து மைல் சுற்றளவுள்ள பரந்த வயல் நிலம், கடல் ஏரியில் இருந்து சில அடிகள் உயர்ந்த நிலத்தில் வியாபித்திருந்தது" என்று 1921 இல் எழுதிய கையேட்டு நூலில் அவர் எருமைத் தீவு பற்றிக் குறிப்பிட்டிருந்தார். படுவான்கரையில் உள்ள ஒரேயொரு கத்தோலிக்கக் கிராமமான சொறிக்கல் முனையைத் தாபித்த பெருமையும் பஸ்குவல் முதலியாருக்கு உரியது என்பதை ஊரவர்களின் வாய்மொழியாகவே அறிந்துகொள்ளலாம். சொறிக்கல்முனை மண்டூரில் இருந்து தெற்கே உள்ளது. பஸ்குவல் முதலியார் காலத்துப் போடியார் முறை, 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வயல்நிலங்களின் அளவுப் பெருக்கத்தோடு, இறுக்கமான உறவுக் கட்டமைப்பாக நிலைபெற்றதென்றே கருதலாம்.

### வளர்ச்சிக் குறைவு

போடியார், முல்லைக்காரன், வேலைக்காரர் என்போரிடையே ஒருவகைப் பங்குடைமையும், அதன் மூலம் கூலி உழைப்பைப் பெற்றுக்கொள்ளும் முறையும் 1920கள் அளவில் வளர்ச்சி பெற்றிருந்தன. "விதை நெல், உழுதலுக்காகக் கொடுத்த எருமைகளின் வாடகை, அறுவடை, சூடடிப்புச் செலவுகள் என்பனவற்றை 50 வீதம் வட்டியுடன் அறவிட்டுக் கொண்ட நில உடைமையாளர்கள் உற்பத்தியின் மூன்றில் இரண்டு பங்கைத் தமதாக்கிக் கொண்டனர். இது அவர்களுக்கு இலகுவான காரியமாக இருந்தது." இவ்வாறு அரசாங்க அதிபர் ஒருவர் எழுதியிருப்பதை B.H. பாமர் (B.H. Farmer) மேற்கோள் காட்டியிருப்பதை விற்றேக்கர் குறிப்பிடுகிறார்.

காலம் செல்லச் செல்ல போடியார் முறை வினைத்திறன் அற்ற முறையாகவும் மாறத்தொடங்கியது.

"மட்டக்களப்பில் உருவாகிய பொருளாதார நிறுவனக் கட்டமைப்புகளின் பயனாக உற்பத்தியின் மேன்மிகையை நிலத்தில் முதலீடு செய்து வயல் நிலங்களைக் கொள்வனவு செய்த நில உடைமையாளர்கள் கைகளில் பேரளவு காணிகள் குவிந்தன. இது விவசாயக் குடியான்களைச் சுரண்டுவதற்கு உதவியது. ஆயினும், முதலாளித்துவ முறையிலான மூலதனத் திரட்சியின் மூலமாக உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் தூண்டுவதாக இது அமையவில்லை. இதற்கான காரணத்தை ஊகித்தறியும் தேவை உள்ளது. பெருந்தோட்டங்களின் முதலாளிகளுக்கு உதவ விரும்பிய பிரித்தானிய அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களின் கூலிகளை உயரவிடாமல் தடுப்பதற்காக அரிசியின் விலையைக் குறைக்கும் வகையில் அரிசி இறக்குமதியைச் செய்தது. இதனால், நெல் உற்பத்தியில் முதலாளித்துவ முயற்சிகள் ஊக்கப்படுத்தப்படவில்லை. 1920களில் நெல் உற்பத்தியாளர் யாவரும் ஏகோபித்த குரலில் கூறிய முறைப்பாடு நெல் உற்பத்தியால் இலாபம் பெறமுடியவில்லை என்பதே என பிறயன் (Brayne) குறிப்பிட்டுள்ளார். காலநிலை மாற்றங்கள் காரணமாக வெள்ளமும் வறட்சியும் மாறிமாறி ஏற்பட்டன. இதனால் நெல் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது. நீர்ப்பாய்ச்சல் நிர்வாகமும் சீரியதாக இருக்கவில்லை. இக்காரணங்களினால் நெல் விவசாயம் முதலாளித்துவ முறையில் முன்னேற்றமடையவில்லை. உற்பத்தியின் மேன்மிகையைப் பணமாகச் சேகரித்து

முடக்குவதற்குப் பதிலாக உற்பத்திக்கான மூலதனத்திலும் அபிவிருத்தியிலும் முதலிடுவதற்குத் தூண்டுதல் இருக்கவில்லை.” உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குக் காரணமான தடைகளை மேற்கூறியவாறு விவரித்திருக்கும் B.H. பாமர், போடியார்களின் மனப்பாங்கினைப் பின்வருமாறு விளக்கிக் கூறினார்:

“முதலாளித்துவ முறையின்படி உற்பத்தி வினைத்திறனை அதிகரிப்பதை விடுத்து உழைப்பைப் பிழிந்தெடுப்பதிலேயே நில உடைமையாளர்கள் நாட்டம் கொண்டனர். அவர்கள் அபகரித்துக்கொண்ட மேன்மிகையினைத் தம்மைச் சமூகப் படிநிலையில் மேலும் உயர்த்திக் கொள்வதற்கான செலவுகளிலும், ஆடம்பர நுகர்வுச் செலவிலும், தம் பிள்ளைகளுக்குச் சீதனத்தையும், வெளிநாட்டுக் கல்வியையும் வழங்கவும் செலவிடலாயினர்.”

1970களின் நில உடைமைச் சீர்திருத்தங்களின் பின்னர் போடியார் என்ற வகுப்பு மறைந்து விட்டது. விற்றேக்கர், 1980களின் முற்பகுதியில் மட்டக்களப்புக்கு வந்த போது போடியார் என்ற சொல்லின் பொருள்கூட படிப்பறிவில்லாத விவசாயி என்பதாக மாறியிருந்தது. உயர் அந்தஸ்தில் இருந்த போடியார் படிப்பறிவில்லாத ஒருவர் என்ற நிலைக்குத் தாழ்ந்த போதும், அடிப்படையான நில உடைமை முறை மாறவில்லை என விற்றேக்கர் கூறுகிறார்.

வெளிநாட்டுக் கல்வியை வழங்குவதில் மட்டக்களப்புப் போடியார்கள் ஈடுபட்டனர் என்று B.H. பாமர் பதிவு செய்யும் போது, மிகைப்படுத்தல் ஒன்றைச் செய்கின்றார் என்றே கருதலாம். இலங்கையின் பிற பகுதிகளின் உயர் வகுப்பினர் பிறநாட்டுக்குத் தம் பிள்ளைகளை அனுப்பி கல்வி கற்பித்தமை போன்ற ஊக்கம் மட்டக்களப்பின் போடியார்களிடம் இருக்கவில்லை.

1970களின் நில உடைமைச் சீர்திருத்தங்களின் பின்னர் போடியார் என்ற வகுப்பு மறைந்து விட்டது. விற்றேக்கர், 1980களின் முற்பகுதியில் மட்டக்களப்புக்கு வந்த போது போடியார் என்ற சொல்லின் பொருள்கூட படிப்பறிவில்லாத விவசாயி என்பதாக மாறியிருந்தது. உயர் அந்தஸ்தில் இருந்த போடியார் படிப்பறிவில்லாத ஒருவர் என்ற நிலைக்குத் தாழ்ந்த போதும், அடிப்படையான நில உடைமை முறை மாறவில்லை என விற்றேக்கர் கூறுகிறார்.

விற்றேக்கர் கள ஆய்வு செய்த மண்டூர்க் கிராமத்தில் 1978 இல் ‘றெட்பானா’ நிறுவனம் ஆய்வு ஒன்றைச் செய்தது. இந்த ஆய்வறிக்கையின்படி மண்டூரில் 3,106 நபர்கள் இருந்தனர். இவர்களில் 145 பேர் 3 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்காணியை உடைமையாகக் கொண்டிருந்தனர். 274 பேர் 3 ஏக்கருக்கும் குறைந்த நெற்காணியின் உடைமையாளராவர். 3 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்காணி உடைமையாளர்களில் 16 நபர்களிடம் மண்டூரின் காணிகள் 50 வீதம் இருந்தன. மண்டூரில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் 750 பேர் இருந்தனர். இவர்களில் 608 பேர் தம்மைக் கூலித்தொழிலாளர் என அழைத்தனர். இப்புள்ளிவிவரங்கள் பெரும் நில உடைமையாளர் சிலரிடம் காணி உடைமை குவிந்திருப்பதையும், கிராமத்தின் பெரும்பான்மையினர் கூலி உழைப்பாளர்களாய் இருப்பதையும் காட்டுகிறது.

### சுருக்கம்

19 ஆம் நூற்றாண்டில் மட்டக்களப்பில் நீர்ப்பாய்ச்சல் குளங்கள் திருத்தப்பட்டன. நெற்காணியின் பரப்பளவு அதிகரித்தது. உற்பத்தியும் அதிகரித்தது. அரிசிப் பற்றாக்குறை நீங்கி மட்டக்களப்பு நெல்லை ஏற்றுமதி செய்யும் பகுதியாக மாறியது. போடியார் நில உடைமை முறை பலம் பெற்றது. போடியார், முல்லைக்காரன், வேலைக்காரர் என்ற அதிகாரப் படிநிலைக் கட்டமைப்புடைய சுரண்டல் முறையாகப் போடியார் முறை அமைந்தது. சேவைச் சாதிகள் நில உடைமையாளர்களுக்கு சேவைக் கடமைகளை வழங்கின.

போடியார் முறை வினைத்திறன் மிக்கதாக இருக்கவில்லை. அது முதலாளித்துவ முறையாக விருத்தியடையவில்லை. போடியார் என்ற சொல் படிப்பறிவற்ற விவசாயி என்ற பொருள் உடையதாகவும் மாறியது. மட்டக்களப்பின் நிலப்பிரபுத்துவப் பொருளாதார முறை குறைவிருத்தியின் தன்மையை உடையதாகவே இருந்து வந்தது.

# பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமூக இயக்க எழுச்சிகள்

இன்றைய இருப்பில் இயங்கும் சமூக சக்திகள் தத்தமக்கான நலன்களின் நோக்கில் கடந்த காலத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றன. மேலாதிக்கத் தமிழ்த் தேசியம், தலித்தியம், விடுதலைத் தேசியம் என்பவற்றின் கருத்தியல் தளங்களை அடிப்படையாக உடைய சமூக சக்திகள் இன்றைய இயக்கங்களாகச் செயற்படுகின்றன. எமக்கான நவீன வரலாற்றைக் கட்டமைத்த ஆளுமையாகிய ஆறுமுக நாவலர் குறித்து இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய கண்ணோட்டத்தில் மறுவாசிப்பை மேற்கொள்கின்றன; இதன்வழியாக, கடந்தகாலச் சமூக சக்திகள் வழிவகுத்துவிட்டிருந்த இயங்குமுறை அமைந்த அடித்தளங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றன. இதேபோன்ற பின்னணிக்குரிய ஏனைய சமூகங்களில் இயங்கிய ஆளுமைகளுடன் எமது இயங்கு தளத்துக்குரிய ஆளுமைகளை ஒப்பிடுவதன் வாயிலாக செய்யப்பட்டவற்றையும், செய்திருக்கத்தக்கன எவை என்பதையும் மதிப்பீடு செய்வது அவசியமானது. இவற்றின் பெறுபேறுகள் எமக்கான எதிர்கால மார்க்கத்தை வடிவமைப்பதற்கு மிகமிக முக்கியமானவை ஆகும். "சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர் எனும் இத்தொடரானது நாவலரின் பங்களிப்புக் குறித்த மதிப்பீட்டின் வழியாக சமகால இயங்குமுறையைக் கணிப்பிட்டு, சுயவிமரிசனங்களுடன் புதிய பாதையையும், அதற்குரிய சரியான மார்க்கத்தையும் கண்டடையும் நோக்கில் எழுதப்படுகிறது.


## நடேசன் இரவீந்திரன்



இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார். இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

சூரியன் அஸ்தமிக்காத பிரித்தானிய சம்ராஜ்யம்’ முதன் முதலில் *1776* ஆம் ஆண்டு ஏறத்தாழ ஐம்பது இராச்சியங்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்து விடுதலை பெற்ற வட - அமெரிக்கப் பிராந்தியத்தில் சிறிய சறுக்கலைச் சந்தித்தது. சுதந்திர வேட்கையுடன் புதிதாக உருவான ‘ஐக்கிய அமெரிக்க இராச்சியங்களின் ஒன்றியம்’ தொடர்ந்தும் முன்னேறி வடக்கு முழுமையையும் பிரித்தானியப் பிடியில் இருந்து விடுவிக்க முற்பட்ட போதிலும் இயலவில்லை; நயாகரா நீர்வீழ்ச்சியின் வடக்கை கனடா எனும் பிரித்தானியக் குடியேற்றப் பகுதியாக அங்கீகரித்துத் தெற்கு நயாகராவைத் தனக்குரியதாக ஆக்கிக் கொண்டதுடன் திருப்திகொள்ள வேண்டியிருந்தது.

அந்த முதலடி அப்படியொன்றும் மரணத்தாக்குதல் அல்ல; அப்போதுதான் கிழக்குலகின் மிகப்பெரும் அபகரிப்புச் சுரங்கமாக வரவுள்ள இந்தியாவைப் பிரித்தானியா கையகப்படுத்திக் கொண்டிருந்தது. வட அமெரிக்காவில் ஏற்பட்ட விடுதலைப் போராட்ட உத்வேகம் தென் அமெரிக்காவையும் ஆட்கொண்டதன் பேரில் ஐரோப்பியக் காலனித்துவம் படிப்படியாக அங்கும் முடிவுக்கு வந்தது. உலகின் ஏனைய பிராந்தியங்களிலும் நேரடிக் குடியேற்றவாதத்தை எதிர்ப்பதாகக் காட்டி வந்த ஐக்கிய அமெரிக்கா சுதந்திரம் அடைந்தவாறிருந்த நாடுகள் ஒவ்வொன்றையும் நவ காலனித்துவப் பிடிப்புக்குள் ஆட்படுத்தும் தனது அபகரிப்பு அபிலாசையைப் பூர்த்தி செய்யும் உத்தேசம் கொண்டதாய் இருந்தது. இரண்டு உலக யுத்தங்களால் ஐரோப்பா சின்னாபின்னமாக்கப்பட்டு பலவீனப்பட்ட சூழலில் நேரடிக் குடியேற்றவாத நிலைப்பாட்டைக் கைவிட நேர்ந்தது; தென் அமெரிக்கா மட்டுமன்றி முழு உலக நாடுகளும் நவ காலனித்துவச் செயலொழுங்கின் கீழ் ஏகாதிபத்தியத்தின் சுரண்டலுக்குரிய வேட்டைக்காடாக ஆக்கப்பட்டது.

அவ்வாறு ஏற்பட்ட அன்றைய ‘புதிய உலக’ ஒழுங்கில் ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் மீண்டெழ இயலுமாயிருந்த போதிலும் ஐக்கிய அமெரிக்காவின் தலைமைக்குக் கட்டுப்பட்டு இயங்கும் இரண்டாம் தர இறக்கத்தை ஏற்றதாக வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு. முன்னதாகப் பிரித்தானியா உலகின் முதல்நிலை வல்லரசும் அதியுயர் பணக்கார நாடு என்றும் கொடிகட்டிப் பறந்ததாயினும் கூடுதல் கடன்பட்டுக் குறைநிரப்புப் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கும் வல்லரசாகவே விளங்கியிருந்தது. அவர்களுக்குரிய குறைநிரப்பும் பெட்டகமாகக் காலனிகள் (மிகப் பிரதானமாக இந்தியா) காணப்பட்டன. நவ காலனித்துவ முறைமையில் நேரடிக் காலனித்துவ முறைமையின் அளவுக்கு அபகரிப்பு வாய்ப்பு இல்லையென்றாலும் நேற்றுவரை அந்த உலக ஒழுங்கு ஏற்படுத்தித் தந்த சுரண்டல் வளம் திருப்தி தரக்கூடிய அளவில் இருந்து வந்தது.

இன்று ஏற்பட்டுள்ள புதிய உலக ஒழுங்கு அந்தச் சுரண்டல் வளம் முற்றாகக் கைநழுவிப் போய்விடுமோ என்ற அச்சத்தை அவர்களுக்கு மூட்டியுள்ளது. முன்னர் காலனித்துவ நாடுகளாக இருந்த சீனா, இந்தியா எனும் உலக சனத்தொகையில் மிக அதிகளவான மக்களைக் கொண்டிருக்கும் முதலிரு நாடுகள் உலகின் முதல் நிலைப் பொருளாதார அந்தஸ்தையே நோக்கி வளர்ந்து கொண்டிருக்கின்றன. அதிலும் சீனா பொருளாதார உற்பத்தித் திறனிலும் தொழில்நுட்ப விருத்தியிலும் ஐக்கிய அமெரிக்காவைக் கடந்து ஏற்கனவே முதல் நிலையை எட்டிவிட்டது. இராணுவ வல்லமையிலும் மிக விரைவாக முதல் நிலைக்குரிய இடத்துக்கு வரவுள்ளதற்கான அறிகுறிகள் வெளிப்பட்டுள்ளன. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஏனைய நாடுகளை அபகரித்த செல்வ வளமும் உட்கட்டமைப்பு வசதிகளும் ஐக்கிய அமெரிக்காவுக்கு இருந்த போதிலும் மக்களுக்கான அதியுயர் வாழ்வாதாரங்களை வழங்கும் முதல் நிலைப் பணம் படைத்த நாடு எனும் இருப்பை விரைவில் எட்டிவிடும் கால எல்லையைச் சீனா அடைந்துள்ளது.

தனது அதியுயர் பீடம் தளர்ந்து போய்க் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ஆகக் கூடுதலான கடன் பளுவுடைய நாடாகவும் ஐக்கிய அமெரிக்காவே துலங்குகிறது. இதுவொன்றும் பாதகமானதல்ல எனத்தக்க வகையில் முன்னர் பிரித்தானியா அவ்வாறுதான் காணப்பட்டது என்று ஆறுதல் கொள்ள இடமுண்டு; அதேயிடத்தில் நேரடிக் காலனித்துவம் ஈடுகட்டும் சக்தியாக அப்போது இருந்தது எனும் போது இன்றைய ஏகாதிபத்தியத்துக்கான குறைபாடு பாரியது. இதனை நிவர்த்திக்கும் முயற்சியில் ஏற்கனவே ஐக்கிய அமெரிக்க இறங்கிவிட்டதாகக் கருதுவோர் உள்ளனர். சர்வதேசச் சட்டங்களை உதாசீனம் செய்தவாறு வெனிசுலா ஜனாதிபதியை (அவருடன் இணையரையும் சேர்த்து) ‘கைது செய்து’ தனது நாட்டுக்கு கடத்தி வந்தமையை ஐக்கிய அமெரிக்கா நியாயப்படுத்துவதற்கு ‘வெனிசுலாவை எமது தேச எல்லைக்குள் கொண்டுவந்து உள்ளோம்’ எனச் சொல்ல வேண்டியுள்ளது.

தெற்கே உள்ள மெக்சிக்கோவும் வடக்கேயுள்ள கனடாவும் கூட ஐக்கிய அமெரிக்காவின்

விஸ்தரிப்புக்கு ஆட்பட வேண்டும் என்பது அதன் குரலாக ஒலிக்கிறது. இந்த நடவடிக்கையானது நேரடிக் காலனித்துவத்துக்குத் திரும்புதல் எனக் கருத்துரைப்போர் உள்ளனர்; உரிமை கோரப்படும் நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவின் எல்லையை விரிவுபடுத்த ஏற்றதான அயல்நாடுகள் என்பது கவனிப்புக்குரியது. தொலைதூர நாடுகளை நவ காலனித்துவச் சுரண்டலுக்கு ஆட்படுத்தும் தனது வலிமையைப் பெருக்குவதன் பொருட்டாக அந்த ஏகாதிபத்தியக் கோரிக்கை அமைந்துள்ளது. அந்தந்த நாடுகளின் மக்கள் தாம் இறுதித் தீர்மானத்தை எடுத்துத் தமது இறைமையைத் தக்கவைத்துச் சுதந்திர நாடாக இருப்பதா இல்லையா என்பதை முடிவு செய்தாக வேண்டும்!

ஏகாதிபத்தியத் திணைக்குள் ஓர் ஒப்பந்தம் இருந்தது; வட - தென் அமெரிக்க நாடுகளுக்குள் ஐரோப்பா தலையிடக்கூடாது, ஐரோப்பாவினுள் ஐக்கிய அமெரிக்கா மேலாண்மை செய்யக்கூடாது என்பதாய். அதன் காரணமாக வெனிசுலா விவகாரத்தில் ஐக்கிய அமெரிக்காவை ஐரோப்பிய நாடுகள் கண்டிக்காதது மட்டுமன்றிச் சில நாடுகள் வெளிப்படையான ஆதரவையும் தெரிவித்தன. கிறீன்லாந்தைத் தன்னுடன் இணைக்க முயற்சித்த போது ஊடல் ஏற்பட்டுள்ளது என்ற போதிலும் தமது மேலாதிக்கத்தை மீட்டெடுக்க வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் ஐக்கிய அமெரிக்கத் தலைமையில் ஒன்றிணைந்து ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கு எதிராகக் களமாடும் விருப்பம் அவர்களை ஆட்கொள்ளாமல் இருக்காது.

மாறியுள்ள இன்றைய புதிய உலக ஒழுங்கு வாயிலாக எழுச்சியடைந்து வரும் திசைமுகப்படலானது ஏகாதிபத்திய யுத்த சன்னதத்தைக் கட்டுக்குள் முடக்குவதற்காக வளர்ந்துள்ளது என நம்ப இடமுள்ளது. இந்த ஜனவரி மாதத்தின் பிற்கூற்றில் ஈரானை நோக்கிப் பாரிய யுத்த முன்னெடுப்பைக் கட்டவிழ்த்து விடும் எத்தனிப்புகளை மேற்கொண்ட போதிலும் அதனைக் கைவிட்டுப் பின்வாங்கும் நெருக்கடியை ஐக்கிய அமெரிக்கா சந்திக்க நேர்ந்துள்ளது. முன்னதாக அரசுக்கு எதிராக மக்களைக் கிளர்ச்சியில் ஈடுபடுத்தும் ஏகாதிபத்தியத் திட்டம் ஈரானை ஓரளவு தாக்கிப் பலவீனப்படுத்துவது போன்ற தோற்றம் இருந்தது; 'போராட்டத்தின்' பின்புலம் ஏகாதிபத்திய நலன் பேணுதல் என்பதைப் புரிந்துகொண்ட ஈரானிய மக்கள் இஸ்லாமியப் புரட்சி அரசாங்கத்தை ஆதரித்துக் கிளர்ந்தெழுந்து வீதியில் இறங்கிப் போராடிய போது எதிர்ப்புரட்சிக் கும்பல் வாலைச்சுருட்டிக் கொண்டு பின்வாங்கியது. ஈரானைச் சூழவுள்ள மத்திய கிழக்கு நாடுகள் ஐக்கிய அமெரிக்கச் சார்புடன் அதன் இராணுவத்தலங்களைக் கொண்டிருந்த போதிலும் ஈரானுக்கு எதிரான யுத்தத்தை ஆதரிக்க இயலாது என்று ஒருமுகமாகக் கூறியிருந்த காரணமும் இணைந்த வகையில் ஏகாதிபத்திய அகங்காரம் தன்னுடைய கர்ச்சனையைத் தொடர இயலாமல் அடக்க வேண்டியதாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இரண்டு நூற்றாண்டுகளாகக் காலனித்துவச் சக்திகளும் ஏகாதிபத்தியமுமே உலக வரலாற்றின் தீர்மானகரமிக்க அம்சம் என்றிருந்த நிலை மாற்றமடைந்து ஒடுக்கப்பட்ட தேசங்கள் வரலாற்றுச் செல்நெறியைத் தீர்மானிக்கும் பண்பு ரீதியில் வேறுபாட்டை ஏற்படுத்துகின்ற மக்கள் யுகத்துக்கான உச்சக் கட்டத்தில் இன்றைய உலகு!

## உற்பத்தி உறவில் வர்க்கமும் திணையும்

“இதுவரையில் ஏடறிந்த வரலாறுகளனைத்தும் வர்க்கங்கள் இடையேயான போராட்டங்கள் வாயிலாகவே இயங்கி வந்துள்ளன.” எனும் பிரகடனத்தை *1848* ஆம் ஆண்டில் 'கொம்யூனிஸ்ட் அறிக்கை' அழுத்தி வலியுறுத்தியிருந்தது. அந்தவகையில் பின்தொடரும் வரலாற்று இயக்கமும் வர்க்கப் போராட்டம் வாயிலாக மட்டுமே முன்னெடுக்கப்பட வேண்டும் என்று மார்க்சியர்கள் முடிவு செய்வதனை எவரும் தவறு எனச் சொல்லிவிட இயலாது. தேசிய விடுதலைப் போராட்டம் மூலமாக சீனா, வியட்னாம் போன்ற நாடுகள் சோசலிசத்தை நோக்கிச் செல்வதற்கு முற்பட்ட போது மார்க்சியத்தைக் கால, தேச நிலவரங்களுக்கு அமைய விருத்தி செய்திருந்த லெனினிசத்தின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு வழிகாட்டும் நெறியாகக் கைகொடுத்து உதவியது. அதன் பிரயோகமாக அமைந்த மாஓ சேதுங் சிந்தனையை இன்றைய மக்கள் சீனம் சோசலிசப் பிரயோகத்துக்கும் உரியதாகக் கையாள முற்படுவதனைத் திரிபுவாதம் எனக் கூறுவோர் உள்ளனர். சோசலிச மாற்றியமைத்தலை மக்கள் சீனம் எட்டிய நிலையில் வர்க்கப் போராட்ட அடிப்படையில் மாஓ சேதுங் கலாசாரப் புரட்சியைப் பிரகடனப்படுத்தியதோடு முன்னதாக நடப்பில் இருந்த 'மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்' என்பதைக் கடந்து 'பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரப்' பிரயோகத்துக்குக் கட்சியையும் நாட்டையும் வழிப்படுத்தினார் என்பது வரலாறு.

அத்தகைய பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரப் பிரயோகம் நாட்டின் விருத்திக்கும் அமைதிக்கும் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்திய வரலாற்றுப் படிப்பினையின் பின்னரே சோசலிசக்

காலகட்டத்திலும் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை முன்னிறுத்தும் மாஓ சேதுங் சிந்தனையே தொடரப்பட வேண்டும் என்ற முடிவுக்கு மக்கள் சீனம் ஆட்பட்டது; இன்றைய துரித வளர்ச்சியையும் கண்டு வருகிறது. மாறாக, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார இயங்குமுறையில் இருந்த சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பின்னடைந்து முதலாளித்துவ நாடுகளாகச் சிதைவுக்கு உள்ளாகி இருந்தன.

ஒடுக்கப்பட்ட தேசங்களாக இருந்த சீனாவும் வியட்னாமும் மட்டுமே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைக் கைவிட வேண்டுமெனும் நிர்ப்பந்தத்துக்கு ஆட்படவில்லை; முதலாளித்துவ விருத்தியுடன் இருந்து நீண்டகாலமாகப் பாட்டாளி வர்க்க அரசியலை முன்னெடுத்த சோசலிச முகாம் முழுமையாக 'வர்க்கப் போராட்டமே சமூக மாற்றத்துக்கான ஒரே வடிவம்' என்ற பரீட்சார்த்தத்தில் தோல்வியைத் தழுவ நேர்ந்தது ஏன்? வரலாற்று இயங்குமுறையில் ஏற்பட்டிருந்த மாற்றத்தை இது காட்டுகின்றதா? சோசலிச முகாம் தகர்ந்து காணாமல் போயிருந்த வெற்றிடத்தை நிரப்பும் வகையில் ஏனைய நாடுகளில் வர்க்கப் போராட்டம் கூர்மை அடைவதாக அல்லாமல் தேசியவாத, மதவாத, பாலின, சாதியவாத அடையாள அரசியல் மேலெழுந்து வர இயலுமானது எதனால்?

இப்போது அடையாள அரசியல் முற்றிலும் தோல்விக்குரியது எனும் உண்மை பட்டவர்த்தனமாக வெளிப்பட்டுள்ளது. இந்த இடைவெளிக்குள் புத்தகவாத மார்க்சியர்கள் 'வர்க்கமாக அணி திரள்வோம்' என்ற மந்திரத்தை மீண்டும் உச்சக் குரலில் ஓங்கி ஒலிக்கின்றனர். இலங்கையில் மாற்றத்தை விரும்பிய மக்கள் 'தேசிய மக்கள் சக்தி' என்ற இடதுசாரி அமைப்பை அரசாங்கம் அமைக்க வகை செய்துள்ளனர். இந்த அமைப்பும் அதன் தலைமைக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி) தேசிய இனங்களின் சுயநிர்ணயக் கோட்பாட்டை ஏற்கவில்லை. அத்துடன் சிங்கள மக்களோடு தமிழ், முஸ்லிம், மலையக, மலே, பறங்கியர் ஆகிய சிறுபான்மை இன மக்கள் அனைவருமே 'இலங்கை தேசிய இனத்தவர்' என்ற தேய்ந்து போன வாய்ப்பாட்டைக் கூறுகின்றனர்.

பாட்டாளி வர்க்க இயக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறில் இருந்து நூறு வருடங்களாக (இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை) சோசலிச சமூக முறைமை ஒன்றை மனுக்குலம் கண்டடைய ஆற்றுப்படுத்தியிருந்தது. அதன் பிரயோக வடிவமாக 1917 ஆம் ஆண்டில் உதயமான சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் வகுத்து வழங்கிய சுயநிர்ணயக் கோட்பாடு 1949 ஆம் ஆண்டில் மக்கள் சீனம் உதயமாவதற்கும், அது காலூன்றி முன்னேறுவதற்கும் மூல காரணியாக அமைந்தது. பின்னரான வரலாற்றில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வாயிலாக எந்தவொரு நாடும் சோசலிசத் திசை மார்க்கத்தை வந்தடையவில்லை; கிழக்கு ஐரோப்பிய நாடுகள், வியட்னாம், கியூபா, வடகொரியா என்பன விடுதலைத் தேசிய மார்க்கத்தில் சோசலிசம் நோக்கி முன்னேறுவதாக வரலாற்றுச் செல்நெறி அமைவு கொண்டுள்ளமையை எவ்வாறு புரிந்துகொள்வது?

இன்று வரலாற்று உந்துசக்தியாக மேலெழுந்துள்ள இனத்தேசிய, மத அடிப்படை, பாலின, சாதிக் குழுமங்கள் என்பன 'வர்க்க வாய்ப்பாட்டுக்குள்' வர மறுப்பது மெய்; அதற்காக அத்தகைய சக்திகளின் இருப்பைக் காண மறுப்பது மட்டுமன்றி நிதர்சனமாக உள்ள அவற்றைப் புறமொதுக்கி 'வர்க்கங்களாக அணி திரளுங்கள்' என்று முழக்கமிடுவதால் எதையாவது சாதிக்க முடிந்துள்ளதா? வாராதது போல வந்த ஒரு மாமணியான இலங்கையின் இடதுசாரி அரசாங்கத்துக்குக் குழி பறிக்கும் சறுக்கலாக இனப்பிரச்சினை உள்ளதனைக் கவனங்கொள்ளாது இருக்கலாமா? பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டுடன் வர்க்க அணிச் சேர்க்கைக்கு அப்பால் திரட்சியடைந்துள்ள தேசங்கள் என்ற முழுச் சமூக சக்தியை விளக்கம் கொண்ட காரணத்தாலேயே தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான சுயநிர்ணயக் கோட்பாட்டை லெனின் முன்வைத்தார்.

ஏகாதிபத்திய ஒழுங்குமுறைக்கு எதிராகப் போராடிய தேசங்களினுள் பல்வேறு வர்க்கங்களின் ஒன்றிணைவுக்குரிய 'ஒடுக்கப்பட்ட தேசம்' என்றிருந்ததைப் போல, சுதந்திரமடைந்த நாடுகளினுள் பேரினவாத ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் ஒடுக்கப்பட்ட தேசிய இனம் தனக்கு ஏற்படும் புறக்கணிப்புகள், சுரண்டப்படுவதற்கான வெளிகள் என்பனவற்றில் இருந்து தற்காத்துக் கொள்ளும் ஏற்பாடாக சிறப்பான சுயாட்சி அமைப்பினைக் கோருவதனை இனவாதமாக வரையறுப்பது 'ஒன்றுபட்ட தேசிய நலன்' என்பதன் பேரிலான பேரினவாத நடைமுறையன்றி வேறல்ல; இலங்கையின் இன்றைய இடதுசாரி அரசாங்கம் இந்தத் தவறை மேற்கொண்டு வருகிறது.

ஒடுக்கப்படும் ஏனைய இனத்தேசியங்களைச் சேர்ந்த விடுதலைத் தேசிய சக்திகள் பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டில் காலூன்றி நின்றபடி சுயநிர்ணயக் கோரிக்கையை முன்வைப்பதற்கு அவகாசமின்றி நாடு எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகளின் தீர்வுக்கு

**விடுதலைத் தமிழ்த் தேசியம் மேலாதிக்கவாதிகளின் நோக்கங்களை முறியடிக்க இயலாது இருப்பதில் உள்ள பிரதான ஒரு தடை, சிங்கள மக்கள் மத்தியில் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கான ஏற்புக்குரிய பரப்புரை இடம்பெறாது இருப்பதுதான். ஏகாதிபத்திய எதிர்ப்பில் இயங்கும் உற்பத்தி உறவு வர்க்க வடிவம் உடையதல்ல; மேலாதிக்கத் திணையாக ஏகாதிபத்தியம் ஒடுக்கப்படும் தேசம் எனும் முழுச் சமூக சக்தியை (திணையை) அபகரிப்புக்கு உள்ளாக்குவதாகும். இனத்தேசியங்களில் பேரினவாதம், இனத்தேசியங்கள் என்பனவும் வர்க்கமாக அன்றித் திணைகளாக இயங்கும் உற்பத்தி உறவுதான்.**

முன்னுரிமை கொடுத்து இயங்கியவாறுள்ளனர். ஏகாதிபத்தியம் ஏற்படுத்தித் தந்த நாடு பூராகவுமான உயர் பதவி வாய்ப்புகளைச் சுதந்திர இலங்கை சிங்களத் தேசிய நலனை முன்னிறுத்திக் கட்டுப்படுத்தியதனால் ஏற்பட்ட பாதிப்பை யாழ்ப்பாண மாவட்டம் எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய தெளிவு தமிழ்த் தேசியர்களுக்கு இருக்கவில்லை; தனியொரு மாவட்டத்தின் பாதிப்பை ஒட்டுமொத்தத் தமிழர் பிரச்சினையெனக் காட்டி மேற்கொண்ட யுத்தம் அனைத்துத் தமிழ் மக்களையும் பாதிக்கும் வகையில் வளர்த்தெடுக்கப்படுவதில் சிங்களப் பேரினவாதத்துக்குப் பெரும் பங்குள்ளது. இறுதி யுத்தத்துக்குரிய 2009 ஆம் ஆண்டின் ஓரிரு மாதங்களில் ஒரு இலட்சத்துக்கும் மேலான பொது மக்கள் கொல்லப்பட்டார்கள் என்பது சிங்களப் பேரினவாதம் இழைத்த மன்னிக்க இயலாத போர்க்குற்றமாகும். அந்தக் குற்றத்தில், அவசியமற்ற போர்ச் சூழலை உருவாக்கி மூன்று இலட்சம் மக்களைத் தமது பாதுகாப்புக் கவசமாகக் கையாண்ட தமிழ்த் தேசிய மேலாதிக்கத்துக்கும் பங்குள்ளது. மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் ஏகாதிபத்திய நாடுகளுள் கரந்துறைந்த வண்ணம் விடுதலைத் தமிழ்த் தேசிய சக்திகள் தாயக மண்ணில் செயலாற்ற இடமளிக்காத பல இடர்பாடுகளை மேற்கொண்டவாறுள்ளனர்.

விடுதலைத் தமிழ்த் தேசியம் மேலாதிக்கவாதிகளின் நோக்கங்களை முறியடிக்க இயலாது இருப்பதில் உள்ள பிரதான ஒரு தடை, சிங்கள மக்கள் மத்தியில் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கான ஏற்புக்குரிய பரப்புரை இடம்பெறாது இருப்பதுதான். ஏகாதிபத்திய எதிர்ப்பில் இயங்கும் உற்பத்தி உறவு வர்க்க வடிவம் உடையதல்ல; மேலாதிக்கத் திணையாக ஏகாதிபத்தியம் ஒடுக்கப்படும் தேசம் எனும் முழுச் சமூக சக்தியை (திணையை) அபகரிப்புக்கு உள்ளாக்குவதாகும். இனத்தேசியங்களில் பேரினவாதம், இனத்தேசியங்கள் என்பனவும் வர்க்கமாக அன்றித் திணைகளாக இயங்கும் உற்பத்தி உறவுதான்.

'கொம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' வர்க்கப் போராட்டக் கோட்பாட்டை மட்டும் முன்வைக்கவில்லை. அது முன்னிறுத்திய அம்சங்கள் அனைத்தையும் புரிதல் கொண்டு பிரயோகிப்பதன் வாயிலாகவே பூரண சமத்துவம் வெற்றி கொள்ளப்படும். வர்க்கப் போராட்டம் நிகழ்வதற்கான அடிப்படைக் காரணமாகக் கூறும் அறிக்கையின் பிரதான விடயம் உற்பத்தி உறவை மாற்றியமைக்க வேண்டும் எனும் அவசியம் என்பது. உற்பத்திச் சக்திகள் விருத்தியடையும் போது, உடைமையாளர்களுக்கும் உழைப்போர்க்குமான உற்பத்தி உறவு வளர்ச்சியடைகிறது. இதனால், புதிய உற்பத்திச் சக்திகளை அரங்கேற்றும் போது, மாறிய நிலைக்குரிய உற்பத்தி உறவு ஒன்றை ஏற்படுத்த வேண்டியதாகின்றது. உருவான புதிய உற்பத்திச் சக்தி தனக்கான வர்க்க எழுச்சியுடன் பழைய வர்க்க ஒழுங்கமைப்பைத் தகர்த்துப் புதிய சமூக முறைமையை ஏற்படுத்துவதாக வர்க்கப் போராட்டம் அமைகிறது. ஐரோப்பிய நிலப்பிரபுத்துவ சமூகம் புதிய உற்பத்திச் சக்தியாக விருத்தி பெற்ற மூலதன எழுச்சி வந்தமைந்த போது தகர்க்கப்பட்டு முதலாளித்துவ அமைப்பு உருவானது. முதலாளித்துவம் தனது மூலதனத் தேட்டத்துக்காக எமது தேசங்களை ஆக்கிரமித்த போது ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசங்கள் எனும் புதிய வகை உற்பத்தி உறவு அரங்கேறியது.

### வேத மீட்டுருவாக்கம் முதல் இந்து விடுதலை நெறி வரை

நீண்டகாலமாக நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை நிலவிய இந்திய, இலங்கைச் சமூகங்களில் ஒவ்வொரு கிராமங்களும் தமக்குள் ஒடுங்கிப்போன வாழ்முறை நிலவியது. நிலம் பிரதான உற்பத்திக்குரிய வளமாகவும் அதன் விளைச்சலுக்கு அவசியப்பட்ட உற்பத்திக் கருவிகளுக்கான கைத்தொழில் பட்டறைகளைக் கூட

ஒவ்வொரு கிராமமும் கொண்டிருக்கத்தக்க வாய்ப்பும் இருந்தது. பற்றாக்குறைக்குரிய பொருட்களும் ஆடம்பரத் தேவைகளும் சார்ந்த வணிகமும் நிலப்பிரபுத்துவ முறைமைக்குக் கட்டுப்பட்டதாக அமைந்தது. அந்த உற்பத்தி உறவுக்கு ஏற்புடையதாக சாதி முறைமை காணப்பட்டது. சாதிகள் இடையே ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் உரிமை மறுப்புகளும் காணப்பட்டதன் காரணமாக அவ்வப்போது முரண்பாடுகளும் போராட்டங்களும் காணப்பட்டன; நிலப்பிரபுத்துவ நலன் பேணும் வகையில் அரசினால் அவை கையாளப்பட்டன.

**பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இரண்டு நூற்றாண்டுகளாகக் காலனித்துவச் சக்திகளும் ஏகாதிபத்தியமுமே உலக வரலாற்றின் தீர்மானகரமிக்க அம்சம் என்றிருந்த நிலை மாற்றமடைந்து ஒடுக்கப்பட்ட தேசங்கள் வரலாற்றுச் செல்நெறியைத் தீர்மானிக்கும் பண்பு ரீதியில் வேறுபாட்டை ஏற்படுத்துகின்ற மக்கள் யுகத்துக்கான உச்சக் கட்டத்தில் இன்றைய உலகு!**

வட இந்தியாவில் மொகலாயப் பேரரசின் ஆட்சி நிலைபெற்றிருந்த சூழலில் பிரித்தானியாவின் காலனித்துவத்துக்கு ஆட்பட நேர்ந்தது. அரசுக்குரிய மதமாக இஸ்லாம் இருந்ததாயினும் அவர்களது அமைச்சர்களாகப் பிராமணர்கள் இருப்பது வரையிலான இந்து - முஸ்லிம் நல்லுறவு நிலவியது; ஆட்சியாளர்களை முறியடிக்கும் நோக்கில் மத முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தும் வாய்ப்பும் இருந்த சூழலில் ஆட்சியமைத்த பிரித்தானியக் காலனித்துவம் மத விரோதத்தைக் கூர்மைப்படுத்திப் பிரித்தாளும் ஆட்சியை அரங்கேற்றினர். அதேவேளை கிறிஸ்தவ மத மாற்றத்துக்கான முன்னெடுப்புகளும் முனைப்படலாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவில் இருந்து ஐரோப்பியத் தொழிற்புரட்சி ஏற்படுத்திய புதிய வாழ்வியல் விருத்திகளும் அதனுடன் இணைந்த நவீன கல்வி முறையும் கவரும் சக்தியாக ஈர்த்த நிலையில் மதமாற்றத்திலிருந்து தடுக்கும் வகையில் இந்து மதத்தின் முன்னைப் பழம் பெருமையை மீட்டுருவாக்கும் வேலைப் பாணி மேலெழத் தொடங்கியது. வட இந்தியாவின் மேற்குப் பகுதியில் தயானந்த சரஸ்வதி முன்னெடுத்த ஆரிய சமாஜம் 'வேத காலத்துக்குத் திரும்புதல்' என்ற இயக்கத்தை முன்னெடுத்ததில் இந்த மீட்டுருவாக்கம் முழு அளவில் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம். கிழக்குப் பகுதியில், குறிப்பாக வங்காளத்தில் முந்திய நூற்றாண்டு வரை பக்தி இயக்க எழுச்சி நிலவிய காரணத்தால் இந்து - இஸ்லாமிய ஒற்றுமை, பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வலை, சாதிபேதம் கடவுளின் முன் அர்த்தமற்றது எனும் கருத்து நிலை என்பன காணப்பட்டதன் தொடர்ச்சியாக ஆட்சிக் கல்வியை ஏற்றுக்கொண்டு இந்து மதத்தை நவீனப்படுத்தும் இயக்கங்கள் உருவாக இயலுமாயிற்று. ராஜா ராம் மோகன் ராய் தொடக்கி வைத்த பிரம்ம சமாஜம் சாதியத்துக்கும் பெண் ஒடுக்குமுறைக்கும் எதிரான காத்திரமான தாக்கங்களை விளைவித்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்கூறில் விவேகானந்தர் உருவாக்கிய 'இராமகிருஷ்ண மிஷன்' எனும் நிறுவனப்பட்ட இயக்க முறைமை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலச் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு உத்வேகம் ஊட்டுவதாக அமைந்தது. அதுவரை பிராமணர்களுக்கான தத்துவமாக இருந்த அத்வைதத்தை 'செயல் முறை வேதாந்தம்' எனப் புதிய தளத்துக்கு மடைமாற்றியதன் வாயிலாக அரசியல் - சமூக - பண்பாட்டு அணிகள் பலவும் எழுச்சியுறுவதற்கு விவேகானந்தர் வழிசமைத்தார். ஆன்ம ஈடேற்றம் தான் அவரது இறுதி இலக்காக இருந்ததாயினும், விடுதலை இந்து நெறியாக மதச் செயற்பாட்டை மடைமாற்றிய இந்த விருத்தி கவனிப்புக்குரியது.

காலனித்துவம் ஏற்படுத்திய தாக்குறவுக்கு எதிராக அங்கே சாதி பேதங்களை மறுப்பதற்கான தொடக்கங்களும் பெண் விடுதலைச் சிந்தனையும் ஏற்பட இயலுமாயிற்று. வேத கால மீட்டுருவாக்கத்தின் பிரதிநிதியாக இருந்த தயானந்த சரஸ்வதி கூட இடையிட்டு வந்த சாதியத்திற்கு எதிரான சில கருத்து நிலைகளுடன் இருந்துள்ளார். அதே நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய ஆறுமுக நாவலர் 'சாதியின் காவலர்' எனக் கண்டிக்கப்படும் வகிபாகத்தைக் கொண்டிருந்ததன் காரணம் என்ன? பெண்களுக்கு எதிரான அவரது கருத்து வெளிப்பாடுகளை எவ்வாறு புரிந்து கொள்வது?

நாவலரைத் தொடர்ந்த அடுத்த நூற்றாண்டின் இயக்கப் போக்கின் வாயிலாக இதனைப் புரிந்துகொள்ள இயலும். அவரின் கருத்து நிலைகளுக்கு அடித்தளமாக அமைந்த சைவ சித்தாந்தக் கருத்தியல் அவரிடமும், இருபதாம் நூற்றாண்டின் ஆளுமையான வ.உ. சிதம்பரனாரிடமும் எவ்வாறு விளக்கம் பெற்றன என்பதனை ஆய்வு செய்வதன் வாயிலாகப் புரிந்துகொள்வோம்.

# மலையக நாட்டார் பாடல்களில் வெளிப்படும் காதல் உணர்வு

கப்டன் ஹென்றி பேர்ட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிச் செய்கையோடு மலையக மக்களின் வாய்மொழிப் பாடல் வரலாறு ஆரம்பிக்கின்றது. சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலேயரின் பூரண கட்டுப்பாட்டில், அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு, கடுமையான உழைப்புச் சுரண்டலுக்கு உட்பட்டு இம்மக்கள் வாழ்ந்தமையால், உலகில் உள்ள நாட்டுப்புறப் பாடல்களில் இருந்து இவர்களின் பாடல்கள் தனித்துவம் பெறுகின்றன. இத்தகைய இருள் சூழ்ந்த வாழ்வியலுக்குள் சிக்கிய மக்களின் வரலாறு, துன்பம், துயரம் ஆகியவற்றை இவர்களின் வாய்மொழிப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இன்று, மலையக மக்களின் 200 வருடகாலப் பண்பாட்டைத் தீர்மானிக்கும் முக்கிய கூறுகளாகவும் இவை திகழ்கின்றன. அந்தவகையில், மலையக மக்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் அவர்களது வாய்மொழிப்பாடல்கள் வழியாகப் புரிந்துகொள்ளும் நோக்குடன் எழுதப்படுவதாக, 'மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் பேசும் வாழ்வியல்' எனும் இத்தொடர் அமைகின்றது




## வேலாயுதம் இராமர்

வேலாயுதம் இராமர், கொ.புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரில் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். கவிஞர், நாடகம், திரைப்பட நடிகர், மலையக நாட்டார் இலக்கிய செயற்பாட்டாளர் என பல்துறைசார்ந்து செயற்படுவதோடு மலையக கூத்து தொடர்பாகவும் செயற்பட்டு வருகின்றார்.

நாட்டுப்புறப் பாடல்கள் ஆண்டுகள் பல கடந்தும் மக்களின் மனதை உறுத்துகின்றன என்றால், ஆய்வாளர்களைத் தேடித்தேடி ஆய்வு செய்யத் தூண்டுகின்றன என்றால், இதன் ஆழமும் அகலமும் விரிவானதே. உலகில் மனிதன் மொழியைப் பயன்படுத்தத் தொடங்கிய காலம் முதல் நாட்டுப்புற வாழ்வியலைப் பேசும் இலக்கியமும் தோன்றி வளர்ந்து வந்திருக்கிறது. எனவே ஒவ்வொரு இனத்தினதும் மொழியினதும் அடிப்படை இலக்கியமாகவும் மூல இலக்கியமாகவும் திகழ்வது நாட்டுப்புற இலக்கியமே ஆகும். இன்று உலகில் பேசப்படுகின்ற புராண, இதிகாசக் கதைகள், செவ்வியல் இலக்கியங்கள் யாவற்றிலும் நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கம் முழுமையாக இடம்பிடித்திருக்கிறது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

அதேபோல உலக இயக்கத்துக்கும் மானிட இருப்புக்கும் அச்சாணியாகத் திகழ்வது, பசியும் காதலும் ஆகும். இவ்விரண்டும் உலகை இயக்கும் பிரதான சக்திகளாக இடம்பிடிக்கின்றன. இந்தக் காதலை இன்று உலகம் போற்றுகின்ற அனைத்துத் தத்துவ நூல்களும் சமய இலக்கியங்களும் புனிதமான செயற்பாடாகவே போற்றுகின்றன. அவை அதனைத் தெய்வீகத் தன்மை கொண்டதாகச் சித்தரிக்கின்றன. ஆனால் வர்க்கச் சமூக அமைப்பு வலுவடைந்த பின்னர், இந்தக் காதலைத் தெய்வீகத் தன்மை கொண்டதாக மட்டும் பார்க்க முடியவில்லை. ஆதிக்க சாதிகளின் காதல் புனிதமானதாகவும், அடக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களின் காதல் விரும்பத்தகாததாகவும் நாகரிகமற்றதாகவும் சித்தரிக்கப்படும் தன்மை பிற்காலப் படைப்பாளர்களிடத்தில் மேலோங்கிச் செல்வதைக் காணலாம். எனவேதான் இன்றைய மானிடவியலாளர்கள் மக்களின் உண்மையான பண்பாட்டை விளங்கிக் கொள்வதற்கு, நாட்டுப்புற இலக்கியங்களையும் அதன் வேர்களையும் தேடி ஆராயும் தன்மை தற்போது வளர்ச்சி அடைந்து வருகிறது.

இன்றைய ஆய்வாளர்கள் நாட்டார் இலக்கியத்தை இரு நிலைகளில் வைத்துப் பார்க்கின்ற தன்மையும் காணப்படுகிறது. பழங்குடி மக்களிடத்தில் காணப்படும் பாடல்கள், கதைகள், பழமொழிகளை ஒருபுறமாகவும், நாகரிகம் அடைந்த மக்களிடத்தில் வாய்மொழியாக வழங்கிவரும் பாடல்கள், கதைகளை மறுபுறமாகவும் ஆராய்கின்றனர். அந்த வகையில் பழங்குடி மக்கள் தங்களது வாய்மொழி இலக்கியங்களை தலைமுறை தலைமுறையாகப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். அதுவே அவர்களுக்கான அடையாளமாகவும் பண்பாட்டுக் கருவூலமாகவும் போற்றப்படுகிறது.

இயற்றப்பட்ட பல பாடல்களும் நாட்டார் பாடல் தன்மையைப் பெற்றுவிடுகின்றன. இதற்கான காரணம் அவை எழுதப்பட்ட தன்மையில் அல்லாமல், மக்களிடத்தில் பரப்பப்பட்ட விதத்திலேயே நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கைப் பெற்றுவிடுகின்றன.

“மனித உள்ளத்தின் ஆழத்தையும், அங்கே தோன்றி ஒலிக்கும் பல்வேறு இதய ஒலிகளையும், வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் எழும் இயற்கையான எண்ணங்களையும், இன்ப துன்பங்களையும், ஆசாபாசங்களையும், வாழ்க்கைப் போராட்டங்களையும் நாட்டுப்புற இலக்கியங்களில் காண்கிறோம்” என்பார் சு. சக்திவேல். இத்தகைய நாட்டுப்புறப் பாடல்கள் மனித உணர்வின் வடிகாலாகவும் கட்டுப்பாடற்ற கற்பனை நிறைந்த களஞ்சியமாகவும் திகழ்கின்றன. நாட்டார் பாடல்களின் பண்புகளாக பின்வருவனவற்றை ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர்.

1. வாய்மொழியாகப் பரப்பப்படுவது.
2. மரபு வழிப்பட்டது.
3. பல்வேறு வடிவங்களாகத் திரிபடைவது.
4. ஆசிரியர் அற்றது.
5. ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்குவது.

தமிழில் வீரயுகப் பாடல்கள் முதல், உலகில் தோன்றிய அனைத்து வீரயுகப் பாடல்களும் வாய்மொழிப் பாடல்களாகவே இருந்திருக்கின்றன என்பதை பேராசிரியர் க. கைலாசபதி தனது ‘தமிழ் வீரயுகப் பாடல்கள்’ என்ற கட்டுரையில் நிறுவியுள்ளார். இவ்வாறு நாட்டார் இலக்கியத்தின் செழுமை உலகம் முழுவதும் செல்வாக்குப் பெற்றிருப்பதைப் போல தமிழ்நாட்டிலும் பெரும் செல்வாக்கைப் பெற்று அனைத்துச் செவ்வியல் இலக்கியங்களுக்கும் வடிகாலாக அமைந்தது.

அத்தகைய பின்புலத்தில் வாழ்ந்த இந்திய வம்சாவளி மலையக மக்கள், பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் இந்தியாவிலிருந்து கூலிகளாக ஒப்பந்த அடிப்படையில் கொண்டு செல்லப்பட்டனர். ஆள்பிடிக்கும் முகவர்களுக்கு அன்றைய பிரித்தானிய அரசு உரிமை வழங்கியது. ஆனால் தென்னிந்தியத் தமிழ் மக்கள், ஒப்பந்த முறைக்கு அப்பால் தரகர்களால் இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

இவ்வாறு காலனி நாடுகளுக்கு மக்கள் செல்வதற்கு இரண்டு காரணிகள் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. ஒன்று பொருளாதார மேம்பாடு. அக்காலத்தில் நாட்டில் நிலவிய பஞ்சமும் பிரித்தானிய அரசின் கெடுபிடிகளும் மக்களை வறுமை நிலைக்குத் தள்ளின.

இதிலிருந்து மீள்வதற்காக மக்கள் இடம்பெயர்ந்தனர். மற்றொன்று சமூக ஏற்றத்தாழ்வு. சமூக ஏற்றத்தாழ்வுகளால் ஒடுக்கப்பட்ட நிலமற்ற ஏழை விவசாயிகளே விடிவை நோக்கி வெளியேறினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டவர்களின் நெடுங்கால நடைப்பயணம் மிகவும் கொடுமையும் கொடூரமும் நிறைந்ததாக இருந்தது. இவர்கள் பிரித்தானியக் காலனித்துவவாதிகளால் குடியேற்றப்பட்ட இடங்கள் கடல் மட்டத்திலிருந்து 4000 அடிக்கு மேற்பட்ட மலைப்பிரதேசங்களாகும். இங்கு குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வியலை வெளிக்காட்டும் மலையக வாய்மொழிப் பாடல்கள் உலகில் எங்கும் காண முடியாத துன்பம், துயரம், உழைப்பு, ஆசைக் கனவு ஆகியவற்றால் நிரம்பியவையாக உள்ளன.

இத்தகைய மானிட வாழ்வியல் கூறுகள், இம்மக்களின் வாய்மொழிப் பாடல்களில் காதல் அனுபவங்களின் கலைவடிவங்களாக வெளிப்படுகின்றன. அந்த வகையில் இக்காதல் பாடல்கள், சமூக வாழ்வியலைப் பிரதிபலிக்கும் பண்பாட்டு ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. தமிழ்நாட்டுப் பாடல்களின் தாக்கமும் செழுமையும் மலையகப் பாடல்களில் காணப்பட்டாலும், இம்மண்ணுக்கு உரித்தான இப்பாடல்கள் அப்பகுதி மக்களின் காதல் வாழ்வியலை ஒருங்கிணைந்த சமூக அனுபவமாகச் சித்தரிக்கும் தன்மையால் தனித்துவம் பெறுகின்றன. இதனால் அவை ஒரு விரிவான சமூகக் காவியத் தன்மையை உடையவையாக மதிப்பிடப்படுகின்றன.

“பணியலாயத்து சாவ
பாசமுள்ள வெள்ளை சாவ
காலு வளந்த சாவ
கண்டாலும் பேசுதில்லை”

“அஞ்சும் கிளி அழகே
ஆடு தொடை ரெண்டழகே
கொஞ்சும் கிளி அழகே
கொந்தரப்பா வெட்ட போற”

“குத்து கட்ட மேல ஏறி
கொழுந்து வெத்தலை போடையில
கைப்பிடி லேஞ்சி கண்டு
கள்ள மனம் துள்ளுது ஐயா”

“வெங்கல ரோதையில
வேலை செய்யும் ஏன் சாமி
வெத்தலை வேணுமுனா
வெளியே வந்து கேளுமய்யா”

மேலே குறிப்பிடப்பட்ட ‘வெங்கல ரோதையிலே’ என்ற பாடல், முதன்முதலாக தேயிலைத் தொழிற்சாலை கட்டப்பட்டு அதில் வேலை செய்வது கௌரவமாகக் கருதப்பட்ட காலப்பின்னணியை எடுத்துக்காட்டுகிறது. தேயிலைக் கொழுந்தை அரைக்கும் அந்த ரோதை வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தது. அதையே கருப்பொருளாகக் கொண்டு பாடல் பாடி, தனது காதல் உணர்வை வெளிப்படுத்தும் தன்மை இதில் வெளிப்படுகிறது. காதலி ஒருத்தி, தன்னைக் கண்டுகொள்ளாமல் போகும் காதலனைச் ‘சேவல்’ என்று உருவகித்துப் பாடுகிறாள். சேவல் தன் பெட்டைகளைக் கண்டால் எங்கிருந்தும் ஓடி வந்து அதனோடு சேர்ந்து விடும். ஆனால் இந்த மனிதன் தன்னைக் கவனிக்காமல் போவதைக் கருவாகப் பயன்படுத்திப் பாடியிருப்பது நயமிக்கதாகும்.

“மஞ்ச அரைக்கையில
மதில் ஏறிப் பார்த்த மச்சான்
எதை நெனச்சிப் பார்த்தீங்களோ
இழுத்து அரைக்க முடியலையே”

இவ்வாறு தன் காதலியை ஒருவன் எட்டிப் பார்த்ததனால் அவள் அடைந்த ஏக்கம், தவிப்பு என்பன இப்பாடலில் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

“ஈரல் கருகுதய்யா
இரு தொடையும் நோகுது ஐயா
நினைத்துப் படுத்தாலும்
நித்திரையும் போகுதில்ல”

என்ற பாடல் ஒரு பெண் தன் காதலனைப் பிரிந்து வாடும் நிலையில் பாடுவதாக அமையப்பெற்றுள்ளது.

“மேட்டு லயத்துப் பெண்ணே
மிஞ்சி போட்ட ரஞ்சிதமே
காணத் துடித்தாலும்
காவல் கடுங்காவல்”

பெண் பிள்ளைகளைக் கட்டுப்பாட்டுடன் வளர்க்கும் மனப்பாங்கு அனைத்துச் சமூகங்களிலும் நிலவி வந்தது. அது இன்றளவும் தொடருகின்றது. இத்தகைய பண்பை மலையக மக்களும் கொண்டிருப்பதை இப்பாடல் தெளிவுபடுத்துகிறது. மேலும், தன் காதலன் மேல் கொண்ட பேராசையை ஒருத்தி இவ்வாறு வெளிப்படுத்துகிறாள்.

“எண்ணெய்த் தலை அழகா
எழுத்தாணி மூக்கழகா
கோயில் சிலை அழகா
கொல்லுதடா உன் ஆசை”

கவிதை நயமும் சந்த ஓசையும் கொண்ட இப்பாடல் படிப்பவர் மனதைக் கொள்ளையிடும் தன்மை கொண்ட காதல் பாடாகும். அவ்வாறே காதலியின் சிறப்பைக் காதலன் பின்வருமாறு பாடுகிறான்.

"ஆத்தோரம் கொடிகாரம்
அருகம்பா வெற்றிலையாம்
போட்டா செவக்குது இல்ல
பொண்மயிலே உன் மயக்கம்
"அந்த லயம் இந்த லயம்
அடுத்த ஒரு தொங்க லயம்
தொங்க லயத்துப் பெண்ணே
சொக்குதடி என் மனசு"

காதலில் பிரிவும் ஏமாற்றமும் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுகிறது. தோட்டப்புற வாழ்வியலில் பிரிவை இரண்டு நிலைகளில் வைத்துப் பார்க்கலாம். ஒன்று, ஒருவனைத் தோட்ட நிர்வாகம் ஏதாவது காரணம் காட்டி தனது தோட்டத்தில் வேலை செய்யாமல் தடுத்து, வேறு தோட்டத்திற்கு அனுப்புவது. இது 'தோட்டம் விட்டுத் தோட்டம் போதல்' என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறான நிலை காதலனுக்கோ காதலிக்கோ ஏற்படுவதுண்டு. மற்றொன்று, இந்த நாட்டை விட்டு பிறந்த மண்ணுக்கு (இந்தியாவிற்கு) மீண்டும் திரும்புதல். இந்த இரண்டுமே காதலர்களைப் பாதித்த முக்கியமான விடயங்களாகும். இவை எவ்வாறு பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன என்பதைப் பார்ப்போம்.

"வட்டுக் கருப்பட்டியே
வாகனச் செங்கரும்பே
புட்டுக் கருப்பட்டியே
போறேனே தோட்டம் விட்டு
"சாந்தாருக்குச் சந்தனமே
சாதி மரிக்கொழுந்தே
வெறுத்துட்டுப் போறமின்னு
வேலை விட்டு வந்துராத
"என்னையே நம்பாதே
எழுதிக் கடன் வாங்காத
உன்னையே நான் பிரிஞ்சி
ஊருக்குப் போறேண்டி"

என்ற பாடல்களில் காதலன் பிரிந்து போவதற்கான காரணத்தைச் சொல்கிறான். உண்மையில் இதில் இருக்கும் வேதனையும் துக்கமும், இரு மனங்களின் துயரமும், நெஞ்சை உருக்குவதாகும்.

"தோட்டம் விட்டுப் போறேன்னு
தொயரங்களை வைக்காதடி
எட்டு மணி கோச்சியில
எட்டி வந்து பார்த்திடுவேன்
"இடி இடிச்சி மழை பொழிய
இரு கடலும் பொங்கி வர
குடை புடிச்சு நான் வருவேன்
குண மயிலே கலங்காதே

இப்பாடல்கள், பிரிந்து போன காதலன் தன் காதலிக்கு நம்பிக்கையை அளிப்பதையும், உன்னைக் கைவிட்டுச் செல்லமாட்டேன் என்ற உறுதியை இப்பாடல்களின் ஊடாக வழங்குவதையும் வெளிப்படுத்துகின்றன. இதுவே நாட்டுப்புற இலக்கியங்களுக்கு உள்ள தனித்துவமான சிறப்பாகும். தன்னை நம்பி வந்த காதலியை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாத மானிடப் பண்பு இப்பாடல்களில் இடம்பெற்றிருப்பதை அறிந்துகொள்ளலாம்.

"காட்டுக்குள்ள கமுக மரம்
கண்ணி வச்சு ஆறு மாசம்
பேசணும் மின்னாலும்
பெத்த தாய் சத்துறாதி"

காதலுக்கு எதிர்ப்பு என்பது பல்வேறு சமூகங்களிலும் காணப்படும் பொதுவான நிகழ்வாகும். அதுபோலவே, மலையக சமூக அமைப்பிலும் காதல் உறவுகளின் உருவாக்கம் மற்றும் கட்டமைப்பிற்கு கட்டுப்பாடுகளும் எதிர்ப்புகளும் நிலவுகின்றன என்பதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

காதலர்கள் சந்தித்துக்கொள்ளும் போது ஏற்படும் உள்ளத்துக் கிளர்ச்சிக்கு இணையான சந்தோஷம் வேறு எதிலும் கிடைப்பதில்லை. இதனை எமது இலக்கியங்கள் காலங்காலமாக எடுத்தியம்பி வந்திருக்கின்றன.

"கொத்தமல்லித் தோட்டத்திலே
கொழுந்து கிள்ளிப் போற புள்ள
கொண்டு வந்தேன் மல்லிகைப்பூ
உன் கொண்டையில சூட்டி விட
"தொந்தரப்பு காரக்குட்டி
கொழுந்தெடுக்கும் சின்னக்குட்டி – உன்
தொந்தரப்பக் கண்டவுடன்
கொழுந்து எடுக்கக் கூடலையே
"ஈரப்பலாக் காயே
இன்பம் உள்ள தேங்காய்ப் பாலே

வன்னி நாட்டுக் கொச்சிக்காயே
வருமம் தாண்டி உன்மேல
"கொண்டையில பூச்சூடி
கோயிலுக்கு போற தங்கம்
உன் கொண்ட அலங்காரம்
உன் குரலோசை சிங்காரம்"

காதலைப் பற்றி, செவ்வியல் படைப்புகளை வழங்கிய எத்தனையோ மகா படைப்பாளர்கள் பல்வேறு கருத்துகளை முன்வைக்கின்றனர். சேக்ஸ்பியர் காதலைப் பற்றி கூறும்போது, "அது ஆழமான, எல்லையற்ற, சில சமயங்களில் துன்பகரமான, ஆனால் எப்போதும் உணர்ச்சிபூர்வமான ஒன்று" என்கிறார். கார்ல் மார்க்ஸ், "அன்பு நிறைந்த பெண்ணிடம் காதல் கொள்வது ஒரு மனிதனை மறுபடியும் மனிதனாக்குகிறது; காதல் என்பது மனிதனை மனிதனாக்கும் சக்தி" என்றார். பாரதி காதலைப் பற்றிக் கூறும்போது, "அது இல்லறத்தின் அச்சாணி; பெண்ணைத் தெய்வமாகப் போற்றும் சக்தி கொண்டது; ஆதலால் காதல் செய்வீர்" என மக்களை அழைத்தார். கண்ணதாசன் காதலைப் பற்றி கூறும்போது, "அது உடல் ஈர்ப்பு அல்ல; அது வாழ்க்கையின் ஆதாரம், காலத்தின் ஊற்று, அனுபவங்களின் தொகுப்பு" என்றார்.

இவர்கள் முன்வைத்த கருத்துகள் மலையகக் காதலர்களின் வாழ்வியல் சூழலுடனும் அனுபவ உலகுடனும் தொடர்புடையதாகக் கருதப்படலாம். கடின உழைப்பை மையமாகக் கொண்ட சமூகச் சூழலில், குறிப்பாக ஈவு இரக்கமற்ற உழைப்பின் பின்னணியில் உருவாகும் காதல், பொருளாதார எதிர்பார்ப்புகளற்ற, வாழ்க்கையின் தொடர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட உறவாக வெளிப்படுகிறது.

மலையக மக்கள் சமூக மற்றும் குடும்பத் தடைகளைத் தாண்டி காதல் உறவை நிறைவேற்றும் மனப்பாங்கைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். குடும்ப மரபு, சாதி போன்ற கட்டுப்பாடுகளை மீறியும் இணையும் நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கவை. சீதனம் அல்லது சொத்து போன்ற பொருளாதார அம்சங்களை எதிர்பார்க்காது, பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் ஆணும் பெண்ணும் இணையும் நடைமுறை காணப்படுகிறது. உழைப்பைத் தங்களின் வாழ்வாதார அடிப்படையாகக் கொண்டிருப்பதால், வெளிப்புற ஆதரவு இன்றி வாழ்க்கையை முன்னெடுக்கக் கூடிய சமூக மனப்பாங்கு இவ்விணைப்புகளில் பிரதிபலிக்கிறது. இதனால், காதல் உறவு என்பது வெறும் உணர்ச்சி வெளிப்பாடு மட்டுமல்லாது, வாழ்வியல் தொடர்ச்சியுடன் இணைந்த சமூக நிகழ்வாகப் புரிந்துகொள்ளப்பட முடிகிறது. காதலர்களின் சந்திப்புகள் மற்றும் இணைவு, அவர்களின் வாழ்வுப் பயணத்தின் மைய அச்சாக அமைகின்றன என்பதையும் இச்சூழலில் குறிப்பிடலாம்.

தமிழர் பண்பாட்டு மரபில் அகமும் (காதல்) புறமும் (வீரம்) வாழ்வின் இரு பெரும் தூண்களாகக் கருதப்படுகின்றன. மனித குலத் தோற்றத்தின் தொடக்கத்திலிருந்தே இயல்பூக்கமாக அமைந்துள்ள காதல் உணர்வை, தமிழர் தம் வாழ்வியல் இலக்கணமாகவே போற்றினர். இன்பம், அன்பு, துன்பம் ஆகிய மானுட உணர்ச்சிகளின் வெளிப்பாடாக முறையே காதல் பாடல்கள், தாலாட்டு மற்றும் ஒப்பாரி ஆகிய நாட்டுப்புறப் பாடல் வடிவங்கள் அமைகின்றன. பருவமடைந்த உள்ளங்களின் ஈர்ப்பு மற்றும் பிணைப்பின் விளைவாகத் தோன்றும் காதல் உணர்வுகள், வாய்மொழி இலக்கியங்களில் மிக நுட்பமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, மலையக வாய்மொழிப் பாடல்கள், அம்மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த காதல் மற்றும் அகவுணர்வுகளைப் பிரதிபலிக்கும் முதன்மை ஆதாரங்களாகத் திகழ்கின்றன. இவை வெறும் பாடல்களாக மட்டுமன்றி, ஒரு சமூகத்தின் நிலவியல் மற்றும் வாழ்வியல் கூறுகளின் ஆவணங்களாகவும் அமைகின்றன.

இத்தகைய வாய்மொழி இலக்கியங்கள் ஒரு சமூகத்தின் தனித்துவமான அடையாளங்கள் (Cultural Identity) ஆகும். மண்ணையும் மனிதத்தையும் நேசிக்கும் பண்பு இருக்கும் வரை, இந்த நாட்டுப்புறப் பாடல்களின் செல்வாக்கு மக்களிடையே நிலைத்திருக்கும் என்பது திண்ணம். எனவே, இப்பண்பாட்டுப் பொக்கிஷங்களை ஆவணப்படுத்துவதும், அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதும் வரலாற்று ரீதியான அவசியமாகும்.

**சான்றாதாரங்கள்**


1. வேலுப்பிள்ளை, சி.வி. மலைநாட்டு மக்கள் பாடல்கள். கொழும்பு: மகாவலி பிரசுரம்.
2. சிவலிங்கம், மு. 2007. மலையகத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள். ரெக்னோ பிரிண்டர்ஸ்.
3. சாரல் நாடன். 1993. மலையக வாய்மொழி இலக்கியம். சென்னை: சவுத் ஏசியன் புக்ஸ்.
4. கந்தையா, மு.சி. 2002. சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள். திருப்பூர்: பொன்னுலகம் புத்தக நிலையம்.
5. காதர், பி.ஏ. இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம். லண்டன்: சமூக இயல் பதிப்பகம்.

பகுதி 2

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சிப் போக்குகளில் வடக்கு கிழக்குப் பிராந்தியங்களின் பங்களிப்பும் நீர்வளம், விவசாயம், கொள்கை, மேலாண்மை மற்றும் வளர்ச்சித் தந்திரங்களும்

இலங்கையின் வறண்ட மண்டலமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்துவதற்கான கொள்கைகள் உருவாக்குவது மிகவும் அவசியமாக உள்ளது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவுகின்றது. மேலும், நிலையான நீர்வள மேலாண்மை சுற்றுச்சூழலுக்கு உதவியாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாகவும் அமையும். இதன் மூலம், வறண்ட மண்டலங்களில் உள்ள நீர்வளங்கள் பாதுகாக்கப்படும். ”வறண்ட மண்டல நீர்வளங்களின் இருப்பும் பேண்தகு பயன்பாடும்: வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள், இலங்கை எனும் இந்தக் கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளின் நீர்வளங்களின் நிலையை ஆராய்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன், அவற்றின் திறம்பட்ட பயன்பாட்டை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதைக்கூறும்.

## சுப்ரமணியம் சிவகுமார்



கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல் அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார். பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

## 5.3 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் உத்தேச விவசாயத்துறைக் கொள்கை

### 5.3.1 அறிமுகம்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட சுருக்க நிலைகளுக்குப் பிறகு, தற்போது மீட்பு நிலையை நோக்கி நகர்ந்து வருவதுடன், நேர்மறையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியையும் காட்டுகிறது. 2026 ஆம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி வீதம் சுமார் 4-5 சதவீதமாக இருக்கும் எனக் கணிக்கப்படுகிறது. சமீபத்திய காலாண்டு வளர்ச்சிகள், குறிப்பாக தொழில்துறை மற்றும் சேவைத் துறைகளின் பங்களிப்பால் ஊக்கமடைந்துள்ளன; அதேவேளை, விவசாயத் துறை பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

உதாரணமாக, 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் (Q1) 4.8 சதவீத வளர்ச்சி பதிவாகியுள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் (Q1) பதிவான 5.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் சிறிய மாற்றமாக இருந்தாலும், சமீபத்திய பொருளாதார நெருக்கடிகளுக்குப் பின்னர் தொடர்ச்சியான மேம்பாட்டுப் போக்கை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக உற்பத்தித் தொழில் மற்றும் சேவைத் துறைகள் பொருளாதார விரிவாக்கத்தை முன்னெடுத்து, நாட்டின் வளர்ச்சிப் பாதையை வலுப்படுத்தி வருகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட எதிர்மறைப் பொருளாதார வளர்ச்சியும், விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட கடுமையான சரிவும் திரும்பப் பெறப்படுவதற்கான வாய்ப்பு உருவாகும் எனக் கருதலாம். இந்த வளர்ச்சி வேகம் ஆரம்ப கட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தின் மறுசீரமைப்பு மற்றும் மீளமைப்பு முயற்சிகளின் விளைவாக உருவாகும்.

இலங்கை மத்திய வங்கி சமீபத்தில் வெளியிட்ட மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி (Provincial GDP) தொடர்பான அறிக்கை, மேற்கு மாகாணத்துக்கும் நாட்டின் மற்ற மாகாணங்களுக்கும் இடையிலான பொருளாதாரப் பிளவைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் விவசாயத் துறையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, நாட்டின் பிற பகுதிகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது. இந்தப் புள்ளிவிவரங்கள் 2019 முதல் 2022 வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கியவையாகும் (தொடர்புடைய தரவுகள் கீழ்க்கண்ட இணைப்பில் காணப்படுகின்றன: https://www.cbsl.gov.lk/.../PGDP_Current_Market_Price).

மேற்படி மத்திய வங்கியின் அறிக்கைகளின் படி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 'ஜிடிபி' பங்களிப்பின் விவரங்கள் சுலபமாக அறியக்கூடிய வகையில் கீழே உள்ள மூன்று படங்களிலும் தரப்பட்டுள்ளன.










வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தின் மறுசீரமைப்பு மற்றும் மீளமைப்பு முயற்சிகளின் தொடர்ச்சியாக, விவசாய உற்பத்தி அதிகரிப்பதும், மீன்வளத் துறையில் கணிசமான முன்னேற்றமும், கிராமப்புற பால் உற்பத்தி உயர்வதும், சிமெந்து, இரசாயனப் பொருட்கள், உப்பு, பனை சார்ந்த தொழில்கள் போன்ற கைவிடப்பட்ட தொழிற்சாலைகள் மீண்டும் செயற்படத் தொடங்குவதும், சுற்றுலாவிலிருந்து வருவாய் அதிகரிப்பதும் எதிர்பார்க்கப்படுகின்றன. இவற்றை விட மிக முக்கியமானவை, உள்நாட்டு தனியார் முதலீடுகளின் அதிகரிப்பும், வெளிநாட்டு முதலீடுகளின் திடீர் உயர்வுமாகும். தேசிய அரசின் சுதந்திரமயமாக்கப்பட்ட, ஏற்றுமதி நோக்கிய பொருளாதாரக் கொள்கைகளால் உருவான புதிய முதலீட்டுச் சூழலை, 2009 வரை நிலவிய அரசியல் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான நிலையற்ற சூழ்நிலைகளால், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் தொழில்முனைவோர் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் இருந்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான உள்நாட்டுச் சந்தை விரிவடைவது, அதற்கு உரிய முறையில் பதிலளிக்க வேண்டிய ஒரு சவாலாக விவசாயத் துறைக்கு அமையும். தேசியம் அல்லது மாகாண அளவிலான பொருளாதாரத்திற்கான

நீண்டகாலப் பலன்கள், பொதுச் செலவுகளில் ஏற்படும் நிதிச் சேமிப்புகளிலிருந்து உருவாகும். இதன் மூலம் மத்திய மற்றும் மாகாண அரசுகளுக்கு சிறந்த 'மக்ரோ பொருளாதார' மேலாண்மை, குறைந்த பணவீக்க விகிதங்கள் மற்றும் செலவுச் சமநிலை (*Balance of Payments*) மேம்பாடு போன்ற பலன்கள் கிடைக்கும்.

மேலும், குறிப்பாக விவசாயத் துறையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்த சேமிப்புகள் மற்றும் முதலீடுகள் மூலம் தன்னிச்சையான வேகத்தைப் பெறுகிறது என்பதும், அதனால் மாகாணப் பொருளாதார வளர்ச்சிக்கு பல்முகமான நேர்மறைத் தாக்கங்கள் ஏற்படுகின்றன என்பதும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

நீண்டகாலக் கண்ணோட்டத்தில், தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கக்கூடிய பல்வேறு வேளாண் வணிகங்கள் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழிற்துறைகளை வளர்ப்பதற்கான நல்ல வாய்ப்புகளை வடக்கு - கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. அதோடு, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கக்கூடிய திறமையான மனித வளத்தையும் இம்மாகாணங்கள் வழங்க முடியும். மாகாணங்களின் நீர்வளங்கள் வரம்புடையதாக இருப்பதால், அதிக மதிப்புடைய வேளாண் பயிர்கள் உற்பத்தி செய்வதும், குறிப்பாக ஏற்றுமதிச் சந்தைகளை நோக்கமாகக் கொண்ட வேளாண்மைச் செயலாக்கத் தொழிற்துறைகளை வளர்ப்பதும் முக்கியமான துறைகளாக அமையும்.

## 5.2. உத்தேச விவசாயத்துறை கொள்கை நோக்கங்கள்

கீழ்வரும் பத்திகளில் முன்வைக்கப்படும் துணைத் துறை (*Subsectoral*) உத்திகள், பின்வரும் நோக்கங்களை அடைவதையே பிரதானமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன:

1. நிலம், காலநிலை, நீர், காடுகள், மீன்வளம், பயிர் மற்றும் கால்நடை வளங்கள் போன்ற மாகாணத்தின் உடல் மற்றும் இயற்கை வளங்களையும், மனித வளங்களையும் சிறந்த முறையில் ஒருங்கிணைத்து பயன்படுத்தி உற்பத்தியை அதிகரித்தல்.

2. தன்னிறைவு (*Subsistence*) விவசாயத்திலிருந்து விலகி, உயர்மதிப்புள்ள வர்த்தக விவசாயத்தின் வளர்ச்சியை ஊக்குவித்து, வேளாண்மை சார்ந்த தொழில்துறை அடித்தளத்தை உருவாக்குவதன் மூலம், கிராமப்புற மக்களின் வருமானத்தை உயர்த்தி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.

3. வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஒப்பீட்டுச் சிறப்பம்சங்களை (*Comparative Advantage*) முழுமையாகப் பயன்படுத்தி, மாகாணங்களிற்குள் மாவட்ட அடிப்படையிலான சமநிலையான வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றல்.

4. விவசாயத் துறையில் தேவையான தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக, மாகாணத்தில் உள்ள மனித வளங்களை அதிகளவில் மற்றும் திறமையாகப் பயன்படுத்தல்.

5. முன்மொழியப்படும் விவசாய வளர்ச்சி உத்தியை ஆதரிக்கக்கூடிய ஆராய்ச்சி (*Research*) அமைப்புகளை வலுப்படுத்தல்.

6. உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நுட்பங்களில் புதுமைகளை ஊக்குவித்து, புதிய சந்தைகளை உருவாக்குதல்; மேலும் வெளிநாடுகளில் உள்ள சந்தைகளைக் கண்டறிந்து, அவைகளுடன் இணைப்புகளை ஏற்படுத்தல்.

7. விவசாயத்திற்கு அப்பாற்பட்ட (*Nonfarm*) பொருளாதார நடவடிக்கைகள் கிராமப்புறங்களில் விரிவடைய உதவுதல்.

8. தனியார் துறையின் செயற்பாட்டுப் பங்களிப்பை அதிகரிக்கவும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (*FDI*) ஈர்க்கவும் ஏற்ற சூழலை உருவாக்கல்.

9. அரசின் திட்டங்களுக்கு இணங்க, நாட்டின் பிற பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் மறுசீரமைப்புச் செயல்முறைகளின் அடிப்படையில், மாகாணங்களின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை வேகப்படுத்தல்.

## 5.3. களப் பயிர்கள் (Field Crops)

### 5.3.1 நெல் (Paddy)

மாகாணங்களில் நெல் உற்பத்தி தொடர்ந்து முன்னுரிமை பெறும். விளைச்சலையும் மொத்த உற்பத்தியையும் உயர்த்துவதுடன், விவசாயிகளின் இலாப விகிதத்தை அதிகரிப்பதே இதன் பிரதான நோக்கமாகும். இதனை அடைவதற்காக பின்வரும் உத்திகள் நடைமுறைப்படுத்தப்படும்:

1. நீர்நிலைத்தன்மை குறைந்த அல்லது நீர் தேங்கும் நிலங்களில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும். நல்ல வடிகால் வசதியுள்ள நிலங்கள், உயர்மதிப்புடைய பிற களப் பயிர்களுக்குத் திருப்பப்படும். அதிக சாத்தியமுள்ள பெரிய மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, தேவையான இடங்களில் பாசன நீர்

விநியோக அமைப்புகள் நவீனப்படுத்தப்படும். விதை, உரம், கடன் மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவுடன் கூடிய உற்பத்தித் திட்டங்கள் முதலில் இத்திட்டங்களில் கவனம் செலுத்தும்; குறைந்த சாத்தியமுள்ள திட்டங்கள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

2. உயர்தர நெல் விதை உற்பத்தி, விவசாயிகள் பங்கேற்புடன் ஒழுங்கமைக்கப்பட்டு, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கச் சேவைகளின் ஆதரவுடன், விவசாயிகளுக்கும் வெளிச்சந்தைகளுக்கும் நேரத்திற்கேற்ப விநியோகிக்கப்படும்.

3. மழை சார்ந்த மற்றும் உப்புத்தன்மை கொண்ட நெல் நிலங்களுக்கு ஏற்ற வகைகளைச் சோதிக்கும் ஆராய்ச்சித் திட்டங்களை விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் தீவிரப்படுத்தும். மேலும், யாலா பருவத்திற்காக (சுமார் 90 நாட்கள்) குறுகிய காலம் கொண்ட, அதிக விளைச்சல் தரக்கூடிய நெல் வகைகளை ஏற்றுக்கொள்ளும் ஆராய்ச்சியும் முன்னெடுக்கப்படும்.

4. விவசாயிகள் பங்கேற்புடன் (நீர் பயனாளர் சங்கங்கள் - *WUAs*) திறமையான நீர் மேலாண்மையின் மூலம் பாசனத் திட்டங்களில் நீர்ப் பயன்பாட்டை நியாயமான முறையில் உறுதிப்படுத்தல்: (*a*) யாலா பருவ நெல் பயிரின் நீர் கடமையை (*Duty*) குறைந்தபட்சமாக 4.5 அடி அளவிற்குக் கீழாகக் குறைத்தல், (*b*) பயிரிடும் அடர்த்தியை (*Cropping Intensity*) அதிகபட்சமாக 1.4 ஆக உயர்த்தல்.

5. 5. மழை சார்ந்த நெல் சாகுபடிக்கு, வலுவான விவசாய விரிவாக்கச் சேவைகள் வழங்கப்பட்டு, பயிர் நாட்காட்டி, (உயிரியல்) உரம் மற்றும் இரசாயன உரங்கள் உள்ளிட்ட உள்ளீடுகள் நேரத்திற்கேற்ப வழங்கப்படும்.

### 5.3.2 பயிர் பன்முகப்படுத்தல் (Crop Diversification)

1. தேவையான இடங்களில் துணைப் பாசன வசதியுடன், நல்ல வடிகால் கொண்ட நெல் நிலங்களில் பயிர் பன்முகப்படுத்தல் மேற்கொள்ளப்படும். இத்தகைய சாத்தியமுள்ள பகுதிகளில் மாதிரித் (*Pilot*) திட்டங்கள் நிறுவப்பட்டு, இம்முறைகளின் நடைமுறைச் சாத்தியம் நிரூபிக்கப்படும்.

2. பன்முகப்படுத்தல் திட்டத்தின் கீழ் உயர்மதிப்புடைய காய்கறிகள், பருப்பு வகைகள், வாழை மற்றும் திராட்சை போன்ற பழங்கள் சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்படும். (இந்தோனேசியாவில் பல நெல் நிலங்களில், நில எல்லைகளில் உள்ள சிறிய மேடுகளில் கோப்பி போன்ற பயிர்கள் வளர்க்கப்படுவது போல, இப்பகுதியிலும் இதனைச் சாத்தியமாக்கலாம்). பழச்சாகுபடிக்காக 'மைக்ரோ பாசனம்' போன்ற நீர் சேமிப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்படும்.

3. மஹா பருவத்தில் உயர்நிலங்களில் கறுப்பு உளுந்து, நிலக்கடலை, பச்சைப் பயறு, துவரம் பருப்பு, சோயாபீன், எள்ளு மற்றும் சூரியகாந்திச் சாகுபடி, விதை விநியோகம் மற்றும் தனியார் துறைச் சந்தைப்படுத்தல் அமைப்புகள் மூலம் தீவிரப்படுத்தப்படும். இதன் மூலம் உள்நாட்டுத் தேவைக்கும் ஏற்றுமதிக்கும் போதிய விநியோகம் உறுதிசெய்யப்படும். எண்ணெய் விதைப் பயிர்களின் வர்த்தக உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டு விரிவுபடுத்தப்படும்.

4. அதேபோல், மரவள்ளி, மக்காச்சோளம் மற்றும் சோளம் சாகுபடி, விதை/ நடவு பொருட்கள் வழங்கல் மற்றும் தனியார் துறை சந்தைப்படுத்தல் மூலம் ஊக்குவிக்கப்பட்டு, கால்நடைத் தீவன உற்பத்தித் தொழில்துறையை உருவாக்க உதவி வழங்கப்படும்.

5. கரும்பு உற்பத்தி தொடர்ந்து முக்கிய நடவடிக்கையாக இருக்கும். தற்போதுள்ள நிலம் மற்றும் நீர் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி உற்பத்தித்திறன் உயர்த்தப்பட்டு, உற்பத்திச் செலவு குறைக்கப்படும். கரும்புத் தொழில்துறையின் முக்கிய துணை உற்பத்தியாக 'மொலாசஸ்' உள்ளது. இது மாடு மற்றும் சிறிய கால்நடைகளுக்கான கூடுதல் தீவன உற்பத்திக்கு அடிப்படையாகும். மொலாசஸ் கட்டிகள் (*Blocks*) சிறு தொழிலாகத் தயாரிக்கப்படலாம்; இது பால் மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும் சிறந்த ஊட்டச்சத்தாகும். பாகிஸ்தானில் பரவலாக நடைமுறையில் உள்ள இம்முறை, வடக்கு - கிழக்குப் பிராந்தியத்திலும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

### 5.3.3 ஆராய்ச்சி, விரிவாக்கம், பயிற்சி மற்றும் விதை உற்பத்தி

பயிர் பன்முகப்படுத்தலைச் சிறப்பாக ஆதரித்து, தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்மதிப்புடைய பயிர்களை வர்த்தக அளவில் விரிவுபடுத்த, வலுவான திட்டமிடல் அடித்தளம் அவசியமாகும். இதற்கேற்ப, தற்போதுள்ள ஆராய்ச்சி, விவசாய விரிவாக்கம், பயிற்சி மற்றும் விதை உற்பத்தி நடவடிக்கைகள் மறுசீரமைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட வேண்டும். இதற்கான உத்திகள் பின்வருமாறு:

1. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பிராந்திய ஆராய்ச்சி நிலையங்கள் வலுப்படுத்தப்பட்டு, நெல், பிற களப் பயிர்கள், காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான பயன்பாட்டு மற்றும் தழுவல் (*Adaptive*) ஆராய்ச்சித் திட்டங்களைத் திட்டமிட, ஒழுங்கமைக்க மற்றும் நடைமுறைப்படுத்த தேவையான வசதிகள் மேம்படுத்தப்படும். சிறு வேளாண் - பருவநிலைப் பகுதிகளையும் (*Micro Agroecological Regions*) உள்ளடக்கிய வகையில் பண்ணைச் சோதனைகள் விரிவுபடுத்தப்படும். மேலும், மண், நீர், பயிர் இலைப் பரிசோதனைகள், மண் வளப் பட்டியலிடல் மற்றும் விதைச் சான்றிதழ் வழங்கல் போன்ற சேவைகள் கட்டண அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

2. வர்த்தக அளவிலான தோட்டக்கலை வளர்ச்சிக்காக, ஏற்கனவே உள்ள வர்த்தகத் தோட்டங்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும். தேவையான இடங்களில் புதிய தோட்டக்கலைத் துணை நிலையங்கள் நிறுவப்படும்.

3. அறுவடைக்குப் பிந்தைய சேமிப்பு மற்றும் செயலாக்க இழப்புகளைக் குறைப்பதற்கும், சந்தைகளில் ஏற்படும் அதிகப்படியான விநியோக உச்சங்களை (*Glut Peaks*) சமன் செய்வதற்குமான தொழில்நுட்பங்களை உருவாக்க, பல்கலைக்கழகங்களுக்கு ஆராய்ச்சி ஒப்பந்தங்கள் வழங்கப்படும்.

4. முன்மொழியப்படும் அதிகாரத்தின் கீழ் உள்ள விவசாய மற்றும் நிலப் பயன்பாட்டு பிரிவு, தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்கள் மற்றும் வகைகளுக்கான நடுத்தரக் கால விதை மற்றும் நடவுப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்தை, ஆண்டு இலக்குகளுடன் உருவாக்கும். இத்திட்டம் பின்வரும் மூன்று கூறுகளை உட்படுத்தும்: (*a*) அரசுப் பண்ணைகளை வலுப்படுத்தி, பதிவு செய்யப்பட்ட விதைகள் மற்றும் நடவுப் பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்தல், (*b*) சான்றளிக்கப்பட்ட விதை மற்றும் நடவுப் பொருட்களைப் பெருக்க ஒப்பந்த விவசாயிகளைப் பயன்படுத்தல், (*c*) மேற்கண்ட நடவடிக்கைகளின் வர்த்தகமயமாக்கலில் தனியார் தொழில்முனைவோரின் பங்களிப்பை ஊக்குவித்தல்.

5. மாகாண விவசாய மற்றும் மீன்வள விரிவாக்க அமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு, பணியாளர்கள் நியாயமான அடிப்படையில் மேம்படுத்தப்படுவர். ஒருங்கிணைந்த விரிவாக்க அணுகுமுறை அறிமுகப்படுத்தப்படும். குறிப்பிட்ட பயிர்கள் மற்றும் கால்நடை உற்பத்தி, சந்தைப்படுத்தல் தொடர்பான சிறப்பு ஆலோசனை சேவைகளை தனியார் துறை கட்டண அடிப்படையில் வழங்க ஊக்குவிக்கப்படும். அரசு அல்லாத அமைப்புகள் (*NGOs*) மற்றும் விவசாய அமைப்புகள் வழங்கும் சேவைகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு, அவை விரிவாக்கச் சேவைகளால் ஒருங்கிணைக்கப்படும்.

6. மாகாண சபை, கிடைக்கக்கூடிய மனித வளங்கள் மற்றும் திறன்கள் குறித்து ஆய்வு செய்து, நடுத்தரக் காலத்தில் தேவைப்படும் நிபுணர்களை அடையாளம் காணும். அதற்கேற்ப, விவசாய மற்றும் மீன்வளத் துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய மனித வள மேம்பாட்டு உத்தியை உருவாக்கும்.

7. இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த, தொழில்நுட்பம், மேலாண்மை மற்றும் பிற துறைகளில் அனைத்து நிலைகளிலும் பணியாளர் பயிற்சி தீவிரப்படுத்தப்படும்.

### 5.3.4 செயலாக்கம் மற்றும் சந்தைப்படுத்தல் (Processing and Marketing)

வேளாண்மை, மீன்வளம் மற்றும் கால்நடை உற்பத்திகளின் மதிப்புக் கூட்டல் (*Value Addition*) மற்றும் சந்தைப்படுத்தல் பின்வருமாறு முன்னெடுக்கப்படும்:

1. பிராந்திய தொழில்துறை ஆலோசனை சேவை மையத்தின் (*Regional Industrial Advisory Service Center*) செயற்பாட்டு எல்லை விரிவுபடுத்தப்பட்டு, முழு மாகாணத்தையும் உள்ளடக்கும் வகையில் நிறுவன ஏற்பாடுகள் செய்யப்படும். இம்மையம் சந்தை ஆய்வு வசதிகளை உருவாக்கி, முதலீட்டாளர்கள் மற்றும் விவசாயிகளுக்குத் தகவல் மற்றும் ஆலோசனைகள் வழங்கி, உற்பத்தி முதலீடுகளை ஊக்குவித்து, வாங்குபவர்களையும் உற்பத்தியாளர் அமைப்புகளையும் இணைக்கும்; மேலும் சந்தை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கும் மேடையாகச் செயற்படும்.

2. உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தனியார் முதலீட்டாளர்கள், சிறு உற்பத்தியாளர்களுடன் இணைந்து செயற்படவும், கூட்டு முயற்சிகளை (*Joint Ventures*) உருவாக்கவும் ஊக்குவிக்கப்படுவர்.

3. மாகாணத்தில் வேளாண் செயலாக்க வளர்ச்சிக்கான ஆதரவு முக்கியமாக: (*a*) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கான செலவில், 50% வரை குறைந்த வட்டி அல்லது மென்மையான கடன்கள் (*Soft*

*Loans)* வழங்குவதன் மூலம், தற்போதுள்ள செயலாக்க ஆலைகளின் திறன் விரிவுபடுத்தப்படும், (b) நம்பிக்கையளிக்கும் தயாரிப்புகளை இலக்காகக் கொண்டு, நடுத்தரக் கால சுழலும் கடன் வசதிகளை வழங்கி, நிறுவனங்களின் செயற்பாடுகளை விரிவுபடுத்துதல்.

4. கறுப்பு உளுந்து, நிலக்கடலை, சூரியகாந்தி, எள்ளு, பச்சைப் பயறு மற்றும் சோயாபீன் உற்பத்தியில் மாகாணம் கவனம் செலுத்தி, செயலாக்கத்திற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கும் போதிய விநியோகத்தை உறுதிப்படுத்தும். சோளம், மக்காச்சோளம் மற்றும் மரவள்ளி உற்பத்தி, கால்நடைத் தீவன உற்பத்தித் தொழில்துறையை உருவாக்க ஊக்குவிக்கப்படும்.

5. உள்நாட்டுச் சந்தைக்காக சிறு அளவிலான பால் தயாரிப்புகளை உருவாக்க, பால் உற்பத்தி ஊக்குவிக்கப்படும். கூடுதல் பால் உற்பத்தியைச் சேகரித்து, செயலாக்க மையங்களுக்கு அனுப்புவதற்கான குளிர்சாதனச் சங்கிலி (*Cold Chain*) தொடங்கப்படுவது, சிறு அளவிலான பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும்.

### 5.3.5 கடன் வசதி (Credit)

உற்பத்தியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு நியாயமான நிபந்தனைகளில் கடன் வழங்குவதே பிரதான நோக்கம். அதற்காக பின்வரும் உத்திகள் நடைமுறைப்படுத்தப்படும்:

1. தற்போதுள்ள கடன் திட்டங்களின் கீழ் தகுதி பெறாதவர்களுக்குச் சேவையளிக்க, சிறப்பு மென்மையான கடன் (*Soft Loan*) திட்டங்கள் உருவாக்கப்படும்.

2. கடன் சங்கங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி வங்கிகள் வழியாக குழுக் கடன் (*Group Lending*) ஊக்குவிக்கப்படும்.

3. 'நியூக்ளியஸ் எஸ்டேட்' விவசாயம் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்துறை முயற்சிகளில் முதலீடு செய்பவர்களுக்கான தற்போதைய கடன் திட்டங்கள் விரிவுபடுத்தப்படும்.

4. வடக்கு - கிழக்கு மாகாணங்களில், விவசாயம், மீன்வளம், கால்நடை மற்றும் வேளாண் செயலாக்கத் துறைகளின் குறிப்பிட்ட கடன் தேவைகளைப் பூர்த்தி செய்ய, மறுசீரமைப்பு மற்றும் கிராம அபிவிருத்தி வங்கி (*Reconstruction and Rural Development Bank*) ஒன்று நிறுவப்படும்.

## 5.4 பொருளாதார உட்கட்டமைப்பு (Economic Infrastructure)

பொருளாதார உட்கட்டமைப்பு வளர்ச்சி உத்தி, கடந்த காலங்களில் திட்டமிடப்பட்ட முக்கிய அபிவிருத்தித் திட்டங்களையும், புதிதாக முன்மொழியப்படும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தும். இதன் மூலம், இலங்கையின் பிற மாகாணங்களின் வளர்ச்சிக்கு இணையான, நிலைத்த வளர்ச்சியை (*Sustainable Development*) இந்த மாகாணங்கள் அடையக்கூடியதாகும்.

### 5.4.1 பாசனம் (Irrigation)

1. பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்த்தேக்கங்கள், நெல் மற்றும் பிற களப் பயிர்களுக்கு முதன்மையாக நீர் வழங்குவதோடு, மனிதர், கால்நடை மற்றும் தொழில்துறைத் தேவைகளுக்குமான நீர் வழங்கலையும் உறுதி செய்யும் பன்முகப் பயன்பாட்டு நீர்த்தேக்கங்களாக (*Multipurpose Reservoirs*) மறுசீரமைக்கப்படும். இந்நீர்த்தேக்கங்களின் மறுசீரமைப்பிற்கு முன்னுரிமை வழங்குவதற்கான அளவுகோல்கள் உருவாக்கப்படும்.

2. மத்திய அரசின் பொறுப்பில் உள்ள பெரிய நீர்த்தேக்கங்கள், மாகாணத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அதே அளவிலான அவசரத்துடனும் முன்னுரிமையுடனும் மறுசீரமைக்கப்படுவதை மாகாணம் உறுதி செய்யும்.

3. மட்டக்களப்பு ஏரியின் (*Batticaloa Lagoon*) நீர்வளங்கள், நீர்வாழ் வளர்ப்பு (*Aquaculture*) மற்றும் பிற பயன்பாடுகளுக்காக முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. நீரின் தரத்தை தொடர்ச்சியாகக் கண்காணித்து, அதனைப் பயன்படுத்த ஏற்ற பயிர்கள் மற்றும் தொழில்நுட்பங்களை அடையாளம் காண்பதன் மூலம், இவ்வளத்தின் பயன்பாடு ஊக்குவிக்கப்படும். ஏரியின் சில பகுதிகளை குறைந்த உப்புத்தன்மையுடைய நீர்த்தேக்கங்களாக மாற்றுவதன் பொருளாதாரச் சாத்தியக்கூறுகளை மதிப்பிட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, நீர்வாழ் வளர்ப்பு முயற்சிகள் ஊக்குவிக்கப்படும்.

4. நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்களின் மேலாண்மை, நீர்விநியோக மற்றும் வடிகால் கால்வாய்களின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு (O & M), தூர்வாரல் மற்றும் நீர் விநியோகம் ஆகிய பொறுப்புகள் விவசாயிகள் சங்கங்களுக்கு வழங்கப்படும். இச்சங்கங்கள், O&M நிதியை உருவாக்க விவசாயிகளிடமிருந்து தேவையான கட்டணங்களை வசூலிக்கச் சுதந்திரம் பெறும்;

இந்நிதி மேற்கூறிய செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும்.

5. நீர் மேலாண்மை, நீர்வளப் பாதுகாப்பு மற்றும் நீர் சேமிப்புப் பாசன முறைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மாகாணம் முன்னெடுத்து, அவற்றுக்குத் தேவையான உபகரணங்களின் உற்பத்தியையும் ஊக்குவிக்கும்.

6. நிலைத்த நிலத்தடி நீர்வளம் உள்ள பகுதிகளில், வேளாண் கிணறுகள் (Agrowells) அமைப்பதற்கு உதவி வழங்கப்பட்டு, உணவுப் பயிர்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி விரிவுபடுத்தப்படும். இது நிலத்தடி நீர்வள ஆய்வுகள் மற்றும் நிலைத்த நீர் எடுப்பளவின் மதிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். நிலத்தடி நீர் அதிக சுரண்டல், குறைதல் மற்றும் தரச்சீர்கேடு ஏற்படாமல் தடுக்க, நீர் எடுப்பு - மீள்நிரப்பு (Recharge) இடையிலான சமநிலையைப் பேண வலுவான கண்காணிப்பு அமைப்பு அறிமுகப்படுத்தப்படும்.

### 5.4.2 சாலை, ரயில் மற்றும் கடல் போக்குவரத்து

1. விவசாய உற்பத்திகளையும் மீன்வள உள்ளீடுகள் - வெளியீடுகளையும் எளிதாக நகர்த்த, பண்ணையிலிருந்து சந்தைக்குச் செல்லும் சாலைகள் மற்றும் மீன்பிடிக் கிராமங்களை இணைக்கும் சாலைகள் முன்னுரிமை அடிப்படையில் மறுசீரமைக்கப்படும்.

2. முக்கிய நகரங்களை இணைக்கும் பிரதான சாலைகள் மற்றும் கடலோரச் சாலை வலையமைப்பு, கனரக வாகனப் போக்குவரத்தை எளிதாக்கத் தேவையான பாலங்கள் மற்றும் தரைப்பாலங்களுடன் (Causeways) மேம்படுத்தப்படும்.

3. முல்லைத்தீவு - பொத்துவில் இடையே முன்மொழியப்பட்ட ரயில் பாதை, பயணிகள், கால்நடை மற்றும் சரக்குப் போக்குவரத்திற்காக அமைக்கப்படும்.

4. ஏரிகள் மற்றும் கடல் வழியாக உற்பத்திப் பொருட்கள் மற்றும் கால்நடைகளை கடத்துவது பாரம்பரிய நடைமுறையாக இருந்து வந்துள்ளது (பூநகரி, மூதூர், வெருகல், மட்டக்களப்பு, கல்முனை, மன்னார் முதலியவை). இத்தகைய இறங்குமுகங்கள் மற்றும் 'Ferry' சேவைகளை அடையாளம் கண்டு, மறுசீரமைத்து மீள்செயல்படுத்த அரசுடன் இணைந்து ஒரு திட்டம் மேற்கொள்ளப்படும்.

### 5.4.3 மின்சாரம் (Power)

1. மாகாணத்தில் இருந்த மின்சார விநியோக வலையமைப்பு, 'Build Back Better' என்ற கொள்கையின் அடிப்படையில், தற்போதுள்ள சிறந்த தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி மறுசீரமைக்கப்படும். முக்கிய விவசாய மற்றும் மீன்பிடி மையங்களை உள்ளடக்கும் வகையில் கிராம மின்மயமாக்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு, வேளாண்மை/ மீன்வளம் சார்ந்த தொழில்கள், பனிக்கூடங்கள், குளிர்சாதனக் கிடங்குகள், தொழிற்பேட்டைகள் ஆகியவற்றின் செயற்பாடு உறுதிசெய்யப்படும்.

2. தற்போதைய மத்திய மின்சார விநியோக வலையமைப்புகள் குறைந்த திறன் கொண்ட பரிமாற்றக் கோடுகளாக (132 kVA) இருப்பதால், பெரும் அளவில் வீணாகின்றன. நிலையான, நம்பகமான மின்சார விநியோகத்தை மாகாணத்திற்கு வழங்க, முன்னர் செயற்பட்ட பிராந்திய மின் நிலையங்கள் மீள்செயற்படுத்தப்பட்டு, சூரிய மற்றும் காற்றாலை போன்ற மாற்று ஆற்றல் மூலங்கள் முதன்மையாகப் பயன்படுத்தப்படும்.

3. காற்றாலை மற்றும் சூரிய ஆற்றலுக்கான பல தளங்கள் மாகாணங்களில் இருப்பதால், முன்மொழியப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை ஆதரிக்க ஏற்ற மாற்று ஆற்றல் கலவை (Energy Mix) என்ன என்பதைக் கண்டறிய மாகாண அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்வர். கிழக்குக் கடற்கரை காற்றாலை வளர்ச்சிக்கு ஏற்ற பகுதியாகவும், மாகாணத்தின் பிற பகுதிகள் அதிக சூரிய ஒளி கிடைக்கும் பகுதிகளாகவும் உள்ளன.

4. வீடுகளில் தனிப்பட்ட முறையிலோ அல்லது கிராம அளவிலான குழுக்களாகவோ உயிர்வாயுப் (Biogas) பயன்பாட்டை ஊக்குவிக்கவும், சிறிய காற்றாலைச் சுழலிகள் மற்றும் கூரை மேல் சூரிய மின் அமைப்புகளை நிறுவவும் மானியத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

### 5.4.4 தொலைத்தொடர்பு (Telecommunications)

தேசிய தொலைத்தொடர்பு வலையமைப்பு, மாகாணம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டு, அனைத்து நிர்வாக மற்றும் வர்த்தக மையங்களையும் இணைக்கும்.

### 5.4.5 மக்கள் ஊடகம் (Mass Media)

இந்த வளர்ச்சி உத்தியை ஆதரிக்கும் வகையிலும்,

புதிய நீர்வள மற்றும் விவசாய வளர்ச்சிக் கொள்கைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தவும், ஒரு பிராந்திய ஒளிபரப்பு நிலையம் நிறுவப்படும்.

இதன் முக்கிய அம்சமாக, தினசரி ‘விவசாயிகள் வானொலி’ (*Farmers’ Radio*) என்ற ஊடாடும் நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும். இது விவசாயம், மீன்வளம் மற்றும் கால்நடைத் துறைகளில் ஈடுபடும் மக்களுக்கு உதவியாக அமையும். இந்நிகழ்ச்சியில் துறை சார்ந்த செய்திகள் தினமும் வழங்கப்பட்டு, விவசாயிகள் தொலைபேசி மூலம் தங்கள் பிரச்சினைகள் (உதா: பூச்சித் தாக்கம்) குறித்துத் தெரிவிக்க, அதற்கான தீர்வுகள் பரிந்துரைக்கப்படும்.

மேலும், அரிசி, தானியங்கள், கால்நடை, பழங்கள், மீன் மற்றும் இறைச்சி போன்ற முக்கிய உற்பத்திகளின் சந்தை விலைகள் தினசரி அறிவிக்கப்படும். இதன் மூலம், உற்பத்தியாளர்கள் தங்களுக்கு உகந்த சந்தையைத் தேர்வு செய்து சிறந்த விலையைப் பெற முடியும். இது சந்தைத் தகவல் வசதியுடன் கூடிய வானொலி அடிப்படையிலான விரிவாக்கச் சேவையாக செயற்படும்.

### 5.5 கால்நடை (Livestock)

மாகாணத்தில் கால்நடை வளர்ச்சிக்கு உயர்ந்த முன்னுரிமை வழங்கப்படும். தன்னிறைவு நிலை கொண்ட கால்நடைத் துறையை வர்த்தகமயமான துறையாக மாற்றுவதே பிரதான நோக்கமாகும். இதற்காக, தற்போதுள்ள கால்நடை இனங்களை மேம்படுத்துதல், மேலாண்மை நடைமுறைகள் மற்றும் கால்நடை சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்துதல், தீவன வளங்களின் கிடைப்பையும் நம்பகத்தன்மையையும் உயர்த்துதல், செயலாக்க வசதிகளை உருவாக்குதல் மற்றும் சந்தைப்படுத்தல் அமைப்புகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும்.

முதலில் பால் உற்பத்தி, அதன் பின்னர் ஆடுகள் மற்றும் கோழி வளர்ப்பு. சிறு பண்ணைகளில் பயிர்-கால்நடை ஒருங்கிணைப்புடன் (*Crop-livestock Integration*) தீவிர மேலாண்மை முறை ஊக்குவிக்கப்படும். பயிர்க் கழிவுகள் கால்நடைகளுக்குத் தீவனமாகவும், கால்நடை சாணம் மண்ணின் வளத்தை மேம்படுத்தும் சுற்றுச்சூழல் நட்பு உரமாகவும் பயன்படும். இதனால் குடும்ப ஊட்டச்சத்து மற்றும் வருமானம் உயர்வடையும்.

நடைமுறைப்படுத்தப்படும் உத்திகள்:

1. இந்தியாவிலிருந்து உயர்தர இனக் காளைகள் அல்லது உறைசெய்த விந்து (*Frozen Semen*) பயன்படுத்தி குறுக்கு இனப்பெருக்கம் (*Cross Breeding*) மூலம் கால்நடை இனங்களை மேம்படுத்துதல்; சாஹிவால், ஜெர்சி, ஹோல்ஸ்டீன்-ஜெர்சி மற்றும் வறண்ட சூழலுக்கு ஏற்ற பிராமன் கலப்பினங்கள் பயன்படுத்தப்படும்.
2. கூட்டுறவுச் சங்கங்கள் மறுவழிநடத்தப்பட்டு விரிவுபடுத்தப்பட்டு, தீவனம், கால்நடைச் சுகாதாரம், செயற்கை ‘*Insemination*’, பால் சேகரிப்பு, செயலாக்கம் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட தயாரிப்புகளின் சந்தைப்படுத்தல் ஆகிய சேவைகளை வழங்கும் வகையில் செயற்படுத்தப்படும்; இதற்காக மென்மையான கடன்கள் வழங்கப்படும்.
3. பால் தொழில்துறை விரிவடைய, நியாய விலையிலான தீவனங்கள் அவசியமானதால், ‘மொலாசஸ்’ கட்டிகள் மற்றும் பருப்பு அடிப்படையிலான பசுந்தீவனங்கள் உள்ளிட்ட வழக்கமான மற்றும் மாற்றுத் தீவன உற்பத்தியில் தனியார் முதலீடுகளை ஈர்க்க, செலவுப் பகிர்வு (*Costsharing*) முறை நடைமுறைப்படுத்தப்படும்.
4. நவீன, சுகாதாரமான அறுவைக்கூடங்கள் (*Abattoirs*) நிறுவுவதற்கும், தோல் மற்றும் பிற துணை உற்பத்திகளை மேம்படுத்துவதற்கும் இதே செலவுப் பகிர்வு முறை பயன்படுத்தப்படும்; மாடு மற்றும் எருமை மாடுகளை அறுப்பதற்கான தற்போதைய தடை மறுபரிசீலனை செய்யப்படும்.
5. மாகாணத் தேவைக்கேற்ற காளைக் குட்டிகள் உற்பத்திக்காக, ஒரு கால்நடை இனப்பெருக்க நிலையம் (*Livestock Breeding Station - LBS*) நிறுவப்படும்.
6. தேர்ந்தெடுக்கப்பட்ட இயற்கை மேய்ச்சல் நிலங்கள் மேம்படுத்தப்பட்ட மேய்ச்சல் நிலங்களாக மாற்றப்பட்டு, அனுபவமுள்ள தனியார் நிறுவனங்கள் அல்லது மேய்ப்பர் சமூகங்களுக்கு மேலாண்மை ஒப்படைக்கப்படும்.
7. ஆடு மற்றும் செம்மறி வளர்ப்பை ஊக்குவிக்க, மேம்பட்ட இனங்களை உற்பத்தி செய்து விநியோகிக்கும் மாகாண கால்நடைப் பண்ணை நிறுவப்படும்; ‘*Buyback*’ முறை அறிமுகப்படுத்தப்படும்.
8. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார விரிவாக்கச் சேவைகள், பயிர் விரிவாக்கச் சேவைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் ‘*Cryovat*’ வசதிகள் வழங்கப்படும்.
9. கோழி வளர்ச்சியில் தனியார் துறை முதன்மைப் பங்கு வகிக்கும்; குறிப்பாக பெண்கள் முன்னெடுக்கும் சுயதொழில் முயற்சிகள் ஊக்குவிக்கப்படும்.

10. பல்கலைக்கழகங்களில் கால்நடை நோய் ஆய்வு ஆய்வகங்கள் மற்றும் தீவன, இனப்பெருக்க ஆராய்ச்சிகள் ஆதரிக்கப்படும்.

11. 'LBS' வழியாக கால்நடைச் சந்தைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, விலைகள் நிலைப்படுத்தப்படும்.

12. கால்நடைப் பொருட்களின் தரக்கட்டுப்பாடு, சுகாதார விதிமுறைகள் மற்றும் உள்நாட்டுத் தனிமைப்படுத்தல் (Quarantine) நடைமுறைகள் அமல்படுத்தப்படும்.

13. கால்நடை நோய்க் கண்காணிப்புத் (Disease Surveil lance) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, நோய்களால் ஏற்படும் இழப்புகள் குறைக்கப்படும்.

## 5.6 மீன்வளம் (Fisheries)

மீன்வளத் துறைக்கான உத்தி, இயற்கை நீர்வளங்களில் இருந்து மீன் பிடிப்பை மட்டும் அடிப்படையாகக் கொண்ட நிலைமையிலிருந்து, மீன் வளர்ப்பு (Fish Culture) மற்றும் செயலாக்கம் (Processing) ஆகியவற்றை மையமாகக் கொண்ட துறையாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நாட்டின் மொத்த மீன் தேவையைப் பூர்த்தி செய்ய கடல் மீன்பிடி தொடர்ந்தும் முதன்மை ஆதாரமாக இருக்கும்; அதேவேளை, நீர்வாழ் வளர்ப்பு (Aquaculture) பெரும்பாலும் ஏற்றுமதிச் சந்தைகளை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும்.

இதனை நடைமுறைப்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

1. முதலீட்டாளர்களுக்கு ஆலோசனை வழங்கவும், உற்பத்தியில் முதலீட்டை எளிதாக்கவும், முதலீட்டாளர்களையும் உள்ளூர் தொழில்முனைவோர்களையும் இணைக்கவும், ஆதரவுச் சேவைகள் மற்றும் ஊக்கத்தொகைகளை மேம்படுத்தவும், மீன்வள வளர்ச்சி ஆலோசனைப் பணியகம் (Fisheries Development Advisory Bureau - FDAB) நிறுவப்படும்.

2. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தனியார் துறைக்குச் சொந்தமான உற்பத்திச் சொத்துகளை மறுசீரமைக்கவும் மீளமைக்கவும் உதவும் வகையில், சிறப்புக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

3. அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் தற்போது அதிகமாக உள்ளதால், முழுமையான குளிர்சாதனச் சங்கிலி (Cold Chain) அமைப்பு உருவாக்கப்படும். இதில் பனித் தொழிற்சாலைகள், மீன்பிடிப் படகுகளில் குளிர்சாதனக் கொள்கலன்கள், பொருத்தமான கையாளல் மற்றும் போக்குவரத்து வசதிகள், மாகாணத்தின் முக்கிய சந்தைகள், கொழும்பு மற்றும் பிற பகுதிகள், மேலும் ஏற்றுமதிச் சந்தைகள் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகள் அடங்கும்.

4. மேற்கண்ட நடவடிக்கைகளைச் செயற்படுத்த, பனித் தொழிற்சாலைகள், குளிர்சாதனக் கிடங்குகள், படகு கட்டும் தளங்கள் மற்றும் குளிர்சாதன வாகனங்கள் (Cooler Vehicles) ஆகியவற்றை அமைப்பதற்காக, தனியார் துறையுடன் செலவுப் பகிர்வு முறையில் மாகாண அதிகாரிகள் செயற்படுவர். அதேவேளை, மீன்பிடித் துறைமுகங்கள், தங்குமிட வசதிகள், விளக்கக் கோபுரங்கள் (Beacon Lights), இறங்குமுகங்கள் மற்றும் கால்வாய்களின் தூர்வாரல் போன்ற பணிகள் மாகாண அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும்.

5. மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் மறுசீரமைக்கப்பட்டு, கடலோர மீன் வளங்களைச் சமநிலையாகவும் நிலைத்த முறையிலும் பயன்படுத்துதல். நவீன மீன்பிடி நுட்பங்கள் மற்றும் உபகரணங்கள், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் முறைகள், மேலும் நலத்திட்டங்களை விட வளர்ச்சி மற்றும் சந்தைப்படுத்தலுக்கு முன்னுரிமை அளிக்கும் அணுகுமுறைகள் குறித்து உறுப்பினர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும்.

6. கடலோரப் பகுதிகளில் மீன்பிடியை எளிதாக்க, பொருத்தமான இடங்களில் மீன் குவிப்பு சாதனங்கள் (Fish Aggregating Devices - FADs) நிறுவப்படும்.

7. கிடைக்கக்கூடிய மீன்வளங்களைக் கண்காணிக்க, மாகாண மீன்வளத் துறை மூலம் மீன் பிடிப்புத் தொடர்பான பதிவுகள் முறையாகப் பராமரிக்கப்படும். இத்தரவுத்தளம் தொடர்ச்சியாகப் புதுப்பிக்கப்பட்டு, எதிர்காலத் திட்டமிடலுக்குப் பயன்படுத்தப்படும். மாகாணத்தின் பொருளாதாரக் கடல் எல்லைக்குள் உள்ள மீன்வள மேலாண்மை, நவீன மீன்வள மேலாண்மை அறிவு கொண்ட அதிகாரிகளுடன் கூடிய 'FDAB' இன் தனித்த பிரிவின் மூலம், நிலைத்த முறையில் மேற்கொள்ளப்படும்;

8. கடலுக்கு அப்பாற்பட்ட (Offshore) மீன்பிடியில், பிராந்திய மீன்வளக் கூட்டமைப்புகளை உருவாக்கி, 'படகுக் கூட்ட மேலாண்மை முறைமை' (Fleet Management System) அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் மீன்பிடிப் பகுதிகளை எளிதில் கண்டறிதல்,

சேவை மற்றும் பராமரிப்புச் செலவுகளைக் குறைத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் மேலாண்மைத் திறன்களை மேம்படுத்தல் ஆகிய பலன்கள் கிடைக்கும்.

9. தற்போதுள்ள கடலோர, 'Offshore' மற்றும் ஆழ்கடல் மீன்பிடிப் படகுப் படைகள் (Fleets) நவீனப்படுத்தப்படுவதற்கு, மாகாணத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் தனியார் துறையின் முன்னெடுப்புகள் ஊக்குவிக்கப்படும். இயந்திரங்கள், மீன்பிடி உபகரணங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள், எரிபொருள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் தரநிலைகளைப் பூர்த்தி செய்யும் உபகரணங்களை விளக்கமாகக் காட்சிப்படுத்த அழைக்கப்படுவர்.

10. மீன் வர்த்தக மையங்களை (Fish Trading Houses) நிறுவுவதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அழைக்கப்படுவர். இதன் நோக்கம், வெளிநாட்டுச் சந்தைகளின் தரநிலைகள், மூடுபெட்டி (Packaging), மீன்பிடி முறைகள் உள்ளிட்ட தேவையான நிபந்தனைகள் குறித்து உள்ளூர் வழங்குநர்களுக்கு தெளிவான வழிகாட்டுதலை வழங்கி, அவர்களை ஏற்றுமதிக்குத் தயார்ப்படுத்துவதாகும்.

11. பாரம்பரிய மீன் பொருட்கள் (பீச்டீமார், சங்குகள், அகர்அகர்) ஏற்றுமதி ஆதரிக்கப்படும். அதோடு, அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் முதலைப் பண்ணைகள் (Crocodile Farms) தனியார் துறையால் நிறுவப்பட்டு, ஏற்றுமதிக்காக ஊக்குவிக்கப்படும்.

12. மன்னாரில் ஒருகாலத்தில் செழித்திருந்த முத்துக் குளித்தல் தொழில் வீழ்ச்சியடைந்ததற்கான காரணங்கள் ஆராயப்பட்டு, இத்தொழிலை வர்த்தக அடிப்படையில் மீளுருவாக்குவதற்கான சாத்தியங்கள் மதிப்பிடப்படும்.

### 5.7 வேளாண்மை சார்ந்த தொழில்கள் (Agroallied Industries)

முந்தைய காலங்களில் வேளாண்மை சார்ந்த தொழில்களின் வளர்ச்சியைத் தடுத்த பல கட்டுப்பாடுகள், பாரம்பரியமற்ற வேளாண் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் தேசிய அரசின் கொள்கைத் தொகுப்பின் மூலம் தற்போது நீக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி நோக்கிய வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கு வழங்கப்படும் புதிய வரி மற்றும் பிற ஊக்கங்கள், வர்த்தகம் மற்றும் நகர்ப்புறச் சொத்துத் துறைகளுடன் ஒப்பிடுகையில், அதிக முதலீட்டு வருவாயை வழங்கக்கூடியவையாக உள்ளன.

வெளிநாட்டு முதலீட்டிற்கான ஊக்கங்கள், செயலாக்கத் தொழில்நுட்பம் குறித்த அறிவுக் குறைபாடுகளை நீக்க உதவும். இதனை நிலைத்த அடிப்படையில் உறுதிப்படுத்த, மாகாணச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேவையான தொழில்நுட்பங்களை உள்ளூர்க் கூட்டாளிகளுக்கு மாற்றி வழங்க வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணங்களின் தேவைகளுக்கு ஏற்ற பல வேளாண் தொழில்நுட்பங்கள், குறிப்பாக இந்தியா உட்பட பல ஆசிய நாடுகளில் கிடைக்கின்றன. இதில் குறைந்த செலவில் மேற்கொள்ளக்கூடிய செயலாக்கம், கையாளல் மற்றும் அழுகிய பொருட்களின் (Perishable Commodities) மூடுபெட்டி முறைகள் அடங்கும்.

#### 5.7.1 வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உருவாக்கக்கூடிய வேளாண்மை சார்ந்த தொழில்கள் இரண்டு வகையாகும்:

1. விவசாய உற்பத்தி அல்லது அதன் துணை உற்பத்திகளை மூலப்பொருள்களாகக் கொண்டு, மேலதிக செயலாக்கத்தின் மூலம் மதிப்புக் கூட்டல் செய்யும் வேளாண்மை அடிப்படையிலான தொழில்கள் மற்றும் விவசாய சேவைத் தொழில்கள்.

2. பால், இறைச்சி மற்றும் மீன் போன்ற அத்தியாவசிய உற்பத்திகளை நேரடியாக வழங்கும் பண்ணை உற்பத்திகள்.

#### 5.7.2 மாகாணத்தில் வேளாண்மை சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க பின்வரும் உத்திகள் பின்பற்றப்படும்:

1. பாதிக்கப்பட்ட தொழில்முனைவோர் தங்கள் தொழில்களை மீளமைக்க உதவும் வகையில், பொருத்தமான இழப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

2. பிராந்தியத் தொழில்துறை ஆலோசனை சேவை மையம் (Regional Industrial Advisory Service Center - RIASC) நிறுவப்பட்டு, அதன் செயற்பாட்டு எல்லை வேளாண்மை சார்ந்த தொழில்களையும் உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

3. RIASC, தொழில்முனைவோருக்கு தேவையான தகவல் மற்றும் ஆலோசனைகளை வழங்கி, பல்வேறு ஊக்கத் திட்டங்களின் கீழ் உதவிகளை வழங்கும் நிறுவனங்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் இடையிலான இணைப்புப் பாலமாக செயற்படும்.

4. முன்மொழியப்பட்ட மாகாண மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி (Provincial Reconstruction & Development Bank - PRDB), மாகாணம் முழுவதும்

தொழில்கள் மீளுருவாக்கம் பெற மென்மையான முதலீட்டுக் கடன்களை வழங்கும்.

5. வேளாண் உற்பத்திகளின் ஏற்றுமதியை ஊக்குவிக்க, வெளிநாட்டு சிறப்பு ஏற்றுமதி/ இறக்குமதி வங்கிகள் அல்லது வர்த்தக நிறுவனங்களுடன் இணைந்து, வர்த்தக மையங்கள் (Trading Houses) நிறுவப்படும்.

6. யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களுக்கு, உணவுத் தொழில்நுட்பம் தொடர்பான பாடநெறிகளை உருவாக்கவும், வேளாண் செயலாக்கம் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் தேவையான வசதிகள் வழங்கப்படும்.

### 5.8 பனை மற்றும் தென்னை அபிவிருத்தி (Palmyrah & Coconut Development)

பனை அபிவிருத்தி உத்தி, பனை சார்ந்த வேளாண்மை - தொழில்துறை மற்றும் உணவுத் தொழில்நுட்ப வளர்ச்சியை மையமாகக் கொண்டு, வறுமை அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் வருமானத்தை உயர்த்தவும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் நோக்கமாகக் கொண்டதாக இருக்கும். இந்த உத்தி, பனை மரங்களின் எண்ணிக்கையை மீள உருவாக்குதல், புதிய பனைச் சாகுபடிகளை ஊக்குவித்தல், கடலோர நிலப் பாதுகாப்பு, இயற்கை சரணாலயப் பாதுகாப்பு மற்றும் விளிம்பு நிலங்களின் (Marginal Lands) பயனாக்கம் மற்றும் மேம்பாடு ஆகியவற்றிற்காக பனை வளர்ச்சியை விரிவுபடுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

பயிர் பல்வகைப்படுத்தல் (Crop Diversification), வேளாண்மைக்காடு (Agroforestry) முறையுடன் ஒருங்கிணைக்கப்படும். வீட்டு வளாகச் சாகுபடி (Homestead Farming), பனை மரத்தை மையமாகக் கொண்டு, தோட்டக்கலைப் பயிர்கள், ஆண்டுப் பயிர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றை இணைத்த பல்நோக்கு மரவகைகள் அடிப்படையில் முன்னெடுக்கப்படும்.

பனை அபிவிருத்தி உத்தி, ஒற்றைப் பயிர் (Monocrop) சாகுபடியிலிருந்து விலகி, பல்பயிர் மற்றும் இடைப்பயிர் (Multi & Intercropping) சாகுபடிகளை ஊக்குவிக்கும். பயிர் பல்வகைப்படுத்தல் மற்றும் கால்நடை ஒருங்கிணைப்புத் திட்டங்களின் விளைவாக, வேளாண்மை - தொழில்துறை உற்பத்தி இடைநிலை விளைவாக உருவாகும். இதேபோல், தென்னை அபிவிருத்தி உத்தி, பரவலான சேதம் மற்றும் அலட்சியத்தால் ஏற்பட்ட உற்பத்தி இழப்புகளை ஈடுசெய்யும் வகையில், மீண்டும் நடவு (Replanting) செய்வதை மையமாகக் கொண்டு செயற்படும். இதற்காகப் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

1. பனை அபிவிருத்தி வாரியம், சிறு விவசாயிகளுக்கு ஏற்ற தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதோடு, உணவுத் தொழில்நுட்பத் துறையில் ஸ்ப்ரே டிரையர்கள், டிரம் டிரையர்கள், எக்ஸ்ட்ரூடர்கள் போன்ற உயர் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி, பனை சார்ந்த உணவுச் செயலாக்கத் தொழில்துறையை மேம்படுத்தும். மேலும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பழம் சார்ந்த தொழில்களுக்கான திறன் வளர்ச்சியையும் (Capacity Building) வாரியம் முன்னெடுக்கும்;

2. பனை சார்ந்த வேளாண்மை - தொழில்துறைப் பொருட்களில் தரக்கட்டுப்பாடு, பெக்டின் தயாரிப்பு, பனங் கிழங்கிலிருந்து வணிக அளவிலான மாவு (Starch) உற்பத்தி, பனம் பழம் மற்றும் கிழங்கிலுள்ள கசப்புத் தன்மையை நீக்குதல், வினிகர் தயாரிப்பு, பழத்தில் உள்ள நிறக்கூறுகளைப் பிரித்தெடுத்தல் ஆகியவற்றில் பனை ஆராய்ச்சியின் கவனம் செலுத்தப்படும்;

3. பனைச் சாறு ஓட்டத்தை (Sap Flow) அதிகரித்தல், சாறு ஓடும் காலத்தை நீட்டித்து பனஞ் சர்க்கரை உற்பத்தியை அதிகப்படுத்தல், தரத்தை உறுதிப்படுத்தும் அறுவடை முறைகளை மேம்படுத்தல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும். தொழில்நுட்ப மாற்றத்தை பணியாளர்கள் மற்றும் இலக்குக் குழுக்களிடம் கொண்டு செல்ல, நான்கு பிராந்தியப் பயிற்சி மையங்கள் நிறுவப்படும்.

4. தென்னை அபிவிருத்தி வாரியம் மீண்டும் நிறுவப்படும். பனைக்கும் தென்னைக்கும் தனித்தனி வாரியங்கள் தேவைப்படுமா அல்லது இரு பனை வகைப் பயிர்களுக்கும் உள்ள ஒற்றுமைகளைக் கருத்தில் கொண்டு, இரண்டு பிரிவுகளுடன் கூடிய ஒரே இணை அதிகாரத்தின் கீழ் நிர்வகிக்கலாமா என்பதைக் குறித்துப் பரிசீலிக்கப்படும். பல இடங்களில் தென்னை நாற்றங்கால் மையங்கள் தொடங்கப்படும். இதில், சிறந்த பண்புகள் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட தாய் மரங்களிலிருந்து பெறப்படும் தேங்காய்கள் பயன்படுத்தப்பட்டு, மரபணுத் தளம் (Germ Plasm) பெருக்கப்பட்டு தரமான நாற்றுகள் உற்பத்தி செய்யப்படும். தேவையான அளவு நாற்றுகள் உருவான பின்னர், அவை தோட்டங்களுக்கும் வீட்டு வளாகங்களுக்கும் விற்பனை செய்யப்படும்;

இதன் மூலம் மாகாணத்தில் உள்ள தென்னை மரங்கள் மேம்பட்ட மற்றும் விரும்பத்தகுந்த பண்புகளைப் பெறும்.

5. தென்னை ஆராய்ச்சி நிறுவனம் வழங்கும் தென்னை ஆலோசனைச் சேவைகள் மேலும் வலுப்படுத்தப்படும்.

### 5.9. நிலப் பயன்பாடு (Land Use)

மாகாணத்தில் வேளாண்மை உற்பத்தி வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கில், நிலப் பயன்பாட்டில் தேவையான மாற்றங்களை விவேகமாக மேற்கொள்ள பின்வரும் உத்திகள் ஏற்றுக்கொள்ளப்படும்:

1. மாகாண அளவில் நிலச் சொத்துப் பதிவகத்தின் (*Land Assets Registry*) ஒரு பகுதியாக நிலப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவு நிறுவப்பட்டு, தேவையான கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு, நிலப் பயன்பாட்டுத் திறன் திட்டம் (*Land Use Capability Plan*) தயாரிக்கப்படும். இது கொள்கை வடிவமைப்பிற்கு அடிப்படையாக அமையும்.

2. கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறான நிலப் பயன்பாடுகளை அடையாளம் காணவும், எதிர்காலத்தில் இத்தகைய நிலப் பாவனைகள் தொடராதவாறு தடுக்கவும் விதிமுறைகள் உருவாக்கப்படும்.

3. நிலத்தைத் தவறாகப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட எதிர்மறை விளைவுகளைச் சரிசெய்யும் திட்டங்களை மாகாண அதிகாரிகள் தயாரித்து நடைமுறைப்படுத்துவார்கள். தேவையெனில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான இடமாற்றம் மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களும் அமல்படுத்தப்படும்.

4. குறிப்பாக சிறு விவசாயிகள் சுற்றுச்சூழல் நட்புக் கரிம வேளாண்மை முறைகளை (*Organic Farming*) பின்பற்ற ஊக்குவிக்கப்படுவார்கள். இதன் கீழ், குறைந்த அளவிலான இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் பயன்பாடு, துவரைப்பயிர்கள் போன்ற பச்சை உரப் பயிர்களின் அதிகரித்த பயன்பாடு, துணைப் பயிரிடல் (*Companion Planting*) உள்ளிட்ட உடல், பண்பாட்டு மற்றும் உயிரியல் பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள் ஊக்குவிக்கப்படும். வீட்டு மற்றும் பண்ணைக் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படும் கால்நடை உரம் மற்றும் கம்போஸ்ட் முக்கிய இடம்பெறும்.

#### 5.9.1. வனத்துறை (Forestry)

போதுமான வன மூடல் பராமரிப்பு, உள்ளூர்த் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் பாதுகாப்பு ஆகியவை மாகாண வனக் கொள்கையின் முக்கியக் குறிக்கோள்களாக இருக்கும். வனப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சுரண்டல் அல்லது சுத்திகரிப்பும், மாகாண வனத் திட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருக்கும். இதனை அடைய பின்வரும் உத்திகள் செயற்படுத்தப்படும்:

1. மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பில் குறைந்தது 30 சதவீதம் பயனுள்ள வன மூடலின் கீழ் கொண்டுவரும் வகையில் மறுவனமயமாக்கல் திட்டம் செயற்படுத்தப்படும். முதற்கட்டமாக, விளிம்பு நிலங்கள் அடையாளம் காணப்பட்டு, வன வளர்ச்சி மற்றும் மேய்ச்சல் நில மேம்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும். இதில் தனியார் துறை மற்றும் அரசு அல்லாத அமைப்புகளின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படும்.

2. பல தசாப்தங்களாக நீடித்த போர் காரணமாக அழிக்கப்பட்ட வனப் பகுதிகளை மீள உருவாக்க, உடனடியாக மறுவனமயமாக்கல் திட்டம் செயற்படுத்தப்படும். அழிக்கப்பட்ட மரவகைகள் மற்றும் தாவரங்கள் அடையாளம் காணப்பட்டு, நிலத்தின் திறனுக்கு ஏற்ற இனங்கள் தேர்வு செய்யப்படும். அதற்கேற்ப நாற்று உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் இடங்கள் தீர்மானிக்கப்படும்.

3. மறுவனமயமாக்கலுடன் இணையாக, குடியிருப்புப் பகுதிகளில் சமூக வனவள மேம்பாடு மற்றும் விளிம்பு நிலங்களில் தனியார் வன வளர்ச்சி ஊக்குவிக்கப்படும். இத்திட்டங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்ய, சமூகங்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு, வனத்துறை மற்றும் வேளாண்மைத் துறை இணைந்து கண்காணிப்பு மேற்கொள்ளும்.

4. முந்திரி, விளாம்பழம், பனை, மாம்பழம், புளி மற்றும் மருத்துவப் பயன் கொண்ட தாவரங்களுக்கான தரமான நாற்றுகள் மற்றும் விதைகள் விரைவாக வழங்கப்படும். இவை ஆரம்பகட்டத்தில் (உதா: 5 ஆண்டுகள்) மானிய விலையில் வழங்கப்பட்டு, பின்னர் உண்மையான செலவில் விற்பனை செய்து, விவசாயிகளிலும் சமூகக் குழுக்களிலும் சொந்தத்தன்மை உருவாக்கப்படும். வறண்ட மண்டலத்திற்கு ஏற்ற முந்திரி மற்றும் விளாம்பழ வகைகளைத் தேர்வு செய்ய வனத்துறையின் ஆராய்ச்சிப் பிரிவு செயற்படும்.

5. விவசாய முறையின் ஓர் அங்கமாக மரங்கள் மற்றும் புதர்கள் வளர்க்கும் வேளாண்மை - வனத் திட்டம் (*Agroforestry*) செயற்படுத்தப்படும். பச்சை உரம்,

எரிபொருள் மரம், வேலிக் கம்பங்கள், கால்நடைத் தீவனம் மற்றும் மருத்துவப் பயன்பாடுகளுக்கு ஏற்ற இனங்கள் தேர்வு செய்யப்படும்.

### 5.10. நிறுவனச் சீர்திருத்தங்கள் (Institutional Reforms)

மாகாண மற்றும் தேசிய அளவிலான பல நிறுவனங்கள் வேளாண்மைத் துறையில் செயற்பட்டு வருகின்றன. தற்போதைய பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ப, இந்நிறுவனங்களின் செயல்திறனை ஆய்வு செய்து, அவற்றை மறுசீரமைத்தல் அல்லது புதிய நிறுவனங்களை உருவாக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்காகப் பின்வரும் உத்திகள் முன்மொழியப்படுகின்றன:

1. மாகாண சபை, சேவை வழங்குநராக அல்லாது வளர்ச்சி ஊக்குவிப்பாளராக முன்னணிப் பங்கு வகிக்கும். வேளாண்மை, வனத்துறை, மீன்வளம், நீர்வளங்கள் போன்ற துறைகள் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மறுசீரமைக்கப்படும்.

2. வளர்ச்சித் திட்டங்களை விரைவாகவும் விளைவு சார்ந்த முறையிலும் செயற்படுத்த தேவையான விதிமுறைகள் இயற்றப்படும்.

3. பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (MPCS) மற்றும் மீன்வளக் கூட்டுறவுகள், வணிக நோக்குடன் செயற்படுமாறு மறுநோக்கமைக்கப்பட்டு, தொழில்முனைவோர் திறன், நிர்வாகம், சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.

4. நீர்வளங்கள் மற்றும் வேளாண்மை அபிவிருத்தியை ஒருங்கிணைந்து நிர்வகிக்கும் அதிகாரம் உருவாக்கப்படும்.

5. வேளாண் சேவைக் குழுக்கள், உயர்மதிப்புப் பயிர்கள் மற்றும் ஏற்றுமதி நோக்கிய வர்த்தக வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் மறுசீரமைக்கப்படும்.

6. வேளாண்மை, மீன்வளம் மற்றும் தொடர்புடைய துறைகளை நவீனமயமாக்க மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி நிறுவப்படும்.

7. மண்டல தொழில்துறை ஆலோசனை சேவை மையம் நிறுவப்பட்டு, வேளாண்மை - தொழில்களையும் உள்ளடக்கும்.

8. வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்க ஏற்றுமதி மேம்பாட்டு வாரியம் அமைக்கப்பட்டு, தேசிய ஏற்றுமதிக் கொள்கையுடன் இணைந்து செயற்படும்.

### 5.11. முதலீட்டு ஊக்குவிப்பு (Investment Promotion)

தேசிய அளவில் நடைமுறையில் உள்ள முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டங்கள் இதுவரை வடக்கு - கிழக்கு மாகாணங்களை முழுமையாக அடையவில்லை. எனவே, மாகாண அரசின் முக்கியப் பணி, தேசிய மட்டத்தில் உள்ள அனைத்து ஊக்குவிப்புத் திட்டங்களையும் அடையாளம் கண்டு, அவற்றை மாகாணத்தின் நலனுக்காக ஒருங்கிணைந்த முறையில் பயன்படுத்துவதாகும். இதற்கான செயன்முறையை மாகாணத் திட்டமிடல் குழு உருவாக்கும்.

### 5.12. சுற்றுச்சூழல் (Environment)

இந்த அபிவிருத்திக் கொள்கைகளின் மையக் குறிக்கோள், பாரம்பரிய வேளாண்மையை உயர்மதிப்பு மற்றும் ஏற்றுமதி நோக்கிய வர்த்தக வேளாண்மையாக மாற்றுவதும், மீன்வளத் துறையை செயலாக்கம் மற்றும் நீர்வள வளர்ப்பு நோக்காக மாற்றுவதுமாகும். இச்செயற்பாடுகள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதால், அதனைத் தடுக்க சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டம் (EPP) மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் (EMP) சமூகப் பங்கேற்புடன் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும்.

விளிம்பு நிலங்களில் மறுவனமயமாக்கல், வேளாண்மை - வனத் திட்டங்கள், சமூக வன வளர்ச்சி, கரிம உரப் பயன்பாடு, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM), நீர்ப் பயன்பாட்டுத் திறன் மேம்பாடு, கடலோரப் பாதுகாப்பு, சூரிய மற்றும் காற்றாலை ஆற்றல் பயன்பாடு ஆகியவை ஊக்குவிக்கப்படும். சிறு விவசாயங்களில் உழவு மாடுகள் போன்ற பாரம்பரியச் சக்தி வளங்களின் பயன்பாடும் ஆதரிக்கப்படும்.

முருங்கன் மற்றும் காங்கேசன்துறைப் பகுதிகளில் மண் மற்றும் சுண்ணாம்புக் கல் சுரண்டலால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் சேதங்களைச் சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதற்கான நிதி தேசிய அரசிடமிருந்து ஈடுசெலுத்தலாகக் கோரப்படும். மாகாணத்திற்குள் இவ்வகைச் சுரண்டல்கள் முற்றாகத் தடை செய்யப்படும்.

மொத்தத்தில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் சமூகப் பங்கேற்புடன் தேர்ந்தெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். தேவையான சட்டங்கள் இயற்றப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு விதிமுறைகள் உருவாக்க அதிகாரம் வழங்கப்படும். சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை மக்களிடம் எடுத்துச் செல்ல, பரந்த விழிப்புணர்வுத் திட்டமும் செயற்படுத்தப்படும்.

# பசுமை எனும் பேரபாயம்

## நூல் அறிமுக நிகழ்வும் கலந்துரையாடலும் – கொழும்புத் தமிழ்ச் சங்கம்

நிகழ்வு

February 25








எழுநாவின் வெளியீடாகிய, முனைவர் ஞாலசீர்த்தி மீநிலங்கோ அவர்களின் ‘பசுமை எனும் பேரபாயம்’ நூல் அறிமுக நிகழ்வும் கலந்துரையாடலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடலில் 25.02.2026 (புதன்கிழமை) அன்று மாலை 5.45 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் இடம்பெற்றது.

திரு. த. இராஜரட்னம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் திரு. த. ரெஷாங்கன் அறிமுக உரையினை ஆற்றியிருந்தார். வாசகர்கள் , பொதுமக்கள் எனப்பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.



## நூல் மதிப்புரை:

# ஒரு பழங்குடியின் தார்மீகக் கோபம்
# ‘உத்தியாக்கள்’



கருத்துரை:
**முனைவர் பக்தவத்சல பாரதி**

பேத்தாளை பொது நூலகத்தில் இடம்பெற்ற ‘நிலா முற்றம்’ நிகழ்ச்சியில் கமலநாதன் பத்திநாதன் அவர்களுடைய ‘உத்தியாக்கள்’ நூல் மீதான என்னுடைய வாசிப்பு அனுபவ உரையினை உலக ஆதிவாசிகள் தினமான இன்று (2025.08.09) பகிர்ந்து கொள்கின்றேன்.

தான் வாழ்ந்த சமூகத்தைப் பற்றி, அதுவும் காலந்தோறும் ஒடுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு வரும் தன் சமூகம் குறித்து, அவர்களது வாழ்வியல், பண்பாட்டு அம்சங்களை ஆய்வு செய்து முறைப்படுத்தி ஒரு நூலாக வெளியிட்டிருப்பது, அந்த சமூகத்திற்கு அவர் ஆற்றியிருக்கும் அளப்பெரிய பணி ஆகும்.

வேடுவர்கள் என்றாலே மகியங்கனை – தம்பானையில் வாழ்பவர்கள், அம்பும் வில்லும் இலை குழைகளையும் அணிந்தவர்கள் என்ற பிம்பமே எம்மத்தியில் காணப்படுகிறது. ஆனால் கிழக்குக் கரையோரத்திலும் தமிழ் பேசும் வேடுவர்கள் வாழ்கின்றனர்; அவர்களுக்கும் தனித்துவமான வாழ்வியல் முறை இருக்கிறது என்பதைப் பதிவு செய்வதற்காகவே இந்நூலை வெளியிட்டதாக பத்திநாதன் தன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். பதினொரு தலைப்புகளை உள்ளடக்கிய இந்நூலை எழுநா பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

‘வாழ்வியல் அசைவும் இயற்கையும்’ என்ற தலைப்பில், பழங்குடி மக்களின் இயற்கையுடன் இணைந்த வாழ்வியல் பற்றியும், தற்போது அருகி வரும் மரங்கள் மற்றும் அவற்றை எதற்காகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் பதிவு செய்துள்ளார். பல மரங்களின் பெயர்களைக் கூட நாம் கேட்டிருக்க மாட்டோம். சிலவற்றை நாம் அறிந்திருந்தாலும், அவற்றை இப்போது காண முடியாமல் உள்ளது. குருவிச்சை, ஒட்டுண்ணித் தாவரம் என்பதே எங்களுக்குத் தெரியும். ஆனால் பழங்குடி மக்கள் அதிலிருந்து அதன் பூ, இலை, பழம் என அனைத்திலும் பல வகையான நன்மைகளை அடைந்துள்ளனர். குறிப்பாக அவர்களுடைய சடங்கு முறைகளில் வெற்றிலை இல்லாத போது, இதன் இலைகளைப் பயன்படுத்தியுள்ளனர். அதுமட்டுமின்றி, இதன் விதைகளை அதிக நன்மை தரக்கூடிய மரங்களில் வைத்து, அந்த மரங்களின் பயன்களையும் சேர்த்து முளைக்கும் குருவிச்சையின் பலன்களையும் பெற்றுள்ளனர். எந்த ஒரு வகுப்பறையிலும் அமர்ந்து கற்காமல், தாம் வாழ்ந்த சூழலும் அதனுடன் தொடர்புடைய அறிவு அனுபவமும் மூலம், இவ்வாறு எத்தனையோ விடயங்களைக் கற்று, இயற்கையோடு




இயைந்து வாழ்ந்திருக்கின்றனர். ஒல்லித்தாவரத்தின் தண்டை வெண்டிக்காய் போன்று சமைத்து உண்பதோடு, கிழங்கினை அவித்துப் புளி மாங்காயுடன் சாப்பிடுகின்றனர். ஒல்லிக்காய் முற்றி வரும்போது அதனுள் கடுகு போன்று விதைகள் காணப்படும். அவற்றை எடுத்துக் காயவைத்துத் தீட்டி, ஒல்லி அரிசி தயாரிப்பர். அதனை அரிசியுடன் கலந்தும் சமைக்கலாம்; அல்லது ஏனைய அரிசி மாவு, குரக்கன் ஆகியவற்றுடன் கலந்து ரொட்டியாகவோ அல்லது வேறு உணவுகளாகவும் தயாரிக்க முடியும். குளச் சுத்திகரிப்பு, நில ஆக்கிரமிப்பு, எல்லை விரிவாக்கம் போன்ற காரணிகளால் தற்போது இத்தாவரம் முற்றாக அழிவடையும் தருவாயில் உள்ளது. அதேபோல சாத்தாவாரி மருத்துவ மூலிகைகளின் அரசி. இதனை ‘தண்ணீர் விட்டான் கிழங்கு’ எனவும் அழைப்பர். கடும் வெப்ப காலங்களில் நாம் ‘ஜூஸ்’ தேடி அருந்துவது போல அல்லாது, இம்மக்கள் சாத்தாவாரியின் இலையின் சாற்றைக் குடிக்கின்றனர். இது நாவறட்சி, தாகம், வறட்டு இருமலைப் போக்கவல்லது.

‘பக்கிளிய மரம்’ என்ற ஓர் அரிய வகை மரம் பற்றியும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் கண்பார்க்கும் இடமெல்லாம் இருந்த இம்மரம், தற்போது அடர்ந்த வனாந்தரப் பகுதிகளில் மட்டுமே காணப்படும் அளவிற்கு அருகிப் போயுள்ளது. இம்மரத்தின் பாலைச் சேகரித்து தடி போன்று முறுக்கி, மற்றொரு தடியுடன் இறுகக் கட்டி, தீப்பந்தம் போல் எடுத்துக் கொள்வர். இரவில் நெடுந்தூரப் பயணங்களில் தீப்பந்தமாக இதனைப் பயன்படுத்துகின்றனர். இறந்தவர்களைப் புதைத்துவிட்டு மண்ணில் பிரண்டைக் கொடியை ஆறு துண்டுகளாக எடுத்துச் சுற்றி வைப்பார்கள். இதற்கு இரண்டு விளக்கங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, அது கிருமிகளை அழிக்க வல்லது; மற்றொன்று, இறந்தவர்களின் உடலை நாய், நரி போன்றவை தீண்டாமல் இருக்க. ஏனெனில் இதன் சாறு உடலில் பட்டால் அரிப்பு ஏற்படும்; எனவே ஒரு பாதுகாப்பிற்காக இதனை மேலே சுற்றி வைப்பார்கள். இந்தக் கட்டுரையை முடிக்கும்போது, பத்திநாதன் இம்மக்கள் பட்டினியால் இறந்த வரலாறே இல்லை என்று குறிப்பிடுகின்றார். சூழல் நேயமிக்க மனிதர்களாக வாழும் இவர்கள், தங்களைச் சுற்றியுள்ள தாவரங்களையும் குளத்து மீன்களையும் எல்லா காலங்களிலும் உண்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர். காலனியம் எவ்வாறு இப்பழங்குடி மக்களின் வாழ்வியலில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது? ஐரோப்பியர் வருகை மாத்திரம்தான் இவர்களது இருப்பைக் கேள்விக்குள்ளாக்கியதா? அதற்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை, இம்மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்குவதில் அதிகாரம் படைத்த சக்திகள் எவ்வாறு செயற்பட்டு

வந்துள்ளன? என்பன குறித்து இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வேடுவர் என்றாலே, காட்சிப் பொருளாகவும் அழிந்து வரும் உயிரினமாகவும் பாதுகாக்க வேண்டிய பச்சாத்தாபச் சிந்தனையுடன் பார்க்கப்படுகின்றனர் என்கிறார். மகியங்கனை – தம்பானைப் பகுதிகளை திறந்தவெளிச் சிறைச்சாலையாக அவர் குறிப்பிடுகின்றார். பல்லாயிரம் காலமாக பேசப்பட்டு வந்த பழங்குடிகளின் மொழி கூட அசிங்கமான மொழி எனக் கருதப்பட்ட நிலையும் இருந்துள்ளது.

வேடுவர்கள் என்ற சொல்லை சமூகத்தில் குறைத்து மதிப்பிடுவதற்காக, திட்டுவதற்குரிய சொல்லாகப் பயன்படுத்துவதைப் பார்த்திருக்கின்றேன். இதனை மொழியியலில் ‘Language Discrimination’ எனக் குறிப்பிடுவர். ஓர் ஆடையைத் தொடர்ந்து விரும்பி அணிந்தால், ”என்ன இது வேடனுக்கு வெள்ளைக் கச்சை கிடைத்தால் போல எனக் குறிப்பிட்டுப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருப்பவர்களுக்கு, இயற்கையை நேசித்து வாழும் இம்மக்களை எப்படிப் புரியவைக்க முடியும்?

சுதந்திரத்திற்குப் பின்னர், இவர்களின் பிறப்புச் சான்றிதழ் தொடர்பில் இலங்கை அரசு எத்தகைய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். உதாரணமாக, பிறப்புச் சான்றிதழில் அவர்கள் ‘வேடுவர்’ என்று பதிவிட முடியாது; ‘இலங்கைத் தமிழர்’ என்றே குறிப்பிட வேண்டும். ஆனால் வேட்டையாடுதல், தேன் எடுத்தல் போன்ற தொழில்களை, பிறப்புச் சான்றிதழில் ‘வேடுவர்’ என்று குறிப்பிட்டிருப்பவர்கள் மாத்திரம்தான் செய்யலாம் என்ற சட்டத்தையும் இதே அரசுதான் கொண்டு வந்துள்ளது. இதனை எழுத்தாளர் ‘முரண் நகை’ என்று குறிப்பிடுகிறார்.

இலங்கையின் பாரிய குடியேற்றத் திட்டங்களான கல்லோயா, மகாவலிக் குடியேற்றங்கள் பற்றி அவர் குறிப்பிடும்போது, ”ஒரு குருவியின் கூட்டைக் கலைத்து, அதனை வர்ணஜால வேலைப்பாடுகள் கொண்ட கூட்டினுள் அடைத்து, காட்சிச் சாலையில் விடுவது போன்றது என்கிறார்.

‘நில ஆக்கிரமிப்பு’ என்ற தலைப்பில், அவர்களுடைய பாரம்பரிய நிலங்கள் எவ்வாறு பிற சமூகத்தவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன என்பதையும், யுத்தம் காரணமாக வெளியேற்றப்பட்ட மக்களும், சுனாமி காரணமாக வெளியேற்றப்பட்ட மக்களும் வாழ்ந்த இடங்கள் எவ்வாறு ஏனையோரால் கைப்பற்றப்பட்டன என்பதையும் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலங்களை எவ்வாறு அபகரித்தார்கள் என்று எழுத்தாளர் ஒரு மூத்த பழங்குடியிடம் கேட்டபோது, அவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

”மன இந்தப் பாவிகள் எல்லாம் என்னவெல்லாம் செய்கிறார்கள். அதுகளைப் பொறுத்துக் கொண்டாலும் இந்தக் காடுகள், குளங்கள், கடல் வளத்த படுத்தற பாடுகளத்தாண்டா பாத்தும் கேட்டும் வாழ ஏலுதில்ல.

வெள்ளக்காரன் இருக்கக்குள்ள கூட இப்படி அத்துறுமங்கப்படுத்தல்ல.

.. காட்டுல என்ன பழம் எடுக்குற எண்டாலும் சரி அந்த மரத்துட ஒரு கந்தும் உடைக்காம ஆயனும். ஆனா இப்ப மரத்தோட வெட்டுறானுகள்.

குளத்துல மீன் புடிக்கிற எண்டாலும் இப்படித்தான்டா மன. மீன் சரியான பருவத்துக்கு வரும் வரைக்கும் ஆரும் மீன் புடிக்கப் போகக்கூடாது. சரியான பருவம் வந்ததும் பட்டாங்கட்டி அறிவிப்பார். இனி மீன் பிடிக்கப் போகலாம் எண்டு. போய் ஒரு பாடு வீசினாலே போதும். நாலு ஊட்டுக்கு மீன் வரும். ஒவ்வொரு மீனும் ரெண்டு மூணு கிலோ வரும். இப்புடி எத்தனைய மனே சொல்லலாம். காடும் குளமும் தான் நம்மட சொத்து. நாம அதுகள்ட சொத்து. ஆனா இப்ப?

கடலோர வேடுவர்களின் குடிவழமைகள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு குடிக்கும் வேடுவர் தலைமையினால் குறிப்பிட்ட தெய்வம் உரித்துடையதாக ஆரம்பத்திலேயே நிர்ணயிக்கப்படுகிறது. அதற்குரிய சடங்குகள், வழக்காறுகளை அவர்கள் தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர். காலப்போக்கில் ஏனைய இனங்களுடன் இவர்கள் இணைந்தமையால், உதாரணமாக வெள்ளாள வேடுவர், கிறிஸ்தவ வேடுவர் என்ற புதிய சமூக அடையாளங்களைத் தங்களுக்கு அவர்கள் ஏற்படுத்திக் கொண்டதன் காரணமாக, அவர்களுடைய வழிபாடுகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

பெண்ணியம் பற்றிக் குறிப்பிடும் போது, ‘இவர்கள் ஆரம்ப காலத்திலேயே தாய்வழிச் சமூகக் குடும்பக் கட்டமைப்பைக் கொண்டிருந்தனர். தற்போதும் கூட, இவர்களுடைய சடங்குகளுக்கு பெண் தலைமை வகிக்கின்றாள். முக்கியமான பொறுப்புகள் பெண்களிடமே உள்ளன. எப்போது இவர்களுடைய வாழ்வியல் முறை மாற்றப்பட்டு வேளாண்மை செய்யத் தொடங்கினார்களோ, அப்போது பெண்கள் வீட்டிலேயே தங்கி குழந்தைகளைப் பராமரிக்க வேண்டிய நிலை தொடங்கியது; இதன் காரணமாக பெண்கள் அதிகமாக ஆண்கள்மீது சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும், வழிபாட்டு முறைகளில் இப்போதும் முக்கியப் பொறுப்புகளான மடைப்பெட்டி எடுத்துவரல், நெல்குற்றல், கன்னிமார் பிடித்தல் போன்றவற்றைப் பெண்களே செய்கின்றனர்.’ என்கிறார்.

பெண் மதகுரு மருத்துவிச்சியாகவும் செயற்பட்டுள்ளார். 90 வயது மூதாட்டி ஒருவர் 650க்கு மேற்பட்ட பிரசவங்களைப் பார்த்திருக்கின்றார். ஒரு பெண்ணின் மாதவிடாய் நின்றுவிட்டால், அப்போதிருந்தே அவருக்குரிய பத்திய உணவு மற்றும் பராமரிப்பு தொடங்கிவிடுகிறது. ”இப்ப என்ன மன எல்லா வைத்திய முறைகளும் வந்தாலும் தாயும் சாகுது பிள்ளையும் சாகுது நேரம் பார்த்து குழந்தையை வெட்டி எடுக்கின்றார்கள். என்பது அம்மூதாட்டியின் கூற்று.

‘சடங்கு மற்றும் குணமாக்கல்’ என்ற தலைப்பில், அவர்களுடைய சடங்குகள் பற்றியும் குணமாக்கல் முறைகள் பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். மேலைத்தேய வைத்திய முறைகளைப் போல கூவிக் கூவி விளம்பரப்படுத்தாமல், சாதாரணமாக நோயுண்டவருக்கும் பிணி தீர்ப்பவருக்கும் இடையிலானதாக மட்டுமே இது அமைந்துள்ளது.

”குணமாக்கல் என்பது ஒரு மீட்புக்குச் சமமான விடயமாகும். உளப் பாதிப்புற்ற ஒருவரை அவரது முன்னைய தொழிற்பாட்டு நிலைக்கு சகலவழிகளிலும் இட்டுச் செல்ல வைக்கும் நடைமுறைகளுக்கு இது வழி வகுப்பதாக அமைகின்றது; இதனையே குணமாக்கல் என்கின்றோம்.

நூலில் இடம்பெறும் காணாமல் போன மகனைத் தேடிய தாய் குறித்த சம்பவத்தையும், அவர் மகனைப் பற்றி இந்தச் சடங்கு முறையின் வழியாக எவ்வாறு அறிந்து கொண்டார் என்பதையும், அவருக்கு இருந்த உளச்சிக்கலிலிருந்து எவ்வாறு விடுதலை பெற்றார் என்பதையும் வாசிக்கும் போது, பிரசன்ன விதானகே அவர்களின் ‘Death on a Full Moon Day’ திரைப்படத்தின் காட்சிகள் நினைவிற்கு வந்தன. மகன் இறந்ததாக வரும் சவப்பெட்டி, அதன் பின்னர் அவருக்கு ஏற்படும்

உளச்சிக்கல், அதிலிருந்து அவர் எவ்வாறு வெளிவருகிறார் என்ற திரைப்படத்தின் காட்சிகள், இந்த நூல் வாசிப்பின் போது காட்சிப்படுத்த உதவியாக இருந்தன.

பழங்குடியினர் வழிபாட்டு முறைகளில், இறந்தவர்களின் ஆன்மாவிற்காக மேற்கொள்ளப்படும் சடங்குகளும் முக்கியமானவையாக உள்ளன. மேலும் புலிக்கூத்து, கரடிக் கூத்து, யானை கட்டுதல் ஆகிய கலை வடிவங்கள் நிகழ்த்து கலைகளாகக் காணப்படுகின்றன. இந்நூலின் சிறப்பம்சம் என்னவென்றால், இது அந்தச் சமூகத்துக்குள்ளேயே வாழ்ந்த ஒருவரால் ஆய்வு செய்யப்பட்டது என்பதாகும். எனவே இது அகவயத் தன்மையுடையதாக இருந்து, நம்பகத்தன்மையை அதிகப்படுத்துகிறது.

‘Avatar’ திரைப்படத்தைப் பார்த்த பின், ஒரு தார்மீகக் கோபம் எழுவது போல, இந்த நூலின் வாசிப்பின் ஈற்றிலும், எம்மீதும், எமது அபிவிருத்தித் திட்டங்கள் மீதும் கேள்வி கேட்க வேண்டிய நிலை உருவாகிறது. கடந்த வருடம் நியூசிலாந்து நாட்டின் பாராளுமன்றத்தில், தம் பழங்குடி மக்களுக்கு எதிரான மசோதாவை, அவர்களது பாரம்பரிய ஹக்கா பாடலைப் பாடி அந்தப் பழங்குடியை பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினர்கள் கிழித்து எறிந்தனர். அதிலும் குறிப்பாக, ஓர் இளம் பெண் உறுப்பினரின் கண்களில் தெரிந்த கோபமும், அவர் தைரியமாகச் செயற்பட்ட விதமும், இந்நூலின் வாசிப்பின் ஈற்றில் நினைவிற்கு வந்தது.

பத்திநாதன் அவர்கள் தற்போது இந்தியாவின் பஞ்சாப் பிரதேசத்தில், அவரது முதுமாணிப் படிப்பிற்காகச் சென்றுள்ளார். பழங்குடியினர் பற்றிய முதுமாணிக் கற்கை அங்குதான் உள்ளதாக, நிகழ்வில் ஏபிஎம். இத்ரீஸ் அவர்கள் பேசியபோது தெரிந்து கொண்டேன்.

உங்கள் சமூகத்திற்கும், இம்மண்ணின் பழங்குடி மக்களுக்கும், நீங்கள் இன்னும் பல படைப்புகளையும் ஆய்வுகளையும் செய்ய வேண்டும். இன்றைய உலகப் பழங்குடியினரின் தினத்தில், இதனை ஒரு வாழ்த்தாகவும் பதிவு செய்து கொள்கின்றேன்.

இந்நூல் தொடர்பான வாசிப்பு அனுபவப் பகிர்வினை மேற்கொள்ள என்னை அழைத்த பேத்தாளை பொது நூலகத்தினருக்கும், ஏற்பாட்டாளர்களுக்கும், ஸ்ரீதர் அரியநாயகம் (Sridhar Ariyanayag am) அவர்களுக்கும் மிக்க நன்றி.

---



கருத்துரை:
**விஜயலஷ்மி இராஜமனோகரன்**

# கிழக்கிலங்கை கடலோர வேடர்களின் பண்பாட்டு ஆய்வுகள் ‘உத்தியாக்கள்’

‘உத்தியாக்கள்’ என்பது ‘முன்னோர்கள்’ எனப் பொருள்படும். அதாவது வேடர்கள் தமது முன்னோர்களை அவர்களது மொழியில் ‘உத்தியாக்கள்’ என அழைப்பது வழக்கம். பேராசிரியர் மௌனகுரு அவர்கள் தனது அணிந்துரையில், திராவிட மொழியில் ‘உத்தி’ என்பது ‘மேலே’ என்பதைக் குறிக்கும் என்கிறார். அப்படியானால் மேலே சென்றவர்களை, அதாவது முன்னோர்களைக் குறிக்கும் என்கிறார்.

இந்நூலானது அணிந்துரை தொடக்கம் பதினொரு அத்தியாயங்களுடன் பின்னணைப்புகள் ஈறாக 176 பக்கங்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது. வேடர் வாழ்க்கையை வெளிச்சம் போட்டுக் காட்டும் இந்நூலானது ‘இயற்கையோடு இணைந்த என் உத்தியாக்கள் அனைவரிற்கும்’ காணிக்கையாக்கப்பட்டுள்ளது.

இதில் முதலாவதாக ‘இலங்கை வேடரின் இன்றைய இனவரைவியல்’ என்ற அணிந்துரையை முனைவர் பக்தவத்சல பாரதி அவர்கள் எழுதியுள்ளார். இவ் அணிந்துரையில் இந்நூல் பற்றியும், நூலாசிரியர் பற்றியும், எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கை வேடர்கள் பற்றியும், அவர்களது வாழ்க்கை வரலாறு பற்றியும் மிகச் சிறப்பாக எழுதியுள்ளார்.

இவ் அணிந்துரையில் ஒரு சிறிய திருத்தத்தைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அதாவது, ஆரம்பத்தில் ‘இலங்கையும், இந்தியாவும் தனித்தனி நாடுகளல்ல; தொடர்ச்சியான நிலப்பகுதியாகவே இருந்தன என்கிறார் தொல்லியல் அறிஞர் தெரணியகல’ என்று குறிப்பிடுகிறார். இக்கருத்தினை தெரணியகலவுக்கு முன் 1912 ஆம் ஆண்டே அல்பிரட் வெக்னர் என்ற ஜேர்மன் புவியியலாளர் ‘கண்ட நகர்வுக் கொள்கை’ என்ற ஆய்வில் தெரிவித்துள்ளார்.

அடுத்ததாக ஓய்வுநிலைப் பேராசிரியர் மௌனகுரு அவர்கள், ‘யார் இந்தப் பத்திநாதன்?’ ‘உத்தியாக்கள் என்றால் என்ன?’ ‘அவர்கள் யார்?’ ‘இந்த நூல் கூறுவது என்ன?’ என்ற தலைப்புகளின் கீழ் ‘இவர்கள் பேசத் தொடங்கிவிட்டார்கள்’ என்ற அணிந்துரையில் நூல் பற்றி ஆராய்ந்துள்ளார். பத்திநாதனைப் பற்றிக் குறிப்பிடும் போது ”வேடர் சமூகத்தில் இருந்து வந்த முதல் நாடக அரங்கியல் பட்டதாரி எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்நூலுக்கான அணிந்துரையாக இடம்பெறும் இவ்விரு கட்டுரைகளும் இந்நூலை மெருகேற்றுகின்றன. இந்நூலுக்கு மேலும் காத்திரத்தை ஏற்படுத்துகின்றன. இவை நூலைப் படிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவதுடன், நூலுக்கான ஒரு வழிகாட்டியாகவும் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

தொடர்ந்து ‘சமூகமயப்பட்டு முன்னெடுக்கப்படும் அறிவுருவாக்க முறைமையின் தேவை’ என்ற தலைப்பில் பேராசிரியர் சி. ஜெய்சங்கர் அவர்கள் சற்றுச் சிந்திக்க வைக்கிறார். இன்றைய நவீன உலகில் ”இலங்கைப் பழங்குடிகளின் இருப்பு இன்னமும் குவேனி காலத்துச் சித்தரிப்பாகவே உள்ளும் புறமும் காணப்பட்டு வருவது சிந்திக்கப்பட

வேண்டியது எனக் கூறுகிறார். அடுத்து, 'மா கஜமா கொந்தமாய்!' அதாவது 'அனைவருக்கும் வணக்கம்' என்ற தலைப்பில் பத்திநாதன் பேசுகிறார். இதில் இலங்கையில் வேடர்களின் ஆரம்பம் பற்றி ஆதங்கப்படுகிறார்.

அத்தியாயம் 1 இல் 'வாழ்வியல் அசைவும், இயற்கையும்' என்ற ஆக்கத்தின் மூலம் வேடுவ மக்களின் வாழ்க்கையில் இயற்கையின் பங்களிப்பைச் சிறப்பாக எடுத்தியம்புகிறார். படங்களுடன் பல்வேறு மூலிகைத்தாவரங்கள் பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் சிறப்பான விளக்கத்தைக் கொடுக்கிறார். இத்தகைய மூலிகைத் தாவரங்கள் வேடர்கள் மத்தியில் மட்டுமல்ல, எமது பிரதேசங்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்ததை இது எமக்கு ஞாபகமூட்டுகிறது.

ஒரு வரலாற்றை எழுதுபவர், அதாவது நூலாசிரியர், தனது ஆய்வில் 50 வீதமான பங்களிப்பினையும் தகவலாளிகள் 50 வீதமான பங்களிப்பினையும் வழங்க வேண்டும்; அத்தகைய ஆய்வுகளே முழுமை பெறும் என்றும், இரு தரப்பாரும் ஆசிரியராக இருக்க வேண்டும் என்றும் முனைவர் பக்தவத்சல பாரதி கூறுகிறார். அதற்கமைய, இந்நூலில் பல்வேறு இடங்களில் வேடர் சமூகத்தின் பிரதிநிதிகளிடம் தகவல்களைப் பெற்று, அத்தகவல்களை அவர்களது பேச்சுமொழியிலேயே தந்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

இதன் இரண்டாவது அத்தியாயத்தில் காலனியம் பற்றிப் பேசும் போது, தமிழர் பிரதேசங்களில் புத்தர் சிலையை வைத்தல், விகாரையை கட்டுதல் என்பன பெரும்பான்மைச் சிந்தனை ஆதிக்க மனோபாவம் என்றால், வேடர் சமூகத்தில் அவர்கள் பரந்துபட்டு வாழும் கிராமங்களில் 'காமாட்சி அம்மன்', 'ஆஞ்சநேயர்', 'ஐயப்பன்' போன்ற இன்னோரன்ன தெய்வங்களுக்குக் கோவில் கட்டுவதும் ஆதிக்க மனோபாவமாகாதா? என நூலாசிரியர் அங்கலாய்க்கிறார்.

நில ஆக்கிரமிப்புப் பற்றிக் கூறும்போது, மிகத் தைரியமாக, எவ்வித அச்சமுமின்றி, அம்பாறை தொடங்கி மட்டக்களப்பு, திருகோணமலை வரை நீண்டதான கரையோரங்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம்களால் இன்றுவரை அபகரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் கூறுகிறார். அதற்கான ஆதாரங்களையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். நில அபகரிப்பு மட்டுமல்ல, அவர்களது கலை, கலாசாரம், தொழில் உரிமைகள் கூட அபகரிக்கப்பட்டிருக்கின்றன. இப்பழங்குடியினர் வஞ்சிக்கப்பட்டதாக நூலாசிரியர் சாடுகிறார்.

வேடுவ மொழி பற்றிக் குறிப்பிடுகையில், ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும் மக்கள் குழு 'இனம்' என வரையறுக்கப்படுகிறது. இருப்பினும், வேடுவ மொழியானது தற்போது அன்றாடப் பயன்பாட்டிலிருந்து விலகி, தொழில்சார் நடைமுறைகளிலும் முன்னோர்களை வழிபடும் 'மன்றாடல்' போன்ற சடங்குகளிலும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு சமூக – அரசியல் காரணிகளால் நிலைகுலைக்கப்பட்ட வேடுவ மக்கள், சிங்கள – தமிழ்ச் சமூகங்களைச் சார்ந்து வாழ நேரிட்டதால், இன்றைய சூழலில் சிங்களத்தையும் தமிழையும் தமது தொடர்பு மொழிகளாக ஏற்றுக்கொண்டுள்ளனர். வேடுவ மொழியில் சிங்களச் சொற்களின் சாயல் காணப்பட்டபோதிலும், அது தனித்துவமான கட்டமைப்பைக் கொண்டது என்பதனைப் பல்வேறு பாடல் வரிகள் மூலம் அவர் விளக்கியுள்ளார்.

வேடர் சடங்கில் பெண்ணியம் பற்றிக் கூறும் போது, வேடப் பெண்களின் பல்லாளுமை பற்றி விளக்குகிறார். வேடுவப் பெண்கள் மதகுருவாக, மருத்துவிச்சியாக, கூத்துப்பாடல், காவியப்பாடல், காவடிப்பாடல் முதலான பாடல்களைப் பாடும் பாடகிகளாகவும், மருத்துவ – மந்திர நடவடிக்கையில் ஈடுபடுபவர்களாகவும் காட்டப்படுகின்றனர். அதேநேரம் ஏனைய மதப் பெண்களைப் போன்று, இவர்களும் சில சந்தர்ப்பங்களில் ஆண் நிலைச் சிந்தனைக்குள் கட்டமைக்கப்பட்டவர்களாக இருந்துள்ளனர்.

சடங்காற்றுகைகளில் காணப்படுகின்ற குணமாக்கல் தன்மைகளையும், விளைவுகளைப் பற்றியும் 'சடங்கும் குணமாக்கலும்' எனும் அத்தியாயத்தில் கூறுகின்றார். மனித வாழ்க்கையில் இடம்பெறுகின்ற ஒவ்வொரு சடங்கிலும் குணமாக்கலே இடம் பெறுகின்றது என விளக்குகிறார்.

'கடலோர வேடரின் சடங்கியல் குணமாக்கல்' என்னும் அத்தியாயத்தின் மூலம் வேடுவர்க்கென உள்ள குணமாக்கல் நிகழ்வுகளைப் பற்றிக் கூறுகின்றார்.

இக்கிரிகைகளின் போது 'உத்தியாக்கள்' அவர்களுக்குள் வருவதாக விளக்குகிறார். இதில் குழந்தைப் பாக்கியத்திற்கான குணமாக்கல் வழிபாடும் இடம் பெறுகிறது. குணமாக்கல் செயற்பாட்டின் மூலம் 'உளவிடுபடு நிலை' ஏற்படுவதாக நூலாசிரியர் நிறுவுகிறார்.

'மட்டக்களப்பு பூர்வகுடிகளின் சடங்குவழி உளவியலும், அழகியலும்' என்ற அத்தியாயம் சில இடங்களில் முன்பு கூறிய விடயத்தையே மீண்டும் கூறுகிறது. பல சொற்கட்டுகளும் மீண்டும் மீண்டும் இடம்பெற்றுள்ளன.

'கடலோர வேடர்களின் நிகழ்த்துகலைகள்' என்ற அத்தியாயம் வேடுவர்களின் வழிபாட்டின் மூலம் ஏற்பட்ட ஆடல், பாடல், அலங்காரம், வாத்தியங்கள் பற்றிக் கூறுகின்றது. இது பற்றிய புகைப்படமே முன் அட்டையையும் அலங்கரிக்கின்றது.

பின் இணைப்பாக பூசாரிமார், கப்புறாளைமார், கலையாடுவோர், பரியாரிமார், பேயாடுவோர், கட்டுச்சொல்வோர், கடலோர வேடரின் ஆயுதங்கள், சேனை வயிரவர் சூல அமைப்புகள் போன்ற விடயங்களைக் காட்டியுள்ளார்.

வேடர் சமூகத்தில் இருந்து வந்த பத்திநாதன் இன்று எல்லோராலும் பேசப்படும் ஒருவராக விளங்குகிறார். இந்நூல் முழுவதும் வேடுவர்கள் 'தம் ஆதிக்குடி நிலையில் இருந்து பல்வேறு தேவை கருதி விரும்பியோ, விரும்பாமலோ மாற்றம் பெறுகின்றனர்' என்று ஆதங்கப்படுகின்றார். வேடுவர்களின் கலை, கலாசாரம், பழக்கவழக்கங்கள் எக்காரணம் கொண்டும் மாறக்கூடாது என விரும்புகின்றார்.

காலனித்துவ எதிர்ப்பு உரையாடல்கள் மற்றும் சமூக – கலாசார – அரசியல் ஆய்வுகள் போன்றவை பழங்குடி மக்களின் கலை வெளிப்பாட்டை மக்கள் மத்தியில் பரப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என ஆதங்கப்படுகிறார்.

வேடுவரின் ஆதிநிலை மாறக்கூடாது என ஆதங்கப்படும் இவர், இயற்கை வழிபாடு என்ற தலைப்பில் எழுதும் போது, 'உலக மக்களின் வாழ்க்கை முறையானது கட்டம் கட்டமாக படிநிலை வளர்ச்சியைக் கண்டு வந்தது என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். இவ்வுலகில் மாற்றம் ஒன்றே மாறாதது' என்ற தன் வாதத்திற்கு முரணான அறிவியல் உண்மையை முன்வைக்கின்றார்.

'உத்தியாக்கள்' எம்மை ஒரு கணம் வேடுவ உலகிற்கு அழைத்துச் சென்று விடை கொடுக்கிறது. வேடுவர்கள் இலைகளை உடுத்தி, அம்பு வில்லுடன் காணப்படுவார்கள் என்பதைக் கடந்து, அவர்களுக்கு என ஓர் உலகம், அவர்களுக்கு என கலை, கலாசாரம், ஆடல், பாடல், மருத்துவம் என்பன உண்டு என இந்நூல் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. எழுத்தாளருக்குப் பாராட்டுகள்! மேலும் பணி சிறக்க வாழ்த்துகள்!


எழுநா வெளியீடு
யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த
இரசவர்க்கம்
முனைவர் பால. சிவகடாட்சம்
மலையகம்:
சமூக - பொருளாதார - அரசியல் பரிமாணங்கள்
பேராசிரியர் எம். சின்னத்தம்பி
தொகுப்பாசிரியர்கள்
இரா. ரமேஷ்
பெ. சரவணக்குமார்
இலங்கையின் பிராமி மற்றும் சிங்களக் கல்வெட்டுகளில்
தமிழர்
கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம்
காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்
மரியநாயகம் நியூட்டன்
இலங்கையின் வேளாண்முறைமையில் நவீன நுட்பங்கள்
கந்தையா பகீரதன்
சமஷ்டி அரசியல் முறைமைகள்: ஓர் அறிமுகம்
தொகுப்பும் தமிழாக்கமும் :
கந்தையா சண்முகலிங்கம்
யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு
1621 - 1948
இ. மயூரநாதன்
முன்பதிவுகளுக்கு
+94 777 97 5029


எழுநா
வடக்கு - கிழக்குப்
பிராந்திய அபிவிருத்தியும்
உயிர்ப்பல்வகைமையும்
சி.ஜேம்சன் அரசகேசரி


எழுநா
யாழ்ப்பாணத்தில்
சாதி அமைப்பும்
சமூக உறவுகளும்
தொகுப்பும் தமிழாக்கமும்:
கந்தையா சண்முகலிங்கம்


எழுநா
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின்
பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்


எழுநா
மாறுபாடில்லா
உண்டி
சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்


எழுநா
சூழ்ச்சிகளையும்
சதிகளையும்
கடந்த வரலாறு
இரா.சடகோபன்


எழுநா
பதார்த்த
சூடாமணி
பால. சிவகடாட்சம்


எழுநா
வடக்குப் பிராந்தியக்
காலநிலையியல்
நாகமுத்து பிரதீபராஜா


எழுநா
வாசலிலே கிருசாந்தி
செம்மணி தொடர்பான கவிதைகள்
தொகுப்பு:
எழுநா கலை பண்பாட்டு நடுவம்


எழுநா
மன்னார் தீவில்
கனிம மணல் அகழ்வு
சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகள்
வை. ஜெயமுருகன்


இரு நூற்றாண்டு
மலையகம்
வலியும் வாழ்வும்


யாழ்ப்பாணக் குடாநாட்டின்
நூலகப் பாரம்பரியம்
ஒரு வரலாற்றுத் தேடல்
என். செல்வராஜா


தமிழ்ப் பண்பாடு
ஊற்றுகளும் ஓட்டங்களும்
ந. இரவீந்திரன்


யாழ்ப்பாண
மருத்துவ வரலாறு
பாலசுப்பிரமணியம் துவாரகன்


பாக்கியநாதன் அகிலன்
மரபுரிமைகளைப்
பறைதல்


இலங்கையின் கறவை மாடு
வளர்ப்புப் பொருளாதாரம்
கால்நடை வைத்தியர்
சி. கிருபானந்தகுமாரன்


இருத்தலின் மீது
கவியும்
இன்மைகள்
இளங்கோ


பசுமை
எனும்
பேரபாயம்
தெ. ஞானசீர்த்தி மீநிலங்கோ


வடக்கு – கிழக்கு
மாகாணங்களின் வளங்களும்
உள்ளூர்ப் பொருளாதார
அபிவிருத்தியும்
அமரசிங்கம் கேதீஸ்வரன்

SpotOn Money



# SEND MONEY to SRI LANKA

**FIRST TRANSFER FEE FREE***

Immediate Payment to Any Account

*Partnership with*

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

**0207 341 7300**

www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**

#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**

#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

# Nimal Vinayagamoothy, CPA, CGA

Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

# நூல்சார் செயற்பாடுகள்







தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எழுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது. வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் 'ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்' எனும் பொருண்மையில் 'ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிழியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org

# யாழ் மண்ணில்



வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

RE/MAX ELITE

021 224 2855 | 0777 44 1113

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK


We work with 35 financial institutions
Business & Personal Insurance
Free Financial Education for everyone
We work with 35 financial institutions
Long Term Care | Elder's Insurance
Children's Insurance
Best Services
1. RESP/PRSP
2. Life Insurance
3. Auto Insurance
4. Estate Planning
5. Home Insurance
6. Disability Insurance
7. Mortgage Insurance
8. Travel/Visa Insurance
9. Non-Medical Insurance
10. Critical illness Insurance
11. Dental & Drug Insurance
12. Guaranteed Investments
416-731-2829


SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world


வீடு என்பது
ஞாபகங்களின் கலவை
காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள்,
தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள்
உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.
தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து
உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக
விளக்கமளிக்க முடியும்.
நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.
Re/Max Community Realty Inc
ரமணன் சந்திரசேகரமூர்த்தி Bsc, MBA
வாக்குறுதிகள் அல்ல.
வாங்குவதற்கும் விற்பதற்குமான தீர்வு.
அலைபேசி: 416-290-6000

# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com



# WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE
# ALL OF THE GTA & ONTARIO



ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619


Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY